# INDEX TO
# TAMIL NADU LEGISLATIVE COUNCIL DEBATES

FIFTY-NINTH SESSION OF THE LEGISLATIVE COUNCIL UNDER THE CONSTITUTION OF INDIA.

VOLUME CLXXIII (Nos. 1 to 5)

9th to 13th February 1981.

©

GOVERNMENT OF TAMIL NADU
1982

*Legislative Council Department*
*Fort St. George, Madras-600 009.*

PRICE *Rupees* 1

122022

V211,32 N81

N81-173,3)

# TAMIL NADU LEGISLATIVE COUNCIL DEBATES.

## FIFTY-NINTH SESSION OF THE LEGISLATIVE COUNCIL UNDER THE CONSTITUTION OF INDIA.

*9th to 13th February* 1981.

VOLUME CLXXIII (Nos. 1-5).

TABLE OF CONTENTS.

*Monday, the 9th February* 1981.


| | PAGES |
|---|---|
| Personnel of the Government of Tamil Nadu ... | i—v |
| Principal Officers of the Tamil Nadu Legislative Council ... ... ... ... ... ... | vii |
| List of Members of the Tamil Nadu Legislative Council with their Constituencies ... ... ... | ix—xi |
| 1. Obituary reference *re*— | |
| Death of Thiru K. Koti Reddi, former Minister of Composite State of Madras ... ... | 1 |
| 2. Questions and Answers ... ... | 2—25 |
| 3. Announcements— | |
| (1) Decision of the Business Advisory Committee ... ... ... ... ... | 26 |
| (2) Programme of business for 10th February 1981 ... ... ... ... ... ... | 59 |
| 4. Information *re*— | |
| Non-overage of proceedings of the Legislative Council by the All-India Radio ... ... ... | 26—27 |
| 5. Calling attention to stoppage of House Building Advance to Government servants and teachers ... ... ... ... ... | 27—29 |
| 6. Discussion on the Governor's Address ... | 29—59 |
| 7. Papers laid on the table of the House ... | 59—62 |


D 2 C 53—1

PAGES

*Tuesday, the 10th February* 1981.

1. Questions and Answers ... ... ... 65—97

2. Privilege issue *re*—
Premature publication of news regarding increase in Betting Tax and Surcharge on Sales Tax ... ... ... ... 97—106

3. Call Attention Notices—
(1) Mysterious death of Thiru Raju at Kulasekaram Police Station in Kanyakumari district ... ... ... ... ... 106—109
(2) Death of three fishermen due to cyclonic storm near Rameswaram seashore ... 109—111

4. Government Motion—
Election of a Member to the Public Accounts Committee .. .. ... ... ... 111

5. Discussion on the Statement of Supplementary Expenditure for 1980-81 ... ... ... 111—155

6. Discussion on the Governor's Address—*cont.* 156—227

7. Papers laid on the table of the House ... 227—228

*Wednesday, the 11th February* 1981.

1. Obituary reference *re*—
Death of persons involved in a rail accident near Vaniyambadi ... ... ... 233

2. Government Motion—
Adjournment of Business of the House due to a rail accident near Vaniyambadi ... .. 233—234

3. Papers laid on the table of the House ... 234

*Thursday, the 12th February* 1981.

1. Calling attention to the mysterious death of a student of Government Arts College at Kumbakonam ... ... ... ... ... 235—236



PAGES

2. Private Member's Business—Resolution—
Taking over of all schools and colleges by the Government ... ... ... ... 237—300

3. Announcements—
(1) Message from the Governor ... 301
(2) Message from the Assembly ... ... 301
(3) Decision of the Business Advisory Committee ... ... ... ... ... 344

4. Bills—
(1) The Tamil Nadu Appropriation Bill, 1981 (L.A. Bill No. 11 of 1981) ... ... 301—302
(2) The Tamil Nadu Prevention of Incitement to Refuse or Defer Payment of Tax Bill, 1981 (L.A. Bill No. 18 of 1981) ... ... ... 302—304

*Friday, the 13th February* 1981.

1. Questions and Answers ... ... ... 353—368

2. Announcements—
(1) Message from the Governor ... 368
(2) Message from the Assembly ... ... 368—369

3. Privilege issue *re*—
Premature publication in newspapers of proposals regarding surcharge on Sales Tax and increase in Betting Tax ... ... 369—371

4. Call Attention Notices—
(1) Appointment of a non-regional language knowing person as Chief Justice of the Madras High Court ... ... ... ... 371—372
(2) Notice of eviction on shop-keepers in Moore Market ... ... ... ... 372—375

PAGES

5. Bills—

(1) The Tamil Nadu Debt Relief (Amendment) Bill, 1981 (L.A. Bill No. 8 of 1981) .. 375—403

(2) The Public Wakfs (Extension of Limitation) Tamil Nadu Amendment Bill, 1981 (L.A. Bill No. 3 of 1981) ... ... ... ... 403—413

(3) The Pachaiyappa's Trust (Taking Over of Management) Bill, 1981 (L.A. Bill No. 19 of 1981) .. .. .. ... ... ... 414—444

6. **Papers laid on the table of the House** ... **444—446**

Index .. .. ... ... ... ... 463—497

# PERSONNEL OF THE GOVERNMENT OF TAMIL NADU

---

## GOVERNOR OF TAMIL NADU.

Thiru SADIQ ALI.

## MEMBERS OF THE COUNCIL OF MINISTERS.

1. THIRU M. G. RAMACHANDRAN, Chief Minister, in charge of Public, General Administration, Indian Administrative Service, District Revenue Officers, Deputy Collectors, Police, Prevention of Corruption and Planning.

2. DR. V. R. NEDUNCHEZHIYAN, Minister for Finance, in charge of Finance, Legislature, Elections, Food, Fisheries, Backward Classes, Youth Service Corps, Price Control and Ex-Servicemen.

3. THIRU S. RAMACHANDRAN, Minister for Electricity, in charge of Electricity, Iron and Steel Control.

4. THIRU K. A. KRISHNASWAMY, Minister for Rural Industries, in charge of Rural Industries including Village, Cottage and Small Industries, Milk, Dairy Development and Registratitn.

5. THIRU S. D. SOMASUNDARAM, Minister for Revenue, in charge of Revenue, Commercial Taxes, Excise and Census.

6. THIRU R. M. VEERAPPAN, Minister for Information and Religious Endowments, in charge of Information and Publicity, Film Technology, Tourism, Tourism Development Corporation, Cinematograph Act, Hindu Religious and Charitable Endowments, Forests and Cinchona and Grant of Liquor Permits.

7. THIRU C. ARANGANAYAGAM, Minister for Education, in charge of Education including Technical Education and Official Language.

8. THIRU K. KALIMUTHU, Minister for Agriculture, in charge of Agriculture, Agricultural Refinance, Agricultural Engineering Wing and Agro-Engineering.

9. THIRU C. PONNAIYAN, Minister for Co-operation and Law, in charge of Law, Courts, Prisons, Legislation on Weights and Measures, Registration of Companies, Debt Relief including Legislation on Money Lending and Legislation on Chits and Co-operation.

10. THIRU P. U. KULANDAIVELU, Minister for Local Administration, in charge of Municipal Administration, Panchayats and Panchayat Unions, Community Development, Rural Indebtedness, Bhoodan and Gramdhan and Highways.

11. THIRU S. RAGHAVANANDAM, Minister for Labour, in charge of Labour, Housing, Slum Clearance Board, Statistics, Tamil Nadu Water Supply and Drainage Board, Town Planning and Accommodation Control.

12. DR. H. V. HANDE, Minister for Health, in charge of Health.

13. THIRU K. RAJA MOHAMED, Minister for Irrigation, in charge of Agro-Service Co-operative Societies, Irrigation including Minor Irrigation and Wakf.

14. THIRU S. MUTHUSWAMY, Minister for Transport, in charge of Transport, Nationalised Transport, Motor Vehicles Act and Ports.

15. THIRU S. THIRUNAVUKKARASU, Minister for Industries, in charge of Large Scale Industries, Mines and Minerals and Textiles.

16. THIRU S. N. RAJENDRAN, Minister for Handlooms and Khadi, in charge of Handlooms, Khadi, Prohibition excluding grant of liquor permits and passports, Public Works Department and Establishment matters relating to Public Works Department.

17. THIRU M. VIJAYASARATHI, Minister for Adi Dravidar Welfare, in charge of Adi Dravidar Welfare, Stationery and Printing, Government Press, New Print Control, Hill Tribes and Bonded Labour and Employment and Training.

18. THIRUMATHI GOMATHI SRINIVASAN, Minister for Social Welfare, in charge of Social Welfare including Women and Children Welfare, Animal Husbandry, Beggars Home, Orphanages, Indians Overseas, Refugees and Evacuces and Correctional Administrttion.

## தமிழ்நாடு அரசின் ஆளுநரும் அமைச்சரவையும்

### தமிழ்நாடு ஆளுநர்

### திரு. சாதிக் அலி

### அமைச்சரவையின் உறுப்பினர்கள்

1. மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் (முதலமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்—

பொது, பொது நிர்வாகம், இந்திய ஆட்சிப் பணியாளர், மாவட்ட வருவாய் அதிகாரிகள், மாவட்டத் துணை ஆட்சியாளர் சம்பந்தப்பட்டவை, காவல், இலஞ்ச ஒழிப்பு மற்றும் திட்டம்.

2. மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் (நிதி அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்.—

நிதி, சட்டமன்றம், தேர்தல்கள், உணவு, மீன் வளம், பிற்பட்ட வகுப்பினர், இளைஞர் அணி, விலைவாசிக் கட்டுப்பாடு மற்றும் முன்னாள் இராணுவத்தினர்.

3. மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் (மின் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்—

மின்சாரம், மற்றும் இரும்பு எஃகுக் கட்டுப்பாடு.

4. மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி (ஊரகத் தொழில் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்—

கிராம, குடிசை சிறுதொழில்கள் உள்ளிட்ட ஊரகத் தொழில்கள், பால், பால் பெருக்கத் திட்டம், மற்றும் ஆவணப் பதிவுத் துறை.

5. மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் (வருவாய்த் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்—

வருவாய், வணிக வரிகள், ஆயத்துறை, மற்றும் மக்கள் தொகைக் கணக்கு.

6. மாண்புமிகு திரு. இராம. வீரப்பன் (செய்தி-அறநிலையத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்—

செய்தி மற்றும் விளம்பரம், திரைப்படத் தொழில் நுட்பவியல், சுற்றுலா, சுற்றுலா வளர்ச்சிக் கழகம், திரைப்படச் சட்டம், அறநிலையத் துறை, வனங்கள், சின்கோனா, மற்றும் மது அருந்த அனுமதி வழங்கல்.

## தமிழ்நாடு சட்டமன்ற மேலவையின் முக்கிய அலுவலர்கள்

மாண்புமிகு மேலவைத் தலைவர்,

டாக்டர் ம.பொ. சிவஞானம்.

மேலவைத் துணைத் தலைவர்,

புலவர் புலமைப்பித்தன்,

மாற்றுத் தலைவர்கள் பட்டியல்,

1. திரு. க. இராமமூர்த்தி.
2. திரு. ஈ. எஸ். வெங்கடேசன்.
3. திரு. க. அருணாசலம்.
4. திருமதி மந்தாகினி கிருஷ்ணமூர்த்தி.

மேலவைச் செயலாளர்,

திரு. சி. கு. இராமசாமி, பி.ஏ., பி.எல்.

சார்புச் செயலாளர்,

திரு. த. ப. டில்லிதுரை, பி.எஸ்ஸி., பி.எல்.

விவாதப் பதிப்பாளர்.

திரு. நா. கோதண்டராமன், பி.ஏ., பி.ஜி.எல்., பி.எச்.

தலைமை நிருபர்.

திரு. ச. சுவாமிநாதன்.

## தொகுதிகள் உள்ளிட்ட தமிழ்நாடு சட்ட மன்ற மேலவை உறுப்பினர்களின் (தமிழ் அகர வரிசைப்படி தயாரிக்கப்பட்டது) பட்டியல்.

| தொடர் இலக்கமும் உறுப்பினர் பெயரும். | தொகுதி |
|---|---|
| (1) | (2) |
| 1 அருணாசலம், திரு. க. .. | நியமனம். |
| 2 ஆறுமுகம், திரு. சோ. .. | மாநிலச் சட்டமன்றப் பேரவை. |
| 3 ஆற்காடு வீராசாமி, திரு, நா. | மாநிலச் சட்டமன்றப் பேரவை. |
| 4 ஆனந்தம், திரு. வி.வி.வி. | மாநிலச் சட்டமன்றப் பேரவை. |
| 5 இராகவானந்தம், திரு எஸ். (தொழிலாளர் நல அமைச்சர்). | மாநிலச் சட்டமன்றப் பேரவை. |
| 6 இராசா முகமது, திரு. கா. (பாசனத்துறை அமைச்சர்) | மாநிலச் சட்டமன்றப் பேரவை. |
| 7 இராமமூர்த்தி, திரு. க. | மாநிலச் சட்டமன்றப் பேரவை. |
| 8 இராமலிங்கம், திரு. சி. | மாநிலச் சட்டமன்றப் பேரவை. |
| 9 இராதா, திரு. எஸ். ஆர். | மாநிலச் சட்டமன்றப் பேரவை. |
| 10 கண்ணப்பன், திரு. காடுவெட்டி | மாநிலச் சட்டமன்றப் பேரவை. |
| 11 சங்கரலிங்கம், திரு. ம. | திருநெல்வேலி-கன்னியாகுமரி ஆசிரியர்கள் தொகுதி. |
| 12 சண்முகம், திரு. ப. உ. ச. | மாநிலச் சட்டமன்றப் பேரவை. |
| 13 சந்தோஷம், திரு. த. | தமிழ்நாடு மேற்கு மத்திய பட்டதாரிகள் தொகுதி. |
| 14 சனார்த்தனம், டாக்டர் இரா. | தமிழ்நாடு வடக்கு பட்டதாரிகள் தொகுதி. |
| 15 சிவஞானம், டாக்டர் ம.பொ. (மாண்புமிகு தலைவர்). | நியமனம். |
| 16 சீத்தாபதி, திரு. ஆர். டி. | மாநிலச் சட்டமன்றப் பேரவை. |
| 17 சீதாதேவி கிருஷ்ணசாமி, திருமதி. | நியமனம். |

7. மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் (கல்வி அமைச்சர்) கீழ்க் கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்—

தொழில் நுட்பக் கல்வி உள்ளிட்ட கல்வி மற்றும் ஆட்சிமொழி.

8. மாண்புமிகு திரு. கா. காளிமுத்து (வேளாண்மைத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்—

வேளாண்மை, வேளாண்மை மறுநிதி, வேளாண்மை பொறியியல் பிரிவு, மற்றும் அக்ரோ பொறியியல்.

9. மாண்புமிகு திரு. சி. பொன்னையன் (கூட்டுறவு மற்றும் சட்ட அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்—

சட்டம், நீதி மன்றங்கள், சிறைகள், எடைகள்—அளவைகள் பற்றி சட்டம் இயற்றல், கம்பெனிகள் பதிவு, கடன் கொடுத்தல், சீட்டுநிதி இவைகள் பற்றி சட்டம் இயற்றல் உள்ளிட்ட கடன் நிவாரணம், மற்றும் கூட்டுறவு.

10. மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு (உள்ளாட்சித் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்—

நகராட்சிகள், ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள், சமுதாய வளர்ச்சி, கிராமப்புற கடன் சம்பந்தப்பட்டவை, பூமிதானம், கிராமதானம் மற்றும் நெடுஞ்சாலைகள்.

11. மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் (தொழிலாளர் நலத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்—

தொழிலாளர், வீட்டுவசதி, குடிசைமாற்று வாரியம், புள்ளி விவரங்கள், தமிழ்நாடு குடிநீர்—வடிகால் வாரியம், நகர அமைப்பு மற்றும் இடவசதிக் கட்டுப்பாடு.

12. மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே (மக்கள் நல் வாழ்வுத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைக்குப் பொறுப்பு வகிப்பார் —

மக்கள் நல்வாழ்வுத் துறை.

12. மாண்புமிகு திரு. கா. இராசா முகமது: (நீர்ப்பாசனத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்—

வேளாண்மைப் பணிக் கூட்டுறவுச் சங்கங்கள், சிறுபாசனம் உள்ளிட்ட பாசனத் திட்டங்கள் மற்றும் வ்க்ப்.



14. மாண்புமிகு திரு. சு. முத்துசாமி (போக்குவரத்துத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் —

போக்குவரத்து, அரசுடைமையாக்கப்பட்ட போக்குவரத்து, இயக்கூர்திகள் சட்டம் மற்றும் துறைமுகங்கள்.

15. மாண்புமிகு திரு. சு. திருநாவுக்கரசு (தொழில் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் —

பெருந்தொழில்கள், சுரங்கமும்-கனிவளமும் மற்றும் நெசவாலைகள்.

16. மாண்புமிகு திரு. செ. நி. இராசேந்திரன் (கைத்தறி மற்றும் கதர் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் —

கைத்தறி, கதர், மதுவிலக்கு (மது அருந்த அனுமதி வழங்கல் நீங்கலாக) மற்றும் பயண இசைவுச் சீட்டு, பொதுப் பணித்துறை மற்றும் பொதுப்பணித் துறை அலுவல்கள் சம்பந்தமாக.

17. மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி (ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்—

ஆதிதிராவிடர் நலம், எழுதுபொருள் அச்சுத்துறை, அரசு அச்சகம், அச்சுக் காகிதக் கட்டுப்பாடு, மலைவாழ் பழங்குடியினர், பிணைத் தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பும் பயிற்சியும்.

18. மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் (சமூக நலத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் —

மகளிர், குழந்தைகள் நலம் உள்ளிட்ட சமூகநலம், கால்நடைப் பராமரிப்பு, பிச்சைக்காரர்கள் விடுதி, அனாதை விடுதிகள் வெளி நாடு வாழ் இந்தியர்கள், அகதிகள், வெளியேற்றப்பட்டவர்கள் நலம் மற்றும் சீர்திருத்த நிர்வாகம்.

# தமிழ்நாடு சட்டமன்ற மேலவை.

---

இந்திய அரசியல் சட்டத்தின்கீழ் அமைக்கப்பட்ட சட்டமன்ற மேலவையின் ஐம்பத்தி ஒன்பதாவது கூட்டத் தொடர்.

**திங்கட்கிழமை, 1981 பிப்ரவரி 9.**

**சென்னை, செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள மேலவை மண்டபத்தில்** முற்பகல் 10-30 மணியளவில் மாண்புமிகு மேலவைத் தலைவர் (டாக்டர் ம. பொ. சிவஞானம்) அவர்கள் தலைமையில் அவை கூடியது.

## 1. இரங்கற் குறிப்பு.

**ஒருங்கிணைந்த சென்னை மாநில முன்னாள் அமைச்சர் திரு. கே. கோட்டி ரெட்டி அவர்கள் மறைவு குறித்து.**

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** மாண்புமிகு உறுப்பினர்களே, ஒருங்கிணைந்த சென்னை மாநில முன்னாள் அமைச்சர் திரு. கே. கோட்டி ரெட்டி அவர்கள் கடப்பாவில் 28—1—1981 அன்று இயற்கையெய்தினார் என்ற செய்தியை ஆழ்ந்த வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. கோட்டி ரெட்டி அவர்கள் லண்டனில் பாரிஸ்டர்-அட்-லா பட்டம் பெற்று, 1914-ல் வழக்குரைஞராகப் பதிவு செய்துகொண்டார். அவர் சென்னை சட்டமன்ற மேலவையில் 1924 முதல் 1937 வரை உறுப்பினராகவும் தொடர்ந்து 1937 முதல் 1953 அக்டோபர் வரை தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் உறுப்பினராகவும் இருந்திருக்கிறார். அவர் 1946 முதல் 1947 வரை திரு. பிரகாசம் அவர்கள் அமைச்சரவையில் அறக்கட்டளை மற்றும் ஆயத் தீர்வை அமைச்சராகப் பணியாற்றி இருக்கிறார். ஆந்திர மாநிலத்திலும் திரு. பிரகாசம் அவர்கள் தலைமையிலான அமைச்சரவையில் இருந்திருக்கிறார்.

அவரது மறைவால் துயருற்றிருக்கும் அவர்தம் குடும்பத்திற்கு நமது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மறைந்த பெரியவருக்கு மரியாதை தெரிவிக்கும் வகையில் உறுப்பினர்கள் இரண்டு நிமிடங்கள் மௌனமாக எழுந்து நிற்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

*(அவை உறுப்பினர்கள் அனைவரும் இரண்டு நிமிடங்கள் மௌனமாக எழுந்து நின்றனர்.)*

| தொடர் இலக்கமும் உறுப்பினர் பெயரும். | தொகுதி. |
|---|---|
| (1) | (2) |
| 18 சுவாமிநாதன், திரு. ஜீ. | தமிழ்நாடு வடக்கு பட்டதாரிகள் தொகுதி. |
| 19 தாமஸ், திரு. பா. ரா. | மதுரை-இராமநாதபுரம் ஆசிரியர்கள் தொகுதி. |
| 20 தாமோதரன், திரு. ஏ. ஆர். | தமிழ்நாடு வடக்கு பட்டதாரிகள் தொகுதி. |
| 21 தாரா செரியன், திருமதி. | நியமனம். |
| 22 தாஸ், திரு. எ. ஜே. | மாநிலச் சட்டமன்றப் பேரவை. |
| 23 துரைசாமி, திரு. ஓ. எஸ். | மாநிலச் சட்டமன்றப் பேரவை. |
| 24 நல்லசிவன், திரு. ஆ. | மாநிலச் சட்டமன்றப் பேரவை. |
| 25 நீலநாராயணன், திரு. | மாநிலச் சட்டமன்றப் பேரவை. |
| 26 புலமைப்பித்தன், புலவர் (மாண்புமிகு துணைத் தலைவர்) | மாநிலச் சட்டமன்றப் பேரவை. |
| 27 மந்தாகினி கிருஷ்ணமூர்த்தி, திருமதி. | நியமனம். |
| 28 மாணிக்கம். திரு. ப. | மாநிலச் சட்டமன்றப் பேரவை. |
| 29 மியாகான், திரு. ஜே. எம் | மாநிலச் சட்டமன்றப் பேரவை. |
| 30 மீனாட்சிசுந்தரம், திரு. க. | தஞ்சாவூர் — திருச்சிராப்பள்ளி புதுக்கோட்டை ஆசிரியர்கள் தொகுதி. |
| 31 முத்து, திரு. எஸ். .. | மாநிலச் சட்டமன்றப் பேரவை. |
| 32 முத்துசாமி, திரு. செ. .. | சேலம்-தர்மபுரி-கோயம்புத்தூர் நீலகிரி ஆசிரியர்கள் தொகுதி. |
| 33 முத்தையா செட்டியார். டாக்டர் ராஜா சர், எம். ஏ. | நியமனம். |
| 34 முனுசாமி, திரு. பி. .. | நியமனம். |
| 35 லீலாவதி, செல்வி. அ. | சென்னை-செங்கல்பட்டு ஆசிரியர்கள் தொகுதி. |
| 36 லெட்சுமிகாந்தன், திரு. சி. ரா. | வடஆற்காடு-தென் ஆற்காடு ஆசிரியர்கள் தொகுதி. |
| 37 வசந்த பை, திரு. ஜீ. | சென்னை மாவட்டப் பட்டதாரிகள் தொகுதி. |
| 38 வள்ளிமுத்து, திரு ஈ.வெ ஆ. | மாநிலச் சட்டமன்றப் பேரவை. |
| 39 வீரப்பன், திருஇராம. (செய்தி—அறநிலையத் துறை அமைச்சர்). | மாநிலச் சட்டமன்றப் பேரவை. |



| தொடர் இலக்கமும், உறுப்பினர் பெயரும். | தொகுதி. |
|---|---|
| (1) | (2) |
| 40 வெங்கடேசன், ஈ. எஸ். | நியமனம். |
| 41 ஹண்டே, டாக்டர் எச்.வி. (மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர்). | சென்னை மாவட்டப் பட்டதாரிகள் தொகுதி. |
| 42 ஜேப்பியார், திரு. .. | மாநிலச் சட்டமன்றப் பேரவை |
| 43 வெற்றிடம் .. | தஞ்சாவூர் உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 44 ஷை | ஷை |
| 45 ஷை .. | சேலம்-தர்மபுரி உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 46 ஷை .. | ஷை |
| 47 ஷை .. | இராமநாதபுரம் உள்ளாட்சி மன்றத்தொகுதி. |
| 48 ஷை .. | ஷை |
| 49 ஷை .. | செங்கற்பட்டு உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 50 ஷை .. | சென்னை உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 51 ஷை .. | கோயம்புத்தூர்-நீலகிரி உள்ளாட்சி மன்றத் தொகுதி, |
| 52 ஷை .. | ஷை |
| 53 ஷை .. | மதுரை உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 54 ஷை .. | ஷை |
| 55 ஷை .. | திருநெல்வேலி உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 56 ஷை .. | ஷை |
| 57 ஷை .. | வட ஆற்காடு உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 58 ஷை .. | ஷை |
| 59 ஷை .. | தென் ஆற்காடு உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 60 ஷை .. | ஷை |
| 61 ஷை .. | திருச்சிராப்பள்ளி உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 62 ஷை | ஷை |
| 63 ஷை .. | கன்னியாகுமரி உள்ளாட்சி மன்றத் தொகுதி. |

யாத்தோப்புக்கு அருகே வெள்ளாற்றின் குறுக்கே கட்டப்பட்டுள்ள பாலம் மிகவும் குறுகலாகவும், போக்குவரத்திற்கு மிகவும் இடைஞ்சலாகவும் இருப்பதால் அப்பாலத்தை விரிவுபடுத்த அரசு நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :** மாநில நெடுஞ்சாலைகளைப் பொறுத்த வரையிலும், தேசிய நெடுஞ்சாலைகளைப் பாதுகாப்பது, பராமரிப்பது போலவேதான் இப்போது நமது அரசு பராமரித்து வருகிறது. அதே அளவு கண்காணிப்பதைத்தான் நமது மாநில அரசு இந்தச் சாலைகளின்மீது கொண்டிருக்கிறது. நமது மாநில நெடுஞ்சாலைகளைப் பொறுத்தவரையில், அவை அனைத்தும் தேசிய நெடுஞ்சாலைகளுக்கு ஈடு கொடுக்கிற அளவுக்குத்தான் கவனிக்கப்பட்டு வருகின்றன. எனவேதான் தமிழகத்தில் ஏறக்குறைய 16 சாலைகளைத் தேசிய நெடுஞ்சாலைகளாக மத்திய அரசு ஏற்க வேண்டும் என்ற கோரிக்கையை அனுப்பி வைத்தோம். அந்த 16 மாநில நெடுஞ்சாலைகளில் ஒன்றைக்கூட மைய அரசு எடுத்துக்கொள்ளவில்லை. அதனால்தான், இப்போது மீண்டும் நமது கோரிக்கையை வலியுறுத்தி வருகிறோம்.

**திரு. ஜி. சுவாமிநாதன் :** தேசிய நெடுஞ்சாலைக்கான பராமரிப்புக்கு எத்தனை சதவீதம் பண ஒதுக்கீடு மத்திய அரசிடமிருந்து கிடைத்து வந்தது. அதில் இப்போது மாறுதல் ஏற்பட்டிருப்பதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். இத்தகைய மாறுதல் எத்தனை ஆண்டுகளாக இருக்கின்றது? ஏன் ஏற்பட்டது? எப்போது அது தவிர்க்கப்படும் என்ற விவரங்களை அவைக்குத் தெரிவிப்பார்களா?

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :** அதற்குரிய செயற்குறிப்பு என்னிடம் இல்லை. சமீப காலத்தில் எந்தச் சாலையையும் தேசிய நெடுஞ்சாலையாக ஏற்பதில்லை என்று மைய அரசு இருக்கிறது என்ற கருத்தைத்தான் மாறுதல் என்று குறிப்பிட்டேன். அதாவது 1 கிலோ மீட்டர் அளவுக்குக்கூட புதிதாக எந்தச் சாலையையும் மைய அரசு தேசிய நெடுஞ்சாலையாக ஏற்றுக்கொள்ளாமல் இருக்கிறது. ஆனால் அசாமில் உள்ள காரணங்களால் அங்கே மட்டும் ஒரு சாலையை தேசிய நெடுஞ்சாலையாக ஏற்றுக்கொண்டிருக்கிறது. எனவே இதைச் சுட்டிக்காட்டி மாநில அரசு இப்போது மீண்டும் மைய அரசை வற்புறுத்தி வருகிறது.

**திரு. ப. மாணிக்கம் :** சென்னை—கும்பகோணம்—தஞ்சை சாலை பண்ருட்டி, நெய்வேலி, கும்பகோணம் ஆகியவற்றின் வழியாகச் செல்லுகிறது. இந்தச் சாலை அண்மையில் ஏற்பட்ட வெள்ள அரிப்புக்குப் பிறகு சீர் செய்யப்படாமலேயே இருக்கிறது. எனவே இந்தச் சாலையை சீர் செய்யும் உத்தேசம் அரசுக்கு இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.



**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :** வெள்ள அரிப்புக்குப் பிறகு அந்தச் சாலைக்கு ஏற்பட்ட விளைவைப்பற்றி மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள். அதற்குரிய செயற்குறிப்பு இங்கே என்னிடம் இல்லை என்றாலும், உறுப்பினரின் கருத்து கவனத்தில் எடுத்துக் கொள்ளப்பட்டு, உடனடியாக நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. ம. சங்கரலிங்கம் :** நமது மாநிலத்தில் எத்தனை கிலோ மீட்டர் நீளத்திற்கு தேசிய நெடுஞ்சாலை இருக்கிறது? மற்ற மாநிலங்களோடு ஒப்பிடும்போது, இது எத்தனை சதவீதம் ஆகிறது? அண்மையில் கோளத்தில் தேசிய நெடுஞ்சாலையாக ஏற்பளிக்கப்பட்ட ஆலப்புழை—கொல்லம் நெடுஞ்சாலையில் வேலை நடைபெற்று வருகிறதே! இதை அரசு அறியுமா? நமது மாநிலத்தில் இருக்கிற தேசிய நெடுஞ்சாலைகள் பழுதுபட்டிருப்பதை அரசு கவனத்தில் கொண்டு அவைகளைச் சீர்செய்யும் நடவடிக்கைகளை மேற்கொள்ளுமா?

(முற்பகல் 10-40)

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :** இது குறித்து தனிக் கேள்வியாகக் கேட்டால், விவரமாகப் பதில் சொல்லுவதற்கு உதவியாக இருக்கும்.

**Thiru A. R. DAMODARAN :** Sir, may I know why the Government will not consider developing these roads at least as moderately good State Highways, instead of repeating the plea that they have recommended to the Government of India the inclusion of these roads in the Second Five-Year Plan, Third Five-Year Plan, etc.? What is the objection to the State Government developing these roads as being of great importance for the State economy?

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :** நமது மாநிலத்தைப் பொறுத்த வரையில், சாலைகளுக்காக அதிகப் பணத்தை ஒதுக்கிக் கொண்டிருக்கிறோம். கடந்த ஆண்டைக் காட்டிலும், இந்த ஆண்டு அதிகப் பணம் ஒதுக்கப்பட்டிருக்கிறது. இப்படி ஒவ்வொரு ஆண்டும் அதிகமாகப் பணம் ஒதுக்கிக்கொண்டு வருகிறோம். அதைத் தவிர ஊரக வளர்ச்சித் துறையின் சாலைத் திட்டத்தின் கீழ் அதிகமான சாலைகளைத் தமிழகத்திலே போட்டுக் கொண்டிருக்கிறோம், ஐம்பதாயிரம் கிலோமீட்டருக்கு மேல் உள்ள சாலைகளைப் போட்டுக் கொண்டிருக்கிறோம். எந்தெந்த கிராமங்களில் சாலைகள் இல்லையோ அங்கெல்லாம் சாலைகளைப் போட்டுக்கொண்டு வருகிறோம்.

[1981 பிப்ரவரி 9

Thiru A. R. DAMODARAN : Sir, the total length of National Highways in Tamil Nadu is only 1360 km., if I remember it correct. Now, we are going to spend Rs. 600 crores in Neyveli for the second mine-cut. At least from that point of view, will the State Government consider setting apart a larger amount for the development of this Cuddalore-Vriddhachalam-Salem road during the next year's Budget ?

Thiru G. VASANTHA PAI: On a point of order, Sir. The two clocks here show different times.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : வலது பக்கத்திலே இருப்பதுதான் சரி. இடது பக்கம் இருப்பது சரி செய்யப்படும்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : கடலூர்—விருத்தாசலம்—சேலம் சாலையைப் பற்றிக் குறிப்பாகக் கேட்கிறார்கள். அதனுடைய மொத்த நீளம் 192 கிலோ மீட்டர். இதை மாநில அரசே எடுத்துச் செய்ய வேண்டுமென்றால், அதிகத் தொகை செலவாகும். ஆகவே இவைகளைக் குறிப்பிட்டு, கோடிட்டுக் காட்டி மைய அரசிடத்திலே கேட்டுக்கொண்டிருக்கிறோம். தொடர்ந்து அவர்களை வற்புறுத்துவோம். கண்டிப்பாகக் கிடைக்கும் என்று கருதுகிறேன்

கன்னியாகுமரி நகரியத்தில் சுகாதார வசதிகள்.

* 80 ஆ. வினா.—திரு. ம. சங்கரலிங்கம் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) கன்னியாகுமரி நகரியப் பகுதிக்கு நாள்தோறும் வரும் சுற்றுலாப் பயணிகளின் சராசரி எண்ணிக்கை எவ்வளவு ?

(இ) அவர்களுக்குப் போதுமான சுகாதார வசதிகள் நகரியப் பகுதிகளில் செய்து கொடுக்கப்பட்டுள்ளனவா ?

(உ) ஆம் எனில், அதன் விவரங்கள் யாவை ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : (அ) 2,000.

(இ) ஆம்.

(உ) நகரிய அலுவலக அருகாமையில் 6 இருக்கைகள் கொண்ட ஒரு கழிப்பிடம், மற்றும் குளியலறை நகரியத்தால் பராமரிக்கப்படுகிறது. 2 இருக்கைகள் கொண்ட இன்னொரு கழிப்பிடம் திருவள்ளுவர் பேருந்து நிலையத்தின



[1981 பிப்ரவரி 9]

ரால் பராமரிக்கப்பட்டு வருகிறது. நகரியப்பகுதியில் குடியிருக்கும் மக்களுக்கும், கன்னியாகுமரி பகுதிக்கு வருகை தரும் சுற்றுலா பயணிகளுக்கும் தேவையான சுத்தமான குடி தண்ணீர் நாகர்கோயில் நகரசபை குடிதண்ணீர் திட்டத்திலிருந்து விஸ்தரிக்கப்பட்டு செயல்பட்டு வருகின்றது. மேலும், உணவு விடுதிகள், தங்கும் விடுதிகள் போன்றவற்றில் சுகாதார முறைகளைக் கடைப்பிடிப்பதைக் கண்காணிக்க உணவு 'கலப்பட சட்டம்' பொதுச் சுகாதாரச் சட்டம் ஆகியவைகள் இப்பகுதிக்கு விஸ்தரிக்கப்பட்டு நகரிய அலுவலர்களால் கண்காணிக்கப்பட்டு வருகின்றன.

திரு. ம. சங்கரலிங்கம் : கன்னியாகுமரி நகரியத்திற்குத் தினந்தோறும் இரண்டாயிரம் பயணிகள் வந்து செல்லுகிறார்கள் என்றும், அங்கே இரண்டு பொதுக் கழிப்பிடங்கள் உள்ளன என்றும், அதில் ஒன்றில் 6 இருக்கைகள் உள்ளன என்றும், இன்னொன்றில் இரண்டு இருக்கைகள் இருக்கின்றன என்றும் அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அந்தக் கழிப்பிடங்களில் கூட சரியாகத் தண்ணீர் கிடைப்பதில்லை. ஆகவே பணம் கொடுத்துப் பயன்படுத்துகிற கழிப்பிடங்களை, இரயில்வே நிலையம், பஸ் நிலையம் ஆகியவைகளையொட்டி ஏற்படுத்த அரசு முன்வருமா ? கன்னியாகுமரிக்கு நாகர்கோவில் நகரிலிருந்து தான் தண்ணீர் கொண்டுவரப்படுகிறது என்று சொன்னார்கள். நாகர்கோவில் நகரசபைக்கு வரும் நீர் நாகர்கோவிலுக்கே போதாமல் பற்றாக்குறை இருப்பதால், கன்னியாகுமரிக்குச் சரியாகத் தண்ணீர் கிடைப்பதில்லை. ஆகவே தண்ணீரின் கொள்ளளவை உயர்த்தி தண்ணீரைக் கொண்டுவர முயற்சி எடுக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : கழிப்பிடத்தைப் பொறுத்தவரையில், ஏற்கனவே இரண்டு இருக்கின்றன. காந்தி மண்டபத்திற்கு அருகில் கடற்கரையையொட்டி மேற்கே இன்னொன்றை சுமார் ஒரு இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் ஏற்படுத்துவதாக இருக்கிறோம். இதற்காக இந்த நிதியாண்டில் திட்டம் தீட்டப்பட்டிருக்கிறது.

குடிநீர்ப் பிரச்சினையைப் பொறுத்த வரையில், நாகர்கோவிலில் இருந்து கன்னியாகுமரிக்குத் தண்ணீர் வருகிறது. இப்போதுகூட நாகர்கோவிலில் உள்ளவர்கள் "எங்களுக்கே தண்ணீர் போதவில்லை, ஆகவே கன்னியாகுமரிக்குத் தண்ணீரை அனுப்பக் கூடாது" என்று மனுக்களை அனுப்பிக் கொண்டிருக்கிறார்கள். இவைகளையெல்லாம் அரசு கவனத்திலே கொண்டு தண்ணீர்ப் பற்றாக்குறையைப் போக்குவதற்குண்டான நிலைமையை உடனடியாகப் பரிசீலனை செய்யும்.

## 2. வினாக்கள்-விடைகள்.

### உடுக்குறியிட்ட வினாக்கள்.

### தேசிய நெடுஞ்சாலைகள்.

* 60-அ. வினா—திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டு கிறேன் :—

(அ) கடலூர் விருத்தாசலம்—சேலம் சாலை, கடலூர்—சித்தூர் சாலை, சென்னை—கும்பகோணம்—தஞ்சாவூர் சாலை ஆகியவற்றை தேசிய நெடுஞ் சாலையாக உயர்த்துமாறு மத்திய அரசுக்கு மாநில அரசு பரிந்துரை செய்யும் செயற்குறிப்பு ஏதும் அரசிடம் உள்ளதா ?

(இ) இல்லையெனில், இனிமேல் பரிந்துரைக்குமா ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : (அ) மற்றும் (இ) கடலூர்-விருத்தா சலம்-சேலம் சாலையையும், கடலூர்-சித்தூர் சாலையையும் மத்திய அரசுக்கு ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்திலேயே இப்பொழுது இருக்கும் தேசிய நெடுஞ்சாலைகளுடன் கூடுதலாகச் சேர்த்துக் கொள்ளுமாறு பரிந்து ரைக்கப்பட்டது. மத்திய அரசு, தேசிய நெடுஞ்சாலைகளுடன் கூடுதலாகச் சேர்க்கும் செயற்குறிப்பை நிதி நிலைமை முன்னேறும்வரை பொறுத்திருத்தல் வேண்டும் என நிராகரித்து விட்டது. ஆகையால், சென்னை-கும்பகோணம்-தஞ்சாவூர் மாவட்ட சாலையை தேசிய நெடுஞ்சாலையாக மாற்ற சிபாரிசு செய்ய இயலவில்லை.

திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, கடலூரில் ஒரு துறைமுகமும், விருத்தாசலம்—நெய்வேலிப் பகுதியில் நிலக்கரிச் சுரங்கத் தொழிற்சாலையும் அதையொட்டி பீங்கான் தொழிற்சாலையும் இருக் கின்றன. சேலத்தில் இரும்பு உருக்குத் தொழிற்சாலை அமைக்கக் கூடிய வாய்ப்பு இருக்கிறது. எனவே இவற்றையெல்லாம் இணைக்கும் சாலையாகத் தான் கடலூர்—விருத்தாசலம்—சேலம் சாலை தேசிய நெடுஞ்சாலையாக உயர்த்தப்பட வேண்டும் என்று கேட்கப்பட்டது. கடலூர்—சித்தூர் சாலை என்பது சில மாவட்டங்களையும் குறிப்பாக, இரண்டு மாநிலங்களையும் இணைக்கும் சாலையாக இருக்கிறது. இந்த அடிப்படையில் பார்க்கும்போது கடலூர்—விருத்தாசலம்—சேலம் சாலையும் கடலூர்—சித்தூர் சாலையும் தேசிய நெடுஞ்சாலையாக உயர்த்தப்பட வேண்டியது நியாயம் என்றும் அவசி



யம் என்றும் நமது மாநிலம் உணர்ந்திருக்கிற காரணத்தால், இதை மீண்டும் தேசிய நெடுஞ்சாலையாக உயர்த்தவேண்டும் என்று நமது அரசு மத்திய அரசை வற்புறுத்த நடவடிக்கை மேற்கொள்ளுமா என்று அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : இந்தச் சாலையின் முக்கியத்து வத்தைத் தெரிவித்துத்தான் ஏற்கெனவே மாநில அரசு, மத்திய அரசிடம் வற்புறுத்தியுள்ளது. எனினும் இப்போது மீண்டும் வற்புறுத்துவோம் என் பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. ம. சங்கரலிங்கம் : தேசிய நெடுஞ்சாலையாக ஒரு சாலையை மத்திய அரசு ஏற்க வேண்டுமென்று ஒரு மாநில அரசு கோரும்போது, அவ்வாறு அதனை ஏற்க மத்திய அரசு என்ன வரையறையை வகுத்துள்ளது? அந்த வரையறைக்குள் இங்கே பேசப்பட்ட இந்த நெடுஞ்சாலை வருகிறதா ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : முக்கியமான சாலைகள், குறிப்பாக ஒரு மாநிலத்திலிருந்து இன்னொரு மாநிலத்திற்குச் செல்லும் முக்கியமான இன்டர்-ஸ்டேட் சாலைகளாக இருக்க வேண்டும் என்பது ஒரு விதிமுறை. அதைப்போலவே அந்தச் சாலைகளில் போக்குவரத்து நெரிசல் அதிகமாக இருக்க வேண்டும் என்பதும் ஒன்று. இப்படிப்பட்ட தகுதிகளையுள்ள சாலை கள்தாம் தேசிய நெடுஞ்சாலைகளாக அறிவிக்கப்படுகின்றன. ஆனால், மத்திய அரசைப் பொறுத்தவரையில், சமீப காலத்தில் எந்த ஒரு மாநிலத்திற்கும் தேசிய நெடுஞ்சாலைத் திட்டத்திற்கும் ஏற்பளிப்பதில்லை என்ற கருத்தைக் கொண்டிருக்கிறது. இருப்பினும், அசாம் மாநிலத்தில் மட்டும் இந்த விதி முறைக்கு மாறாக ஒரு தேசிய நெடுஞ்சாலைத் திட்டம் ஏற்பட்டிருக்கிறது. எனவே இதைக் குறிப்பிட்டே தமிழக அரசு மீண்டும் மைய அரசிடம் நமது கோரிக்கையை வற்புறுத்தியிருக்கிறது.

திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் : சென்னை—கும்பகோணம்—தஞ்சாவூர் சாலை இப்போதே தேசிய நெடுஞ்சாலைக்குரிய அனைத்துத் தகுதிகளையும் பெற்றிருக்கிறது என்பதை மாநில அரசு உணர்ந்திருக்கிறது ; அந்த வகையில் தான் அதனை நிருவகித்து வருகிறது என்று நான் அறிகிறேன். இப்போது நடைமுறையில் தேசிய நெடுஞ்சாலையினைப் போல் அமைந்துள்ள இந்த நெடுஞ்சாலையை மத்திய அரசின் தேசிய நெடுஞ்சாலைப் பட்டியலில் எடுத்துக் கொள்வதுதான் மத்திய அரசு செய்ய வேண்டிய காரியமாகும். அப்படிச் செய்வதன் காரணமாக மாநில அரசு இந்தச் சாலையைப் பராமரிப்பதற்கான நிதிச் சுமை குறையும். எனவே இதை அரசு மீண்டும் வற்புறுத்துமா ? அடுத்து சென்னை—கும்பகோணம்—தஞ்சாவூர் சாலையைப் பொறுத்தவரையில் சேதி

திரு. ம. சங்கரலிங்கம் : காந்தி மண்டபத்தின் அருகில் ஒரு இலட்சம் ரூபாய் செலவில் கழிப்பிட வசதியைச் செய்வதாக இருக்கிறது என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். கடற்கரையோரத்தில் கழிப்பிடத்தை ஏற்படுத்துவதற்குப் பதிலாக சற்று தள்ளி ஒரு பகுதியில் கழிப்பிடத்தை அமைத்து, கடற்கரைப் பகுதியை அழகு மிகுந்த பகுதியாக மாற்ற அரசாங்கம் பரிசீலனை செய்யுமா ?

அடுத்து, தண்ணீர் கொண்டுவர முயற்சி செய்யப்படுமென்று சொல்லப்பட்டது. இதற்காக இதுவரையில் திட்டம் எதுவும் தீட்டப்படவில்லை, நிதி ஒதுக்கம் செய்யப்படவில்லை. இப்படிப்பட்ட நிலையில் இனி திட்டமிட்டால், அதை நிறைவேற்ற மூன்று ஆண்டுகளாகும். கன்னியாகுமரி நகரியத்திற்கு இரண்டாயிரம் மக்கள் தினந்தோறும் வந்து செல்கிறார்கள். ஆகவே அந்தப் பகுதிக்கு உடனடியாகத் தண்ணீர் கொடுக்காவிட்டால், நகரியமாக உள்ள அந்தப் பகுதி நரகமாக மாறும். ஆகவே உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : நகரியங்களாக இருப்பது நரகங்களாக மாறக்கூடாது என்பதுதான் அரசின் கொள்கை. இப்போது கிராமங்களை நகரமாக ஆக்க வேண்டுமென்ற திட்டத்தை அரசு செயல்படுத்திக் கொண்டிருக்கிறது. கன்னியாகுமரியைப் பொறுத்த வரையில், சுற்றுலா மையமாக இருப்பதால், அங்கே கழிப்பிட வசதி அத்தியாவசியமாக இருக்கின்றது. அதே நேரத்தில் நிதி நிலைமைகளையும் பார்க்க வேண்டிய சூழ்நிலை இருக்கிறது. கன்னியாகுமரி நகரியத்தின் நிதி நிலைமை போதுமானதாக இல்லை. ஆகவே அரசாங்கத்தின் மூலமாகக் கடன்கள் கொடுக்கப்பட்டு, அல்லது மானியமாகக் கொடுக்கப்பட்டு, சில வேலைகளை ஆரம்பிக்க வேண்டும் என்பதற்காகத் திட்டங்கள் தீட்டப்பட்டு, செயல்படுத்தப்பட்டு வருகின்றன. குறிப்பாக காந்தி மண்டபத்திற்கு அருகில், கடற்கரையையொட்டியுள்ள பகுதியில் ஒரு இலட்சம் ரூபாய் செலவில் கழிப்பிடம் ஒன்றை ஏற்படுத்தத் திட்டம் தீட்டியிருக்கிறோம். கடற்கரையை அசிங்கப்படுத்த வேண்டும் என்பதற்காக அல்ல. கடற்கரையைச் சுத்தமாக வைக்க வேண்டும் என்பதற்காகத்தான் கடற்கரையையொட்டி கழிப்பிடம் ஏற்படுத்தப்படுகிறது. மேலும் இது ஒரு "ஃப்ளஷ்-அவுட்" Flush-out கழிப்பிடம். ஆகவே கண்டிப்பாக அசிங்கம் ஏற்படாது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.





## *Graduate Allowance to Rural Welfare Officers.*

* 60-C. Q.—Thiru G. SWAMINATHAN : Will the Hon. the Minister for Local Administration be pleased to state—

(*a*) whether it is a fact that the Rural Welfare Officers (Gramasevaks) are not being paid Graduate Allowance, as in the case of other Government Employees ; and

(*b*) if so, whether the Government would consider granting the same to them?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : (அ) ஆம்.

(இ) இது அரசின் பரிசீலனையில் இருக்கிறது.

திரு. ஜி. சுவாமிநாதன் : அரசுப் பணியில் உள்ள ஏனையோருக்கும் கிராமநல ஊழியர்களுக்கும் வேறுபாடு இருப்பதன் காரணம் என்ன ? இதன் அடிப்படை நோக்கம் என்ன ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : இதிலே வேறுபாடும், அடிப்படை நோக்கமும் எதுவும் இல்லை. குறிப்பாக கிராம அலுவலர்களாகச் சேர்கிறவர் களில் ஒரு சிலர் பட்டதாரிகளாக இருக்கிறார்கள். ஒரு சிலர் தகுதிக்கேற்ப படிப்பு உள்ளவர்களாக இருக்கிறார்கள். வேறு வேறுபாடுகள் ஒன்றும் இல்லை. இவர்களுடைய பணி விதிகளைப் பற்றி இறுதி முடிவு எடுக்கிறபோது, இவைகள் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படும்.

## கன்னியாகுமரி மாவட்டத்தில் பேருந்து வசதி.

* ஈ. ஆ. வினா—திரு. ம. சங்கரலிங்கம் : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) கன்னியாகுமரி மாவட்டத்தில் வழித்தடம் எண். 33-ல் 1954 ஆம் ஆண்டு முதல் தொடர்ந்து ஓடிக்கொண்டிருந்த பேருந்து, 1978, அக்டோபர் முதல் நிறுத்தப்பட்டுவிட்டது என்பது உண்மையா ?

(இ) அதனால், அவ்வட்டாரப் பொதுமக்கள் பெருமளவில் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள் என்று அரசின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டதா ?

(உ) ஆம் எனில், மீண்டும் அந்த வழித்தடத்தில் பேருந்து விடுவதற்கு அரசு எடுத்த நடவடிக்கை யாது ?

கருதுகிறது. இன்றைய தினம் டீசல் எண்ணெய் பெறுவதில் பெரும் சங்கடங்களுக்குள்ளாக்கப்பட்டிருக்கிறோம். இதை உறுப்பினர் அவர்களும் எண்ணிப் பார்க்க வேண்டும் என்று எடுத்துச் சொல்ல விரும்புகிறேன்.

**திரு. க. மீனாட்சிசுந்தரம்:** திருத்துறைப்பூண்டியிலிருந்து தலைஞாயிறுக்கு ஒரு மினி பஸ் விடப்பட்டு, அந்த மினி பஸ் பாதியிலே நிறுத்தப்பட்டிருக்கிறது. ஓடிக்கொண்டிருந்த அந்த பஸ், பாதக் கணக்கில் நிறுத்தப்பட்டிருக்கிறது. அப்படி நிறுத்தப்பட்டிருக்கின்ற அந்த மினி பஸ்ஸைத் தொடர்ந்து ஓட்ட அரசு உடனடியாக நடவடிக்கை எடுக்குமா ?

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி:** நான் சொல்லிய காரணங்களை உறுப்பினர் அவர்கள் ஏற்றுக்கொண்டிருக்கிறார்கள். புதிதாகப் பேருந்துகளை விடுவதில், டீசல் விலைகள் உயர்ந்திருப்பதால் சங்கடம் இருக்கிறது. உறுப்பினர் அவர்கள் சொல்கின்ற வழித்தடத்தில் 18 முறைகள் பேருந்து ஓடிக்கொண்டிருக்கிறது. டீசல் கிடைப்பதில் உள்ள சங்கடம் காரணமாக நிறுத்தப்பட்டிருக்கிறது. இப்போது நிறுத்தப்பட்டிருக்கிற வண்டி எங்கிருந்தாலும், அதை மீண்டும் அரசு ஓட்டும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

(டாக்டர் இரா. சனார்த்தனம் எழுந்தார்.)

**மாண்புமிகு மேலவைத் தலைவர்:** அங்கத்தினர் அவர்கள் கேட்கவிருக்கும் துணைக் கேள்வி, மூலக் கேள்விக்குச் சம்பந்தப்பட்டது தானே ?

**டாக்டர் இரா. சனார்த்தனம்:** இட நெரிசல் என்பது பேருந்தில் உட்கார்ந்திருக்கின்ற பயணிகளின் எண்ணிக்கையைப் பொருத்துக் கணக்கிடப்படுகிறதா அல்லது நின்றுகொண்டு பயணம் செய்கின்றவர்களின் எண்ணிக்கையைப் பொருத்துக் கணக்கிடப்படுகிறதா ?

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி:** உட்கார்ந்திருப்பவர்களைப் பொருத்து அல்ல. இடம் கிடைக்காமல் நின்றுகொண்டு போகின்ற பயணிகளைப் பொருத்துத்தான் கணக்கிடப்படுகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

### கைத்தறி தீவிர வளர்ச்சித் திட்டம்.

* 60-வது வினா.—**திரு. ஈ. எஸ். வெங்கடேசன்:** மாண்புமிகு கைத்தறி-கதர்த்துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) மாநில அரசால் கைத்தறி தீவிர வளர்ச்சித் திட்டம் செயல்படுத்தப் படுகிறதா ?





(இ) ஆமெனில், அதற்காக மத்திய அரசு உதவித்தொகை வழங்குகிறதா? அல்லது நிதி ஒதுக்கம் ஏதேனும் செய்கிறதா ?

(உ) இத்திட்டம் எத்தனை இடங்களில் செயல்படுத்தப்பட்டு வருகிறது ?

**மாண்புமிகு திரு. சொ. நீ. இராசேந்திரன்:** (அ) & (இ) ஆம்.

(உ) காஞ்சிபுரம், ஈரோடு, சேலம், மதுரை, கரூர் மற்றும் குறிஞ்சிப்பாடி ஆகிய ஆறு இடங்களில் தீவிர கைத்தறி வளர்ச்சித் திட்டங்கள் நடைபெற்று வருகின்றன.

**திரு. ஈ. எஸ். வெங்கடேசன்:** இந்தத் திட்டத்தின் வரவு-செலவுக் கணக்கு அரசுக்குச் சமர்ப்பிக்கப்படுகின்றதா ? இது நஷ்டத்தில் இருக்கின்றதா அல்லது லாபத்தில் இருக்கின்றதா ?

**மாண்புமிகு திரு. சொ. நீ. இராசேந்திரன்:** இது குறித்து தற்போது என்னிடம் குறிப்பு ஒன்றும் இல்லை. தனிக் கேள்வி போடும்படி கேட்டுக் கொள்கிறேன்.

**டாக்டர் இரா. சனார்த்தனம்:** இந்தத் தீவிர வளர்ச்சித் திட்டத்தின்படி ஒரு தொழிற்சாலை என்று நடத்தப்படுவதைக் காட்டிலும், 'ஒருவருக்கு ஒரு வீடு ஒரு தறி' என்ற முறையில் அமைக்கும் உத்தேசம் அரசுக்கு உண்டா ?

**மாண்புமிகு திரு. சொ. நீ. இராசேந்திரன்:** இந்தத் திட்டம் நெசவாளர்களுக்கு வேலை வாய்ப்புகள் ஏற்படுத்திக் கொடுப்பதற்கான திட்டம். கைத்தறி நெசவுத் துணிகளை அதிகமாக உற்பத்தி செய்ய வேண்டும் என்ற நோக்கத்தோடு ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது. மத்திய அரசு உதவியோடு வீடு கட்டும் திட்டம் இருக்கிறது. தனியாக, ஆறாவது திட்டத்தில் 5 ஆயிரம் வீடுகள் கட்டுவதற்கான முயற்சிகள் எடுக்கப்பட்டிருக்கின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

THIRU G. VASANTHA PAI : Will the Hon. Minister enlighten us on whether the handloom and Khadi Products for which the intensive development project is initiated are meant for local consumption or for export? If the products are for export, will the Government ensure that the I.S.I. Standards Institution is asked to vouch for the quality of the products?

**மாண்புமிகு திரு. சொ. நீ. இராசேந்திரன்:** தரமான துணிகளை உற்பத்தி செய்வதற்காகவே, இந்தக் கைத்தறித் திட்டம் ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது. கரூர் மற்றும் குறிஞ்சிப்பாடி ஆகிய இரண்டு இடங்களில் மத்திய அரசு உதவியோடு ஆரம்பிக்கப்பட்டு, வெளிநாட்டிற்கு ஏற்றுமதி செய்வதற்காக

[1981 பிப்ரவரி 9

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** உறுப்பினர் அவர்கள் இவைகளையெல்லாம் கடிதத்தில் எழுதிக் கேட்டிருக்கலாம்.

**திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் :** இப்படி இதில் சங்கடங்கள் இருப்பதால், இதைப்பற்றி அரசு பரிசீலனை செய்து தக்க முடிவு எடுக்குமா ?

**மாண்புமிகு திரு. சொ. நீ. இராசேந்திரன் :** மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் உணர்வுகளை இந்த அரசு மதிக்கிறது. இருந்தாலும் முன்னுரிமை என்ற அடிப்படையில் வரைமுறைகளைத் தயாரித்திருக்கிறார்கள். அதிலே சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் வரைமுறைகள் இருக்கின்றன. ஆகவே அவர்கள் முன்கூட்டியே பதிவு செய்திருந்தால், மேலதிகாரிகள் வந்தால் நிச்சயமாக ரத்து செய்ய முடியாது என்றுதான் அந்தக் குறிப்பிலே இருக்கிறது.

**திரு. ஜி. சுவாமிநாதன் :** அரசு விழாக்களாக இருந்தால், சட்டமன்ற உறுப்பினர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்பட்டிருக்கிறது. அந்த முன்னுரிமைப் படி அரசாங்கச் செயலாளர்களுக்கு மேலாக சட்டமன்ற உறுப்பினர்கள் வைக்கப்பட்டிருக்கிறார்கள். ஆனால் இந்த இட ஒதுக்கீட்டைப் பொறுத்த வரையில், சட்டமன்ற உறுப்பினர்களுக்கு இட ஒதுக்கீடு என்பது அங்குள்ள டிஸ்ட்ரிக்ட் அபிசியல்ஸ் என்று சொல்லக்கூடிய மாவட்ட அதிகாரிகளுக்குக் கீழாக வைக்கப்பட்டுள்ளது. ஆகவே அந்த முன்னுரிமையை மாற்றுவதற்கு அரசு ஏற்பாடு செய்யுமா என்று கேட்டுக்கொள்கிறேன். இந்த முன்னுரிமை மற்ற மாநிலங்களில் அளிக்கப்பட்டிருக்கிறது. அண்மையிலே புதுச்சேரி மாநிலத்திலேயும் இப்படி முன்னுரிமை மாற்றியமைக்கப்பட்டிருக்கிறது. அரசாங்க விழாக்களில், .. சட்டமன்ற உறுப்பினர்களுக்கு அளிக்கக்கூடிய முன்னுரிமை இங்கும் அளிக்கப்படுமா என்று அறிந்து கொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் :** மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, இதைப்பற்றி இந்த அரசு பரிசீலித்து ஆவன செய்வதற்கு முயலும் என்ற வார்த்தையைத் தவிர, இப்போது உறுதியளிக்க இயலாது என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

(முற்பகல் 11-00)

**திரு. க. மீனாட்சிசுந்தரம் :** சுற்றுலா மாளிகைகளில் வாடகை அதிகமாக இருக்கிறது. எனவே சட்டமன்ற உறுப்பினர்களுக்கு மட்டுமாவது வாடகையிலே சலுகையளிக்க அரசு முன்வருமா ?

**மாண்புமிகு திரு. சொ. நீ. இராசேந்திரன் :** வாடகை அதிகமென்று இப்போதுதான் மாண்புமிகு உறுப்பினரவர்கள் சொல்லுகிறார்கள். அங்கே வாடகை அதிகமாக வசூலிக்கப்படவில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.



1981 பிப்ரவரி 9]

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** கேள்வி, சுற்றுலா மாளிகைகளில் முன்னுரிமை அளிப்பது பற்றியதாகும்.

**திரு. ஜி. சுவாமிநாதன் :** இருக்கின்ற முன்னுரிமைப் பட்டியலை மாற்றாவிட்டாலும், அந்த அறை சட்ட மன்ற உறுப்பினர்களுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட பிறகு, மேலதிகாரிகள் வந்தால், ஒதுக்கீடு செய்யப்பட்டதை ரத்து செய்யாமல் இருக்க அரசு முன்வருமா ?

**மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் :** இதைப்பற்றி அரசு நிச்சயமாகப் பரிசீலிக்கும்.

### *Photographers of Forensic Science Laboratories.*

* 60-H. *Q*.—THIRU G. SWAMINATHAN : Will the Hon. the Minister for Handlooms and Khadi be pleased to state :

(*a*) whether any representation has been received by the Government, regarding anomalies in fixing the pay scales of Photographers working in the Forensic Science Laboratories attached to the Police Department, as recommended by the Third Tamil Nadu Pay Commission and with regard to the betterment of their service conditions ; and

(*b*) if so, the action proposed to be taken by the Government thereon ?

**மாண்புமிகு திரு. சொ. நீ. இராசேந்திரன் :** (அ) காவல் துறை மற்றும் தமிழ் நாடு குற்றஞ்சார்ந்த அறிவியல் ஆய்வுக்கூடங்களில் பணிபுரிகின்ற நிழற்படம் எடுப்பவர்களிடமிருந்து அவர்தம் சம்பள விகிதங்களை நிர்ணயம் செய்வதில் உள்ள பொருத்தமின்மைகளை நீக்குவதற்கான மனுக்கள் தனி நபர் குழுவினால் பெறப்பட்டுள்ளன. அவர்களது பணிமுறைமைகளை மேம்படுத்துதல் குறித்த மனுக்கள் ஏதும் இதுவரை பெறப்படவில்லை.

(இ) பெறப்பட்ட மனுக்கள் தனி நபர் குழுவினால் ஆய்வு செய்யப்பட்டு அரசிற்கு அதனது அறிக்கையினை சமர்ப்பித்துள்ளது. அவ்வறிக்கை அரசின் பரிசீலனையில் இருந்து வருகிறது.

**திரு. ஜி. சுவாமிநாதன் :** தனி நபர் குழுவின் தலைவர் யார் ? அந்தக் குழுவின் அறிக்கை எப்போது வெளியிடப்படும் ? ஏனென்றால் ஏற்கெனவே காலம் கடந்திருப்பதாகத் தெரிகிறது.

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி :** 1978 அக்டோபர் மாதத்தில் நிறுத்தப்படவில்லை. ஆனால் 1978 நவம்பர் மாதத்தில் சில நாட்களுக்கு பேருந்து இயக்கம் தற்காலிகமாக நிறுத்தப்பட்டது.

(இ) இல்லை.

(உ) 23—11—1978-ம் நாள் முதல் பேருந்து மீண்டும் தொடர்ந்து இயக்கப்படுகிறது.

**திரு ம. சங்கரலிங்கம் :** தடம் எண் 33 ஓடிக்கொண்டிருந்த ஒரு பகுதியில் சாலை உடைப்பு ஏற்பட்டதன் காரணமாக நிறுத்தப்பட்டு, சுமார் மூன்று, நான்கு மாதங்கள் ஓடாமல் இருந்தது. ஆனால் பத்து நாட்களுக்குப் பிறகு ஓடியதாக அமைச்சர் அவர்கள் தன்னுடைய பதிலில் சொன்னார்கள். அப்படியென்றால் அங்கே நிறுத்தப்பட்டதற்குக் காரணம் என்ன? சாலை உடைப்பு ஏற்பட்டதென்றால், எப்போது செப்பனிடப்பட்டது என்பதை அரசு பரிசீலனை செய்து பார்த்ததா ?

**மாண்புமிகு திரு சு. முத்துசாமி :** மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறுகின்ற தடம் எண் 33 இறைச்சகுளத்திற்குச் செல்லுவது. இது 3—11—1978 அன்று நிறுத்தப்பட்டிருக்கிறது. அந்தப் பகுதி சரி செய்யப்பட்ட பின்பு, 18—11—1978 அன்று மீண்டும் துவக்கப்பட்டிருக்கிறது. ஆனால் வீரநாராயண மங்கலம் என்ற ஊருக்குச் செலுத்தப்படவில்லை. அங்கிருந்த கண்மாய் சரி செய்யப்படாத காரணத்தால், அந்த ஊருக்குச் செலுத்தப்படவில்லை. அதற்குப் பின்பு 23—11—1978 அன்று சரி செய்யப்பட்டிருக்கிறது. மொத்தத்தில் 20 நாட்களுக்கு மேல் நிறுத்தப்படவில்லை. சரி செய்யப்பட்ட பின்பு மீண்டும் துவக்கப்பட்டிருக்கிறது.

**டாக்டர் இரா. சனார்த்தனம் :** இது போல, பல இடங்களில் புதிய வழித்தடங்களில் அதிகப் பேருந்துகளை விட வேண்டும் என்று பொதுமக்கள் வேண்டுகோள் விடுத்திருக்கிறார்கள்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** இந்த வினா வழித்தடம் 33 ஐப் பற்றியது. மாண்புமிகு உறுப்பினர் பொதுவாக வழித்தடங்களைப் பற்றிக் கேட்கிறார்கள்.

**திரு ம. சங்கரலிங்கம் :** நாகர்கோவில், இறைச்சகுளம், வழியாக வீரநாராயணமங்கலம் போகிற வழித்தடம் இது. ஆனால் வீரநாராயண மங்கலத்தில் ஏற்பட்ட உடைப்பை தற்காலிகமாகத்தான் சரி செய்திருக்கிறார்





கள். இன்னும் நிரந்தரமான முறையில் சரி செய்யவில்லை. வண்டி போய்க் கொண்டிருந்தாலும், ஆபத்து வருகின்ற நிலை இருக்கிறது. அதை அரசு பரிசீலனை செய்து அந்தச் சாலையை முறையாகச் செப்பனிட முன்வருமா ?

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி :** இப்பொழுதுதான் கவனத்திற்குக் கொண்டு வந்திருக்கிறார்கள். நிச்சயமாக இந்த அரசு பொறுப்பு ஏற்றுக் கொண்டு அதற்கான நடவடிக்கையை எடுக்கும்.

**திருத்துறைப்பூண்டியிலிருந்து தலைஞாயிறுக்கு கூடுதல் பேருந்து.**

* உ. **வினா—திரு. க. மீனாட்சிசுந்தரம் :** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) இடநெரிசலைத் தவிர்க்கும் பொருட்டு, திருத்துறைப்பூண்டியிலிருந்து தலைஞாயிறுக்கு கூடுதல் நகரப் பேருந்து ஒன்றை அனுமதிக்க அரசு எண்ணியுள்ளதா ?

(இ) ஆம் எனில், எப்போதிலிருந்து அப்பேருந்து விடப்படும் ?

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி :** (அ) மற்றும் (இ) இந்த வழித்தடத்தில் கூடுதல் பேருந்து ஒன்று விடுவதற்கு தஞ்சை மண்டல போக்குவரத்து அதிகாரி முடிவு எடுத்துள்ளார். அதன்படி உரிமம் வழங்குவதற்கான விண்ணப்பங்கள் அவரின் பரிசீலனையில் உள்ளன.

(முற்பகல் 10-50)

**திரு. க. மீனாட்சிசுந்தரம் :** இந்தக் கோரிக்கையை எழுப்பி நீண்டகாலம் ஆகிறது. தஞ்சை மண்டலத் தலைவர், வளர்ச்சி மன்றக் கூட்டத்திலேயே சொல்லியிருக்கிறார்கள். ஆகவே, இதை விரைவாகச் செய்வதற்கு ஆவன செய்யப்படுமா ?

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி :** ஏற்கெனவே அந்த வழித்தடத்தில் அந்தப் பேருந்து 18 முறைகள் ஓடிக்கொண்டிருக்கிறது. எங்கும் பேருந்துகள் விடவேண்டும் என்று தான் அரசு கருதுகிறது. அதிகமாக விடவேண்டும் என்று கேட்கின்ற இடங்களும் இருக்கின்றன. எத்தனையோ இடங்கள் இன்னும் பேருந்து வசதிகள் பெறாத நிலையில் இருக்கின்றன. அங்கத்தினர் குறிப்பிடும் பேருந்து 18 முறைகள் போகும் இடமாகப் பெற்று இருக்கிறார்கள். முதலில் இல்லாத இடங்களில் பேருந்துகள் விடவேண்டும் என்பதால்தான் இந்தக் காலதாமதம் இருக்கிறது. அரசு எங்கும் விடவேண்டும் என்றுதான்

மாண்புமிகு திரு. சொ. நீ. இராசேந்திரன் : தனி நபர் குழுவின் தலைவர் யார் என்பது பற்றிய குறிப்பு இங்கில்லை. தனி நபர் குழுவின் பரிந்துரைகள் மீது அரசு எந்தவிதமான முடிவும் எடுக்கவில்லை.

THIRU G. SWAMINATHAN : Who is that One Man Commission?

மாண்புமிகு திரு. சொ. நீ. இராசேந்திரன் : அது பற்றிய குறிப்பு இல்லை. தனிக் கேள்வி போடவும்.

### தஞ்சாவூர் மாவட்டத்தில் மினி பஸ்கள்.

* 19 வினா.—திரு. க. மீனாட்சிசுந்தரம் : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) தஞ்சாவூர் மாவட்டத்தில் மினி பஸ் விட திட்டமிடப்பட்டுள்ள புதிய தடங்கள் எவை ?

(இ) அத்தடங்களில் இதுவரை விடப்பட்டுள்ள மினி பஸ்கள் எத்தனை?

(உ) இனி விடப்பட உள்ள மினி பஸ்களின் எண்ணிக்கை எவ்வளவு ?

மாண்புமிகு திரு. க. முத்துசாமி : (அ) தஞ்சாவூர் மாவட்டத்தில் பத்து புதிய வழித்தடங்களில் மினி பஸ் விட திட்டமிடப்பட்டுள்ளது. அவை பின்வருமாறு:—

1. திருத்துறைப்பூண்டி—தலைஞாயிறு
2. வேதாரண்யம்—வேளாங்கண்ணி
3. சீர்காழி—முதலைமேடு
   சீர்காழி—வாணகிரி
4. பொதக்குடி—மன்னார் கோட்டை
5. திருவாரூர்—கொரடாச்சேரி
6. பட்டுக்கோட்டை—அதிவெட்டி வடக்கு
7. பட்டுக்கோட்டை—மதுக்கூர்
8. செம்பகராயநல்லூர்—வெல்லப்பள்ளம்
9. திருவாரூர்—வடக்கரை
10. மதுக்கூர்—மதுக்கூர்

(இ) நான்கு மினி பஸ்கள்.

(உ) ஆறு.



திரு. க. மீனாட்சிசுந்தரம் : தலைஞாயிறு—திருத்துறைப்பூண்டி வழித் தடத்தில் ஒன்று ஓடிக்கொண்டிருக்கிறது. இதற்குமேல் ஒரு மினி பஸ் சாங்ஷன் செய்யப்பட்டிருக்கிறதா ?

மாண்புமிகு திரு. க. முத்துசாமி : ஏற்கெனவே ஓடிக்கொண்டிருக்கும் பேருந்துதான் அது. அதற்குமேல் ஒரு பேருந்தை விடுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை.

THIRU A. R. DAMODARAN : Will the fare structure of mini buses be the same as it is in the transport buses at present or will it be lower in view of the fact that mini buses are more economical to run?

மாண்புமிகு திரு. க. முத்துசாமி : அதற்கும் இதற்கும் எந்தவிதமான வித்தியாசமும் இல்லை. எந்த அளவிற்கு இவைகளை ஓட்டுவதிலே செலவு குறைந்த அளவிற்கு இருக்கிறதோ, அந்த அளவிற்கு வருமானமும் குன்றவாகத் தான் இருக்கிறது என்பதையும் கணக்கிட்டுப் பார்க்க வேண்டும்.

### சாலை விபத்துக்கள்.

* 20 வினா.—திரு. ம. சங்கரலிங்கம் : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) 1—1—1978 முதல் 15—6—1980 வரை, எத்தனை சாலை விபத்துக்கள் தமிழகத்தில் நடந்துள்ளன ?

(இ) இவைகளில் எத்தனை பேர் உயிர் இழந்தார்கள் ?

(உ) எத்தனை பேர் படுகாயம் அடைந்ததால் ஊனமுற்று, தொழில் செய்ய இலாயக்கற்றவர்களாக உள்ளனர் ?

(எ) அவர்களுக்கு அரசு நட்டஈடு ஏதேனும் கொடுத்ததா ?

(ஐ) ஆம் எனில், எவ்வளவு தொகை கொடுக்கப்பட்டுள்ளது?

மாண்புமிகு திரு. க. முத்துசாமி : (அ) 35,237.

(இ) 6,040.

(உ) 912.

(எ) முதல்வரின் விபத்து நிவாரண நிதியிலிருந்து நட்டஈடு கொடுக்கப்பட்டது.

(ஐ) ரூ. 20,87,000 கொடுக்கப்பட்டுள்ளது.

இதில் கவனம் செலுத்தும். அதோடு மட்டுமல்லாமல், இன்னொன்றையும் நான் எதிர்க் கட்சித் தலைவர் அவர்களுக்குச் சொல்லுகிறேன். ஓட்டி வருகின்றவர்கள் மது அருந்தி அப்படிப்பட்ட தவறுகளை செய்திருந்தால் நிரந்தரமாக அப்படிப்பட்டவர்களுக்கு அனுமதி ரத்து செய்யப்படுமா என்று கேட்டார்கள். நிச்சயமாக அரசு இதில் கவனம் செலுத்தியிருக்கிறது. இனியும் செய்யவும் முன்வரும். இப்போது அவர்கள் தனிப்பட்ட முறையில் அல்லது வேறு மாநிலங்களிலிருந்து லைசன்ஸ் பெறுகிறார்கள். அதை மாற்றி அரசே தனியாக நிறுவனம் மூலமாகக் கொடுக்க வேண்டுமென்ற கருத்தையும் ஆராய்ந்து கொண்டிருக்கிறது.

திரு. க. இராமமூர்த்தி : மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கொடுத்திருக்கிற விவரங்களிலிருந்து, சாலை விபத்துக்கள் பற்றிய விவரங்களை அறிந்து கொண்டோம். சில பகுதிகளில் அதிகமாக விபத்துக்கள் ஏற்படுகின்றன, அடிக்கடி சாலை விபத்துக்கள் நடக்கிற சில பகுதிகள் இருக்கின்றன. அந்தப் பகுதிகள் எவையெவை என்று கண்டுபிடிக்க இந்த அரசு முன்வருமா? அதிகமாக விபத்துக்கள் ஏற்படுகின்ற இடங்கள் அல்லது அடிக்கடி குறிப்பிட்ட சாலை விபத்துக்கள் அதிகமாக ஏற்படுகின்ற இடங்கள் போன்றவற்றுக்குத் தனியாக கவனம் செலுத்தி விபத்துக்கள் எதிர்காலத்தில் ஏற்படாமல் தடுக்கும் வகையில் ஏற்ற நடவடிக்கை எடுக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. க. முத்துசாமி : உறுப்பினர் சொல்லிய கருத்து ஏற்கெனவே இந்த அரசின் கருத்தில் இருக்கிறது. அதற்கான நடவடிக்கையை எடுத்துக் கொண்டிருக்கிறார்கள். சில இடங்களில் குறிப்பாக அடிக்கடி விபத்து ஏற்படுவதை எப்படி குறைக்கலாம் என்பதுபற்றி ஆராயும்படி கேட்டிருக்கிறோம். ஓட்டுநர் பயிற்சியைக் கொடுத்த பிறகு தான் லைசன்ஸ் பெற முடியும். லைசன்ஸ் பெறுவதைச் சில தனியார்கள் இப்பொழுது செய்து கொண்டிருக்கிறார்கள். இனிமேல் ஒவ்வொரு மாவட்டத்திலும் அரசின் சார்பில் ஒரு நிர்வாகத்தின் மூலம் திறமை உள்ளவர்களுக்கு அந்த லைசன்ஸ் வழங்கும் உரிமம் வழங்கப்படும். அதைத்தான் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். அந்த நிறுவனம் இந்திந்த இடங்களில், இப்படிப்பட்ட சாலை விபத்துக்கள் அதிகமாக ஏற்படுகின்றன என்பதைக் கண்டுபிடித்து அரசுக்குச் சொன்னால், அதை அரசு ஏற்றுக்கொள்ளும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

Thiru A. R. DAMODARAN : Sir, the assumption that accidents are caused only by vehicles driving at speed is completely mistaken. In Madras City, accidents are taking place not only because of the vehicles that are involved but also because of pedestrains, cattle, etc





May I know whether the Government have any proposal to have a Special Mobile Court in Madras City to prevent the numerous traffic accidents that are occurring in Madras City?

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : நடைபாதையில் நடந்து செல்ல வேண்டியவர்கள் நடைபாதையில் நடந்து செல்லாமல், கடைப்பிடிக்க வேண்டிய முறைகளைக் கடைப்பிடிக்காமல், ரோட்டின் குறுக்கே நடந்து செல்வது, கீழே செல்வது போன்ற பழக்கங்களைக் குற்றம் என்று கருதாமல் வைத்துக்கொண்டிருப்பதால் தான், இப்படிப்பட்ட விபத்துக்கள் எல்லாம் ஏற்படுகின்றன. அதற்காக இந்த அரசு எந்தெந்த வகையில் சிந்திக்க வேண்டுமோ, அந்தந்த வகையில் சிந்தித்துக்கொண்டிருக்கிறது. இன்னொன்றையும் நான் குறிப்பிட விரும்புகிறேன். நடைபாதையில் நடந்து செல்கின்றவர்கள் தவறு செய்கிறார்கள் என்பதனால், நடமாடும் நீதிமன்றங்கள் போன்ற ஒரு முறை முன்பு இருந்தது. அதன் மூலம் தண்டனை வழங்கப்பட்டு வந்தது. அதை இந்த அரசு ஏற்கெனவே மாற்றியது. இதை நான் சொல்லக் காரணம் தீர்ப்பு வழங்கப்படும்போது, குற்றம் செய்தவர் என்று குற்றம் சாட்டப்படுகின்றவர், அல்லது குற்றவாளி என்று கருதப்படுகின்றவர் சில சந்தர்ப்பத்தில் நிரபராதியாக இருக்கிறார். சாதாரண ஏழையெளியவர்கள், எங்கோ அலுவலகத்திற்கு சைக்கிளில் செல்கின்றவர்கள் இப்படிப்பட்டவர்கள் தவறாகச் செல்லும்போது, நடமாடும் நீதிமன்றத்தின் மூலம், நடைமுறைகளை மீறினார்கள் அல்லது ரோடுகளில் சரியாகச் செல்லவில்லை என்பதற்காகக் குற்றம் சாட்டப்பட்டு, தண்டிக்கப்பட்டு அபராதம் கட்டும் நிலைமைக்கு ஆளானார்கள். எல்லாக் கட்சியில் உள்ளவர்களிடமிருந்தும், பொது மக்களிடமிருந்தும் அது குறித்துப் புகார்கள் வந்ததைத் தொடர்ந்து தான் அந்த முறை நிறுத்தப்பட்டது. மீண்டும் அதைக் கொண்டு வர வேண்டுமென்றால், இதையெல்லாம் பரிசீலித்துப் பார்த்துத்தான் கொண்டு வரவேண்டியிருக்கிறது.

Thiru A. R. DAMODARAN: My question was not only about Mobile Courts to take action against pedestrains. There are a lot of auto-rickshaws, scooters and taxies, which cross the yellow line and which do not give way to traffic. If non-officials are associated with the Mobile Courts like the Honorary Magistrates of the past and if on-the-spot fines are levied, the complaint that there is too much of strictness in these Mobile Courts may perhaps be avoided to a certain extent. It is very essential that Mobile Courts be resumed in Madras City at least. I would request the Government kindly to let us know whether they are actively considering this because of the increase in the number of traffic accidents.

உயர்தரமான துணிகள் தயாரிக்கப்பட்டு வருகின்றன. வெளிநாடுகளிலே விரும்பி வாங்கக் கூடிய அளவிலே கரூர், குறிஞ்சிப்பாடி ஆகிய இடங்களிலே தரமான துணிகளைத் தயாரிக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. ம. சங்கரலிங்கம் :** இப்போது ஆறு இடங்களிலே தீவிர கைத்தறித் திட்டம் செயல்படுவதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அந்தத் திட்டம் வட மாவட்டங்களிலே தான் செயல்படுகின்ற நிலையிருக்கிறது. அந்தத் திட்டத்தைத் தென் மாவட்டங்களுக்கும் விஸ்தரிக்க அரசிடம் குறிப்பு உள்ளதா ?

**மாண்புமிகு திரு. சொ. நீ. இராசேந்திரன் :** தென் மாநிலங்களில் அதற்கான முறைகளை ஆராயவென்று நெசவாளர்கள் ஆய்வுக் கூடங்கள் இருக்கின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இந்தத் தீவிர கைத்தறித் திட்டத்தின் கீழ் நெசவு ஆய்வுக்கூடங்கள் அமைக்க ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது.

**திரு. க. இராமமூர்த்தி :** இந்தக் கைத்தறி தீவிர வளர்ச்சித் திட்டத்தின் அடிப்படையிலே நெசவாளர்கள் எந்த அளவுக்குப் பயன் பெற்றிருக்கிறார்கள் ? அவர்களுடைய நெசவுத் தொழில் எந்த அளவுக்கு வளர்ச்சி அடைந்திருக்கிறது ? அவர்கள் ஊதியம் வளர்ச்சி அடைந்திருக்கிறதா ? இவைகளைப்பற்றி, இந்தத் திட்டத்தின் அடிப்படையிலே அரசு கணக்கிட்டு வைத்திருக்கிறதா ?

**மாண்புமிகு திரு. சொ. நீ. இராசேந்திரன் :** நெசவாளர்களுக்குக் கிடைக்கின்ற ஊதியம் மற்ற பிரதம சங்கங்களில் இருப்பவர்களுக்குக் கிடைக்கின்ற அளவு கிடைக்கின்றது. இதுவரை கிளைச் சங்கங்களாக இயங்கி வந்தவைகள் இப்போது அரசு கோ-ஆப்டெக்ஸ் உடன் இணைக்கப்பெற்று, அதிலே தயாரிக்கப்படுகின்ற துணிகளில் 50 சதவிகிதத்தைக் கொள்முதல் செய்து, அதன் மூலம் நெசவாளர்களுக்கு உதவி செய்கின்றது. ஊதியத்தைப் பொறுத்தவரை, பிரதம சங்கங்களில் கொடுக்கின்ற ஊதியமே இவர்களுக்கும் கிடைத்துக் கொண்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

### சுற்றுலா மாளிகை முதலியவைகளில் அறை ஒதுக்கீடு.

* 60-எ **வினா.—திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் மற்றும் செல்வி அ. லீலாவதி :** மாண்புமிகு கைத்தறி-கதர்த்துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறோம்—

(அ) மாநில அரசின் பொறுப்பில் உள்ள சுற்றுலா மாளிகை, ஆய்வாளர் மாளிகை மற்றும் பயணியர் விடுதி ஆகியவற்றில் அறைகளை முன்னதாக ஒதுக்கீடு (Reserve) செய்வதில் யாருக்கேனும் முன்னுரிமை அளிக்கப் படுகிறதா ?



(இ) ஒரு சட்டமன்றப் பேரவை அல்லது மேலவை உறுப்பினருக்கு அறையை முன் ஒதுக்கீடு செய்தபிறகு, அந்த அறையை அரசு உயர் அதிகாரிகள் கேட்டால் அந்த முன் ஒதுக்கீட்டை இரத்து செய்யலாம் என்ற விதி உள்ளதா ?

**மாண்புமிகு திரு. சொ. நீ. இராசேந்திரன் :** (அ) ஆம்.

(இ) அரசு ஆய்வாளர் விடுதி மற்றும் விருந்தினர் விடுதிகளில் தங்க விரும்புவோர் முன்கூட்டியே இட ஒதுக்கீடு பெறவேண்டும். யாருக்கும் ஒதுக்கீடு செய்யாமல் காலியிடம் இருந்தால், ஒதுக்கீடு பெறாத ஒருவர் அங்கு தங்குவதில் ஆட்சேபணை இல்லை. ஆனால் அப்படிப்பட்டவர் தங்கும்போது இட ஒதுக்கீடு பெற்ற ஒருவர் (முன்னுரிமைப் பட்டியலில் எந்த இடத்தை சார்ந்தவர் ஆனாலும் சரி) வர நேர்ந்தால் உடனே இடம் காலி செய்யப்பட வேண்டும்.

**திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் :** இந்த முன்னுரிமைப் பட்டியல் எந்த அடிப்படையில் தயாரிக்கப்பட்டிருக்கிறது ? இதிலே எந்தெந்த நிலையிலே புள்ளவர்களுக்கு முன்னுரிமை கொடுக்கப்படுகிறது ? அதுபற்றிய விதிமுறைகள் பற்றித் தெரியாமல் இருக்கிறது. இதனை அரசு விளக்குமா ?

**மாண்புமிகு திரு. சொ. நீ. இராசேந்திரன் :** முன்னுரிமைப் பட்டியலில், ஏற்கெனவே 30—7—1973-ல் அரசாணை எண் 1203-ல், பொதுவான அளவில், முன்னுரிமை பெறுபவர்களின் வரிசை வரைமுறை செய்யப்பட்டுள்ளது. அதை மாண்புமிகு அங்கத்தினர் அவர்கள் சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் அந்தந்த இடங்களிலேயுள்ள விடுதிகளிலேயே தெரிந்துகொள்ளலாம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் :** பொதுவாக சட்டமன்ற உறுப்பினர்களுக்கு ஏற்படும் சங்கடங்களையும், அதையொட்டி எழுகின்ற பிரச்சினைகள் காரணமாகவும், இந்தக் கேள்வியைக் கேட்டிருக்கிறேன். நாங்கள் முன் கூட்டியே ஒதுக்கீடு பெற்றால்கூட, வேறு அதிகாரிகள் அதைக் கேட்டிருக்கிறார்கள் என்று எங்களுக்குச் சொல்லி அதன் காரணமாக ரத்து செய்யக் கூடிய நிலைமைகள் ஏற்படுகின்றன. அமைச்சர் அவர்கள் முன்னுரிமை விதிகள் பற்றிச் சொல்லியிருக்கிறார்கள். அதிலுள்ள சங்கடங்களைப் போக்க வேண்டுமென்றால், சுற்றுலா விடுதிகளில் ஏற்கெனவே 4 அறைகள் இருந்தால், அதில் 2 அறைகளாவது அங்கத்தினர்களுக்கு என்று நிர்ணயித்து முன்னுரிமையை அளிக்கின்ற நியதியை ஏற்படுத்தலாம். அப்படி இல்லையென்றால், மேலும் இரண்டு அறைகளைக் கட்டி அவைகளை உறுப்பினர்களுக்கு ஒதுக்கலாம். விடுதிகள் இல்லாத வட்டாரத் தலைநகரங்களில் விடுதிகளைக் கட்டலாம்.

**மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் :** இந்த அரசு நிச்சயமாக இதைப்பற்றிச் சிந்திக்கும். ஆட்டோ ரிக்ஷா போன்றவைகள் பாதையில் சில நேரங்களில் நடுவிலே தடைச் சுவர்கள் இல்லாததினால் மஞ்சள் கோட்டைத் தாண்டிச் செல்கிறார்கள். அப்படிப்பட்ட நிலைமைகளையும் மாற்ற வேண்டும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. ஜி. சுவாமிநாதன் :** சென்னை நகரில் 18 வயதுக்கு உட்பட்ட பல பேர் ஆட்டோ ரிக்ஷா ஓட்டுகிறார்கள். அப்படி 18 வயதுக்குக் குறைந்த ஆட்டோ ரிக்ஷா ஓட்டுநர்கள் இருக்கிறார்களா? சில மாநிலங்களில் அல்லது வெளிநாடுகளில் இருப்பது போல், சில ஆண்டுகளுக்குப் பிறகு அல்லது சில ஆண்டுகளுக்கு ஒரு தடவை Refresher course * என்கிற முறையில் பயிற்சியளிப்பதுபற்றி ஆராய அல்லது கவனிக்க இந்த அரசு ஏற்பாடு செய்யுமா?

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி :** இது போன்ற தவறுகள் நேரிடுகின்றன என்பதை அறிந்து நேற்றையதினம் மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவர் அவர்களுடைய ஒப்புதலைப் பெற்று, புதிதாக சில அதிகாரிகளை நியமித்து, தவறு செய்கிறவர்களைக் கண்டுபிடித்து நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று சொல்லி ஓர் அமைப்பினை ஏற்படுத்தியிருக்கிறோம். மூன்று ஆண்டுகளுக்கு ஒரு முறை புதுப்பிக்க வேண்டுமென்று இருந்த, ஓட்டுகின்ற உரிமையை ஐந்து ஆண்டுகளுக்கு ஒரு முறை என்று மாற்றி விட்டோம். அதற்குக் காரணம் லைசன்ஸ் தான் வருகிறதே தவிர ஆள் வருவதில்லை. ஆகவே இனிமேல் தான் எத்தனை ஆண்டுகளுக்கு ஒரு முறை ஓட்டிக் காண்பிக்க வேண்டுமென்பது பற்றி முடிவெடுக்க இருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

THIRU G. VASANTHA PAI. In answer to the question by the hon. Member Thiru Damodaran, the Hon. the Chief Minister said that people were walking along the roads instead of along the pavements. May I bring to his notice that very often it is not possible to walk along these pavements because they are often used as public conveniences and also because the pavements are cut open for giving pipe-connections to houses? The pavements are all uneven and it is impossible even to walk on them. I am bringing this to the notice of the Hon. the Chief Minister.

**மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் :** நாங்கள் நிச்சயமாக அதைக் கவனித்த பிறகு எங்களுடைய கருத்துக்களைத் தெரிவிப்போம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் இடப்பட்டிருக்கும் உடுக்குறி (*) அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]



## 3. அறிவிப்புகள்.

### (1) அலுவல் ஆய்வுக் குழுவின் முடிவு.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** இன்று நடைபெற்ற அலுவல் ஆய்வுக் குழுவில் கீழ்க்கண்ட நிகழ்ச்சி விவரம் முடிவு செய்யப்பட்டது :—

| | | |
|---|---|---|
| 10—2—1981 | காலை 10.30 மணி | 1980—81 ஆம் ஆண்டுக்கான செலவு குறித்த முதல் துணை விவர அறிக்கையின் மீது விவாதம். |
| 11—2—1981 | காலை 10-30 மணி மீண்டும் மாலை 4 மணி | தமிழ்நாடு மின்சார வாரிய நிதி நிலை அறிக்கையின் மீது விவாதம். |
| 12—2—1981 | காலை 10 30 மணி | (1) நிதி ஒதுக்க சட்டமுன்வடிவினை ஆய்வு செய்தல். (2) தனி உறுப்பினர் அலுவல்கள். |
| | மாலை 4 மணி | அரசின் சட்டமுன்வடிவுகளை ஆய்வு செய்தல். |
| 13—2—1981 | காலை 10-30 மணி மீண்டும் மாலை 4 மணி | அரசின் சட்டமுன்வடிவுகளை ஆய்வு செய்தல் |
| 14—2—1981 | காலை 10-30 மணி | அரசின் சட்டமுன்வடிவுகளை ஆய்வு செய்தல் |
| 15—2—1981 | ஞாயிற்றுக்கிழமை | விடுமுறை. |
| 16—2—1981 | தேவைப்படின் | |

**திரு. ம. சங்கரலிங்கம் :** கடந்த 2½ ஆண்டுகளிலே 35,000-க்கும் மேற்பட்ட விபத்துக்கள் நடைபெற்றிருக்கின்றன, சுமார் 6,000-க்கும் மேற்பட்டவர்கள உயிரிழந்திருக்கிறார்கள். அவர்கள் குடும்பத்தாருக்கு முதலமைச்சர் நிவாரண நிதியிலிருந்து 20 லட்சம் ரூபாய் நஷ்டஈடு கொடுக்கப்பட்டிருக்கிறது என்ற புள்ளி விவரங்களை அமைச்சரவர்கள் தெரிவித்தார்கள். இப்படி நடைபெறும் விபத்துக்களைக் குறைக்க என்ன நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன என்பதை அறிய விரும்புகிறேன். மேலும் விபத்துக்களில் உயிரிழந்தவர்களின் குடும்பத்தினர் வழக்கு போடுவதற்கு முன்பு, அவர்களுக்கு நஷ்டஈடு இவ்வளவு தர வேண்டுமென்று தீர்மானிப்பதற்கு முன்பு, இறந்தவரின் குடும்பத்திற்கு உடனடியாக அரசு உதவி செய்வதற்கு என்ன முறை கையாளப்படுகிறதென்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. க. முத்துசாமி :** இப்போது விபத்துக்கள் அதிகமாக ஏற்பட்டிருக்கின்றன என்று சொன்னார்கள். இப்படிப்பட்ட விபத்துக்கள் தமிழகத்திலுள்ள பேருந்துகளால், இதர வாகனங்களால் ஏற்படுவது மட்டுமல்ல, பக்கத்து மாநிலங்களிலிருந்து வரும் வாகனங்களினாலும் ஏற்படுகிறது இப்படிப்பட்ட விபத்துக்களைக் குறைக்க தமிழக அரசு நடவடிக்கை எடுத்திருக்கிறது. ஒவ்வொரு வாகனத்திலும் வேகக் கட்டுப்பாட்டுக் கருவியைப் பொருத்த வேண்டுமென்று சொல்லி, அதற்காக நடவடிக்கைகளை தமிழக அரசு எடுத்திருக்கிறது. திருப்பதியிலே நடந்த தென்மாநிலப் போக்குவரத்து அமைச்சர்கள் மாநாட்டில் கலந்துகொண்டபோது, பக்கத்து மாநிலங்களைச் சேர்ந்த வாகனங்களிலும் வேகக் கட்டுப்பாட்டுக் கருவியைப் பொருத்தினால்தான் விபத்துக்களைக் குறைக்க முடியுமென்று சொல்லி, அவர்களும் அதை ஏற்றுக்கொண்டு, அதைச் செயல்படுத்த நடவடிக்கைகளை எடுக்கப் போவதாகச் சொன்னார்கள். முதலமைச்சர் நிவாரண நிதியிலிருந்து எந்த முறையில் உதவி அளிக்கப்படுகிறதென்று கேட்டார்கள். இந்த அரசு பொறுப்பேற்ற பிறகுதான் விபத்துக்களில் இறந்தவர்களின் குடும்பத்தாருக்கு 1,000 ரூபாய் கொடுக்க நடவடிக்கை எடுத்தது. இந்த நிதி உதவிக்கும், மற்றவைகளுக்கும் எந்தவித சம்பந்தமும் இல்லை. மனிதாபிமான அடிப்படையில் கொடுக்கப்படும் உதவியாகும் இது. இந்த உதவியைப் பெறுவதானால், எல்.ஐ.சி. பணம் போன்ற மற்ற நிதிகளைப் பெற எந்தவிதத் தடையும் ஏற்படாதென்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அவை முறைப்படி கொடுக்கப்படும்.

**திரு. ம. சங்கரலிங்கம் :** விபத்துக்கள் அதிகரிக்காமல், தடுப்பதற்காக வேகக் கட்டுப்பாட்டு இயந்திரத்தைப் பொருத்துவதென்று முடிவெடுத்திருப்பதாக அமைச்சரவர்கள் சொன்னார்கள். சில நேரங்களில் வாகனங்களை



ஓட்டி வருபவர்கள் மது மயக்கத்தில் இருப்பதால், எந்த அளவிற்கு விபத்துக்கள் ஏற்பட்டுள்ளன என்பது குறித்து அரசு கணக்கிட்டுள்ளதா ? அந்த முறையில் வாகனம் விபத்துக்குள்ளாகின்றபோது, அதை ஓட்டி வருபவர்கள் மது அருந்தியிருந்தால், அவர்களுடைய லைசன்சை நிரந்தரமாக ரத்து செய்ய விதிமுறைகள் இருக்கின்றனவா ? எனக்குத் தெரிந்தவரையில், ஒன்றைக் குறிப்பிட விரும்புகிறேன். கன்னியாகுமரி மாவட்டத்தில், தோவாளையில் அரசுப் பேருந்து ஓர் இளைஞர் மீது ஏறியதன் காரணமாக, அவர் உடல் ஊனமுற்றவரானார். அவர் அரசுக்கு விண்ணப்பம் செய்தும், எந்தவித உதவியும் கிடைக்கவில்லை. அரசுப் பேருந்துத் துறையில் அட்டெண்டர் வேலை கொடுத்தால் போதுமென்று அவரிடமிருந்து அரசுக்கு விண்ணப்பம் வந்திருக்கிறது. அது மேனேஜிங் டைரக்டருக்கு அரசிடமிருந்து அனுப்பப்பட்டிருக்கிறது. அதன் விவரங்களைத் தனியாகத் தருகிறேன். இதுவரை எந்தவித உதவியும் அவருக்குக் கிடைக்கவில்லை. எனவே விபத்துக்களினால் உடல் ஊனமுற்றவர்களுக்கு வேலைவாய்ப்பு கொடுக்க திட்டம் வகுக்கப்படுமா ?

**மாண்புமிகு திரு. க. முத்துசாமி :** கன்னியாகுமரி மாவட்டத்தில் ஏற்பட்ட சாலை விபத்துபற்றி மாண்புமிகு உறுப்பினரவர்கள் சொல்லியிருக்கிறார்கள். அவர் கூறியது, நான் நினைப்பதாகத்தான் இருக்குமென்று கருதுகிறேன். ஓர் இளைஞர் காலிலே அடிபட்டு, மனு கொடுத்திருக்கிறார். இந்த விபத்து நடந்தது 1972-75-க்குள் என்று நினைக்கிறேன். ஆனால் எங்களுடைய கட்சி அரசு ஏற்பட்ட பின்புதான் சாலை விபத்துக்களின் மூலம் உடல் ஊனமுற்றவர்களுக்கு உதவித் தொகை கொடுக்க முடிவு எடுக்கப்பட்டு, அந்தத் தொகையைக் கொடுக்க நடவடிக்கை எடுத்து வருகிறோம். எப்போதோ நடந்த விபத்துக்களுக்கெல்லாம் இப்போது கொடுக்க வேண்டுமென்று சொன்னால் எப்படி என்பதை மாண்புமிகு உறுப்பினரவர்களே சிந்தித்துப் பார்க்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இருக்கின்ற மொத்த நிதியையும் கொடுத்தால்கூடப் போதாது.

**திரு. ம. சங்கரலிங்கம் :** 1973-74-ல் ஏற்பட்ட விபத்தானாலும், இவர் இளைஞராக இருக்கிறார், ஊனமுற்றவராக இருக்கிறார். எனவே போக்குவரத்துத் துறையிலே அவருக்கு அட்டெண்டர் வேலை கொடுக்க அரசு முன்வருமா ?

(முற்பகல் 11-10)

**மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் :** ஊனமுற்றவர்களுடைய அனுதாபத்தைப் பெறுவதற்காக, அவர்களிடத்தில் அனுதாபத்தைக் காண்பிக்கின்ற அளவுக்கு, அவர்களுக்காக நடத்தப்படுவதல்ல. இந்த அரசு

### 4. தகவல் கோரல்.

**வானொலியில் சட்டமன்ற மேலவை நிகழ்ச்சிகள் புறக்கணிக்கப்படுவது குறித்து.**

* **திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் :** தலைவர் அவர்களே, மேலவையினுடைய நிகழ்ச்சிகள், விவாதங்கள் எல்லாம் வானொலியில் சரியான முறையில் அறிவிக்கப்படாமல் புறக்கணிக்கப்படுகின்றன. குறிப்பாக இந்த நடப்புக் கூட்டத்தொடரின் நிகழ்ச்சிகள், விவாதங்கள் எல்லாம் புறக்கணிக்கப்பட்டிருக்கின்றன. பொதுவாக 'மாநிலச் செய்திகள்', 'சட்டமன்றத்தில் இன்று' போன்ற நிகழ்ச்சிகளில் மேலவை நிகழ்ச்சிகளை முன்பெல்லாம் சொல்வதுண்டு. ஆனால், இந்த நடப்புக் கூட்டத்தொடரைப் பொறுத்தவரை, சட்டமன்ற மேலவை நிகழ்ச்சிகள் பெரிதும் புறக்கணிக்கப்பட்டிருக்கின்றன. பல நாட்களில் விடுபட்டுப் போயிருக்கின்றன. மேலவையில் நடைபெறும் நிகழ்ச்சிகள் மிகவும் முக்கியமானவை. வானொலியிலிருந்து முன்பெல்லாம் தனியாக ஒரு நிருபர் வருவது உண்டு. தற்போதும் அப்படி ஒருவர் நியமிக்கப்பட்டு வந்துகொண்டிருக்கிறாரா? அப்படி நியமிக்கப்பட்டிருந்தால், ஏன் செய்திகள் வருவதில்லை? அதுபற்றி தக்கமுறையில் வானொலிக்கு அறிவுறுத்த வேண்டுமென்று மேலவைத் தலைவரைக் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** நானும் கவனித்தேன். இது அவர்களுடைய கவ்னத்திற்குச் செல்லும் என்று நினைக்கிறேன். 'சட்டமன்றத்தில் இன்று' நிகழ்ச்சியின்போது வானொலியில் மேலவை நிகழ்ச்சிகளை முன்பெல்லாம் சொல்வது சங்கடமாக இருந்திருக்கலாம். காரணம் முன்பெல்லாம் மாலையில் சட்டமன்ற மேலவை நடவடிக்கைகள் நடைபெற்றன. இப்போது மேலவை நடவடிக்கைகள் காலையில் நடைபெறுவதால், அவர்களுக்கு 'சட்டமன்றத்தில் இன்று' நிகழ்ச்சியின்போது மேலவை நிகழ்ச்சிகளைச் சொல்ல வாய்ப்பாக இருக்கும். மேலவை நிகழ்ச்சிகளுக்கு இடம் தர சந்தர்ப்பம் இருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் எழுப்பியுள்ள பிரச்சினையை நான் வானொலி நிலையத்தாருடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். வானொலி நிருபர் இங்கு இருக்கிறார் என்கிற தகவல் எனக்குக் கிடைத்திருக்கிறது. அவர்களும் இது குறித்து கவனிப்பார்கள். நானும் இதை அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு செல்கிறேன்.

(முற்பகல் 11-20)



### 5. கவன ஈர்ப்பு.

**அரசு ஊழியர்கட்கும், ஆசிரியர்கட்கும் வீடு கட்டுவதற்கான கடன் வழங்கல் நிறுத்தப்பட்டது குறித்து.**

**திரு. க. மீனாட்சிசுந்தரம் (மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் அவர்களுக்காகவும்) :** மாண்புமிகு தலைவர் அவர்களே,

"அரசு ஊழியர்கட்கும், ஆசிரியர்கட்கும் வீடுகள் கட்டிக்கொடுக்கப்படுவதற்காக அரசாங்கத்தால் கொடுக்கப்பட்டு வந்த சலுகை ஒரு சிலருக்கு ஒரு பகுதி நிறுத்தப்பட்டதாலும், ஒரு சிலருக்கு ஒரு பகுதிக் கடனை வழங்கி, அவர்கள் வீடு கட்டும் பணி இடையில் நிற்கும் வேளையில் மேற்கொண்டு அனுமதிக்கப்பட்ட கடனை வழங்காமல் நிறுத்தப்பட்டதாலும் தொடர்புடைய அரசு ஊழியர்—ஆசிரியர்கள் படும் அல்லல் குறித்து"

மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டுவருகிறேன்.

**மாண்புமிகு திரு. கா. இராசா முகமது (மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் சார்பில்) :** மாண்புமிகு தலைவர் அவர்களே, விவர அறிக்கை @ ஒன்று அவையின் முன் வைக்கப்பட்டுள்ளது.

**திரு. க. மீனாட்சிசுந்தரம் :** சென்னை பெரவள்ளூர் பெரியார் நகரில் ஆயிரக்கணக்கான வீடுகள் பாதி வேலை முடிந்த அளவில் நிற்பதால், இரண்டாவது துணை மானியத்தில் 50 லட்சம் ரூபாய் நிதியொதுக்கீடு செய்து அவைகளுக்கு வழங்கி, இந்த நிதியாண்டிலேயே அந்த வீடுகளைக் கட்டி முடிப்பதற்கு வசதியாக அவைகளுக்கு நிதி வழங்க அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. கா. இராசா முகமது :** விவர அறிக்கையிலே, எந்தக் காரணத்தினால் இந்த உதவி தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டிருக்கிறது என்று தெளிவாக இருக்கிறது. எந்த ஆண்டும் இல்லாத அளவுக்கு 1980-81 ஆம் ஆண்டிற்கு 500 லட்சம் ரூபாய் கடனுதவி அளிக்க வேண்டும் என்று அரசு தீர்மானித்து. அரசு ஊழியர்களுக்கு இந்த உதவி சிக்கிரம் சென்றடைய வேண்டும் என்று மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மூலம் பெற்றுக் கொள்ள அவர்களுக்கும் அதிகாரம் அளிக்கப்பட்டது. ஆனால் டிசம்பர் மாதத்திற்குள்ளாகவே, 500 லட்சம் ரூபாய் என்பது 530 லட்சம் ரூபாயாகத் தேவை உயர்ந்துவிட்டது. ஆகவேதான் கடன் வழங்கல் தற்காலிகமாக

@ 63-64 ஆம் பக்கங்களில் இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது.

சிறப்பை மனம் விட்டுச் சொல்லும் நிலைமையிலே இருக்கிறார்கள். அதை யாரும் மறைக்கவோ, திசை திருப்பவோ முடியாது. கட்சி அடிப்படையிலே மறுக்கலாமே தவிர, "என்னைச் சிறப்பாக அழைக்கவில்லை, அழைக்கும் போது வெற்றிலை பாக்கு வைத்து அழைக்கவில்லை" என்று சொல்லலாமே தவிர, அந்த மாநாட்டிலே சிறப்பில்லை என்று யாரும் சொல்ல முடியாது. அந்த மாநாட்டிலே ஆராய்ச்சிக் கட்டுரைகள் எல்லாம் படிக்கவில்லை என்று எதிர்க் கட்சியைச் சேர்ந்த மாண்புமிகு உறுப்பினர் ஒருவர் இங்கே சொன்னார். நான் அவருடைய பெயரைச் சொல்ல விரும்பவில்லை. பெயர் சொல்கிற நிலைமையிலே அவர் இன்றைக்கு இல்லை. எனக்கு இருக்கிற சங்கடம் எல்லாம், அவர் மாநாட்டைப் பார்க்கவில்லை என்றாலும் பரவாயில்லை, மாநாட்டுச் சிறப்பை நூல் வாயிலாகப் படிக்கவில்லை என்றாலும் பரவாயில்லை, தமிழை வைத்து வளர்ந்தவர், தமிழர் என்ற முறையிலே, மதுரையிலே நடைபெற்ற உலகத் தமிழ் மாநாடு பற்றிய வானொலி நிகழ்ச்சியையாவது கேட்டிருக்கலாம். இங்கே இருக்கிற சென்னை வானொலி நிலையத்தை விட இலங்கை வானொலி நிலையம் மிகவும் சிறப்பான முறையிலே ஆராய்ச்சிக் கட்டுரைகளை ஒலிபரப்பியது. பல்வேறு அறிஞர்கள் எல்லாம் படித்த ஆராய்ச்சிக் கட்டுரைகளை ஒலிபரப்பியது. எனக்கு இருக்கிற மகிழ்ச்சியெல்லாம், மிகவும் சிறப்பான முறையிலே உலகத் தமிழ் மாநாட்டை நடத்திக் காட்டியிருக்கிறோம். ஒரு பெரும் புகழ் ஏற்படுகின்ற அளவுக்குத் திறமையாக நாம் மாநாட்டை நடத்தியிருக்கிறோம். இன்னொரு பெருமை அந்த மாநாட்டுக்கு என்னவென்றால், இந்திய நாட்டின் பிரதமர் அந்த மாநாட்டுக்கு வந்ததாகும். அந்தக் காரணத்தினால் பலருக்கு மகிழ்ச்சி, சில பேருக்கு வருத்தம். வருத்தப்படுகிறவர்களைப்பற்றி நான் கவலைப்படவில்லை. இன்னும் சொல்லப் போனால், மகிழ்ச்சியடைபவர்களைப்பற்றிக் கூட கவலைப் படவில்லை. அவர்கள் வந்ததனால் தமிழுக்குக் கிடைத்த மிகப் பெரிய ஆதாயம், நீண்ட காலத்துக்குப் பின்னால் இப்போது பண்டித நேரு அவர்கள் கொடுத்த உறுதிமொழி, அதாவது இந்தி திணிக்கப்பட மாட்டாது என்ற வாக்குறுதி மீண்டும் உறுதிப்படுத்தப்பட்டிருப்பதேயாகும். தமிழ் வளர்ச்சிக்குக் கிடைத்த சான்றாக நான் இந்த உறுதியை எடுத்துக் கொள்கிறேன். இப்படியொரு உறுதிமொழி கிடைப்பதற்கு எவ்வளவு கோடி ரூபாய் செலவானாலும், தமிழன் என்ற உணர்வோடு வாழ்ந்து கொண்டிருப்பவர்கள் அதை ஏற்றுக்கொள்வார்கள் என்று நான் உறுதியாக நம்புகிறேன்.

தமிழ் உயர்வை நாம் வளர்த்துக் கொண்டிருக்கிறோம் என்று பெருமையாகச் சொல்லிக் கொண்டிருக்கும் இந்த நேரத்தில், தமிழ் நாட்டிலே சில இடங்களிலே, சில பள்ளிக்கூடங்களிலே, இந்தி எந்த அளவுக்கு இருக்கிறது





என்பதையும் நாம் பார்க்க வேண்டும். இன்றைக்கு தமிழ் நாட்டிலே இருக்கும் ஒரு சில நர்சரிப் பள்ளிகளிலே 3-4 வயதில் படிக்கும் குழந்தைகளுக்கெல்லாம் இந்தி சொல்லிக் கொடுக்கிறார்கள். வீட்டிலே இருக்கும் பெற்றோர்கள் இதைப் பற்றியெல்லாம் ஒன்றும் கவனிப்பதில்லை. பிள்ளைகள் வீட்டை விட்டுப் போனால் போதும் என்ற நிலைமையில் அவர்கள் இருக்கிறார்கள். இந்த நிலைமைகளை மாணவர்களிடம் சொன்னால், அவர்கள் கிளர்ச்சி செய்வார்கள். முன்பு ஒருமுறை இந்தப் பிரச்சினையைக் கிளப்பியபோது, மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் இந்த மாதிரியான நிலைமைகளை அரசு கவனித்துக்கொண்டுதான் இருக்கிறது என்று சொன்னார்கள். ஆகவே, இந்த நிலைமைகளைப் போக்குவதற்கு அரசு நடவடிக்கை எடுத்தாக வேண்டும்.

(முற்பகல் 11-30)

இன்றைக்கு எந்த வகையிலாவது தமிழகத்தில் இந்தியை நுழைத்து விடலாம், எந்த வகையிலாவது இந்தியைப் புகுத்திவிடலாம், அதன் மூலம் தமிழுக்கு இருக்கிற பெருமையை அழித்துவிடலாம் என்று எண்ணுவார்களானால், அவர்களுக்கு நான் ஒன்றைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். தமிழகத்திலே தமிழ் உணர்வோடு வாழ்கிற மக்கள் சமுதாயம் இருக்கிற வரையில், இங்கே இருப்பவர்கள் இந்தியை ஏற்றுக்கொள்ள மாட்டார்கள் என்பதைத்தான் அண்மையில் நடந்து முடிந்த உலகத் தமிழ் மாநாடு எடுத்துக் காட்டியிருக்கிறது. இதுவரையில் வேறுபட்ட உணர்வுக்கு ஆட்பட்டிருந்தாலும், தற்போது தமிழ் உணர்வுக்கு வருகிற அளவுக்கு உலகத் தமிழ் மாநாடு மக்களிடையே ஒரு எழுச்சியை உருவாக்கியிருக்கிறது என்பதை நாம் ஒப்புக் கொள்ளத்தான் வேண்டும்.

அது மட்டுமல்ல, அந்த மாநாட்டைப்பற்றிப் பேசியவர்கள் வேறொன்றையும் குறிப்பிட்டார்கள். "மாநாடு என்ற பெயரில் கோடிக்கணக்கான பணத்தைச் செலவு செய்திருக்கிறீர்களே தவிர, உங்களாலே எந்த ஒரு பெரிய காரியத்தையாவது செய்ய முடிந்ததா? இதுவரை செய்திருக்கிறீர்களா?" என்றெல்லாம் கேட்டார்கள். தமிழகத்தில் இதுவரை வேறு யாரும் செய்ய முடியாத, செய்ய நினைக்காத அல்லது செய்யவியலாத ஒரு காரியத்தை இந்த அரசு செய்திருக்கிறது. அதாவது புரட்சித் தலைவருடைய அரசு. தமிழகத்திலே ஒரு அமைதியான முறையில் தமிழ் எழுத்துச் சீர்திருத்தத்தை நடத்தி முடித்திருக்கிறது என்பதை நான் அவர்களுடைய நினைவுக்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

நிறுத்தி வைக்கப்பட்டிருக்கிறது. இந்த நிதியாண்டு பட்ஜெட் தாக்கல் செய்தவுடன், உடனடியாக அவர்களுக்கு மீதிப் பணத்தை வழங்கச் சொல்லியிருக்கிறோம்.

* திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் : இப்படிக் கடன் வாங்கி வீடுகள் கட்டுவது சம்பந்தமாக அவர்கள் இரண்டு வகையில் கஷ்டப்படுகிறார்கள். ஏற்கெனவே, கடன் அனுமதிக்கப்பட்டு, வீட்டு வேலைகளையெல்லாம் துவங்கி, இப்போது அடுத்த தவணைப் பணம் வராததால், வீடுகள் தொடர்ந்து கட்டப்படாமல் பாதியில் நிற்கின்றன. அடுத்தபடியாக, வீடுகள் கட்டுவதற்காக வாங்கிய சிமெண்ட் போன்ற பொருட்கள் பயன்படுத்தப்படாமல் இருப்பதால், கெட்டுப் போய்விடும் நிலைமையும் இருக்கிறது. மேலும், புதிதாக மனுக்கள் போடுபவர்களுக்கு அனுமதி கிடைக்கவில்லை என்ற நிலைமையும் இருக்கிறது. ஆகவே, ஏற்கெனவே கடன் வாங்கியவர்களுக்காவது, அவர்கள் தொடங்கிய வேலை தொடர்ந்து நடைபெறும் ஒரு அவசர நடவடிக்கை மூலமாக அரசு நிதியொதுக்கீடு செய்து அவர்களின் சங்கடத்தைப் போக்க அரசு முன்வருமா ? மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு இந்த அதிகாரம் வழங்கப்பட்டிருப்பதை மாற்றி, இந்த அதிகாரத்தை இன்னும் பரவலாக்கும் வகையில், மாவட்ட அளவிலே இருக்கும் பல்வேறு துறைத் தலைமை அதிகாரிகளுக்கும் இந்தப் பொறுப்பைப் பகிர்ந்தளிக்க அரசு முன்வருமா ? அப்படிச் செய்தால், அரசு ஊழியர்களுக்கு புதிதாகக் கடன் அனுமதிப்பதிலும் தவணைகள் அளிப்பதிலும் ஏற்படும் தாமதத்தை மேலும் போக்க முடியுமாகையால் அரசு இந்தக் கருத்தைப் பரிசீலிக்குமா ?

மாண்புமிகு திரு. கா. இராசா முகமது : 1979-80 ஆம் ஆண்டில் இதற்கென்று 225 லட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டது. அப்போது இந்தத் தொகைகள் வழங்குவதில் காலதாமதம் ஏற்படுகிறது என்பது அரசினுடைய கவனத்திற்குக் கொண்டுவரப்பட்ட பிறகு, அந்தக் காலதாமதத்தைத் தவிர்ப்பதற்காகத்தான் மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு அதிகாரம் கொடுத்து அவர்கள் மூலம் அனுமதி கொடுக்கலாம் என்று கொண்டு வந்தோம். இந்த அதிகார மாற்றம் காரணமாக 1979-80 ஆம் ஆண்டு 225 லட்சம் ரூபாயாக இருந்த இந்த மதிப்பீடு 1980-8- ஆம் ஆண்டு 500 லட்சம் ரூபாயாக உயர்ந்துவிட்டது. அந்த அதிகாரத்தை இன்னும் பரவலாக்கினால், இப்போது 500 லட்சம் ரூபாய் ஒதுக்கியும் பலர் பெற முடியாதது போல, எவ்வளவுதான் தொகை ஒதுக்கினாலும், தேவை அதிகமாக ஏற்பட்டு, அவைகளைப் பூர்த்தி செய்ய இயலாத நிலைமைதான் ஏற்படும். ஆகவே, ரொம்பவும் வேகமாகப்



போவதும் தவறு. இப்போது தேவை ரூபாய் 530 லட்சமாக உயர்ந்ததுதான் இந்தப் பிரச்சினைக்குக் காரணம். இதைத் தவிர்க்க அரசு விரைவிலே நடவடிக்கை எடுக்கும்.

## 6. ஆளுநர் உரையின் மீது விவாதம்—தொடர்ச்சி.

* திரு. எஸ். ஆர். இராதா : மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் அவர்கள் உரை நிகழ்த்தியதற்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீது நானும் என்னுடைய கருத்துக்களைத் தெரிவிக்க வாய்ப்பு கொடுத்தமைக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். நான் அதிகமாகச் சொல்ல வேண்டும் என்று ஆசைப்பட்டாலும், நீங்கள் கொடுத்திருக்கும் நேரத்தை நான் கருத்தில் கொண்டு எந்த அளவிற்கு விரைவாக முடிக்க முடியுமோ அந்த அளவிற்கு விரைவாக முடிக்கிறேன். இந்த மாமன்றத்திலே விவாதிக்கப்பட்ட பல்வேறு பிரச்சினைகள், அந்தப் பிரச்சினைகள் காரணமாக எழுந்திருக்கின்ற பல்வேறு நிலைமைகள் குறித்து நான் என்னுடைய உணர்வுகளையும், கருத்துக்களையும் தெரிவிப்பது என்னுடைய கடமை என்று கருதுகிறேன். இன்றைக்கு ஆளும் கட்சியிலே இருக்கிற நாங்கள், மன்றங்களிலே பேசுகின்ற நேரத்திலே எங்களுக்கு இருக்கின்ற கட்டுப்பாட்டின் காரணமாக பல்வேறு கருத்துக்களைச் சொல்ல முடியாத நிலைமைகள் ஏற்படுகின்றன. வெளியிலே எதிர்க் கட்சிக்காரர்கள் பேசுகின்ற பேச்சுக்கள் பத்திரிகைகளில் வரும்போது, அந்தச் செய்திகளுக்குத் தரப்படும் முக்கியத்துவத்தைப் பார்க்கும்போது, ஆளும் கட்சியிலே இருப்பவர்களுக்குப் பதில் சொல்லத் தெரியவில்லை, அவர்களுக்குப் பேசத் தெரியாது என்ற நிலைமையிலே வெளியிலே கருத்துக்கள் இருக்கின்றனவோ என்ற அச்சம் எனக்கு ஏற்பட்டிருக்கிறது.

இங்கே பல்வேறு பிரச்சினைகள் சொல்லப்பட்டிருக்கின்றன. நான் முதலிலே எடுத்துக் கொள்ள விரும்புவது, மதுரையிலே நடைபெற்ற உலகத் தமிழ் மாநாடு பற்றியதாகும். அந்த மாநாடுபற்றி இங்கே பல்வேறு கருத்துக்கள் வெளியிடப்பட்டன. பேரறிஞர் அண்ணா அவர்கள் மாநாடு நடத்தியதற்குப் பின்னால், தமிழகத்திலே ஒரு எழுச்சி ஏற்படுகின்ற அளவுக்கு ஒரு மாநாடு நடத்தி, தமிழுக்குப் பெருமை தேடித் தந்தது இன்றைக்கு மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் நடத்திய இந்த மாநாடுதான். மதுரையிலே இருக்கிற யாரைக் கேட்டாலும் சரி, எந்தக் கட்சிக்காரரை அழைத்துக் கேட்டாலும் சரி, அவர்கள் அத்தனை பேரும் அந்த மாநாட்டின் முக்கியத்துவத்தை, அந்த மாநாட்டின் மூலமாக ஏற்பட்ட ஓர் எழுச்சியை,

இத்தகைய எழுத்துச் சீர்திருத்தம் புரட்சித் தலைவர் காலத்தில் அல்லாமல் வேறு யார் காலத்தில் கொண்டு வரப்பட்டிருந்தாலும் அது எந்த அளவுக்கு விமரிசனத்திற்கு உள்ளாகியிருக்கும் என்பதை யாரும் மறுக்க முடியாது. அந்த அளவுக்கு மிக அமைதியான முறையில் தமிழ் எழுத்துச் சீர்திருத்தம் தமிழகத்திலே வந்திருக்கிறது. எந்தெந்தப் பத்திரிக்கைகளெல்லாம் இத்தகைய எழுத்துச் சீர்திருத்தத்தை ஏற்க மாட்டார்கள் என்று நினைத்தோமோ அந்தப் பத்திரிகைகளெல்லாம் இன்றையதினம் எழுத்துச் சீர்திருத்தத்தை ஏற்று தங்களின் பத்திரிகைகளிலேயே எழுத்துக்களை மாற்றுகிற காட்சியை நாம் பார்க்கிறபோது, என்னைப் போன்ற நீண்ட நெடுங்காலமாக திராவிட இயக்கத்திலே பங்கு கொண்டிருந்தவர்களுக்கு இது மகிழ்ச்சியைத் தருகிறது. காரணம் ஒரு காலத்தில் "விடுதலை" பத்திரிகையில் உள்ள "லை" எழுத்தைப் பார்த்து கேலி பேசுவார்கள். 'இந்தப் பயல்களே இப்படித்தான், இந்தக் கட்சியே இப்படித்தான். இவர்கள் இப்படித்தான் எழுத்துக்களைப் போடுவார்கள்" என்று கேலி பேசினார்கள். அவர்களெல்லாம் இன்றைய தினம் இந்த எழுத்துச் சீர்திருத்தத்தை ஏற்று, தங்களின் பத்திரிகைகளிலும் அத்தகைய சீர்திருத்திய எழுத்துக்களைப் பயன் படுத்துகிறார்கள். இந்த நிலைமையைப் பார்த்த பிறகும்கூட இத்தகையதோர் அமைதிப் புரட்சி எழுத்துப் புரட்சி, நமது புரட்சித் தலைவர் காலத்திலே ஏற்பட்டதே என்ற உணர்வு மற்ற யாருக்கு ஏற்படவில்லை என்றாலும், ஆசிரியர் சமுதாயத்தைச் சேர்ந்தவர்களுக்காவது எழுகிறதா என்றால், இல்லை என்று நான் வருத்தத்தோடு தெரிவிக்க வேண்டியிருக்கிறது. ஆசிரியர்களும்கூட கட்சிக் கண்ணோட்டத்தோடு பார்க்கிறார்களே தவிர அதைவிட்டு விட்டுப் பார்க்கிற நிலை இன்றைக்கு ஏற்படவில்லை என்பதை நாம் பார்க்கிறோம்.

அந்த வகையில் மிகப் பெரிய எழுத்துச் சீர்திருத்தம் தமிழகத்தில் புரட்சித் தலைவர் காலத்தில் ஏற்பட்டிருக்கிறது. இது ஒன்றும் சாதாரண காரியமல்ல. அது மட்டுமல்ல, உலகத் தமிழ் மாநாட்டின் விளைவாக மதுரையில் உலகத் தமிழ்ச் சங்கம் அமைய இருக்கிறது என்பது சாதாரண ஒன்றல்ல. இதெல்லாம் யார் வேண்டுமானாலும் செய்துவிடக்கூடிய காரியங்களல்ல. அந்த அளவுக்குப் பெருமை சேர்க்கிற நிலை இன்றைக்கு நமக்கு உருவாகியிருக்கிறது. இதைச் சொல்லுகிற நேரத்தில் அரசின் கவனத்திற்கும் ஒன்றைக் கொண்டுவர விரும்புகிறேன். மதுரையில் ஒரு தமிழ்ச் சங்கத்தை அமைக்கும்போது, அதைப் போன்றே தஞ்சையில் ஒன்றை அமைக்க முடியாது தான். ஆனாலும் தஞ்சையிலே ஒரு அரண்மனை இருக்கிறது. அங்கேதான் சரஸ்வதி மகால் இருக்கிறது. அதிலே மிகப் பழங்கால ஓலைச் சுவடிகள் ஏராளமாக இருக்கின்றன, அற்புதமான பல கருத்துக்கள் அந்த ஓலைச் சுவடிகளில் பொதிந்திருக்கின்றன. எழுத்து வடிவமாக அவைகளெல்லாம் அங்கே காட்சியளித்துக் கொண்டிருக்கின்றன. அந்த மகாலைப் பயன்படுத்தி, அங்கேயுள்ள ஓலைச் சுவடிகளைப் பயன்படுத்தி, உலகத் தமிழ்ச் சங்கம் ஆரம்பிக்கும் போது, மிகச் சிறப்பான முறையில் தமிழ்ப் பணியாற்ற வேண்டும் என்று நான் அரசை மிகப் பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன். தஞ்சையிலே இருக்கிற அந்தப் பெரிய அரண்மனை வீணாக இருக்கிறது. உலகத் தமிழ்ச் சங்கம் ஆரம்பிக்கும்போது, இந்த அரண்மனையை நன்கு பயன்படுத்திக் கொள்ளும் வாய்ப்பு இருக்கிறது. அந்த அரண்மனையையும், மகாலையும், அங்கே இருக்கிற தமிழ் ஓலைச் சுவடிகளையும் பயன்படுத்திக் கொள்ளும் வாய்ப்பு இருக்கிறது. அந்த வாய்ப்பைப் பயன்படுத்திக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.





(மாற்றுத் தலைவர் திரு. ஈ. எஸ். வெங்கடேசன் தலைமை)

இந்த அரசைப் பொறுத்த வரையில், "எங்கும் தமிழ், எதிலும் தமிழ்" என்ற உணர்வோடு இந்த அரசு செயல்பட்டுக் கொண்டிருக்கிறது என்பதைத் தமிழ் மீது பற்றும் பாசமும் கொண்டவர்கள் ஏற்றுக்கொள்ளத்தான் செய்வார்கள். அந்த வகையில் இந்த அரசின் மீது வேறு எத்தகைய குறைகள் இருந்தாலும், தமிழை வளர்ப்பதிலும் சரி, அதன் நிலையை உயர்த்துவதிலும் சரி, இந்த அரசு மேற்கொள்கிற காரியங்களைப்பற்றி, செயல்முறைகளைப் பற்றி எந்தவிதமான கருத்து வேற்றுமைகளும் எதிர்க் கட்சியில் இருப்பவர்களுக்குக்கூட இருக்க முடியாது என்பதையும் நான் இங்கே பணிவன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.

எதிர்க் கட்சியினர் எத்தனையோ குறைகளைச் சொன்னார்கள். நாம் ஏற்றுக்கொள்ள வேண்டியவைகளும் உண்டு. அரசியல் ரீதியாக தேர்தல் நேரத்தில் வேடிக்கையாகக்கூடச் சொல்வார்கள். "தங்கத்தின் விலை தெரியுமா?" என்று ஆரம்பித்து, "வெங்காயத்தின் விலையைப் பாருங்கள்" என்று சொல்லி ஆரம்பிப்பார்கள். இப்போது வெங்காயத்தின் விலை குறைந்து விட்டதே, இனி என்ன செய்வது என்று வேடிக்கையாகக்கூட இந்த அவையிலே சில நாட்களுக்கு முன்பு ஓர் உறுப்பினர் குறிப்பிட்டார். இப்படியெல்லாம் கேட்கிற நிலை இருப்பது சாதாரணம். அப்படி நாங்களும் ஏதாவது பேசினால் அருமை நண்பர் திரு. இராமமூர்த்தியைப் போன்றவர்கள் எங்களைக் கேலி செய்ய ஆரம்பிக்கிறார்கள். கேட்டால் நீங்கள் கொள்கைகளை விட்டுவிட்டீர்கள் என்று அடிக்கடி சொல்லிக் கொண்டிருக்கிறார். இந்த மன்றத்தில் அவர் அதை அடிக்கடி சொல்லிக் கொண்டிருப்பது எல்லோருக்கும் தெரியும். காரணம் நாங்கள் திராவிட நாடு திராவிடருக்கே என்று சொல்லிக்

[திரு. எஸ். ஆர். இராதா] [1981 பிப்ரவரி 9

கொண்டிருந்ததை விட்டுவிட்டதைச் சொல்லிக்கொண்டிருக்கிறார். பேரறிஞர் அண்ணா அவர்கள் எந்தக் காரணத்தைக் காட்டி 'திராவிட நாடு திராவிடருக்கே' என்று சொல்லிக்கொண்டிருந்த கொள்கையை விட்டார் என்பதை இங்கே நான் அவருக்கு பதிலாகச் சொல்ல ஆசைப்படுகிறேன். அன்றைக்குப் பதில் சொல்ல நேரமில்லை.

25 ஆண்டுகளுக்கு முன்னால் அருமை அண்ணன் திரு. சம்பத் அவர்கள் ஒரு கூட்டத்தில் அழகாகப் பேசினார். அவர் எந்த அளவுக்கு அழகாகப் பேசுவார் என்பது மாண்புமிகு உறுப்பினர் திரு. இராமமூர்த்தி அவர்களுக்கே தெரியும். திராவிட முன்னேற்றக் கழகத்தின் கொள்கையை ஒரே வரியில் சொல்லுங்கள் என்று கேட்டால், "திராவிட நாடு திராவிடருக்கே" என்று சொல்வோம்; "ஜாதி மத மற்ற சமுதாயத்தை உருவாக்குவோம்" என்று சொல்வோம்; "சமதர்ம நிலையைக்கொண்டு வர வேண்டும்" என்று சொல்வோம். அதைப்போல. கம்யூனிஸ்ட் கட்சியைப் பார்த்துக் கேட்டால் "உலகமெங்கும் பொதுவுடைமைத் தத்துவம் வரவேண்டும்" என்று சொல்வார்கள். சோஷலிஸ்ட்களைப் பார்த்துக் கேட்டால், "சோஷலிசத் தத்துவம் வர வேண்டும்" என்று சொல்வார்கள். அப்படி, எல்லாக் கட்சியினரும் ஒரே வரியில் தங்களின் கட்சிக் கொள்கையைச் சொல்ல முடியும். அதைப்போல காங்கிரஸ் கட்சியைப் பார்த்து, "ஒரே வரியில் உங்கள் கட்சியின் கொள்கை என்ன என்று சொல்லுங்கள்" என்று கேட்டால், என்ன பதில் சொல்வார்கள் என்றால் . . .

திரு. க. இராமமூர்த்தி : நான் குறிப்பிட்டது உறுப்பினர் அவர்களுடைய கட்சி தன் அடிப்படைக் கொள்கைகளைக் கைவிடக்கூடாது என்பதுதான். மாண்புமிகு உறுப்பினர் அதை விட்டுவிட்டு, வேறுவிதமான காரணங்களைக் கண்டுபிடிக்க முயல்வது சரியல்ல. அந்த வகையில்தான் "மதுவிலக்குக் கொள்கையில் ஏன் உங்களுக்கு மாற்றம் வந்தது?" என்று கேட்டேன் . . .

திரு. எஸ். ஆர். இராதா : மாண்புமிகு உறுப்பினர் திரு. இராமமூர்த்தி அவர்கள் திடீரென்று அங்கே போவார் என்று எதிர்பார்க்கவில்லை. அப்படிப் போய்விட்டார் என்பதால், அதற்குப் பதில் சொல்லாமல் விடுவதாகவும் இல்லை. அன்றைக்கு 25 ஆண்டுகளுக்கு முன்னால் காங்கிரஸ் கட்சியின் கொள்கையை ஒரு வரியில் சொல்லுங்கள் என்று கேட்டால் . . .

திரு. க. இராமமூர்த்தி : அடிப்படைக் கொள்கைகளிலிருந்து அவர்கள் எப்படி மாறிக் கொண்டிருக்கிறார்கள் என்பதை நான் குறிப்பிட்டபோது, உதாரணத்திற்குத்தான் மதுவிலக்கைக் குறிப்பிட்டேன். அதற்கு பதில்



1981 பிப்ரவரி 9] (திரு. க. இராமமூர்த்தி)

சொல்லாமல், மாண்புமிகு உறுப்பினர் வேறு ஒரு கற்பனை செய்துகொண்டு ஒரே வரியில் கொள்கையைச் சொல்லுங்கள் என்று சொல்லிக்கொண்டிருப்பது சரியல்ல.

திரு. எஸ். ஆர். இராதா : அடிப்படையில் கொள்கை மாற்றம் இருக்கிறது என்று உறுப்பினர் அவர்கள் சொல்லுவதற்குக் காரணம், இதைச் சொல்லுவதால் இன்றைக்கு இவர்கள் 'திராவிட நாடு திராவிடருக்கே' என்று கூறுவோம் என்று நினைத்து, அதுகுறித்து இந்திரா காந்தி அம்மையாரிடம் மனுப் போட்டு எதையாவது சொல்லி, இதோடு இவர்களை அழித்துவிட்டால், நமக்கு இனியாவது வாழ்வு கிடைக்காதா என்ற எண்ணத்தில் இருக்கலாம் என்று நினைக்கிறேன்.

திரு. க. இராமமூர்த்தி : மனுப் போடுவது இங்கேயிருந்தா அல்லது அங்கேயிருந்தா என்பதுதான் பிரச்சினை. மனுப்போடுவதுபற்றி எனக்கும் தெரியும், மாண்புமிகு உறுப்பினருக்கும் தெரியும்.

திரு. ஜேப்பியார் : மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். ஆர். இராதா அவர்கள் 25 ஆண்டுகளுக்கு முன்னால் பேசியதைபற்றிக் குறிப்பிட்டுக் கொண்டிருந்தார். 25 ஆண்டுகளுக்கு முன்னால் மாண்புமிகு உறுப்பினர் திரு. இராமமூர்த்தி காங்கிரஸ் கட்சியில் இருந்தாரா என்பது தெரியவில்லை.

திரு. க. இராமமூர்த்தி : அதற்கு நான் ஒவ்வொரு முறையும் விளக்கம் சொல்லியிருக்கிறேன். பலமுறை இதற்கு நான் பதிலும் சொல்லியாகி விட்டது. விவரம் தெரியாமல் இதையே திரும்பத் திரும்பக் கேட்பது நியாயமுமில்லை, முறையுமில்லை என்பதை அவையின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

(முற்பகல் 11-40)

மாற்றுத் தலைவர் (திரு. ஈ. எஸ். வெங்கடேசன்) : மாண்புமிகு உறுப்பினர் திரு. இராதா தொடர்ந்து பேசலாம்.

திரு. எஸ். ஆர். இராதா : "ஒரே வரியில் உங்கள் கொள்கை என்னவென்று சொல்லுங்கள்" என்று திரு. சம்பத் அவர்கள் கேட்டார்கள். தொடர்ந்து அவரே சொன்னவைகள் என்னுடைய நினைவில் பசுமையாக இருக்கின்றன. "ஊரிலே இருக்கிறவர்கள் நன்றாக இருக்க வேண்டும்" என்பதுதான் எங்கள் கொள்கை என்று சொல்லுவார்கள். திருப்பி அவர் சொல்லுவார், "இதைச் சொல்லுவதற்கு ஒரு கட்சி தேவையா? என்னுடைய

என்றைக்கு மீறுகிறதோ அன்றைக்குத்தான் இந்த நிலைமை மாறும். ஆனால் இந்தியாவினுடைய ஒற்றுமைக்காக, இந்தியா காப்பாற்றப்பட வேண்டும் என்பதற்காக இதை ஒத்தி வைக்கிறோம்" என்றார். ஏதோ சொல்ல வேண்டும் என்பதற்காகச் சொல்லவில்லை. இந்தியாவின் ஒற்றுமைக்காக நாங்கள் பிடிவாதமாக இருக்கிறோம் என்பது எல்லோருக்கும் தெரியும். ஆனால் நாங்கள் மாறிவிட்டோம் என்று அடிக்கடி சிலர் சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். என்னைப் போன்றவர்களுக்கு மறுபடியும் திராவிட நாடு திராவிடருக்கே கொடுக்க வேண்டும் என்று கேட்க வேண்டும் என்ற நிலை வரக்கூடாது என்பதற்காகச் சொல்லுகிறேன். இந்தியா ஒன்று என்று ஏற்றுக்கொண்டதற்குப் பின்னாலே, இந்தியா முழுவதுமாக ஒன்றாகத்தான் பார்க்க வேண்டும் இந்தியாவில் உள்ள மாநிலத்தைப் பிரிப்பதையும், இந்தியாவிலுள்ள மக்களைப் பிரிப்பதையும் நிச்சயமாக ஏற்றுக்கொள்ள முடிகிறதா என்றால் முடியாது. இந்தியா ஒன்று என்று ஏற்றுக்கொண்டால், எங்கே எது நடைபெற்றாலும், இந்தியாவிலே நடைபெற்றது என்று வருமே தவிர, தமிழ் நாட்டிலே நடந்ததாக வராது.

திரு. க. இராமமூர்த்தி : அடிப்படைக் கொள்கையிலே மாற்றம் வந்திருக்கிறது என்பதை வைத்து நான் சொல்லாத ஒரு கருத்தை, "திராவிட நாடு பிரச்சினையைப்பற்றி" அப்படிக் கூறினார். ஆகவே எச்சரிக்கிறேன், மீண்டும் இந்திய ஐக்கியத்திற்கு ஊறு வரும் என்ற வாதத்திற்கு வருவது முறையா என்று கேட்க விரும்புகிறேன். வேண்டுமென்றே பேசுகிறாரா?

திரு. எஸ். ஆர். இராதா : மாண்புமிகு உறுப்பினர் திரு. இராமமூர்த்தி அவர்களுக்கு நன்றாகத் தெரியும், நான் எதையும் நிச்சயமாக வேண்டுமென்றே செய்யமாட்டேன் என்று. அவர்களுடைய நினைவுக்காகச் சொல்ல வேண்டுமென்று சொன்னேன்.

திரு. க. இராமமூர்த்தி : நிச்சயமாகச் சொல்லுகிறேன், திராவிட நாடு கொள்கையில் அடிப்படையிலே மாறியிருக்கிறார்கள் என்று. ஆனால் திராவிட நாடு பிரச்சினையைப்பற்றி நான் பேசவில்லை. நான் பேசாத ஒன்றைப் பேசியதாக உருவாக்கி, அதற்கு விளக்கம் தருவதாகச் சொல்லி, இந்திய ஐக்கியத்திற்கு மாறாகச் சில கருத்துக்களை வெளியிட இந்த அவையைப் பயன்படுத்துவது சரியா?

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : "கொள்கையை விட்டுவிட்டார்கள்" என்று சொல்லும்போது இதைச் சுட்டிக்காட்ட வேண்டிய அவசியம் ஏற்படுகிறது.





திரு. க. இராமமூர்த்தி : அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் தோன்றியபோது இதுவல்ல கொள்கை. அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் திராவிட நாடு கொள்கையை வைக்கவில்லை.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : அதை அந்தக் கட்சி முடிவு செய்ய வேண்டும்.

திரு. எஸ். ஆர். இராதா : துணைத் தலைவர் அவர்களே, எனக்குத் துணை செய்ததற்காக நன்றி. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் நல்லதொரு கருத்தை இப்போது சொன்னார்கள். உள்ளபடியே அவரைப் பாராட்ட வேண்டும். அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் ஆரம்பிக்கும்போது, திராவிட நாடு கொள்கையை வைக்கவில்லை என்பதை அவர்கள் ஒத்துக் கொண்டதற்காக நான் பாராட்டுகிறேன்.

திரு. க. இராமமூர்த்தி : அதையும் நான் சொல்லித்தான் மாண்புமிகு உறுப்பினர் திரு. இராதா அவர்களுக்கு ஞாபகப்படுத்த வேண்டியிருக்கிறது.

திரு. எஸ். ஆர். இராதா : எனக்கு நினைவுபடுத்த வேண்டியதில்லை. இப்போது சில பேர் நாங்கள் மாறிவிட்டோம் என்று சொல்லுகிறபோது, மறந்து சொல்லுகிறார்களோ என்னவோ. அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தைப் பொறுத்தவரையில், நாங்கள் திராவிட முன்னேற்றக் கழகத்திலிருந்து வந்தவர்கள்தாம். இப்போது அதுவல்ல பிரச்சினை. இந்திய ஒற்றுமை என்று சொல்லுகிற நேரத்தில் நிச்சயமாக யாருக்கும் சந்தேகம் வராது. இந்திய ஒற்றுமையிலே சந்தேகம் வந்தாலும்கூட, நிச்சயமாக என்னைப் போன்றவர்களுக்கு அதிலே சந்தேகம் வராது என்பதை இந்த மாமன்றத்திலே தெரிவிப்பேன். இந்தியா ஒற்றுமையாக இருக்க வேண்டுமென்று பேரறிஞர் அண்ணா அவர்கள் என்றைக்குச் சொன்னார்களோ அன்றைக்கு அதை ஏற்றுக்கொண்டதற்குப் பின்னாலே நிச்சயமாக நாங்கள் அதிலிருந்து மாறாமல் உறுதியாக இருப்போம். ஒன்றை ஏற்றுக்கொள்ளுகிற வரையில் விவாதிக்கலாம், அதனுடைய காரணங்களைப்பற்றி வாதங்களை எழுப்பலாம், ஆனால் அதை ஏற்றுக்கொண்டதற்குப் பின்னாலே சந்தேகப்படுகிற நிலை நிச்சயமாக எங்களுக்கு வந்ததில்லை. மற்றவர்களைப்பற்றி நான் சொல்லமாட்டேன். எதிர்க் கட்சியில் இருப்பவர்கள் பல குற்றச்சாட்டுக்களைக் கூறியிருக்கிறார்கள். எதிர்க் கட்சியில் இருப்பவர்கள் எதை வேண்டுமானாலும் சொல்லலாம். ஆனால் இந்தியாவில் ஆளும் கட்சியில் இருப்பவர்கள், பல்வேறு மாநிலங்களை ஆண்டு கொண்டிருக்கிறவர்கள், இன்றைக்கு இந்த மாமன்றத்திலே வரிசையாகக் குற்றச்சாட்டுக்களைக் கூறியிருக்கிறார்கள். அந்தக் குற்றச்சாட்டுக்களையெல்லாம் நான் வைத்திருக்

[திரு. எஸ். ஆர். இராதா] [1931 பிப்ரவரி 9

கிறேன். இந்தக் குறை என்னவாயிற்று, அந்தக் குறை என்னவாயிற்று என்று கேட்டிருக்கிறார்கள். இதையெல்லாம் கேட்கிற நேரத்தில் என்னுடைய உணர்வு எங்கே போகிறது என்றால், இந்தக் குறைகளைக் கேட்கிற நேரத்தில் "அவர்கள் பீகாரைப் பார்க்கவில்லையா?" இதைக் கேட்கிற நேரத்தில் "டில்லியைப் பார்க்கவில்லையா?", இதைக் கேட்கிற நேரத்தில் "பம்பாயில் என்ன நடைபெற்றது என்று அவர்களுக்குத் தெரியாதா?" எனக் கேட்க வேண்டும் என்ற உணர்வு எனக்கு ஏற்படுகிறது என்று சொன்னால், நிச்சயமாக நியாயம் அதிலே இருக்கிறது.

(முற்பகல் 11-50)

**திரு. ஏ. ஜே. தாஸ்:** அந்த மாநிலம் இந்த மாநிலம் என்று மற்ற மாநிலங்களைப்பற்றிச் சொல்வதை விட்டு இந்த மாநிலத்தைப்பற்றிப் பேச வேண்டும்.

**மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன்:** மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறுக்கிட்டுப் பேசும்போது, இந்த மாநிலத்தைப்பற்றி மட்டும் பேச வேண்டும் என்று சொன்னார்கள். நாம் தமிழ் நாட்டிற்கு மட்டுமல்ல, இந்திய துணைக் கண்டம் முழுவதற்கும் சொந்தக்காரர்கள்.

**திரு. க. இராமமூர்த்தி:** இங்கே பேசும்போது, இந்த அரசைப்பற்றித்தான் விவாதிக்கலாமே தவிர, இங்கே நாம் உட்கார்ந்து கொண்டு மற்றவர்களைப் பற்றி விமர்சிக்கக்கூடாது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன்:** துணைத் தலைவர் அவர்களே, மற்றவர்களைப்பற்றிய விமர்சனம் என்பதல்ல. நாட்டிலே நடக்கின்ற நிகழ்ச்சிகளில் நமக்கும் பங்குண்டு.

**திரு. க. இராமமூர்த்தி:** மற்ற நிகழ்ச்சிகளை இங்கே எடுத்துச் சொல்வதால் மட்டும், இங்கே நடக்கின்ற நிகழ்ச்சிகள் எல்லாம் நியாயமானது என்று சொல்லிவிட முடியாது.

**மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன்:** துணைத் தலைவர் அவர்களே, அது இல்லை என்று சொல்வதற்காகத்தான் இந்த எடுத்துக்காட்டு.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்:** * * *

**திரு. க. இராமமூர்த்தி:** * * *

**மாண்புமிகு திரு. கா. இராசா முகமது:** * * *

**திரு. க. இராமமூர்த்தி:** * * *

*** தலைவரின் ஆணைப்படி நீக்கப்பட்டது.

1981 பிப்ரவரி 9] 

மாண்புமிகு திரு. கா. இராசா முகமது: * * *

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்: * * *

மாண்புமிகு திரு. கா. இராசா முகமது: * * *

திரு. க. இராமமூர்த்தி: * * *

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்: * * *

திரு. க. இராமமூர்த்தி: * * *

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன்: * * *

திரு. க. இராமமூர்த்தி: * * *

திரு. ஜி. சுவாமிநாதன்: * * *

திரு. க. இராமமூர்த்தி: * * *

திரு. சி.ரா. லெட்சுமிகாந்தன்: * * *

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்: * * *

திரு. க. இராமமூர்த்தி: * * *

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்: * * *

திரு. க. இராமமூர்த்தி: * * *

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்: * * *

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: * * *

(நண்பகல் 12-00)

திரு. க. இராமமூர்த்தி: * * *

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்: * * *

திரு. க. இராமமூர்த்தி: * * *

திரு. ம. சங்கரலிங்கம்: * * *

திரு. எல். முத்து: * * *

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்: * * *

**திரு. க. இராமமூர்த்தி:**

*** தலைவரின் ஆணைப்படி நீக்கப்பட்டது.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : * * *

திரு. க. இராமமூர்த்தி : * * *

திரு. ஜி. சுவாமிநாதன் : * * *

திரு. க. இராமமூர்த்தி : * * *

Thiru. G. SWAMINATHAN:

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : * * *

திரு. க. இராமமூர்த்தி : * * *

திரு. ஜி. சுவாமிநாதன் : * * *

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : * * *

திரு. க. இராமமூர்த்தி : * * *

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : * * *

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : * * *

திரு. க. இராமமூர்த்தி : * * *

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : * * *

திரு. ஜி. சுவாமிநாதன் : * * *

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : * * *

திரு. க. இராமமூர்த்தி : * * *

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : * * *

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : * * *

திரு. க. இராமமூர்த்தி : * * *

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : * * *

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** தொடர்ந்து வந்த அனைத்தையும் அவைக் குறிப்பிலிருந்து நீக்கிவிடுகிறேன்.

---

* * * தலைவரின் ஆணைப்படி நீக்கப்பட்டது.



(மாண்புமிகு மேலவைத் தலைவர் தலைமை)

**திரு. எஸ் ஆர். இராதா :** அகில இந்திய ரீதியில் நிலைமைகளைப் பார்க்க வேண்டுமென்று சொன்னதற்குக் காரணம் இருக்கிறது. தமிழகத்தை ஆளுகின்ற கட்சியிலே நான் இருக்கிறேன். இந்த நிலைமையில், வேறொரு மாநிலத்தில் எதிர்க் கட்சிக்காரர்கள் ஆளும் கட்சியின் மீது குற்றச்சாட்டு சொல்லும்போது, அந்தக் குற்றச்சாட்டுக்கு நியாயம் கற்பித்து, எதிர்க் கட்சிக் காரர்கள் சொல்வதில் நியாயம் இருக்கிறது என்று நான் சொன்னால், ஒரு மாநிலத்தில் ஆளும் கட்சியில் நான் இருக்கிறேனா என்ற சந்தேகம் வருகிறது. அதற்குக் காரணம் என்ன? ஆளும் கட்சி என்று சொல்லும்போது, என்னென்ன சங்கடங்கள் இருக்கும், எப்படியெல்லாம் நடைபெறும் என்பதெல்லாம் ஆளும் கட்சியில் உள்ளவர்களுக்குத் தெரிந்திருக்கக்கூடும். தமிழ் நாட்டில் நடந்தால் தவறு, வேறு இடத்தில் அப்படி நடந்தால் சரி என்று சொல்லும்போது, அதைப்பற்றிச் சிந்திக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். தமிழ் நாட்டை விட்டு வெளியே செல்லக்கூடாதென்றால் எப்படி? அகில இந்திய ரீதியில் சிந்திக்க முடியாமல் போனால், மாநில அளவில், ஒரு குறுகிய வட்டத்திற்குள் வந்துவிடுவோம். மற்ற மாநிலங்களில் என்ன நடைபெறுகிறதென்று பார்க்கின்ற உணர்வு எனக்கு வருகிறது. ஏனென்றால், எதிர்க்கட்சி உறுப்பினர் ஒருவர், தமிழ் நாட்டில் இன்னின்ன நடைபெறுகின்றன என்று 9 குற்றச்சாட்டுகளைச் சொன்னார்கள். அடையாறு பிரேமா கொலை வழக்கிலிருந்து சொன்னார்கள். அவர் அப்படிச் சொன்னதற்குப் பின்னாலே, நான் கொஞ்சம் சிந்தித்து, அகில இந்திய ரீதியில் என்ன நடைபெறுகிறதென்று பார்த்து, ஏறத்தாழ 8, 9 பக்கங்கள் எழுதி வைத்திருக்கிறேன். மார்ச் 16 ஆம் தேதியிலிருந்து டிசம்பர் 31 வரை நடைபெற்றிருக்கிற பல்வேறு சம்பவங்கள் இருக்கின்றன. நான் அத்தனையும் சொல்ல ஆரம்பித்தால், நிச்சயமாக ஏற்றுக்கொள்ளமாட்டார்கள் என்று தெரியும். பீகாரில் குருடாக்கப்பட்ட நிகழ்ச்சி குறித்துப் பேச ஆரம்பித்தபோதே கோபம் வந்தது. அதைச் சொல்லக்கூடாது, யார் காலத்திலே நடந்தது, ஏன் நடந்தது எனச் சொல்லக் கூடாதென்று சொல்லப்பட்டது . . . ,

**திரு. க. இராமமூர்த்தி :** மாண்புமிகு உறுப்பினரவர்களின் உதவிக்காகக் கடுதல் விவரங்களைச் சொன்னேன். மாண்புமிகு உறுப்பினரவர்கள் சொன்னபடி, இங்கே நடப்பது நியாயமென்றால், அங்கே நடப்பதும் நியாயம் தான் . . .

**மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் :** மாண்புமிகு உறுப்பினர் திரு. இராமமூர்த்தி அவர்கள் இவ்வளவு அழகாக திசை திருப்புவார்களென்று நான் எதிர்பார்க்கவில்லை. ஆகவே சொல்கிறேன் . . .

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** 'பார்லிமெண்டரி' வார்த்தைதான்.

**மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் :** மற்ற மாநிலங்களில் நடப்பதை இங்கே நடத்திக் காண்பிக்க வேண்டுமென்றோ, அவற்றை வரவேற்க வேண்டுமென்றோ சொல்லவில்லை. அப்படிப்பட்ட நிலை இல்லை என்றுதான் சொல்லுகிறோம்.

**திரு. க. இராமமூர்த்தி :** மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு நான் உதவி செய்வதைவிட, மாண்புமிகு முதலமைச்சரவர்கள் உதவி செய்ய வேண்டியதாக இருக்கிறது.

**திரு. எஸ். ஆர். இராதா :** மாண்புமிகு முதல்வர், புரட்சித் தலைவர் அவர்களின் உதவியைவிட, தெரிந்தோ தெரியாமலோ மாண்புமிகு உறுப்பினர் திரு. இராமமூர்த்தி அவர்களிடமிருந்து உதவி கிடைக்கும் நேரத்தில் நான் மகிழ்ச்சியடைகிறேன். தமிழ் மாநிலத்திலே ஒரு கொலைக்குக் காரணம் கற்பித்து, ஏன் நடைபெற்றது, எதற்காக நடைபெற்றது என்று கேட்கிற உணர்ச்சி வரும்போது, 250 குருடர்கள் ஊர்வலம் போகிறார்கள், அவர்களை அடித்து நொறுக்குகிறார்கள், அவர்கள்மீது வழக்குப் போடுகிறார்கள் என்று பாராளுமன்றத்தில் 'பிரச்சினை வரும்போது, அதுகுறித்து நம்முடைய உணர்வு எண்ணுகிறது. அவர்மீதுள்ள கோபத்தால் அல்ல .' .

**திரு. க. இராமமூர்த்தி :** பாராளுமன்றத்திலே இதுபற்றிய பிரச்சினை வந்தபோது, மாண்புமிகு உறுப்பினரவர்களின் கட்சியைச் சேர்ந்தவர்கள் அங்கே அதைப்பற்றிப் பேசியிருப்பார்களென்று கருதுகிறேன். எனவே பாராளுமன்றத்தில் அதற்கான வாய்ப்பு இருந்ததால், இங்கேயும் அதைச் சொல்லக் காரணம் என்ன?

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** நான் எல்லாவற்றையும் என்னுடைய அறையிலிருந்து கேட்டேன். இப்படி ஒருவரை ஒருவர் இடைமறித்துப் பேசினால் எப்படி? இன்னும் எதிர்க் கட்சித் தலைவரவர்கள் பேச வேண்டும், முதல்வரவர்கள் பேச வேண்டும். எனவே மாண்புமிகு உறுப்பினரவர்கள் தொடர்ந்து பேச அனுமதிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

(பிற்பகல் 12.10)

**திரு. எஸ். ஆர். இராதா :** நான் அதைக் குறிப்பிட்டுக் காட்ட காரணம் இங்கே நடைபெற்ற சம்பவங்களுக்கு நியாயம் கற்பிக்க அல்ல. உறுப்பினர் சொல்கிற குற்றச்சாட்டுகளில் ஆளும் கட்சி அல்லது அமைச்சர்கள் சம்பந்தப் பட்டிருக்கிறார்கள் என்று சொல்கிற அளவுக்கு இன்றைக்கு புரட்சி தலைவர்



அவர்களுடைய ஆட்சியிலே ஏதாவது ஒன்றைக் குறிப்பிட்டுச் சொல்லக்கூடிய துணிவு இருக்கிறதா?

**திரு. க. இராமமூர்த்தி :** நான் நடைபெறாத ஒன்றையும் இங்கே சொல்லவில்லை, 'துணிவு இருக்கிறதா?' என்று கேட்பது தவறு. தவறுகள் இன்னின்ன நடைபெற்றிருக்கின்றன என்பதைத்தான் நான் சொன்னேன்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** கருத்து வேற்றுமை என்று தான் உறுப்பினர் சொல்கிறார்.

(திரு. க. இராமமூர்த்தி எழுந்தார்)

உறுப்பினர் என்னையே பேச விடாமல் இருப்பது தவறு. எதிர்க் கட்சிக்கும் ஆளும் கட்சிக்கும் இடையே கருத்து வேற்றுமை இருப்பது இயல்பு. அதைத் தான் உறுப்பினர் குறிப்பிடுகிறார். நம்முடைய அவை நல்ல பாரம்பரியம் உடையது. எந்தெந்த சந்தர்ப்பங்களில் எழுந்து கொள்ளலாம் என்றெல்லாம் தெளிவாக விதி இருக்கிறது. உறுப்பினருக்கு அவமானம் ஏற்படும்படியோ அல்லது பழி சொல்கிற முறையிலோ குற்றச்சாட்டு இருந்தால் மட்டும் தான் தன்னிலை விளக்கம் பெற அனுமதிக்கலாம் என்று தெளிவாக விதி இருக்கிறது. இப்படி ஒவ்வொரு முறையும் எழுந்து பேசினால், எப்போது விவாதம் முடியும்?

**திரு. க. இராமமூர்த்தி :** "உறுப்பினருக்குச் சொல்லும் துணிவு உண்டா?" என்று சொன்னால் எப்படி?

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** தமிழகத்தில் இன்றையதினம் இது சகஜமாகி விட்டது.

**திரு. எஸ். முத்து :** அன்றைக்கு ஒரு மணி நேரம் உறுப்பினர் குற்றச் சாட்டுகளைச் சொல்லியதை நான் கேட்டுக்கொண்டிருந்தேன். இப்போது இங்கே பொதுப்படையாக உறுப்பினர் பேசுவதைக் கூட "என்னைத் தான்" சொல்கிறார் என்று அவர் நினைப்பது சரியல்ல. 'குளி' என்று சொன்னவுடன் காதைத் தடவிப் பார்ப்பது மாதிரி இருக்கிறது.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** உறுப்பினர் என்ன உபமானம் சொன்னார்?

**திரு. க. இராமமூர்த்தி :** இதிலே என்னைக் குறிப்பிட்டுத் தான் உறுப்பினர் சொன்னார்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர்:** பொதுவாகக் கட்சியைத் தான் உறுப்பினர் சொன்னார். அவர் பொதுவாகக் குற்றச்சாட்டுகளைச் சொன்னால் உறுப்பினர் அவர்கள் ஏன் எழ வேண்டும்?

**திரு. க. இராமமூர்த்தி:** என் பெயரைச் சொல்லியிருப்பதால் தான் நானும் பதில் சொல்கிறேன்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர்:** இங்கே என்ன நடைபெறுகிறது என்பதையே உறுப்பினர் அவர்கள் கோபத்தில் மறந்து விடுகிறார்கள்.

**திரு. எஸ். ஆர். இராதா:** நான் குறிப்பிட்டுச் சொல்லக் காரணம், பல்வேறு குற்றச்சாட்டுகளைச் சொல்ல முடியும். இங்கே தான் ஒன்றைச் சொன்னால் உடனே அதற்குப் பதில் சொல்வதற்குத்தான் அது வாய்ப்பாக இருக்கும். நான் பல ஆண்டுகளாகப் பார்த்துக்கொண்டு தான் இருக்கிறேன். நான் சொல்வதாக இருந்தால், வரிசைப்படி பத்திரிகையில் வந்துள்ள அத்தனை விஷயங்களையும் சொல்ல முடியும். அன்றைக்கு என்ன நிலைமை என்பது பற்றிய விவரங்களையும் நான் வைத்திருக்கிறேன். நான் ஏதாவது ஒன்றைச் சொன்ன உடனேயே அவருக்குப் பதில் சொல்ல வேண்டிய உணர்வு வருகிறது என்றால், உள்ளபடியே தான் ஒன்றைப் புரிந்துகொள்கிறேன், எப்படி ஏதாவது ஒரு குற்றச்சாட்டை இங்கே சொன்னால், அது பத்திரிகைக்குப் போய்விடும் என்கிற அச்ச உணர்வு அவருக்கு வருகிறதோ அதுபோல் தான் எங்களைப் பற்றி ஏதாவது ஒரு குற்றச்சாட்டை இங்கே உறுப்பினர் ஒருவர் சொன்னால், அதுபற்றிய உணர்வு எங்களுக்கு வரக்கூடாதா? அன்றைக்கு நானும் இடையிடையே இதுபோல் பேசியிருந்தால் பேசிக்கொண்டே இருக்க முடியும். அப்போது பதில் சொல்ல வேண்டிய நிலைமைக்கு நான் வரமாட்டேன். அவர் தான் சொல்லியிருக்க வேண்டும். அரசு மீது சொல்லுகிற குற்றச் சாட்டுகளைப் பொறுத்தவரையில், அரசு அதைக் கண்டுபிடிக்கவில்லை, இதைக் கண்டுபிடிக்கவில்லை என்று சொல்லட்டும். இந்த அரசு இன்ன தவறு செய்தது, அல்லது இந்த அமைச்சர் இன்ன தவறு செய்தார் அல்லது இதில் சம்பந்தப்பட்டிருக்கிறார் என்று குறிப்பிட்டுச் சொல்லுகிற நிலைமை இன்று இல்லை. அதைத்தான் நான் இங்கே குறிப்பிட்டுக் காட்டுகிறேன். எத்தனையோ தவறுகள் அகில இந்திய ரீதியில் நடைபெறவில்லையா? அதை மறுக்கிறார்களா? அது மாதிரியெல்லாம் தமிழ் நாட்டில் நடைபெற்றதா? அதற்காக நான் இங்கே நடைபெற்றதெல்லாம் நியாயம் என்று ஒப்புக்கொள்ள மாட்டேன். யார் தவறு செய்தாலும், அதை உடனே எடுத்துச்சொல்ல வேண்டுமென்கிற அடிப்படையில் தான். நாங்களெல்லாம் புரட்சித் தலைவருடன் பழக்கப்பட்டிருக்கிறோமேயல்லாமல் வேறல்ல. பெரிய இடத்தில் இருக்கிறவர்கள், ஆகவே ஒப்புக்கொள்ளுங்கள் என்று சொன்னால், அதை ஏற்றுக்





கொள்ளும் நிலையிலும் நாங்கள் இல்லை, நான் அத்தனை குற்றச்சாட்டு களையும் வரிசையாகச் சொல்ல வேண்டுமென்றுதான் வந்தேன். என்மீது கூட ஏதாவது அவசரத்தில் உறுப்பினர் சொல்லி விடுவாரோ என்ற பயத்தால் அதை யெல்லாம் கூட விடவேண்டிய நிலையில் இப்போது நான் இருக்கிறேன்.

**திரு. ஜி. சுவாமிநாதன்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இன்று காலையிலேயே பேசுகிறார்களா இல்லையா என்பதைத் தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர்:** உறுப்பினர் பேச்சு முடியட்டும்.

**திரு. எஸ். ஆர். இராதா:** சந்தேகத்தின் பேரில்தான் இங்கே குற்றச் சாட்டுகள் சொல்லப்படுகின்றன. குற்றச்சாட்டுகளைச் சிந்தித்துப் பார்த்துச் சொல்லுகிறார்களா என்றால், அப்படி இல்லை என்பதை நான் இங்கே மெத்த வருத்தத்தோடு சொல்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் திரு. லெட்சுமிகாந்தன் இங்கே ஒன்றைச் சொன்னார். போராட்டங்களை எல்லாம் இந்த அரசு தனக்கு விரோதமாக நினைக்கிறது என்று சொன்னார். போராட்டங்களுக்கு இந்த அரசு விரோதி என்பது சரியல்ல. தமிழ் நாட்டிலே எப்படி எப்படி யெல்லாம், எந்தெந்த முறையில் எல்லாம் போராட்டங்கள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன என்பது நன்றாகத் தெரியும். எங்கே போராட்டங்கள் ஆரம்பிக்கின்றன, எங்கே போராட்டங்களெல்லாம் செல்கின்றன என்பது கூட இந்த நாட்டு மக்களுக்கும், நாட்டுக்கும் மிக நன்றாகத் தெரியும். நான் இந்த சந்தர்ப்பத்தில் ஒன்றை அவையினருக்கு நினைவுபடுத்த விரும்புகிறேன்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர்:** 'கடைசியாக' என்று சொல்ல வேண்டும். (சிரிப்பு). ஆகட்டும், ஆகட்டும்.

**திரு. எஸ். ஆர். இராதா:** நானும் தொழிற் சங்கப் போராட்டம் ஆரம்பித் திருக்கிறேன். அன்றைக்கு நான் திராவிட முன்னேற்றக் கழகத்திலே இருந்த போது நெசவாளர்கள் போராட்ட ஊர்வலத்திலே முன்னால் சென்று கொண்டிருந்தேன். பின்னால் வந்துகொண்டிருந்தவர்கள் யாரோ தாண்டிய தால் 'முதல்வர் ஒழிக!' என்று கோஷம் போட்டிருக்கிறார்கள். இது எனக்குத் தெரியாது. பின்னர் அன்றைய முதல்வருடன் நான் பேசிக்கொண்டிருக்கும் போது, என் முன்னால் போலீஸ் ரிப்போர்ட்டை எடுத்துப் போட்டு "இந்த மாதிரி ரிப்போர்ட் வந்திருக்கிறது, இதெல்லாம் என்ன?" என்று கேட்டார். "நான் ஊர்வலத்தின் முன்னால் சென்று கொண்டிருந்தேன், இதெல்லாம் எனக்குத் தெரியாது" என்றேன். அப்படியென்றால் "இதெல்லாம் தெரியாமல் ஏன் போராட்டம் ஆரம்பிக்கிறாய்? போ" என்றார். ஆகவே அரசாங்கத்துக்கு விரோதமாகப் போராட்டம் நடத்துகிறவர்கள் இதை

பிறகு போலீசை வைத்தும் நாம் சாட்சி சொல்ல வைக்கலாம் என்ற அளவிலே நிலைமைகள் இருந்தன. இந்தியாவிலே இருக்கும் வேறு எந்த மாநிலத்தை வேண்டுமானாலும் பாருங்கள், பார்ப்பதற்கு ஒரு குழுவை அமைத்துக் கொண்டு கூட பார்க்கலாம், தமிழ் நாட்டிலே இருக்கிற அமைதியான சூழ்நிலை வேறு எந்த மாநிலத்திலும் இல்லை. அந்த அளவிற்கு தமிழ் நாட்டிலே சட்டம் ஒழுங்கைப் பொறுத்தவரையில், ஒரு அமைதியான சூழ்நிலை நிலவுகிறது என்று நான் நெஞ்சை நிமிர்த்திச் சொல்வேன்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. இராமமூர்த்தி அவர்கள் ஒன்றைச் சொன்னார்கள். கும்பகோணத்திலே இருக்கிற இன்ஸ்பெக்டர் ஒருவரை அடித்தார் என்று கூறினார்கள். எங்கள் ஊரிலே இருக்கும் இன்ஸ்பெக்டரைப்பற்றிச் சொல்லுகிறாரே என்று நான் அப்போதே குறுக்கிட்டிருப்பேன், ஆனால் அப்போது உடனடியாகப் பதில் சொல்லாததற்குக் காரணம் நான் பேசும் போது என்னுடைய உரையிலே சொல்லலாம் என்று இருந்ததுதான். ஆதலால் இன்றைக்கு நான் சொல்கிறேன். கும்பகோணத்திலே ஒரு இன்ஸ்பெக்டர் இருக்கிறார். இன்றைக்கு ஒரு 6 மாத காலமாகத்தான் அங்கே அமைதியான சூழ்நிலை இருக்கிறது. அங்கே இருக்கிற அரசியல் ரௌடிகளின் கொட்டம் இப்போதுதான் அடக்கப்பட்டிருக்கிறது. ஆளும் கட்சி, எதிர்க் கட்சி என்ற பாரபட்சம் இல்லாமல் அவர் அங்கே பணிபுரிகிறார். * * * வேண்டியவரை அவர் அடித்தார் என்ற தகவல் வந்ததாக மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னார்கள்.

திரு. க. இராமமூர்த்தி: வார்த்தைகள் சொன்னால் மிகவும் கஷ்டமாக இருக்கிறது. நான் 'அடித்தார்' என்று சொல்லவில்லை. விவசாயப் போராட்டத்தைக் காரணமாக வைத்து எப்படி சம்பந்தப்படாதவர்களைக் கைது செய்தார்கள் என்று உணர்த்துவதற்காகத்தான் நான் சொன்னேன். * * * 'வேண்டியவரை அடித்தார்' என்று நான் சொல்லாததைச் சொல்லி நிலைமைகளைத் திசை திருப்பும் நிலைமை இருக்கிறது. நான் இதைச் சொன்னால், 'அவர் உணர்ச்சி வசப்படுகிறார்' என்று சொல்கிறார்கள்.

மாண்புமிகு மேலவைத் தலைவர்: உணர்ச்சிவயப்படுவது மட்டுமல்ல, கோபம்கூட வருகிறது.

திரு. க. இராமமூர்த்தி: நான் சொல்லாததையே சொன்னதாகச் சொன்னால் எப்படி ...

மாண்புமிகு மேலவைத் தலைவர்: * * * பற்றி மாண்புமிகு உறுப்பினர் திரு. இராதா அவர்கள் குறிப்பிட்டதை அவருடைய பெயரைக் குறிப்பிட்டது, அவைக்குறிப்பிலே இருந்து நீக்கப்படுகிறது.

* * * தலைவரின் ஆணைப்படி நீக்கப்பட்டது.





திரு. க. இராமமூர்த்தி: நான் சொல்லாததையே அவர் சொல்கிறார். You must understand my feeling. விவசாயப் போராட்டத்தின் பெயராலே, அந்தப் போராட்டத்துக்கு எந்தவிதத்திலும் சம்பந்தம் இல்லாதவர்கள் கைது செய்யப்பட்டார்கள். துன்புறுத்தப்பட்டார்கள். * * சொந்தக்காரரை அடித்தார், அரசியல் ரௌடிகள் என்றெல்லாம் மாண்புமிகு உறுப்பினர் சொல்வதுபோல நான் சொல்லவில்லை.

மாண்புமிகு மேலவைத் தலைவர்: ஒன்று உறுப்பினர் அவர்கள் பேசி இந்த அவையை நடத்தட்டும், இல்லையென்றால், என்னை நடத்த அனுமதிக்க வேண்டும். நீக்கப்பட்ட பகுதி எது என்பதை உறுப்பினர் அவர்கள் புரிந்துகொள்ள வேண்டும். உறுப்பினர் அவர்கள் சொல்லாததை அவர் சொல்லியதாகச் சொல்லிய பகுதிகள் நீக்கப்பட்டன. தயவுசெய்து புரிந்து கொள்ள வேண்டும்.

திரு. எஸ். முத்து: மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசுகின்றபோது * * * சொந்தக்காரர்' என்று குறிப்பிட்டார்.

திரு. க. இராமமூர்த்தி: நானும் சொல்கிறேன். * * * சொந்தக்காரர் என்று சொன்னதை நான் மறுக்கவில்லை. நான் சொன்னது விவசாயப் போராட்டத்திலே சம்பந்தப்படாதவர்களைக் கைது செய்திருக்கிறார்கள் என்பதுதான். * * * சொந்தக்காரரைக் கைது செய்தார்கள் என்பது தான். * * * சொந்தக்காரரை அடித்தார்கள் என்று நான் சொல்லாததை, வேறு ஏதோ ஒரு நோக்கத்தை அடிப்படையாக வைத்துக்கொண்டு சொல்கிறார்.

மாண்புமிகு திரு எம். ஜி. இராமச்சந்திரன்: முதலிலே * * * பெயரை நான் சொல்லவில்லை என்று மாண்புமிகு உறுப்பினர் சொன்னார். இப்போது ஒத்துக்கொள்கிறார்கள். ஆகவே * * * பெயர் அவைக் குறிப்பிலே இருப்பதிலே தவறில்லை என்று கருதுகிறேன்.

திரு. க. இராமமூர்த்தி: * * என்று சொன்னது தவறில்லை. * * என்ற பெயர் இருக்கட்டும். நான் பேசும்போது விவசாயப் போராட்டத்தைப் பற்றிச் சொன்னேன். அதைப்பற்றிச் சொல்லாமல், வேறு எங்கோ போய் நான் சொல்லாததைச் சொல்வது தவறு. அது இந்த அவைக்கு நல்லதல்ல.

மாண்புமிகு மேலவைத் தலைவர்: அதுபற்றித் தான் நான் ஏற்கெனவே தீர்ப்பு கொடுத்தாகிவிட்டது.

* * * தலைவரின் ஆணைப்படி நீக்கப்பட்டது.

யெல்லாம் மிகவும் உன்னிப்பாகக் கவனிக்க வேண்டும். இன்றைக்கு என்னென்ன பேசுகிறார்கள் என்பதையும் கவனிக்க வேண்டும். தொழிலாளர்களுடைய போராட்டம் என்றால், அதன் அணுகுமுறையில் அவசியம் மாற்றம் வேண்டும். புரட்சித் தலைவர் அவர்களுடைய அரசைப் பொறுத்தவரையில், எந்த அரசிலும் இல்லாத அளவுக்கு தொழிலாளர்களுடன் அணுகுமுறை இருக்கிறது என்பதை நான் தைரியமாக, தலை நிமிர்ந்து சொல்கிறேன். ஆகவே, இந்த அரசு வந்த பிறகு, தொழிலாளர்களுடன் அரசுக்குள்ள அணுகு முறையில் பெரிய மாற்றம் ஏற்பட்டிருக்கிறது. போராட்டம் நடத்துகின்றவர்களை அடக்குகின்ற சூழ்நிலை இங்கே இல்லை. எத்தனையோ உதாரணங்களை நான் சொல்ல முடியும். முன்பெல்லாம் பட்டதாரிகளைக் கைது செய்தார்கள் என்றும், கர்ப்பிணிகளைச் சிறைக்கு அழைத்துச் சென்றார்கள் என்றும் எத்தனையோ உதாரணங்களை நான் எடுத்துச்சொல்ல முடியும்.

**திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன்:** அந்த அளவுக்கு மீண்டும் நடக்கக் கூடாது என்ற நல்லுணர்வு காரணமாகத் தான் நான் அதைச் சொன்னேன். போராட்டம் என்பதை அரசு சவாலாக எடுத்துக்கொள்ளக் கூடாது என்பதைத் தான் நான் எடுத்துச் சொன்னேன். அரசின் கவனத்தை ஈர்க்கும் அடிப் படையில்தான் போராட்டங்கள் வருகின்றன. போராட்டம் வருவது அரசுக்குச் சவாலாகவோ, அரசை எதிர்த்தோ செய்யப்படும் ஒன்று அல்ல. அப்படிப்பட்ட எண்ணத்தின் அடிப்படையில் வருவதன்று. பழைய தவறுகள் மீண்டும் வரவே கூடாது என்ற நல்லெண்ணத்தின் அடிப்படையில்தான் இதை நான் சொல்கிறேன்.

**திரு. எஸ். ஆர். இராதா:** உறுப்பினருடைய கருத்துக்கு நன்றி. அப்படிப்பட்ட ஒரு நிலை புரட்சித் தலைவர் 2-1/2 ஆண்டுக் காலம் ஆட்சி நடத்திய போதும் இல்லை, இப்போது ஆட்சி நடத்துகின்றபோதும் இல்லை என்பதை நான் ஆணித்தரமாக எடுத்துச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். நான் பழைய முதலமைச்சர் என்று சொன்னால், உடனே மாண்புமிகு உறுப்பினர் திரு. சங்கரலிங்கம் எழுந்து ஏதாவது கேட்பார். அன்றையதினம் நெசவாளர் பிரச்சினை வரும்போது 'முதலமைச்சர் ஒழிக' என்று சொல்லும் நிலை இருந்தது. இன்றைக்கு அந்த நிலைமை இல்லை. நியாயமான எந்தக் கோரிக்கையை வைத்தாலும். எங்களுடைய புரட்சித் தலைவர் ஏற்றுக் கொள்வார். இந்த அரசால் செய்ய முடிந்ததை உடனே ஏற்றுக்கொள்கிறார். அதுபோல் இன்றைக்கு பி அண்டு சி மில் பற்றிப் பேசிக்கொண்டிருக்கிறார்கள். அந்தத் தொழிற்சாலை தமிழ் நாட்டுக்கு வேண்டாமென்று இந்த அரசு நினைக்கிறதா? இல்லை. அந்தத் தொழிலாளர்களிடத்தில் இந்த அரசுக்கு விரோதமா? இரண்டும் இல்லவே இல்லை. நாங்கள் அவர்கள் கோரிக்கையை





வேகமாக நிறைவேற்ற வேண்டுமென்று தான் இருக்கிறோம். இந்த அரசு அந்த ஆலையை எடுத்தால் ஏன் மாநில அரசு எடுத்தது என்று சொல்வார்கள். மத்திய அரசு மூலமாக ஏற்று நடத்துங்கள் என்று சொல்லுவார்கள். தொழிலாளர்களுடைய பிரச்சினையைப் பொறுத்த வரையில், எந்த அரசும் செய்யாத சாதனைகளை இந்த அரசு செய்திருக்கிறது.

இன்றைக்கு 24,000 கிராம அதிகாரிகளை எடுத்து விட்டார்கள் என்று சொல்லுகிறார்கள். இதைப்பற்றி சட்டமன்றப் பேரவையிலும், மேலவையிலும் சொல்லுகிறார்களே தவிர, கண்ணாடி முன்பு நின்று கிராம அதிகாரிகளை நீக்கியது சரிதானா என்று அவர்கள் தானே கேட்டுக்கொண்டால், புரட்சித் தலைவர் அவர்கள் செய்தது நாட்டுக்குக் கிடைத்த ஒரு பெரிய வரப்பிரசாதம் என்று அவர்களே நினைக்கிறார்கள் என்பதையும் நான் இங்கே குறிப்பிட்டாக

(பிற்பகல் 12-20)

வேண்டும். இப்போது இந்தக் கிராம அதிகாரிகளை ஒழித்தவுடனே அவர்களுக்குப் பிரச்சினைகள் கிடைத்து விட்டன. "பார்த்தீர்களா? பார்த்தீர்களா? இந்தக் கிராம அதிகாரிகளின் பதவிகளை எடுத்து விட்டார்கள், 24 ஆயிரம் குடும்பங்கள் இன்றைக்கு ரோட்டிலே நிற்கிறார்கள்" என்றெல்லாம் சொல்கிறார்கள். நான் அவர்களுக்குச் சொல்வதெல்லாம் இந்த நாட்டிலே எத்தனை அக்கிரமங்கள் நடைபெற்றிருக்கின்றன? கையெழுத்துக் கூட வாங்க முடியவில்லை என்று சொன்னார்கள். ஆனால், உண்மை நிலைமையைப் பார்க்க வேண்டும். சட்டம் ஒழுங்கைப் பொறுத்த வரையில், அது கெட்டுவிட்டது என்று சொன்னார்கள். சட்டம் ஒழுங்கைப் பற்றிச் சொன்னவுடனே என்னுடைய நண்பர் திரு. சித்தாபதி அவர்கள் நினைவுக்கு வருகிறார்கள். 'என்னுடைய வீட்டிலே புகுந்து அடித்தார்கள்' என்று மாண்புமிகு உறுப்பினர் திரு. சித்தாபதி அவர்கள் இங்கே கூறினார்கள். இன்றைக்குச் சட்டம் ஒழுங்கு எப்படி இருக்கிறது என்றெல்லாம் கேட்டார்கள். திரு. சித்தாபதி அவர்கள் நிச்சயமாக நியாயத்தை ஏற்றுக்கொள்வார்கள் என்று நான் நம்புகிறேன். அன்றைக்குச் சட்டம் ஒழுங்கு எப்படி இருந்தது என்பதற்கு என்னுடைய அச்சகம் ஒன்றே சாட்சி. அன்றையதினம், என்னுடைய அச்சகம் நொறுக்கப்பட்டது, உடைக்கப்பட்டது. அது தவறில்லையா? இன்றைக்கு மாண்புமிகு உறுப்பினர் திரு. சித்தாபதி அவர்களின் வீட்டிலே புகுந்து அடிக்கப் போகிறார்கள், தவறு செய்கிறார்கள் என்று சொன்னால், நிச்சயமாக மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் அதை அனுமதிக்க மாட்டார்கள். அதுதான் அவருக்கு இருக்கிற நல்ல குணம். வேறு யாராவது இருந்தால் என்ன நடந்திருக்கும்? அன்றைக்கு என்னுடைய அச்சகம் நொறுக்கப்பட்ட போது என்ன நடந்தது? நொறுக்குங்கள். உடையுங்கள், நொறுக்கியதற்குப்

(திரு. எஸ். ஆர். இராதா) [1981 பிப்ரவரி 9

இந்த அரசின்மீது பல குற்றச்சாட்டுகளைச் சொல்லுகிறார்கள். ஆனால் அப்படிச் சொல்லுகிறவர்கள் இந்த அரசு செய்திருக்கிற நல்ல காரியங்களைப் பாராட்டுகிறார்களா என்றால், இல்லை. பாராட்டுகிறவர்கள் ஒருவரைக்கூடக் காணோம். உதாரணத்திற்கு ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். மேதகு ஆளுநர் உரையில் ஒரு நல்ல திட்டத்தைப்பற்றிச் சொல்லப்பட்டிருக்கிறது. அதாவது பாரி முனையிலிருந்து லஸ் கார்னர் வரையில் ஒரு விரைவுப் போக்குவரத்து ஆரம்பிக்கப்பட வேண்டும் என்றும் அதற்காக ரூபாய் 60 கோடி செலவு செய்யப்பட வேண்டுமென்றும் குறிப்பிடப்பட்டிருக்கிறது. இந்தத் திட்டத்தைபபற்றி இங்கே வாழ்கிற பெருநகர மக்கள் உண்மையிலேயே பாராட்ட வேண்டும். பாரி முனையிலிருந்து லஸ் கார்னருக்கு ஒரு விரைவுப் போக்குவரத்துத் திட்டம் ஆரம்பிக்கப்படும்போது, அந்தத் திட்டம் எந்த அளவுக்கு வரவேற்பை உண்டாக்க வேண்டும் என்பதை நாம் அறிவோம். ஆனால் அந்தத் திட்டத்தைப்பற்றி இங்கே எதிர்க் கட்சியில் உள்ள ஒருவராவது பாராட்டி வரவேற்றுப் பேசியிருக்கிறார்களா என்றால் இல்லை. இந்தத் திட்டம் அறிவிக்கப்பட்டதன் காரணமாக இந்தப் பகுதிகளில் இருக்கிற நிலங்களுக்கெல்லாம் ஒரு புதிய நிலைமை வந்துவிட்டது. மாண்புமிகு உறுப்பினர் திரு. இராமலிங்கம் அவர்கள் குறிப்பிடுவதைப்போல், "ஒரு கிராக்கி" வந்துவிட்டது. இந்த மாநகரத்தின் ஒரு பகுதியிலே ஒரு 60 கிரவுண்டு நிலத்தை ஒருவர் காலியாகக் கையிலே வைத்துக்கொண்டிருக்கிறார். கேட்டால் அதிலே விவசாயம் செய்கிறேன் என்று சொல்லிக்கொண்டிருக்கிறார். அந்த நிலத்தைச் சுற்றி சுமார் 60 கடைகளை வைத்திருக்கிறார்கள். அந்த 60 கடைகளோடு அந்த நிலத்திற்கு ஒரு நாள் சொல்லப்பட்ட விலை 33 லட்சம் ரூபாய். ஆனால் திடீரென்று அவர் அந்த நிலத்தை ரூபாய் 36 லட்சத்திற்கு விற்றுவிட்டு கணக்கில் 12 லட்சத்தைக் காட்டியிருக்கிறார். 60 கடைக்காரர்களையும் இப்போது அம்போ என்று விட்டுவிட்டுப் போய்விட்டார். வயல் என்ற பெயரில் 60 கிரவுண்டு நிலத்தை வைத்துக்கொண்டிருக்கிறார் அந்த நபர். லஸ் கார்னரில் விவசாயம் நடைபெறுகிறது என்பதை நான் இப்போதுதான் கேள்விப்படுகிறேன். தஞ்சையில்தான் விவசாயம் நடைபெறுகிறது என்று நான் இதுவரை நம்பி வந்தேன். இப்போது லஸ் கார்னரில்கூட விவசாயம் நடைபெறுகிறது. அவருடைய பெயரை இங்கே நான் குறிப்பிட விரும்பவில்லை. காரணம் . . .

**திரு. சி. இராமலிங்கம்:** அவருடையப் பெயரைக் குறிப்பிடாமல் பேசினால் எப்படித் தெரிந்துகொள்வது?

**மாண்புமிகு மேலவைத் தலைவர்:** தனிப்பட்டவர்களின் பெயர்களைக் குறிப்பிடாமல் இருப்பது கூடுமான வரை நல்லது. ஏதோ ஆசையில் மாண்புமிகு உறுப்பினர் திரு. இராமலிங்கம் பெயரைக் கேட்டுவிட்டார் என்று நினைக்கிறேன்.



1981 பிப்ரவரி 9]

**திரு. எஸ். ஆர். இராதா:** மாண்புமிகு உறுப்பினர் திரு. வெங்கடேசன் அவர்கள் பெயரைக் கேட்டிருந்தாலாவது ஏதோ அங்கே வாரியத்தின் சார்பில் வீடுகட்டக் கேட்கிறார் என்று நினைக்கலாம். மாண்புமிகு உறுப்பினர் திரு. இராமலிங்கம் அவர்களோ அவர் கையில் கைத்தறியைத்தான் வைத்துக்கொண்டு, கைத்தறித் துணியை விற்றுக்கொண்டிருக்கிறார். இவர் அங்கே போய் என்ன செய்யப் போகிறார் என்று தெரியவில்லை. முடிந்தால் ஒரு கடைகட்டி துணிகளை அங்கே விற்கலாம். ஆனால் அந்த நிலமும் ஏற்கனவே அதிகமான விலைக்குப் போய்விட்டது.

இப்படி ஒரு நல்ல திட்டம் வருகிறபோது, சென்னையில் இருப்பவர்களுக்கு நல்ல திட்டம் வருகிறபோது, இங்கே இருப்பவர்கள் எவ்வளவு உஷாராகி விடுகிறார்கள் என்பதைத் தெரிவிக்கவே நான் இதைக் குறிப்பிடுகிறேன். இதையெல்லாம் இந்த அரசு கவனிக்க வேண்டும் என்றும் இந்தச் சந்தர்ப்பத்தில் கேட்டுக்கொள்கிறேன். தலைவர் அவர்கள் நேரம் அதிகமாகிவிட்டது என்று அவசரப்படுத்துவதால், விரைவில் முடித்துக்கொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர்:** ஏற்கெனவே ஒன்றும் குறைவாகப் பேசவில்லை.

**திரு. எஸ். ஆர். இராதா:** இன்றைக்கு நான் பேசியது மிகக் குறைவான நேரம்தான்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர்:** நேரம் போவதே தெரியாமல் உணர்ச்சிபூர்வமாகப் பேசிக் கொண்டிருப்பதால்தான் இந்த நிலை.

**திரு. எஸ். ஆர். இராதா:** மாண்புமிகு உறுப்பினர் திரு. நல்லசிவன் அவர்கள் தாம் பேசும்போது எங்கள் கட்சியைப்பற்றி ஒரு கருத்தை வெளியிட்டார். அவர் இன்றைக்கு அவையில் இல்லை. அவர் பேசும்போது இன்றையதினம் அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் இந்திரா காங்கிரஸ் கட்சியைப் பார்த்து பயப்படுகிறது என்று கட்சி ரீதியாக, அரசியல் விமர்சனம் செய்தார். அது அவருக்கு இருக்கிற உரிமை. அவர் அவ்வாறு பேசியது பத்திரிகைகளில் பெரிய எழுத்துக்களில் வந்திருக்கிறது. இந்த மாநிலத்தில் ஆளும் கட்சியாக இருக்கிற அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் அகில இந்தியாவை ஆளுகிற பொறுப்பில் இருக்கிற காங்கிரஸ் கட்சி குறித்து எந்த நிலையை மேற்கொள்கிறது என்பது தமிழக மக்கள் அறிந்த ஒன்றாகும். ஆனால் நான் அவரைப் பார்த்து ஒன்றை மட்டும் கேட்க விரும்புகிறேன். தமிழகத்தில் இருக்கிற திராவிட முன்னேற்றக் கழகத்தைப் பொறுத்தே திரு. நல்லசிவன் அவர்களின் கட்சியால் ஒரு முடிவு செய்ய முடியாத நிலையில் இருக்கும்போது, தாங்கள் எப்படி ஒரு அகில இந்திய கட்சியின் நிலையைப்பற்றி முடிவு

**திரு. எஸ். ஆர். இராதா:** தலைவர் அவர்களே, என்னை மன்னித்துக் கொள்ள வேண்டும். என்னுடைய முழுக் கருத்தையும் கேட்காமல் அவசர அவசரமாகப் பதில் சொல்ல வேண்டுமென்று வருகிறார்கள். அவர் ஒரு பத்திரிகையை ஆரம்பிக்கிறார், நடுநிலைமைப் பத்திரிகையை ஆரம்பிக்கிறார் என்பதை நான் சொல்ல வந்தேன். ஆனால் அவர் இன்னும் தி. மு. க.வில் இருக்கிறார்கள் என்று உறுதிமொழி கொடுத்திருப்பதைப் பார்க்கும்போது, எனக்கேகூட சந்தேகம் வருகிறது.

**திரு. ம. சங்கரலிங்கம்:** பத்திரிகையை ஆரம்பிக்கிறார் என்ற செய்தியை முதலிலே சொல்லியிருக்கலாம். ஆனால் அவர் தவறாகச் செய்தியைச் சொல்ல வேண்டுமென்ற நோக்கத்தோடு சொல்லவில்லை என்றாலும்கூட, ஒரு கட்சியைச் சேர்ந்தவர் * * * என்று சொல்லுவது சரியல்ல. ஒரு கட்சி சார்புடையவர் நடுநிலைமைப் பத்திரிகையையும் நடத்தலாம், கட்சிப் பத்திரிகையையும் நடத்தலாம். ஆனால் அரசியல் மேடைப் பேச்சுக்கும் இந்த அவையிலே பேசும் பேச்சுக்கும் வித்தியாசம் இருக்க வேண்டும். அப்படி இல்லாமல் மாண்புமிகு உறுப்பினர் பேசுவது இந்த அவையின் பாரம்பரியத்தைக் கட்டிக் காத்துக்கொண்டிருக்கிறாரா அல்லது உடைத்துக் கொண்டிருக்கிறாரா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர்:** * * * என்ற வாசகம் நீக்கப்படுகிறது. மாண்புமிகு உறுப்பினர் முடிவுக்கு வர வேண்டும்.

**திரு. எஸ். ஆர். இராதா:** மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, மீண்டும் அதை நான் விளக்க விரும்பவில்லை. இன்றைக்குள்ள அரசியல் சூழ்நிலையில் இந்த அரசைப் பொறுத்தவரையில், பல்வேறு நல்ல காரியங்கள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. அந்தக் காரியங்கள் அத்தனையையும் எதிர்க் கட்சியால் ஏற்றுக்கொள்ள முடியவில்லை என்றாலும், இந்த அரசின் மீது களங்கம் கற்பிக்க வேண்டுமென்று எதிர்க் கட்சியினர் எப்படி முயற்சிக்கிறார்கள் என்பதையெல்லாம் எனக்கு வந்திருக்கிற தகவல்களின் மூலமாகச் சொல்லிவிடலாம் என்று நினைக்கிறேன். நிச்சயமாக அதையெல்லாம் தங்களிடம் கொடுத்து அனுமதி வாங்கிக்கொண்டு சொல்வேன்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர்:** இன்னும் என்ன இருக்கிறது?

**திரு. எஸ். ஆர். இராதா:** இன்றைக்கு எல்லாக் கட்சிகளும் ஒன்று சேருகிற நேரத்தில் குற்றச்சாட்டுக்களைச் சொல்ல வேண்டுமென்று கருதி சொல்லி. சேர்ந்ததற்குப் பின்னாலே என்னென்ன மாற்றங்கள் வருகின்றன என்பதைப்

---

* * * தலைவரின் ஆணைப்படி நீக்கப்பட்டது.





பல்வேறு எடுத்துக்காட்டுகளின் மூலமாகச் சொல்வேன். ஆனாலும் இந்த அரசைப் பொறுத்தவரையில், நல்ல திட்டங்களைச் செய்ய வேண்டுமென்று மிகப் பெரிய அளவில் இயங்கி வருகிறது. தமிழ் நாட்டைப் பொறுத்த வரையில் அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசாங்கம் ஊழலற்ற அரசாங்கம், நேர்மையான அரசாங்கம். நியாயங்களை வலியுறுத்த மிகப் பெரிய அளவில் போராடிக் கொண்டிருக்கிற அரசாங்கம் என்று கூறி, ஆளுநர் அவர்கள் இந்த மாமன்றத்திலே ஆற்றிய உரைக்கு நன்றி தெரிவிக்கும் வகையில் மாண்புமிகு உறுப்பினர் திரு. கண்ணப்பன் அவர்கள் கொண்டுவந்த நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தை ஆதரித்து என் உரையை முடித்துக்கொள்கிறேன்.

### 3. அறிவிப்புகள்—தொடர்ச்சி.

#### (1) 10-2-1981-க்கான நிகழ்ச்சி நிரல்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர்:** மேலவையின் நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவடைந்தன. திரு. ம. சங்கரலிங்கம் அவர்களின் உரையும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் பதில் உரையும் நாளை 10—2—1981 மாலை 4 மணிக்கு நடைபெறும். நாளைக் காலை நிகழ்ச்சிகள் ஏற்கெனவே அறிவித்தபடி நடைபெறும். அவை இத்துடன் முடிவடைந்து நாளை காலை 10-30 மணிக்குக் கூடும்.

பின்னர், அவை ஒத்திவைக்கப்பட்டது.

(பிற்பகல் 12-45)

### 7. அவை முன் வைக்கப்பட்ட ஏடுகள்

#### *A. Statutory Rules and Orders.*

176. Notification issued with G.O. Ms. No 2909, Home, dated the 3rd November 1980 in regard to amendments to the Tamil Nadu Motor Vehicles Rules, 1940 [Laid on the table of the House under section 133 (3) of the Motor Vehicles Act, 1939 (Central Act IV of 1939) ].

177. Notification issued with G.O. Ms. No. 1224, Personnel and Administrative Reforms (Personnel-M), dated the 15th December 1980 in regard to an amendment to the Tamil Nadu Public Service Commission Regulations, 1954, in Volume I of the Tamil Nadu Services Manual, 1977. (Laid on the table of the House under Article 320 (5) of the Constitution of India).

178. Notification issued with G.O. Ms. No. 892, Revenue, dated the 7th April 1980 in regard to an amendment to the Tamil Nadu Pawn-brokers Rules, 1944. (Laid on the table of the House under section 22 (4) of the Tamil Nadu Pawn-brokers Act, 1943 (Tamil Nadu Act XXIII of 1943).

179. Notification issued with G.O. Ms. No. 2316, Revenue, dated the 4th October 1980 in regard to amendments to the Tamil Nadu Land Reforms (Disposal of Surplus Land) Rules, 1965. (Laid on the table of the House under section 112 (2) of the Tamil Nadu Land Reforms (Fixation of Ceiling on Land) Act, 1961 (Tamil Nadu Act 58 of 1961).

180. Notification issued with G.O. Ms. No. 49, Housing and Urban Development, dated the 11th January 1980 in regard to approval of the Detailed Development Plan for Gangadareswarar Koil Area Planning Unit 6.8, Madras by the Madras Metropolitan Development Authority and approved by him under section 28 of the Tamil Nadu Town and Country Planning Act, 1971 (Tamil and English). (Laid on the table of the House under section 123 (2) of the Tamil Nadu Town and Country Planning Act, 1971 (Tamil Nadu Act 35 of 1972).

181. Audit Report on the Annual Accounts of the Tamil Nadu Electricity Board for the year 1978-79 and Balance Sheet as on 31st March 1979. (Laid on the table of the House under section 69 (5) (a) of the Electricity (Supply) Act, 1948 (Central Act 54 of 1948).

182. Notification issued with G.O. Ms. No. 2955, Home, (Transport-I), dated the 11th November 1980 in regard to an amendment to the Home Department Notification No. II (2)|HO| 5093|77, dated the 28th September 1977, published at page 618 of Part II—Section 2 of the Tamil Nadu Government Gazette, dated the 19th October 1977. [Laid on the table of the House under section 25 (2) of the Tamil Nadu Motor Vehicles Taxation Act, 1974 (Tamil Nadu Act 13 of 1974).

183. Notifications issued with G.O. Ms. No 2181, Agriculture, dated the 5th November 1980, in regard to the nomination of certain Members to the Tamil Nadu Veterinary Council. (Laid on the table of the House under section 16 (7) of the Tamil Nadu Registration of Veterinary Practitioners Act, 1957 [Tamil Nadu Act XXI of 1957).



184. Notification issued with G.O. Ms. No. 926, Commercial Taxes and Religious Endowments, dated the 23rd September 1980 in regard to amendments to Schedules I and II to the Tamil Nadu Entertainments Tax Act, 1939. [Laid on the table of the House under section 16 (4) of the Tamil Nadu Entertainments Tax Act, 1939. (Tamil Nadu Act X of 1939) ].

185. Notification issued with G.O. Ms. No. 1156, Commercial Taxes and Religious Endowments, dated the 3rd November 1980 in regard to exemption from levy of Sales Tax payable by the Madras Refineries Limited, Madras under the Tamil Nadu General Sales Tax Act, on the sale of transformer oil feed stock to Madras Petro-Chem Limited, Madras required for the manufacture of 450 Kilo Litre transformer oil and on the sale of 450 Kilo Litre of transformer oil by the Madras Petro-Chem Limited, Madras to the Tamil Nadu Electricity Board. Laid on the table of the House under section 53 (5) of the Tamil Nadu General Sales Tax Act, 1959 (Tamil Nadu Act I of 1959)].

186. Notification issued with G.O. Ms. No. 1114, Commercial Taxes and Religious Endowments, dated the 28th October 1980 in regard to amendments to the Tamil Nadu General Sales Tax Rules, 1959. [Laid on the table of the House under section 53 (5) of the Tamil Nadu General Sales Tax Act, 1959 (Tamil Nadu Act I of 1959)].

187. Notification issued with G.O. Ms. No. 2175, Agriculture, dated the 5th November 1980 declaring that Tirupathur, Chengam, Tiruvannamalai and Polur taluks in North Arcot district shall be notified area for the purposes of the Tamil Nadu Agricultural Produce Markets Act in respect of Cotton [Laid on the table of the House under section 29 (4) of the Tamil Nadu Agricultural Produce Markets Act, 1959 (Tamil Nadu Act 23 of 1959)].

திரு. எஸ். ஆர். இராதா : என்னுடைய உணர்வுகளைச் சொல்ல நினைக்கும்போது, நிலைமைகள் வேறு எங்கோ போய்க்கொண்டிருக்கின்றன. அங்கே இருக்கின்ற ஒரு அதிகாரி மீது இங்கே குற்றச்சாட்டு சொல்கிறபோது, அந்த ஊரிலே உள்ள நான் உட்கார்ந்து கேட்டுக் கொண்டிருக்கிறேன். பிரச்சினைகளுக்கு வெளியே சென்று வேறுவிதமாக அவருடைய உள்ளுணர்வைச் சொல்கிறார். நான் அதைப்பற்றி ஒன்றும் சொல்லவில்லை. அந்த அதிகாரி அப்படிச் செய்தார் என்று சொன்னது இங்கே குறிப்பிலே இருக்கிறது. நான் இரண்டு தடவை படித்தேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : அதுதான் முடிந்த விஷயமாயிற்றே. இனி மேலே உறுப்பினர் அவர்கள் போகலாம்.

திரு. எஸ். ஆர். இராதா : இப்படிப்பட்ட, நேர்மையான அதிகாரிகள் கிடைக்கமாட்டார்களா என்று பார்க்கவேண்டிய நிலைமைதான் இப்போது நாட்டிலே இருக்கிறதே தவிர வேறல்ல. சட்டம் ஒழுங்குப் பிரச்சினை பற்றிச் சொல்லும்போது, அவர் அப்படிச் செய்தார், இவர் இப்படிச் செய்தார், அதிகாரி அப்படிச் செய்தார், அவர்கள் வீட்டிலே புகுந்து அடித்தார்கள் இப்படியெல்லாம் சொல்லும்போது நான்கூட வரிசையாகச் சொல்லலாம். திருப்பி நான் அவரையே கேட்பேன், திரு. மனோகரன் அவர்கள் விமான நிலையத்திற்குச் செல்லும்போது அவரை அடித்தார்கள். நாங்கள் பார்த்துக் கொண்டிருந்தோம். அவருடைய சட்டை கிழிந்து விட்டது. அவர் சென்று பாராளுமன்றத்திலே முறையிட்டார். அந்த நிகழ்ச்சிகள் இன்றைக்கும் பசுமையாக என்னுடைய நினைவிலே இருக்கிறது. அன்றைக்கு அவர் பகிரங்கமாகச் சொன்னார். "தமிழ்நாட்டிலே ஒரு ஆட்சி நடக்கிறதா? தமிழ்நாட்டிலே ஒரு கொடுங்கோலன் நாட்டை ஆளுகிறான், நீங்கள் கவனிக்கக் கூடாதா?" என்று அன்றைக்கு அவர் நாடாளுமன்றத்திலே முறையிட்டார். கிழிந்த சட்டையை அங்கு கொடுத்ததை இன்னும் திரும்ப வாங்கவில்லை.

திரு. ஆர். டி. சீத்தாபதி : அதற்கு இது பரிகாரமா என்று, தலைவர் அவர்களே, தங்கள் மூலமாக அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

திரு. எஸ். ஆர். இராதா : நண்பர் திரு. சீத்தாபதி அவர்கள், தலைவர் அவர்களே, தங்கள் மூலமாகக் கேட்டதனால் நான் தங்கள் மூலமாகச் சொல்கிறேன், நிச்சயமாக இது பரிகாரம் அல்ல.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : உறுப்பினர்களுக்குள்ளே என்ன நடந்தாலும் அது என் மூலம் நடைபெறுவதாகத்தான் அர்த்தம் இங்கே.





திரு. எஸ். ஆர். இராதா : நண்பர் திரு. சீத்தாபதி அவர்கள் வருத்தப்படுகிறாரோ இல்லையோ, அவர் அடிக்கப்படுகிறார் என்று சொன்னால், மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் தான் முதலாவதாக வருத்தப்படுவார்கள். வேறு முதலமைச்சர்கள் அப்படியா இருந்தார்கள் என்பதையும் நாம் பார்க்க வேண்டும். 'இன்றைக்குத்தான் இராதா அச்சகம் உடைக்கப்பட்டிருக்கிறது, கொண்டா பாயசம்' என்று பாயசம் சாப்பிட்டவர்கள் இந்த நாட்டை ஆளவில்லையா? ஆகவே, நான் சொல்கிறேன், எந்தக் குற்றச்சாட்டுக்களை வேண்டுமானாலும் சொல்லுங்கள், சொல்லும்போது அதில் இருக்கிற உண்மையைப் பாருங்கள். விவசாயிகள் பிரச்சினையிலே பல்வேறு விதமான கருத்துக்கள் இந்த அவையிலே பேசப்பட்டிருக்கின்றன. அதிலே விளக்கமாக நான் போகவில்லை. ஒரு விஷயத்தைப் பொறுத்தவரையில், நான் இந்த அரசைப் பாராட்டுகிறேன். போராட்டத்தை எந்த வகையிலே சந்திக்க வேண்டுமோ அந்த வகையிலே சந்தித்ததன் விளைவாகத்தான் இன்றைக்கு விவசாயப் போராட்டம் எந்த இடத்திலே வைக்கப்பட வேண்டுமோ அந்த இடத்திலே வைக்கப்பட்டிருக்கிறது. 'நாங்கள் நிலங்களைத் தரிசாகப் போடுவோம்' என்று அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். இந்த அரசு மிகவும் தெளிவாகச் சொல்லியிருக்கிறது. தரிசாக இருக்கும் நிலங்களையெல்லாம் எடுத்து நிலம் இல்லாதவர்களுக்குக் கொடுப்போம் என்று இந்த அரசு தெளிவாகச் சொல்லியிருக்கிறது. விவசாயிகளைப் பொறுத்த வரையில், அவர்களுக்கு இந்த அரசு நல்லபல காரியங்களைச் செய்கிறது, ஆனால் அவைகளின் பலன் வெளியிலே தெரியக்கூடாது என்ற வகையிலே இன்றைக்குப் போராட்டங்கள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. உதார

(பிற்பகல் 12-30)

ணத்திற்கு ஒன்றைச் சொல்ல வேண்டுமென்றால் இந்த அரசாங்கத்தால் விவசாயிகளுக்குக் கொடுக்கப்பட்ட சலுகைகளும், அவர்களுக்குத் தள்ளுபடி செய்யப்பட்ட கடன் தொகைகளும், ஊரிலே பல பேருக்குத் தெரியாது. அவைகளையெல்லாம் கூட்டுறவுச் சங்கங்களிலும் வேறு இடங்களிலும் போர்டு எழுதிப் போட்டு இன்னாருக்கு இவ்வளவு கடன் தொகை தள்ளுபடி செய்யப்பட்டது என்று சொன்னால், ஊரில் இருப்பவர்கள் அதைப் பார்த்துவிட்டு "இவ்வளவையும் வாங்கிக் கொண்டுதானா இவர்கள் இன்னும் கிளர்ச்சி செய்கிறார்கள்" என்று சொல்லுகிற நிலைமை ஏற்படும். அப்படி இந்த அரசைப் பொறுத்தவரையில், ஏழை விவசாயிகளுக்கும் நெசவாளர்களுக்கும் இந்த அரசு செய்திருக்கிற நல்ல காரியங்களைப் பார்க்கிறபோது, நல்ல மனம் உள்ளவர்கள் பாராட்டாமல் இருக்க முடியாது.

### B. Reports, Notifications and Other Papers.

20. Speech of Hon. Thiru S. Ramachandran, Minister for Electricity initiating the discussions on the Annual Financial Statement for 1980-81 and the Supplementary Financial Statement for 1979-80 of the Tamil Nadu Electricity Board. (Tamil and English).

21. Statement of action taken on the suggestions made by the Members of the Tamil Nadu Legislature during the discussions on the Annual Financial Statement of the Tamil Nadu Electricity Board for the years 1978-79 and 1979-80. (Tamil and English).

*22. First Report of the Committee on Public Accounts (1980-81) on the Excesses over Voted Grants and Charged Appropriations for the year 1974-75. (Tamil).

*23. Second Report of the Committee on Public Accounts (1980-81) on the Report of the Comptroller and Auditor-General of India for the years 1974-75 and 1975-76 (Revenue Receipts). (Tamil).

**Circulated to all M.L.Cs. on 7th February 1981.**



### இணைப்பு

(28-ஆம் பக்கத்தில் இனம் 5-க்கான அடிக்குறிப்பைக் காண்க.)

அரசு அலுவலர்களுக்கு வீடு கட்டுவதற்கான முன்பணம் வழங்கும் திட்டம் 1960-ஆம் ஆண்டு முதல் செயலாற்றப்பட்டு வருகிறது. ஒவ்வொரு நிதியாண்டிலும் இதற்காக நிதி ஒதுக்கீடு செய்யப்படுகிறது. 1978-79 ஆம் ஆண்டில் ரூபாய் 150 இலட்சமாக இருந்த ஒதுக்கீடு 1979-80-ல் ரூபாய் 225 இலட்சமாகவும், நடப்பு நிதியாண்டு 1980-81-ல் ரூபாய் 500 இலட்சமாகவும் உயர்த்தப் பட்டது. தலைமைச் செயலகத்தில் ஒருமுகப் பட்டதாக இத்திட்டம் 1-7-1979 வரை இருந்தது. இதனால் கடன் மனுக்களின்மீது ஒப்புதல் அளிப்பதில் ஏற்படும் காலதாமதம் காரணமாக 1-7-1979 முதல் இவ்வாறு கடன் வழங்கும் அதிகாரம் மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு அளிக்கப்பட்டு திட்டம் விரிவாக்கப்பட்டது. இதற்கென வரவு செலவுத் திட்டத்தில் ஒதுக்கப்பட்ட நிதி அனைத்து மாவட்ட ஆட்சியருக்கும் பிரித்து அளிக்கப்பட்டது. இவ்வாறான அதிகார மாற்றம் ஏற்பட்ட பின்னர் 1979-80 நிதி ஆண்டில் முதல் சில மாதங்களில் ஒப்புதல் அளிப்பது சற்று தாமதமானதின் காரணமாக செலவினமும் குறைவாக இருந்தது. 1979-80 ஆம் ஆண்டில் ஒதுக்கப்பட்ட நிதி ரூபாய் 225 இலட்சம் முழுவதும் செலவிடப்படாமல் அரசுக் கணக்கில் திரும்பச் செலுத்திவிடப்படலாம் என்ற நிலை உருவான காரணத்தினால், அந்த நிதியாண்டில் அனைத்து மாவட்ட ஆட்சியரும் வீடு கட்டுவதற்கான முன்பணம் அளிக்கும் திட்டத்திற்கு தனிக்கவனம் செலுத்த அறிவுறுத்தப்பட்டனர். அவர்களும் சிறப்புக் கவனம் செலுத்தியதன் காரணமாக ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதியை செலவிட முடிந்தது.

மேற்சொன்ன நடவடிக்கையினால் ஏற்பட்ட அனுபவம் காரணமாக நடப்பு நிதியாண்டு 1980-81-ல் மேலும் அதிகமான அலுவலர்கள் இவ்வாறான கடனுதவி பெறுவார்கள். அதனால் அதிக நிதி தேவைப்படும் என்ற காரணத்தால் இந் நிதியாண்டின் துவக்கத்தில் வரவு செலவுத் திட்டத்தில், இத்திட்டத்திற்கென ஒதுக்கப்பெற்ற, ரூபாய் 325 இலட்சம் தொகை ரூபாய் 500 இலட்சமாக உயர்த்தப்பட்டது. இத்தொகையும் போதுமானதாக இருக்காது என்ற நிலை இருந்தபோதிலும் அரசின் ஒட்டுமொத்தமான நிதி நிலையைக் கருத்தில் கொண்டு இதனை மேலும் உயர்த்த முடியாத நிலை ஏற்பட்டுவிட்டது. சென்ற ஆண்டைவிட, 1980-81-ல் ரூபாய் 2.75 கோடி அரசு ஊழியர்களின் நலனைக் கருதி கூடுதலாக நிதி ஒதுக்கீடு செய்திருப்பது குறிப்பிடத்தக்கது. மேலும் இத்திட்டத்தின்கீழ் ஒப்புதல் பெறும் அலுவலர்கள் அனைவரும் ஒப்புதல் அளிக்கப்பட்ட நிதியாண்டிலேயே முழுத் தொகையையும் பெறுவதில்லை என்பதோடு, முந்தைய ஆண்டுகளில் கடனுதவி பெற்றோர் பலர் சில தவணைகளைப் பிந்தைய நிதியாண்டுகளில் பெறுவதாலும், மாவட்ட ரீதியில் கடன்

செய்ய முடியும்? திராவிட முன்னேற்றக் கழகம் இங்கு தமிழகத்தில் ஆளும் கட்சியாக இருந்து, பல்வேறு குற்றச்சாட்டுகளுக்கு ஆளாகி, எவ்வளவோ விசாரணைக்கு ஆட்பட்டு இருக்கிற கட்சி. அந்தக் கட்சியே ஒரு நாளைக்கு தோழமைக் கட்சியாகவும், ஒரு நாளைக்கு எதிர்க் கட்சியாகவும், இன்னொரு நாளைக்கு மீண்டும் தோழமைக் கட்சியாகவும் திரு. நல்லசிவன் அவர்களின் கட்சிக்குத் தோன்றுகிறது. அவர்களுக்கே திராவிட முன்னேற்றக் கழகத்தைக் குறித்த நிலைமையில் தடுமாற்றம் ஏற்பட்டுக்கொண்டிருக்கிறது. அகில உலகத்தில் இருக்கிற பெரிய கட்சி அவர் சார்ந்திருக்கிற கம்யூனிஸ்ட் கட்சி, அவர்களின் கட்சிக்கே அத்தகைய நிலை என்றால், ஒரு மாநிலத்தில் இருக்கிற எங்கள் கட்சிக்கு இது ஒன்றும் பெரிதல்ல. என்றாலும் எந்த நிலையிலும் எங்கள் கட்சி தனது கொள்கையை மாற்றிக்கொள்ளகிற அவசியமே இல்லை.

**திரு. ப. மாணிக்கம்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. நல்லசிவன் அவர்கள் அவையில் இல்லை என்றாலும், அவர் ஒரு அரசியல் ரீதியான கருத்தைச் சொன்னதால், நான் ஒன்றைக் குறிப்பிட விரும்புகிறேன். தேர்தலைப் பொறுத்தவரையில், ஒரு கட்சி இன்னொரு கட்சியுடன் உறவு கொள்வது என்பது அரசியல் வரலாற்றில், குறிப்பாக இந்திய அரசியல் வரலாற்றில் தொடர்ச்சியாக நடைபெறும் ஒன்றாகும். திரு. நல்லசிவன் அவர்கள் குறிப்பிட்டது அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் தேர்தல் நேரத்தில் அக்கட்சி எடுத்த கொள்கையின் முடிவிலிருந்து மாறுவது என்பதாகும். அது ஒரு அரசியல் ரீதியான விமரிசனமாகும். எனவே தயவுசெய்து அதை மாற்றிக் குற்றம் கூறுவது சரியல்ல என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. எஸ். ஆர். இராதா:** நான் அரசியல் நிலையினை மாற்றிச் சொல்ல வேண்டும் என்று ஆசைப்படவில்லை. அன்றைய தினம் திரு. நல்லசிவன் அவர்கள் அதிக நேரம் எடுத்துக்கொண்டு எங்கள் கட்சியைப்பற்றி விமர்சனம் செய்தார். அவர் இப்போது இங்கே இல்லை என்பதால் அதோடு விட்டுவிடுகிறேன். எங்கள் கட்சியைப் பொறுத்தவரையில் எங்கள் கட்சிக் கொள்கையில் உறுதியாக இருக்கிறோம், எதையும் விட்டுவிடவில்லை என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. ஜி. சுவாமிநாதன்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. இராதா அவர்கள் பேசுவார் என்று தெரிந்திருந்தால், திரு. நல்லசிவன் அவர்கள் அவைக்கு வந்திருப்பார்.

**திரு. எஸ். ஆர். இராதா:** எனவேதான் சொல்லிக்கொள்கிறேன், எங்கள் கட்சியைப் பொறுத்தவரையில், நாங்கள் யாருக்கும் பயந்துபோய் எந்தக் கொள்கையையும் விட்டுவிடவில்லை. இதையே நான் வேறு விதமாகச் சொன்னால், கோபப்படுவார்கள் என்பதால் சொல்லவில்லை,





**மாண்புமிகு மேலவைத் தலைவர்:** இன்னும் கோபம் வருகிறமாதிரி எதையும் சொல்லவேண்டாம். இப்போதே நேரம் அதிகமாகிவிட்டது.

**திரு. எஸ். ஆர். இராதா:** அரசியல் ரீதியாக விமர்சனம் செய்வதைத் தவறு என்று நான் சொல்லவில்லை. ஆனால் நாங்கள் கொள்கையிலிருந்து மாறிவிட்டோமா என்றால் இல்லை. இந்திரா காங்கிரஸ் கட்சியைப் பொறுத்தவரை. எங்கள் கட்சி என்ன நிலை எடுக்கிறது என்பதைக் குறித்து கம்யூனிஸ்ட் கட்சியைச் சார்ந்த திரு. மாணிக்கம் அவர்களும் திரு. நல்லசிவன் அவர்களும் பாராட்டுகிற நிலைமையை நாங்கள் வரவேற்கிறோம். இதற்காகத்தான் கடந்த முறை திண்டுக்கல் தேர்தலின்போது நாங்கள் மிகப் பெரிய முயற்சியை மேற்கொண்டோம். அது அகில இந்திய ரீதியில் எங்கள் புரட்சித் தலைவர் அவர்களுக்குக் கிடைத்த பெருமையும் வெற்றியுமாகும் அது. இரண்டு கம்யூனிஸ்ட் கட்சிகளும் ஒன்று சேரமுடியாது என்ற நிலையில் இருந்தபோது, அந்தத் தேர்தலின்போது இரண்டு கட்சிகளையும் சேர்த்துக் காட்டிய பெருமை இந்தியாவிலேயே புரட்சித் தலைவர் அவர்களுக்குத்தான் உண்டு. அந்த உணர்வோடுதான் இப்போதும் நான் பேசுகிறேன். அதனால்தான் சொல்லுகிறேன்.

(பிற்பகல் 12-40)

நிச்சயமாக நாங்கள் தவற மாட்டோம். யாராவது எங்களைத் தவறான வழிக்கு இழுக்க வேண்டுமென்று நினைத்தால், அவர்கள்தான் தவறுவார்கள். நாங்கள் தவறமாட்டோம். மாண்புமிகு உறுப்பினர் திரு. வீராசாமி அவர்கள் அவையில் இருப்பார் என்று எதிர்பார்த்தேன், போய்விட்டார். திராவிட முன்னேற்றக் கழகத்தில் இருந்த அவர் இப்போது * * *

**மாண்புமிகு மேலவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் அதிகமான நேரத்தை எடுத்துக்கொள்ளுவதற்காக தந்திரமாக மற்ற உறுப்பினர்களை இணைத்துக்கொள்ளுகிறார்கள். போதும். சீக்கிரமாக முடிக்க வேண்டும்.

**திரு. ம. சங்கரலிங்கம்:** திரு. வீராசாமி இப்போதும் எங்கள் பக்கம்தான் இருக்கிறார். அவர் * * * என்று சொல்வதால் செய்தித்தாள்களில் தவறாக வெளி வந்துவிடும். ஆகவே அவர் இங்கேதான் இருக்கிறார் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர்:** அவையிலே இல்லையென்று சொன்னார்.

**திரு. ப. மாணிக்கம்:** தலைவர் அவர்களே ஒருவர் ஒரு கட்சியில் இருக்கிறபோது அவர் * * * என்று சொன்னால், அது தவறாக வெளியே வெளியிடப்படும்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர்:** அது அகற்றப்படுகிறது.

---

* * * தலைவரின் ஆணைப்படி நீக்கப்பட்டது.

வேண்டும் என்ற கண்ணோட்டத்தின் அடிப்படையில், நகரவைப் பள்ளி களையும், மாநகராட்சிப் பள்ளிகளையும் கல்வித் துறையின் கீழ் கொண்டு வருவது சாலச் சிறந்ததாக இருக்கும். அந்தக் கருத்தின் அடிப்படையிலே தான் இந்தக் கேள்வி எழுப்பப்பட்டது. இப்போது அதைச் செய்யும் எண்ணம் இல்லாவிட்டாலும், பிற்பாடாவது இந்தக் கருத்தை அரசு பரி சீலனை செய்யுமா?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** மாண்புமிகு தலைவர் அவர்களே, இது குறித்து இரண்டு விதமான கருத்துக்கள் இருக்கின்றன. அரசாங்கப் பள்ளிகளாக இருப்பதைவிட, நகரவைப் பள்ளிகளாக இருப்பதால், அந்தப் பள்ளிகள் நகரவையின் நிர்வாகத்தில் நேரடிப் பார்வையில் இருக்கின்றன. அந்தக் காரணத்தால் அப்பள்ளிகள் சிறந்த முறையில் நடக்கும் என்ற அபிப்பிராயம் இருக்கிறது. ஆகவே ஒரேவிதமான அபிப்பிராயம் இருப்பதாக நினைத்துக்கொண்டு நாம் பேச முடியாது. இரண்டுவிதமான அபிப்பி ராயங்கள் இருந்தாலும்கூட, இப்போது நகரவைகள் நடத்திக்கொண்டு வருகின்ற பள்ளிகளை எடுத்து நடத்துகின்ற உத்தேசம் அரசுக்கு இல்லை.

THIRU A. R. DAMODARAN: Sir, may I request the Hon. Minister at least to increase the grant from 66-2|3 per cent to 90 per cent because elementary education is looked after by the Municipalities and that is the main source of expenditure. Would the Government find it possible at least to increase the grant from 66-2|3 per cent to 90 per cent ?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** அதிலே இன்னொன்றைச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். முனிசிபாலிட்டியின் அதிகார வரம்பு என்று பார்க்கின்றபோது, அவர்கள் எலிமெண்டரி எஜுகேஷன் வரைதான் நடத்த வேண்டும். உயர்நிலைப் பள்ளிகள், மேல்நிலைப் பள்ளிகள் இவை களை நடத்துவதற்கான அதிகாரம் அவர்களுக்குத் தரப்பட்டிருக்கின்ற அதிகார வரம்பிற்குள் இல்லை. தொடக்கப் பள்ளியை நகரவை நிர்வாகம் நிர்வகிப்பதற்கான வகையிலே அதன் நிதியைப் பயன்படுத்திவிட்டு, மீதிக்கு முழு மானியம் கேட்கின்ற நிலைமைகள் இருந்து கொண்டிருக்கின்றன. அவர் களுக்கு இருக்கின்ற நிதியைக் கொண்டு நடத்த முடியாது என்று சொல்லி 17 பள்ளிகளை அரசாங்கத்திடம் தந்திருக்கிறார்கள். அந்த 17 பள்ளி களைத் தனியாக ஏற்று அரசே நடத்திக்கொண்டிருக்கிறது. இதுதான் இப்போதுள்ள நிலைமை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.



**திரு. சி.ரா. லெட்சுமிகாந்தன் :** நடத்த முடியாது என்று சொல்லி 17 பள்ளிகளை ஏற்கெனவே கல்வித் துறை எடுத்து நடத்தி வருகிறது. வேறு சில நகராவைகள் கூட பள்ளிகளை நடத்த முடியாது என்று தீர்மானம் போட்டு அரசுக்கு அனுப்பியிருப்பதாகத் தெரிய வருகிறது. அது உண்மை தானா? இப்படி ஒவ்வொரு நகரவையும் நடத்த முடியவில்லை என்று சொல்லும்போது, கல்வித் துறை எடுத்துக் கொள்வது என்ற நிலைமை இருக் கிறது. ஒரு சீரான நிர்வாகம் நடப்பதற்கும் அந்தப் பள்ளிகளை உள்ளாட்சித் துறையிலிருந்து கல்வித் துறைக்கு மாற்ற வேண்டும். அப்படி நடந்தால் பிரச்சினையே இல்லை. அந்த அடிப்படையிலே உள்ளாட்சித் துறையிலே உள்ள ஆசிரியர்களையும், பள்ளிக்கூடங்களையும் கல்வித் துறையின் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வருகின்ற ஒரு செயற்குறிப்பை அரசு அறிவித்து இதையும் சேர்த்துப் பரிசீலிக்குமா?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** தங்களாலே குறிப்பிட்ட பள்ளி களை நடத்த முடியவில்லை என்று அரசுக்கு எழுதி அனுப்பினார்கள் என்றால், அதை அரசு நிச்சயம் பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. ம. சங்கரலிங்கம் :** உள்ளாட்சித் துறையினுடைய அதிகாரவரம் பிற்குள் ஆரம்பக் கல்வி வருகிறது. அந்த ஆரம்பக் கல்வி நிறுவனங்களில் பணி புரிகின்ற ஆசிரியர்களை அரசு ஆசிரியர்களாக ஆக்க செயற்குறிப்பு அமுல்படுத்திக் கொண்டிருக்கின்ற காலத்தில், அந்தப் பள்ளிகளை உள்ளாட்சித் துறையின் கட்டுப்பாட்டுக்குள் உட்படுத்தினால், நிர்வாகம் சீராக அமையாது. அந்த நகராட்சிப் பள்ளிகளையும், மேல்நிலைப் பள்ளி களையும், உயர்நிலைப் பள்ளிகளையும் அரசே எடுத்து நடத்துவதற்குரிய ஆய்வு முறைகளை அரசு மேற்கொள்ளுமா?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** எனக்குத் தெரிந்த அளவில், கோவை, சேலம், திருப்பூர், பொள்ளாச்சி போன்ற சில இடங்களில் நடத்தப் படுகின்ற பள்ளிகள் சிறப்பாக நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. ஆகவே தான் அதிலே நாம் சிறிது யோசனை செய்து முடிவெடுக்க வேண்டியவர் களாக இருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**டாக்டர் இரா. சனார்த்தனம் :** மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இப்போது குறிப்பிட்டுச் சொன்னார்கள். இப்போது அரசே ஏற்றுக் கொள்கின்ற நிலையில் கொடைக்கானல் டவுன்சிப் பள்ளி இருக்கிறது என்ப

நால், அந்தப் பள்ளியை நடத்துகின்றவர்கள் அதை அரசு நடத்த வேண்டும் என்று விரும்புகிறார்கள். அதைப்பற்றி அரசு ஆய்வு செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** இப்போது கொடைக்கானல் பள்ளியை அரசு எடுத்து நடத்த வேண்டும் என்று விரும்புவதாகச் சொல்கிறார்கள். அதை அரசு நிச்சயம் பரிசீலிக்க வேண்டியதுதான். ஆனால் ஆசிரியர்களைக் கொடைக்கானலுக்குப் போய் வேலை செய்ய வேண்டும் என்று சொன்னால், அங்கே யாரும் போக விரும்புவதில்லை. வால் பாறைக்கும் அதே கதிதான் இருக்கிறது. ஏற்காட்டிற்கும் அதே கதிதான். ஆகவே இதுபோன்ற இடங்களிலே இருக்கின்ற பள்ளிகளை அரசின் முழு நிர்வாகத்தில் வைத்தால், அந்தப் பள்ளிகளுக்கு ஆசிரியர்களைப் போடுகின்ற போது அங்கு போவதைத் தவிர்க்க கூடுமானவரையில் அவர்கள் விடுமுறை எடுத்துக்கொண்டு போய்விடுகிறார்கள். இந்த நிலையில் அங்கே படித்துக் கொண்டிருக்கின்ற பிள்ளைகள் படிக்க முடியாமல் இருக்கிறது. ஆகவே அந்தப் பள்ளிகள் தனியார் நிர்வாகத்திலே இருந்தால், அந்த மாறுதல் பிரச்சினை அந்த நிர்வாகத்தினருக்குப் போய்ச் சேரும். அவர்கள் அங்கு பணி புரிபவர்களை வைத்து நடத்திக்கொள்வார்கள். இருந்தாலும் அவர்களிடமிருந்து அப்படி ஒரு கோரிக்கை வருமானால், அதைப் பரிசீலனை செய்யக் கடமைப்பட்டிருக்கிறோம்.

**திரு. செ. முத்துசாமி :** உள்ளாட்சித் துறை நிறுவனங்களின் அதிகாரம் ஒரு குறிப்பிட்ட எல்லைக்குள் இருக்கிறது. அவர்களால் தேர்ந்தெடுக்கப் பட்டு வரக்கூடியவர்கள், அங்குள்ளவர்களின் விருப்பு வெறுப்புகளுக்கு உட்பட்டவர்களாக இருக்கிறார்கள். அதிலே குறுக்கீடுகள் வருகின்றன. அந்த நிர்வாகத்தில் அரசியல் தலையீடுகள், பிரதேசத் தலையீடுகள் எல்லாம் இருக்கின்றன. இதையெல்லாம் உடனடியாகத் தவிர்க்கக்கூடிய அளவில், உள்ளாட்சித் துறையில் உள்ள பள்ளிகளை ஏற்றுக்கொள்கின்ற கொள்கையை ஏற்று, இந்த நகரவைப் பள்ளிகளையும் அரசே ஏற்று ஒரே சீரான கல்வியை உருவாக்க முன்வருமா?

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** ஒரேவிதமான கேள்வியைச் சுற்றிச் சுற்றி உறுப்பினர் அவர்கள் கேட்கிறார்கள்.



1981 பிப்ரவரி 10]

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** இந்தப் பிரச்சினையை இரண்டு கோணங்களில் பார்க்கலாம். ஒன்று ஆசிரியர்கள் நிலை. இன்னொன்று மாணவர்களின் நிலை. ஆக இரண்டுக்கும் பொதுவாக வைத்துத்தான் அரசு முடிவு எடுக்க வேண்டியிருக்கும். ஆசிரியர்களுக்கு மட்டும் நன்மையா தீமையா என்று நாம் பார்க்க முடியாது என்பதைத் தெரிவித்துக் கொள் கிறேன்.

**திரு. க. மீனாட்சிசுந்தரம்:** உள்ளாட்சித் துறையிலே இருக்கக்கூடிய பள்ளிகளை இந்த அரசு ஏற்று நடத்துவதற்கு செயற்குறிப்பு தயாராகி இருக் கிறது. வருங்காலத்தில் அவைகள் கல்வித் துறை நிர்வாகத்தில் வருகின்ற சூழ்நிலைகள் இருக்கின்றன என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உணர்வார்கள். இந்த நிலைமையிலே, கோவை, சேலம் போன்ற பகுதியில் உள்ள பள்ளிகள் மிகச் சிறப்பாக நடக்கின்றன என்று சொன்னார்கள். நான் ஒரு உதாரணம் சொல்கிறேன். தஞ்சைப் பகுதியிலே உள்ள சில நகரவைப் பள்ளி ஆசிரியர்களுக்குச் சம்பளமே மாத இறுதியிலே தாமதமாகக் கொடுக்கப்பட்டிருக்கிறது. அந்த அளவுக்கு அந்த நகராட்சிகள் நோய்வாய்ப் பட்டிருக்கின்றன. இந்த நகராட்சிப் பள்ளிகளை இப்போது இல்லாவிட் டாலும் வருங்காலத்திலேயாவது அரசு எடுத்துக்கொள்ளுமா? நகரவைப் பள்ளிகளை அரசு ஏற்று நடத்த நடவடிக்கை எடுக்குமா என்று கேட்டுக் கொள்கிறேன்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர்:** உறுப்பினர் திரும்பவும் அதே கேள்வி யைக் கேட்கிறார்கள். அவையில் நேரம் எடுத்துக்கொள்வதற்கு ஒரு நியாயம் வேண்டாமா? ஒரே கேள்வியை ஒவ்வொருவரும் திரும்பத் திரும்பக் கேட்கிறார்கள்.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** ஒரு நகரவை பள்ளிக்கூடத்தை நடத்த முடியாமல் இருக்குமானால், அதைக் குறித்து அரசாங்கத்திற்கு வேண்டுகோள் விடுவார்களானால், அதை நிச்சயமாக அரசு பரிசீலிக்கும்.

(முற்பகல் 10–40)

**திரு. பா. ரா. தாமஸ் :** ஏற்கெனவே அரசு மேற்கொண்டுள்ள 17 பள்ளி களின் ஆசிரியர்களுக்கும், அலுவலர்களுக்கும் சில பாதிப்புகள் ஏற்பட்டிருக் கின்றன. குறிப்பாக அவர்கள் முன்னுரிமைப் பட்டியலைக் குறித்து குறை பாடு இருக்கிறதென்று சொல்லப்படுகிறது. அது குறித்து என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது?

மனுக்களுக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டு வருவதாலும், தேவைப்படும் நிதி அளவையோ அல்லது இவ்வளவு செலவாகும் என்பதையோ முன்கூட்டி நிர்ணயிக்க முடியவில்லை.

இந்நிலையில், நடப்பு நிதியாண்டில் ஒதுக்கப்பெற்ற நிதி (ரூபாய் 500 இலட்சம்)-க்கும் மேலாக செலவினம், டிசம்பர் மாத இடைப்பகுதியிலேயே உயர்ந்து விட்டது. ஆகையால், அரசின் ஒட்டுமொத்த நிதி நிலையைக் கருதி, இத்திட்டத்தின்கீழ் தொடர்ந்து செலவினம் செய்வது தற்காலிகமாக நிறுத்தப்பட்டுள்ளது. வரும் நிதியாண்டு வரவு செலவுத் திட்டம் சமர்ப்பிக்கப்பட்டவுடன், மேற்கண்ட தடையால் பாதிக்கப்பட்டுள்ளவர்களுக்கு முன்னுரிமை அடிப்படையில் விரைந்து கடனுதவி அளிக்கத் தேவையான நடவடிக்கை எடுக்கப்படும்.

அனைத்திந்திய பணி ( All India Services )-ஐப் பொறுத்தவரையில் மத்திய அரசு இத்திட்டத்தின்கீழ் நிதி உதவி அளிப்பதால், அவர்களுக்கு அளிக்கும் கடன்மீது தடை உத்தரவு விதிக்கப்படவில்லை.

## தமிழ் நாடு சட்டமன்ற மேலவை.

---

செவ்வாய்க்கிழமை, 1981 பிப்ரவரி 10.

சென்னை, செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள மேலவை மண்டபத்தில் முற்பகல் 10-30 மணியளவில் மாண்புமிகு மேலவைத் தலைவர் (டாக்டர் ம.பொ. சிவஞானம்) அவர்கள் தலைமையில் அவை கூடியது.

### 1. வினாக்கள்—விடைகள்.

### உடுக்குறியிட்ட வினாக்கள்.

### நகராவை உயர்நிலைப் பள்ளிகள்.

*61 வினா.—திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன்: மாண்புமிகு கல்வியமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) நகராவை உயர்நிலைப் பள்ளிகளின் ஆசிரியர் ஊதியத்திற்கான செலவில், எத்தனை சதவிகிதத்தை அரசு ஏற்றுக் கொள்ளுகிறது?

(இ) நகராவை உயர்நிலைப் பள்ளிகள் அனைத்தையும் அரசே மேற்கொள்ளும் செயற் குறிப்பு ஏதும் அரசிடம் உள்ளதா?

(உ) ஆம் எனில், அது தற்பொழுது எந்நிலையில் உள்ளது?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: (அ) நகராவை உயர்நிலைப் பள்ளி ஆசிரியர்களின் ஊதியம், பஞ்சப்படி இவற்றுக்காகும் செலவில் 66 2/3 விழுக்காட்டை அரசு ஏற்றுக்கொள்கிறது.

(இ) இல்லை.

(உ) இக் கேள்விக்கு இடமில்லை.

திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன்: மாண்புமிகு தலைவர் அவர்களே, 2/3 பகுதியை அரசே உள்ளாட்சித் துறையின் கட்டுப்பாட்டுக்குள் இருக்கின்ற கல்வி நிறுவனங்களுக்கு மானியமாகக் கொடுக்கிறது. ஆக மீதம் உள்ள மூன்றில் ஒரு பகுதி அங்கே வருகின்ற வருமானம் மூலம் சரிக்கட்டப்படுகின்றது. எப்படிப் பார்த்தாலும் மக்களுடைய வரிப் பணத்தில்தான் நகராவைப் பள்ளிகள் நடக்கின்றன. ஆகவே ஒரு சீரான நிர்வாகம் ஏற்பட

[1981 பிப்ரவரி 10

ஆங்கிலத்தைப் பயிற்று மொழியாகக் கொண்டு படிக்கக்கூடிய வாய்ப்பை ஏற்படுத்தி, ஒவ்வொரு வகுப்பிலும் சில பிரிவுகளை ஏற்படுத்தியிருக்கிறார்கள். ஆனால் கிராம மக்களுக்கு ஆங்கிலத்தைப் பயிற்று மொழியாகக் கொண்டு படிக்கும் வாய்ப்பு கிடைக்கவில்லை. . இது என்ன நியாயமென்று கிராமங்களில் உள்ளவர்கள் பிரச்சினையைக் கிளப்புகிறார்கள். இப்படிப்பட்ட நிலையில், அரசின் கொள்கை எல்லா இடங்களிலும் ஒன்றுதான் என்றிருந்தால், அதை நான் பாராட்டுவேன். ஆனால் நகரங்களில் ஒரு கொள்கை என்றும் கிராமங்களில் ஒரு கொள்கை என்றும் இல்லாமல், கிராமங்களில் உள்ள பள்ளிகளிலும் ஆங்கிலத்தைப் பயிற்று மொழியாகக் கொண்டு படிக்கத் தக்க அளவில் பிரிவுகளைத் துவக்க அரசு ஆலோசிக்குமா ?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** ஆங்கிலம் தெரிய வேண்டும், படிக்க வேண்டுமென்ற காரணத்தால்தான், ஆங்கிலத்தைக் கட்டாயமாகச் சொல்லிக் கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள். நான் முன்னாலேயே தெரிவித்துள்ளதுபோல, ஆங்கிலம் ஒன்றுதான் கட்டாயப் பாடமாக இருக்கிறது. ஆங்கிலம் படிக்காமல் யாரும் பட்டம்பெற முடியாது. தமிழ் படிக்காமல் பட்டம் பெற முடியும். இந்த முறையில் ஆங்கிலத்திற்கு நாம் மரியாதை தந்து கொண்டிருக்கிறோம். இப்போது 3-வது வகுப்பிலிருந்து சொல்லிக் கொடுக்கும் ஆங்கிலத்தை ஆசிரியர்கள் நல்ல முறையில் சொல்லிக் கொடுத்தால், மாண்புமிகு உறுப்பினர்கள் சொல்லும் குறைபாடு சமுதாயத்தில் இராது. எனவே குறைபாடு அங்கேதான் இருக்கிறதே தவிர, வேறு எங்குமல்ல. ஆங்கிலம், மொழி அறிவு பெறத்தான் இருக்கிறது. ஆங்கிலத்தில் பாடங்களைப் படிக்க வேண்டுமென்பதற்காக அல்ல. பிசிக்ஸ் கெமிஸ்ட்ரி போன்ற பாடங்களில் அறிவுத் திறன் பெறுவதற்கு தாய் மொழிதான் சிறந்தது, ஆங்கில மொழியல்ல என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** தலைவர் கேள்வி கேட்கக் கூடாது.

(முற்பகல் 10-50)

**திரு. செ. முத்துசாமி :** தமிழ் நாட்டிலுள்ள எல்லா உயர்நிலைப் பள்ளிகளிலும், மேல் நிலைப் பள்ளிகளிலும், எல்லாப் பாடங்களையும் ஆங்கிலத்தில் போதிக்கும் ஒரு பிரிவை உண்டாக்க வேண்டும் என்பது தான் மூலக் கேள்வியின் நோக்கமேயல்லாமல், ஆங்கிலத்திற்கு முக்கியத்துவம் கொடுக்க வேண்டும் என்பது கேள்வியின் நோக்கமல்ல. நகரத்தில் இப்போது ஆங்கிலத்தில் பாடங்களைப் படிக்க அதிகமாக வாய்ப்பிருக்கிறது. அல்லது நகரத்தில் அப்படிப்பட்ட வாய்ப்புகளை ஏற்படுத்தக் கூடிய சூழ்நிலைகளை அரசு அனுமதித்துக் கொண்டிருக்கிறது. கிராமத்திலும் எந்த விதமான வித்தியாசமு-



1981 பிப்ரவரி 10]

மின்றி இத்தகைய வாய்ப்புகளை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும் என்பது தான் என்னுடைய கேள்வி. இப்போது மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் சொன்ன கொள்கையை நான் வரவேற்கிறேன். தமிழ் எல்லா இடங்களிலும் இருக்க வேண்டுமென்ற அரசின் கொள்கையை நான் வரவேற்கிறேன். நான் சொல்ல வருவதெல்லாம் நகரத்துக்கும் கிராமத்திற்கும் அது போல் தனியார் பள்ளிக்கும் அரசுப் பள்ளிக்கும் இந்த விஷயத்தில் இப்போது அதிகமாக வேறுபாடு இருக்கிறது. இந்த வேறுபாடு இல்லாமல் சமநீதி வழங்க அரசு முன்வருமா ? குறிப்பாக உலகத் தமிழ் மாநாடு நடைபெற்றிருக்கும் இந்தச் சமயத்திலாவது சமநீதி வழங்க அரசு தயாரா ?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** தமிழக மாணவர்களுக்கு என்ன நீதியை அரசு வழங்க வேண்டுமோ அதை இப்போதே வழங்கியிருக்கிறோம். அதே சமயத்தில் தமிழ் பயிற்று மொழி மூலம் படிக்கின்ற மாணவர்கள் சிறந்த முறையில் அறிவு வளர்ச்சி பெறுபவர்களாக இருக்கிறார்கள் என்று தலை சிறந்த அறிஞர்களே கூறியிருக்கிறார்கள். அப்படி அறிஞர்கள் கூறியிருக்கின்ற கூற்று உண்மையாக இருக்குமானால், நிச்சயமாக தமிழ் பயிற்று மொழி மூலம் படித்து வருகின்ற மாணவர்கள் தான் மிகச் சிறந்த நிலைக்கு வருவார்கள் என்பதையும் நான் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

**திரு. க. இராமமூர்த்தி :** நகரங்களில் இன்றையதினம் ஆங்கில போதனா மொழிப் பள்ளிகள் தனியாரால் நிறைய நடத்தப்படுகின்றன. அத்தகைய பள்ளிகளில் வசதியும் வாய்ப்பும் உள்ளவர்கள் தங்கள் பிள்ளைகளைப் படிக்க வைக்கிறார்கள். அதன் காரணமாக அரசினுடைய மொழிக் கொள்கையை முழுமையாக நிறைவேற்ற முடியவில்லை. அது ஒருபுறம் இருக்க, ஆங்கிலத்தில் படிப்பவர்களுக்குத் தான் நிறைய வாய்ப்புகள் இருக்கின்றன என்ற ஒரு உணர்வு இருக்கிறது. அவர்களுக்குத் தான் அகில இந்திய ரீதியில் நடைபெறக் கூடிய பல்வேறு வேலைகளுக்கான வாய்ப்புகள் கிடைக்கின்ற நிலையும் இருக்கிறது. இத்தகைய நிலையைப் போக்க அரசு என்ன நடவடிக்கை எடுக்க இருக்கிறது ?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** அப்படிப்பட்ட ஓர் உணர்வு உண்மையிலேயே இருக்குமானால், ஆங்கிலப் பாட வகுப்புகளையெல்லாம் மூடுகின்ற முயற்சியில் உறுப்பினர்கள் ஈடுபட வேண்டியிருக்கும்.

**THIRU A. R. DAMODARAN:** Sir, in Sweden, in five years, the students learn to speak English as a second language. May I know from the Hon. Minister whether, in view of the real demand for a knowledge of English which he himself has accepted, if not as medium,

it would be possible to prescribe from the 6th Class to the 10th Class that English should be taught only by Branch XII Specialists of English Language ? If this reform could be introduces much of the controversy over the medium would die. May I know whether the Government will actively consider this proposal ?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** ஆங்கில மொழியைச் சொல்லித் தருகின்ற நாம் அதைச் சரியாகச் சொல்லித் தர வேண்டுமென்ற கருத்தின் அடிப்படையிலே தான் இந்தக் கேள்வி பிறப்பிக்கப்படுகிறது. இதில் நாங்கள் கவனம் செலுத்தி வருகிறோம். நல்ல ஆசிரியர்களைப் போட்டு அவர்களுக்குத் தனியாகப் பயிற்சி தருகிறோம். இன்னும் சொல்லப்போனால், ஒரு மொழியைப் படிக்க வேண்டுமென்று சொல்லுகின்ற நேரத்தில் அதிலுள்ள முதல் கவர்ச்சியே அதைப் பேசுவதில் தான் இருக்கிறது. பொதுவாக நாம் இப்போது ஆங்கிலம் சொல்லித் தருகிறோம். நல்ல முறையில் ஆங்கிலத்தில் பேசுவது எப்படி என்பதுபற்றி ஒரு டெஸ்ட் அல்லது சோதனையை நாம் வைக்கவில்லை. இப்போது பேசுவதற்கான வாய்ப்பு ,மாணவர்களுக்கு இல்லாததால், அதில் அவர்களுக்கு ஈடுபாடும் அவ்வளவாக இல்லை. ஆகவே எல்லாவற்றையும் சிந்தித்துப் பார்க்க வேண்டியவர்களாக இருக்கிறோம். அதோடு கூட, புதிதாக மொழியைச் சொல்லித் தருவதற்கு இப்போது 'லாங்குவேஜ் லேபரேட்டரி' என்று ஒன்று வந்திருக்கிறது, அதையும் நாம் பயன்படுத்தலாம். இதற்குச் செலவு அதிகமாகும். என்றாலும், இந்த யோசனையையும் மனதில் வைத்துக்கொண்டிருக்கிறோம். பல யோசனைகளைச் சீர்தூக்கிப் பார்த்து எந்த நல்ல முறையைப் பயன்படுத்தினால் நல்ல முறையில் மாணவர்களது திறனை வளர்க்க முடியும் என்பதையெல்லாம் பரிசீலித்துப் பார்த்து, அந்த வாய்ப்பைத் தர வேண்டும் என்பது தான் அரசின் எண்ணம். ஆகவே அது குறித்து அரசு பரிசீலிக்கும்.

**திரு. ம. சங்கரலிங்கம் :** ஆங்கிலம் படிப்பது வேறு. ஆங்கிலம் வழி பயில்வது வேறு. ஆங்கிலத்தைப் பயில்வதைப் பொறுத்தவரையில், தனியார்கள் வியாபார ரீதியில் அரசின் அனுமதியைப்பெற்று ஆங்கிலம் அறியாத பகுதிகளில் மிகுதியாக அதைப் பயன்படுத்திக் கொண்டிருக்கிறார்கள். அது தடை செய்யப்படுமா ?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** அத்தகைய தனியார் பள்ளிகளைத் தடை செய்வது மிகச் சுலபமான காரியம். ஆனால் பெரும்பான்மை மக்களுடைய விருப்பத்திற்கு எதிராக, ஆங்கிலம் பேசத் தெரிந்த மக்களுடைய விருப்பதற்கு எதிராக நாம் ஒரு காரியத்தைச் செய்தால், அதன் காரணமாக நாம் பல்வேறு தொல்லைகளை அடைய வேண்டியிருக்கும். இதையெல்லாம்





நாம் முதலில் மக்களிடம் சொல்லக்கடமைப் பட்டிருக்கிறோம். பொது மக்களுக்கு இதுபற்றிப் போதுமான விளக்கங்களையெல்லாம் சொன்ன பிறகு, மக்களுடைய உள்ளத்தில் இதுகுறித்து ஒரு நல்ல எண்ணம் உண்டான பிறகு, இத்தகைய முயற்சிகளை நாம் மேற்கொள்ளலாம்.

**திரு. ம. சங்கரலிங்கம் :** முன்பெல்லாம் ஆங்கிலோ-இந்தியன்ஸ் இருக்கும் இடங்களில் மட்டும் தான் ஆங்கிலப் பள்ளிகள் கொடுப்பது என்றும் மற்ற இடங்களுக்கு அரசு அனுமதி தராது என்றும் தடை விதித்திருந்தது. இப்போது எல்லா இடங்களிலும் அத்தகைய பள்ளிகள் வளர்ந்து பணம் படைத்தவர்கள் எல்லாம் தங்களுடைய பிள்ளைகளை அங்கு படிக்க வைக்கின்ற நிலையும், ஆங்கிலத்தின் மீது மோகம் ஏற்பட்டிருக்கக் கூடிய நிலையும் இருக்கிறது. ஆகவே இத்தகைய நிலையை மாற்றி தமிழ் வளர, வருங்காலச் சமுதாயம் தமிழில் படிக்க, தமிழைப் பாதுகாக்க இந்த அரசு முன்வருமா ?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** தாய்மொழி மூலம் படிக்கின்ற மாணவர்கள், உள்ளபடியே நல்ல முறையில் அறிவு வளர்ச்சி பெற்றவர்களாக ஆவார்கள் என்று அறிஞர்கள் சொல்லியிருக்கின்ற கருத்து உண்மையாக இருக்கும் என்கிற அடிப்படையில் தான், தமிழ் மூலம் மாணவர்கள் படிக்க வேண்டுமென்று நாம் சொல்லிக்கொண்டிருக்கிறோம். இப்போது கூட 12-வது வகுப்புவரை தமிழில் மாணவர்கள் படிக்கிறார்கள். இப்படித் தமிழில் படித்துத் தேர்ச்சி பெற்று வந்த பிறகு, அனுபவத்தில் பார்க்கிறபோது, தமிழில் படித்து வருபவர்களுக்கு என்ஜினியரிங் கல்லூரிகளிலும், மருத்துவக் கல்லூரிகளிலும் நிறைய இடம் கிடைக்கிறது என்கிற ஒரு நிலை வருமேயானால், உள்ளபடியே இதில் உண்மையான மாற்றத்தை ஏற்படுத்தக்கூடும். ஆகவே நாம் இந்தக் காரியத்தை வற்புறுத்துவோமானால், பொது மக்கள் எதிரான காரியங்களில் தான் ஈடுபடுவார்கள்.

**டாக்டர் இரா. சனார்த்தனம் :** ஆங்கிலத்திலே முழுமையாகப் படிக்கின்ற பள்ளிகளுக்குத் தடை விதிக்க முடியாது என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். ஆங்கிலத்தோடு தமிழ் அறிவையும் போதிய அளவு கொடுக்க அரசு முன்வருமா ? தமிழ் மூலம் பயிற்சி பெறுகின்ற வாய்ப்பு விரிவுபடுத்தப்படுமா ?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** பி.யு.சி.-யை ஒழித்து விட்டு 11-வது 12-வது வகுப்புகளை பள்ளிக்கூடத்திலேயே நாம் கொண்டு வந்து சேர்த்துள்ளோம். இப்போது அதிகமான பேர் தமிழ் மொழி மூலம் 12-வது வகுப்பு வரை படித்துக்கொண்டிருக்கிறார்கள். மேலும் மேலும் நாம் இப்படிக்

[1981 பிப்ரவரி 10

கொண்டுவர வேண்டியிருக்கிறது. பொது மக்களிடம் இருக்கும் எதிர்ப்பையும் தாங்கிக்கொண்டு இதைச் செய்துகொண்டிருக்கிறோம். பொது மக்களுடைய ஒத்துழைப்பு கிடைத்தால், நாம் இதை வெற்றிகரமாக இன்னும் நல்ல முறையில் செய்ய முடியும்.

**திரு. க. அருணாசலம் : தாய்மொழி மூலம் படிக்கின்ற மாணவர்களுக்கு அதிக அறிவு வளரும் என்பது உலக அறிஞர்களால் ஒப்புக்கொள்ளப்பட்ட உண்மை.** வேறு மொழிகளில் படிக்கிறவர்கள் மற்றவர்களைப் பின்பற்றுபவர்களாகத்தான் இருப்பார்கள். அப்படிப்பட்டவர்களுக்கு கிளார்க் வேலை செய்ய மட்டும் தான் தெரியும். அந்த அடிப்படையில் தாய்மொழி மூலம் படித்து வருபவர்களுக்குத் தேர்வுகளிலும், அரசு அலுவலகங்களிலும் முதலிடம் தரப்படும் என்கிற முறையில் அரசு இதுபற்றிப் பரிசீலனை செய்யுமா ?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** வேலை சம்பந்தப்பட்டவரை அந்தத் துறை அமைச்சரிடம் தான் கேட்க வேண்டும். தாய்மொழி மூலம் படிக்கின்றவர்கள் மற்றவர்களை விட அதிகமான மதிப்பெண்களைப் பெற முடியும், அந்த முறையில் அதிகமான வாய்ப்புக்களைப் பெற முடியும் என்று கல்வி அமைச்சர் என்ற முறையில் இக்கருத்தை நான் வற்புறுத்திக் கொண்டு வருகிறேன்.

## *B.T. Teachers Promoted to Government Colleges.*

* 64. *Q*.—THIRU D. SANTOSHAM and THIRU P. R. THOMAS: Will the Hon. the Minister for Education be pleased to state:

(*a*) whether B.T. Teachers of the former 'B' Wing Schools with Post-Graduate qualification, who were promoted to Government Colleges even eight or nine years ago, still remain with their services not regularised; and

(*b*) if so,, the steps proposed to be taken by the Government to regularise their services ?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : விவர அறிக்கை@ அவையின் வைக்கப்பட்டுள்ளது.**

@ 9 ஆம் பக்கத்தில் இணைப்பு ஆக அச்சிடப்பட்டுள்ளது.



1981 பிப்ரவரி 10]

திரு. பா. ரா. தாமஸ் : 1972-ஆம் ஆண்டில் வெளியிடப்பட்ட அரசு ஆணையின்படி இணைப்பு பூர்த்தியான உடனேயே இவர்கள் பணி வரன்முறைப் படுத்தப்படுவார்கள் என்று சொல்லியிருந்தும் 9 ஆண்டுகளாக அவர்களுக்கு ஊதிய உயர்வு வழங்கப்படவில்லை. அதேபோல் டியூட்டர்கள், டெமான்ஸ்ட்டிரேட்டர்கள் 3 ஆண்டுக் காலம் பணியாற்றியிருந்தால், அவர்கள் உதவிப் பேராசிரியர்களாக மாற்றப்படலாம் என்றிருந்தும், அதுகுறித்து நடவடிக்கை எடுக்கப்படவில்லை. மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் இது குறித்து ஆணை பிறப்பித்து உதவிபுரிவார்களா ?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** இணைப்பு உத்தரவிட்ட பிறகு, பள்ளிக் கல்வித் துறையிலே இவர்களை வரன்முறைப்படுத்த வேண்டும். பிறகு கல்லூரிக் கல்வித் துறையிலே வரன்முறைப்படுத்த வேண்டும். அதற்குப் பிறகு தான் உத்தரவு போட வேண்டியிருக்கும். இதில் காலதாமதம் ஏற்படுகிறது என்பது தான் மாண்புமிகு உறுப்பினருடைய உணர்வாக இருக்கும் என்று நினைக்கிறேன். அந்தக் காலதாமதத்தைத் தவிர்க்கும் வகையில் அரசு விரைவில் நடவடிக்கை எடுக்கும்.

(முற்பகல் 11-00)

திரு. ம. சங்கரலிங்கம் : 'பி' பிரிவு பள்ளியும், 'ஏ' பிரிவு பள்ளியும் இணைப்பு பற்றிய ஆணை பிறப்பிப்பதற்குக் காலதாமதம் ஏற்பட்டது. 'பி' பிரிவு பள்ளிகளை அரசுப் பள்ளிகளாக ஏற்றது 1970-லே நடைபெற்றது. ஆசிரியர்களிடையே அவர்களுடைய சீனியாரிட்டி பட்டியல் தயாரிப்பதற்காகத் தான் இவ்வளவு காலதாமதம் ஏற்பட்டது. 'ஏ' பிரிவு பள்ளிகளிலிருந்து அரசுக் கல்லூரிக்கு வருகிறவர்களை 39-(ஏ)-ல் எடுத்து regularise பண்ணுகிறார்கள். 'பி' பிரிவு பள்ளிகளிலிருந்து வருகின்ற ஆசிரியர்களை 10-(ஏ) (1) என்ற விதிப்படி எடுத்து அவர்களை regularise செய்வதில்லை. ஆகவே, கல்லூரி ஆசிரியர்களுக்குள்ள விதிமுறைகளின்படி அவர்களின் பணியையும் அரசு வரன்முறைப்படுத்துமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** 'பி' பிரிவு பள்ளிகளிலேயிருந்து கல்லூரிக்கு வருபவர்கள் அந்த அடிப்படையிலேதான் கல்லூரிக்கு வருகிறார்கள். 'ஏ' பிரிவு, 'பி' பிரிவு இரண்டையும் ஒன்றாக இணைத்து, 'பி' பிரிவு ஆசிரியர்களுடைய பணி வரன்முறைப்படுத்தப்பட்ட பிறகுதான், கல்லூரியில் அவர்களுடைய பணி வரன்முறைப்படுத்தப்பட வேண்டும். இப்போது '

மாண்புமிகு மேலவைத் தலைவர் : வெளிப்படையாகவே நான் சொல்ல ஆசைப்படுகிறேன். ஆசிரியர் குறித்த பிரச்சினைபற்றி மாண்புமிகு உறுப்பினர் ஒருவர் ஒரு கேள்வி கேட்டால், அந்தக் கேள்வி பற்றிய துணைக் கேள்விகளை எல்லோரும் கேட்கிறார்கள். அதுவும் ஏறக்குறைய ஒருமாதிரியான கேள்விகளையே கேட்கிறார்கள். தினமும் இப்படியே நடக்கிறது. இப்படியென்றால் எப்படி அனுமதிக்க முடியும்?

திரு. செ. முத்துசாமி : தலைவர் அவர்களே, பல்வேறு கோணங்களில், பல்வேறு இஷ்யூக்கள் . . .

மாண்புமிகு மேலவைத் தலைவர் : பல்வேறு கோணமாகத்தான் இருக்கிறார்கள்.

திரு. செ. முத்துசாமி : ஒவ்வொரு உறுப்பினரும் வெவ்வேறு கேள்விகளைத்தான் கேட்கிறோம்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : நான் சொன்னது இல்லையென்று மறுக்கிறார்கள். . .

திரு. செ. முத்துசாமி : என்ன. . .

மாண்புமிகு மேலவைத் தலைவர் : ஒரு ஆசிரியர் பிரதிநிதி ஒரு கேள்வியைக் கேட்டால், உடனே மற்றவர்களும் அதேக் கேள்வியைத் திருப்பித் திருப்பிக் கேட்கிறார்கள். ஆகவே தான். . .

திரு. க. மீனாட்சிசுந்தரம் : இப்படிப்பட்ட எண்ணம் தலைவர் அவர்களுக்கு இருந்தால், அது நல்லதல்ல.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : ரொம்ப நல்லது.

திரு. செ. முத்துசாமி : இந்தப் பிரச்சினை நீண்டகாலமாக இருந்து வருகின்ற பிரச்சினை. 10 வருஷத்துக்கும் மேலாக இருக்கும் பிரச்சினை இது. இப்போது இருக்கின்ற டைரக்டர் மட்டத்திலே இப்பிரச்சினை சீக்கிரம் தீர்வுக்கு வர இயலாதென்றால் இதற்கென்று விசேஷமாக ஒரு டெப்யூட்டி டைரக்டரையும் ஜாயின்ட் டைரக்டரையும் போட்டு ஒரு குறிப்பிட்ட கால வரையறைக்குள் சீக்கிரமாக இந்தப் பிரச்சினையைத் தீர்க்க அரசு நடவடிக்கை எடுக்குமா?



மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : இதிலே பல்வேறு சங்கடங்கள் இருக்கின்றன. இந்த இணைப்புப் பிரச்சினையே 18 வருடங்களாகத் தீர்க்காமல் இருந்து, இப்போது நாங்கள் வந்த பிறகுதான் தீர்த்திருக்கிறோம். இதற்காக என்று தனி அதிகாரிகளைப் போட்டால் எப்படி? இருக்கும் நிலைமைகளை ஆராய்ந்து அரசு விரைவில் நடவடிக்கை எடுக்கும்.

(மீண்டும் உறுப்பினர் திரு. செ. முத்துசாமி அவர்கள் எழுந்தார்கள்.)

மாண்புமிகு மேலவைத் தலைவர் : விதிகளின்படி ஒரு கேள்வி கேட்டால், அந்தக் கேள்வி கேட்ட உறுப்பினர் 2 துணைக் கேள்விகளைக் கேட்கலாம் என்று இருக்கிறது. அசல் கேள்வி உறுப்பினர் அவர்களுடையதல்ல. ஏற்கெனவே ஒரு துணைக் கேள்விக்கு உறுப்பினர் அவர்களை அனுமதித்தேன் இப்படியே கேட்டால் எப்படி? உறுப்பினர் அவர்களுக்கு அனுமதிக்காதது போல கேட்டார்களே, நான் தலைவராக இருப்பதால் இப்படியெல்லாம் கேட்க வேண்டுமா?

திரு. செ. முத்துசாமி : தலைவர் அவர்களே, நான் ரொம்பவும் பணிவாகக் கேட்டுக் கொள்கிறேன். ஆசிரியர் தொகுதி உறுப்பினர்கள் ஒவ்வொருவரும் கேட்க வேண்டும் என்ற அடிப்படையில் கேட்கிறார்கள். மறுக்கும்போது என்னுடைய மரியாதைக்கும், கௌரவத்துக்கும் உரிய பிரச்சினையாக வருகிறது. மேலும், பல்வேறு கேள்விகளைக் கேட்பதன் மூலம் அவைகளுக்கு மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் பதில் சொல்லும்போது, எங்களுக்குப் போதிய விளக்கங்கள் கிடைக்கின்றன. தயவுசெய்து தவறாகப் புரிந்து கொள்ள வேண்டாம்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : இது ஒரு குற்றச்சாட்டு. தவறாகப் புரிந்துகொள்ளும் அளவுக்கு நான் அனுபவம் இல்லாதவன் அல்ல.

திரு. செ. முத்துசாமி : எங்களைக் குறைவுபடுத்த வேண்டும் என்ற அளவுக்கு நிலைமைகள் இருக்கின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

## *Appointment of Judicial Officers.*

* 65. Q.—THIRU P. R. THOMAS (on behalf of THIRU D. SANTOSHAM): Will the Hon. the Minister for Co-operation and Law be pleased to state:

[1981 பிப்ரவரி 10

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : அவர்களுக்குள்ள பிரச்சினைகளை அரசு முறையாகப் பரிசீலித்து, நடவடிக்கை எடுக்கும்.

திரு. எஸ். முத்து : மதுரை மாநகராட்சி 20 உயர்நிலைப் பள்ளிகளை நடத்துகின்றது. அந்தப் பள்ளிகளில் படிக்கின்ற மாணவர்களுக்குக் கல்லூரிகளில் இடம் கிடைப்பதில்லை. ஆகவே மாநகராட்சியே கல்லூரி நடத்த அரசு அனுமதிக்குமா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : கடந்த 3 ஆண்டுகளாக யாருக்குமே கல்லூரி நடத்த அனுமதி தரவில்லை. கல்லூரி ஆரம்பிக்கலாமா, வேண்டாமா என்பது குறித்து அரசு முடிவெடுக்கவில்லை. முடிவெடுத்த பிறகு, யாருக்கு அனுமதி தரலாமென்பதைப் பற்றி முடிவெடுக்கப்படும்.

தொழில் பிரிவு மாணவர்களுக்கு மாத மானியம்.

* 62 வினா.—திரு. ம. சங்கரலிங்கம்: மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) மேல்நிலைப் பள்ளிகளில் தொழில் பிரிவுகளில் பயிலும் மாணவர்களுக்கு, மாத மானியம் ( Stipend ) வழங்கும் செயற்குறிப்பு ஏதும் அரசிடம் உள்ளதா?

(இ) ஆம் எனில், அது தற்பொழுது எந்நிலையில் உள்ளது?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: (அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. ம. சங்கரலிங்கம் : மேல் நிலைப் பள்ளிகளில் பயிலும் மாணவர்கள், தொழிற் பிரிவில் அதிகமாகச் சேருவதில்லை என்ற குறைபாடு இருக்கிறது. தொழிற் பிரிவை ஊக்குவிப்பதுதான் மேல்நிலைக் கல்வியின் முக்கிய நோக்கமாகும். எனவே, தொழிற் கல்வி பயிலும் மாணவர்களுக்கு ஸ்டைபெண்ட் கொடுப்பதன் மூலம், அகெடமிக் ஸ்ட்ரீமில் அதிகமான மாணவர்கள் சேருவதைத் தவிர்த்து, தொழிற் பிரிவில் மாணவர்கள் அதிகமாகச் சேருவதற்கு அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தொழிற் பிரிவில் படிக்கின்ற மாணவர்களுக்கு ஸ்டைபெண்ட் கொடுக்கிற உத்தேசம் அரசுக்கில்லை. ஆனால் ஒவ்வொரு வகுப்பிலும், ஒரு மாணவரை மானிடர் என்ற முறையில் தேர்ந்தெடுத்து, அவர்களுக்கு 20 ரூபாய் வீதம் 10 மாதங்களுக்குக் கொடுக்கும் ஒரு



1981 பிப்ரவரி 10]

திட்டத்தை இப்போது அமல்படுத்துகிறோம். அதுபோக, இலவசமாகக் கல்வியைத் தந்துகொண்டிருக்கிறோம். அரசு இன்னொரு முயற்சியும் எடுத்துக்கொண்டிருக்கிறது. தொழிற் கல்வியை மேல்நிலைப் பள்ளிகளில் பெற்ற பிறகு, அந்த மாணவர்களுக்கு 'அப்ரென்டிஸ் ஆக்ட்'-ல் இருக்கும் நன்மைகள் கிடைக்கவும், அரசு முயற்சிகளை மேற்கொண்டிருக்கிறது. இது தான் தொழிற் கல்வி பயிலும் மாணவர்களுக்குச் சிறந்த ஊக்கம் அளிக்கக் கூடியதாக இருக்கும்.

திரு. ம. சங்கரலிங்கம்: தொழிற் பிரிவில் மாணவர்கள் அதிகமாகச் சேருவதற்கான ஊக்கத்தைத் தர வேண்டுமென்பதுதான் என்னுடைய கேள்வியின் முக்கியமான நோக்கமாகும். எனவே மேல்நிலைப் பள்ளிகளில் முதலாண்டு படிக்கும் மாணவர்களுக்கு உதவித் தொகை அளிக்காவிட்டாலும், இரண்டாம் ஆண்டில் அவர்களை ஏதாவது ஒரு தொழிற்சாலைக்கு, அப்ரென்டிஸ் போல அனுப்பி, அங்கு அவர்களுக்குக் கிடைக்கும் ஊதியத்தை, ஸ்டைபெண்ட் போன்று மாதாமாதம் கொடுக்கும் முறையில், ஒரு திட்டத்தை அரசு பரிசீலிக்குமா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : பணத்தைத் தந்து ஊக்கத்தை அளிப்பதென்பது மிக மிகச் சாதாரண நிலையிலிருந்து காரியங்களை ஆற்றுவதாகும். தொழிற் பிரிவு என்பது ஒரு தொழிலை மட்டும் கற்பிக்கும் பிரிவல்ல. அறுபதுக்கும் மேற்பட்ட தொழிற் பிரிவுகளை நாம் ஆரம்பித்திருக்கிறோம். ஒவ்வொரு பிரிவில் சேரும் மாணவர்களும், அதற்கேற்ற ஊக்கத்தைப் பெற்று, அதில் சேர வேண்டும். அப்படியில்லாமல், தொழிற் கல்வி படிக்கும் எல்லோருக்கும் பணத்தைத் தந்தால் மற்ற எல்லாவற்றுக்குமே ஊக்கத்தைத் தர, பணம் தரும் நிலையை ஏற்படுத்தும். எனவே இப்போது இது சாத்தியமானதல்ல.

திரு. பா. ஈா. தாமஸ்: தொழிற் பிரிவில் படிக்கும் மாணவர்கள் சிறப்புக் கட்டணம் கட்டத் தேவையில்லை என்ற சலுகையையாவது அரசு வழங்க முன்வருமா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: பிற்படுத்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்த மாணவர்கள், தாழ்த்தப்பட்ட ஆதித் திராவிடப் பிரிவைச் சேர்ந்த மாணவர்கள் ஆகியோர்களுக்குரிய சலுகைகளைத் தவிர வேறு சலுகைகள் அளிக்கும் உத்தேசமில்லை. இப்போது இருப்பதே போதுமானதாகும்.

(*a*) whether the Government are appointing Assistant Public Prosecutors-I both in Madras City and Mofussil, as Public Prosecutors and Additional Public Prosecutors;

(*b*) whether it is a fact that most of the Bar Associations in the State have objected to this step; and

(*c*) if so, the action proposed to be taken by the Government thereon?

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** (அ) கு.பு.கோ. 24 (6) பிரிவில் திருத்தப்பட்ட விதித்துறைகளின்படி, மிகவும் பணி மூப்பு நிலையிலுள்ள அரசு உதவி வழக்கு நடத்துநர்களிடையேயிருந்து (நிலை ), அரசு வழக்கு நடத்துநர்/அரசு கூடுதல்/ வழக்கு நடத்துநர் சிலரைச் சென்னை மாநகரிலும், வெளியூரிலும் தற்காலிக அடிப்படையில் அரசு நியமனம் செய்தது.

(இ) ஆம்.

(உ) வழக்கறிஞர் சங்க உறுப்பினர்களிடையேயிருந்து, அரசு வழக்கு நடத்துநர்/அரசு கூடுதல் வழக்கு நடத்துநரை நியமிக்க இயலும் வகையில், அரசு, கு.பு.கோ. 24 ஆம் பிரிவைத் திருத்தியுள்ளது.

**கிராமக் கூட்டுறவு சங்க செயலாளர்கள்.**

*** 66 வினா.**—திரு. ஓ. எஸ். துரைசாமி: மாண்புமிகு கூட்டுறவு, சட்ட அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டு கிறேன்—

(அ) மாவட்டங்களின் கிராமக் கூட்டுறவு சங்கங்களில் பணிபுரியும் சம்பள செயலாளர்களை, சம்பந்தப்பட்ட மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கிகள், தங்களின் ஊழியர்களாக ஏற்றுக்கொண்டதுபோல, பெரியார், கோயம் புத்தூர், நீலகிரி மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கிகள், இதுவரை அத்தகைய சங்கச் செயலாளர்களை தங்கள் ஊழியர்களாக ஏற்றுக்கொள்ளாமல் இருப்பது அரசுக்குத் தெரியுமா ?

(இ) ஆம் எனில், இவர்களை மேற்படி மூன்று மத்திய கூட்டுறவு வங்கிகளும் காலதாமதமின்றி தங்கள் ஊழியர்களாக ஏற்றுக்கொள்ள, அரசு உத்தரவு பிறப்பிக்குமா ?





**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** (அ) கிராமக் கூட்டுறவுச் சங்கங்களின் நியமிக்கப்பட்ட காரியதரிசிகளை எந்த ஒரு மத்திய கூட்டுறவு வங்கியும் அதன் ஊழியர்களாக ஏற்றுக்கொள்ளவில்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

**கலப்புத் திருமணத் தம்பதியர்களுடைய பிள்ளைகளுக்கு சலுகைகள்.**

*** 67 வினா.**—திரு. செ. முத்துசாமி & திரு. க. மீனாட்சிசுந்தரம்: மாண்புமிகு ஆதி திராவிட நலத்துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறோம்—

(அ) கலப்புத் திருமணத் தம்பதியர்களுடைய பிள்ளைகளுக்குக் கல்வி வசதி, வேலை வாய்ப்பு ஆகியவைகளில், பிற்பட்ட வகுப்பினர்களுக்கு வழங்கப்பட்டுள்ள சலுகைகளை வழங்கும் /செயற்குறிப்பு/ ஏதும் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(இ) இல்லை எனில், இதை அரசு பரிசீலிக்குமா ?

**மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி:** (அ) & (இ) பெரியார் நூற்றாண்டு விழா நிறைவு சொற்பொழிவில் 18—9—1978 அன்று மாலை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவித்த திட்டங்களில் ' தாழ்த்தப்பட்ட மலைவாழ் மக்களுக்கு அளிக்கப்படுவதுபோன்று கலப்புத் திருமணம் செய்து கொண்டவர்களின் குழந்தைகளுக்கும் கல்வி இதர சலுகைகள் அளிப்பதில் முன்னுரிமை வழங்கப்படும் ' என்பதும் ஒன்றாகும்.

கலப்புமணம் புரிந்தவர்களுக்குப் பிறக்கும் குழந்தைகளை தந்தையின் சாதிமதக் கோட்பாடு அல்லது தாயின் சாதிமதக் கோட்பாடு ஆகியவற்றில் எதனைப் பின்பற்றி அக்குழந்தை வளர்க்கப்படுவதாக பெற்றோரால் உறுதி மொழி தரப்படுகிறதோ அதன் அடிப்படையில் குழந்தையின் சாதி நிர்ணயம் செய்யப்படும் என்றும் மேலும் ஒரு குழந்தைக்கு அளிக்கப்படும் உறுதிமொழி மற்ற எல்லா குழந்தைகளுக்கும் பொருந்தும் என்றும் ஆணை உள்ளது. எனவே கலப்புமணம் புரிந்தவர்களுக்குப் பிறக்கும் குழந்தைகள் எந்த சாதி என உறுதி அளிக்கப்பட்டதோ (பிற்பட்ட வகுப்பு/தாழ்த்தப்பட்ட வகுப்பு முற்பட்ட வகுப்பு) அதன் அடிப்படையில் அரசு வழங்கும் கல்வி மற்றும் உபகாரச் சம்பளச் சலுகைகளைப் பெற தகுதியுடையவராவர்.

[1981 பிப்ரவரி 10

(இ) ஆம் எனில், பாடப்புத்தகங்கள் விரைவில் வழங்கப்பட அரசு எடுத்த நடவடிக்கை யாது ?

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி : (அ) மாவட்டக் கல்வி அலுவலரிடம் இருந்து தேவைப் பட்டியல் தாமதமாகக் கிடைக்கப் பெற்றதால் இலவசப் பாடப் புத்தகங்கள் வழங்குவதற்குக் கால தாமதம் ஏற்பட்டது.

(இ) பாடப்புத்தகங்கள் வழங்குவதில் ஏற்பட்ட தாமதம் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்ட உடனேயே மாவட்டக் கல்வி அலுவலரிடம் இருந்து தேவைப் பட்டியல் பெறப்பட்டு எல்லாக் கல்வி நிலையங்களுக்கும் இலவசப் பாடப் புத்தகங்கள் வழங்கப்பட்டுவிட்டன.

திரு. க. மீனாட்சிசுந்தரம் : இக்கேள்வி கேட்கப்பட்டு நீண்ட காலமாகிறது. இப்போதுதான் அதற்கான விடை கிடைத்திருக்கிறது. வினா எழுப்பிய நேரத்திலேயே இந்த விடை கிடைத்திருந்தால், மிகவும் பயனுடையதாக இருந்திருக்கும். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இவ்வினாவிற்குப் பதிலளிக்கும்போது, இத்தகைய காலதாமதம் ஏற்பட்டதற்குக் காரணம் கல்வி அலுவலர்களிடமிருந்து பெற வேண்டிய தேவைப்பட்டியல்கள் உரிய நேரத்தில் கிடைக்காமல் காலதாமதமாக வந்து சேர்ந்ததுதான் என்று சொல்லப்பட்டது. எனவே இத்தகைய கால தாமதங்களைத் தவிர்க்கும் வகையில் இனி எதிர் காலத்தில் கோடை விடுமுறைக் காலத்தின் இறுதியிலேயே அதாவது விடுமுறை கழிந்து ஜூன் முதல் தேதியே கல்வி அதிகாரிகள் தேவைப் பட்டியலை அனுப்பி வைக்க வேண்டும் என்று அரசு அவர்களுக்குக் கண்டிப்பான ஆணை பிறப்பித்து விரைவில் பாடப்புத்தகங்களை வழங்க முன்வருமா ?

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி : இது சம்பந்தமாக அனைத்து மாவட்டக் கல்வி அலுவலர்களும் 1981-82 ஆம் ஆண்டுக்குத் தேவையான தேவைப்பட்டியலை முன்கூட்டியே அனுப்பி வைக்க வேண்டுமென்று அண்மையில் கல்வித் துறைச் செயலாளர் கூட்டிய கூட்டத்தில் முடிவெடுக்கப்பட்டுள்ளது. இதன் காரணமாக உரிய காலத்தில் பாடப்புத்தகங்கள் வழங்கப்படுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

திரு. செ. முத்துசாமி : ஆதி திராவிட நலத் துறையைப் பொறுத்த வரையில், ஒசூர் பகுதியிலுள்ள மொழி சிறுபான்மையினர்—குறிப்பாக தெலுங்கு மொழி பேசுவோரின் குழந்தைகளுக்கு ஆண்டு முழுவதுமே



1981 பிப்ரவரி 10]

அவர்கள் மொழியில் பாடப்புத்தகம் வழங்கப்படவில்லை என்பதை அரசின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். அதன் காரணமாக என்னுடைய தொகுதியில் உள்ள அந்தச் சிறுபான்மை மொழியினர் தாங்கள் ஒதுக்கப்படுவது போன்று எண்ணுகிறார்கள். எனவே இத்தகைய உணர்வுகள் மொழி மைனாரிடியினரிடம் வளராமல் இருப்பதற்குரிய வகையில் உரிய நேரத்திலேயே பாடப் புத்தகங்களை வழங்குவதற்கு அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி : மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டது போன்ற குற்றச்சாட்டுகள் எதும் இதுவரை அரசின் கவனத்திற்கு வரவில்லை. இருந்தபோதிலும், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறியதைக் கருத்தில் கொண்டு அந்தப் பகுதியில் பாடப்புத்தகங்களை உரிய காலத்தில் வழங்குவதற்கு உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. ம. சங்கரலிங்கம் : இவ்வினாவில் ஆதிதிராவிடர் மற்றும் விமுக்க சாதி மாணவ மாணவியர் என்று வார்த்தைகள் காணப்படுகின்றன. அநேகமாக, "Denotified" என்ற வகுப்பினரை "முக்தி பெறுகிற ஜாதி முக்தி பெறாத ஜாதி" என்று புராண காலத்தில் உள்ளதைப்போல் இங்கே மொழி பெயர்த்திருக்கிறார்களோ என்று ஐயப்படுகிறேன். எனவே ஆதிதிராவிடர் மற்றும் "அறிவிக்கப்பட்ட சாதி" என்று திருத்துவதற்கு அரசு முன்வருமா என்று அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி : இதுபற்றி அரசு பரிசிலனை செய்யும்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : 29—1—1981 அன்றைய வினாப் பட்டியலிலிருந்து ஒத்திப் போடப்பட்ட வினாக்கள். வினா எண் 42.

## *Advocates' Chamber in Madurai.*

* 42 Q.—THIRU P. R. THOMAS (on behalf of THIRU D. SANTOSHAM): Will the Hon. the Minister for Co-operation and Law be pleased to state with reference to the answer given to Question No. 13 on the Floor of the Council on 1st September 1978:

(*a*) whether the present financial conditions permit the construction of Advocates' Chamber within the campus of the New Court Buildings, Madurai;

பிரிவு, 'பி' பிரிவு ஆசிரியர்களின் இணைப்பு ஏற்பட்டிருக்கிறது. இனிமேல் அந்தக் கல்லூரி ஆசிரியர்களின் பணி வரன்முறைப் படுத்தப்படட அதை விரைவுபடுத்த அரசு போதிய நடவடிக்கைகளை எடுக்கும்.

திரு. ம. சங்கரலிங்கம் : அவர்கள் 'பி' பிரிவு பள்ளிகளிலிருந்து சீனியாரிட்டிபடி கல்லூரிக்கு வருவதில்லை. யார் எம்.ஏ. தகுதி பெற்றிருந்தார்களோ அவர்களை எடுத்தோம். 'ஏ' பிரிவைப் பொறுத்தவரையிலும் அப்படித்தான் அவர்களும் சீனியாரிட்டிபடி. கல்லூரிக்கு வருவதில்லை. தகுதி அடிப்படையில்தான் அவர்களும் கல்லூரிகளில் நியமிக்கப்பட்டார்கள். ஆகவே, இப்போது கல்லூரிக் கல்வி இயக்குநர் அவர்கள் அந்த ஆசிரியர்களுடைய பணியை வரன்முறை செய்து அவர்களின் கல்லூரி சீனியாரிட்டியை நிர்ணயம் செய்வதிலே தடை இல்லையென்று நான் கருதுகிறேன். அரசு மீண்டும் பரிசீலனை செய்யுமா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லுகின்ற கருத்து புரிகிறது. ஆனால் என்னதான் இருந்தாலும், மற்ற 10-ஏ (1) போல இவர்கள் வருவதில்லை. அவர்கள் முதலிலே அரசுப் பள்ளிகளுக்கு வந்துதான் பின்னர் கல்லூரிகளுக்குள்ளே வர முடிகிறது. இருந்தாலும், இந்த நிலைமைகளையெல்லாம் அரசு பரிசீலிக்கும்.

திரு. செ. முத்துசாமி : 'பி' பிரிவிலிருந்து வந்திருப்பவர்கள் கூட பல ஆண்டுகாலமாக பணிபுரிந்திருக்கிறார்கள். ஒரு நிர்வாகத்திற்குள் வந்தால், அவர்களது பணியை 2 வருடங்களுக்குள் வரன்முறைப் படுத்தவேண்டும். 'ஏ' பிரிவிலிருந்து வந்த ஆசிரியர்களின் பணி வரன்முறைப் படுத்தப்படுகிறது என்று சொன்னால், 'பி' பிரிவிலிருந்து வந்திருக்கும் ஆசிரியர்களின் நிலைமையும் அதுவாகத்தான் இருக்க வேண்டும். சீனியாரிட்டியை நிர்ணயிப்பது தான் இப்போதிருக்கும் சிக்கல். ஆகவே, ஏற்கெனவே வந்திருப்பவர்களுக்கு, பணி வரன்முறைப் படுத்தப்படாமல் இருந்தாலும், அவர்களுக்கு ப்ரமோஷன் கிடைத்தால் என்ன சம்பளம் கிடைக்குமோ அந்தத் தொகையை அரசு அவர்களுக்கு நிர்ணயிக்குமா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : பணி வரன்முறைப் படுத்தப்பட்ட பிறகுதான் அவர்கள் முழுமைபெற்ற ஊழியர்களாக ஆகிறார்கள். இப்போது இரண்டு பிரிவினருக்கும் இடையே இணைப்பு ஏற்பட்டிருக்கிறது. அதற்குப் பிறகு அவர்களுடைய விவரங்கள் கல்லூரிக் கல்வித் துறைக்கு வரவேண்டும்.





காலதாமதத்திற்கான காரணங்களைப் பல முறை இந்த மன்றத்திலே விளக்கியிருக்கிறேன். இப்போது அந்த வேலைகள் முடிந்திருக்கின்றன. இனி மேலும், கால தாமதம் ஏற்படுவதைத் தவிர்த்து, அவர்களுடைய பணியை முறைப்படுத்த அரசு நடவடிக்கை எடுக்கும்.

திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் : இந்தப் பிரச்சினைக்கு முக்கியமான அடிப்படைக் காரணமே, பள்ளிக் கல்வித் துறையிலிருந்து இடைநிலை ஆசிரியர்கள், பட்டதாரி ஆசிரியர்கள், தலைமையாசிரியர்கள், தமிழாசிரியர்கள் என்று 4 பிரிவினர் பதவி உயர்வு பெற்று கல்லூரிக் கல்வித் துறைக்கு வந்திருக்கிறார்கள். இந்த 4 பிரிவுகளிலிருந்தும், வெவ்வேறு தேதிகளில் ஆசிரியர்கள் பதவி உயர்வு பெற்று வந்திருப்பதால், அவர்களுடைய பணி மூப்பினை நிர்ணயிக்குமாறு பள்ளிக் கல்வித் துறை, கல்லூரிக் கல்வித் துறையைக் கேட்டும், கல்லூரிக் கல்வித் துறை இன்னும் சரியான நடவடிக்கை எடுக்காமல் இருக்கிறது. பள்ளிக் கல்வித் துறை, கல்லூரிக் கல்வித் துறை ஆகிய இந்த இரண்டு துறைகளின் மூத்த அதிகாரிகளைக் கூட்டிவைத்துப் பேசி முடிவெடுத்தால், இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு காண முடியும் என்ற அடிப்படையிலே அரசு நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : காலதாமதமாகிறது என்ற ஒரு குறைபாட்டைத்தான் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அரசின் கவனத்திற்குக் கொண்டு வந்திருக்கிறார்கள். அதைத் தவிர்க்க அரசு தக்க நடவடிக்கை எடுக்கும்.

(திரு. செ. முத்துசாமி அவர்கள் துணைக் கேள்வி கேட்க எழுந்தார்.)

மாண்புமிகு மேலவைத் தலைவர் : ஏற்கெனவே அரை மணி நேரத்திற்கு மேலாகிவிட்டது. இனி, தயவு செய்து, அடுத்த கேள்விக்குப் போகலாம். சும்மா போட்டி போட்டுக்கொண்டு கேள்விகள் கேட்டால் எப்படி? எல்லா நேரத்தையும் இதற்காகவே எடுத்துக்கொண்டால் எப்படி?

திரு. செ. முத்துசாமி : மாண்புமிகு தலைவர் அவர்கள்தான் நேரத்தை ஒதுக்கித் தர வேண்டும். இப்படிப்பட்ட ஒரு சந்தர்ப்பத்திலேதான் இது போன்ற கேள்விகளைக் கேட்க முடிகிறது.

(b) if so, when the construction work will be taken up and completed; and

(c) if not, whether there is any possibility of the construction in the near future?

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :** இச் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளது.

**திரு. ம. சங்கரலிங்கம் :** வழக்குரைஞர்கள் தற்காலிகமாகத் தங்குவதற்கான இந்த வழக்குரைஞர்கள் மன்றம் கட்டுவதற்குரிய செயற்குறிப்பில் எவ்வளவு தொகை ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது? இந்த வழக்குரைஞர்கள் மன்றம் எப்போது—அதாவது எந்த ஆண்டில் முடிவடையும் என்று அரசு எதிர்பார்க்கிறது?

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :** இக்கட்டிடம் கட்டுவதற்கு என்று தனியாக நிதி ஒதுக்கீடு எதும் செய்யப்படவில்லை. ஆனால் அங்கே வழக்குரைஞர்களுக்கான மன்றம் மிகவும் அத்தியாவசியமாகத் தேவைப்படுகிறது என்று அரசு உணர்ந்திருப்பதன் அடிப்படையில் இப்பிரச்சினை பரிசீலிக்கப்பட்டு வருகிறது. நிதி நிலைக்கேற்பப் படிப்படியாக இது மேற்கொள்ளப்படும். மதுரையிலிருந்து வந்திருக்கும் இந்த கோரிக்கைக்கு முன்னுரிமை கொடுத்து உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. பா. ரா. தாமஸ் :** நீதிமன்றக் கட்டிட வளாகத்திற்குள் வழக்குரைஞர்கள் சரியான இடவசதி இல்லாமல் கஷ்டப்படுகிறார்கள். நிதி வசதி அதிகமாக ஒதுக்க முடியாத காரணம் இருந்தாலும்கூட, அக்கட்டிடத்திற்கு மேலேயே மாடியில் இந்த மன்றத்தைக் கட்டி அதில் வசதிகளைச் செய்து தர அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 11-20)

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :** இதற்கு நிதியாதாரத்தை ஏற்பாடு செய்வதற்காக "அட்கோ"வின் மூலமாகக் கடனுதவியைப் பெறலாம் என்று இருக்கிறோம். அரசாங்கத்திடமிருந்து சிறிது உதவி தந்து, மீதியை "அட்கோ" விடமிருந்து கடனுதவியாகப் பெற்று இதைச் செய்யலாம் என்றிருக்கிறோம். ஏனென்றால் மாதா மாதம் வாடகையாக வழக்கறிஞர்களிடமிருந்து பெறக்கூடிய வாய்ப்பு இருப்பதால், பல்வேறு மாவட்டங்களில் இது போன்ற நடவடிக்கையை எடுக்க அரசு பரிசீலித்து வருகிறது.



THIRU A. R. DAMODARAN: Sir, will the Government consider, because some of these advocates have plenty of money with them and they can give the same as deposits, inviting deposits from the Advocates, so that it may be adjusted in the rental which they would later on pay for the chambers? In view of the financial difficulties faced by the Government, this may also be considered.

THE HON. THIRU C. PONNAIYAN: I am very much doubtful whether the brilliant advocates would be willing to come forward with deposits. Anyhow I will consider this proposal.

*Judicial Officers under Suspension.*

*43. THIRU E. S. VENKATESAN: Will the Hon. the Minister for Co-operation and Law be pleased to state:

(a) the number of District Judges, Sub-Judges, District Munsifs, Additional First Class Magistrates and Judicial Second Class Magistrates who are under suspension, pending departmental enquiry; and

(b) the period they have been under suspension?

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :** (அ) துணை நீதிபதிகள் இருவர் தற்காலிகப் பணி நீக்கத்தில் உள்ளனர்.

(ஆ) ஒருவர் 23—11—1976-ல் இருந்தும், மற்றொருவர் 14—10—77-ல் இருந்தும் தற்காலிகப் பணி நீக்கத்தில் உள்ளனர்.

**திரு. ஈ. எஸ். வெங்கடேசன் :** 1976 ஆம் ஆண்டிலிருந்தே ஒருவர் தற்காலிகப் பணி நீக்கத்தில் இருக்கிறார். இவ்வளவு காலம் ஏன் அவர் பணி நீக்கத்தில் இருக்கிறார்? அவர் மீது உள்ள விசாரணையைச் சீக்கிரம் முடிக்க அரசால் ஏற்பாடு செய்யப்படுமா?

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :** பணி நீக்கம் செய்யப்பட்ட பிறகு விசாரணை நடந்து வருகிறது. இப்போது விசாரணை துரிதப்படுத்தப்பட்டு வருகிறது

**திரு. ஈ. எஸ். வெங்கடேசன் :** நீதித் துறை இரண்டாவது வகுப்பு மாஜிஸ்ட்ரேட்டுகளாகிய * * * என்பவர்கள் சாட்சியங்களாக வந்த பெண்

* * * தலைவரின் ஆணைப்படி நீக்கப்பட்டது.

களிடம் முறைகேடாக நடந்து கொண்டார்கள் என்ற புகார் அரசுக்கு வந்துள்ளதா? அப்படியானால் அவர்கள் மீது என்ன நடவடிக்கை எடுக்கப் பட்டது?

**திரு. ஏ. ஆர். தாமோதரன் :** ஜுடிஷியரியில் உள்ள ஒருவர் பெயரை 'மென்ஷன்' பண்ணலாமா என்று தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** மாண்புமிகு உறுப்பினர் கூறிய அந்தப் பகுதி அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. அதைத் திருத்தி மாண்புமிகு உறுப்பினர் கேட்கலாம்.

**திரு. ஈ. எஸ். வெங்கடேசன் :** சாட்சியங்களாக வந்த பெண்களிடம் சில மாஜிஸ்ட்ரேட்டுக்கள் தவறுதலாக நடந்துகொண்டார்கள் என்ற குற்றச் சாட்டு அரசுக்கு வந்திருக்கிறதா? வந்திருக்கிறதென்றால் அவர்கள் மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது?

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :** அரசுக்கு இது பற்றிய புகார் மனு ஒன்று வந்து அது உயர்நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்டு, உயர்நீதி மன்றத்தின் கீழ் செயல்படுகிற டைரக்டொரேட் ஆஃப் விஜிலென்ஸ் அண்டு ஆண்டிகரப்ஷன் பிரிவைச் சேர்ந்த விஜிலென்ஸ் செல் மூலமாக விசாரணை செய்யப்பட்டு அவர்கள் பேரில் பிரைமா ஃபேசி கேஸ் இருக்கிறதென்று கண்டறிந்த பிறகு, அவர்கள் இருவரும் தற்காலிகப் பணிநீக்கம் செய்யப் பட்டு, பிறகு அவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. அவர்கள் ரிவர்ட் செய்யப்பட்டு விட்டார்கள் என்பதால் பெயரைச் சொல்லுவதில் தவறு இல்லையென்று கருதுகிறேன். நாகர்கோவிலில் பணியாற்றிய இரண்டாம் வகுப்பு மாஜிஸ்ட்ரேட் * * * என்பவரும் சேலத்தில் பணியாற்றிய * * * என்பவரும் சாட்சியம் அளிக்க வந்த பெண்களிடம் தவறாக நடந்து கொண்டார்கள் என்ற குற்றச்சாட்டு அரசுக்கு வந்தவுடனே, உயர்நீதி மன்றத்திற்கு அனுப்பப்பட்டு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது.

THIRU A. R. DAMODARAN: Sir, if these Sub-Magistrates have been sent out from Magistracy because they have been misbehaving with the women witnesses, may I know how the problem is going to be solved by reverting them to other departments where equal opportunities will exist for molesting women?

---

* * * தலைவரின் ஆணைப்படி நீக்கப்பட்டது.



**மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :** அவர்கள் தற்காலிகமாக சப்-மாஜிஸ்ட்ரேட்டுக்களாகப் பணியாற்றிக் கொண்டிருந்தார்கள். அவர்கள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என்ற விதியின் அடிப்படையிலே அவர்கள் பேரண்ட் டிபார்ட்மெண்டுக்கு ரிவர்ட் செய்யப்பட்டு, பிறகு உடனடியாக சஸ்பெண்ட் செய்யப்பட்டு, வழக்குப் பதிவு செய்யப்பட்டு நடவடிக்கை எடுக்கப் பட்டு வருகிறது.

**திரு. க. இராமமூர்த்தி :** இது போன்ற விசாரணைக்கு ஆளான நீதிபதிகள் எத்தனை பேர் குற்றம் செய்யவில்லை என்று நிரூபிக்கப்பட்டு மீண்டும் வேலைக்குச் சென்றிருக்கிறார்கள்? எத்தனை பேர் குற்றத்திற்கு ஆளாகி பணிநீக்கம் செய்யப்பட்டிருக்கிறார்கள்?

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :** அது பற்றிய தகவல் தற்போது இல்லை. சப்-ஜட்ஜுகளைப் பொறுத்த வரையில் திரு. ரங்கநாதன், திரு. கணபதி ஆகிய இருவர் மீது உயர் நீதி மன்றம் முறையே இலஞ்சம் வாங்கியமை "இன் எஃபிசியன்சி" என்று குற்றம் சாட்டி அவர்களைப் பணியிலிருந்து நீக்க வேண்டுமென்று பரிந்துரை செய்திருப்பதால், நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கிறது. அதற்கடுத்தபடியாக சப்-மாஜிஸ்ட்ரேட்டுகள் இருவர், நாகர்கோவிலைச் சேர்ந்த திரு. * * * என்பவரும், சேலத்தைச் சேர்ந்த திரு. * * * என்பவரும் சாட்சி அளிக்க வந்த பெண்களிடம் தவறாக நடந்துகொண்டார்கள் என்று அரசுக்கு வந்த புகாரின் அடிப்படையில், விஜிலென்ஸ் விசாரணை செய்து பிரைமா ஃபேசி கேஸ் இருக்கிறதென்று தெரிந்த பிறகு, பணிநீக்கம் செய்யப் பட்டு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது.

**திரு. ம. சங்கரலிங்கம் :** சந்தேகத்திற்கு அப்பாற்பட்ட உயர்ந்த நிலையில் இருக்க வேண்டிய நீதிபதிகளில் பலர் பல தவறுகளைச் செய்கிறார்கள், பணம் பெற்றுக்கொண்டு பணம் கொடுப்பவர்களுக்குச் சாதகமாகத் தீர்ப்புகளை வழங்குகிறார்கள் என்ற குற்றச்சாட்டுக்கள் வருகிறபோது, அதைக் கடுமை யாக விசாரணை செய்து, கடுமையான தண்டனையைக் கொடுத்து நீதிபதி களுக்குரிய சிறப்பிடத்தைக் காப்பாற்ற அரசு தக்க நடவடிக்கையை எடுத்து, காலதாமதம் இல்லாமல் தீர்ப்பு வழங்கும் முறையை அரசு ஏற்படுத்துமா? தற்காலிகமாகப் பணிநீக்கம் செய்யப்பட்டு விசாரணை செய்யப்பட்ட நீதிபதி களில் எத்தனை பேர் மீண்டும் பணியில் சேர்க்கப்பட்டிருக்கிறார்கள்?

---

* * * தலைவரின் ஆணைப்படி நீக்கப்பட்டது.

[1981 பிப்ரவரி 10

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :** ஆசிரியர்கள் கைப்பணம் வாங்குகிற முறையில் தவறு ஏற்பட்டிருக்கிறதென்றால், அதற்கு ஆசிரியர்களும் உடந்தை என்றுதான் நான் கருதுகிறேன். இது வருந்தத்தக்க ஒன்று. விதிமுறைகளை மாற்றியமைத்து நேரிடையாகக் கொடுக்காமல் காசோலை மூலமாகக் கொடுக்க பரிசீலிக்கப்படும்.

**திரு. க. மீனாட்சிசுந்தரம் :** ஊராட்சி ஒன்றிய கூட்டுறவுக் கடன் சங்கத்தில் ex-officio பிரசிடெண்டாக ஆணையாளர் இருக்க வேண்டும் என்று விதி இருக்கிறது. இதை ஏற்று, சில ஆணையாளர்கள் செயல்படுகிறார்கள். சில ஆணையாளர்கள் இது எங்களைக் கட்டுப்படுத்த முடியாது, ஆகவே நாங்கள் இருக்க முடியாது என்று சொல்லுகிறார்கள். அப்படிப்பட்ட இடங்களில் செயலாளராக ஆசிரியர் இருக்கிறார். ஆகவே அவர்தான் எக்ஸ் அஃபிசியோ பிரசிடெண்டாக இருக்க வேண்டும். ஆகவே இதைப் போக்குவதற்கு ஏற்ற முறையில் அரசு ஆணையைப் பிறப்பிக்க முன்வருமா ?

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :** மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, ஊராட்சி ஒன்றியத்திலுடைய ஆணையாளர் தான் எக்ஸ் அஃபிசியோ பிரசிடெண்ட் ஆக இருக்க வேண்டுமென்பது நடைமுறையாகும். அதுதான் விதி முறை. எங்கெல்லாம் அந்த விதிமுறை நடைமுறைப்படுத்தப் படவில்லையோ அங்கெல்லாம் நடைமுறைப்படுத்த தக்க நடவடிக்கைப் எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

*Pay Scales of Sub-Judges and District Judges*

* 45 Q.—THIRU P. R. THOMAS (on behalf of THIRU D. SANTOSHAM): Will the Hon. the Minister for Co-operation and Law be pleased to state with reference to the answer given to No. 364 on the Floor of the Council on 27th April 1979:

(*a*) whether the Government have arrived at any decision on raising the pay scales of Sub-Judges and District Judges; and

(*b*) if so, the details thereof ?

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :** (அ) ஆம், ஐயா.



1981 பிப்ரவரி 10]

(இ) உதவி நீதிபதிகளின் சம்பள விகிதத்தை உயர்த்துவது பற்றிய கோரிக்கை அரசின் பரிசீலனைக்குப்பின் நிராகரிக்கப்பட்டது, மாவட்ட நீதிபதிகள் சம்பளவிகிதத்தை உயர்த்துதல் பற்றிய கோரிக்கை "**தனி** நபர்க்குழு" விற்கு அனுப்பப்பட்டுள்ளது.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு : ஓர் உரையின் தொடக்கத்தில் இடப்பட்டிருக்கும் உடுக்குறி (*) அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

(முற்பகல் 11-30)

2. உரிமைப் பிரச்சினை.

குதிரைப் பந்தய வரியையும் விற்பனை வரி மீது மேல்வரியையும் உயர்த்துவது குறித்த செயற்குறிப்பு குறித்து 'இந்தியன் எக்ஸ்பிரஸ்' நாளிதழில் வந்த செய்தி குறித்து.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஏ. ஆர். தாமோதரன் அவர்கள், மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் மீது ஒரு உரிமைப் பிரச்சினையை எழுப்பியிருக்கிறார்கள். அது எவ்வாறு உரிமைப் பிரச்சினைக்குட்பட்டு வருகிறது என்பதை உறுப்பினர் அவர்கள் சுருக்கமாகச் சொல்ல வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

* THIRU A. R. DAMODARAN: Sir, under rule 157 of the Tamil Nadu Legislative Council Rules, I seek your permission to raise a matter of breach of Privilege of the House caused by the premature publication of certain taxation proposals relating to increase in Betting Tax and Surcharge on Sales Tax proposed by the Government. The information containing taxation proposals which has been published in the Press constitutes a serious breach of privilege of this House since the proposals have emanated from the Department of Revenue and from the Department of Finance. I beg leave to move a motion in the House raising this matter of privilege against the Hon. the Minister for Revenue and Commercial Taxes and the Hon. the Minister for Finance for premature leakage of Budget proposals.

Sir, the breach of privilege arises from the facts which I shall now state. The House has previously considered that when the House is in session, if a policy statement is made by a Minister, it would constitute a breach of privilege. One of the most sacred

கலப்புத் திருமணத் தம்பதிகளில் தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்தவருக்கும் மற்றும் அவர்களது குழந்தைகளுக்கும், குழந்தைகள் தாழ்த்தப்பட்ட இனத்தைச் சேர்ந்தவர்கள் என்று அறிவிக்கப்பட்டால் தாழ்த்தப்பட்டவர்களுக்கென ஒதுக்கப்பட்டுள்ள 18 விழுக்காடு வேலை வாய்ப்பில் ஏதாவது சார்பு ஒதுக்கீடு (Sub-Reservation) செய்வதுபற்றியும், வேலை வாய்ப்பகத்தில் பதிவுசெய்துள்ளவர்களைப் பொறுத்தவரை அவர்கள் பெயர்களை வேலை வாய்ப்பகத்தினரால் குறிப்பிட்ட வேலைக்கு பரிந்துரை பட்டியலில் சேர்க்கப்பட்டு அனுப்பப்படாமலிருந்தாலும் அவர்கள் வேலைக்குச் சேர்த்துக் கொள்வதில் சலுகை அளிக்க முடியுமா என்பது பற்றியும் அரசின் பரிசீலனையில் உள்ளது.

(பிற்பகல் 11-10)

**திரு. செ. முத்துசாமி :** தந்தை பெரியார் அவர்களின் நூற்றாண்டு விழாவில் சிந்திக்கப்பட்ட சிந்தனைகளையும், அறிவிப்புகளையும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இங்கே குறிப்பிட்டு அவைகள் இப்போது அரசின் பரிசீலனையில் இருப்பதாகவும், வேலைவாய்ப்பு அளிப்பதில் முன்னுரிமை கொடுப்பது பற்றி அரசின் பரிசீலனையில் இருப்பதாகவும் கூறினார்கள். அரசாங்கத்தில் பரிசீலனை என்றால், சில சமயங்களில் 10 ஆண்டுக்காலம்கூட ஆகிவிடுகிறது. எனவே இந்தப் பரிசீலனை எப்போது முடியும்?, தற்போது பெரியார் நூற்றாண்டு விழா முடிவடைந்துவிட்டது. எனவே இந்த ஆண்டிலேயே இத்தகைய சலுகைகளை வழங்குவதற்கு அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி :** அரசு அதற்கான முயற்சிகளை மேற்கொள்ளும்.

**திரு. க. மீனாட்சிசுந்தரம் :** இவ்வினாவிற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அளித்த விடை மிகவும் திருப்திகரமாக இருப்பதால், இதனை வரவேற்கிறேன். பலவற்றில் நாம் எதிர்பார்க்கிற பதில் கிடைப்பதில்லை. கலப்புத் திருமணம் செய்துகொண்ட தம்பதிகளும், அவர்களின் குழந்தைகளும் ஒரு தனி ஜாதியினரைப் போலவே ஒதுக்கி வைக்கப்படுகிற நிலைதான் இருக்கிறது என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்களே நன்கு அறிவார்கள். எனவே எத்தகைய சலுகை அளிப்பதாக இருந்தாலும், அவைகளைத் தாழ்த்



தப்பட்டவர்களுக்கும், பிற்படுத்தப்பட்டவர்களுக்கும் வழங்குவதைப் போல் வழங்கி, அவர்களிலும் இவர்கட்கு முன்னுரிமை அளித்து வேலைவாய்ப்புகளை வழங்கிட அரசு முன்வருமா ?

**மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி :** மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இங்கே தெரிவித்துள்ள கருத்தின் அடிப்படையில்தான் அரசு இத்தகைய முயற்சியை மேற்கொண்டுள்ளது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் :** கலப்புத் திருமணத் தம்பதியினரில் இருவரில் ஒருவர் ஆதி-திராவிடர் வகுப்பைச் சார்ந்தவராக இருந்தால்தான், அரசுத் தரப்பில் சலுகைகள் கொடுக்கப்படுவதாக நான் அறிகிறேன். அதற்கு மாறாக கலப்புத் திருமணம் செய்து கொள்கிறவர்கள் எந்தச் சாதியைச் சார்ந்தவர்களாக இருந்தாலும் அது கலப்புத் திருமணம்தான் என்று அரசு அங்கீகரித்து அவர்கள் அனைவருக்கும் இத்தகைய சலுகைகளை வழங்குவதற்கு அரசு முன்வருமா ?

**மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி :** உறுப்பினருடைய கருத்து அரசால் பரிசீலனை செய்யப்படும்.

**டாக்டர் இரா. சனார்த்தனம் :** கலப்புத் திருமணம் என்பதற்குப் பொருளே "காதலர் இருவர் கருத்தொருமித்து திருமணம் செய்து கொள்வதாகும்". எனவே இதைக் கலப்புத் திருமணம் என்று சொல்லுவதற்குப் பதில் வேறு பெயரில் அழைக்க அரசுக்கு உத்தேசம் உண்டா ?

**மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி :** அத்தகைய நோக்கம் அரசுக்கு இல்லை.

## இலவசப் பாடப்புத்தகங்கள்

* 68 **வினா.—திரு. க. மீனாட்சிசுந்தரம் :** மாண்புமிகு ஆதி திராவிட நலத்துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) பட்டுக்கோட்டை கல்வி மாவட்டத்தில், திருத்துறைப்பூண்டி, தலைஞாயிறு சரகங்களிலுள்ள ஆதி திராவிட மற்றும் சிறந்த சாதி மாணவ மாணவியருக்கு கல்வி ஆண்டு தொடங்கி இரண்டு மாதங்கள் முடிந்தும், அரசின் இலவசப் பாடப்புத்தகங்கள் வழங்கப்படவில்லை என்பதை அரசு அறியுமா ?

privileges of the Legislature is the secrecy of taxation proposals and revenue proposals intended to raise taxes. On the 29th December 1980, a report was published in the "Indian Express" that the Tamil Nadu Government were contemplating to increase the Betting Tax on Horse-racing as part of its resource-moblisation programme and that, according to indications present then, the tax might be hiked by 10 per cent to fetch an annual income of Rs. 1 crore or more. The report goes on to publish various details from the note that has ostensibly been put up by the Revenue Department to raise the Betting Tax. On 26th December, there has been another report in the "Indian Express", in bold headlines on the front page, wherein a proposal to raise the Surcharge on Sales Tax from five per cent to 15 per cent has also been published.

Now, if this was merely an intelligent speculation on the part of the Press, no question of privilege or contempt would arise. Normally, before a Budget, newspapers predict that the personal taxes may be raised or that the sales-tax may be raised. But, in my opinion, both these observations that have been printed in the Press have clearly been derived from authoritative notes prepared by the Revenue and the Finance Departments. My claim is that this constitutes a very serious breach of privilege because, apart from policy statements, taxation proposals are held even more sacred by the Legislature. I would like to remaind the hon. Members of this House that Dr. Hugh Dalton, Chancellor of the Exchequer, when he went to present the Budget proposals before the House of Commons, inadvertently, ten minutes before he went to the House, leaked out certain information regarding the Budget which was considered so serious that the Chancellor of the Exchequer had to resign from his post. Sir, I am not for a moment suggesting that my good Friend, the Hon. the Minister for Finance or my equally good Friend, the Hon. the Minister for Revenue should resign from their posts. But, I feel that it is causing contempt of both Houses of the Legislature because after the report was published in the "Indian Express", the Hon. the Minister for Revenue came out, on the 5th January 1981, with a notification under the Tamil Nadu Betting Tax Act raising the rate of tax to 25 per cent on inter-venue betting, etc. Sir, I realise that according to the Betting Tax Act, the Government have the power of notification whereby they may raise taxes. I am not criticising the notification because it has raised the betting tax.





That is well within the power of the Hon. Minister and the Government. But, what I am objecting to is that the press should have known about this proposal to raise the Betting tax even before the Legislature was apprised of this measure. In my opinion, there has been a breach of privilege, there is contempt of the House and the Official Secrets Act has been violated. If this is the position regarding Budget proposals of the Government of Tamil Nadu, enormous funds could be generated and secreted if sales tax proposals are published in this manner in the newspaper. I, therefore, fell that this is a matter where there is a *prima facie* case for referring the matter to the Committee of Privileges. Such leakage of taxation proposals and revenue proposals is not only dangerous but places the House itself in a very awkward position because we are expected not only to approve such proposals but also to offer our comments on such taxation proposals. I hope that you will consider that a *prima facie* case exists and, if so, elicit the views of the hon. Members of the Parties here who may also like to offer their views on the matter. I believe that in the interest of upholding the dignity of both the Houses, such leakages should not occur because this is probably an indication of whatt might happen in the future if the Legislature does not take due cognizance of the matter. Thank you.

THE HON. DR. H. V. HANDE: I rise on a point of order, with the permission of the Chair, since I think I should bring to the attention of the Hon. Chairman an important point, before the Chair gives a ruling. It is about the definition of 'Budget proposals'. The leakage of Budget proposals is a very important thing, according to May's Parliamentary Practice. My information is that the Budget proposals are supposed to be sacred and a question of leakage of the same will arise only after a date is fixed for the presentation of the Budget. Since I had an inkling that the hon. Member Thiru A. R. Damodaran might bring in a privilege motion, out of sheer curiosity, I looked up May's Parliamentary Practice. Then I discovered that only if the leakage occured, after the date was fixed for presentation of the Budget, it would amount to a breach of privilege of the House. I am not going into the question whether there is, in fact, leakage and my hon. Colleague Thiru Somasudaram will go into it. My point is that there has been no breach of privilege, inasmuch as no date has yet been fixed for presentation of the Budget. Even in the case of Dr. Hugh Dalton, which the hon Member mentioned, ten minutes before the presentation of the

Budget, he inadvertently mentioned something and that was considered to be leakage of Budget proposals. I would only request the Hon. Chairman to consider this aspect also, before giving his ruling. If what Thiru Damodaran alleges is accepted, by applying the principle of 'Reductio ad absurdum', it would only mean that even in the month of June or July, the Ministers will not be in a position to mention anything or to give any inking about the policies of the Government. In such circumstances, it will be very difficult for the Government and it will be impossible for the Government to elucidate its views at any point of time. I, therefore, request the Hon. Chairman to consider whether the motion of privilege is in order, in view of the fact that Thiru Damodaran had not exactly defined the leakage of Budget proposals. Only after the date is fixed for presentation of the Budget, there could be any leakage and if such a leakage takes place, then Thiru Damodaran would have a right to raise a privilege issue. My submission is that the Chairman may find out whether there is any *prima facie case* in the motion.

THIRU A. R. DAMODARAN: Sir, I do not think the Hon. Minister can raise a point of order regarding the Privilege Motion as the matter has been allowed to be raised by the Hon. Chairman. The Chair has already given permission and I think Dr. Hande's point of order is absolutely without point. I, therefore, request your ruling in this matter.

*(முற்பகல் 11-40)*

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சரவர்கள் எழுப்பிய ஒழுங்குப் பிரச்சினை காலத்திற்கு ஒத்ததாக இல்லை. ஓர் உறுப்பினர் தனக்குள்ள உரிமைப்படி, உரிமைப் பிரச்சினை கொண்டு வந்திருக்கிறார். அதைப்பற்றி அமைச்சரவர்கள் என்ன சொல்லு கிறார் என்பது மாத்திரமல்ல, இந்த உரிமைப் பிரச்சினையில் தோற்றம் — 'பிரைமா ஃபாசி' என்பதற்குத் தோற்றம் என்ற வார்த்தை தமிழில் சரியாக இருக்குமென்று நினைக்கிறேன், இதை எதிர்க் கட்சித் தலைவரவர்கள் ஒப்புக் கொள்வார்களென்று நினைக்கிறேன் — இருக்கிறதா என்பதைப்பற்றி வருவாய்த் துறை அமைச்சரின் விளக்கத்திற்குப் பிறகுதான் முடிவிற்கு வர முடியும். இதற்கிடையில் ஒழுங்குப் பிரச்சினை எழாதென்று நினைக் கிறேன்.



V211, 52 'N81
N5)-1773-1



மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: மாண்புமிகு மேலவைத் தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. தாமோதரன் அவர்கள் உரிமைப் பிரச்சினை ஒன்றைக் கொண்டு வந்திருக்கிறார்கள். அவர்கள் நீண்ட நாட்களாக இந்த அவையிலே உறுப்பினராக இருந்து வருபவர் என்பது மட்டுமல்ல, பல விஷயங்களைத் தெரிந்து, ஆற்றல் மிக்கவராக இருந்து, பணியாற்றுபவர்கள் என்பது அனைவருக்கும் தெரியும். அப்படிப்பட்ட ஆற்றல் மிக்க ஓர் உறுப்பினர் கொண்டு வந்த உரிமைப் பிரச்சினை நியாயமான தாக இருக்குமோ என்று வெளியில் இருக்கக் கூடியவர்கள்கூட நினைக்கக் கூடிய அளவிற்கு அவர் திறமை வாய்ந்தவர் என்பது எல்லோருக்கும் தெரியும். எடுத்த எடுப்பிலேயே உரிமைப் பிரச்சினையைக் கொண்டு வந்து, தன்னையும் அறியாமல் 'பட்ஜெட் லீக்கேஜ்' என்று சொல்லிவிட்டு, பட்ஜெட்டிற்கு முன்னாலே 5-1-1981-ல் நடைமுறைப்படுத்தப்பட்டது என்று சொன்னார்கள். 5 ஆம் தேதி நடைமுறைப்படுத்தப்பட்டுவிட்டது. எனவே பட்ஜெட்டிற்கும் இதற்கும் சம்பந்தமில்லை என்பதைத் தெரிவித்துக்கொள் கிறேன். 5 ஆம் தேதியே, Notification மூலம் நடைமுறைப் படுத்தப்பட்டுவிட்டது. எனவே பட்ஜெட்டிற்கும், இதற்கும் சம்பந்த மில்லை. எனவே இதில் பட்ஜெட் லீக்கேஜ் இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, செய்தித் தாள்களில் எவ்வளவோ வருகின்றன. செய்தித் தாள்களில் ஒரு செய்தி வருகிறபோது, அந்தச் செய்திக்கும் அரசுக்கும் இருக்கிற தொடர்பு என்ன என்பதைப் பார்க்க வேண்டும். அமைச்சரோ, அமைச்சருடன் சம்பந்தப்பட்டவர்களோ, அரசோ அல்லது அதிகாரிகளோ அந்தச் செய்தியை வெளியிட்டிருக்கிறார்களா என்பதைப் பார்க்க வேண்டும். ஆனால் வந்திருக்கிற செய்தி அரசால் சொல்லப்படவில்லை, அமைச்சராலும் சொல்லப்படவில்லை, அரசு அதிகாரிகளாலும் சொல்[illegible] வந்தி ருக்கிற செய்தி உண்மையானதாகவாவது இருக்கிறதா? [illegible]கள் தங்களுக்குள்ள திறமையை வைத்து, அந்தத் தகவலைப் [illegible] விட்டார்கள். அப்படி அவர்கள் [illegible] காப்பாற்றும் பொறுப்பும் அரசுக்கு இரு[illegible] நான் எற்று[illegible] கடமைப்பட்டிருக்கிறேன். ஆனால் [illegible]யாளர்கள் [illegible]யாக

192022

[1981 பிப்ரவரி 10

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :** இது போன்ற குற்றச்சாட்டுக்கள் வருகின்றபோது கடுமையான முறையில் அணுக வேண்டுமென்றும், கடுமையான நடவடிக்கைக்கு அவர்களை உட்படுத்த வேண்டுமென்றும் உயர்நீதி மன்றத்திற்கு அரசு கூறியிருக்கிறது. உயர்நீதி மன்றமே இது குறித்து விசாரணை செய்ய வேண்டியிருப்பதால், அரசு நேரிடையாகத் தலையிட முடியாது. ஆகவே பொது மக்களிடமிருந்து குற்றச்சாட்டு வருகிறபோது, அதை உயர்நீதி மன்றத்திற்கு அரசு அனுப்பி, கடுமையான நடவடிக்கையை எடுக்க வேண்டுமென்றும், அதுவும் விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டுமென்றும் அரசு கேட்டுக்கொண்டிருக்கிறது. குற்றம் சாட்டப்பட்டவர்கள் விசாரணை முடிவதற்கு முன்னால் பணியில் சேர்க்கப்பட்டிருக்கிறார்களா என்ற தகவல் இல்லை. மாண்புமிகு உறுப்பினர் அதைச் சுட்டிக்காட்டினால், உயர்நீதி மன்றத்திடம் அதுபற்றிக் கேட்டறிந்து தெரிவிக்கிறேன்.

### கூட்டுறவுக் கடன் சங்கங்கள்.

*44. **வினா—திரு. செ. முத்துசாமி :** மாண்புமிகு கூட்டுறவு-சட்ட அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :—

(அ) ஊராட்சி ஒன்றிய ஊழியர்கள் கூட்டுறவுக் கடன் சங்கங்களில், கடன் வாங்கிய கடன் தவணைகளை அவர்களின் ஊதியத்திலேயே பிடித்தம் செய்து சம்பந்தப்பட்ட கடன் சங்கங்களுக்கு திருப்பக் கட்டும் நடைமுறையை கொண்டுவரும் செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(இ) ஆம் எனில், அது தற்போது எந்நிலையில் உள்ளது?

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :** (அ) & (இ) 1961 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவு சங்கங்கள் சட்டத்தின் 40-வது பிரிவின்படியும் மற்றும் 1963 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவு சங்கங்கள் விதிகளின் 53-வது விதியின் படியும் கூட்டுறவுச் சங்கத்தில் அங்கத்தினராக இருப்பவர் தான் கூட்டுறவு சங்கத்தில் வாங்கிய கடனுக்குத் தன்னுடைய ஊதியத்திலிருந்து மாதாமாதம் பிடித்தம் செய்து அந்தந்த சங்கத்திற்கு கொடுத்துவிட தனக்கு ஊதியம் வழங்கும் அதிகாரிக்கு அதிகாரம் அளித்து எழுத்தின் மூலம் ஒப்புதல் அளிக்கலாம். அவ்வாறு ஒப்புதல் அளிக்கப்பட்டால் அந்த உறுப்பினர் மாதாமாதம் அச்சங்கத்திற்கு எவ்வளவு கட்டவேண்டும் என கூட்டுறவு சங்கம் தெரிவிக்கின்றதோ அந்தத் தொகையினை சம்பந்தப்பட்ட ஊதியம் வழங்கும் அதிகாரி, அந்த உறுப்பினர் ஊதியத்தில் பிடித்தம் செய்து, பிடித்தம் செய்த நாளிலிருந்து 14 நாட்களுக்குள் அச்சங்கத்தில் செலுத்தி விடவேண்டும்.



1981 பிப்ரவரி 10]

ஊழியர்களின் கூட்டுறவு நாணயச் சங்கத்தினை பொறுத்தவரை ஒருவர் அச்சங்கத்தில் உறுப்பினராகும்போதே, மேற்கூறிய ஒப்புதல் பத்திரம் வாங்கிக் கொள்ளப்படும். மேற்கூறிய விதிகளின்படி, ஊராட்சி ஒன்றிய ஊழியர்களின் கூட்டுறவுக் கடன் சங்கங்களில் கடன் வாங்கிய கடன் தவணைகளை அவர்களின் ஊதியத்திலேயே பிடித்தம் செய்து, சம்பந்தப்பட்ட சங்கங்களுக்குத் திருப்பக் கட்ட வழிவகை உள்ளது.

**திரு. செ. முத்துசாமி :** சட்டத்திலே வழிவகை இருக்கிறதென்று அமைச்சர் அவர்கள் கூறினார்கள். ஆனால், உள்ளாட்சித் துறைச் சட்டத்திலே அதற்கு இடமில்லை. பிடிக்க வேண்டிய அவசியம் இல்லையென்று சொன்ன காரணத்தினாலே, செந்தாமங்கலம் கூட்டுறவு சிக்கன நாணயச் சங்கத்தில் ஒன்பதாயிரம் ரூபாய் அளவிற்கு ஊழல் நடந்திருக்கிறது என்பதை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வந்து இப்படிப்பட்ட நிலைமைகளை மாற்ற வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஆசிரியர்கள் எழுதிக் கொடுத்த பிறகும், பிடித்தம் செய்ய மறுத்த காரணத்தால்தான், ஊழல் ஏற்பட்டிருக்கிறது. இப்படிப்பட்ட ஊழல் சங்கங்கள் இன்னும் நிறைய இருக்கின்றன. ஆகவே இதைத் தவிர்க்க இந்தச் சட்டத்தை மேலும் கடுமையாக்க உள்ளாட்சித் துறைக்கு அறிவுரைகளை வழங்க அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :** வாங்கிய கடனை தவணை தவறாமல் ஊராட்சி ஒன்றிய ஊழியர்கள் கட்டாமல் இருப்பதால், அதை ஊழல் என்று எப்படி மாண்புமிகு உறுப்பினர் கூறுகிறார் என்று எனக்குப் புரியவில்லை. கூட்டுறவுச் சட்டத்தைப் பொறுத்த வரையில், வழிவகை இருக்கிறது. சட்டத்திற்குட்பட்டு செம்மையாக நடைமுறைப்படுத்த முடியும். உள்ளாட்சித் துறைப் பணியாளர்கள் கூட்டுறவுச் சங்கம் என்பது தன்னாதிக்கம் பெற்ற அமைப்பு. ஆகவே இருக்கின்ற சட்டத்தை வைத்தே நடவடிக்கை எடுக்க முடியும். ஆகவே மாண்புமிகு உறுப்பினர் எந்தெந்த சங்கத்தில் கடனைத் திருப்பித் தராமல் இருக்கிறார்கள் என்று ஆதாரத்தோடு சொன்னால், கண்டிப்பாக நடவடிக்கை எடுக்கப்படும்.

**திரு. செ. முத்துசாமி :** ஆசிரியர்கள் செலுத்தக்கூடிய பணத்தைச் செயலாளர் வசூலித்து மோசடி நடத்தியிருக்கிறார். செக்குகள் மூலம் பணத்தை வாங்கி கூட்டுறவு வங்கிக் கணக்கிற்கு அனுப்பினால் இந்தப் பிரச்சினை வராது. ஆகவே செந்தாமங்கலம் கூட்டுறவுச் சங்கத்தில் இப்போது ஆசிரியர்களிடமிருந்து பணமாக வாங்கும் முறையை மாற்றியமைத்து செக்காக வாங்கி கூட்டுறவு வங்கியிலே கட்டக்கூடிய வகையிலே வழிவகை செய்ய அரசு முன்வருமா?

[1981 பிப்ரவரி 10

(முற்பகல் 11-50)

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: இதில் கற்பனை அதிகமாக இருக்கிறது. ஆனால் உண்மை இல்லை. 15 சதவிகிதம் கொண்டு வருவது பற்றி அரசு யோசிக்கக் கூட இல்லை. ஆகவே இது யோசிக்காத ஒன்று. எனவே இதில் உரிமைப் பிரச்சினை ஒன்றும் இல்லை என்பதை நான் அரசின் சார்பாகத் தெரிவித்துக் கொள்கிறேன்.

* THIRU A. R. DAMODARAN: Sir, the Hon. the Minister for Revenue has referred to the fact that there is no Budget-leak in so far as the Betting Tax is concerned. I agree and I have already said that he has the power of notification. Under sections 4 and 5 of the Betting Tax Act, it is for him to raise the tax. But, my point is that this is clearly a revenue measure which is going to fetch the Tamil Nadu Government more than possibly—I do not have the estimate—Rs. 1-1/2 crores. Therefore, I view it as a virtual taxation measure and it has appeared in previous Budgets also.

Regarding the second matter, it is not because of the reports in "The Hindu" or the "Indian Express" that I place greater reliance on English newspapers. But, that is the only paper I read. I do not read the papers published by some hon. Member and, therefore, I do not know whether other Budget proposals have been published in such papers. But, generally, the English newspapers are reliable. One must remember that the "Indian Express" has indulged in a lot of investigative reporting and I do place reliance on it. Regarding the proposal, if the Hon. Minister says that there is no proposal at all to raise the sales tax and that he has not even thought about it, well, the motion itself is in two parts—one relating to the Betting Tax and the other relating to the Budget proposal—and I would like the Hon. Chairman to allow the second part of the Privilege motion to lie over till the Budget is placed because only then will we know whether this constitutes a part of the Budget proposal. It is not enough if the Hon. the Minister for Revenue says it. I would, therefore, request that it be divided into two parts.

(The Hon. Thiru S. D. Somasundaram rose)

I have not sat down. I have not yielded.



1981 பிப்ரவரி 10] [Thiru A. R. Damodaram]

I am continuing my submission, Sir. I, therefore, wish that the latter part against the Hon. the Minister for Finance may be kept over till the Budget proposals are published because only then will we know whether the Hon. Minister's denial is correct or not. We can deal with the first portion. Sir, again the Hon. Minister is trying to get up. I, therefore, request that the first part may be taken up now and the second part may be allowed to lie over till the Budget is published.

| |

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: நான் முதலிலேயே சொல்கிறபோது, பெட்டிங் டாக்ஸ் பற்றிச் சொன்னேன். அவர்கள் தவறாகச் சொல்லியிருக்கிறார்கள். ஒரு கோடி ரூபாய் என்று கூட சொல்லியிருக்கிறார்கள். ஆனால் உள்ளபடியே வருவது 1¾ கோடி என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன். அதையும் அவர்கள் சரியாகச் சொல்லவில்லை. ஆனால் இங்கே உரிமைப் பிரச்சினை கொடுத்து விட்டார்கள். நிச்சயதாம்பூலம் நடக்கிறது. இன்னும் கல்யாணமே நடக்கவில்லை. அதற்குள் நிச்சயதாம்பூலம் நடக்கும்போதே பெண் குழந்தை பிறந்தால் என் பையனுக்குக் கல்யாணம் பண்ணலாம், ஆண் குழந்தை பிறந்தால் என் பெண்ணை உன் பையனுக்குக் கல்யாணம் பண்ணலாம் என்று பேசுவதுபோல், பட்ஜெட் வருவதற்கு முன்பே பட்ஜெட் குறித்து உரிமைப் பிரச்சினை கொண்டு வருவது இதுதான் முதல் தடவையாக இருக்கும் என்று நினைக்கிறேன். இது தான் முதல் எடுத்துக்காட்டாக இந்த மேலவையில் இருக்கும் என்று நான் கருதுகிறேன். ஒரு நல்ல எடுத்துக்காட்டைக் கொண்டு வருவது நல்லது தான். ஆனால் நல்ல எடுத்துக்காட்டாக இல்லாததை இவ்வாறு கொண்டுவருவது நல்லதல்ல. இதுவரை யோசிக்காத ஒன்று என்பதோடு மட்டுமல்லாமல், அவர்கள் சொல்லியிருப்பது உண்மையும் அல்ல என்பதால், இதில் உரிமை மீறல் பிரச்சினை எதுவும் இல்லை. மேலும் இனிமேல் கூட 14 சதவீதம் என்றோ அல்லது 16 சதவிகிதம் என்றோ நாங்கள் அதை மாற்றிவிட முடியாதா? அப்படி நாங்கள் செய்தால், லீக்கேஜுக்கு எந்தவிதமான ஆதாரமும் இல்லாமல் போய்விடுகிறது. அதுபோல் 15 சதவிகிதம் என்று இருப்பதை 10 சதவிகிதம் என்று கொண்டு வந்தாலும், லீக்கேஜ் இல்லாமல் ஆகிவிடுகிறது. லீக்கேஜை இல்லாமல் கொண்டு வருவதற்கு அரசுக்கு வாய்ப்புகள் இருக்கும்போது, எதை வைத்துக்கொண்டு இப்படிப் பேசுகிறார்கள் என்பது எனக்கு புரியவில்லை. நிதியமைச்சர் அவர்கள் எனக்கு வேண்டியவர், நல்லவர், ஆனால் வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் எதையும் செய்ய வேண்டாமென்று சொன்னார்கள். அதோடு மட்டுமல்லாமல்

எழுதியதற்கும், நாங்கள் செய்த மாற்றத்திற்கும் சம்பந்தம் இல்லாமல் இருக்கிறதென்பது மாண்புமிகு உறுப்பினரவர்களுக்கு நன்றாகத் தெரியுமென்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இன்றைக்குக்கூட 'இந்து' பத்திரிகையில் ஒரு செய்தியைப் பார்த்தேன். பகுதி நேர கிராம அதிகாரிகளுக்கு 1-½ மாதக் கணக்கில் சம்பளம் கொடுக்க அரசு யோசித்துக் கொண்டிருக்கிறது என்ற செய்தியை 'இந்து' பத்திரிகையில் பார்த்தேன். அதையும் அரசு சொல்லி விட்டதாக, உரிமை மீறல் பிரச்சினை வந்தாலும் வருமென்று கருதுகிறேன். ஆனால் அதற்கு முன்னாலேயே பேரவையில் அதற்கு வேண்டிய சட்டமுன்வடிவை வைத்து விட்டேன். எனவே அது குறித்து உரிமைப் பிரச்சினை வராதென்று நினைக்கிறேன். ஆனால் செய்தி சட்ட முன்வடிவிற்கு மாறாக வந்திருக்கிறது. செய்தித் தாள்களில் வருவதையெல்லாம் எப்படி எடுத்துக்கொள்ள வேண்டுமென்று இந்த அவைக்கோ, மற்றவர்களுக்கோ எடுத்துச் சொல்லத் தேவையில்லை. அதுவும் மாண்புமிகு உறுப்பினர் திரு. எ. ஆர். தாமோதரன் அவர்கள் நிரம்ப விஷயம் தெரிந்தவராகையால், அதைப்பற்றிச் சொல்லக் கூடாது. மாண்புமிகு உறுப்பினர் திரு. தாமோதரன் அவர்கள் அந்த விதியைச் சொல்லி விட்டார்கள்.

1935-ஆம் ஆண்டு, தமிழ் நாடு குதிரைப் பந்தய வரிச் சட்டத்தின்படி 25 சதவிகிதம் வரை வரி போட, நோட்டிபிகேஷன் போட அரசுக்கு அதிகாரம் இருக்கிறது. முதலிலே 30 ஆக இருந்ததை 25 ஆகப் போட்டிருக்கிறோம். நோடிபிகேஷன் மூலம் போட்டிருக்கிறோம். பட்ஜெட்டுக்கு முன்னாலே அதைப் போட்டுவிட்டோம். பட்ஜெட்டுக்கும், அதற்கும் சம்பந்தமில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். பெட்டிங் டாக்சை 20 சதவிகிதத்திலிருந்து 25 சதவிகிதமாக்கியிருக்கிறோம். அதற்கும், பட்ஜெட்டுக்கும் சம்பந்தமில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். நான் முதலிலேயே சொன்னது போன்று, அரசோ அல்லது அரசு சார்பிலோ யாரும் செய்தித் தாள்களுக்கு விவரம் கொடுக்கவில்லை என்பதாலே இது உரிமை மீறல் பிரச்சினையில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலும் செய்தித் தாளில் வந்த செய்தி உண்மைக்கு மாறானது. செய்தித் தாளில் என்ன வந்திருக்கிறது? 10 சதவிகிதம் அதிகரிக்க இருக்கிறார்கள் என்று செய்தித் தாளில் வந்திருக்கிறது. எப்படியோ வரியை அதிகரிக்க



இருக்கிறோமென்பதை அவர்கள் கண்டுபிடித்துவிட்டார்கள். அதைக் காப்பாற்றுகிற திறமை எங்களுக்கில்லை என்பதை ஒத்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். ஆனால் அப்படியல்ல. கிண்டியில் 20 சதவிகிதமாக இருந்ததை 25 சதவிகிதமாக உயர்த்தியிருக்கிறோம். வித்தியாசம் 5 சதவிகிதம்தான். ஊட்டியில் 10 சதவிகிதமாக இருந்ததை 25 சதவிகிதமாக உயர்த்தியிருக்கிறோம். வித்தியாசம் 15 சதவிகிதம். இன்டர்-வென்யூ பெட்டிங் வரி 10 சதவிகிதமாக இருந்ததை 25 சதவிகிதமாக உயர்த்தியிருக்கிறோம். வித்தியாசம் 15 சதவிகிதம். செய்தித் தாளில் 10 சதவிகிதம் ஏற்றப்போகிறார்கள் என்று வந்திருக்கிறது. அவர்கள் கற்பனையாக எழுதியிருக்கிறார்கள். ஆனால், என்ன செய்யப் போகிறோமென்பதை அவர்கள் தெரிவித்துவிட்டாலும், யார் சொன்னார்கள், எப்போது சொன்னார்கள் என்று எழுதவில்லை. எத்தனையோ விஷயங்கள் பத்திரிகைகளில் வருகின்றன. அதைப்போல இதுவும் வந்திருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். சர் சார்ஜ் பற்றிச் சொன்னார்கள். 15 சதவிகிதம் என்று செய்தித் தாளில் 'வேக்' ஆக, கற்பனையாக எழுதியிருக்கிறார்கள். ஆங்கிலப் பத்திரிகையில் வந்துவிட்டால், அது கதையாக இராது என்று நினைக்கிறார்கள். ஏனென்றால் விஷயம் தெரிந்தவர்கள் எழுதுகிறார்கள் . . . .

**மாண்புமிகு மேலவைத் தலைவர்:** ஆக மொழிப் பிரச்சினை என்று சொல்லுகிறார்கள்.

**மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்:** தமிழ் நாட்டு மக்களிடையே ஒரு தவறான கருத்து இருக்கிறது. ஆங்கிலம் தெரிந்தால், விவரம் தெரிந்தவர்கள் என்று எண்ணிக் கொண்டிருக்கிறார்கள். ஆங்கிலம் தெரிந்து விவரம் தெரிந்தவர்கள் இருக்கிறார்கள், ஆங்கிலம் தெரிந்து விவரம் தெரியாதவர்களும் இருக்கிறார்கள். அதே போன்று தமிழ் தெரிந்து விவரம் தெரிந்தவர்கள் இருக்கிறார்கள், விவரம் தெரியாதவர்களும் இருக்கிறார்கள். ஆங்கிலம், தமிழ் இரண்டும் தெரிந்து விவரம் தெரிந்தவர்களும் இருக்கிறார்கள், விவரம் தெரியாதவர்களும் இருக்கிறார்கள். இன்றைக்கு 'இந்து' பத்திரிகையில் வந்துவிட்டது அல்லது இந்தியன் எக்ஸ்பிரஸ் பத்திரிகையில் வந்துவிட்டது என்றால், அவை எவ்வளவு பெரிய பத்திரிகை என்று எண்ணி, அதை ஏற்றுக்கொள்வதால்தான் சொல்லுகிறேன். விவரம் தெரிந்தவர்கள் . . .

**மாண்புமிகு மேலவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சரவர்களை எவ்வளவோ பாராட்ட வேண்டுமென்று தோன்றுகிறது. ஆனால் சொல்லக் கூடாது.

(நண்பகல் 12-00)

* திரு. க. இராமமூர்த்தி: தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்லியிருப்பதைப் போல, முதல்நாள் சம்பந்தப்பட்ட காவல் துறை அதிகாரிகள் அந்தக் கிராமத்திற்குச் சென்று இன்னின்னார் ஸ்டேஷனுக்கு வரவேண்டும் என்று சொல்லிச் சென்றிருக்கிறார்கள். அவர்கள் ஸ்டேஷனுக்குச் செல்லாததால் அடுத்த நாளே கைது செய்யப்பட்டிருக்கிறார்கள். ஒருவரைக் கைது செய்ய வேண்டும் என்றாலே, சட்டப்படி சில நிபந்தனைகள், முறைகள் இருக்கின்றன. அவர்களை ஸ்டேஷனுக்கு வரவேண்டும் என்று எந்த அடிப்படையிலே அழைத்தார்கள்? அழைத்தவுடனே ஸ்டேஷனுக்குச் செல்ல முடியாமல் போவது என்பது சர்வசாதாரணம். அதற்காக அவர்களை அடுத்த நாளே கைது செய்ய வேண்டிய அவசியம், கைது செய்வதற்குக் காவல் துறையினர் இவ்வளவு வேகம் காட்ட வேண்டிய அவசியம் என்ன என்று அரசு பரிசீலித்ததா? கன்னியாகுமரி மாவட்டத்திலே மூன்று டெப்யூட்டி சூப்பரிண்டண்ட்கள் மூன்று டிவிஷன்களுக்குப் பொறுப்பாக இருக்கிறார்கள். கடந்த ஏழு மாத காலமாக ஒரு டெப்யூட்டி சூப்பரிண்டண்ட் பதவி காலியாக இருக்கிறது. இன்னொரு பதவி கடந்த ஒரு ஆண்டுக்கும் மேலாகக் காலியாக இருக்கிறது. இப்போது ஒரு டெப்யூட்டி சூப்பரிண்டண்ட்தான் மூன்று டெப்யூட்டி சூப்பரிண்டண்ட்களுடைய வேலையைச் செய்துகொண்டிருக்கிறார். அந்த மாவட்டத்தில் இருக்கும் சூப்பரிண்டண்ட் ஆஃப் போலீஸ் அவர்களுக்குத் தமிழ் தெரியாது. ஆகவே, அவர் எந்தத் தகவலுக்கும் அவருடைய துணை அதிகாரிகளை நம்பவேண்டியிருக்கிறது. மேலும், வேலைப்பளுவின் காரணமாக, இருக்கின்ற வேலைகளை வேகமாகக் கவனிக்க முடியாமல் கீழே இருப்பவர்களை நம்பித்தான் செய்ய வேண்டிய நிலைமை இருக்கிறது. எனவே கீழேயுள்ளவர்கள் வைத்ததுதான் சட்டம் என்கிற அளவில் அங்கே காரியங்கள் நடைபெறுகின்றன. இந்தச் சம்பவம் அதை மிகத் தெளிவாகக் காட்டியிருக்கிறது. ஆகவே, இந்த நிலைமைகளை மனதில்கொண்டு உடனடியாக நடவடிக்கை எடுத்து, நிலைமைகளைச் சீர்படுத்த அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. கா. இராசா முகமது: தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் இரண்டுவித பிரச்சினைகளை வைத்திருக்கிறார்கள். இந்த வழக்கைப் பொறுத்தவரையில், வழக்கின் தொடர் நடவடிக்கையாக விசாரணையின் அறிக்கை அரசுக்குக் கிடைத்தவுடன் அரசு நடவடிக்கை எடுக்கும். ஆகவே அதற்குள்ளே நான் இப்போது போகவில்லை. நிர்வாகம் சம்பந்தமாக,



மூன்று டெப்யூட்டி சூப்பிரண்டண்ட்கள் செய்ய வேண்டிய வேலையை ஒருவர் செய்வதனால் முறையாக நிர்வாகம் செய்ய இயலவில்லை என்ற கருத்து இருக்கிறது என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னார்கள். அதை அரசு நிச்சயமாகக் கவனிக்கும். மேலும்; அங்கு இருக்கும் சூப்பிரண்டண்ட் ஆஃப் போலீஸ் அவர்களுக்கு தமிழ் மொழியில் சிறந்த தேர்ச்சி இல்லை என்ற பிரச்சினையும் இங்கே கொண்டு வரப்பட்டிருக்கிறது. இதையெல்லாம் நிச்சயமாக அரசு கவனத்தில் கொண்டு நடவடிக்கை எடுக்கும். வழக்கு சம்பந்தப் பட்டவரையில், விசாரணை முடிந்த பிறகு, முறையான நடவடிக்கையை அரசு மேற்கொள்ளும்.

(2) இராமேஸ்வரம் கடற்கரையில் மீன்பிடிக்கச் சென்றவர்களில் மூவர் புயலில் சிக்கி இறந்துவிட்டது குறித்து.

* திரு. ம. சங்கரலிங்கம்: மாண்புமிகு தலைவர் அவர்களே, கீழ்க்கண்ட அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினைக் குறித்து மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்:

"1980 டிசம்பர் திங்களில் இராமேஸ்வரம் கடற்கரையில் மீன் பிடிக்கச் சென்றவர்களில் மூவர் புயலில் சிக்கி இறந்துவிட்டது குறித்தும், அதன் காரணமாக அவர்களின் குடும்பத்தினருக்கு ஏற்பட்டுள்ள அவல நிலை குறித்தும்"

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: விவர அறிக்கை@ ஒன்று அவையின் முன் வைக்கப்பட்டுள்ளது.

* திரு. ம. சங்கரலிங்கம்: தலைவர் அவர்களே, விவர அறிக்கையிலே 16—12—1980 அன்று இராமேஸ்வரம் பகுதியிலிருந்து மீன் பிடிக்கச் சென்ற விசைப்படகு 29—12—1980 அன்றுதான் கண்டுபிடிக்கப்பட்டதென்றும், அதுவும் ஒரு ரஷ்யக் கப்பல்தான் அதைக் கண்டுபிடித்ததென்றும், அதில் சென்ற ஐந்து பேர்களில் மூன்று பேர்கள்தான் அந்தப் படகு கண்டுபிடிக்கப் பட்டபோது குற்றுயிராக இருந்தார்கள் என்றும், அந்த மூன்று பேர்களில் ஒருவர் சிகிச்சை அளித்தும் பலனளிக்காமல் இறந்துவிட்டதாகவும் கூறப்பட்டிருக்கிறது. மீன் பிடிக்கச் செல்பவர்கள் நமது நாட்டின் உணவுப் பிரச்சினையில் ஒரு பெரும் பகுதியைப் பூர்த்தி செய்கிறார்கள். இவர்கள் கடலில் சென்று மீன் பிடிக்கும்போது, அவர்களுக்குப் பாதுகாப்பளிப்பது நமது

@ 231 ஆம் பக்கத்தில் இணைப்பு III ஆக அச்சிடப்பட்டுள்ளது.

[Thiru A. R. Damodaran] [1981 பிப்ரவரி 10

I would like to compliment the Government on the many measures proposed under the new Services that have been provided. The Supplementary Estimates are for over Rs. 50 crores and under Demand No. 17 substantial grants have been given to the Department of Education.

Sir, my first appeal, which I mentioned during the discussion on the last Budget also, is regarding a decision that was taken in 1979 to transfer the schools for the physically handicapped such as the blind, deaf and dumb, from the Education Department to the Social Welfare Department. I do not know why this decision was taken in 1979. Traditionally, these schools were being looked after by the Education Department and, really, they should not have been handed over to the Social Welfare Department which does not have the experience to run these schools. We have Schools for the Blind at Cuddalore and Poonamallee and we have so many other schools for the physically handicapped where expert personnel are required. My first request to the Government is that they should seriously consider whether all these schools which have been transferred to the Social Welfare Department should not be transferred back to the Education Department because, in my opinion, many of the students studying in these institutions would get better guidance and educaion if these instiutions were managed by the Education Department.

Sir, my next submission is this. The Hon. the Minister for Education has mentioned that he proposes to start a number of pre-primary nursery schools attached to various elementary schools in the villages in out State. My appeal would be that he should also take over the Balwadis, which are about 4,000 in number and which are being run by the Department of Social Welfare because these are really pre-primary nursery schools. They would be excellent centres for giving the nursery education in Tamil which the Hon. Minister wants to implement during the coming year.

(பிற்பகல் 12-10)

Sir, as far as University education is concerned, may I express our great unhappiness with the situation that exists in the educational field at the present moment? I realise that every section involved in education seems to be dissatisfied. The students are dissatisfied for some reason or other and they do not want semester examination and internal assessment. The teaching staff and non-teaching staff seem to have their own grievancies. The Managements



1981 பிப்ரவரி 10] [Thiru A. R. Damodaran]

both public and private, seem to be in trouble and the Education Department, which acts as Supervisor for all these agencies, seems to be even more confused about the present situation. I would particularly like to refer to the recent call which was made by the Joint Council of Action of the University Teachers wherein they have decided to go on strike on the issue of the amendment of the Annamalai University Act. Many adjournment motions have been moved in this regard and the Government have also made their position clear and I would make an earnest appeal to them that although the teachers in Chaidambaram had infringed the prohibitory orders and were arrested because of such infringement of prohibitory orders to keep University-Professors and Assistant Professors for 10 days in jail may not improve their mentality nor would it help them in any way, when they come back to their institutions for teaching the students. Now that the Joint Council of Universtiy Teachers has stated that it has postponed its agitation and that it is prepared to discuss the matter with the Government, my appeal to the Government is that they should announce their release from jails. The sooner the announcement is made the greater will be the relief to the student community. The teachers who have infringed the prohibitory orders and who have been arrested and put in jails should be released immediately so that normally may be restored to some degree in our educational institutions.

While referring to University education, may I say that the Government are not strict where they should be very strict in certain matters and where strict disciplinary rules have to be enforced? One thing where such discipline is lacking in most of our colleges and Universities is the system of ragging that exists and which the Government have not been able to control. To my knowledge, there have been two suicides in Tamil Nadu after the admission of students in 1980-81. One was in Karaikudi where a young student committed suicide. The other was in the Government Arts College in Kumbakonam where another student committed suicide. The Government's view is that the suicides were not because of ragging but due to other factors. I realise the Government will be bound to say like this; otherwise they will have to accept responsibility. My point is: Why should a young student who joins a College commit suicide? What is the reason for him to commit suicide? I have gone into the case history of both those students and I have discussed it with the other students who have been in those institutions. I may inform the Government, with all the credibility

[திரு. எஸ். டி. சோமசுந்தரம்] [1981 பிப்ரவரி 10

யாரோ ஒருவர் ரிசைன் செய்து விட்டார் என்று கூட இங்கே எடுத்துக் காட்டினார்கள்; எடுத்துக்காட்டியது எவ்வளவு பெரிய ஆள் என்பதும் எனக்குத் தெரியும். இருந்தாலும் யாருக்கும் நாங்கள் குறைந்தவர்கள் அல்ல என்பதையும் நான் இங்கே தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** இதுகுறித்து என்னுடைய தீர்ப்பைப் பிறகு அறிவிக்கிறேன்.

### 3. கவன ஈர்ப்பு.

**(1) கன்னியாகுமரி மாவட்டம், குலசேகரம் போலீஸ் நிலையத்தில் விசாரணைக்காகக் காவல் நிலையத்திற்கு அழைத்துச் செல்லப்பட்ட திரு. ராஜு காவல் நிலையத்திலேயே மர்மமாக மரணமுற்றது குறித்து.**

***திரு. க. இராமமூர்த்தி :** தலைவரவர்களே, கீழ்க்கண்ட அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினைக் குறித்து மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன் :—

"கன்னியாகுமரி மாவட்டம், குலசேகரம் போலீஸ் நிலையத்தில், விசாரணைக்காக அழைத்துச் செல்லப்பட்ட இந்திரா காங்கிரஸ் கட்சியின் அரிசனப் பிரிவுத் தலைவர் திரு. இராஜு அவர்கள், காவல் நிலையத்தில் தாக்கப்பட்டு, காவல் நிலையத்திலேயே மர்மமாக மரணமுற்றது குறித்தும், அதன் காரணமாக அந்தப் பகுதி மக்களிடையே ஏற்பட்டுள்ள பதட்ட நிலை குறித்தும்".

**மாண்புமிகு திரு. கா. இராசா முகமது (மாண்புமிகு முதலமைச்சர் சார்பில்) :** விவர அறிக்கை @ அவைமுன் வைக்கப்பட்டுள்ளது.

***திரு. க. இராமமூர்த்தி :** விவர அறிக்கையிலே திரு. இராஜு அவர்கள் 18—1—1981 அன்று இரவு 9-30 மணிக்கு போலீசாரால் காவல் நிலையத்திற்கு கிராமத்திலிருந்து அழைத்துச் செல்லப்பட்டார் என்கிற விவரம் இருக்கிறது. திரு. இராஜு அவர்கள் அந்த ஊரிலேயுள்ள ஒரு வழிபாட்டு முறையை எதிர்த்திருக்கிறார். அவர் நேரிடையாகத் தலைமை ஏற்றோ, வேறு விதத்திலோ அங்கு போகவில்லை. இரவிலே கைது செய்யப்பட்டு அழைத்துச் செல்லப்பட்டிருக்கிறார். எனக்கு வந்த விவரங்கள்படி அந்த நேரத்திலே இராஜு அவர்கள் உடல் நலமில்லாமல் இருந்திருக்கிறார். ஆகவே அவரை காவல் நிலையத்திற்கு அழைத்துச் செல்ல வேண்டாம் என்று கிராம மக்கள் திருப்பத்

---

@ 229-231 ஆம் பக்கங்களில் இணைப்பு II ஆக அச்சிடப்பட்டுள்ளது.



1981 பிப்ரவரி 10] [திரு. க. இராமமூர்த்தி]

திருப்பக் கேட்டுக்கொண்ட பிறகும், போலீசார் அவரை காவல் நிலையத்திற்கு அழைத்துச் சென்றிருக்கிறார்கள். அவருக்கு இருதய நோய் இருந்திருக்கிறது என்பது உண்மைதான் என்றாலும்கூட, இருதய நோய் உள்ளவர்களை நன்றாக வைத்து பாதுகாப்பு கொடுக்க வேண்டும் என்பதையும் மறுக்க முடியாது. அதற்கு மாறாக அவருடைய உடலில் எந்த வித காயமும் ஏற்படுத்தாமல், வயிற்றில் குத்துவதன் மூலம் சாகடிப்பதற்கு வாய்ப்பு உண்டு. அது போன்று காவல் நிலையத்தில் நடந்ததால், அவர் இறந்திருக்கிறார். அரிஜனத் தலைவரான அவர் சுயமரியாதை ஈடுபாட்டோடு எதையும் எடுத்துப் பேசினார். குற்றம் நடந்தபோது அந்த இடத்தில் இல்லாதவர். இதையும் அரசு கவனத்தில் கொண்டிருக்கிறதா? இதன் அடிப்படையிலும் அரசு நடவடிக்கை எடுத்திருக்கிறதா?

**மாண்புமிகு திரு. கா. இராசா முகமது :** விவர அறிக்கையிலே இதுகுறித்து தெளிவாக விவரம் தரப்பட்டிருக்கிறது. 17—1—1981 அன்று அந்தக் கிராமத்தில் பொது இடத்திலே கலவரம் நடந்ததாக காவல் நிலையத்திற்குத் தகவல் வந்ததால், காவல் நிலைய உதவி ஆய்வாளர் சம்பவம் நடந்த இடத்தைப் பார்வையிட்டு எழு நபர்களை 18—1—1981 அன்று காலை காவல் நிலையத்தில் ஆஜராகும்படி கூறிவிட்டு வந்திருக்கிறார். அவ்வாறு அவர்கள் அன்று காவல் நிலையத்திற்குச் செல்லாததால், அவர்கள்மீது குற்ற எண் 17/81-ல் இந்திய தண்டனைச் சட்டம் 160-வது பிரிவின்கீழ் வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது. 18—1—1981 இரவு 8-00 மணி அளவில் மறுபடியும் அக்கிராமத்தில் கலவரம் நடந்ததையொட்டி உதவி ஆய்வாளரும் அவர் பார்ட்டியும் சம்பவம் நடந்த இடத்திற்குச் சென்று ராஜுவையும் மற்றும் எட்டு பேரையும் இரவு 9-30 மணிக்குக் காவல் நிலையத்துக்குக் கொண்டு வந்துள்ளார்கள். உடம்பில் காயம் எதுவும் காணப்படவில்லை என்றாலும் கூட வயிற்றில் குத்தியிருக்கலாம் என்று இங்கே உறுப்பினரும் சொன்னார். அதுபோல் சாட்சிகளும் கூறியுள்ளார்கள். இதுகுறித்து வழக்கு இருக்கிறது. விசாரணைக்கு ஏற்பாடு செய்திருக்கிறோம். அவரின் வயிற்றில் குத்தியதாகச் சாட்சிகள் கூறியதாக அறிக்கையிலும் கூறப்பட்டிருக்கிறது. விசாரணையின்போது இறந்துபோன இராஜுவை தலைமை காவலர் 865. மேலுவல் வயிற்றில் குத்தியதாக சாட்சிகள் கூறியதால், அவர் தற்காலிக வேலை நீக்கம் செய்யப்பட்டிருக்கிறார். இது இப்போது வருவாய்த் துறை கோட்ட அலுவலரின் விசாரணையில் இருக்கிறது. விசாரணை அறிக்கை வந்த பிறகு, நிச்சயமாக உறுதியாக நடவடிக்கையை இந்த அரசு எடுக்க முடியும் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

at my command, that these boys were definitely driven to the point of committing suicide because of the unhealthy ragging that had been taking place in those institutions. I will be the first person to support the Government if they are able to identify the guilty people who indulge in ragging in a very immoral manner and I will be the first person to support the Government if they are prepared to rusticate those students for 3 years, if they are found indulging in unhealthy ragging. I have been a student in a College and I have myself stayed in Hostels. In those days, ragging took the custom of giving a dip in the school pond and it was a very healthy form of ragging. Nowadays it is extremely immoral and unhealthy, and sadistic and cruel. I would request the Government to take strict action to do away with this malady.

In hostels, may I voice the concern of parents that some degree of security will have to be provided for those students who want to study? I am the last person to advocate the entry of Police in the student campuses. In fact, if I may express my personal view, I think that it will produce greater harm than good. But the time has come for the Government to identify certain troublesome spots—I shall not name them and I will mention the troublesome spots to the Hon. Minister—where some sort of security guards may have to be provided by the College authorities themselves. Let us have in those troublesome hostels, perhaps three or four security guards appointed by the Principal of the College or the management of the College itself so that some degree of protection may be given to the boys when they are unduly harassed by anti-social elements that exist in hostels. Sir, in such hostels, alcohol and drugs are available and other vicious habits are also being practised. Such habits are being practised by a very small minority of the students and the majority has to obey these people because, otherwise, they will be harassed in those hostels. Therefore, I would plead with the Government to take very strict action in the coming year at least to prevent ragging in the educational institutions in Tamil Nadu.

Sir, regarding Civil Supplies—and I am glad that the Hon. the Minister for Civil Supplies is here—may I point out that the 40 per cent levy that the Government propose to obtain in paddy is paralysing the paddy trade? In fact, shortages are increasing in our State and we will soon reach a stage where all the stocks are exhausted and people will be driven from pillar to post to obtain



their requirements of rice. I agree that it may have been inevitable because we have had drought in Tamil Nadu in many districts which were good producers of paddy. The Central pool has also depleted and has become very slender. But, I would request the Government to consider whether the levy could not be cut down to a more moderate figure of 15 per cent or 20 per cent so that the remaining 80 per cent could be marketed as surplus in those areas. Otherwise, I am really worried whether we would not ourselves be accelerating a difficult food situation.

The Hon. the Minister for Labour, during the intervening period between August 1980 and January 1981, introduced a very revolutionary G.O. under the Minimum Wages Act whereby he fixed minimum wages for over two lakhs of shops and establishments in Tamil Nadu. He sought to fix minimum wages for employees of shops and establishments in areas comprised in Municipalities, Panchayats, etc. But, there is one serious lacuna which the Chamber of Commerce have also pointed out to the Hon. Minister. Unlike the Kerala Act where provision has been made for fixing three-fourths of the minimum wage for adolescents between the ages of 14 and 18, in the Tamil Nadu G.O. no such provision has been made. I would reiterate my plea to the Hon. the Minister for Labour that he should seek to amend the Minimum Wages Order so that small boys who are employed in grocery shops, etc., who are all affected by this order and who are between the ages of 14 and 18 will be promised a wage which is three-fourths of the minimum wage that has been fixed. Otherwise, Government will be causing only greater unemployment in the shops and establishments sector because many of these young boys are now being sent out because of the high wages that have been fixed.

One word more and I have done, Sir, I realise that I have almost finished the time allotted to me. My next point is with reference to the idea of the Hon. the Minister for Transport of fixing speed regulators on lorries. There is only one company which manufactures these speed regulators and the price of that speed regulator is Rs. 5,500. I think that it would be very unwise for the Government to pass an order stating that all the 25,000 lorries and all the 12,000 or 13,000 buses in our State should immediately fix speed regulators, because they are not available in the market. My suggestion to the Government would be that, if they want these speed regulators to be fixed, then the speed regulators should be

fixed as part of the original equipment of the lorries when they are sold by concerns like Ashok Leyland, Tata-Mercedes-Benz, etc. The only difficulty is that Tata-Mercedes-Benz are having their factory outside Tamil Nadu and I do not know how such a rule can be enforced. Probably, the Government may discuss this with the Government of India before having these regulatory controls fixed because it would be impossible, administratively speaking, to have these implemented by the issue of a G.O. I believe such a G.O. was issued and time and again its implementation has been postponed. Therefore, I would request the Government to reconsider this matter.

Sir, I have only one more point to make and that is about Mobile Courts. I know that there were a lot of complaints against the Mobile Courts, about corruption, etc. when they were in Madras City. But the time has come for us in Madras City to re-institute those Mobile Courts. In fact, I would request the Government to consider whether retired Government officers who have held very responsible positions and retired as Deputy Secretaries, etc. could not be put as Honorary Magistrates in charge of these Mobile Courts. We will require only eight or nine of them. I would request the Government, in view of the large number of traffic accidents, kindly to consider this plea and see whether these Courts cannot be installed. Thank you.

(பிற்பகல் 2—20)

திரு. க. இராமமூர்த்தி : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, அரசினுடைய துணை மானியக் கோரிக்கையைச் சமர்ப்பித்திருக்கிற நேரத்தில் அரசு எடுத்துக்கொண்டிருக்கிற நடவடிக்கைகள் மேலும் சிறப்பாக அமைய வேண்டுமென்ற நம்பிக்கையோடு, எண்ணத்தோடு சில கருத்துக்களை நான் தெரிவிக்க விரும்புகிறேன். இந்தத் துணை மானியக் கோரிக்கையில் கேட்டிருக்கின்ற தொகைக்காக பல காரணங்களைக் கூட்டிக் காட்டியிருக்கிறார்கள். அதில் ஒரு சிலவற்றை மட்டும் நான் சொல்ல விரும்புகிறேன். வட ஆற்காடு, இராமநாதபுரம் மாவட்டங்களில் காவல் நிலையங்களை வலுப்படுத்துவதற்காகவும் தற்காலிகக் கூடுதல் பணியாளர்களை நியமிக்கவும் மேற்கொண்டு அதன் தொடர்பான செலவுகளுக்காகவும் ஒரு தொகையைக் கேட்டிருக்கிறார்கள். இது தொடர்பாக ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். அந்தப் பகுதிகளிலே இருக்கின்ற சட்டம், ஒழுங்குப் பிரச்சினை நக்சலைட்டோடு இணைந்த பிரச்சினை என்ற நிலையிலே, சில தேவையான நடவடிக்கைகளை விரைவாக எடுக்க வேண்டிய அவசியம் அரசுக்கு ஏற்பட்டது என்பதை





நான் மறுக்கவில்லை. அதே நேரத்தில் நாம் சில சலுகைகளை, அதிகாரங்களை, காவல் துறையினருக்கு, அவர்கள் ஈடுபட்டிருக்கிற பணியின் காரணமாக அளிக்கின்றபோது, அவர்களுக்கு அளிக்கப்படுகின்ற அந்தப் பாதுகாப்பை காவல் துறையினர் தவறாகப் பயன்படுத்தாமல் பார்த்துக்கொள்ள வேண்டியது அரசின் முக்கியமான கடமையாகும். அந்தப் பகுதியிலே இருந்த பயங்கர இயக்கத்தை ஒடுக்கியதிலே, அடக்கியதிலே காவல் துறையினர் எடுத்த நடவடிக்கைகளும், பட்ட சிரமங்களும் உண்மையிலேயே பாராட்டப்பட வேண்டியது என்பதை நான் மறுக்கவில்லை. நானும் பாராட்டுகிறேன். ஆனால், அரசாங்க அதிகாரிகளாக இருக்கும் காவல் துறையினர் சில இடங்களில் அரசியலை நுழைத்து தாங்கள் அரசு ஊழியர்கள் என்பதை மறந்து செயல்பட்ட சம்பவங்களும் சில நிகழ்ந்துள்ளன என்பதை வேதனையோடு அரசின் கவனத்திற்குக் கொண்டுவரக் கடமைப்பட்டிருக்கிறேன். அந்தப் பகுதியிலே பதட்டம் இருந்தபோது, காவல் துறையினர் தங்களுடைய பணிகளுக்கு இடையூறு இருக்கக் கூடாதென்று எண்ணி, சில பேருக்கு அனுமதி அளித்து அங்கே உலாவ விட்டிருக்கிறார்கள். ஆனால் அந்தப் பகுதியிலே என்ன நடைபெற்றது என்று அறிந்து வரச்சென்ற வேறு சிலர் தடைப்படுத்தப்பட்டிருக்கிறார்கள். அவர்களுக்குப் போதிய பாதுகாப்புத் தரவில்லை. சில பத்திரிகை நிருபர்கள் கூட தாக்கப்பட்டிருக்கிறார்கள். குறிப்பிட்டுச் சொல்ல வேண்டுமென்றால், வட நாட்டிலிருந்து வெளியாகும் சில பத்திரிகைகளின் நிருபர்கள் இங்கே என்ன நடைபெற்றது, இதை எப்படி அரசு சமாளிக்கிறது என்று கண்டறிவதற்காக வந்திருக்கிறார்கள் அவர்கள் தாக்கப்பட்டிருக்கிறார்கள். இந்தியன் எக்ஸ்பிரஸ் நிருபர் சந்திரசேகர் தாக்கப்பட்டிருக்கிறார். இதையெல்லாம் பொது மக்களே செய்தார்கள் என்ற ஒரு நிலையை உருவாக்குவது காவல் துறைக்கும் நல்லதல்ல, அரசுக்கும் நல்லதல்ல. இது மட்டுமல்ல. கைது செய்யப்பட்ட நக்சலைட்டுகள் சிறைக்கு அழைத்துச் செல்லப்பட்டிருக்கிறார்கள். அவர்கள் மத்திய சிறைச்சாலையில் வைக்கப்பட்டிருக்கிறார்கள். அப்படிப்பட்ட சிறையில் இருப்பவர்களைப் பார்க்க வேண்டுமென்றால், விதி எப்படியிருக்கிறது என்பது எனக்கும் தெரியும். ஆனால் அந்த விதிகளையெல்லாம் மீறி ஒரு சில அரசியல்வாதிகள் அவர்களைச் சந்திக்க முடிகிறது. அவர்களோடு பேச முடிகிறது. பேசிய பிறகு வெளியே வந்து அதிகாரபூர்வமாக அறிக்கையும் விடமுடிகிறது. அப்படியானால் காவல் துறையும், இந்த அரசாங்கமும் எப்படிச் செயல்படுகின்றன என்ற சந்தேகம் வருகிறது. ஒரு வேளை அவர்கள் அனுமதியைக் கேட்டார்கள், கொடுத்தோம், மற்றவர்கள் கேட்கவில்லை என்று சொல்லலாம். ஆனால் உண்மையிலேயே நிலைமை எப்படி இருந்தது என்பதைப் பரிட்சார்த்தமாக அரசின் கவனத்திற்குக்

கட்டினார்கள் என்பது தெரியவில்லை. பப்ளிக் ஒர்க்ஸ் டிப்பார்ட்மெண்ட் கட்டியதாகத் தெரியவில்லை. மதுரை கார்ப்பரேஷனைக் கேட்டால் எங்களுக்குத் தெரியாது என்று சொல்லுகிறார்கள். அவைகளை விட்டு வசதி வாரியத்தைச் (Housing Board) சேர்ந்தவர்கள்தான் கட்டியிருப்பார்கள் என்று நினைக்கிறேன். கார்ப்பரேஷன் அனுமதியில்லாமல் கட்டியிருந்தால் தண்ணீர் சப்ளை, சூவேஜ் வசதிகள் எல்லாம் எப்படி கிடைக்கும்? அந்தக் கழிப்பறைகள் எல்லாம் தண்ணீர் வசதி இல்லாமல் இருக்கின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். எக்சிபிஷன் மைதானத்திலே இருந்த கழிப்பறைகள் இப்போதே விழுந்துவிட்டன என்ற தகவல் வந்திருக்கின்றது. நான் அரசாங்கத்ினுடைய நோக்கத்தைக் குறை சொல்ல விரும்பவில்லை. அந்த நோக்கம் எப்படித் தவறாக நிறைவேறியிருக்கிறது என்பதைப் பார்க்க வேண்டும். அங்கே தண்ணீர் வசதியில்லாத கழிப்பறைகள் இருக்கின்றன. பல கழிப்பறைகள் கட்டி முடித்து ஒரு மாத காலத்திற்குள்ளாகவே இடிந்து விழுகின்றன. இப்படி சம்பந்தப்பட்ட துறைகளோடு தொடர்பு இல்லாமலேயே வேலைகள் செய்யப்பட்டிருக்கின்றன. இப்படி வேக வேகமாகக் காரியங்கள் செய்யப்பட்ட காரணத்தினால் நமது நல்ல நோக்கத்திற்கு மாறாக வீண் விரயங்கள் ஏற்பட்டிருக்கின்றன என்பதை நான் அங்குள்ள நிலைமைகளைப் பார்த்தவன் என்ற அளவில், எடுத்துச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அரசுப் பணியாளர்கள் வீடு கட்டுவதற்குத் தேவைப்படும் கூடுதல் நிதிக்காக இதில் நிதி ஒதுக்கீடு கேட்டிருக்கிறார்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்களின் கவனத்திற்கு ஒன்றைக் கொண்டுவர விரும்புகிறேன். சில நடவடிக்கைகளை எடுக்கின்றபோது, எவ்வளவு பொறுப்போடு நடவடிக்கைகளை எடுத்தாக வேண்டும் என்பதை அமைச்சர் அவர்கள் பார்க்க வேண்டும். அரசுப் பணியாளர்களுக்கு வீடு கட்டப் பணம் கடனாகக் கொடுக்கிறார்கள். அதற்காக என்று நிதி ஒதுக்கீடு செய்கிறோம். அப்படி நிதி ஒதுக்கீடு செய்து, விண்ணப்பம் செய்திருப்பவர்களுக்குக் கடன் கொடுக்கின்றபோது, சங்கடம் ஏற்படத் தேவையில்லை. அனுமதி பெற்று கடன் பெறுகிறார்கள். ஒரு முறை, இரண்டு முறை என்று தவணை முறையில் கடன் கொடுக்கப்படுகிறது. ஆனால் இடையில் அவர்களுடைய கடன் ரத்து செய்யப்படுகிறது என்று சொல்வதனால், அரசு ஏன் அனுமதி கொடுக்க வேண்டும், எதற்காக நிதி ஒதுக்கீடு என்று ஒன்றைச் செய்யவேண்டும்? அந்தக் கடன் கொடுப்பதை முறைப்படுத்திச் செயல்படுத்தாத காரணத்தினாலே, கடன் பெற்றவர்கள் தண்டிக்கப்படுகின்ற நிலைமைகள் ஏற்படுகின்றன. அரசு முறைப்படுத்திச் செய்யாத காரணத்தினால், அரசுப் பணியாளர்கள் கஷ்டத்திற்குள்ளாவது என்பது எப்படி நியாயம்? அது மட்டுமல்ல. இன்றைக்குப் புதிதாக பட்ஜெட்டிலே அதற்கென நிதி ஒதுக்கீடு செய்துதான் அந்தப் பணத்தைக்



கடனாகக் கொடுக்க வேண்டும் என்ற நிலையில், அந்தத் துறையினர் எதிர் பார்த்துக் காத்துக்கொண்டிருக்கின்றனர். ஒரு முறை, இரு முறை கடன் தவணைகள் கிடைத்தவர்கள் அதற்கு மேல் வேலையைத் தொடர்ந்து செய்ய முடியாமல் இருக்கிறார்கள். இந்தக் காலதாமதத்தினால், அவர்கள் பாதிக்கப்படுகிறார்கள். இடையில் சிமெண்ட் விலை உயர்கின்றது. மற்ற பொருள்களின் விலைகளும் உயர்கின்றன. இதனால் வாங்கி இருப்பு வைத்திருப்பதும் கெட்டுப் போகின்றது. ஏற்கெனவே வாங்கவேண்டியதை வாங்காத காரணத்தினால், விலை உயர்வை அவர்கள் ஏற்க வேண்டியிருக்கிறது. இதனால் அரசுப் பணியாளர்கள் கட்டிட வேலையை நிறைவேற்ற மேலும் வேறு இடங்களில் கடன் வாங்க வேண்டியிருக்கிறது. நடவடிக்கைகளை எடுக்கவேண்டிய நேரத்தில் நிதித் துறையிலேயும், மற்ற சம்பந்தப்பட்ட துறையிலேயும் எடுக்காமல், முறையாகத் திட்டத்தைச் செயல்படுத்தாமல் விட்டதால் இந்த சங்கடங்கள் அரசுப் பணியாளர்களுக்கு ஏற்பட்டிருக்கின்றன. இதை மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். அதற்கான திட்டங்களை வகுப்பது மட்டும் முக்கியமானதல்ல, அந்தத் திட்டங்களை மிகுந்த பொறுப்போடு செயல்படுத்துவதும் முக்கியமானது என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவரக் கடமைப்பட்டிருக்கிறேன் என்பதைத் தெரிவித்துக் கொண்டு என் உரையை முடிக்கிறேன்.

* திரு. க. மீனாட்சிசுந்தரம்: மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த 1980-81 ஆம் ஆண்டு முதல் துணை மதிப்பீட்டின் மீது என்னுடைய கருத்துக்களை வெளியிடுவதற்கு எனக்கு வாய்ப்பளித்தமைக்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். இதிலே கூட்டுறவுச் சங்கங்கள், ஏழை விவசாயிகளுக்குக் கடன் வழங்கியது பற்றியெல்லாம் சொல்லப்பட்டிருக்கிறது. நம் நிதியமைச்சர் அவர்கள் தஞ்சை மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள். நானும் தஞ்சையைச் சேர்ந்தவன்; ஒரு விவசாயக் குடும்பத்தைச் சேர்ந்தவன். அந்த வகையிலே நான் ஒன்றைச் சொல்லிக்கொள்கிறேன். இதிலே 5 ஏக்கர் நிலம் உள்ளவர்களுக்கு குறிப்பாக புயலால், வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட 5 ஏக்கர் நிலம் உள்ள விவசாயிகளுக்கு, குத்தகைதாரர்களுக்குக் கடன் சலுகைகள் வழங்கப்பட்டிருக்கின்றன. 5 ஏக்கர்களுக்கு மேல் ஒரு சென்ட் வைத்திருந்தால்கூட, அவர்களுக்கு அந்தச் சலுகை கிடையாது. ஒரு சென்டுக்கு ரூ. 60 செலவு செய்து விளைந்தால், அதிகபட்சம் ரூ. 15 கிடைக்கும். மற்றவர்கள் 5 ஆயிரம், 10 ஆயிரம் ரூபாய் அளவுக்கு லாபம் பெறுகிறார்கள். 5 ஏக்கருக்கு மேல் ஒரு துளி நிலம் இருந்தாலும், அவர்களுக்கு இந்தச் சலுகைகள் இல்லை என்று சொன்னால், அது சரியில்லை.

கடமையாதலால், அந்த வகையில் அவர்களுக்கு உதவுவதற்காக கடற்கரையில் பாதுகாப்பு நிலையம் அமைத்து எந்தெந்த விசைப்படகுகள் கடலுக்குச் செல்கின்றன என்று கணக்கெடுத்து அவர்கள் விசைப்படகுகளில் எந்தெந்தப் பகுதிகளில் இருக்கிறார்கள், எந்த நிலையில் இருக்கிறார்கள் என்று கண்காணிக்கும் ஒரு அமைப்பு நிலையை ஏற்படுத்த அரசு முன்வருமா?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறுவதுபோன்ற முன்னேற்பாடான நடவடிக்கை நல்லதுதான். என்றாலும் அது எந்த அளவுக்குச் சாத்தியம் என்பது தெரியவில்லை. இப்போது நாம் ஹெலிகாப்டர் மூலமாகவோ அல்லது கப்பல் படையினரின் உதவி மூலமாகவோ அவர்களுக்கு உதவியளிக்கிறோம். இந்த விசைப் படகில் இரண்டு பேர்கள் இறந்துபோனதற்குக் காரணம் போதுமான அளவுக்கு உணவு இல்லாததுதான். எப்படிப்பட்ட நடவடிக்கைகளை நாம் மேற்கொண்டால் அவர்களுக்குத் தேவைப்படும் பாதுகாப்புக்களை நாம் தர முடியும் என்பதை ஆராய்ந்து அதற்கான முயற்சிகளிலே நாம் ஈடுபடலாம். இதில் எந்த அளவுக்கு மத்திய அரசு பங்குகொள்ளும், மாநில அரசு பங்குகொள்ளும் என்றெல்லாம் பார்த்து, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறுகின்ற கருத்துக்களின் அடிப்படையில் அரசு பரிசீலிக்கும்.

***திரு. ம. சங்கரலிங்கம்:** விசைப் படகுகள் கடலுக்குள் ஐந்து மைல் வரையில் போகலாம் என்றும், நாட்டுப் படகு இரண்டு மைல் தூரம் வரையில் போகலாம் என்றும் விதி இருக்கிறது. இந்த தூரத்திற்கும் அப்பால் அவர்கள் மீன்பிடிக்கப் போகிறார்கள். ஆகவே, மீன் பிடிக்கின்ற துறைமுகங்கள் எந்தெந்தப் பகுதி என்று நிர்ணயம் செய்து, அவர்களைக் கண்காணிக்கும் பிரிவு ஒன்றை ஏற்படுத்தி நடைமுறைப்படுத்தவும், அவர்களுக்கே ஒரு ஹெலிகாப்டர் வழங்கி அவர்களே தங்களைக் கண்காணிப்பது மிகவும் தேவை என்று கருதுவதால் அரசு இதைப் பரிசிலனை செய்யுமா? இறந்தவர்களுடைய குடும்பத்திற்கு இரண்டு ஆயிரம் ரூபாய் மொத்தமாகவும், பிறகு 3,000 ரூபாயும் கொடுக்கப்படும் என்று அறிக்கையில் கூறப்பட்டிருக்கிறது. அவ்வாறு இறந்துபோகின்ற மீனவர் குடும்பத்தில் வேலை செய்வதற்கு வேண்டிய தகுதி உள்ளவர்கள் இருந்தால், அவர்களுக்கு மீன் துறையின் மூலமாக வேலையளிக்க அரசு முன்வருமா?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** பாதுகாப்புத் தருகின்ற அளவுக்கு நடவடிக்கை எந்தெந்த வகையில் எடுக்கலாம் என்று அரசு ஆராயலாம். இறந்த மீனவர் குடும்பங்களுக்கு 5,000 ரூபாய் கருணை மானியம் வழங்கப்படுகிறது. 2,000 ரூபாய் மொத்தமாகவும், மீதி 3,000 ரூபாய் மாதம்



ஒன்றுக்கு 100 ரூபாய் வீதம் 30 மாதங்களுக்கும் வழங்கப்படுகிறது. மேலும், அவர்களின் குழந்தைகள் வாழ்க்கைத் தொழில் கல்வியை மேற்கொள்ள இயலும் வகையில் கூடுதலாக 5,000 ரூபாய் வழங்கப்படுகிறது. மேலும், அவர்களில் போதுமான அளவுக்குப் படித்து வேலைபார்க்கும் அளவுக்குத் தகுதி உள்ளவர்களுக்கு வேலைவாய்ப்பில் முன்னுரிமை வழங்க அரசு பரிசீலிக்கும்.

## 4. அரசின் தீர்மானம்.

**பொதுக் கணக்குக் குழுவிற்கு மேலவை உறுப்பினர் தேர்தல் குறித்து.**

**மாண்புமிகு திரு. க. ராசா முகமது:** மாண்புமிகு தலைவர் அவர்களே,

"1980-81 ஆம் ஆண்டிற்குரிய பொதுக் கணக்குக் குழுவில் ஏற்பட்டுள்ள வெற்றிடத்திற்கு மாண்புமிகு உறுப்பினர் திரு. பா. ரா. தாமஸ் அவர்கள் உறுப்பினராகப் பணியாற்ற வேண்டும்"

என்ற தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர்:** அவை முன் உள்ள பிரச்சினை—

"1980-81 ஆம் ஆண்டிற்குரிய பொதுக் கணக்குக் குழுவில் ஏற்பட்டுள்ள வெற்றிடத்திற்கு மாண்புமிகு உறுப்பினர் திரு. பா. ரா. தாமஸ் அவர்கள் உறுப்பினராகப் பணியாற்ற வேண்டும்".

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

## 5. 1980-81 ஆம் ஆண்டுக்கான செலவு குறித்த முதல் துணை விவர அறிக்கையின்மீது விவாதம்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர்:** இருக்கிற நேரத்தைப் பயன்படுத்தி துணை விவர அறிக்கையின் மீது உள்ள விவாதத்தை முடித்தால், மாலையிலே மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவரும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும் பேசுவதற்கு வசதியாக இருக்கும். ஆகவே, காலையிலேயே மாண்புமிகு உறுப்பினர்கள் ஒவ்வொருவரும் சீக்கிரம் பேசி முடிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

(மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் தலைமை)

* **THIRU A. R. DAMODARAN:** Mr. Deputy Chairman, Sir, in view of the very brief time at any disposal, I request to be pardoned if I refer to some important aspects of the Supplementary Estimates that have been placed for our approval.

அங்கே இருக்கக்கூடிய விவசாயிகளுக்கு இந்த நிலை ஏற்பட்டிருப்பது வருந்தத்தக்கது. சாதாரணமாக ஒரு 5 ஏக்கர் என்பதை எண்ணிக்கையிலே, நடைமுறையிலே பார்த்தால் 5 ஏக்கருடன் ஒரு பாதிக்குக் குறைந்து இருந்தால், அதாவது 5.49 ஏக்கர் என்று இருந்தால், அதையும் 5 ஏக்கர் என்று தான் கருத வேண்டும். ஆகவே அப்படி கொஞ்சம் விஸ்தாரமாக இருந்தால் கூட, அதை 5 ஏக்கர் என்று கொள்ளக்கூடிய வகையிலே வழி செய்யலாம். 5 ஏக்கருக்கு மேல், 10 ஏக்கர், 15 ஏக்கர் என்று நிலம் உள்ளவர்கள் பெரிய மிராசுதாரர்கள் என்று சொல்கிறார்கள். இதிலே நான் ஒன்றைச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். 10 ஏக்கர் நிலம் 90 ஆயிரம் ரூபாய் தான் மதிப்பு இருக்கும். அதற்கு மேல் இருக்காது. தஞ்சை மாவட்டத்தில் உள்ள நிலத்தின் மதிப்புகளைப்பற்றிச் சொல்ல முடியாது. ஆனால், பல லட்சம் ரூபாய் மதிப்புள்ள பங்களாக்கள், மாளிகைகள், சினிமா கொட்டகைகள் எல்லாம் வைத்திருப்பவர்கள் இருக்கிறார்கள். அவர்களுக்கு நிறைய வருவாய் வருகின்றது. அப்படிப்பட்ட நிலைமைகளில் இருப்பவர்களுக்கு எந்தத் தொல்லையும் வருவதில்லை. ஆனால் 10, 15 ஏக்கர் நிலம் வைத்திருப்பவர்கள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். இந்த ஆண்டு விவசாயம் பெருமளவிற்குப் பாதிக்கப்பட்டிருக்கிறது. விவசாயிகள் நஷ்டத்திற்கு ஆளாகியிருக்கிறார்கள். எனவே முதல் 5 ஏக்கர் நிலம் என்று நிர்ணயிப்பதை 5.49 ஏக்கர் என்ற அளவிலேயாவது மாற்ற வேண்டும். அதே நேரத்திலே பெரிய விவசாயிகள் என்று அரசு சொல்லக்கூடிய அளவுக்கு இருப்பவர்களெல்லாம் பெரிய விவசாயிகள் அல்ல. 10, 15 ஏக்கர் நிலம் வைத்திருப்பவர்கள் எல்லாம் பெரிய விவசாயி என்று சொல்லிவிட முடியாது. இந்த முதல் 5 ஏக்கரை குறைத்துக் கணக்கிட்டு அவர்களுக்கும் அந்தச் சலுகைகளைத் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

எனக்கு முன்னர் பேசிய நண்பர் திரு. க. இராமமூர்த்தி அவர்கள் ஊழியர்கள் வீடு கட்டுதலைப்பற்றிச் சொன்னார்கள். அது பற்றி நேற்றைய தினம் கூட இந்த அவையிலே வாதம் செய்தோம். வீடு கட்டுவதற்கென்று அரசு ஊழியர்களுக்கும், அரசு ஆசிரியர்களுக்கும் கடன் தந்துகொண்டிருக்கும் போது, இடையிலே நிறுத்தப்பட்டு பட்ஜெட்டிலே தான் நிதி ஒதுக்கப்படும் என்ற நிலை ஏற்பட்டிருக்கிறது. அது அவர்களுடைய தவறு அல்ல. அரசு கடன் தருவதை நிறுத்திவிட்டதனால், அவர்கள் கட்டடத்தைத் தொடர்ந்து கட்ட முடியவில்லை. அதனால் கடன் வழங்குவது நிறுத்தப்பட்ட காலத்திற்கு வட்டியையாவது அரசு தள்ளுபடி செய்ய வேண்டும். அரசு கடனைத் தொடர்ந்து தந்த பிறகு, அதைச் செயல்படுத்திய பின்பு வட்டி தரக் கூடிய நிலையை ஏற்படுத்த வேண்டும் என்று அரசைக் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். மற்றொன்று சொல்லிக்கொள்கிறேன். பாதியில்



நிற்கின்ற வீடுகளைக் கட்டுவதற்காவது உடனடியாக துணை மானியத்தில் ரூ. 50 லட்சம் ஒதுக்க வேண்டும். நிதி ஒதுக்கியபின் உடனடியாக அவர்களுக்குக் கடன் கிடைக்க ஏற்பாடு செய்ய வேண்டுமென்று மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள், சென்ற முறை மத்திய அரசு நிர்ணயித்த அளவுக்கு அதே தேதியில் அகவிலைப் படி கொடுத்ததற்காகப் பாராட்டியிருக்கிறேன். இந்த முறை 1—9—1980, 1—12—1980 தேதியிலிருந்து மத்திய அரசு ஊழியர்களுக்கு அகவிலைப்படி உயர்வு அளிக்கப்பட்டிருக்கிறது. இப்போது அதைப்பற்றி வாய் திறக்காமல் நிதியமைச்சர் அவர்களும் மற்றவர்களும் இருந்துகொண்டிருக்கிறார்கள். அந்த அகவிலைப் படியை அதே தேதியிலிருந்து நமது மாநில அரசு ஊழியர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் அளிக்க நம் நிதியமைச்சர் அவர்கள் முன்வர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

ஒரு நபர் குழு என்று ஒரு குழு நியமித்து அரசு ஊழியர்கள், ஆசிரியர்கள் ஊதிய விகிதங்களில் உள்ள முரண்பாடுகளைப்பற்றி ஆய்ந்திருக்கிறார்கள். அந்தக் குழு தன் அறிக்கையை அரசுக்குத் தந்திருக்கிறது. அந்த அறிக்கையைத் தந்து மாதக் கணக்கில் ஆகின்றது. அந்த அறிக்கையை முழுவதுமாக ஏற்றுக்கொள்ள முடியாது என்றாலும், சிறுசிறு அளவுக்காவது நிறைவேற்ற முயற்சிக்கலாம் என்ற கருத்தைச் சொல்லிக்கொள்கிறேன். அது ஏன் இதுவரையில் மறைத்து வைக்கப்பட்டிருக்கிறது என்பது தெரியவில்லை. அதனை வெளியிட்டு அரசு ஊழியர்கள், ஆசிரியர்கள் குறைகள் போக்கப்பட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதற்கான முயற்சிகளை அரசு எடுத்துக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, கல்லூரிகளில் இருக்கக்கூடிய கண்டின்ஜெண்ட் ஊழியர்கள், அரசுப் பள்ளிகளில் இருக்கக்கூடிய கண்டின்ஜெண்ட் ஊழியர்கள் 'கன்பர்ம்' செய்யப்பட்டிருக்கிறார்கள். அவர்களையெல்லாம் நிரந்தரம் செய்து விட்டார்கள். ஆனால் தனியார் பள்ளிகளிலே இருக்கக்கூடிய கண்டின்ஜெண்ட் ஊழியர்கள் இதுவரை நிரந்தரம் செய்யப்படாமல் இருக்கிறார்கள். அவர்களையும் நிரந்தரம் செய்ய வேண்டும்.

அடுத்து தொழில் ஆசிரியர்கள் பற்றிச் சொல்ல விரும்புகிறேன். அந்த ஆசிரியர்களில் பலர் பகுதி நேரத் தொழில் ஆசிரியர்களாக இருக்கிறார்கள். அவர்களுக்கு 100 ரூபாய் தான் கொடுத்து வருகிறார்கள். பகுதி நேரத் தொழில் ஆசிரியர்களை முழு நேர ஆசிரியர்களாக மாற்ற வேண்டும்.

கொண்டுவருவது என்னுடைய பொறுப்பு. இந்தச் சம்பவங்கள் எல்லாம் நடந்த பல நாட்களுக்குப் பிறகு நான் கூட அந்தக் கைதிகளைச் சந்திக்க வேண்டுமென்று விரும்பி அரசுக்குக் கடிதம் ஒன்றை எழுதினேன். அரசி னுடைய உள்துறைச் செயலாளர் ஒருவர்தான் எனக்குப் பதில் எழுதினார். மற்ற அதிகாரிகள் யாரும் எனக்குப் பதில் அனுப்பவில்லை. காவல் துறை ஐ.ஜி. க்கும் I.G. of Prisons- க்கும் மற்றவர்களுக்கும் நான் கடிதம் எழுதினேன். ஆனால் உள்துறைச் செயலாளரிடமிருந்து மட்டும் பதில் கடிதம் வந்து சேர்ந்தது. அந்தக் கடிதத்தில்

"அனுப்புநர்

திரு. கே. சொக்கலிங்கம், ஐ.ஏ.எஸ்.,
ஆணையாளர் மற்றும் அரசு செயலர்.

பெறுநர்

திரு. கே. இராமமூர்த்தி,

பொருள்: மத்திய சிறையில் உள்ள தீவிர கைதிகளைப் பார்வை யிடுவது சம்பந்தமாக.

பார்வை: மாநிலத் தலைமைச் செயலாளருக்கு அனுப்பியுள்ள 25-10-80 தேதியிட்ட கடிதம்.

மத்திய சிறைச்சாலையில் உள்ள தீவிரக் கைதிகளைப் பார்த்து விசாரணை செய்ய அனுமதி வழங்க அரசின் இயலாமையை தங்களுக்குத் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்."

என்று எழுதியிருக்கிறார். இதை நியாயம் என்று ஏற்றுக்கொண்டால், இந்த நியாயம் எல்லோருக்கும் பொருந்தும். ஆனால் சம்பவங்கள் கடுமையாக நடந்து கொண்டிருந்தபோது, மற்றவர்களுக்கு அனுமதி அளித்துவிட்டு வேகம் குறைந்த பிறகு மேலும் என்ன நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று அரசு எண்ணுகிறபோது, என்னைப் போன்றோர் அனுமதி கேட்கும்போது மறுக்கக் கூடிய நிலை இருக்கிறதென்றால், சில நடவடிக்கைகள் அரசியல் நோக்கத்தோடு எடுக்கப்படுகின்றன என்று தெரிவிக்க விரும்புகிறேன். எதைச் செய்தாலும் காவல் துறையினருக்குப் பாதுகாப்பு இருக்கிறதென்ற உணர்வு இருப்பதால், நியாயமாகக் கேள்வி கேட்டால் கூட, அவர்களுக்குக் கோபம் வருகிறது. காவல் துறையினர் ஒருவரைக் காவல் நிலையத்திற்கு வரச் சொன்னால், அவர் வேறு வேலை காரணமாக வராமல் இருந்துவிட்டால், அடுத்த நாளே கைது செய்யப்படுகிறார். பல இடங்களில் கைதானவர்களை





காவல் நிலையத்திற்கு அழைத்துச் செல்லும்போது, செத்திருக்கிறார்கள். அவர்கள் அடிபட்டுச் செத்தார்களா, அல்லது இருதய நோய் காரணமாகச் செத்தார்களா என்பது வேறு விஷயம். இப்படி ஒவ்வொருவர் சாகும்போதும் ஏதாவது காரணம் சொல்லப்படும். ஆகவே இப்படியெல்லாம் காவல் துறையினர் அரசியலைச் சேர்த்துச் செயல்படுகிறார்கள் என்ற உணர்வு நமக்கு ஏற்படுவதை மறுக்க முடியவில்லை என்பதை மாண்புமிகு நிதி யமைச்சர் அவர்களுக்கு நிதி ஒதுக்கும்போது, காவல் துறை பொறுப்போடு நடந்துகொள்ள வேண்டுமென்பதை இடித்துரைக்க வேண்டியது அவசியம் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

அடுத்தபடியாக, புது டில்லியிலே இருக்கின்ற "தமிழக இல்லத்தில்" உள்ள பழைய உணவு அறையை "தமிழ்ப் பண்பாட்டு இல்லமாக" மாற்றுவதற்காக பணியாளர் சிலரை வேலைக்கு அமர்த்த நிதியை ஒதுக்கியிருக்கிறார்கள். நான் ஏற்கெனவே இந்த அவையிலே குறிப்பிட்ட தமிழ்ப் பண்பாட்டுக் மையம் இதிலே உள்ளடங்கியிருக்கிறதா என்பது புரியவில்லை. தமிழ்நாடு இல்லம் முறையாக நடைபெறவில்லை. அங்கே போடுகிற உணவை எப்படித்தான் அரசியல்வாதிகளும் அதிகாரிகளும் சாப்பிடுகிறார்களோ! இதைப்பற்றி பல நேரங்களில் சொல்லிவிட்டேன். அந்த இல்லத்திலே உள்ள பழைய உண வறையை தமிழ்ப் பண்பாட்டு இல்லமாக மாற்ற என்ன அவசியம் வந்திருக்கிறது என்று தெரியவில்லை. தமிழ்நாடு இல்லம் சரிவர இயங்க வில்லை, தமிழ் பணியீட்டு மையமும் முறையாகச் செயல்படவில்லை என்பதை உணர்ந்திருக்கிற அரசு மேலும் கூடுதலாக இந்தப் பணியை அவர்களிடம் கொடுத்தால், அது நல்லதாக இருக்காது. தவறாகப் பயன்படுத்த இடம் கொடுத்துவிடும் என்பதைச் சொல்ல விரும்புகிறேன்.

(பிற்பகல் 12-30)

மூன்றாவதாக, மதுரைத் தமிழ்மாநாட்டைப் பற்றி ஒன்றும் அதிகமாகச் சொல்ல விரும்பவில்லை. ஆனால் அங்கு நடைபெற்றுள்ள சில குறைபாடு களைப் பற்றிச் சொல்ல விரும்புகிறேன். சில கோடிகளை அல்லது லட்சங்களை மதுரையில் கழிப்பறைகள் கட்டுவதற்காக என்று ஒதுக்கிச் செலவழித்திருக் கிறார்கள். அவைகளைக் கட்டியது எந்த முறையிலே என்று தெரியவில்லை. எப்படிச் செய்தார்கள் என்பது எனக்குப் புரியவில்லை. சமீபத்தில் 5-2-1981-ல் நான் மதுரைக்குச் சென்ற போது நேரில் பார்க்கின்ற வாய்ப்பு ஏற்பட்டது. அங்கே கட்டிய அந்தக் கழிப்பறைகள் மூடப்பட்டிருக்கின்றன. அப்படி மூடப்பட்டு "under lock and key" என்ற அளவில் உபயோகப்படுத்தப் படாமல் இருக்கின்றன.. அதற்கு என்ன அவசியம் ஏற்பட்டது என்பது எனக்குத் தெரியவில்லை. அவைகளை யாருடைய அனுமதியோடு காவல் நிலையத்தி*கு அழைத்துச் செல்லும்போது, செத்திருக்கிறார்கள்

கோடைக்கானல், ஏற்காடு, குற்றாலம், நீலகிரி போன்ற பகுதிகளில் பருவ காலங்களிலே அதாவது கோடைக் காலங்களிலே விலைவாசிகள் ஏறிவிடுகின்றன, பொதுமக்கள் கோடைக் காலங்களில் அந்த இடங்களுக்கு அதிகமாக வருவதால், விலைவாசி ஏறி விடுகின்றது. எனவே அந்தக் காலத்திற்கு "பருவ காலப்படி" என்று வழங்குவதற்கு ஏற்பாடு செய்தால் அங்கு பணி புரிபவர்கள் அந்த இடங்களிலிருந்து மாறுதல் பெற விரும்பமாட்டார்கள். அவர்களால் சீசன் காலத்திலே அங்கே வாழ்க்கை நடத்த முடியவில்லை. எனவே பருவகாலப் படி என்ற ஒன்றை அங்கு பணியாற்றும் ஆசிரியர்களுக்கும், அரசு ஊழியர்களுக்கும் வழங்க அரசு முன்வர வேண்டுமென்று கேட்டு அமைகிறேன்.

செல்வி அ. லீலாவதி: மாண்புமிகு துணைத் தலைவரவர்களே, 1980—81 ஆம் ஆண்டு கூடுதல் செலவிற்கான துணை மானியக் கோரிக்கைகளையும், விரிவான துணை மதிப்பீடுகளையும் நான் வரவேற்கிறேன்.

மூன்றாவது ஊதியக் குழுவின் அறிக்கையிலுள்ள முரண்பாடுகளைக் களைய அமைக்கப்பட்ட ஒரு நபர் குழு அறிக்கையை அரசு உடனடியாக வெளியிட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஒரு நபர் குழு தன்னுடைய அறிக்கையை அரசுக்குச் சமர்ப்பித்துவிட்டது. ஆனால் அந்த அறிக்கையை அரசு இன்னும் வெளியிடாததற்கு என்ன காரணமென்று தெரியவில்லை. பல்கலைக் கழக ஆசிரியர்கள், அலுவலர்கள் ஊதிய முரண்பாடு குறித்து ஆராய அமைக்கப்பட்ட ஒரு நபர் குழு இன்னும் தன்னுடைய அறிக்கையைத் தரவில்லை. அறிக்கை தர வேண்டிய காலக்கெடு முடிந்துவிட்டது. அந்த அறிக்கையையும் அரசு விரைவில் வெளியிடுமென்று நம்புகிறேன்.

தனியார் பள்ளிகளில் பணிபுரியும் கண்டின்ஜென்சி ஸ்டாஃப் இன்னமும் நிரந்தரம் செய்யப்படாமல் இருக்கிறார்கள். அவர்கள் ஊதியம் ரூ. 18. அதை மாற்றியமைக்க இந்த மன்றத்தில் அரசைக் கேட்டுக் கொள்கிறேன். இந்தக் காலத்தில் அவர்களை நிரந்தரம் செய்வதில் காலதாமதம் செய்யப்படுகிறது. அவர்களை நிரந்தரப்படுத்தி எல்லாவிதச் சலுகைகளையும் அளிக்க வேண்டும். அவர்கள் பணியை நிரந்தரப்படுத்தினால், அவர்களுக்குப் பென்ஷன் முதலிய சலுகைகள் கிடைக்கும். எனவே இதில் இன்னும் கால தாமதம் செய்யாமல், அவர்களை நிரந்தரம் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கைத்தொழில் ஆசிரியர்கள் பகுதி நேர ஆசிரியர்களாக இன்னமும் பணி புரிந்து கொண்டிருக்கிறார்கள். அவர்கள் 100 ரூபாய் மட்டுமே ஊதியமாகப் பெற்றுக்கொண்டிருக்கிறார்கள். அவர்கள் அவல நிலையில் இருக்கிறார்கள்.



இந்தக் காலத்திலே 100 ரூபாய் மாதச் சம்பளம் பெற்றுக்கொண்டு எப்படி வாழ்க்கை நடத்த முடியுமென்பதை உணர்ந்து, அவர்கள் ஊதியத்தை மாற்ற வேண்டும். அவர்களுக்கு இப்போது பென்ஷன் பெறக்கூடிய வசதியில்லை. எந்தவித விடுமுறையும் அவர்களுக்குக் கொடுப்பதில்லை. அரசு உடனடியாக இதைக் கவனித்து, ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பத்திரிகை நிருபர்களுக்கு விரைவுப் பேருந்துகளில் இலவசப் பயணச் சலுகை அளிப்பது குறித்து மேலவையில் வாக்குறுதி அளிக்கப்பட்டும், இது நாள்வரை அது அளிக்கப்படவில்லை என்பதைத் தெரிவித்து, அதை அமுலாக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

சென்னை மாநகராட்சி 12 பஞ்சாயத்துக்களை ஏற்றுக்கொண்டிருக்கிறது. வேளச்சேரி, திருவான்மியூர் போன்ற சென்னையைச் சுற்றியுள்ள 13 பஞ்சாயத்துக்களை ஏற்றுக்கொண்டுள்ளது. அங்கு வாழும் மக்கள் மாநகராட்சிக்கு வரி கொடுத்திருக்கிறார்கள். ஆனால் அவர்களுக்குத் தேவையான சாலை, விளக்கு, குடிநீர் போன்ற அடிப்படை வசதிகளைக்கூட இன்னும் அளிக்கவில்லை. இந்த அடிப்படை வசதிகளை அவர்களுக்கு அளிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

சிறைச்சாலை நிர்வாகத்தை தரம் உயர்த்த அரசு நடவடிக்கை எடுப்பதை வரவேற்கிறேன். சிறைச்சாலையிலுள்ள கைதிகளை மற்றவர்கள் போய்ப் பார்க்கும்போது, அவர்கள் கம்பிகளுக்கு ஊடே இருந்துதான் பேச வேண்டிய நிலை இருக்கிறது. அவ்வாறு இல்லாமல் பாதுகாவல் உள்ள அறையில் அவர்களைக் காண வரும் நபர்கள் பார்க்க ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

காவல் துறையினருக்கு இன்றியமையாத உணவுப் பொருள்களை வழங்குவதுபோல, ஏனைய 7½ லட்சம் ஆசிரியர் உட்பட அரசு ஊழியர்களுக்கும் வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மேல் நிலைப் பள்ளிகளில் கல்வி தொடங்கி 3 ஆண்டுகளாகியும் இன்னும் ஆசிரியர்களுக்கான சர்வீஸ் ரூல்ஸ் உருவாக்கப்படவில்லை. 'இன்டக்டட்' ஆசிரியர்களுக்குக் குறுகிய காலப் பயிற்சி அளித்து, அவர்களை நிரந்தர ஆசிரியர்களாக்க ஏற்பாடுகளைச் செய்யவில்லை. ஆசிரியர்கள் அல்லாத அலுவலர்களுக்கு அங்கு வேலைப் பளு அதிகமாக இருக்கிறது. எனவே ஒவ்வொரு மேல் நிலைப் பள்ளியிலும் ஒரு அலுவலரை நியமித்து அவர்கள் வேலைப் பளுவைக் குறைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

[திரு. க. மீனாட்சிசுந்தரம்] [1981 பிப்ரவரி 10

அவர்களுக்கு குறுகியகாலப் பயிற்சி அளிக்க வேண்டும். அவர்கள் ஊதியத்தை அதற்கு முன்னால் ரூ. 100 என்று இருப்பதை ரூ. 250 என்று தற்காலிகமாக வாவது உயர்த்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

உயர்நிலைப் பள்ளிகளிலே பணிபுரிகின்ற கைத்தொழில் ஆசிரியர்களும், நடுநிலைப் பள்ளிகளிலே பணியாற்றுகின்ற கைத்தொழில் ஆசிரியர்களும் ஒரே தகுதிதான் பெற்றிருக்கிறார்கள். அப்படியிருந்தும் அவர்களின் ஊதிய விகிதத்திலே வேறுபாடு இருக்கிறது. அந்த வேறுபாட்டை நீக்க வேண்டு மென்று கேட்டுக்கொள்கிறேன். அதனால் அரசுக்கு மிகப் பெரிய பொருள் செலவு இல்லை. ஆகவே அதைத் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

(பிற்பகல் 12-40)

நடுநிலைப் பள்ளிகளில் தொழில் வளர்ச்சிக்காக மாதம் 10 ரூபாய் விதமோ அல்லது ஆண்டு ஒன்றுக்கு 100 ரூபாயோ தருகிறார்கள். அது போத வில்லை. அதை மாதத்திற்கு 30 ரூபாயாக உயர்த்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

நடுநிலைப் பள்ளிகளில் பணிபுரியும் கைத்தொழில் ஆசிரியர்களை பி. வி. ஐ. என்று அழைக்கிறார்கள். ஆனால் உயர்நிலைப் பள்ளிகளிலே பணிபுரியும் தொழிலாசிரியர்கள் "கிராப்ட் இன்ஸ்டிரக்டர்" என்று அழைக்கப் படுகிறார்கள். இப்படிப்பட்ட வேறுபாட்டைக் குறிப்பிட்டுக் காட்டாமல், மூன்றாவது ஊதியக் குழு 'கிராப்ட் இன்ஸ்டிரக்டர்' என்றே குறிப்பிட்டுள்ளது. இதனை பி. வி. ஐ. யும், கிராப்ட் இன்ஸட்ரக்டரும் ஒன்றேயென அறிவிக்க வேண்டும். ஒரே தகுதி பெற்று ஒரே பணி புரிபவர்களுக்கு ஒரே ஊதியம் தரப்படாமல் இருக்கிறது. எனவே நடுநிலைப் பள்ளியில் பணி புரியும் கைத்தொழில் ஆசிரியர்களுக்கும் உயர்நிலைப் பள்ளியில் பணிபுரியும் கைத் தொழில் ஆசிரியர்களின் ஊதியம் தரப்பட வேண்டுமென்று கேட்டுக்கொள் கிறேன்.

குடும்பக் கட்டுப்பாடு திட்டத்திற்கு ஆக்கமளிக்கும் வகையில் 'இன் சென்டிவ்' தந்து வந்தார்கள். அது 1—4—1981 முதல் நிறுத்தப் பட்டிருக் கிறது. ஏற்கெனவே வழங்கப்பட்ட சலுகை அது. இப்போது அது நிறுத் தப்பட்டிருக்கிறது. புதிய சலுகைகளை வழங்க வேண்டுமென்று சொல்லு கின்ற நேரத்தில், இருக்கிற சலுகைகளைப் பறிக்கக்கூடாதென்பதை எல்லோரும் ஒத்துக்கொள்வார்கள். எனவே இருந்த அந்தச் சலுகையை மீண்டும் தாருங்களென்று கேட்டுக்கொள்கிறேன்.



1981 பிப்ரவரி 10] [திரு. க. மீனாட்சிசுந்தரம்]

அடுத்து, நடுநிலைப் பள்ளிகளில் பட்டதாரி ஆசிரியர்களாக இருப்ப வர்கள் தலைமை ஆசிரியர்களாகும்போது பணிப்படி அவர்களுக்கு வழங்கப் படுவதில்லை. ஆனால் செகண்டரி கிரேட் ஆசிரியர்களுக்கு அவர்கள் தலைமை ஆசிரியர்களாகும்போது 15 ரூபாய் மாதத்திற்கு பணிப்படி உண்டு. பட்டதாரி தலைமை ஆசிரியர்களுக்கு அது வழங்கப்படாமல் இருக்கிறது. அதை உடனடியாக வழங்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

1—1—1971 முதல் தேர்வு நிலை வழங்கப்பட்டிருக்கிறது. ஆனால் நிலை வாரியாகப் பார்க்கும்போது, ஒவ்வொரு நிலையினருக்கும் ஒவ்வொரு ஆண்டில் தேர்வு நிலை வழங்கப்பட்டிருக்கிறது. எல்லோருக்கும் 1—1—1971 முதல் தேர்வு நிலை வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். 20 ஆண்டுக் காலப் பணிக்குப் பிறகு நிலை வழங்க அரசு முடிவு செய்திருக் கிறது. மொத்த ஊழியக் காலத்தையும் கணக்கில் எடுத்து, நிலைவேறுபாடு பாராமல் 20 ஆண்டுகள் ஆகிவிட்டால் சிறப்பு நிலை வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதுவும் 1—10—1978 முதலே சிறப்புநிலை வழங்க வேண்டும். அரசு ஆணைப்படி 1—9—1931-ல் வழங்க வேண்டிய சிறப்பு நிலைக்குரிய ஆணை இன்னும் வெளியிடப்படவில்லை. உடனடியாக அந்த ஆணையை வெளியிடுவதற்கு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

நகர ஈட்டுப்படி, வீட்டு வாடகைப்படி என்பது அரசால் ஒப்புக்கொள்ளப் பட்டவைகளாகும். ஆனால் பல பகுதிகளில் இவை வழங்கப்படாமல் இருக் கின்றன. ஒப்புக்கொள்ளப்பட்ட இடங்களிலே இவற்றை வழங்குவதற்குத் தடையாக இருக்கும் நிலைமைகளைத் தவிர்க்க வேண்டுமென்று கேட்டுக்கொள் கிறேன்.

மேல் நிலைப் பள்ளிகளில் பணிபுரியும் முதுகலைப் பட்டம் பெற்ற ஆசிரியர் களுக்கு எஃப். ஆர். 22-பி பிரகாரம் ஊதிய நிர்ணயம் செய்யப்பட வேண்டு மென்பதும், அவர்களுக்கான 'சர்வீஸ் ரூல்ஸ்' கொண்டு வரப்பட வேண்டு மென்பதும் ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கிறது. ஆனால் இதுவரை அதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை. மேல் நிலைப் பள்ளிகள் துவங்கி 3 ஆண்டுகளாகியும், அவர்கள் பழைய ஊதியத்தையே பெற்றுக்கொண்டிருக் கிறார்கள். இந்த நிலையை மாற்ற வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

வொகேஷனல் இன்ஸ்டிரக்டர்ஸ் என்று பகுதி நேர ஊழியர்கள் இருக் கிறார்கள். அவர்களில் சிலர் முதுகலைப் பட்டம் பெற்றவர்களாகக்கூட இருக் கிறார்கள். அவர்கள் 150 ரூபாய் சம்பளம் வாங்குகிறார்கள். அவர்களை யெல்லாம் முழுநேர அரசு ஊழியர்களாக்கி, அவர்கள் ஊதியத்தையும் மாற்றி யமைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

[செல்வி அ. லீலாவதி] [1981 பிப்ரவரி 10

அரசுப் பணியாளர்களுக்குக் கொடுக்கப்படும் விழாக் கால முன் பணச் சலுகையை தனியார் பள்ளிகளில் பணி புரியும் அலுவலர்களுக்கும் கொடுக்க வழி வகைகளைச் செய்ய வேண்டும். தனியார் பள்ளிகளில் பணி புரியும் ஆசிரியர்களுக்கு, அரசுப் பள்ளி ஆசிரியர்களுக்குக் கொடுப்பதுபோல் ஸ்கூட்டர் வாங்குவதற்குக் கடன், குழந்தைகள் கல்வி கற்கக் கடன், திருமணக் கடன் உதவி, வீடு கட்டுவதற்குக் கடன் உதவி முதலியவற்றை வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

முக்கிய காவல் நிலையங்களில் மகளிரைக் காவலர்களாக அமர்த்த அனுமதித்திருப்பதை வரவேற்கிறேன். ஏனைய அரசு அலுவலகங்களிலும் மகளிருக்கு அதிகமாக வேலை வாய்ப்பு அளிக்க வேண்டும். பாலு கார்மென்ட்ஸ் என்ற நிறுவனத்திலிருந்து 800 பெண்கள் வேலை நீக்கம் செய்யப்பட்டிருக்கிறார்கள். அம்பத்தூர் கார்மென்ட்ஸ் என்ற நிறுவனத்திலிருந்து 500 பெண்கள் வேலை நீக்கம் செய்யப்பட்டிருக்கிறார்கள். அவர்களுக்கு முக்கியத்துவம் கொடுத்து, வேலை வாய்ப்பு அளிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

(பிற்பகல் 12-50)

அரசு ஊழியர்களுக்கு வீடுகள் கட்டுவதற்காக முன்பு ஒதுக்கப்பட்ட தொகையைவிட இப்போது கூடுதலாகப் பணம் ஒதுக்கியிருப்பதை நான் வரவேற்கிறேன். ஏற்கெனவே வீடு கட்டிக் கொண்டிருப்பவர்களுக்கு எந்த விதமான இடைஞ்சலும் வராமல் இருக்க வேண்டுமென்பதற்காக அவர்களுக்கு வழங்கும் கடனைத் துரிதமாக வழங்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். 33-1/2 ஆண்டுக் காலம் பணி புரிந்தவர்களுக்குத் தான் ஓய்வு பெற்ற பிறகு 50 சதவிகிதம் பென்ஷன் என்று இருப்பதற்கு பதிலாக 25 வருடம் பணியாற்றியிருந்தாலே 50 சதவிகிதம் பென்ஷன் பெறத் தகுதியுள்ளவர்கள் என்று அரசு அறிவிக்க வேண்டும். அரசு ஊழியர்களுக்கு ஏற்கெனவே, வழங்கப்பட வேண்டிய இரண்டு அகவிலைப் படி உயர்வையும் வழங்க வேண்டுமென்று கேட்டு, 1980-81 ஆம் ஆண்டுக்கான செலவு குறித்த துணை விவர அறிக்கையின் மீது எனக்குப் பேசுவதற்கு வாய்ப்பளித்தமைக்கு துணைத் தலைவர் அவர்களுக்கு நன்றி தெரிவித்து அமைகிறேன்.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்:** அடுத்து மாண்புமிகு உறுப்பினர் திரு. முத்துசாமி 10 நிமிடங்களில் பேச்சை முடிக்க வேண்டும்.

**திரு. செ. முத்துசாமி:** மாண்புமிகு துணைத் தலைவரவர்களே, 1980-81 ஆம் ஆண்டுக்கான செலவு குறித்த முதல் துணை விவர அறிக்கையை இங்கே மாண்புமிகு நிதியமைச்சரவர்கள் வைத்திருக்கிறார்கள். கோரிக்கைகளை



1981 பிப்ரவரி 10] [திரு. செ. முத்துசாமி]

நான் வரவேற்கிறேன். நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். 17 ஆம் பக்கத்தில் இனம் 2-ல் தமிழ் வளர்ச்சி இயக்ககத்திற்கு ரூபாய் 70 ஆயிரம் ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது என்று இருக்கிறது. தமிழ் வளர்ச்சி இயக்ககம் இதுவரை என்ன பணி செய்து கொண்டிருக்கிறது என்பது எனக்குத் தெரியவில்லை. அது என்ன பணி செய்து கொண்டிருக்கிறது என்பது ஒரு கேள்விக் குறியாக இருக்கிறது என்பதை நான் முதலில் அவையின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். ஏன் அப்படி ஒரு சந்தேகம் எனக்கு ஏற்படுகிறது என்றால், நான் கேட்பதெல்லாம், எங்கே தமிழ் வளர்ச்சி ஏற்பட்டிருக்கிறது என்பது தான். அரசுத் துறையிலே இருக்கிற தமிழ் வளர்ச்சி இயக்ககம் தமிழ் வளர்ச்சி பெறுவதற்காக இதுவரை என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது? அரசு ஆணைகள் கூடத் தமிழில் வருவதில்லை என்பதை நான் மாண்புமிகு நிதியமைச்சர் டாக்டர் நாவலர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். அவர் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்திலே தமிழ் எம்.ஏ., அந்தக் காலத்திலேயே படித்து பட்டம் பெற்றவர். நாடு முழுமையும் சுற்றி தமிழில் பேசியுள்ளார்கள். ஆதலாலே அவர்களின் கவனத்திற்கு இதை நான் கொண்டு வருகிறேன். அவர் ஆட்சிக்கு வந்து இத்தனை ஆண்டுகள் ஆகின்றன. பேரறிஞர் அண்ணா ஆட்சிப் பொறுப்பேற்று இரண்டாவது உலகத் தமிழ் மாநாட்டை நடத்தி, இத்தனை ஆண்டுகள் ஆகின்றன. அதோடு தமிழ் வளர்ச்சி இயக்ககம் ஒன்றை ஏற்படுத்தி அலுவலர்கள் சம்பளமும் பெற்றுக் கொண்டிருக்கிறார்கள். ஆனாலும் தமிழ் வளர்ச்சி ஒன்றையும் காண முடியவில்லை. தமிழுக்கு, தமிழ் வளர்ச்சி இயக்ககம் இதுவரை என்ன செய்திருக்கிறது என்பதை நான் மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

**திரு. ஜேப்பியார்:** தமிழைச் சார்ந்த தமிழ் ஆசிரியர் சொல்கிறார் "தமிழ் வளரவில்லை" என்று. தமிழ் வளரவில்லையென்று உறுப்பினர் ஒப்புதல் சொல்கிறாரா?

**திரு. செ. முத்துசாமி:** தமிழுக்காக பல பேர் பாடுபட்டிருக்கிறார்கள். அப்படிப்பட்டவர்களைக் கொண்டு தமிழ் மாநாடு நடத்தியிருக்கிறார்கள். எல்லாவற்றையும் ஒப்புக்கொள்கிறேன். ஆனால் நான் இங்கே சொல்ல வந்தது ஆட்சி இயந்திரத்திலே தமிழ் வளர்ச்சியடையவில்லை என்பதைத் தான். அது குறைந்திருக்கிறது. தமிழ் வளர்ச்சியடைய ஆவன செய்ய வேண்டும். தமிழ்நாட்டிலே மேடைகளிலே, கருத்தரங்குகளிலே, பட்டி மன்றங்களிலே தமிழ்ப் பேச்சு வளர்ச்சியடைந்திருக்கிறது என்பதை நான் மறுக்கவில்லை. ஆனால் தலைமைச் செயலகத்திலே "தலைமைச் செயலகம்" என்ற போர்டு

[திரு. செ. முத்துசாமி] [1981 பிப்ரவரி 10

மட்டும்தான் தமிழில் இருக்கிறதே தவிர, உள்ளபடியே தமிழ் வளர்ச்சியடையவில்லை. எங்கும் தமிழ், எதிலும் தமிழ் என்று சொல்லுகிறோம். அரசாங்கத்தின் தலைமை இயந்திரமாக இருக்கிற தலைமைச் செயலகத்திலேயிருந்து பிறப்பிக்கப்படுகிற ஆணைகள் இன்னமும் முழுமையாகத் தமிழில் வெளியிடப்படவில்லை, தமிழ்நாட்டிலே பிறந்தவர்கள், பிறக்கும்போதே அம்மா அப்பா என்று பேசி மொழியைக் கற்றவர்கள் தான் அதிகாரிகளாகவும் இருக்கிறார்கள். ஆனால் அவர்கள் தமிழைச் சரியாக அமுல்படுத்தவில்லை. விரைவிலே எங்கும் தமிழ், எதிலும் தமிழ் என்கிற ஒரு நிலையை அரசு உருவாக்க வேண்டும். தமிழ் மொழியின் வளர்ச்சி என்ற தலைப்பின்கீழ் எவ்வளவு நிதி வேண்டுமானாலும் ஒதுக்குங்கள். நான் வரவேற்கிறேன். ஆனால் உண்மையிலேயே அது தமிழ் வளர்ச்சிக்குப் போய்ச் சேர வேண்டும். தேசியப் படிப்புக்காக பணம் ஒதுக்கியிருக்கிறார்கள். கிராமப்புறங்களில் இருக்கிற பள்ளிகளில் 8-ஆம் வகுப்பில் ஒரு தேர்வை வைத்து வெற்றி பெற்றவர்களுக்கு டேலண்டெட் மாணவன் என்பதற்காக தேசியப் படிப்புக்கு உதவித் தொகை வழங்குகிறார்கள். இப்போது ஹையர் செகன்டரி படிப்பு வரை கொடுக்கக் கூடிய அந்தச் சலுகையை இனிமேல் கல்லூரிப் படிப்பு வரை நீடிக்கச் செய்ய ஆவன செய்ய வேண்டும். எட்டாவது வகுப்பில் நடைபெற்ற தேர்வில் திறமையாகத் தேறக்கூடியவர்கள் வேறு ஒரு பள்ளியில் படித்தால்தான் அவர்களுக்கு உதவித் தொகை தருவோம் என்று சொல்வதும், 150 ரூபாய் தருவோம் என்று சொல்வதும் தவறான கொள்கை. அந்த உதவித் தொகையை ஒரே மாதிரியாகத் தர வேண்டும். கிராமப்புறங்களில் உள்ள எந்தப் பள்ளியில் படித்தாலும், அவர்கள் இந்த உதவிக்குத் தகுதியுடையவர்கள் என்று அறிவிக்க வேண்டும்.

அடுத்து, விடுதியில் தங்கியிருக்கின்ற மாணவர்களுக்கு, காவல் துறையினருக்கு வழங்குவது போல், சலுகை விலையில் உணவுப் பொருள்களை வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். காவல் துறையினருக்கு வழங்குவது "கருணையின் அடிப்படையில்" என்றால், உள்ளபடியே நான் ஒன்றை ஒப்புக்கொள்கிறேன். இந்த உலகத்திலேயே சலுகை விலையில் உணவுப் பண்டங்களைப் பெறத் தகுதியுடையவர்கள் இரண்டு பிரிவினர்தான், அவர்களுக்குத் தான் அந்த உரிமையுண்டு. அவர்கள் வயதானவர்களும் மாணவர்களும்தான். மாணவர்கள் விடுதிகளுக்கெல்லாம், அரிசன விடுதி, பிற்பட்டோர் நல விடுதி இவைகளுக்கெல்லாம், விலைவாசி ஏற்றத்தை முன்னிட்டு சலுகை விலையில் உணவுப் பண்டங்களை அரசாங்கம் வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.



1981 பிப்ரவரி 10]

திரு. ஜேப்பியார்: அரிசன மாணவர்கள் விடுதி இல்லை. அரசினர் விடுதி தான் இருக்கிறது.

திரு. செ. முத்துசாமி: அரிசன நல விடுதி என்ற பெயர் மாற்றப்பட்டிருக்கிறது. ஆதி திராவிடர் நல விடுதி என்று மாற்றிவிட்டார்கள். ஆகவே பிற்பட்ட மாணவர்களுக்கும், ஆதி திராவிட மாணவர்களுக்கும் விடுதி இருக்கிறது என்பதை மாண்புமிகு உறுப்பினருடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். அவர்களுக்குச் சலுகை விலையில் உணவுப் பண்டங்களை அரசு வழங்க வேண்டும். மாண்புமிகு உறுப்பினருக்குச் சந்தேகம் வந்திருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜேப்பியார் அவர்களுக்கு முதலமைச்சரிடத்தில் பிடிப்பு உண்டு. அவர்கள் விரைவாக இந்தச் சலுகையைக் கொண்டுவர உதவி செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்வதோடு, மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களையும் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, நீலகிரியில் உள்ளவர்களுக்கு வெம்மை உடை முன்பணம் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டிருக்கிறோம். அரசுத் துறையிலே பணியாற்றுகின்ற அரசு ஊழியர்களுக்கெல்லாம் அது கொடுக்கப்பட்டிருக்கிறது. பக்கத்தில் இருக்கிற முனிசிப்பாலிட்டியில் இருப்பவர்களுக்குக் குளிரில்லையா? அதனால் தான் அவர்களுக்கு அட்வான்ஸ் இல்லையா? அவர்களுக்கு மட்டும் முன்பணம் இல்லையென்று சொல்வது என்ன கொள்கை? இன்றைக்கு நிதியமைச்சராக இருக்கிற மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அன்றைக்கு கல்வி அமைச்சராக இருந்தபோதே அரசு ஊழியர்களுக்குள்ள அனைத்துச் சலுகைகளும் மற்றவர்களுக்கும் தந்தாக வேண்டுமென்று சொன்னார்களே. இன்றைக்கு அதற்குரிய அதிகாரம் அவர்களுக்கு வந்திருக்கிறதே, இப்போது செய்யலாமே, பட்ஜெட் வரவிருப்பதால் தயவு செய்து நீலகிரியில் உள்ளவர்களுக்கு வெம்மை உடை முன்பணம் வழங்குவதற்கான உத்தரவிட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, மாணவர்கள் உயர் நிலைப் பள்ளியை, ஹையர் செகன்டரி பள்ளியை, கல்லூரியை விட்டு வெளியே வந்தவுடன் அவர்களுடைய உடல் நலம், மன உறுதி கருதி, கடுமையான வனப் பயிற்சி தர வேண்டும். செல்வந்தவர்களுடைய பிள்ளைகளுக்கும், மாட மாளிகைகளிலிருந்து வரக்கூடிய பிள்ளைகளுக்கும் பள்ளிகளிலிருந்து, கல்லூரிகளிலிருந்து வரும்போது போதுமான உடல் நலனும், மன உறுதியும் இருப்பதில்லை. அப்படிப்பட்டவர்கள் பெரிய உத்தியோகத்திற்கு வந்தால்கூட, அவர்களுக்கு ஏழையெளிய மக்களைப் பற்றிய விவரங்கள் தெரிவதில்லை. அவர்களுக்கு இராணுவப் பயிற்சியை அளிக்க வேண்டுமென்று நான் சொன்னால், அந்தப் பயிற்சியை இந்த அரசு

செய்து கொடுக்க முடியாது. ஆனால் தமிழகத்திலே இருக்கின்ற வனங்களிலே ஓராண்டு கடுமையான பயிற்சி கொடுக்கின்ற ஒரு திட்டத்தினை இந்த அரசு உடனே கொண்டு வர வேண்டுமென்று நான் இந்த சந்தர்ப்பத்தில் கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். அப்படிச் செய்தால் தான், அவர்களுக்கு உடல் நலம், மன உறுதிப்பாடு போன்றவை ஏற்படும்.

**அடுத்து**, டென்மார்க்கிலிருந்து வரக்கூடிய மாணவர்களுக்கு விளையாட்டுப் பொருட்கள் பெறுவதற்காக 1 லட்சத்து 25 ஆயிரம் ரூபாய் ஒதுக்கீடு செய்திருக்கிறார்கள். அந்த நாட்டிலிருந்து வருகின்ற 25 பேர்களுக்காக இந்த அரசால் 1 லட்சத்து 25 ஆயிரம் ரூபாய் ஒதுக்க முடிகிறது என்றால் நான் சொல்கிறேன் நம்முடைய மாணவர்களை ஒலிம்பிக் போட்டிகளில் கலந்து கொண்டு வெற்றி பெறும் அளவுக்குப் பயிற்சியளிக்க வேண்டும். அதற்கு மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜேப்பியார் போன்றவர்களைப் போட்டு விளையாட்டு வாரியம் ஒன்றை ஏற்படுத்த வேண்டும்.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்:** அவர் மாணவர் அல்ல.

**திரு. செ. முத்துசாமி:** அவரைப் போல் சிறந்த ஒருவரை அங்கே போட்டு, அதற்கென்று அதிகமாக நிதியை ஒதுக்கீடு செய்து, நம்முடைய மாணவர்கள் ஒலிம்பிக் போட்டிகளில் கூட பங்கேற்கச் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். 25 பேரை வரவேற்க 1 லட்சத்து 25 ஆயிரம் ரூபாய் ஒதுக்கியிருப்பது நியாயம்தானா என்பதை மறுபரிசீலனை செய்ய வேண்டுமென்றும் இத்தருணத்தில் நான் கேட்டுக்கொள்கிறேன்.

**அடுத்து**, கிரிக்கெட்டுக்கு ஆல் இன்டியா ரேடியோவில் அதிகமாக முக்கியத்துவம் கொடுக்கப்படுகிறது. அது ஒரு 'நேஷனல் வேஸ்ட்' என்பது என்னுடைய கருத்து. உலகத் தமிழ் மாநாடு மதுரையிலே நடைபெற்றது. உலகமெங்கிலுமுள்ள தமிழ் அறிஞர்கள் அங்கே கூடியிருக்கிறார்கள். அத்தோடுகூட பாரதப் பிரதமர் அவர்கள்கூட அங்கே வந்திருக்கிறார்கள். அந்த மிக முக்கியமான நிகழ்ச்சிகளை நேரடியாக வானொலியில் சொல்லவில்லை. ஆனால் சங்கீதக் கச்சேரி, கிரிக்கெட் போன்றவைகளை நேரடியாக ஒலிபரப்பி போரடிக்கிறார்கள். உலகத் தமிழ் மாநாட்டுக்கு அவர்கள் சரியாக மரியாதை தரவில்லை. பிரதமர் கலந்துகொண்ட நிகழ்ச்சியே நேரடியாக வானொலியில் சொல்லப்படாதது மிக வருந்தத்தக்க விஷயம். ஆகவே, மாநில அரசு வானொலியைக் கண்டிக்க வேண்டுமென்ற உணர்வை நான் இங்கே வெளிப்படுத்துகிறேன். கிரிக்கெட்டுக்காகச் செலவு செய்வதை விட புட்பால், வாலிபால் போன்ற விளையாட்டுகளுக்கு அதிகமாக அரசு செலவிட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். கிரிக்கெட்டு விளையாட்டுக்கு ஸ்டேடியத்தை



இடம் ஒதுக்கப்பட்டிருக்கிறது. அதுபோல் கைப்பந்து விளையாட்டுக்கும் இடம் ஒதுக்க வேண்டுமென்று அதனுடைய அசோஸியேஷன் கேட்டிருக்கிறார்கள். கைப்பந்து விளையாட்டுக்கும் இந்த அரசு இடம் ஒதுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கடைசியாக ஒரே ஒரு பிரச்சினையைப்பற்றி மட்டும் நான் சொல்லுவதற்கு மாண்புமிகு துணைத் தலைவரவர்கள் அனுமதிக்க வேண்டுமென்று

(பிற்பகல் 1.00)

கோருகிறேன். வருமான வரியைப் பொறுத்தவரையில், வருமானத்தைப் பெருக்க ஒரு வழியைச் சொல்கிறேன். ஒரு விவசாயி தன்னுடைய நிலத்தை டிரான்ஸ்பர் பண்ணினால், அல்லது தன்னுடைய நிலத்தை விற்றால், அதற்கு அவன் தனியாக ஃபீஸ் கட்ட வேண்டும். அதற்கான பத்திரத்தை வாங்கி அதன்மூலம் தான் அவன் மாற்ற முடியும். ஆனால், ஒரு தொழிற்சாலை, ஒரு டிரான்ஸ்போர்ட் பஸ், ஒரு லாரி போன்று வருமானம் வரக்கூடிய ஒன்றை மாற்றும்போதும், விற்கும்போதும் பெயரளவில் ஒரு அக்ரிமென்ட் போட்டால் போதும். பெரிய நிதி ஒன்றும், பீஸ் ஒன்றும் அரசுக்குக் கொடுக்க வேண்டியதில்லை. விவசாயி ஒரு 10 ஏக்கர் நிலத்தை மாற்றுகிறான் என்று சொன்னால், அவனுக்கு அந்த நிலத்திலிருந்து எவ்வளவு வருமானம் வருகிறது என்பதையும், ஒரு லாரி, டிரான்ஸ்போர்ட் பஸ், அல்லது தொழிற்சாலை போன்றவற்றை மாற்றும்போது அவைகள் எவ்வளவு வருமானம் வரக்கூடியதாக இருக்கின்றன என்பதையும் நாம் பார்க்க வேண்டும். மூவபில் டிரான்ஸ்போர்ட்டும், தொழிற்சாலைகளும் ஒவ்வொரு நாளும் வருமானம் கொடுக்கக் கூடியவை. அவைகளை மாற்றும்போதும் ஒரு கட்டணம் போட்டால், அரசாங்கத்திற்கு அதிகமான வருமானம் வரும் என்பதை நான் இந்த நேரத்திலே அரசின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

நீலகிரி மாவட்டத்திலே பணி புரியும் ஆசிரியர்களுக்கு வெம்மை ஆடை முன்பணமும் அளிக்க வேண்டும்.

இப்போது மத்திய அரசு இரண்டு D.A.-க்களை மத்திய அரசு ஊழியர்களுக்கு வழங்கியிருக்கிறது. முன்பு மத்திய அரசு தனது ஊழியர்களுக்கு D.A. கொடுத்தவுடன், மாநில அரசும் கொடுத்து அலுவலர்கள் மத்தியிலே பெரும் சிறப்பைப் பெற்றது. அவ்வாறு முன்னணியிலே இருந்த இந்த அரசு இப்போது பின்தங்குவது நல்லதல்ல. இரண்டு D.A. இப்போது

கொடுக்க வேண்டியிருக்கிறது. அதை இந்தக் கூட்டத் தொடரிலேயே கொடுப்பதாக அறிவிக்க வேண்டும். விஷ வட்டம் என்று சொல்லி மக்களைத் திருப்திப்படுத்த முடியாது. திரு. சி. எம். பணிக்கர் அவர்களின் தலைமையில், சம்பளக் கமிஷனின் பரிந்துரைகளில் ஏற்பட்ட குறைபாடுகளைக் கண்டறியச் சொல்லி இந்த அரசு, மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களை முதலமைச்சராகக் கொண்ட இந்த அரசு, ஒரு கமிஷனை நியமித்தது. அந்தக் கமிஷன் தன்னுடைய அறிக்கையைக் கொடுத்துப் பல மாதங்கள் ஆகின்றன. அந்த அறிக்கை இன்னும் வெளியிடப்படவில்லை. இதுவரையில் அந்த அறிக்கையின் மீது ஆராய்ச்சி நடந்து கொண்டிருப்பதாகச் சொல்லப்பட்டது. இன்னும் அதன் மீது என்ன ஆராய்ச்சி? அந்த அறிக்கையை வெளியிட வேண்டியதுதானே. கமிஷன் போடுவது என்று சொன்னாலே, அதனுடைய அறிக்கை வர, பல ஆண்டுகள் ஆகின்றன; இன்றைக்கு பரிசிலனை என்று சொல்லி மேலும் பல ஆண்டுகள் எடுப்பது நியாயம் அல்ல. ஆகவே, அந்த அறிக்கையையும் விரைவிலே வெளியிட வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, என் பேச்சை முடித்துக்கொள்கிறேன்.

* **திரு. ம. சங்கரலிங்கம்**: மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, இந்த அவையிலே வைக்கப்பட்டிருக்கின்ற துணை மானியக் கோரிக்கையின் மீது திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக என்னுடைய கருத்துக்களைச் சொல்கிறேன். அதிக நிதியைக் கோருகிற இந்த நேரத்திலே, நாட்டினுடைய நலன் கருதி அரசு இயந்திரத்தை இயக்குகின்ற அரசுக்கு, நாட்டிலே இருக்கக் கூடிய அவல நிலையைச் சுட்டிக்காட்ட வேண்டியது என்னுடைய கடமை என்று நான் கருதுகிறேன். விலைவாசி, எல்லாப் பொருள்களைப் பொறுத்த வரையிலும், ஏறிக்கொண்டே செல்கிறது என்ற நிலையை நான் சுட்டிக்காட்டுகின்றபோது, சில மத்திய அரசின் நடவடிக்கைகளால் ஏறுகின்றன. சில உலகத்தின் பொருளாதாரத்தோடு ஒட்டி உயர்கின்றன என்றெல்லாம் தத்துவங்கள் சொல்கிறவர்கள் இன்றைக்கு இன்றியமையாத உணவுப் பொருளாகிய அரிசியின் விலை என்ன என்பதையும் பார்க்க வேண்டும். குறிப்பாக, நிதித் துறையையும், பொது விநியோகத் துறையையும் வைத்திருக்கின்ற மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் இவைகளைப்பற்றிச் சிந்திக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். ஒரு கிலோ அரிசிக்கு 1 ரூபாய் இப்போது விலை ஏறியிருக்கிறது. அதே நேரத்தில் தஞ்சாவூரிலும் மற்றும் நெல் விளையும் இடங்களிலேயும் நெல்லின் விலையை எடுத்துப் பார்த்தால், குவிண்டாலுக்கு பத்து ரூபாய் குறைந்திருக்கிறது. உற்பத்தியைச் செய்கிறவனுக்கு—விவசாயியாக இருந்து இரவு பகலாக உழைத்து உற்பத்தி செய்கிறவனுக்கு—இந்த விலை உயர்வின் பலன் எட்டவில்லை பயன்படுத்துகின்ற கன்ஸ்யூமர்களுக்கு



ஒரு கிலோ அரிசியிலே ஒரு ரூபாய் விலை ஏறியிருக்கிறது. இதற்கு என்ன காரணம் என்பதைக் கண்டு, அதைச் சரிசெய்ய வேண்டியது அரசின் கடமை. இதற்கெல்லாம் காரணம் அரசினுடைய செயல்முறைகள் தான். இப்போது லெவி முறையைப் புகுத்தியிருக்கிறார்கள். இதனால், கொள்முதல் செய்வதிலே 40 சதவீதத்தை அரசு நிர்ணயித்த விலைக்குத் தரவேண்டும் என்று போட்டிருக்கிறார்கள். அரசு நிர்ணயித்த விலைக்கு வெளியே நெல் வாங்க முடியாது. அரசு நிர்ணயம் செய்த விலைக்குக் கொடுக்க வேண்டியிருப்பதால், எல்லா வியாபாரிகளும் நெல் வாங்குவதைக் குறைத்துவிட்டார்கள். இப்போது நெல்லுக்கு மார்க்கெட் இல்லை. தேவையான நெல்லை வாங்கி மார்க்கெட்டுக்குக் கொண்டு வராததால், சாதாரண மக்கள் அரிசிக் கடைக்கு வந்தால், 1 ரூபாய் அதிகமாகக் கொடுக்க வேண்டிய நிலைமை இப்போது ஏற்பட்டிருக்கிறது. இப்படிப்பட்ட ஒரு சட்டம் எதற்காகப் போடப்பட்டிருக்கிறது என்று சொன்னால், நான் சந்தேகப்படுகிறேன்; அதிகாரிகளுடைய அதிகார வட்டத்திற்குள் அகப்பட்டு தப்பித்துக் கொள்ள முடியாத ஒரு அரசாக இந்த அரசு இருக்கிறதோ என்று நான் ஐயப்படுகிறேன். கொஞ்ச காலம் "ஃப்ரீ மார்க்கெட்" இருந்தது. ஒருவேளை அரசு நிர்ணயிக்கும் விலைக்குக் கொஞ்சம் கூடுதலாகவும் விற்கலாம், குறைவாகவும் விற்கலாம். அந்த நிலை இருந்தபோது எந்தவிதமான இன்னலும் இல்லாமல் விவசாயிகள் நெல்லை விற்றார்கள். அப்போதே கூட நெல்லுக்குக் கொடுக்கப்படும் விலை காணாது என்று சொல்லிக்கொண்டிருந்தார்கள். அப்போதெல்லாம்கூட இந்த அளவுக்கு விலை உயரவில்லை. இப்போது 100 சாக்கு அரிசியை வாங்கி வியாபாரம் செய்பவர்கள், 20 சாக்கு வாங்குவதாகக் கணக்கு வைத்து, அதற்கு 40 பெர்சென்ட் கொடுத்துவிட்டு 80 சாக்கு பிளாக் மார்க்கெட்டில் விற்பனை செய்கிறார்கள். இதற்கு உடந்தையாக இருக்கிற அதிகாரிகளின் பை நிரம்புகிறது. அந்தப் பணம் அதிகாரிகள் மத்தியிலே மேல் மட்டம் வரையிலும் போகிறது. அமைச்சர் மட்டத்தில் இந்த முறையை மாற்றினால், 'பார்த்துக்கொள்ளலாம்' என்ற நிலைமைக்கு வந்திருக்கிறார்கள். இதனால் ஏழை மக்கள் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். உற்பத்தி செய்து விற்பவர்கள் தாங்கள் உற்பத்தி செய்த பொருட்களை விற்க முடியாமல் திண்டாடிக்கொண்டு, தன்னுடைய வீட்டில் உள்ள நகை நட்டுகளை பாங்குகளில் கொண்டு அடமானம் வைக்கும் நிலைமையில் இருக்கிறார்கள். கொஞ்சம் வறட்சி இருக்கிறது, நெல் விளைச்சல் குறைவாக இருக்கும், பற்றாக்குறை வந்துவிடுமோ என்று அரசு கருதினால், முன்கூட்டியே அரிசியை வாங்கி ஸ்டாக் செய்துகொள்ள வேண்டும். 'சிவில் சப்ளைஸ் கார்ப்பரேஷன்' மூலமாக பிற மாநிலங்களிலிருந்து அரிசியைக் கொள்முதல் செய்து ஸ்டாக் வைத்துக்கொண்டு எப்போது விலை ஏறுகிறதோ அப்போது அதை

உணர்ந்து செயல்பட வேண்டும். எனவே தமிழகத்தோடு, மதுரை மையத்தோடு இணைக்கப்பட்டிருக்க வேண்டிய திருநெல்வேலி—நாகர்கோயில் இருப்புப் பாதைப் பிரிவு, நீதியின் அடிப்படையில் தமிழகத்தோடு இணைக்கப்பட்டிருக்க வேண்டிய அந்தப் பிரிவு, இன்றையதினம் திருவனந்தபுரத்தோடு இணைக்கப்பட்டிருக்கிறது. மத்திய அரசைப் பொறுத்த வரையில், ஒரு காரணத்தைச் சொல்லலாம். திருநெல்வேலி—நாகர்கோயில் இரயில் பாதை பிராட்கேஜ் ஆகப் போடப்பட்டது. மதுரை டிவிஷனில் எல்லாம் மீட்டர் கேஜ் பிரிவுகள்தாம் இருக்கின்றன. எனவே பிராட்கேஜ் பிரிவுகளையெல்லாம் ஒன்றாக இணைக்க வேண்டுமென்ற அடிப்படையில் இதைச் செய்திருக்கிறோம் என்று சொல்லலாம். ஆனால் திருவனந்தபுரம் மையத்தில் உள்ள கோட்டயம் பகுதியிலேயே மீட்டர் கேஜு பிரிவும் இருக்கிறது. வட இந்தியாவில் பல இடங்களில் பிராட்கேஜும் மீட்டர்கேஜும் கலந்தே இருக்கின்றன. எனவே இந்தக் காரணத்திலும் நியாயமில்லை. அல்லது திருநெல்வேலியிலிருந்து சென்னைவரை எத்தனை ஆண்டுகளானாலும் மீட்டர் கேஜே இருக்க வேண்டும் என்று மத்திய அரசு எண்ணிக் கொண்டிருக்கிறதா? கேரளத்தில் இப்படிப் பல பிரிவுகள் இருக்கின்றன. கோட்டையத்திற்கு அருகில் மலையைக் குடைந்து பிராட் கேஜில் ரயில் பாதை போடுகிறார்கள். காயர் பாலம் கட்டி அங்கே மீட்டர் கேஜ் இருப்புப்பாதை போடுகிறார்கள். இப்படி இரண்டு லைன்களும் அங்கெல்லாம் இருக்கின்றன. மீட்டர் கேஜ் போட்டதால், சென்னைக்கு வருவதென்றால் இப்போது ஒன்றரை நாட்களாகின்றன. பிராட் கேஜிலே வந்தால், 8 மணி நேரத்தில் சென்னையை வந்து அடைந்துவிட முடியும். இப்படி நாட்டின் தலைநகரையே அலட்சியப்படுத்துகிற நிலைக்கு இந்த அரசு என் விட்டுக் கொடுக்க வேண்டும் என்று எனக்குப் புரியவில்லை. தெரியாமல் விட்டுவிட்டார்களா, அல்லது உரிமையைத் தெரிந்தே இழந்து விட்டார்களா என்பது எனக்குப் புரியவில்லை. எனவே மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் நாகர்கோயிலிலிருந்து திருநெல்வேலி வரையான இருப்புப்பாதைப் பிரிவை மதுரை மையத்தோடு இணைக்க தக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். கோரிக்கைகள் மூலம் இது நடைபெறாது என்றால், அமைச்சர் பெருமக்கள் அத்தனை பேரும் டெல்லிக்குச் சென்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தலைமையில் அங்கே ஓர் ஊர்வலமே நடத்தி இரயில்வே அமைச்சரைச் சந்தித்து எங்களின் கோரிக்கை வெற்றி பெறச் செய்ய வேண்டுமென்று கேட்டு அமைகிறேன்.





**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்களே, 1980-81 ஆம் ஆண்டு முதல் துணை மதிப்பீடுகள் குறித்த விவாதத்தை இந்த அவை ஏற்றுக்கொண்டு, மாண்புமிகு உறுப்பினர்கள் தங்களுடைய கருத்துக்களையெல்லாம் வழங்கியிருக்கிறார்கள். இந்த முதல் துணை மதிப்பீட்டில் தரப்பட்ட விவாத்தில் எந்தெந்த இனத்திற்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது என்பது தெளிவாகச் சொல்லப்பட்டிருக்கிறது. ஏற்கெனவே அளிக்கப்பட்ட ஆண்டு நிதிநிலை அறிக்கையில் சொல்லப்பட்டவைகளுக்கு மேல் எந்தெந்த இனங்களுக்கு எந்தெந்த காரணங்களால் மேற்கொண்டு கூடுதலான செலவாயிற்று என்பது பற்றியும், எவையெவை புதிய இனங்கள் என்பதுபற்றியும், அவைகள் எந்தெந்த வகையின் காரணமாக வந்தன என்பதுபற்றியும், அதிக நிதி ஒதுக்கீடு எப்படி செலவழிக்கப்பட்டது என்பதுபற்றியும் எல்லா விவரங்களும் இந்த அறிக்கையில் தரப்பட்டிருக்கின்றன. மாண்புமிகு உறுப்பினர்கள் அந்த அளவோடு நின்றிருப்பார்களானால், நானும் அதற்குள்ளாகவே நின்று பதிலளித்திருக்க முடியும். ஆனால் மாண்புமிகு உறுப்பினர்கள் முதல் துணை நிதிநிலை மதிப்பீட்டுக்குள்ளேயும் நின்று பேசியிருக்கிறார்கள். அதற்கு வெளியும் தாராளமாக உலவிவிட்டு வந்திருக்கிறார்கள். அவர்கள் சென்ற இடங்களுக்கெல்லாம் உலவிவிட்டு, வந்த இடங்களுக்கெல்லாம் நான் சென்றுவிட்டு வருவதென்றால், 2, 3 நாட்களாவது பதிலுரைக்க எனக்குத் தேவைப்படும்.

இங்கே துணை மதிப்பீடுகள் குறித்து மாண்புமிகு உறுப்பினர்கள் வழங்கிய கருத்துக்கள் வழங்கப்பட வேண்டிய கருத்துக்கள்தாம், கேட்கப்பட வேண்டிய கருத்துக்கள்தாம், அவர்கள் குறிப்பிட்ட குறைபாடுகள் நீக்கப்பட்டு நிறைவு செய்யப்பட வேண்டியவைகள்தாம் என்பதை நான் உணர்ந்திருக்கிறேன்.

ஆனால் பல்வேறு கருத்துக்களையும் கேட்ட பிறகு நான் ஒருவனாகவே இங்கே இருந்து பல துறைகளுக்குமான விளக்கத்தை வைக்க முடியும் என்று யாரும் எதிர்பார்க்க வேண்டாம் என்று தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். அதற்கு ஏற்ற இடம் இதுவல்ல. பொதுவாகத்தான் நான் இங்கே பேச முடியும். பல்வேறு உறுப்பினர்களும் பல்வேறு கருத்துக்களைக் கோடிட்டுக் காட்டியிருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர்களின் கருத்துக்களுக்கு முழுமையான விளக்கம் தருவதற்கு வேறு வாய்ப்புகள் இருக்கின்றன. அடுத்து, 1981-82 ஆம் ஆண்டிற்கான நிதிநிலை வரும்போது, ஒவ்வொரு மானியமாக அவை விவாதத்திற்கு எடுத்துக்கொள்கிற வாய்ப்பு இருக்கிறது. அப்போது எல்லாவற்றைப்பற்றியும் விரிவாகப் பேசி உரிய அமைச்சர்களிட

விநியோகிக்கலாம். இப்போது சிவில் சப்ளைஸ் இலாக்காவிலே இருக்கக் கூடிய உயர்ந்த அதிகாரிகள் ஒரு தத்துவத்தைக் கடைப்பிடித்து நடைமுறைப் படுத்திக்கொண்டு வருகிறார்கள். நான் கன்னியாகுமரி மாவட்டத்திலே இருக்கிறேன். கேரளாவிலே அரிசியின் விலை ஏறுகிறது என்று சொன்னால், கன்னியாகுமரி மாவட்டத்திலிருந்து அங்கே போகிறது; ஆகவே, அதைத் தடுக்க வேண்டும் என்று சொன்னால், அதற்கு இவர்கள் ஒரு புது தத்துவத் தைச் சொல்கிறார்கள். அந்தத் தத்துவம் என்னவென்றால், கேரளாவில் அரிசியின் விலை எவ்வளவு இருக்கிறதோ அதே அளவு விலையைக் கன்னியா குமரி மாவட்டத்திலும் ஆக்க வேண்டும் என்று சொல்கிறார்கள். கேரளாவில் இருக்கும் விலைக்கு ஒப்பாக கன்னியாகுமரி மாவட்டத்தில் அரிசியின் விலையை வைத்துவிட்டால், இங்கிருந்து அரிசி அங்கே போகாது என்று சொல்கிறார்கள். இது என்ன தத்துவம்? ஆகவே, இப்படிப்பட்ட கருத்துக் களைக் கூறும் அதிகார வட்டத்திற்குள் அகப்பட்டுக்கொண்டு அரசு தத்தளிக் கக்கூடாது என்று நான் அரசை எச்சரிக்கிறேன்.

நமது மாநிலத்திலே திருநெல்வேலி-கன்னியாகுமரி இருப்புப்பாதை போடப்பட்டு, அந்தப் பணி முடிந்து கிட்டத்தட்ட 6 மாத காலமாகிறது. இப்போது அந்தப் பாதையில் சரக்கு ரயில்கள் போய்க்கொண்டிருக்கின்றன. ஆனால், அந்த இரயில் பாதை இன்று வரையிலும் திறக்கப்படவில்லை. அது மத்திய அரசைச் சார்ந்தது என்று நாம் சொல்லலாம். இருந்தாலும், வேலை முடிந்து இவ்வளவு நாட்களாகியும், இன்றுவரையிலும் ஏன் அதைத் திறக்காமல் வைத்திருக்கிறார்கள் என்று கேட்க வேண்டிய பொறுப்பு மாநில அரசுக்கு உண்டு. கன்னியாகுமரி மாவட்டம் தமிழகத்தோடு சேர வேண்டும் என்று 1946 முதல் போராட்டங்களை நடத்தி, பல தியாகங்களை மேற் கொண்டு, பல உயிர்களைப் பலிகொடுத்து, 1956-லே தமிழகத்தோடு வந்து சேர்ந்தோம். அந்தப் பகுதியைக் கொண்டுவந்து தமிழகத்தோடு சேர்ப பதற்கு, நாங்கள் பட்ட கஷ்டத்திற்குக் கணக்கு வழக்கில்லை. இப்போது, நாகர்கோவிலிலிருந்து திருநெல்வேலி வரையில் இருக்கும் இருப்புப் பாதையை திருவனந்தபுரம் டிவிஷனோடு சேர்த்திருக்கிறார்கள். அது மதுரை மையத் தோடு சேர்ந்திருக்கவேண்டியது. திருவனந்தபுரம் மையத்தோடு அதைச் சேர்க்கக்கூடாது என்று போராட்டம் நடைபெற்றது. இதற்காக இந்த அரசு என்ன நடவடிக்கை எடுத்தது? இந்தப் பகுதி திருவனந்தபுரம் மையத்துடன் சேர்க்கப்படாமல் இருந்தால், நாங்கள் போராடுவோம் என்று கேரள முதலமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள். இந்த அரசு அதற்கு என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது? திருநெல்வேலியிலே இரயில்வே துறை இயங் காமல், இரயில்கள் போக்குவரத்தில்லாமல் 4 நாட்களாகப் போராட்டம்





நடைபெற்ற பிறகும், இந்த அரசு எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்க வில்லை. இப்போது அந்தப் பகுதி திருவனந்தபுரம் மையத்தோடு இணைக்கப்பட்டிருக்கிறது. இன்னும் கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ள வர்களைப் போராட்டத்திற்கு ஆளாக்கக் கூடாது என்று நான் கேட்டுக்கொள் கிறேன். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும், மற்ற அமைச்சர்களும் கேரள மாநில அமைச்சர்களுடன் இதுபற்றிப் பேச்சுவார்த்தைகள் நடத்தி, இந்தப் பிரச்சினைக்குப் பரிகாரம் காண வேண்டும். இந்தியத் துணைக் கண்டத்திலே, நாகர்கோவில்-திருநெல்வேலி இருப்புப்பாதை திருவனந்தபுரம் மையத்தோடு இருந்தால் என்ன அல்லது மதுரை மையத்தோடு இருந்தால் என்ன என்று நினைக்கலாம். நாகர்கோவில்—திருநெல்வேலி இரயில்வே பாதை அமைக்கப்படும்போது, அந்தப் பகுதியில் உள்ள ஆயிரக்கணக்கான மக்கள் டெம்பரரி ஒர்க்கர்களாக உழைத்தார்கள். இப்போது அவர்கள் வெளி

(பிற்பகல் 1-10)

யேற்றப்பட்டிருக்கிறார்கள். இப்போது திருவனந்தபுரம் மையத்தோடு இதை இணைத்துவிட்டதன் காரணமாக கேரளப் பகுதியான எர்ணாகுளம், கொச்சி, ஆலப்புழை போன்ற பகுதிகளில் டெம்பரரியாக வேலை செய்து கொண்டிருந்த தொழிலாளர்களையெல்லாம் இங்கே கொண்டு வந்து அவர்களை பெர்ம னென்ட் செய்து வருகிறார்கள். இப்படி கேரளப் பகுதியில் டெம்பரரியாக, மற்றும் கேஷுவல் லேபராக இருப்பவர்களை சீனியாரிட்டிபடி இங்கே கொண்டு வந்து நிரந்தரப்படுத்திக் கொண்டிருக்கிறார்கள். இந்த இரயில் பாதைப் பகுதி மதுரை மையத்தோடு இணைந்திருக்குமானால், தமிழகத்தில் இந்தப் பகுதியில் உள்ள கேஷுவல் லேபருக்கு சீனியாரிட்டிபடி நிரந்தரமான வேலை வாய்ப்பு கிடைத்திருக்கும். இப்போது இந்த நிலைமை இல்லாத காரணத்தால், ஆயிரக் கணக்கான தமிழர்கள், தமிழ் நாட்டு மக்கள் வேலை வாய்ப்பை இழக்கிறார்கள். இதை எதற்குச் சொல்கிறேன் என்றால், இந்தப் பகுதி மக்கள் வேலை வாய்ப்பை இழந்து, பிற பகுதி மக்கள் இங்கே வந்து நிரந்தரமான வேலை வாய்ப்பைப் பெறுகிற நிலையை இந்த நாட்டில் நாம் உருவாக்கக்கூடாது என்பதை வலியுறுத்தத்தான். அரசு அதற்கான நட வடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்று இந்தச் சந்தர்ப்பத்தில் கேட்டுக் கொள்கிறேன்.

துணை மானியக் கோரிக்கைகள் மூலம் நிதியைக் கேட்கிறார்கள். இந்த அவையும் அதற்குரிய நிதிக்கு ஒப்புதல் அளிக்கிறது. ஆனால் அதோடு நிலையும் நிர்வகிக்க வேண்டியது இந்த அரசின் பொறுப்பு என்பதை

மிருந்து உரிய விளக்கங்களைப் பெறவும், அறிய வேண்டியவைகளை அறியவும், ஐய வினாக்களையும், அறியா வினாக்களையும் கேட்டுத் தெளிவு பெறவும் வாய்ப்புகள் இருக்கின்றன. இடையில் வினாக்களை எழுப்பி, அதன் மூலம் ஒரு குறிப்பிட்ட நிலைமை என்னவாயிற்று என்று கேட்கவும் வாய்ப்பு இருக்கிறது. ஆக, இங்கே பல்வேறு மாண்புமிகு உறுப்பினர்களும் எடுத்துச் சொன்ன அனைத்துக் கருத்துக்களுக்கும் இணக்கமான முறையில் விளக்கம் தருகிற நிலையில் நான் இல்லை. மாண்புமிகு உறுப்பினர்கள் பல்வேறு கருத்துக்களைக் கோடிட்டுக் காட்டியிருக்கிறார்கள். நானும் அந்த வகையில் பலவற்றைக் கோடிட்டுக் காட்ட விரும்புகிறேன்.

அண்ணாமலைப் பல்கலைக் கழகம் மூடப்பட்டிருக்கிற பிரச்சினை குறித்து மாண்புமிகு உறுப்பினர் திரு. எ. ஆர். தாமோதரன் அவர்கள் இங்கே குறிப்பிட்டார்கள். அதுபற்றி அவையில் இருக்கிற பல்வேறு உறுப்பினர்களும் கருத்துத் தெரிவித்திருக்கிறார்கள். பல்கலைக் கழகம் மூடப்படாமல் தன்னுடைய பணியைச் செய்ய வேண்டுமென்றும், நாட்டின் மாணவர்கள் பல்கலைக் கழகத்திலிருந்து பெற வேண்டிய பயனை முழுவதுமாகப் பெற வேண்டும் என்றும், அதன் மூலம் அவர்களுடைய அறிவுத் திறனும் ஆற்றல் திறனும் சிறப்பாக அமைய வேண்டும் என்ற நோக்கத்தைக் கொண்டிருக்கிறார்கள் என்றும் அவர்களின் பேச்சிலிருந்து நமக்குத் தெளிவாகிறது. இங்கே பேசிய உறுப்பினர்கள் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தின் ஆசிரியர்கள் மேற்கொண்டிருக்கிற போராட்டத்தின் தன்மைகளைப்பற்றி விளக்கமாகப் பேசியிருக்கிறார்கள். அதோடு மாண்புமிகு கல்வியமைச்சர் அவர்களும் அவ்வப்போது அதுகுறித்து விளக்கம் தந்திருக்கிறார்கள். அந்த விளக்கத்தையொட்டி மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும் உறுதிமொழி கொடுத்திருக்கிறார்கள்.

அண்ணாமலைப் பல்கலைக் கழக ஆசிரியர்களைப் பொறுத்தவரையில், இப்போது அவர்கள் மேற்கொண்டிருக்கிற போராட்டத்திற்கான காரணம் வேறு. ஏற்கெனவே அவர்கள் தங்களின் குறைபாடுகள் குறித்தும், சம்பளம் நிர்ணயிப்பது குறித்தும் நிலையான வேலைவாய்ப்பு குறித்தும் போராட்டம் நடத்தினார்கள். அதையொட்டி பேச்சுவார்த்தை நடத்தி, அந்தப் பிரச்சினைகள் தீர்க்கப்பட்ட நிலையில் மீண்டும் இப்போது புதியதோர் போராட்டத்தைத் தொடங்கியிருக்கிறார்கள். அதாவது அண்ணாமலைப் பல்கலைக் கழகச் சட்டத்தைத் திருத்த வேண்டுமென்று கோரியும், அரசே அந்தப் பல்கலைக் கழகத்தை ஏற்க வேண்டும் என்று கோரியும், போராட்டத்தை நடத்திக் கொண்டிருக்கிறார்கள். இதில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்



மிகத் தெளிவாக ஒன்றைக் குறிப்பிட்டிருக்கிறார்கள். அண்ணாமலைப் பலகலைக் கழகத்தை அரசே ஏற்று நடத்துவது என்பது முடியாத காரியம் என்பதை மிகத் தெளிவாக எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தை அரசு தன்பொறுப்பில் ஏற்று நடத்துவதன் மூலமாக, அங்கே இருக்கிற பிரச்சினைகளுக்குத் தீர்வு காண முடியும் என்று நாம் கருதுவதற்கில்லை. ஆனால் தற்போதைய சிக்கல்களுக்குக் காரணமாக இருக்கிற அந்தப் பல்கலைக் கழகச் சட்டத்தைத் திருத்த அரசு ஆயத்தமாக இருக்கிறது என்பதைத் தெளிவுபடுத்தியிருக்கிறார்கள். ஏற்கெனவே அண்ணாமலைப் பல்கலைக் கழகச் சட்டத்தைத் திருத்த இந்த அரசு என்ன வாக்குறுதிகளைக் கொடுத்ததோ அந்த வாக்குறுதிகளிலிருந்து அரசு பின் வாங்காது என்றும் அந்த வாக்குறுதிகளை அரசு நிறைவேற்றும் என்றும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும், மாண்புமிகு கல்வியமைச்சர் அவர்களும் உறுதி அளித்திருக்கிறார்கள். அதனடிப்படையில் போராட்டத்தைக் கைவிட்டுவிட்டு ஆசிரியர்கள் தங்கள் கடமையை ஆற்றுவதற்கு முன்வந்தால், கொடுத்த வாக்குறுதிகளை இந்த அரசு நிறைவேற்றுவதற்கு வசதியாக இருக்கும் என்பதால், மீண்டும் அதை நான் இங்கே வலியுறுத்திக் கூறிக் கொள்ள விரும்புகிறேன்.

ஆனால் இன்றையதினம் அவர்கள் பல நிபந்தனைகளைப் போடுகிறார்கள். பல்வேறு நிபந்தனைகளைப் போட்டு அரசு அவற்றைச் செய்ய வேண்டும் என்கிறார்கள். அரசைச் சார்ந்த நாங்கள் அவர்களுக்கு ஒரு நிபந்தனையைத்தான் போட்டோம். "போராட்டத்தைக் கைவிட்டுவிட்டு பேச்சுவார்த்தைக்கு வாருங்கள். சட்டத்தைத் திருத்துவதா இல்லையா, திருத்துவது என்றால் எந்த வகையில் திருத்துவது என்பதெல்லாம் பரிசீலனையில் இருக்கிறது" என்று எடுத்துச் சொன்னோம். பரிசீலனைக்குப் பிறகு இறுதி முடிவு எடுக்கலாம் என்று சொன்னோம். அந்த அடிப்படையில் ஆசிரியர்கள் தங்கள் போராட்டத்தைக் கைவிட்டுவிட்டு அரசின் நிபந்தனையை ஏற்று பேச்சு வார்த்தைக்கு முன்வருவார்களானால் . . . .

* **செல்வி அ. லீலாவதி :** இப்போது அண்ணாமலைப் பல்கலைக் கழக ஆசிரியர்கள் தங்கள் போராட்டத்தை நிறுத்திக்கொண்டு விட்டதால், அரசு அவர்களுடைய பிரச்சினைக்கு விரைவில் தீர்வு காண வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** இதைத்தான் நான் மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் அவர்களும் மற்ற ஆசிரியப் பிரதிநிதிகளும் என்னைச் சந்தித்தபோது எடுத்துச் சொன்னேன்.

அன்றைக்குச் செய்யத் தயாராக இல்லை. போராட்டத்தை 'சஸ்பெண்டு' செய்கிறோம் என்றுதான் சொன்னார்கள். அதாவது, அதை ஒத்தி வைக்கிறோம் என்றார்கள். ஒத்தி வைக்கிறோம் என்றால், மீண்டும் 4 நாட்கள் கழித்து திடீரென்று மறுபடியும் திரும்ப வரும் என்ற நிலை இருக்கிறது. எனவே, போராட்டத்தைக் கை விட்டுவிட்டோம் என்று சொல்லி, அவர்கள் பேச்சு வார்த்தைக்குத் தயாராக வருவார்களானால், நாம் அவர்களைக் கூப்பிட்டு வைத்துக்கொண்டு, சிறையில் உள்ள ஆசிரியர்களையும் வெளியே விடச்செய்து பேச்சு வார்த்தை நடத்துவதற்கு வசதியாக இருக்கும். பல்கலைக் கழகம் சுமுகமாக நடைபெறுவதற்கான வழிமுறைகளையும் காண இயலும்.

(முற்பகல் 1-20)

அதைத்தான் அன்றைக்கே சொன்னோம். ஆனால் தெளிவான நிலை நேற்று தான் தெரிந்தது.

திரு. செ. முத்துசாமி: துணைத் தலைவர் அவர்களே, நிதியமைச்சர் அவர்களுடைய யோசனை. "தள்ளி வைப்பது" என்பது நீண்ட காலமாகவே சங்கங்களிடத்திலே இருந்துவரும் பொதுவான நிலைமை "தள்ளிவைத்திருக்கிறோம்" என்பதைத் தவறாகக் கருதாமல், கைவிட்டுவிட்டதாகக் கருதி இதை ஒரு கௌரவப் பிரச்சினையாக அரசு கருதாமல் அவர்களைக் கூப்பிட்டுப் பேசி, பிரச்சினையைத் தீர்க்க அரசாங்கம் முன்வர வேண்டும்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: நடைமுறையிலே என்ன நடைபெற்று வருகிறது என்பதை எடுத்துச் சொன்னேன். நேற்று வந்த ஒரு அறிக்கை தெளிவுபடுத்திவிட்டது. ஆகவே மீண்டும் பல்கலைக் கழகம் சுமுகமாக நடைபெற, மாணவர்கள் பாதிக்கப்படாமலிருக்க ஆசிரியர்கள் ஒத்துழைப்புத் தர வேண்டும். மாணவர்களும் ஒத்துழைப்பைத் தரவேண்டும். அரசும் கொடுத்த வாக்குறுதியைச் சிறப்பாக நிறைவேற்ற ஒத்துழைப்பு தரும் என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

* திரு. சி.ரா. லெட்சுமிகாந்தன்: இந்த மேலவையிலும், சட்டமன்றப் பேரவையிலும் அரசின் சார்பாகக் கொடுத்த வாக்குறுதிகளின் மீது ஆசிரியர்களுக்கும், அலுவலர்களுக்கும் முழு நம்பிக்கை இருக்கிறது. இதில் சந்தேகம் இல்லை. ஆனால் அவர்கள் வேலைக்கு சுமுகமாகத் திரும்பும் சூழ்நிலையை ஏற்படுத்துவதற்கு, அவர்களை விடுதலை செய்துவிட்டு, ஜூலை மாதத்தில் நடந்த பேசசுவார்த்தை உடன்படிக்கையை இடையிலே நிர்வாகம்



முறியடித்ததன் காரணமாக, நின்றுவிட்டதை மீண்டும் அவர்களுக்கு நினைவு படுத்தி, அதைச் செயல்படுத்த வேண்டுமென்று அரசுத் தரப்பில் நிர்வாகத்திற்குச் சொன்னால்தான் நிர்வாகம் செயல்படுத்தும். அந்த ஒரே அம்சத்தைத்தான் நாங்கள் கோருகிறோம். அப்படிச் செய்தால், போராட்டங்களை விட்டுவிட்டு ஆசிரியர்கள் அத்தனை பேரும் பல்கலைக் கழகங்களுக்குச் செல்லும் பொறுப்பை இங்கே உள்ள ஆசிரியர்களாகிய நாங்கள் ஏற்றுக் கொள்ளுகிறோம். ஆகவே ஆசிரியர்களை விடுதலை செய்துவிட்டு, அவர்களை அழைத்து ஜூலை மாதத்தில் ஏற்பட்ட முத்தரப்புப் பேச்சு உடன்படிக்கையை மீண்டும் நினைவுபடுத்தி, அதை அமுல்படுத்த வேண்டுமென்று அரசுத் தரப்பில் அறிவுரை வழங்க வேண்டிய வேலையை அரசு செய்தால், பிரச்சினையை ஒரே நாளில் முடித்து விடலாம்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு உறுப்பினர் கூறுவதைப்போல, அவையில் உள்ள உறுப்பினர்கள் பொறுப்பேற்று மாண்புமிகு கல்வி அமைச்சரோடு, முடிந்தால் முதலமைச்சரோடும் மேற்கொண்டு நிலைமைகளைச் சரி செய்ய என்னென்ன செய்ய வேண்டுமென்று பேச்சுவார்த்தை நடத்தினால், அதன் மூலமாக ஏற்படும் முடிவு மாண்புமிகு உறுப்பினர் விரும்புகிற சூழ்நிலையை ஏற்படுத்த உதவும். வேண்டுமானால் அவர்களே வரலாம், அல்லது அவர்களுடைய பிரதிநிதிகள் வரலாம், அல்லது அவர்கள் சார்பாக இங்குள்ள ஆசிரியப் பிரதிநிதிகள் பொறுப்பேற்றுக் கொண்டு, அதனுடைய பின் விளைவுகளுக்குத் தங்களைக் கட்டுப்படுத்துகிற அளவுக்குத் தன்மையை ஏற்றுக்கொண்டு பேச்சுவார்த்தை நடத்துவதன் மூலமாக இன்றோ, நாளையோ கூட முடிவுக்கு வரலாம்.

திரு. ஏ. ஆர். தாமோதரன் அவர்கள் பேசுகிறபோது "ராகிங்" பற்றிக் குறிப்பிட்டார்கள். ஏற்கெனவே அரசு உத்தரவிட்டிருக்கிறது. எல்லாக் கல்வி நிலையங்களிலும் இது கூடாதென்று உத்தரவிட்டிருக்கிறோம். இது உள்ளபடியே அநாகரீகமான செயல்தான். மிக நெருங்கியவர்கள் ஒருவருக்கொருவர் கிண்டல் செய்துகொள்வதில் தவறில்லை. ஆனால் ஒரு தொடர்பும் இல்லாத மாணவரை, தொடர்பில்லாத பல மாணவர்கள் சேர்ந்துகொண்டு, மாண்புமிகு உறுப்பினர் திரு. தாமோதரன் சொல்லியமாதிரி, அவமானப் படுத்துகிறபோது, அந்த அவமானத்தைத் தாங்க முடியாமல், சில பல இடங்களில் தற்கொலை செய்துகொள்ளுகிற நிலைக்குச் சில மாணவர்கள் தள்ளப் படுகிறார்கள். ஆகவே கல்லூரி முதல்வர் இது குறித்து மிகக் கடுமையாக இருக்க வேண்டும். நான் கல்வியமைச்சராக இருந்தபோது, என்ஜினியரிங்

[டாக்டர் இரா. நெடுஞ்செழியன்] [1981 பிப்ரவரி 10

றோம். 40 சதவீதம் லெவி போட்டு கிட்டத்தட்ட இருபது நாட்கள்தான் ஆகின்றன. இருக்கின்ற சூழ்நிலையையும், அரிசியின் நடமாட்டத்தையும் மாவட்டங்களில் அறியச் சொல்லி எந்த அளவிற்குச் செய்ய முடியுமோ, அந்த அளவிற்குச் செய்ய இந்த அரசு ஆயத்தமாக இருக்கிறது. லெவியைக் கொண்டு வந்த ஐந்தாறு நாட்களுக்குள் நிலைமை புரியாது. ஏழு, எட்டு நாட்களில்கூட நிலைமை புரியாது. இருபது நாட்களுக்குப் பிறகுதான் ஓரளவுக்குப் பிடிபட்டிருக்கிறது. இன்னும் ஐந்தாறு நாட்களில் தெளிவு பெற முடியும். எந்தக் காரணம் கொண்டு ஆந்திராவிலிருந்து அரிசியும், நெல்லும் தாராளமாக வந்து கொண்டிருந்தனவோ, அதேபோல மீண்டும் வந்து கொண்டிருக்க என்ன செய்ய வேண்டும் என்பதையெல்லாம் ஆராய வேண்டுமென்று சொல்லியிருக்கிறேன். அதனுடைய நடமாட்டத்தையெல்லாம் பத்து நாட்களுக்குள் கண்டு பிடிக்க முடியாது. லெவி போட்டவுடனே இன்றைக்கே தானியங்களை விற்க மாட்டார்கள். வியாபாரிகள் வாங்கி வைத்துத்தான் விற்பார்கள். ஒரு தேக்க நிலை ஒரு பத்துப் பதினைந்து நாட்களுக்கு ஏற்படும்.

(பிற்பகல் 1.30)

ஆந்திராவிலே லெவி போடுவதில்லை. 'நம் தமிழ் நாட்டினுடைய எல்லைக்குள் நுழைகிறபோது அதற்கு லெவி கிடையாது' என்று சொல்லியிருக்கிறேன். ஆனால், மொத்த வியாபாரிகள் 40 சதம் லெவி தர வேண்டும் என்று சொல்லியிருக்கிறோம். அவர்கள் அதை வாங்கி வந்து இங்கே விற்பதிலேதான் 40 சதம் லெவி தர வேண்டுமென்று சொல்கிறேன். 'லெவி போடுவதற்கு முன்னால் ஆந்திராவிலிருந்து எவ்வளவு நெல் வந்தது. இப்போது எவ்வளவு வருகிறது. இப்போது எவ்வளவு தடைப்படுகிறது, இனி எவ்வளவு வரக்கூடும் எவ்வளவு வர முடியும் என்று கணக்கிடுங்கள்' என்று சொல்லியிருக்கிறேன். அந்த அடிப்படையிலே வைத்துத்தான் நாம் நிலைமையைப் பார்க்க வேண்டும். தமிழகத்திற்குத் தடைப்படாமல் வருகின்ற அளவுக்கு, பற்றாக்குறை ஏற்படாமல் இருக்கின்ற அளவுக்கு நாம் பார்த்துக்கொள்ள வேண்டும். தமிழகத்திற்கு தாராளமாக வருவதற்கு நாம் வழிவகை செய்து கொண்டிருக்கிறோம்.

நுகர்பொருள் வாணிபக் கழகம்பற்றி திரு. சங்கரலிங்கம் அவர்கள் சொன்னார்கள். அவர்கள் நுகர்பொருள் வாணிபக் கழகம் மூலம் நாமே கொள்முதல் செய்ய வேண்டும் என்றார்கள். நுகர்பொருள் வாணிபக் கழகத்தினர் அங்கு அனுப்பப்பட்டு, அவர்கள் அதையும் ஒரு பக்கம் செய்துகொண்டிருக்கிறார்கள். அப்படி வாங்குவது என்பது மட்டும் அல்லாமல் வியாபாரிகள்



1981 பிப்ரவரி 10] [டாக்டர் இரா. நெடுஞ்செழியன்]

மூலமாகவும் வாங்குவதற்கு முயற்சி எடுத்திருக்கிறார்கள். நாமும் அங்கே வாங்குவதற்கு முயற்சி செய்கிறோம். ஆனால், அதற்குப் போதுமான அளவுக்கு வேகன்கள் கிடைக்கவில்லை. அதைப்பற்றி இரயில்வே துறை அமைச்சர் அவர்களிடம் கூட நான் பேசியிருக்கிறேன். அவர்கள் ஏராளமான வேகன்களைக் கேரளத்திற்கு அனுப்புகிறார்கள். அதிகமாக அனுப்பிக்கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கு நான்கைந்து முறைகள் அனுப்புகிறார்கள். ஆனால், அதில் ஒரு தடவைகூட நமக்குத் தருவதில்லை. ஆகவே அவர்களுக்கு ஒரு தடவை அனுப்பும்போது எங்களுக்கும் ஒரு தடவை அனுப்ப வேண்டுமென்று கேட்டுக்கொண்டிருக்கிறோம். அங்கே வாங்கி வைக்கின்ற நெல், அரிசியைக் கொண்டு வருவதற்குத் தேவையான வேகன்கள் கிடைக்காததால், தடை ஏற்படுகிறது. அதுவும் ஒரு காரணமாக இருக்கிறது. அது தவிர, போக்குவரத்து லாரிகளின் மூலமாகவும் கொண்டுவர முயற்சி செய்துகொண்டு வருகிறோம். இரயில்வே போக்குவரத்தின் மூலமாகக் கொண்டு வருவதைவிட, லாரிகளின் மூலம் கொண்டு வருவதில் செலவு அதிகமாகத்தான் ஆகிறது. அந்தச் சன்மைகளைப் பொறுத்தும், லெவி 40 சதம் என்று வைத்திருக்கிறோம். தங்களுடைய கருத்துக்களை மாண்புமிகு அங்கத்தினர்கள் சொல்கிறார்கள். அங்கத்தினர்கள் எடுத்துக் கூறுவதுபோல, வியாபாரிகளும் எடுத்துக் கூறுகிறார்கள் மற்றவர்களும் எடுத்துக் கூறுகிறார்கள். நாம் பஞ்சாபிலிருந்தும் அரிசி கொண்டுவர முடியும். ஆந்திராவிலேயிருந்தும் கொண்டு வரமுடியும். அவர்கள் லெவியைப் பொறுத்த வரையில், கொஞ்சம் தளர்த்த வேண்டும் என்று கேட்டார்கள். 40 சதம் அதிகம். அதைக் கொஞ்சம் கீழே கொண்டு வர வேண்டுமென்று சொல்கிறார்கள். அப்படிக் கொண்டுவந்தால், சௌகரியமாக இருக்கும் என்று சொல்கிறார்கள். அதைப்பற்றி அரசு ஆலோசித்துக்கொண்டிருக்கிறது. இந்த லெவி முறையை எடுத்தால், நம்முடைய மாநிலத்தினுடைய தேவைகள் நிறைவேறுமா என்பதை நாம் அறிய வேண்டும். நுகர்பொருள் வாணிபக் கழகம் கொள்முதல் என்று சொல்லும்போது மத்திய அரசு ஒரு குவிண்டாலுக்கு ரூ. 105 என்று விலை நிர்ணயம் செய்திருக்கிறது. அப்படி விலை வகுத்திருக்கும் போது, நாம் ரூ. 115, 120 125 ரூபாய் என்று வகுத்திருக்கிறோம். அப்படியிருந்தாலும்கூட வியாபாரிகள் ரூ. 135 140, 145 என்று வகுத்துக்கொண்டு வாங்குகிறார்கள். அந்த விலைக்கு வியாபாரிகள் வாங்கும்போது, விவசாயிகள் நமக்கு நெல்லைத் தருவதில்லை. அவர்கள் 140, 145 ரூபாய் விலைக்கே வியாபாரிகளுக்குக் கொடுக்கிறார்கள். அதுதான் இயல்பு. ஆகவே, அரசு நிர்ணயித்த விலைக்கு நம்முடைய பம்பர் ஸ்டாக்குக்கு அவர்கள் நமக்குத் தர முடியாத நிலைகள் இருப்பதால், லெவியைப் போட்டு அரிசியைச் சேமிக்க

கல்லூரியில் இருந்த நான்கு பேரை வெளியே அனுப்ப வேண்டிய நிலை ஏற்பட்டு, அவர்களை மீண்டும் சேர்க்கக்கூடாது என்று சொல்லிச் சேர்க்கவில்லை. இது அநாகரீகமான செயல்தான். இதை கல்லூரி முதல்வரும், மற்றவர்களும் உணர்ந்து கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டும். பொதுவாக இதற்கு மாணவர்களும் உதவி செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

காவல் துறையினர் கல்லூரிக்குள் வராமல் தடுக்க வேண்டுமென்று சொல்லப்பட்டது. காவல் துறையினர் கூடுமான அளவிற்குத் தாங்களாகவே கல்லூரிக்குள் போவதில்லை. கல்லூரி முதல்வரோ, மற்றவர்களோ வர வேண்டுமென்று விரும்பி கேட்டுக்கொண்டிருந்தாலொழிய, காவல் துறையினர் தாங்களாகக் கல்லூரிக்குள்ளே போக வேண்டுமென்று உத்தரவிடவில்லை. சில இடங்களில் கட்டுக்கடங்கா நிலைமை ஏற்படுகிறபோது, வன்முறை ஏற்படுகிற போது, விபரீத நிலை ஏற்படுகிறபோது, காவல் துறையைக் கூப்பிட வேண்டிய அவசியம் ஏற்படுகிறது.

மாண்புமிகு உறுப்பினர் கூறியதைப்போல, காவல் துறையினருக்கும் சாதாரணமானவர்களுக்கும் இடையிலே 'செக்யூரிட்டி போர்ஸ்' என்பதை ஆக்ஸ்ஃபோர்ட் பல்கலைக் கழகத்திலே வைத்திருக்கிறார்கள். அதற்கு "புல்டாக்" என்று பெயர் வைத்திருக்கிறார்கள். ஓடிப் பிடிக்க வேண்டுமென்று இப்படி வைத்திருக்கிறார்கள். பல்கலைக் கழகம் சார்பாகவும் வைத்திருக்கிறார்கள். இதற்கெல்லாம் செலவு ஏற்படுமே என்று நம் நாட்டில் கருதக் கூடும். இருந்தாலும் சாதாரண மக்களுக்கும் போலீசாருக்கும் இடையிலே 'செக்யூரிட்டி போர்ஸ்' என்ற அளவிற்கு சில இடங்களில் நிறுவுவதற்கு முயற்சி செய்தால் பலன் கிடைக்குமா என்று பார்க்கலாம். இது நல்ல யோசனை தான். அதைப்பற்றி ஆராயலாம்.

எதிர்க்கட்சித் தலைவர் அவர்களும், திரு. தாமோதரன் அவர்களும் மற்றவர்களும் 40 சதவீதம் லெவியைப்பற்றிக் குறிப்பிட்டார்கள். 1976-77 ஆம் ஆண்டிலே லெவி இருந்தது. 1977 ஆம் ஆண்டில் 40 சதவீதம் லெவி இருந்தது. பிறகு அது எடுக்கப்பட்டது. 1979 ஆம் ஆண்டிலே நான்கு மாத காலம் 50 சதவீத லெவி இருந்தது. பிறகு அதை எடுக்க வேண்டி வந்தது. இது நிரந்தரமாக இருக்க வேண்டிய ஒன்றல்ல. கூடுமானவரையில் லெவி விதிக்க வேண்டாமென்றுதான் பார்த்தோம். வியாபாரிகளுக்குத்தான் லெவியைப் போட்டோம். அரிசி ஆலை உரிமையாளர்களுக்கு லெவி போடக் கூடாது, அதனால் பல்வேறு சங்கடங்கள் ஏற்படுகின்றன என்பதால், அவர்களுக்குப் போடாமல் மொத்த வியாபாரிகளுக்கு மட்டும் லெவி போட வேண்டு



மென்று சொன்னோம். இதை நாங்கள் போடக் காரணம் மத்திய அரசு. மத்திய அரசு இதை வலியுறுத்திக் கொண்டிருக்கிறது. நமக்குத் தேவையான அளவிற்கு நாம் உணவு உற்பத்தி செய்தாலும், அகில இந்தியாவில் பல இடங்களில் கோதுமை, அரிசி ஆகியவைகளுக்கு இந்த ஆண்டு ஆங்காங்கு பற்றாக்குறை ஏற்பட்டிருக்கிற சூழ்நிலை இருப்பதன் காரணமாக ஒவ்வொரு மாநிலமும் சேமிப்பு இருப்பை அதிகப்படுத்த வேண்டும் என்றும், வருகின்ற ஜூன், ஜூலை, ஆகஸ்ட் திங்கள்களில், கடுமையான அளவிற்குச் சமாளிக்க வேண்டிய நிலை இருக்கிறதென்றும் எச்சரித்துக் கொண்டிருக்கிறார்கள். இப்போது ஆந்திர மாநிலம் அதிகமாக உற்பத்தி செய்து தமிழகத்திற்கும், கேரளாவிற்கும் அனுப்புகின்ற அளவில் இருந்தாலும், லெவி போட்டு சேமித்து வைப்பதற்காக அரிசிக்கு அங்கே லெவி போட்டிருக்கிறார்கள். அது மட்டுமல்லாமல் நமக்குப் பற்றாக்குறை ஏற்படுகிறபோது, நியாய விலைக் கடைகள் மூலமாக, ரேஷன் கார்டுகள் மூலமாகக் குறைந்த விலையில் அரிசியைத் தருவது என்று வைத்திருக்கிறோம். மார்க்கெட் விலையைவிடக் குறைந்த விலையில் அளிப்பதால் கிட்டத்தட்ட 10 கோடி ரூபாய் அளவில் நஷ்டமாக, சப்சிடி என்று வைத்துக்கொண்டு, குறைந்த விலையில் கொடுக்கிற அமைப்பை ஏற்றுக்கொண்டிருக்கிறோம். ஆகவேதான் ஏழையெளிய மக்களுக்கு அரிசி கிடைக்க வாய்ப்பு ஏற்படுகிறது. வெளிச் சந்தையில் குறைந்த விலைக்குக் கிடைத்தால், ரேஷன் கடையில் மக்கள் அரிசி வாங்க விரும்பமாட்டார்கள். ஆனால் வெளிச் சந்தையில் விலை அதிகமாகிவிட்டால் மக்கள் ரேஷன் கடைகளில்தான் அரிசி வாங்க வருவார்கள். அப்படி வருகிறபோது அதை மக்களுக்குத் தர வேண்டிய பொறுப்பு அரசுக்கு இருக்கிறது.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களின் பதிலுரை முடியும் வரை அவையின் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** நியாய விலைக் கடைகளின் மூலமாக அரிசி வழங்கும் திட்டத்தை நீடிக்க வேண்டிய அவசியம் வருகின்றபோது சேமிப்பு அதிகமாக இருக்க வேண்டிய நிலை வருகிறது. பற்றாக்குறை ஏற்படுகிறபோது மத்திய அரசாங்கத்தின் சேமிப்புக் கிடங்குகளிலிருந்து நமக்குத் தேவையானவற்றை வாங்கிக் கொண்டிருக்கிறோம். மத்திய துணை அமைச்சர் அவர்கள், "நாங்கள் லெவி போடச் சொல்லியும் நீங்கள் லெவி போடாமல் இருக்கிறீர்கள். லெவி போட்டுச் சேமித்து வைத்துக்கொள்ளாமல் பற்றாக்குறை என்று சொல்லிக் கேட்டால், "நாங்கள் எங்கள் கிடங்குகளிலிருந்து தர மாட்டோம்" என்று திட்டவட்டமாகச் சொன்னதற்குப் பிறகு இன்றைக்கு நாம் லெவியைப் போட வேண்டிய அவசியம் ஏற்பட்டது. ஆகவே நாமும் சேமிப்பது என்று வைத்திருக்கி

வேண்டிய நிலைமையிலே இருக்கிறோம். ஓபன் மார்க்கெட்டிலே கிடைக்கும் என்றால் சங்கடமில்லை. நம்முடைய தேவைக்கு நுகர்பொருள் வாணிபக் கழகம் மூலம் வாங்குவதற்கு அவர்கள் சம்மதித்துக் கொடுத்தால், நாம் வாங்கியிருக்க முடியும். மத்திய அரசு விலை நிர்ணயித்திருப்பது ரூ. 105. நாம் கொடுப்பது ரூ. 115. வியாபாரிகள் கொடுப்பது 135 ரூபாய் என்ற அளவில் இருக்கிறது. அந்த நிலையில் விவசாயிகள் ரூ. 135-க்குத்தான் விற்கிறார்கள். அப்படி வியாபாரிகள் வாங்குவதால் நமக்குக் கிடைக்கவில்லை. அங்கேயிருந்து வாங்கி வந்து விற்கின்ற வியாபாரிகளிடமிருந்து தான் நாம் வாங்க வேண்டும். இதனால்தான் 40 சதம் லெவி மூலம் அவர்களிடமிருந்து வாங்கி வைக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டிருக்கிறது. இப்போது ஓரளவுக்கு விலை ஏறியிருக்கிறது. சில இடங்களிலே விலை இறங்கியிருக்கிறது. ஆனால் நாம் அந்த விலைகளைக் கட்டுப்படுத்த வேண்டிய நிலையில் இருக்கிறோம். அப்படிச் செய்யாவிட்டால், வரும் ஜூன், ஜூலை மாதங்களில், ரூ. 5, 5½, 6 என்ற அளவுக்கு விலைகள் ஏறிவிடும். ஆகவேதான் முன்னேற்பாடு செய்கிறோம். அப்படி ஏறிவிட்டால், ஏன் முன்னேற்பாடு செய்யாமல் விட்டோம் என்ற குறை வரும். இப்படி முன்னேற்பாடு என்று ஏதாவது செய்யாவிட்டால், அதைப் பின்னால் தடுத்து நிறுத்த முடியாது. மத்திய அரசு கணக்குப்படி தாராளமாகக் கிடைக்கக் கூடிய சூழ்நிலைகள் வரும். இன்றைய சூழ்நிலையிலே, பஞ்சாபிலிருந்து வரக்கூடிய வாய்ப்பு இருக்கிறது. ஆந்திராவிலிருந்து வரக்கூடிய வாய்ப்பு இருக்கிறது. அரசு, வரத்துத் தடைபடாமல் இருக்கின்ற அளவுக்கு என்ன செய்யலாம் என்று பார்த்துக்கொண்டிருக்கிறோம். நம்முடைய மாநிலத்திலிருந்து மற்ற மாநிலங்களுக்குப் போகாமலிருக்க என்ன செய்ய முடியும் என்றும் நாம் கணக்கிட வேண்டியதாக இருக்கிறது. அவர்கள் கூறியிருக்கின்ற யோசனையின்படி, 5, 6 நாட்களில் ஒரு நல்ல சூழ்நிலை ஏற்படலாம் என்று கூறிக்கொள்ள விரும்புகிறேன்

மாண்புமிகு அங்கத்தினர் திரு. க. இராமமூர்த்தி அவர்கள் நக்சலைட்டுகள் பிரச்சினைபற்றி எடுத்துச் சொன்னார்கள். அதுபற்றி அவ்வப்போது விளக்கங்கள் பத்திரிகைகள் மூலமாகவும் செய்திகள் மூலமாகவும் மக்களிடையே சொல்லப்பட்டு வருகிறது. நக்சலைட்டுகள் இன்றைக்கு பயங்கரமாக வளர்ந்திருக்கிறார்கள். அவர்கள் அடக்கி ஒடுக்கப்பட்டிருக்கிறார்கள். நம் மாநிலத்தில் அவர்கள் அடக்கப்பட்டிருக்கிறார்கள். மத்திய அரசு உள்துறை அமைச்சர் அவர்களும், மற்றவர்களும் நம்மைப் பாராட்டுகின்ற அளவுக்குச் செயல்பட்டிருக்கிறோம். நக்சலைட்டுத் தொல்லை இங்கு தலையெடுக்காமல் இருக்கிறது. வேறு மாநிலங்களைப் பார்க்கிறபோது, அது நமக்குத் தெரி





கிறது. நக்சலைட்டு இயக்கம் இங்கு முளை கண்டு அது இலைவிட ஆரம்பித்த நேரத்திலேயே, அதைத் தடுப்பதற்கான முயற்சிகளை எடுத்துக் கொண்டிருக்கிறோம். அது பல மாவட்டங்களுக்குப் பரவாமல், குறிப்பிட்ட இரண்டொரு மாவட்டங்களிலே இரண்டொரு இடங்களிலே மட்டும்தான் வளர்ந்து வந்திருக்கிறது. அதைத் தடுப்பதற்கான முயற்சியிலே, மாண்புமிகு அங்கத்தினர்கள் கூறியதுபோல, காவல் துறையினர் கடுமையான நடவடிக்கை எடுத்திருக்கிறார்கள். தங்களுடைய உயிரையும் பணயம் வைத்து அந்த நடவடிக்கைகளை எடுத்திருக்கிறார்கள். அதிலே சிலர் இறந்திருக்கிறார்கள். மற்றவர்கள் சொல்லியதுமாதிரி, அரசியல் உணர்வோடு அவர்கள் செயல்பட்டார்கள் என்று சொல்வதற்கில்லை. அரசியல் காழ்ப்புணர்ச்சி, காவல் துறையினருக்கு அங்கே வருவதற்கு வாய்ப்பில்லை. காவல் துறையில் இருப்பவர்களில் சிலருக்குத் தனித்தனியே ஒருவேளை இருக்கலாமே தவிர . . . .

*திரு. க. இராமமூர்த்தி: சட்ட விதிமுறைகளுக்குப் புறம்பாக, கைதியாக இருக்கின்றவர்களை, சிறையிலே இருக்கின்ற கைதிகளைப் பார்ப்பதற்கு சில அரசியல் தலைவர்களுக்கு, ஆளும் கட்சி தொடர்புடையவர்களுக்கு, அனுமதி கொடுக்கப்பட்டிருக்கிறது. அதற்குப் பிறகு அந்தச் சங்கடங்கள் எல்லாம் தீர்ந்த பிறகுகூட மற்றவர்களுக்கு, பிற கட்சியினருக்குத் தரப்படவில்லை. எந்தவிதத்திலே தரப்பட்டிருக்கிறது என்பதும் தெரியவில்லை. ஆகவேதான் இதில் அரசியல் உணர்வோடு காவல்துறை செயல்படுகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: நக்சலைட்டுகளை அடக்குவதற்கு அவர்கள் நடவடிக்கை எடுக்கிறார்கள். மாண்புமிகு அங்கத்தினர் திரு. இராமமூர்த்தி அவர்கள் கூறுவதுபோன்று அதிலே இருக்கின்ற குறைபாடுகளைப்பற்றி நேரடியாகப் பதில் சொல்வதற்கு என்னிடம் தற்போது விவரங்கள் இல்லை. அதுபற்றித் தகவல்கள் தெரிந்துகொள்ளத் தனியாகக் கேள்வி போட்டால் அல்லது வேறு வகையில் கேட்டால் சொல்லலாம். அந்த அனுமதி ஏன் தந்தார்கள், எப்படித் தந்தார்கள், எப்படி அந்த முடிவு எடுக்கப்பட்டது என்பதைச் சொல்லலாம். எடுக்கப்பட்ட நடவடிக்கைகளைப்பற்றி தான் எடுத்துச் சொன்னேன். அவர்கள் தனியாகக் கேள்வி போட்டுக் கேட்டால், தகவல்களைச் சேகரித்து எந்தச் சூழ்நிலையில் எந்த நோக்கத்தோடு அனுமதிக்கப்பட்டார்கள் என்று சொல்லலாம். காவல் துறையினர் அந்த நோக்கத்தோடு செயல்படவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

[டாக்டர் இரா. நெடுஞ்செழியன்] [1981 பிப்ரவரி 10

போது அமைச்சரவர்கள் விளக்கம் தருவார்கள். 'எங்கும் தமிழ், எதிலும் தமிழ், என்றும் தமிழ்' என்ற கொள்கையை நாம் கொண்டாலும், அது முழுவதும் நிறைவேறவில்லை என்று சொல்லலாமே தவிர, நிறைவேறவில்லை என்று சொல்ல முடியாது. வளர்ந்த தமிழ் கீழே போய்விட்டதென்று சொன்னார்கள். தமிழ் வளர்ந்துகொண்டுதான் வருகிறது. சென்ற ஆண்டைவிட, 10 ஆண்டுகளுக்கு முன்னால் இருந்ததைவிட, நாளுக்கு நாள் தமிழ் வளர்ந்து கொண்டுதான் வருகிறது. ஆனால் வளர வேண்டிய அளவிற்கு வளரவில்லை என்று வேண்டுமானால் சொல்லுங்கள். நானும் அந்த ஆதங்கத்திலேதான் இருக்கிறேன். வளர வேண்டிய அளவிற்கு வளரவில்லை, எங்கும் தமிழ், எதிலும் தமிழ் இருக்க வேண்டிய அளவிற்கு இல்லாமல் இருக்கிறதே என்ற ஆதங்கம் இருக்கிறது. கூடுமானவரையில் அதை நடைமுறைப்படுத்துவதற்கான முயற்சிகளை அரசு மேற்கொண்டு வருகிறது. அதுபற்றிய விவர அறிக்கையை பின்னால் தருவார்கள்.

பிற்பட்டோர் விடுதி, ஆதி திராவிடர் விடுதி ஆகியவற்றைப்பற்றிச் சொன்னார்கள். பிற்பட்டோருக்கும், ஆதி திராவிட சமூகத்தைச் சேர்ந்தவர்களுக்கும், விடுதிகளில் தங்கிப் படிக்க, உதவித் தொகை தருகிறோம். அந்தத் தொகைக்கு மேலே கட்டணம் வரும்போது, அவர்கள் அதைத் தர வேண்டியிருக்கிறது. அவர்கள் அந்த உதவித் தொகையை உணவிற்காகத் தருவதாகத்தான் கருத வேண்டும். நாம் ஆதி திராவிட சமூகத்தைச் சேர்ந்தவர்களைப் பொறுத்தவரையில், முழுப் பொறுப்பையும் ஏற்கிறோம். பிற்படுத்தப்பட்டவர்களைப் பொறுத்தவரையில், ஓரளவிற்குப் பொறுப்பேற்கிறோம். அந்த உதவித் தொகையைக் கூட்ட வேண்டுமென்று, அந்தக் காப்பகங்களை நடத்துபவர்கள் முறையிட்டிருக்கிறார்கள். அதைப்பற்றி அரசு ஆராய்ந்துகொண்டிருக்கிறது. இப்போதிருக்கும் விலைவாசிகளின் காரணமாக செலவினத்தைத் தாங்க முடியாதவர்கள் இருப்பதால், உதவித் தொகையின் அளவைக் கூட்ட வேண்டுமென்று அவர்கள் கேட்டிருக்கிறார்கள். அதை அரசாங்கம் பரிசீலித்து வருகிறது. அதைப்பற்றி நல்லதொரு முடிவை அரசு எடுக்கும்.

நீலகிரியில் இருப்பவர்களுக்குப் படி, மற்ற வசதிகளெல்லாம் அளிக்க வேண்டுமென்று கேட்கிறார்கள். அது எந்த நிலையில் இருக்கிறதென்பது பற்றி என்னிடம் விவரக் குறிப்புகளில்லை. என்னிடம் வந்திருக்கிறதென்று உறுப்பினரவர்கள் சொன்னார்கள். என்னுடைய இலாகாவிற்கு வந்திருப்பது ஒருவேளை மாண்புமிகு உறுப்பினரவர்களுக்குத் தெரிந்திருக்கலாம். ஆனால் என்னுடைய கைக்கு அது வந்து சேரவில்லை. என்னுடைய கைக்கு வந்தால் அதில் என்ன நியாயமிருக்கிறது என்று பார்த்து, ஆவன செய்யவியலும்.



1981 பிப்ரவரி 10] [டாக்டர் இரா. நெடுஞ்செழியன்]

ஆகவே எதிலும் ஓரளவிற்கு வரவு செலவைப் பார்த்துச் செய்ய வேண்டும்.

"ஆகாறு அளவிட்டி தாயினுங் கேடில்லை
போகாறு அகலாக் கடை"

என்று வள்ளுவர் கூறுகிறார். அந்த இலக்கண அடிப்படையில்தான் நிதியமைச்சர்கள் நடந்துகொள்ள வேண்டியவர்களாக இருக்கிறார்கள். ஆகாறு அளவிட்டிதாயினும்—வருகிற வழி சுருங்கிப் போனாலும் பரவாயில்லை; போகாறு அகலாக் கடை—செலவினம் பெருகாமல் பார்த்துக்கொள்ள வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். அந்த நிலைமையில்தான் நிதியமைச்சராக இருக்கிற நான் ஓரளவிற்குப் பார்த்துக்கொள்ள வேண்டிய தன்மை இருக்கிறது. கணக்குப் போட்டு, எந்த அளவிற்கு எதையெதைச் செய்ய முடியுமோ, எதுயெது முடியுமோ, அவைகளைச் செய்யும் அளவிற்கு நாம் பல்வேறு பணிகளை ஆற்றிக்கொண்டு வருகிறோம்.

ஒரு நபர் குழு அறிக்கைபற்றிச் சொன்னார்கள். ஒரு நபர் குழுவின் அறிக்கை வந்துவிட்டது. அது நிதித் துறையின் ஆய்விலே இருந்து கொண்டிருக்கிறது. அதை விரைவிலே வெளியிட வேண்டுமென்று சொல்லியிருக்கிறேன். எவ்வளவு விரைவிலே அதை நடைமுறைப்படுத்த வேண்டுமோ, அவ்வளவு விரைவிலே செய்யப்படும். தினமும் 4 பேர்கள் கேட்கிறார்கள், என்ன ஆயிற்று, என்ன ஆயிற்று என்று. இது பல நபர்க் குழுவாக இருந்தாலும்கூட கொஞ்சம் கஷ்டமாக இருக்கும். (சிரிப்பு) இது ஒரு நபர் குழுவாக இருப்பதால், அதிக கஷ்டமில்லை. விரைவிலே அதை ஆய்ந்து, என்னிடம் தர வேண்டுமென்று கேட்டிருக்கிறேன். முடியும், முடியாது; ஆகும், ஆகாது என்று தெரிய வேண்டும். இரண்டிலே ஒன்று சொல்லிவிட்டால், அதை நான் மற்றவர்களுக்குச் சொல்லிவிடுவேன் என்று சொல்லியிருக்கிறேன். அதற்கான நடவடிக்கைகளை நான் எடுத்துக் கொண்டிருக்கிறேன். விரைவிலே அதைச் செய்வேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. சங்கரலிங்கம் அவர்கள் லஞ்ச ஊழலைபற்றிச் சொன்னார்கள். நான் முதலிலேயே எடுத்துச் சொல்லியிருக்கிறேன். பல்வேறு சூழ்நிலைகளைப் பொறுத்து நாம் ஒரு கட்டுப்பாட்டைக் கொண்டுவரவேண்டியதாக இருக்கிறது. அப்படிக் கொண்டு வருவதற்கு, எல்லா வகையிலேயும் எல்லோருடைய ஒத்துழைப்பும் இருந்தால்தான், மேல் மட்டத்திலிருந்து அடிமட்டம் வரை அது போகும். சட்டங்களை நாம் கடுமையாக்க, கடுமையாக்க, நாம் கடுமையாக்கிக் கட்டுப்படுத்த, கட்டுப்படுத்த, அதைப் பிரயோகிக்கிறவர்கள் போகிற இடங்களுக்கு நாம் எல்லாம் போக முடியாது என்பதால், அந்தக் கட்டுப்படுத்துகிற சட்டம் லஞ்சம் வாங்க, ஊழல் செய்ய இடம்தான்

[டாக்டர் இரா. நெடுஞ்செழியன்] [1981 பிப்ரவரி 10

மாண்புமிகு அங்கத்தினர் திரு. க. மீனாட்சிசுந்தரம் அவர்கள் பேசும்போது, 5 ஏக்கர் ஒரு சென்ட் என்று இருந்தால்கூட உதவி மறுக்கப்படுகிறது என்று சொன்னார்கள். எந்த நிலையிலும் அந்த நிலை வரத்தான் செய்யும். அவர்கள் சொன்னதுபோல, 5.49 சென்ட் என்று வைத்தால், 5.50 சென்ட்காரனும் அந்தச் சலுகையைக் கேட்பான். ஆகவே அந்த நிலை வந்துதான் தீரும். இப்படி 5 ஏக்கர் நிலம் என்று நிர்ணயித்திருப்பது, ரிசர்வ் பாங்க் வைத்திருக்கின்ற ஒரு திட்டத்தை அடிப்படையாக வைத்துத்தான் செய்திருக்கிறோம். ஐந்து ஏக்கருக்குக் கீழே இருப்பவர்கள் சிறு விவசாயிகள் என்று இருப்பதன் காரணமாகத்தான் அந்தச் சலுகைகள் கொடுக்கப்படுகின்றன. அதுவும் அந்த சிறு விவசாயிகள் புயலால், வெள்ளத்தால் பாதிக்கப்பட்டு, அதனால் கஷ்டப்பட்டு, அவர்களால் எந்தக் கடனையும், எந்தக் காரணத்தைக் கொண்டும் கொடுக்க முடியாது என்ற அளவுக்கு பாழ்பட்டுப் போனால்தான், குடிசைகளை இழந்திருந்தால்தான், வசதிகளை இழந்திருந்தால்தான், பயிர்களை இழந்திருந்தால்தான், அந்தச் சலுகைகளைத் தரவேண்டும் என்று சொல்லியிருக்கிறோம். அந்த அடிப்படையிலே 42 கோடி ரூபாய் அளவுக்கு நாம் சலுகைகள் கொடுக்கிறோம். அதுவும் கணக்கிட்டுப் பார்க்கும்போது, கிட்டத்தட்ட 50 கோடி ரூபாய்க்கு வந்துவிடும். அது தவிர, சிறு விவசாயிகளில் பாதிக்கப்பட்டவர்களில் கடனைச் செலுத்த வேண்டும் என்று கேட்டுச் செலுத்தியவர்கள் இருக்கிறார்கள். அவர்கள் செலுத்தியது கிட்டத்தட்ட, 20, 21 கோடி ரூபாய் அளவுக்கு வரும். அதையும் அவர்கள் அடுத்த ஆண்டு பணம் கட்டும்போது கழித்துக்கொண்டு கட்டலாம் என்று சொல்லியிருக்கிறோம். அந்தத் தொகையை நாம் ஈடு செய்தால், அந்தத் தொகை கிட்டத்தட்ட 72 அல்லது 73 கோடி ரூபாய் அளவுக்கு வந்துவிடும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

வீடு கட்டுவதற்காகக் கடன் தந்து அதை நிறுத்தியிருக்கின்றதைப் பற்றி மாண்புமிகு அங்கத்தினர்கள் இரண்டொருவர் எடுத்துக் குறிப்பிட்டார்கள். அதைப்பற்றிய நிலைமை என்னவென்று எனக்கு இப்போது தெரியவில்லை. அதுபற்றித் தனியாகக் கேட்டால், அதைப்பற்றி விளக்கம் கொடுக்கிறேன். தற்போது அதுபற்றி என்னிடம் விவரக்குறிப்பு இல்லை. அதிலே ஏதாவது முறைகேடுகள் இருந்தால், அதைத் தவிர்க்கலாம். வசதி வாய்ப்புகள் ஏற்படுமானால் அதைச் செய்யலாம். முதலில் தந்துவிட்டு, பிறகு ஏன் தாராமல் விட்டார்கள் என்று கேட்கிறார்கள். ஒரு திட்டத்தை வகுத்து அதற்கென்று ஒதுக்கிய அளவுக்குத்தான் கொடுக்க வேண்டும். அப்படி இல்லாமல், ஒதுக்கித் தந்ததற்கு மேல் தந்திருந்தால்தான், அந்த நிலையைத் திருத்த வேண்டிய அவசியம் ஏற்படும். நாம் 2 கோடி ரூபாய் ஒதுக்கி அவர்கள் ஐந்து



1981 பிப்ரவரி 10] [டாக்டர் இரா. நெடுஞ்செழியன்]

கோடி ரூபாய் சாங்ஷன் செய்திருந்தால்தான், இந்த நிலை ஏற்படும். ஆகவே தான் இப்போது பட்ஜெட்டில் ஒதுக்கவேண்டியிருக்கிறது. இதைப்பற்றித் தனியாகக் கேள்வி கேட்டால், விவரமாக எடுத்துச் சொல்ல முடியும். இப்போதிருக்கின்ற நிலைமைகளைத்தான் நான் இப்போது சொல்ல முடியும்.

அடுத்து, அகவிலைப்படி பற்றிக் குறிப்பிட்டார்கள். மத்திய அரசு இரண்டு தவணை அகவிலைப்படியைக் கொடுத்திருக்கிறது. எட்டு புள்ளிகள் உயர்ந்தால் கணக்கிட்டு ஒரு தவணை தரவேண்டும் என்று ஒரு முறை இருக்கிறது. அதை அரசு ஆராய்ந்துகொண்டிருக்கிறது. ஆராய்ந்துகொண்டிருக்கிறது என்றால், நிதிநிலை எல்லாம் எப்படி இருக்கிறது என்று ஆராய வேண்டும் என்பதுதான். அவ்வப்போது ஆராய்ந்து ஆராய்ந்துதான் அதைத் தந்து கொண்டிருக்கிறோம். போன தடவை ஆராய்ந்து நானே முன் தேதியிட்டுத் தந்தேன். அப்படி இப்போதும் ஆராய்ந்துகொண்டுதான் இருக்கிறோம். அந்த வகையிலே நிதி ஆதாரங்களைத் தேட வேண்டும். அது அரசாங்கம் ஏற்றுக்கொண்டிருக்கின்ற ஒன்று என்ற முறையில், அதைப்பற்றி ஆராய்ந்து அதை எப்படித் தருவது என்பதுபற்றி முடிவு எடுக்கும். அந்தத் தன்மையிலேதான் தயக்கமாக இருக்கிறதே தவிர வேறல்ல. அதைப்பற்றி விரைவிலே அரசு முடிவெடுக்கும் என்பதை நான் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

(பிற்பகல் 1.40.)

பெரும்பாலும் ஆசிரியர்களின் குறைபாடுகளை எடுத்துச் சொல்லி, அவற்றைப் போக்க வேண்டுமென்றும் நிறைபாடுகளாக்க வேண்டும் என்றும் பல்வேறு யோசனைகளை எடுத்துத் தெரிவித்திருக்கிறார்கள். அவைகள் அனைத்தும் தனித் தனியாக ஆராய வேண்டிய ஒன்று. தனித் தனியாக அவைகளைப்பற்றி அரசின் கவனத்திற்குக் கொண்டு வந்தால், கல்வி அமைச்சரவர்களும், அவற்றை முறைப்படி தீர்க்க முயலுவார்கள். மேலும் நான் முதலிலே சொன்னது போன்று, விளக்கக் குறிப்புகளோடு நாங்கள் வரக்கூடிய வாய்ப்பை ஏற்படுத்தினால், மாண்புமிகு உறுப்பினர்களுக்கு நல்ல முறையிலே பதிலளிக்க முடியும்.

தமிழ் வளர்ச்சி இயக்கத்தைப்பற்றி மாண்புமிகு உறுப்பினர் திரு. முத்துசாமி அவர்கள் குறிப்பிட்டார்கள். தமிழ் வளர்ச்சி இயக்ககம், ஆட்சித் துறையிலே தமிழை நடைமுறைப்படுத்துவதற்கும், தமிழ் நூல்கள், வரலாற்று நூல்கள் மற்றவைகளைக் கொண்டு வரவும், சிலபல திட்டங்களை அடிப்படையாக வைத்து ஏற்படுத்தப்பட்டது. அது என்னென்ன பணிகளை நடத்தியிருக்கிறது, என்னென்ன பணிகளைச் செய்யவிருக்கிறதென்ற விளக்கக் குறிப்பு இப்போது இல்லையென்றாலும், தனியாக மானியக் கோரிக்கை வரும்

(பிற்பகல் 1-50)

(மீண்டும் பிற்பகல் 4 மணியளவில் அவை கூடியது)

(மாண்புமிகு மேலவைத் தலைவர் தலைமை)

6. ஆளுநர் உரையின் மீது விவாதம்—தொடர்ச்சி.

திரு. ம. சங்கரலிங்கம் : மாண்புமிகு தலைவரவர்களே, ஆளுநர் அவர்கள் உரையின் மீது திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் எனது கருத்துக் களை எடுத்து வைக்க விழைகிறேன். ஆளுநர் அவர்களுடைய உரை என்பதே ஒரு அரசினுடைய கடந்த காலச் சாதனைகளைச் சுட்டிக்காட்டி இனிமேல் வருகிற ஆண்டில் என்னென்ன செய்ய இருக்கிறோம் என்கிற கொள்கைகளையும், விளக்கங்களையும் சுட்டிக்காட்டி, அதன் மீது உறுப்பினர்கள் தங்களுடைய கருத்துக்களை எடுத்து வைப்பதைப் பயன் படுத்திக் கொண்டு அரசு வகுக்கின்ற நிதித் திட்டத்திலே உறுப்பினர்களுடைய கருத்துக்களில் ஏற்றுக்கொள்ள வேண்டியவற்றை ஏற்று, அமுல்படுத்த வேண்டிய நிர்வாகத் திட்டங்களுக்கு நிதி ஒதுக்கீடு செய்ய வாய்ப்பாக, அரசினுடைய கொள்கைகள் விமர்சிக்கப்படுவதற்கு வாய்ப்பாக அமைகின்ற ஒரு மரபாகும்.

நமது ஆளுநர் அவர்களுடைய உரையில் தொடக்கத்திலேயே உலகத் தமிழ் மாநாட்டினுடைய சிறப்புகளும், அது நடந்த சீரிய விதமும் மிக விரிவாக, விளக்கமாக எடுத்துச் சொல்லப்பட்டு தொடங்கப்பட்டிருக்கிறது. தமிழ் மாநாடு நடைபெறுகிறது என்றால் அதைத் தமிழர்கள் அனைவரும் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறார்கள். மதுரையிலே நடந்த 5 வது உலகத் தமிழ் மாநாடு உண்மையில் தமிழ் நாட்டுக்கு, தமிழ் மொழிக்கு எந்த அளவுக்கு சிறப்புகளைச் செய்திருக்கிறதோ அந்த அளவுக்கு அதை நாம் எல்லோரும் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறோம். தமிழ் நாட்டிலே இருக்கக் கூடிய அரசியல் கட்சிகளில் ஒரு கட்சியைச் சார்ந்த நான் ஒரு கருத்தைச் சொல்லுவதாக இருந்தால், அது ஒருவேளை கட்சிக் கண்ணோட்டத்தோடு இணைந்திருக்கிறது என்று நினைக்கின்ற ஒரு சூழ்நிலை உருவாகும் என்பதால், எனது கருத்துக்களைச் சொல்லாமல் அந்த மாநாட்டிலே கலந்து கொண்ட தமிழ் நாட்டுக்கு அப்பாற்பட்ட நாட்டைச் சேர்ந்த தமிழ் அறிஞர்கள் சொன்ன கருத்துக்களை இந்த அரசின் கவனத்திற்கு நான் கொண்டுவர விரும்புகிறேன். மாநாட்டில் கலந்துகொண்ட ஜப்பானிய நாட்டைச் சேர்ந்த வரலாற்று ஆசிரியரும், தமிழ் அறிஞருமான டாக்டர் நொபோரு கரோசிமா என்பவர் சொன்ன கருத்தை நான் இங்கே எடுத்து வைப்பதால், விருப்பு வெறுப்புக்கு அப்பாற்பட்ட, அரசியல் காழ்ப்புணர்ச்சிக்கு அப்பாற்பட்ட கருத்தாக இருக்கும் என்று நான் சொல்வதை அனைவரும் ஏற்றுக்கொள்வார்கள் என்று நம்புகிறேன்.





"I am disappointed. It thas turned out to be a political festival" என்று சொல்லியிருக்கிறார். "நான் ஏமாற்றம் அடைந்தேன். மாநாடு ஒரு அரசியல் திருவிழாவாக மாறிவிட்டது" என்று அவர் சொல்லியிருக்கிறார். ஒரு அரசியல் திருவிழாவாக மாறிவிட்டது என்று அவரே சொன்ன பிறகு, அது எந்தக் கட்சி அரசியல் திருவிழாவாக நடந்திருக்கும் என்று நான் விளக்கத் தேவையில்லையென்பதால் இத்துடன் விட்டுவிடுகிறேன்.

அடுத்து, மாநாட்டைப் பொறுத்தவரை அல்லது ஒரு மொழியைச் சேர்ந்த மாநாட்டைப் பொறுத்தவரை, அந்த மொழி சம்பந்தமான ஆராய்ச்சிப் பிரிவுதான் மிக மிகச் சிறப்பாக அமைகின்றது. ஒரு காலத்தில் மன்னர்கள் மத்தியில் தமிழ் வளர்ந்த காலத்தில் சில குறிப்பிட்ட தமிழறிஞர் களை ஓர் அறையிலே உட்கார வைப்பார்கள். மன்னரும் அருகிலே அமர்ந்து ஆராய்ச்சிப் பணியைச் செய்து கொண்டே இருப்பார்கள். ஆனால் அது மக்கள் மத்தியில் வாராமலிருந்த நிலை ஒரு காலத்தில் இருந்ததுண்டு. அதை மாற்றி, மக்கள் மத்தியிலும் அது வர வேண்டுமென்கிற நிலையில் மக்களே கலந்துகொண்ட மாநாட்டை நடத்துவது நல்லதுதான். ஆனால் எந்த அளவு ஆராய்ச்சி நடைபெறவேண்டுமோ அந்த அளவு நடக்காமல் புறக்கணிக்கப் பட்டால் அது பயனுடையதாக இருக்காது என்பதையும், நான் இந்த நேரத்திலே குறிப்பிட்டாக வேண்டும். ஆற அமர கட்சிக் காழ்ப்புணர்ச்சி யின்றி இதை அனைவரும் சிந்திக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அவர் கூறிய கருத்து 10 நாள் மாநாட்டிலே கலந்துகொண்ட பிறகு கூறிய கருத்து. மொத்தம் நடைபெற்றுள்ள 5 உலகத் தமிழ் மாநாடுகளிலே அவர் மதுரை மாநாடு உட்பட 4-ல் கலந்துகொண்டவர். ஆராய்ச்சிப் பணியினை நடத்தும் நிர்வாகப் பொறுப்பினை தக்க உண்மையான கல்வியாளர்களிடம் ஒப்படைத்திருக்க வேண்டுமென்று அவர் சொல்லியிருக்கிறார். அதனுடைய ஆங்கில மொழி பெயர்ப்பை நான் இங்கே திரும்பவும் சொல்ல விரும்பவில்லை. இன்னும் சொல்லப்போனால், அவர் I.A.T.R. என்று சொல்லக்கூடிய இன்டர்நேஷனல் அசோசியேஷன் ஆஃப் தமிழ் ரிசர்ச்-ல், அதாவது உலகத் தமிழ் மாநாட்டுப் பிரிவின் ஓர் அமைப்பின் உறுப்பினர். முதல் உலகத் தமிழ் மாநாடு மலேசியாவில் நடைபெற்றது. இரண்டாவது உலகத் தமிழ் மாநாடு

தரும். கூடுமானவரையில் எவ்வளவுக்கெவ்வளவு அதைக் குறைக்கிறோமோ அவ்வளவுக்கவ்வளவு நல்லதுதான். கட்டுப்பாடு ஏற்பட, ஏற்பட, கட்டுப்பாட்டை ஒருவர் கையிலே கொடுத்தவுடன், அதை வைத்துக்கொண்டு ஒருவன் போய் நிற்கும்போது, அதைப் பயன்படுத்தி எந்த அளவிற்குத் தன் சொந்த ஆதாயத்தைப் பெருக்கிக்கொள்கிறான் என்ற குறைபாடு மனித சமுதாயத்தில் அதிகமாக வந்துவிடுகிறது. அதனால் கூடுமானவரையில் கட்டுப்பாடாக இல்லாமல், பண்புக்கு இடம் கொடுத்து நடக்கும் சூழ்நிலை ஏற்பட்டால் மிக மிக நல்லது. மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவரவர்கள் சொன்னது போன்று, தவறே செய்யவில்லை என்று நான் சொல்லவில்லை. ஆனால் எல்லா அதிகாரிகளும், அலுவலாளர்களும் தவறு செய்கிறார்கள் என்றும் நான் சொல்ல மாட்டேன். நாணயமாய், நேர்மையாய், கட்டுப்பட்டு, மனச்சாட்சிப்படி நடக்கிறவர்கள் இருக்கிறார்கள். கண்டுபிடிக்க மாட்டார்கள். எப்படியாவது தப்பித்துக்கொள்ளலாமென்று நினைக்கிறவர்களும் இருக்கிறார்கள். அதைத் தடுக்க சமுதாயமும் மற்றவர்களும் ஒத்துழைக்க வேண்டும். அப்படிக் கடுமையாக நடவடிக்கை எடுத்தாலும், கடைசியில் 'கழுதை தேய்ந்து கட்டெறும்பு ஆனது' என்று சொல்லுவார்கள், அது போன்று தண்டனை எல்லாம் குறைந்து சர்வ சாதாரணமாகிவிடுகிறது. நடவடிக்கை எடுக்கும்போது சாட்சி சொல்ல வரமாட்டேன் என்கிறார்கள். ஒரு சிறிய இடுக்கு இருந்தால், அதை வைத்துக்கொண் Benefit of doubt goes to the accused சந்தேகத்தை சாதகமாக்கிக்கொண்டு, அவர்களை வெளியே விட்டு விடுகிறார்கள். இவைகள் இல்லாமல் இருந்தால், குறைபாடுகள் இல்லாமல் பார்த்துக்கொள்ளலாம். நாம் சட்டங்களை இயற்றுகிறோம். சட்டமன்றப் பேரவையிலும், மேலவையிலும் அனுமதி பெற்று, சில சட்டங்களை உருவாக்குகிறோம். அவற்றை, நிர்வாகத்தினரை நம்பி விடவேண்டியிருக்கிறது. அதில் சிலர் தவறு செய்கிறார்கள். அது சமுதாயத்தைப் பாழ்படுத்துகிறது. நிரபராதிகளுக்குக் கேடு உண்டாக்குகிறது. அது கூடாது என்பதில்தான் நாம் கண்ணும் கருத்துமாக இருக்கிறோம்.

மாண்புமிகு உறுப்பினர்கள் கேட்கும் கேள்விகள் சில சமயங்களில் எங்களுக்குச் சாதகமாகத்தான் அமையும். இங்கே கேட்டால்தான் அவற்றுக்குப் பதில் சொல்ல முடியும். இங்கே உறுப்பினர்கள் கேட்டால்தான் விழிப்போடு இருக்கிறார்கள் என்று அவர்களுக்குத் தெரியும். அதற்குமேல் தவறுகள் செய்யக்கூடாதென்று நிர்வாகத் துறை விழிப்போடு இருக்கும். சட்டமன்ற மேலவை, பேரவையில் கேட்கப்படும் வினாக்கள்தான் எங்களுடைய நிர்வாகத்திற்குப் பேருதவி செய்யக்கூடியதாக இருக்கிறது. அதனால்தான் என்னைப் போன்றவர்கள் அவற்றை வரவேற்கிறோம். கேள்விகள் கேட்கும்போது





தெரிந்ததைச் சொல்கிறோம். கிடைத்த தகவல்கள் இவ்வளவுதான் என்று சொல்லுகிறோம். எல்லாவற்றுக்கும் உறுப்பினர்களுடைய ஒத்துழைப்பு இருந்தால்தான் எங்களுக்கும் சாதகம், அதிகாரிகளுக்கும் சாதகம், மற்றவர்களுக்கும் சாதகம்.

இந்த மன்றத்திலே மேலும் பல கருத்துக்கள் சொல்லப்பட்டன. நாகர்கோவில்-திருவனந்தபுரம் இருப்புப்பாதை இணைப்பு பற்றியும், அதன் தலைமையிடம் மதுரையிலிருந்து திருவனந்தபுரத்திற்கு மாற்றியதைப் பற்றியும் சொன்னார்கள். இதில் எல்லோருக்கும் ஒரே கருத்துதான் இருக்கும். அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் தன்னுடைய செயற்குழுக் கூட்டத்தில், தலைமையிடம் மதுரையில் இருக்க வேண்டுமென்று தீர்மானம் போட்டிருக்கிறது. அதை மாற்றுவதில் எந்தக் கட்சியைச் சேர்ந்தவர்களுக்கும் விருப்பமில்லை. மத்திய அரசுக்கு மாநில அரசின் கருத்துக்கள் எடுத்துச் சொல்லப்பட்டிருக்கின்றன. ஆனால், மத்திய அரசு ஏதோ ஒரு காரணத்தை வைத்துக்கொண்டு இந்த முடிவை எடுத்திருக்கிறது. அந்த முடிவை அவர்கள் மாற்றிக் கொள்வதற்கு, எதிர்க்கட்சித் தலைவரவர்கள் சொன்னதுபோன்று, எல்லோரும் கருத்து வேறுபாடின்றி, கட்சி வேறுபாடின்றி, இதில் நியாயம் இருக்கிறது. நீதி இருக்கிறது என்று எண்ணி, ஒத்துழைப்புத் தரவேண்டும். இதில் கட்சிப் பிரச்சினை வேண்டாம். இதிலுள்ள நியாயத்தை மத்திய அரசுக்கு இந்த அரசு எடுத்துச் சொல்லுமென்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இங்கே மாண்புமிகு உறுப்பினர்கள் மேலும் பல கருத்துக்களை எடுத்துச் சொல்லியிருந்தாலும், அந்தக் கருத்துக்கள் குறித்து அந்தந்தத் துறையினரால் நடவடிக்கைகள் எடுக்கப்படுமென்று சொல்லி, நல்ல பல கருத்துக்களை வழங்கிய மாண்புமிகு உறுப்பினர்களுக்கு நன்றி தெரிவித்து, முடிக்கிறேன்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்: மேலவையின் நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. அவை மீண்டும் மாலை 4 மணிக்குக் கூடும்.

பின்னர், அவை ஒத்தி வைக்கப்பட்டது.

திட்டங்களும் தேவையில்லை. நீங்கள் ஆற்றிய பணிகள் மதுரையிலே இருக்கின்றன. போடப்பட்ட வளைவுகள் அங்கே இருக்கின்றன. அமைத்த சாலைகள் அங்கே இருக்கின்றன. அங்கே இந்தப் பணிகள் எல்லாம் செய்யும் போது இருந்த மக்களும் இன்றைக்கு இருக்கிறார்கள். அவர்கள் இந்த நிலைமைகளையெல்லாம் அறிந்துகொண்டே 10 ஆண்டுகாலம் இருப்பார்கள் என்று சொல்லிக் கொள்கிறேன். அந்த மதுரை மாநாட்டிலே நடைபெற்ற ஆராய்ச்சிகள், கட்டுரைகள் அடங்கிய புத்தகங்கள் தமிழ் மக்களுக்கு இன்னும் கிடைக்கவில்லை, அது சீக்கிரம் தமிழ் மக்களுக்குக் கிடைக்க, தக்க ஏற்பாடு களைச் செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். மாநாட்டின் சார்பாக அனுப்பப்பட்ட மலர், அந்த மலரிலே உள்ள தவறுக்குப் பொறுப்பு மாநாட்டு மலர்க் குழுவினரையே சாரும். அதற்கு விளக்கங்கள் சொல்லி தப்பிக்க வேண்டாம். தவறாக ஒரு சொல்லைப் பயன்படுத்த அச்சொல் ஒரு சாராரின் மனதைப் புண்படுத்தும்போது சொல்லை எப்படி கட்டுரையிலே அந்தக் கட்டுரையாசிரியர் பயன்படுத்தியிருக்கிறார் என்பதையெல்லாம் பார்க்க வேண்டும். இந்த நாட்டின்மீது பற்று கொண்டவர்கள், இலட்சிய சமுதாயம் எந்தவிதமான குறையும் இல்லாமல் வாழ வேண்டும் என்ற நல்ல உணர்வின் அடிப்படையில்தான் அந்தக் குறைகளைச் சுட்டிக்காட்டி யுள்ளார்கள். இதற்கு மாநாட்டு மலர்க் குழுதான் பொறுப்பேற்றுக்கொள்ள வேண்டும். இதுபற்றி ஆராய்ந்து பார்க்க வேண்டியது அந்தக் குழுவைச் சார்ந்தது. அதை விட்டுவிட்டு விளக்கம் கண்டுபிடித்து எடுத்துக்காட்டுவது தவறு என்று நான் சொன்னால், தவறல்ல என்று கருதுகிறேன். நடந்த இந்த மாநாட்டில் கொடுத்த ஆராய்ச்சிக் கட்டுரைகள் பல இன்னும் வெளிவரவில்லை. சில ஆராய்ச்சிக் கட்டுரைகள் ஒதுக்கப்பட்டன என்றெல்லாம் ஆராய்ச்சி யாளர்கள் சொல்கிறார்கள். இந்த மாநாட்டை நடத்திய நிர்வாகக் குழு கலந்துகொண்ட ஆராய்ச்சியாளர்களையும், கலந்துகொள்ள வராத ஆராய்ச்சி யாளர்களையும், தனித்தனியே அழைத்து அவர்களுடைய குறையைக் கேட்டு, ஆராய்ந்து அவைகளை நிவர்த்திக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

கவர்னர் அவர்களுடைய உரையிலே விவசாயிகளுக்கு இந்த அரசு என்னென்ன செய்திருக்கிறது என்பதையெல்லாம் சுட்டிக்காட்டி யிருக்கிறார்கள். உதாரணமாக விவசாயிகளுடைய கடன்களில் 42 கோடி தள்ளுபடி செய்திருக்கிறோம் என்று சொல்லியிருக்கிறார்கள். மேலும் ரத்து செய்திருக்கிறோம் என்று சொல்லி, அரசு 240 கோடி ரூபாயை ரத்து செய்யப் பார்த்திருக்கிறது என்று சொல்லியிருக்கிறார்கள். அரசு விவசாயி





களின் கடனில் 42 கோடி ரூபாயைத் தள்ளுபடி செய்தது என்பதை நாங்கள் மறுக்கவில்லை. ஆனால், இந்த அரசு விவசாயிகளுக்குக் கொடுத்த வாக் குறுதிகள் என்ன? அந்த வாக்குறுதிகள் அனைத்தும் நிறைவேற்றப் பட்டனவா? அந்த வாக்குறுதிகளை நிறைவேற்றி விவசாயிகளைத் திருப்திப் படுத்தியதா? இவைகள்தான் இப்போது உள்ள கேள்விகள். விவசாயிகள் தான் இந்த நாட்டின் முதுகெலும்பு. விவசாயிகள் விளைவித்த உற்பத்திப் பொருட்களைத்தான் இந்த நாட்டு மக்கள் நம்பியிருக்கிறார்கள். அவைகளைக் கொண்டுதான் இந்த மக்கள் வாழ்கிறார்கள். அந்த விவசாயிகளிடையே ஏற்பட்ட துன்பம், வெறுப்பு என்ன என்பதைப் பற்றி இதற்கு முன்பு இருந்த அரசும் அவர்களை அழைத்து பேச்சுவார்த்தை நடத்தியது. அதற்குப் பின்னால் வந்த அரசு கலைக்கப்பட்டு அதற்குப் பிறகு தேர்தல் காலத்தில் அந்த அரசைச் சார்ந்த கட்சியினர் விவசாயச் சங்கத்தினருக்கு உறுதிமொழி அளித்தார்கள். அண்ணா தி.மு.க. உறுதிமொழி அளித்தது என்று சொன்னால், ஏற்கெனவே ஆட்சியில் இருந்து அனுபவப்பட்டவர்கள்தான் உறுதிமொழி அளித்தார்கள். வெறும் எதிர்க்கட்சி வரிசையிலே உட்கார்ந்து அரசியலை நடத்திவிட்டு ஏதோ ஒரு நம்பிக்கையோடு உறுதி மொழி அளித்தார்கள் என்ற நிலை இல்லை. ஆட்சியை நடத்தி, விவசாயி களுடைய நிலையை உணர்ந்தவர்கள், விவசாயப் பிரச்சினைகள்பற்றி பலமுறை பேச்சுவார்த்தைகளை நடத்தியவர்கள்தான் அதற்குப் பிறகு தங்களுடைய தேர்தல் அறிக்கையிலே மத்திய அரசு ஏற்றுக் கொண்டாலும், ஏற்றுக் கொள்ளாவிட்டாலும், இதற்கான நிதியைத் தந்தாலும் தராவிட்டாலும், மாநில அரசே முழு அளவிலே பொறுப்பேற்றுக்கொண்டு விவசாயிகளுடைய கடன்கள் அத்தனையையும் ரத்து செய்வோம் என்று சொன்னதை ஏற்று, விவசாயச் சங்கமும், இந்த ஆட்சியில் இருப்பவர்களும் தேர்தல் காலத்திலே ஒன்றாகச் செயல்படும் நிலை ஏற்பட்டது. இப்போது அந்த வாக்குறுதிகள் நிறைவேற்றப்படவில்லை என்று அவர்கள் கருதுகிறார்கள். கொடுத்த வாக்குறுதிகள் நிறைவேற்றப்பட்டு விட்டனவா? அக்ரிமெண்ட் முடிந்து விட்டதா? இவைகளைப் பார்க்க வேண்டும். "அக்ரிமெண்டின் முதற் பகுதி உங்களை ஆதரிக்கும் பகுதி. அது நாங்கள் செய்ய வேண்டிய பணி, அந்தப் பகுதியை நாங்கள் செய்துவிட்டோம். எங்களைத் திருப்திப் படுத்த வேண்டியது உங்களுடைய பணி, அதைச் செய்ய வேண்டும்" என்று அவர்கள் கேட்கிறார்கள். ஆளும் கட்சியினர் அவர்களுடன் பேசியது என்னவென்று அவர்களுக்குத்தான் தெரியும். அவர்கள் "நீங்கள் பேசியதுபோல நடக்க வில்லை" என்று சொல்கிறார்கள். ஆளும் கட்சியினர் பகிரங்கமாகச் சொல்லலாம், 'நாங்கள் இவ்வளவுதான் சொன்னோம்' என்று. ஏன்

சென்னையில் நடைபெற்றது. மூன்றாவது உலகத் தமிழ் மாநாடு பாரிசில் நடைபெற்றது. நான்காவது உலகத் தமிழ் மாநாடு இலங்கையில் நடைபெற்றது. ஐந்தாவது உலகத் தமிழ் மாநாடு மதுரையில் முடிவடைந்திருக்கிறது. இந்த உலகத் தமிழ் மாநாடு நடைபெற்ற காலங்களிலே உருவானதோர் அமைப்பு தான் இந்த I.A.T.R. உலகத் தமிழ் மாநாடுகளில் எல்லாம் ஆராய்ச்சிப் பிரிவை, கருத்தரங்குப் பகுதியையெல்லாம் இந்த அமைப்புதான் நடத்த வேண்டும். முன்னர் எல்லாம் அப்படித்தான் நடந்து வந்தது. எந்த நாட்டிலே உலகத் தமிழ் மாநாடு நடைபெறுகிறதோ அந்த நாட்டிலே இருக்கிற அரசு அல்லது தமிழ் அறிஞர்கள்தான் இவைகளை எல்லாம் நடத்திக்கொண்டு வந்தார்கள். அதே அறிஞர் சொல்கிறபோது, இதற்கு I.A.T.R. தான், அதாவது தமிழ் நாட்டுப் பிரிவுதான் பொறுப்பாளியாக வேண்டும் என்று சொல்லியிருக்கிறார். அதோடு தனக்கும் ஓர் உறுப்பினர் என்ற முறையில் பங்கு உண்டு என்றும், இந்த அமைப்பினைத் திருத்தியமைத்து முறையாகச் செயல்படுத்த வேண்டிய காலத்தை எட்டி விட்டோம். இல்லையேல் மாற்று அமைப்பினை உருவாக்குவது பற்றி சிந்திக்க வேண்டிய நிலை உருவாகும் என்று அவர் சொல்லியிருக்கிறார். அவர் சொல்லியுள்ள கருத்துக்களை தமிழர்களாகிய நாம் எல்லோரும் கருத்தில் கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

அடுத்து, இரண்டாவது உலகத் தமிழ் மாநாடு பேரறிஞர் அண்ணா அவர்கள் தலைமையில் நடைபெற்றது. அந்த மாநாட்டில் கலந்து கொண்ட ஸ்விட்சர்லாந்திலுள்ள தமிழ் அறிஞரும், உலகத் தமிழ் ஆராய்ச்சி மன்றத்தின் உறுப்பினருமான கமில் சுவலபில் அப்போது செக்ரட்டரி ஜெனரலாக இருந்து பணிபுரிந்தார். அவரும் இந்தத் தடவை இந்தியாவுக்கு வந்தார். ஆனால் சென்னையில் தான் தங்கியிருந்தார். ஏன் மதுரையில் நடைபெற்ற உலகத் தமிழ் மாநாட்டுக்குப் போகவில்லையென்று எனக்குத் தெரியவில்லை. அது மேலை பாரிசில் உலகத் தமிழ் மாநாடு நடைபெற்றபோது, அதில் பொறுப்பேற்றுச் சிறப்பான முறையில் பணி செய்த பெலோசியா என்ற தமிழ் அறிஞர் சென்னையில் தான் இருந்தார். ஏன் அவரும் மதுரையில் நடைபெற்ற உலகத் தமிழ் மாநாட்டில் கலந்துகொள்ளவில்லையென்று எனக்குத் தெரியவில்லை.

(பிற்பகல் 4-10)

கேரளத்திலே டாக்டர் வி. ஐ. சுப்ரமணியம் என்ற அறிஞர் மொழியியல் துறையிலும் மற்ற துறைகளிலும் புலமை பெற்று பாணினியம் என்ற





கழகத்தைக் கண்டு மொழியியல் ஆராய்ச்சியிலே இந்தியாவிலே நார்வாருக்கு ஒப்பாகப் பணியாற்றிக் கொண்டிருக்கின்ற அவர் மதுரையிலேதான் இருந்தார், ஆனால் மாநாட்டிலே கலந்துகொள்ளவில்லை, வந்திருந்த அறிஞர்களைக் கண்டு பேசினாரே தவிர, கருத்தரங்கிலே அவர் கலந்துகொள்ளவில்லை. இவைகளுக்கெல்லாம் காரணம் என்னவென்பதைக் கண்டறிவது, தமிழ் மாநாட்டின் சிறப்பை மேலும் சிறப்பாக அமைக்க உதவும் என்று கேட்டுக் கொள்வது முறை என்று கருதி நான் கேட்டுக்கொள்கிறேன்.

ஜப்பானிய நிபுணர் ஒரு மாற்று அமைப்பு உருவாக வேண்டிய நிலைமை உருவாகும் அல்லது தற்போதைய நிலைமையை திருத்தியமைக்க வேண்டும் என்று சொல்லியிருப்பதையும் நாம் ஆராயக் கடமைப்பட்டிருக்கிறோம். அந்த மாநாட்டிலே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உலகத் தமிழ்ச் சங்கம் என்று ஆரம்பிப்பதுபற்றி அறிவித்திருக்கிறார்கள். இப்போது I.A.T.R. என்று சொல்வது அந்தப் பணியைத்தான் செய்துகொண்டிருக்கிறது. மதுரையைத் தலைமையிடமாகக் கொண்டு ஒரு உலகத் தமிழ்ச் சங்கம், அதாவது 4-வது மதுரைத் தமிழ்ச் சங்கம் அங்கு தொடங்கப்பட்டிருக்கிறது. திரு. பாண்டித்துரைத் தேவர் அவர்களால் அது தொடங்கப்பட்டது. அதைப் புதுப்பித்துச் செயல்படச்செய்தால் போதுமானதா, அல்லது உலக நிலையிலே I.A.T.R. என்ற பெயரால் செயல்படும் ஆராய்ச்சி மன்றத்தைச் செயல்படச் செய்தால் போதுமானதா என்பதையெல்லாம் சிந்திக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

இந்த மாநாட்டிலே 13 கோடி ரூபாய்க்கு மேற்பட்ட தொகை செலவு செய்யப்பட்டது என்று சொல்லப்பட்டது. அது எந்த அளவுக்கு தமிழ் வளர்ச்சிக்கு, ஆராய்ச்சிக்கு ஆக்கரீதியாகப் பயன்பட்டது என்ற வினாவை எழுப்பும்போது, மதுரை நகருக்கு இன்னும் 10 ஆண்டுகளுக்குத் தேவையான வளர்ச்சிப் பணிகள் எதுவுமே தேவைப்படாத அளவுக்கு அங்கே பணிகள் நடைபெற்றன என்று சொன்னபோது, ஒருவேளை 'மதுரை வளர்ச்சி மாநாடாக' அது உருவெடுத்து விட்டதோ என்று நான் ஐயப்படுகிறேன். மதுரை நகர் இன்றும் இருக்கிறது. நீங்கள் ஆற்றிய பணிகள் அங்கே இருக்கின்றன. மதுரை நகரின் சார்பிலே இந்த அவையிலே விவாதத்திலே கலந்துகொண்டு பேசிய அருமைப் பெரியவர் அவர்கள் கூடச் சொன்னார்கள். இன்னும் 10 ஆண்டு காலத்துக்கு மதுரைக்கு எந்தவிதமான முன்னேற்றத்

வோம் என்று அஞ்சி ஊரைவிட்டே ஓடியிருக்கிறார்கள். போலீசார் ஊருக்குள் புகுந்து அங்கே உள்ள கிராமவாசிகளைப் பார்த்து, "யாராவது ஒரு 15 பேரை நீங்களாகக் கொண்டு வாருங்கள், உங்களை விட்டுவிடுகிறோம்" என்று கேட்டிருக்கிறார்கள். அங்கே இருப்பவர்களில் சிலரைப் பிடித்து அவர்களிடமிருந்து ரூபாய் 1,000 அல்லது ரூபாய் 1,500 பெற்றுக்கொண்டு அவர்கள்மீது வழக்குப் போடாமல் விட்டுவிட்டிருக்கிறார்கள்.

சென்னையிலிருக்கும் அரசு அதிகாரியான திரு. பாலகிருஷ்ணன் என்பவர் சம்பவம் நடைபெற்ற 2 நாட்களுக்குப் பிறகு இங்கிருந்து அந்த ஊருக்குப் போய் பார்த்துவிட்டு, அதற்குப் பிறகு உள்துறை செயலாளரையும், பெரிய போலீஸ் அதிகாரியான ஐ.ஜி. அவர்களையும் மாவட்ட ஆட்சியாளரையும் பார்த்து இந்த அநீதிகளையெல்லாம் எடுத்து விளக்கியிருக்கிறார். அவர் அரசுக்கு அனுப்பிய மனுவின் நகலை எங்களுக்கும் அனுப்பியிருக்கிறார். திருவேங்கடம் உயர்நிலைப் பள்ளியில் தமிழாசிரியராக வேலை பார்க்கும் பெருமாள்சாமி என்பவரை அந்த ஊர் சப்-இன்ஸ்பெக்டர் அழைத்துப் போய், "உன்னையும் கேசில் பிரதிவாதியாகச் சேர்த்து விடுவேன். சேர்க்காமல் இருக்க வேண்டுமென்று விரும்பினால், எனக்கு ரூபாய் 1,500 கொண்டு வந்து கொடு, விட்டுவிடுகிறேன்" என்று சொல்லி அவரிடம் ரூபாய் 1,500 வாங்கியிருக்கிறார். இதைப்பற்றி கோவில்பட்டி ஏ.எஸ்.பி. அவர்களிடமும் பெரிய போலீஸ் அதிகாரியிடமும் தெரிவித்திருக்கிறார். 12—1—1981-ல் இச்சம்பவம் நடந்திருக்கிறது. இதற்கெல்லாம் காரணம் அரசின் அணுகுமுறைதான். போலீசார் கையிலே அந்தப் பகுதியை அரசு ஒப்படைத்ததன் காரணமாக இந்த மாதிரியான அராஜகம் நடைபெற்றிருக்கிறது. சாதாரண மக்களுக்குப் பாதுகாப்பற்ற நிலைமை உருவாகியிருக்கிறது. அரசு இதைக் கட்டுப்படுத்த முடியாமல், தனது அரசு இயந்திரத்தை இயக்கிக் கொண்டிருக்கிறது என்பதை நான் இங்கே குற்றச்சாட்டாகத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். இதற்கான அனைத்து விவரங்களையும் நான் கையிலே வைத்துக் கொண்டிருக்கிறேன். தேவைப்பட்டால் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடமோ, வேறு எந்த அதிகாரியிடமோ இதைப்பற்றி விளக்கமான விவரங்களோடு எடுத்துரைக்கத் தயாராக இருக்கிறேன் என்பதையும் நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

விவசாயப் போராட்டத்திற்கு இன்னொரு முக்கியமான காரணம் மின்சாரக் கட்டண பாக்கியை வசூல் செய்வதில் ஏற்பட்ட ஒரு முறையாகும். திராவிட முன்னேற்றக் கழகத்தைப் பொறுத்தவரையில், வரி கட்டாமல் இருக்க வேண்டும் என்று சொன்னதில்லை. இதை நான் ஆதாரத்தோடு



மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். எந்தக் கட்டத்திலும் அரசாங்கம் வரி போடாமல் இருக்க வேண்டும் என்றும் நாங்கள் சொன்னதில்லை.

நான் சார்ந்திருக்கிற கன்னியாகுமரி மாவட்டத்தில் விவசாயச் சங்கத்திற்கு ஒரு கிளைகூட எந்த இடத்திலும் கிடையாது என்பதையும் மாண்புமிகு முதல்வர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன். காரணம் விவசாயிகள் எங்கள் பகுதியில் இல்லை என்பதல்ல. எங்களை வந்து அணுகி விவசாயிகள் அரசாங்கத்திற்கு வரி கொடுக்கக்கூடாது என்று சொன்ன உடனேயே, அவர்களிடமிருந்து நாங்கள் விலகி வந்துவிட்டோம். வரியைக் கொடுத்துத்தான் நாம் நம் உரிமையைப் பெற வேண்டும் என்ற உணர்வு பெற்ற கன்னியாகுமரி மாவட்டத்திலிருந்து நான் வருகிறேன். வரி பாக்கியில்லாமல் கட்டப்பட்ட ஒரு மாவட்டம் இருக்கிறது என்றால், அது கன்னியாகுமரி மாவட்டம்தான் என்பது ரெவின்யூ ரெக்கார்டுகளைப் பார்த்தால் தெரியும். மாண்புமிகு ரெவின்யூ அமைச்சர் அவர்கள் ரெக்கார்டுகளைப் பார்த்துவிட்டு இதற்கு ஒப்புதல் தரவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். இதை நான் எதற்காகச் சொல்கிறேன் என்றால், தி.மு.க. 9 ஆண்டுக் காலம் ஆட்சி புரிந்த ஓர் அமைப்பு. வரி கொடுக்காமல் ஆட்சி செய்ய முடியும் என்று நம்புகிற கட்சியல்ல அது. அப்படிப்பட்ட உணர்வைத் தூண்டக்கூடியவர்களும் நாங்கள் அல்ல. இதற்குக் காரணம் இனிமேலும் இந்த நாட்டை ஆளுவோம் என்ற நம்பிக்கை உடையவர்கள் நாங்கள். எனவே, அப்படிப்பட்ட உணர்வை எந்தக் காலத்திலும் தி.மு.க. தூண்டிவிடாது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இப்படிச் சொல்லிவிட்டு யாரும் தப்பித்துக்கொள்ள முடியாது. ஆனால் விவசாயிகளின் பிரச்சினையைப் பொறுத்தவரையில், இந்த அரசின் அணுகுமுறை சரியாக இல்லை என்பதை மட்டும் நான் தெரிவித்துக்கொள்கிறேன். அரசாங்கத்திற்கும் விவசாயிகளின் சங்கத்திற்கும் இடையே பேச்சு வார்த்தை நடைபெற்றது. அப்போது ஆட்சியாளர்கள் பிரச்சினைகளைப்பற்றி விவசாயிகளுக்குச் சரியாக புரிய வைக்கவில்லை அல்லது அவர்கள் அரசுக்குச் சரியாக புரிய வைக்கவில்லை என்றுதான் நான் நம்புகிறேன்.

(பிற்பகல் 4-30)

அந்தப் பேச்சுவார்த்தையின் மூலம், பாக்கியில் ஒரு மாதக் கட்டணத்தையும், நடப்புக் கட்டணத்தில் ஒரு மாதக் கட்டணத்தையும் சேர்த்துக் கட்டிவிட்டால, மின் துண்டிப்பு இல்லையென்று சொல்லியிருக்கிறார்கள். அதை அவர்கள

சொல்லவில்லை? இப்போது என்னவென்றால் போராட்டம் வந்திருக்கிறது. இந்தப் போராட்டத்திலே அரசு எடுத்த அணுகு முறை என்ன? தி.மு.க. ஆட்சிப் பொறுப்பிலே இருந்தபோது போராட்டங்கள் வந்தபோது எடுத்த நிலை என்ன என்பதையும் நாம் பார்க்க வேண்டும். இந்த அரசு எடுக்கின்ற முறை, எங்களைப் பொறுத்தவரையில், எல்லா நிலைகளிலேயும் போராட்டம் என்று வருகின்றபோது, ஜனநாயக முறைக்கு மாறுபட்டதாக அமைந்திருக்கிறது என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். ஹர்த்தால் செய்வது, பந்த் செய்வது, போராட்டம் நடத்துவது, ஊர்வலம் வருவது போன்றவைகள் ஜனநாயக முறையிலே ஏற்றுக்கொள்ளப்பட்ட சில வழிமுறைகள். இவைகள் தடுக்கப்படும்போது அடுத்த பாதை புரட்சிதான். ஜனநாயகத்தில் ஒரு 'வென்ட்', ஒரு 'அவுட்லெட்', அதாவது உணர்வுகளை வெளியிடுகிற முறைகளைப் பார்க்கிறபோது, அதிகாரத்தை வைத்துத் தடுக்கிற போக்கு, ஜனநாயகத்துக்கு, ஜனநாயக முறைக்கு அப்பால் போய் ஜனநாயகத்துக்கே ஊறுசெய்கின்ற பழிக்குக் கொண்டு வந்துவிடும் என்று நான் எச்சரிக்கின்றேன். 31-12-1980-லே விவசாயிகள் ஒரு 'பந்த்' அறிவித்தார்கள். அன்றைக்கு தங்களுடைய பொருட்களைச் சந்தைக்கு எடுத்து வருவதில்லை என்று அறிவித்தார்கள். அப்படி அறிவித்தவுடனே, அந்த 'பந்த்' நடப்பதற்கு இரண்டு மூன்று நாட்களுக்கு முன்னாலேயே 10 ஆயிரம் விவசாயிகள் கைது செய்யப்பட்டார்கள். விவசாயிகளின் தலைவர் டெல்லி செல்லவிருந்தபோது தேசியப் பாதுகாப்புச் சட்டத்தின்கீழ் கைது செய்யப்பட்டார். நான் கேட்டுக் கொள்வதெல்லாம் இதுதான். ஆளும் கட்சியினர் மிகவும் உறுதியோடும், உணர்வோடும் விவசாயிகளோடு உறவாடியவர்கள். நாங்கள் ஆளுங்கட்சியாக இருந்தபோது அவர்கள் போராட்டம் நடத்தியபோது, இப்போதுள்ள ஆளும் கட்சியினரை அணுகினார்கள். 'நீங்கள் எதிர்க்கட்சி வரிசையிலே இருந்து அவர்களுக்கு ஆலோசனை சொன்னவர்கள்.' இப்போது அவர்கள் 'உங்களுடைய அணுகுமுறை தவறு' என்று சொல்கிறார்கள். நீங்கள் கேட்கலாம், அதே தவற்றை நீங்கள் செய்யவில்லையா என்று. தற்போதைய ஆளும்கட்சியினர்தான் விவசாயிகளிடம் இத்தகைய போராட்டங்களைச் செய்யச் சொன்னார்கள் அன்று. நான் கேட்கிறேன். விவசாயிகள் அறிவித்த அந்தப் போராட்டத்தை ஒரு போர்ப் பிரகடனமாகக் கருதிக்கொண்டு 'பந்த்' என்று சொன்னாலே, ஒரு நாடு முழுவதும் நடக்கிற வேலை நிறுத்தம், அது ஒரு போர்ப் பிரகடனம் என்ற அளவிலே, நாராயணசாமி



நாயுடுவை ஒரு போர்த் தளபதியாக்கி, அவரைக் கைதுசெய்து அவரோடு மேலும் 10 ஆயிரம் பேரையும் கைதுசெய்து ஒரு போராட்டச் சூழ்நிலையை உருவாக்கி விட்டார்கள் என்பதுநான் என்னுடைய கருத்து.

(பிற்பகல் 4.20)

அதன் விளைவாக 31-ஆம் தேதி திருநெல்வேலி மாவட்டத்தில் திருவேங்கடத்திற்கு அருகில் குறிஞ்சாங்குளம் என்ற இடத்திலும் செங்கை மாவட்டத்தில் திருத்தணிக்கு அருகிலும், தென்னாற்காடு மாவட்டத்தில் பண்ருட்டி அருகிலும் ஆகமொத்தம் 3 பகுதிகளில் விவசாயிகள் மீது துப்பாக்கிப் பிரயோகம் நடைபெற்று, அதன் காரணமாக 9 விவசாயிகள் உயிரிழந்திருக்கிறார்கள். இதற்குக் காரணம் இந்தப் போராட்டத்தைத் துவக்கியவர்கள் தாம் என்று ஆளும் கட்சித் தரப்பிலேயிருந்து சொல்லப்பட்டாலும், என்னைப் பொறுத்த வரையில், இந்தப் போராட்டத்தை அணுகுவதிலே இந்த அரசு மேற்கொண்ட ஒரு தவறான ஜனநாயக விரோதமான அணுகுமுறைதான் 9 பேர் உயிரிழக்கக் காரணம் என்று நம்புகிறேன். விவசாயிகள் தங்களின் உணர்வுகளை வெளிப்படுத்த நினைத்தார்கள். அதை ஒரு போராட்ட வடிவில் வெளிப்படுத்த நினைத்தார்கள். அதன்மூலம் தங்களுக்குப் பொது மக்களின் ஆதரவு இருக்கிறதா இல்லையா என்று அவர்கள் காட்டுவதற்கு இந்த அரசு அந்தப் போராட்டத்தை அனுமதித்திருக்க வேண்டும் என்பதுதான் என்னுடைய கருத்தாகும்.

திருவேங்கடத்திற்கு அருகில் உள்ள குறிஞ்சாங்குளம் என்னும் இடத்திற்கு இந்தச் சம்பவம் நடைபெற்றதற்குப் பிறகு நான் நேரில் போய்ப் பார்த்து வந்தேன். கோயில்பட்டியிலிருந்து திருவேங்கடம் செல்ல வேண்டும். அங்கேயிருந்து 3-வது மைலில் குறிஞ்சாங்குளம் ஊர் இருக்கிறது. அங்கிருந்து 3 மைலில் கழுகுமலை இருக்கிறது. அங்கே 'அஜீஸ் மற்றும் முத்துராமலிங்கம்' என்னும் இரு பஸ் சர்வீஸ் ஓடுகின்றன. அவர்கள் 31 ஆம் தேதி விவசாயிகள் 'பந்த்' நடக்க இருக்கிறது என்று தெரிந்து 30 ஆம் தேதி இரவே தங்கள் பஸ்களை ஓடாமல் ஒர்க்ஷாப்பில் விட்டுவிட்டார்கள். அவர்களின் பஸ்கள் மீது அவர்களுக்கு அவ்வளவு அக்கறை. ஆக அந்தச் சாலையில் அன்றைய தினம், அதாவது 31 ஆம் தேதி எந்தவிதமான பஸ் போக்குவரத்துமேயில்லை. கழுகுமலையிலிருந்து திருவேங்கடத்திற்கு பஸ் ஏதும் போகவில்லை. ஆனால் அந்தச் சாலையில் போக்குவரத்தைத் தடை செய்துவிட்டார்கள், போக்குவரத்தை விவசாயிகள் தடுத்துவிட்டார்கள் என்று காரணம் காட்டி, போலீசார் தேவையில்லாமல் அங்கே 31 ஆம் தேதி சென்றிருக்கிறார்கள்.

இதற்கு முன்பு 29 ஆம் தேதியே மைப்பாறை என்ற ஊரில் போலீசார் ஐந்து வேன்களில் சென்று அங்கே உள்ள விவசாயிகளை மிரட்டி உதைத்திருக்கிறார்கள். அதுவே ஒரு ஷாக் டிரீட்மெண்ட் போலிருக்கும் என்று எதிர்பார்த்தார்கள். அதாவது 31 ஆம் தேதி போலீசாரின் நடவடிக்கை எப்படியிருக்கும் என்பதற்கு எடுத்துக்காட்டாக 29 ஆம் தேதியே அவர்கள் நடந்துகொண்டிருக்கிறார்கள் என்று சொல்லப்பட்டது. இதன் காரணமாக அந்தப் பகுதியில் உள்ள விவசாயிகள், போலீசாரின் நடவடிக்கை மிகவும் கடுமையாக இருக்கும் என்று நினைத்து, ஊரை விட்டே யாரும் வெளியே வரக்கூடாது என்று முடிவு செய்து, வீட்டிற்குள்ளாகவே தங்கி விட்டிருக்கிறார்கள். அதைப் போலவே குறிஞ்சாங்குளம் ஊரிலேயும்கூட விவசாயிகள் தங்கள் வீடுகளிலேயே இருந்தார்கள். நான்கு வேனில் போலீசார் அந்த வட்டாரங்களுக்குச் சென்று சுமார் 10 அல்லது 12 மணி அளவில் 29 விவசாயிகளைக் கைது செய்திருக்கிறார்கள். கைது செய்யப்பட்ட 29 விவசாயிகளும் திருவேங்கடத்திற்கும், கோயில்பட்டிக்கும் இடையே உள்ள சாலையில் பல இடங்களில் நிற்கும்போது கைது செய்யப்பட்டார்கள். இதைக் கண்டு மக்கள் பயந்து போயிருக்கிறார்கள். அன்று காலையிலிருந்தே கணக்கில்லாத அளவுக்குப் போலீஸ்காரர்கள் அந்த ஊரில் உள்ள உயர் நிலைப்பள்ளியில் முகாமிட்டிருந்திருக்கிறார்கள். ஐந்து மணிக்கு 'பந்த்' முடிவடைகிறது. ஆனால் 4 மணி அளவில் 4 போலீஸ் லாரிகளில் போலீசார் குறிஞ்சாங்குளம் செல்ல வேண்டிய அவசியமே இல்லாத நிலையில், யாரோ கொடுத்த தவறான தகவலின் அடிப்படையில் அந்த ஊருக்குச் சென்று வழியில் இருந்த கேப்பை, கேழ்வரகு போன்ற தானியங்களைத் தீ வைத்துக் கொளுத்தி விட்டிருக்கிறார்கள். அறுவடைக் காலத்தில் அந்தப் பகுதி மக்கள் பொதுவாகச் சாலையில்தான் தங்களின் பயிர்களைப் போட்டு வைப்பார்கள். கார்கள், பஸ்கள் எல்லாம் பயிர்கள் மீது போய் பிறகுதான் விவசாயி தானியத்தை வேறுபடுத்தி எடுப்பார்கள். இந்த நிலையில் சாலைப் போக்குவரத்துக்குத் தடை செய்து விட்டார்கள் என்று சொல்லி போலீசார் வழியில் இருந்த தானியப் பயிருக்குத் தீ வைத்துவிட்டு ஊருக்குள் நுழைந்தார்கள். குறிஞ்சாங்குளம் ஊர் எல்லையிலேயே ஒரு பள்ளிக்கூடம் இருக்கிறது. சாத்தூர் அப்பய நாயக்கர் என்பவரின் தலைமையில் அங்கே இருந்த ஊர் மக்கள் ஒன்று கூடி அங்கே வந்த போலீஸ்காரர்களைப் பார்த்து "எங்கள் ஊரில் ஒன்றுமில்லை, எனவே நீங்கள் ஊருக்குள் வர வேண்டாம்" என்று கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். அப்போது அவருடைய நெஞ்சத்திற்கு நேராக துப்பாக்கியை வைத்து போலீசார் அவரைச் சுட்டிருக்கிறார்கள். ஆத்திரமடைந்த சிலர் இதன் காரணமாகப் போலீசாரைத் தாக்கினார்கள். போலீசார் மீண்டும் துப்பாக்கி





யால் சுட்டிருக்கிறார்கள். இதனால் மந்திரம்பிள்ளை என்ற ஒருவர் கொல்லப்பட்டார். அவரோடு நான்கு பேர் கொல்லப்பட்டார்கள். அதில் 3 பேர் 30 வயதுக்கும் குறைவான இளைஞர்கள். ஒருவர் மட்டும் 50 வயதானவர். சுடப்பட்ட அவர்கள் நால்வரையும் போலீசார் தங்கள் லாரியில் தூக்கிப் போட்டுக்கொண்டு குற்றுயிரும் குலையுயிருமாக இருந்த அவர்களைப் பாளையங்கோட்டை மருத்துவமனைக்கு எடுத்துச் சென்றிருக்கிறார்கள். அங்கே அவர்களை அனாதைப் பிரேதங்கள் என்று பாளையங்கோட்டையிலேயே அடக்கம் செய்திருக்கிறார்கள். இதற்குப் பிறகு 31 ஆம் தேதி காலை 11 மணி அளவில் திருவேங்கடம் பகுதியில் அதன் சுற்றுவட்டாரத்தில் கைது செய்யப்பட்ட 29 பேர்களையும் 1 ஆம் தேதி கைது செய்ததாகப் போலீசார் ரிக்கார்டு தயாரித்துக்கொண்டு போலீசாரைக் கொன்றவர்கள் இவர்கள்தான் என்று இவர்கள்மீது பொய் வழக்கு தொடர்ந்திருக்கிறார்கள். போலீசாரைக் கொண்டுபோய் ஒரு இடத்தில் நிறுத்தினால், அவர்கள் வழக்கமாகச் செய்கிற காரியம்தான் இது. அவர்கள் அண்ணா தி.மு.க. கையிலிருந்தாலும் சரி, திராவிட முன்னேற்றக் கழகத்தினரின் கையில் இருந்தபோதும் சரி. அப்படித்தான் நடந்து கொள்வார்கள், நடந்து கொண்டிருக்கிறார்கள். இப்படி சாதாரண விவசாயிகள் மத்தியில் தேவை இல்லாமல் போலீஸ்காரர்களைக் கொண்டுபோய் நிறுத்த வேண்டிய அவசியம் என்ன வந்துவிட்டது என்றுதான் நான் இங்கே கேட்க விரும்புகிறேன். அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் எதிர்க்கட்சியாக இருந்தபோது இதைப்போன்ற குற்றச்சாட்டுகளையும் குறைகளையும்தான் அன்றையதினம் ஆளும் கட்சியாக இருந்த எங்களைப் பார்த்துக் கூறினார்கள். இப்போது ஆளும் கட்சியாக வந்து அமர்ந்துகொண்ட பிறகு அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் அதையே செய்து மக்களைத் துன்பத்தில் ஆழ்த்திக் கொண்டிருக்கிறது.

இதைப்போலவே வெள்ளாங்குளம் என்ற இடத்தில் எந்தவிதமான காரணமுமில்லாமல் போலீசார் நடவடிக்கை மேற்கொண்டிருக்கிறார்கள். விவசாயக்குடி பெண்களும், ஆண்களும் அதிகமாக வாழ்கிறார்கள் இந்த ஊரில். அங்கே 31 ஆம் தேதி 'பந்த்' முடிந்த பிறகு 2 ஆம் தேதி போலீசார் ஊருக்குள் புகுந்து அங்கே இருப்பவர்களை அடித்து நொறுக்கி வீடுகளை நாசப்படுத்தியிருக்கிறார்கள். வீட்டின் ஜன்னல்களும் கதவுகளும் உடைக்கப்பட்டிருக்கின்றன. வீட்டில் இருந்த பொருள்கள் அனைத்தும் சேதப்படுத்தப்பட்டிருக்கின்றன. அதன் காரணமாக அந்த ஊரில் ஆண்களே இல்லாமல் வெளியேறும்படியான சூழ்நிலையை உருவாக்கியிருக்கிறார்கள். இதையெல்லாம் ஏன் செய்தார்கள் என்று அரசு கேட்கவே இல்லை. உடனடியாக அரசுக்கு அங்கேயிருந்து பல தந்திகள் வந்திருக்கின்றன. அந்த ஊரில் இருப்பவர்கள் தாங்கள் கொலை வழக்குகளில் தவறாகச் சேர்க்கப்படு

நம்பிக் கொண்டிருக்கிறார்கள். முதலமைச்சர் அவர்களுக்கு சில நாட்களுக்கு முன்பு ஒரு மனு அனுப்பப்பட்டிருக்கிறது. அதனுடைய நகல் எனக்கும் அனுப்பப்பட்டிருக்கிறது. மதுரை மாவட்டம், வேடசந்தூர் வட்டம், ஐயலூர் கிராமம், களப்பட்டி என்ற இடத்தில் ஆர். கோவிந்தசாமி பிள்ளை என்பவர் நடப்புக் கட்டணத்தோடு முந்திய பாக்கியில் ஒரு மாதக் கட்டணத்தையும் சேர்த்துக் கட்டிய பிறகும், அவருடைய ஐந்து ஹார்ஸ் பவர் மோட்டாருக்குள்ள மின்னிணைப்பு துண்டிக்கப்பட்டிருக்கிறது என்பதைச் சுட்டிக்காட்டி அரசுக்குக் கடிதம் எழுதியிருக்கிறார். ஆகவே, அரசு எந்த இயந்திரத்தை நம்பிக் கொண்டு இந்த ஆட்சியை நடத்திக் கொண்டிருக்கிறதோ அந்த இயந்திரத்திலே பல தவறுகள் நடக்கின்றன. அத்தகைய தவறுகள் வராமல் பார்த்துக் கொள்ள அரசு முனைய வேண்டுமென்று சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

விவசாயப் போராட்டத்தைப்பற்றிச் சொல்லுகிறபோது, அரசினுடைய அணுகுமுறையில் தவறு இருக்கிறதென்று சொன்னேன். போராட்டம் என்று சொன்னவுடனே அரசு அதை அடக்க வேண்டுமென்ற நினைப்பை விட்டுவிட்டு, போராட்டம் என்று சொல்வது ஜனநாயகத்தில் சில உணர்வுகளை எடுத்துக் காட்ட உதவுகிறது என்பதாக எடுத்துக்கொண்டு, அதை மறைமுகமாக நாம் ஆதரிக்கக் கடமைப்பட்டிருக்கிறோம் என்பதைத் தெரிந்துகொள்ள வேண்டும். பக்கிங்காம் அண்டு கர்நாடிக் ஆலை 104 வருடங்களாக சென்னை நகரில் இருந்துகொண்டு சென்னை நகரப் பொருளாதாரத்திற்கு அரிய பணியாற்றிய பெரிய ஆலையாகும். அதில் 13 ஆயிரம் பணியாளர்கள் வேலை செய்கிறார்கள். அவர்களைச் சார்ந்து 70 ஆயிரம் பேர்கள் வாழ்கிறார்கள். ஏறக்குறைய ஒரு இலட்சம் மக்கள் நம்பியிருக்கக்கூடிய அந்த ஆலையில் வேலை நிறுத்தம் ஏற்பட்டிருக்கிறது. அந்த ஆலை மூடியிருப்பதற்கான காரணங்களை நிர்வாகத்தினர் சொல்கிறார்கள். தொழிலாளர்கள் வேலை நிறுத்தம் செய்வதற்கான காரணங்களைச் சொல்லுகிறார்கள். இந்த இரண்டு காரணங்களையும் ஆராய்ந்து அதில் எந்தக் காரணத்தில் நியாயம் இருக்கிறது என்பதை அறிந்து, நிர்வாகத்தின் பக்கம் தவறு அல்லது தொழிலாளர்களிடம் தவறு என்பதைச் சுட்டிக் காட்டி, தவறு யார் பக்கம் இருந்தாலும், அரசாங்கம் தன்னுடைய சக்தியைப் பயன்படுத்தி அவர்களை ஒத்துக்கொள்ளச் செய்ய வேண்டியது அரசினுடைய கடமை. நிர்வாகத்தினர் ஒப்பந்தத்திற்கு வரமாட்டேனென்று சொல்லுகிறார்கள், ஆகவே ஒன்றும் செய்ய முடியாது என்று சொல்லுவது என்பது கடமையிலிருந்து வழுவுவதாக ஆகும் என்பதைச் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். அந்த ஆலைத் தொழிலாளர்கள் ஒரு நாள் அர்த்தால் செய்யப் போகிறோம் என்று அறிவித்தவுடனே, இந்த அரசு அவசரச் சட்டத்தைப் பிறப்பிக்கிறதென்றால், ஒவ்வொரு போராட்டத்தையும் தன்னுடைய ஆட்சி இயந்திர அடக்குமுறைக் கருவியால் அடக்கிவிடலாம் என்று கருதுகிறது





என்று நான் கருதுகிறேன். இரண்டாயிரம் ஆண்டு உலக ஜனநாயக வரலாற்றைப் படித்துப் பார்த்தால், சர்வாதிகாரம் வென்றதில்லை; ஜனநாயக முறை தோற்றதில்லை என்பதை நாம் அறிய முடியும். இதை நாம் மறந்துவிடக் கூடாது என்று சொல்லி அரசு தன்னுடைய அணுகுமுறையை மாற்றி தொழிலாளர்களின் வாழ்வோடு பின்னிப் பிணைந்திருக்கிற இந்த ஆலையைத் திறப்பதற்கு மத்திய அரசோடு தொடர்பு கொண்டு அல்லது இந்த மாநில அரசே எடுத்துக்கொண்டு புதிய நிர்வாகத்தை அமைத்துச் செயல்படுத்த முன்வர வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

அண்ணாமலைப் பல்கலைக் கழகம் அடைக்கப்பட்டிருக்கிறது. தமிழ் நாட்டில் கல்வித் துறையோடு இணைந்துள்ள ஒவ்வொருவரும் கண்ணீர் வடிக்கின்ற ஒரு செய்தி இது. அண்ணாமலைப் பல்கலைக் கழகம் தோன்றுகிறபோது சென்னைப் பல்கலைக் கழகம் ஒன்றுதான் இருந்தது. இரண்டு பல்கலைக் கழகங்களிலே அண்ணாமலைப் பல்கலைக் கழகம் தமிழ் வளர்ச்சிக்கும், தமிழ் மொழியினுடைய உயர்வுக்கும் பாடுபட்ட சிறந்த பல்கலைக் கழகம் என்று எல்லோராலும் போற்றப்பட்டது. நம்முடைய மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள், மற்றும் மின்சார அமைச்சர் அவர்கள், கிராமப் பொருளாதாரத்துறை அமைச்சர் அவர்கள், வருவாய்த்துறை அமைச்சர் அவர்கள், மற்றும் அமைச்சரவையிலே இருக்கக்கூடிய பல அமைச்சர்கள் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்திலே பயின்றவர்கள் என்று நினைக்கிறேன். அங்கே பயின்ற அவர்கள் பெறுகின்ற சிறப்புக்கெல்லாம் அண்ணாமலைப் பல்கலைக் கழகம் தொட்டிலாக விளங்கியது என்று சொல்லுவதிலே தவறு இல்லை. இந்தப் பல்கலைக்கழகத்திலே பயின்றவர்கள் எல்லாத் துறைகளிலும் சீரிய இடத்தைப் பெற்று, பணிபுரிகின்ற இடத்திற்குச் சிறப்புச் செய்கிற நிலையில் திறமை பெற்றிருக்கிறார்கள். அப்படிப்பட்ட திறமை வாய்ந்த, ஆற்றல் மிகுந்த நல்ல அரசியல்வாதிகளை, நிபுணர்களை, என்ஜினியர்களை, வழக்கறிஞர்களை, பொருளாதார நிபுணர்களை உருவாக்கிய பல்கலைக் கழகம் இன்று இந்நிலை அடைந்திருக்குமானால், அது மிகுந்த வருந்தத்தக்க செயல். இதற்குக் காரணம் என்ன என்பதை ஆராய வேண்டும். காரணம் ஒரு பக்கத்திலே மட்டும் இருக்க முடியாது. நியாயம் வேண்டுமானால் ஒரு பக்கத்திலே கொஞ்சம்

அதிகமான சதவீதத்தோடு இருக்கலாம். மறு பக்கத்திலேயும் நியாயம் இல்லாமல் இருக்கப் போவதில்லை. இப்படிப்பட்ட சூழ்நிலை உருவானதற்கு முதலில் யார் காரணம், என்ன சூழ்நிலை என்பதைக் கண்டறிந்து அதை அகற்ற வேண்டிய பொறுப்பு அரசுக்கு இருக்கிறது. ஒரு பகுதியிலே துப்பாக்கிப் பிரயோகம் நடந்துவிட்டதென்றால், ஊரில் உள்ளவர்கள் கலவரம் செய்தார்கள் என்பதை மாத்திரம் காரணமாக எடுத்துக் கொண்டால், இனிமேல் அத்தகைய நிலை வராமல் பாதுகாக்க முடியாது. அத்தகைய கலவரச் சூழ்நிலை உருவாகாமல் காவல் துறையினர், அதிகாரிகள், பெரியவர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள் மற்ற பொறுப்பானவர்கள் ஏன் தலையிட்டு தக்க காலத்தில் தடுக்கவில்லை என்பதுதான் உண்மையான காரணமாக இருக்க முடியும். அது போல இவ்வளவு சிறப்புப் பெற்ற பல்கலைக் கழகம், செல்வந்த குடும்பத்தைச் சேர்ந்த தாராள மனப்பான்மை, கொண்டவர்களுடைய அருட்கொடையினால் உருவாகி வளர்ந்திருக்கின்ற பல்கலைக் கழகத்தில் இன்று இந்த நிலை ஏற்பட்டிருக்கிறதென்றால், அதைத் தடுக்க வேண்டியது எல்லோருடைய பொறுப்பு, இந்த ஆட்சியினுடைய பொறுப்பு. அந்தப் பல்கலைக் கழகம் சென்ற ஆண்டு 17 நாட்கள்தான் வேலை செய்திருக்கிறது. இந்த ஆண்டும் சில நாட்கள்தான் இயங்கியிருக்கின்றது. பல்கலைக் கழகத்தின் நிர்வாகம் போராட்டத்தின் முன்னணியில் இருக்கிறது என்பதை யாரும் மறுக்க முடியாது. அரசு இதையெல்லாம் உணர்ந்துதான் சென்ற ஆண்டு ஆளுநர் உரை படிக்கப்பட்டபோது, சீர்திருத்தம் செய்ய அரசு முயற்சி எடுக்கிறது என்று அறிவித்தது. அதைத் தொடர்ந்து அமைச்சர்களும், அரசு அதிகாரிகளும், இயக்குநர்களும் உறுதியை அளித்துக்கொண்டே வந்தார்கள். இப்போது திடீரென்று இதிலே ஒரு மாற்றம் இருப்பதாக நினைத்துக்கொண்டு ஆசிரியர்கள் போராட்டத்தைத் தொடங்கிவிட்டார்கள் என்று சொல்லப்பட்டது. நான் ஒரு கல்லூரியோடு தொடர்பு உடையவன். கல்லூரியை நடத்துகிறவன் என்ற முறையில் ஆசிரியர்களைச் சந்திக்கும்போது, "ஆசிரியர்கள் போராடக்கூடாது; ஆசிரியர்கள் சார்பிலே பிரதிநிதிகளாகிய நாங்கள் போராடலாம், உண்ணாவிரதம் இருக்கலாம். கல்விச் சூழ்நிலை கெடாமல் இருக்க வேண்டும்" என்ற கருத்தை நான் சொல்வதுண்டு. அதைப்போலவே "ஆலையிலே போராட்டம் செய்தால் இயந்திரங்கள் அப்படியே இருக்கும். போராட்டம் முடிந்த பிறகு இயந்திரத்தை இயக்கலாம். ஆனால் ஆசிரியர்கள் போராட்டம் செய்தால், மாணவர்கள் எல்லாம் பார்த்துக் கொண்டிருப்பார்கள். போராட்டம் முடிந்த பிறகு, இந்த ஆசிரியர்கள் வேண்டாம் என்று மாணவர்கள் போராட்டம் ஆரம்பித்தால் நிலை என்ன ஆகும்?" என்று கேட்பேன். அவர்களும் அது தவறு என்று நினைப்பார்கள். இதை மாத்திரம் சொல்லிக்





கொண்டு அவர்களுடைய போராட்டத்தைத் தடுக்க முடியாது. அவர்களுடைய போராட்டத்தின் பின்னணி என்ன, வேண்டுகோள் என்ன, அதிலே உள்ள நியாய உணர்வுகள் என்ன என்பதை அறிந்து அதை தக்க காலத்திலே செய்து முடிக்காவிட்டால், போராட்டமாகத்தான் இருக்குமே தவிர வேறு வழியில்லை. கேரளத்திலே பரவலாக ஒரு நாடகம் நடக்கும். நீங்கள் எல்லாம் கூடக் கேட்டிருப்பீர்கள். "என்னைக் கம்யூனிஸ்ட் ஆக்கியது நீங்களே" என்ற நாடகம் அது. என்னைக் கம்யூனிஸ்ட் ஆக்கியது நீங்களே— அதாவது பணக்காரர்களே என்பது பொருள். அந்த மாதிரி ஆசிரியர்களுடைய போராட்டத்திற்கு எப்படிப் பொருள் கொண்டாலும் சரி. ஆசிரியர்கள் பொருள்களை வாங்க கொஞ்ச நேரம் கூட வரிசையில் நிற்க முடியாதவர்கள்—அப்படிப்பட்டவர்கள் போர்க்காலத்திலே சிறைச்சாலைக்குப் போவதைப் போல் போகிறார்கள் என்றால், அந்த அளவிற்குச் சூழ்நிலை உருவாகியிருக்கிறது. அந்த நிலையை உருவாக்கியது ஆசிரியர்களல்ல, நிர்வாகம். அந்த நிர்வாகத்தை ஒழுங்குபடுத்த வேண்டிய பொறுப்பு அரசினுடைய பொறுப்பு என்பதைச் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். அதனுடைய உள் விவகாரத்திற்குச்

(பிற்பகல் 4-40)

செல்ல விரும்பவில்லை. காரணம், அரசு தன்னுடைய விருப்பப்படி அதிலே தலையிட்டு சீர்திருத்தத்தைச் செய்வதற்குத் துணையாக நிற்க வேண்டுமென்று கருதுகின்ற காரணத்தினால், நான் அதை விட்டுவிடுகிறேன். நான் ஓர் ஒத்திவைப்புத் தீர்மானம் கொண்டு வந்தபோது, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கொடுத்த வாக்குறுதியைக் கேட்டு ஆசிரியர்கள் தங்களுடைய போராட்டத்தை வாபஸ் பெற்றிருக்கிறார்கள். ஒருவேளை முதலமைச்சர் அவர்கள் சொல்லலாம். அவர்கள் வாபஸ் பெற்றதாக நேற்றோ, முந்திய நாளோ தானே அறிவிப்பு வந்திருக்கிறது என்றும் சொல்லலாம். வெளியிலே இருப்பவர்கள் உள்ளே இருப்பவர்களைக் கலந்துகொள்ளாமல் அந்த அறிவிப்பைச் செய்ய முடியாது. போராட்டத்தை ஒருவர் ஆரம்பிக்கலாம். ஆனால் அதையே முடிக்கும்போது எல்லோரும் சேர்ந்துதான் முடிக்க முடியும். 'அந்தப் போராட்டத்தை விலக்கிக்கொண்டோம்' என்று அறிவிப்பு வந்திருக்கிறது. சிறைச்சாலையிலே இருப்பவர்களையும் கலந்துகொண்டு இந்த முடிவு செய்திருக்கிறார்கள். சிறைச்சாலையிலே இருக்கக்கூடிய அந்த ஆசிரியர்களை அரசு நிபந்தனையின்றி விடுதலை செய்ய வேண்டும் என்பதை இந்த அரசிடத்திலே வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன்.

இந்தப் போராட்ட காலங்களிலே கைது செய்யப்பட்டவர்கள் ஜாமீனிலே தான் வரவேண்டுமென்று ஒரு நியதியை வைத்திருக்கிறார்கள். அதை இந்த ஜனநாயக அரசு வைத்திருக்கக்கூடாது. என்னுடைய வேண்டுகோள் கிரிமினல் குற்றவாளியாக இருந்தால், பல குற்றங்களைச் செய்த ஒருவர் கைது செய்யப்பட்டால், அவர் தப்பித்து ஓடிவிடுவார், அவரைக் கண்டுபிடிக்க முடியாது என்பதால் ஜாமீன் மனுக்கள் கொடுக்க வேண்டும் என்று கோர்ட்டிலே இருக்கிறது. வெள்ளைக்காரர்கள் இந்த நாட்டை ஆளுகின்றபோது, காங்கிரஸ்காரர்கள் பல முறைகள் போராட்டம் நடத்தி, பல்லாயிரக் கணக்கானவர்கள் சிறையிலே இருந்தபோது, மகாத்மா காந்தியுடன் ஒப்பந்தம் செய்து, போராட்டத்தை ரத்து செய்து, போராட்டத்தைப் பின் வலிப்பதாக அல்லது போராட்டத்தை நீக்குவதாக காந்திஜி அவர்கள் அறிவித்தவுடன், இமயம் முதல் கன்னியாகுமரி வரையில் இருக்கக்கூடிய அத்தனை கைதிகளையும் ஒரே உத்தரவிலேயே விடுதலை செய்யக்கூடிய நிலை இருந்தது. வெள்ளைக்காரர்களின் சர்வாதிகார ஆட்சிக் காலத்திலேயே அந்த முறை அமுல்படுத்தப்பட்டிருக்கிறது. இந்த ஜனநாயக நாட்டிலே சில கோரிக்கைகளைக் கொண்டு வந்து வைத்து, சட்ட ரீதியாகச் சொல்லி நாங்கள் போராடுகிறோம் என்று சொல்லி, போராடியிருக்கிறார்கள். அந்தப் போராட்டச் சூழ்நிலை மாறியவுடன், அவர்களையெல்லாம் விடுதலை செய்து வழக்கையும் வாபஸ் செய்ய வேண்டியது ஜனநாயக அரசினுடைய கடமை. இதை முன்மாதிரியாக இந்த அரசு நடத்திக்காட்ட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அப்படிப்பட்ட சூழ்நிலை உருவான பிறகு, ஆசிரியர்கள் பிரதிநிதிகளும், கல்வியமைச்சர் அவர்களும், கல்வித் துறையைச் சேர்ந்தவர்களும், பல்கலைக் கழக நிர்வாகத்தினரும் கலந்து பேசி அவர்களிடையே இருக்கக்கூடிய குறைபாடுகளைக் களைவதற்கு என்னென்ன செய்ய வேண்டுமோ அதைச் செய்ய வேண்டும். அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தினுடைய முந்தைய சீரிய சிறப்பான சூழ்நிலைகளை உருவாக்க வேண்டும் என்பதைச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். ஆசிரியர்கள் போராட்ட காலத்திலே தாக்கப்பட்டிருக்கிறார்கள். அவர்களைத் தாக்கியது யார், தாக்கப்பட்ட சூழ்நிலை என்ன என்ற பிரச்சினைகளுக்கு நான் வரவில்லை. ஆனால் அவர்கள் தாக்கப்பட்டிருக்கிறார்கள். அவர்கள் பாதுகாப்புக்கு என்று போராட்டம் ஆரம்பித்தார்கள். ஊர்வலம் நடத்தினார்கள். பொதுக்கூட்டம் கூட்டுவதற்கு அனுமதி கேட்டார்கள். அந்த அனுமதியும் கொடுக்கப்பட்டது. பிறகு தடை விதிக்கப்பட்டது. அதை மீறி போராட்டம் நடந்தது. அது நியாயம்தானா, இது நியாயம்தானா என்று பார்க்காமல், அரசும் இப்போது ஏற்பட்டிருக்கின்ற சுமுகச் சூழ்நிலையைப் பயன்படுத்தி, ஆசிரியர்களை விடுதலை செய்து, வழக்குகளை வாபஸ் பெற





வேண்டுமென்பது என் கருத்து. ஆசிரியர்களும் அரசு எடுத்துக்கொள்கின்ற இந்த நிலைமைகளை ஏற்றுக்கொண்டு, அவர்களோடு கலந்து பேசி அண்ணாமலைப் பல்கலைக் கழகம் சீரும் சிறப்புமாக நடைபெற, அதன் சிறப்பு குறையாமல் செயல்படும் நிலையை உருவாக்க வேண்டும் என்று இந்தச் சந்தர்ப்பத்திலே ஆசிரியர்களையும் நான் கேட்டுக்கொள்கிறேன். அதே நேரத்திலே அரசும் இதிலே பிரஸ்டீஜ் பார்க்காமல், ஒரு முன்மாதிரியாக, ஜனநாயக ரீதியிலே போராட்டக் காலங்களிலே கைது செய்யப்பட்டவர்களை, போராட்டம் முடிகிறபோது எந்தவிதமான நிபந்தனையும் இன்றி விடுதலை செய்கின்ற ஒரு பாரம்பரியத்தை, வெள்ளைக்காரர்கள் காலத்திலேயே இருந்த பாரம்பரியத்தைத் திரும்பக் கொண்டுவர முயற்சிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

ஆளுநர் அவர்கள் உரையிலே மாநிலம் முழுவதும் பல பகுதிகளில் சட்டம் ஒழுங்கு மிகச் சிறப்பாக இருக்கிறது என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். இந்தச் சட்டம் ஒழுங்கு நிலையைப் பார்க்கிறபோது, இரண்டு கண்ணாடிகள் இருக்கின்றன. ஒன்று அரசு பார்க்கிற கண்ணாடி. இன்னொன்று சாதாரண மக்கள் பார்க்கின்ற கண்ணாடி. ஆனால் அரசு பார்க்கிற கண்ணாடி எத்தனையோ கண்ணாடிகளைக் கடந்து வருகிறது. இந்தக் கோட்டையிலே இருக்கின்ற கண்ணாடிக்கு இடையிலே எத்தனையோ கண்ணாடிகள் இருக்கின்றன. அதிலே ஒரு கண்ணாடி தவறாகக் காட்டினாலும், இந்தக் கண்ணாடியிலே தவறாக வந்துவிடும். நான் சொல்கின்ற கருத்து, அந்தந்த ஊரிலேயே இருந்து நேரடியாகவே மக்களைப் பார்த்து நிலைமையைச் சொல்கின்றவர்கள் நாங்கள். ஆகவே நாங்கள் நல்ல கண்ணாடிகளாகப் பணிபுரிகிறோம். நல்ல கண்ணாடிதான், கலர் கண்ணாடி அல்ல. நல்ல வெள்ளை கண்ணாடிதான், இங்கு சொல்கின்ற கருத்தை ஏற்றுக் கொள்ளாவிட்டாலும், வேறு நபர்களை அனுப்பி நாங்கள் சொல்கின்றவைகளைச் சோதனை செய்துகூடப் பார்க்கலாம். இப்போது நான் இரண்டொரு சம்பவங்களை மாத்திரம் சொல்ல விரும்புகிறேன். சட்டம் ஒழுங்கு எப்படி சீர்கேடான நிலையில் இருக்கின்றன என்பதற்கான சம்பவங்களைச் சுட்டிக் காட்ட ஆசைப்படுகிறேன். கவர்னர் அவர்கள் உரையிலே நாடு முழுவதும் அமைதியான, பூசலற்ற நிலை இருக்கிறது என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். அதுதான் நம்முடைய குறிக்கோள்கூட. அப்படித்தான் இருக்கிறது என்று அரசு சொல்கிறது. நாங்களும் அப்படித்தான் இருக்க வேண்டும் என்று சொல்கிறோம். நாங்கள் அப்படி இல்லாத இடங்களைச் சுட்டிக்காட்டி, இன்னின்ன இடங்களில் இல்லை, அங்கேயும் இருக்கச் செய்ய வேண்டும் என்பதற்காகத்தான் சொல்கிறோம். எங்கள்

இருக்கிறார்கள். மந்திரி பதவிகளைக் கூட இவர்களிடையே பங்கு போட்டுக்கொள்கிறார்கள். அங்கு யாராவது ஒரு அதிகாரி தண்டிக்கப் பட்டால், உடனே அந்த ஜாதிக் தலைவரிடம் அவர் போவார். அங்கே அவர்களுக்கு என்று சங்கம் இருக்கின்றது. அந்தச் சங்கங்களில் அரசு பட்ஜெட்போலப் போட்டு அவர்கள் கோடிக்கணக்கில் பணம் போட்டு அந்தச் சங்கங்களை நடத்திக்கொண்டிருக்கிறார்கள். அவைகளை மிகச் சிறப்பாக நடத்திக் கொண்டிருக்கிறார்கள். பெரிய ஆள் என்று சொல்லிக்கொள்பவர்கூட இந்தச் சங்கங்களில் உறுப்பினராக இருந்தால்தான் ஜெயிக்க முடியும். அவர்களுடைய வாக்குகள் அவர் அப்படியிருந்தால்தான் அவருக்குக் கிடைக்கும். அங்கே ஒரு பழமொழி இருக்கிறது. 'தவறு செய்பவர்களுக்குப் புகலிடம் ஜாதி' என்று சொல்லுவார்கள். அந்தச் சங்கத்திலே போய், நான் இன்ன ஜாதியானதினாலே என்னைத் தள்ளி விட்டார்கள் என்று சொல்வான். உடனே அங்கே இருப்பவர்கள், முக்கிய மானவர்கள் அந்தச் சங்கத்தைச் சேர்ந்தவர்கள் எல்லாம் ஒன்றாகச் சேர்த்து வந்து தகராறு செய்வார்கள். இது முற்போக்கான ஒரு ஆட்சி நடக்கின்ற இடத்திலேகூட இருக்கிறது. அப்படித்தான் குடிகாரர்கள் சண்டை போடுவதும், அவர்கள் தாக்கப்பட்டவுடனே, அந்த ஜாதிக்காரர்கள் கூடிவந்து கலவரம் உண்டுபண்ணுவதும் இருக்கிறது. நம் நாட்டிலே கன்னியாகுமரி மாவட்டத்தில் அகஸ்தீஸ்வரம் என்ற ஊர் இருக்கிறது. அங்கே இந்துக்களும் கிருத்துவர்களும் வாழ்கின்றார்கள். குடியின் காரணமாக அங்கும் தகராறுகள் ஏற்பட்டிருக்கின்றன. இந்த நிலைமைகளிலேதான் அந்தப் பகுதிகள் இருந்துகொண்டிருக்கின்றன என்பதை நான் சுட்டிக்காட்ட ஆசைப்படுகிறேன்.

(பிற்பகல் 4-50)

மது விலக்குபற்றி மனம் திறந்து நம்முடைய கருத்துக்களை அரசு கேட்டிருக்கிறது, ஆளுநர் அவர்களின் அறிக்கை வாயிலாக. மனம் திறந்து மட்டுமல்ல, மன உறுதியோடு இந்த அவையிலே பல நேரங்களிலே எங்கள் கருத்துக்களை எடுத்து வைத்திருக்கிறோம். மது விலக்குச் சட்டத்தைக் கடுமைப்படுத்தி, தீவிரம் காட்டியபோது, அரசின் தீவிரத்தை வரவேற்று, அரசு எடுக்கும் நடவடிக்கைகளால் தீவிரத்திற்குப் பதிலாக படுதோல்வி அடைந்து, அதிலே விரக்தி அடைந்து, அரசே அது வேண்டாமென்று சொல்லும் நிலைக்கு வரக்கூடாதென்று சொன்னோம். நாங்கள் எதிர்பார்த்த அதே நிலைக்கு அரசு இப்போது வந்து, என்ன செய்வது என்று எங்களைக்



கேட்கிறது. நாங்கள் சொல்வது, மதுவிலக்கை முறையாக, நிதானமாக, சிறப்பாக அமல்படுத்தி இந்த நாட்டைக் காக்க வேண்டுமென்பதுதான். இந்த அரசுக்கு மது விலக்கிலே உறுதியான கொள்கையில்லாமல், அதைத் தளர்த்து வதும் அதைக் கட்டுப்படுத்துவதும் என்று முன்னுக்குப் பின் முரணான கொள்கைகளை அமல்படுத்தியதால், மது எல்லாப் பகுதிகளிலும் புகுந்து தாண்டவமாடி, ஆட்சியைக் குலைக்கும் அளவிற்கு சட்டம் ஒழுங்கு குலைந்து வருவதை இந்தச் சந்தர்ப்பத்திலே ஆணித்தரமாகச் சொல்லுவதை என்னுடைய முக்கியமான கடமையாக நான் கருதுகிறேன். மது விலக்குக் கொள்கையில் இந்த அரசுக்கு ஏற்பட்ட தளர்ச்சியாலும், நிலையற்ற கொள்கையாலும் காவல் துறையினர் செயலற்ற நிலைக்கு வந்து, முடமாக இன்றைக்கு இருக் கிறார்களென்று சொன்னால் தவறில்லை. ஏனென்றால் அவர்களுக்கு அரசு 31 ஆம் தேதிதான் சம்பளம் கொடுக்கிறது. மது வியாபாரிகள் 27 ஆம் தேதியே அவர்களுக்குச் சம்பளம் கொடுக்கிறார்கள். தரம் வைத்திருக்கிறார்கள், பட்டியல் வைத்திருக்கிறார்கள். நான் தெளிவாகச் சொல்லுகிறேன், நிரூபிக் கிறேன். ஒவ்வொரு மாவட்டத்திலும் வியாபாரிகள் சங்கம் இருக்கிறது. அதற்கு அரசியல் ரீதியான ஆதரவாளர்கள் இருக்கிறார்கள். பேட்ரனேஜ் லாபி இருக்கிறது. அவர்களைச் சந்தித்து, பாதுகாப்புப் பெறுகிறார்கள். இன்ஸ்பெக்டர் ராங்க் வரையில் சம்பளப் பட்டுவாடா செய்கிறார்கள். நல்ல அதிகாரிகளும் இருப்பார்கள். அவர்கள் எண்ணிக்கை குறைந்து கொண்டிருக் கிறது. ஒரு நாளைக்கு அப்படிப்பட்டவர்கள் இல்லாமல் போய்விடும் நிலை ஏற்படுமோ என்ற அச்சம்கூட ஏற்படுகிறது. இப்போது அரசுக்கு மது விலக்கை ரத்து செய்யலாமா என்ற எண்ணம் வருகிறது. மது விலக்கைச் சிறப்பாக அமல்படுத்தி இந்த நாட்டை எப்படிப் பாதுகாப்பது என்ற எண்ணம் அண்ணாவின் பெயரைத் தாங்கியுள்ள ஆளும் கட்சிக்கு வரவேண்டுமென்று சொல்லி, அந்தக் கருத்தை ஆணித்தரமாக எடுத்துச் சொல்ல விரும்புகிறேன்.

அடுத்து, இந்த அரசு வருவாய்த் துறையிலே பல சீர்திருத்தங்களைச் செய்ய வேண்டுமென்று சொல்லி, வருவாய் வாரியத்தை ஒழித்தது. அதை நாங்களும் பாராட்டினோம். ஆனால் அதற்குக்கூட சரியான மாற்று அமைப்புகளைச் செய்யவில்லை. ரெவின்யூ போர்ட் ஒழிக்கப்பட்டது. அப்பீலில் ரெவின்யூ போர்ட் ஜூடிஷியரி பவருடன் பங்க்ஷன் பண்ணியதை, இப்போது யாருக்குக் கொடுத்திருக்கிறார்கள்? ரெவின்யூ போர்டின் அதிகாரங் களில் சில கலெக்டரிடமும், சில செக்ரட்டரியிடமும் இருக்கின்றன. அப்பீலில் குவாசி ஜூடிஷியல் டெஸிஷன் எடுக்க யாருக்கு அதிகாரம் கொடுத்திருக்கி றார்கள்? அதற்கு என்ன அமைப்பு இருக்கிறதென்பதைப்பற்றித் தெளிவாக முடிவெடுத்து அறிவிப்பதற்கு முன்னமேயே, மேலே ரெவின்யூ போர்டையும்,

[திரு. ம. சங்கரலிங்கம்] [1981 பிப்ரவரி 10

விளம்பரத்திற்காகவோ, இந்த அரசைப் பற்றி விமர்சிக்கவோ நான் இவைகளைச் சொல்லவில்லை. பல பகுதிகளைப் பற்றிச் சொல்ல விரும்பவில்லை. குறிப்பாக கன்னியாகுமரியிலே ஆகஸ்ட் மாதத்தில், விளவங்கோடு தாலுக்கா, காஞ்சம்புரம் என்ற பகுதியில் ஏற்பட்ட கலவரத்தைப்பற்றிச் சொல்கிறேன். ஒரு யுத்தமே அங்கு நடந்தது. இரண்டு மூன்று தினங்களாக நடந்தது. அந்தப் பக்கத்திலே இருந்து ஒரு ஐந்தாயிரம் பேர்கள், ஒலிபெருக்கி வைத்து, போலீஸ் படையைப் போல வேன்கள் வைத்துக்கொண்டு நின்றார்கள். இந்தப் பக்கம் கடற்கரைப் பகுதியிலிருந்து ஒரு ஐந்தாயிரம் பேர்கள் கூட்டமாக வந்து நின்றுகொண்டிருந்தார்கள். ஒரு பக்கம் இப்படி, இன்னொரு பக்கம் அப்படி. இந்தக் கலவரம் ஏன் ஏற்பட்டது? அதுபற்றி அரசுக்கும் தகவல் வந்திருக்கும் என்று நினைக்கிறேன். நல்ல காலமாக அங்கே பெரிய அளவுக்கு யாரும் சாகவில்லை. அந்த வட்டாரத்திலே இருந்த பொது மக்களுடைய பிரதிநிதிகள் எச்சரிக்கையாக இருந்து, தங்களுக்கு அடி உதை விழுந்தாலும் பரவாயில்லை என்று துணிந்து பார்த்துக் கொண்டார்கள் அதனால் தவறுகள் ஏற்படவில்லை. இந்த நிலை ஏன் உருவாயிற்று என்பதைப் பார்க்க வேண்டும். 13—8—1980-லே விளவங்கோடு, காஞ்சம்புரம் என்ற ஊரிலே, திருப்பத்தூர் போலீஸ் ஏட்டாக வேலை பார்க்கின்ற இஸ்ரேல் என்ற ஒருவர் இருக்கிறார். அவருடைய வீட்டுக்குப் பக்கத்திலே தேனாம்பேட்டையில் பப்ளிக் ஹெல்த் டிப்பார்ட்மெண்டில், லேன்ட் அக்யுசிஷன் டெபுடி கலெக்டராக இருப்பவர் வீடு இருக்கிறது. அவருடைய மனைவி மக்கள் அங்கே இருந்து கொண்டிருக்கிறார்கள். டிபுடி கலெக்டர் இங்கே இருக்கிறார். அவர் குடும்பத்தினர் அங்கே இருக்கிறார்கள். அவர்களுடைய வீட்டுக் காம்பௌண்டுக்குள்ளே ஒருவன் நேசன் என்பவன் சாராயம் விற்றுக் கொண்டிருந்தான். நாட்டிலே அங்கெங்கெனாதபடி எங்கும் கிடைக்கும் பொருள் எது என்று கேட்டால், மாணவர்கள் சொல்வது 'மது'. கடவுள் எங்கெல்லாம் இருக்கிறார் என்று கேட்டால், அங்கெங்கெனாதபடி எங்கும் இருக்கிறார் என்று சொல்வார்கள் முன்பு. தற்போது உள்ள நிலைக்கு மது உயர்ந்ததா அல்லது அந்த நிலைக்குக் கடவுள் தாழ்ந்தாரா என்பது எனக்குத் தெரியவில்லை. அந்த அளவுக்கு மது கிடைக்கிறது. மதுவை போலீஸ் ஏட்டு வீட்டுக் காம்பவுண்டுக்குள்ளே வைத்து விற்றுக்கொண்டிருந்தான். அவன் இஸ்ரேல் சாதிக்காரன். அங்கு 13 பேர்கள் குடித்துக் கொண்டிருந்தார்கள். குடிக்கின்ற ஆட்கள் இங்கே வரக்கூடாது என்று போலீஸ் ஏட்டு சொன்னார். அங்கு மது விற்றுக்கொண்டிருந்தவனிடம் 'என்னடா இது போலீஸ் ஏட்டுவின் இடம், இங்கேயா மது விற்கிறாய், எல்லாவற்றையும் எடுத்துக்கொண்டு வெளியே போ' என்று சொல்லி



1981 பிப்ரவரி 10] [திரு. ம. சங்கரலிங்கம்]

யிருக்கிறார். உடனே மது விற்பவன், 'உங்களையெல்லாம் குடிக்கக்கூடாது என்று சொல்லுகின்றார்' என்று அங்கு குடித்துக்கொண்டிருந்தவர்களிடம் சொல்லியிருக்கிறான். குடி போதையிலே 50 பேர்கள் ஒன்றுகூடி அவரைத் தாக்கியிருக்கிறார்கள். அதுபோலவே அவருடைய மனைவி மக்களும் தாக்கப்பட்டிருக்கிறார்கள். எல்லோரையும் தாக்கியதுடன் ரூபாய் 20 ஆயிரம் மதிப்புள்ள பொருள்களையும் உடைத்து சேதம் செய்து விட்டார்கள். உடைத்து விட்டு இருக்கக்கூடிய நேரத்திலே டெபுடி கலெக்டர் வீட்டில் இருந்த அவருடைய மனைவி ஜன்னல் வழியாக, வீட்டில் இருந்துகொண்டு, அவர்களைப் பார்த்து கையெடுத்துக் கும்பிட்டுக் கேட்டிருக்கிறார்கள். அவர்களையும் தாக்கியிருக்கிறார்கள். அவர்களை வெளியே இழுத்து அடித்திருக்கிறார்கள். இதையெல்லாம் பற்றி மாவட்ட ஆட்சித் தலைவரிடம் ரிப்போர்ட் கேட்டால், அரசுக்குத் தெரியவரும். இந்தச் செய்தி காட்டுத் தீ போலப் பரவியது. உடனே அவர்கள் சமூகத்தைச் சேர்ந்தவர்கள் வேன் வைத்துக்கொண்டு வந்து விட்டார்கள். ஐயாயிரம் பேர்கள் அந்தப் பக்கம் வந்துவிட்டார்கள். இவர்கள் சமூகத்தைச் சேர்ந்தவர்கள் ஒரு ஐயாயிரம் பேர்கள் இந்தப் பக்கம் சேர்ந்து விட்டார்கள். இரண்டு பக்கங்களிலும் இரண்டு தரத்தாரும் கலவரத்திற்குத் தயாராகி விட்டார்கள். இந்த அளவுக்கு வராமல் முதலிலேயே தடுத்திருக்கலாம். அங்கே இருக்கின்ற காவல் அதிகாரி, கள்ளச் சாராய விற்பனைபற்றி போலீஸ் ஏட்டு தகவல் கொடுத்த உடனேயாவது நடவடிக்கை எடுத்திருக்க வேண்டும். அதிலே சம்பந்தப்பட்டவர்களைக் கைது செய்திருந்தால், இந்த நிலைமைகள் ஏற்பட்டிருக்காது. அதற்குப் பிறகு இரண்டு கார்கள் உடைக்கப்பட்டன. பல வீடுகள் உடைக்கப்பட்டன. நிரபராதிகள் பலர் தொல்லைகளுக்குள்ளானார்கள். இதுபோன்று அமைதியின்மை பல இடங்களில் இருக்கின்றது.

இது போலவே தோவாளை தாலுக்காவிலே லாயம் என்ற பகுதியிலே முஸ்லீம்கள் இந்துக்கள் ஆகிய இரு மதத்தைச் சேர்ந்தவர்களும் வாழ்கின்றார்கள். இதுவரை கன்னியாகுமரி மாவட்டத்தில் இதுபோன்ற கலவரங்கள் ஏற்பட்டது கிடையாது. எந்தவிதமான தவறும் கிடையாது. அங்கே இந்துக்களும் முஸ்லீம்களும் தகராறு இல்லாமல் வாழ்ந்துகொண்டிருந்தார்கள். அங்கேயும் 4 குடிகாரர்கள் காரணமாகத் தகராறு ஏற்பட்டிருக்கிறது. கேரளாவிலே ஒரு பழமொழி சொல்வார்கள். வேறு ஒரு மாநிலத்தைப் பற்றி இங்கு பேசுவதற்கு மன்னிக்க வேண்டும். அங்கு நாயர்கள், பணிக்கர்கள், கிருஸ்தவர்கள் இப்படி மூன்று வகுப்பினர்கள் இருந்து வருகிறார்கள். அவர்கள்தான் ஆட்சியில் இருக்கிறார்கள் பெரும் பதவிகளில்

கீழ் கிராம அதிகாரிகளையும் ஒழித்தாயிற்று. ரெவின்யூ அமைப்பையே முண்டமாக்கிவிட்டார்கள். 14—11—1980 அன்று கிராம அதிகாரிகள் அத்தனை பேரையும் ஒரே உத்தரவில் ஒழித்து, இரவோடிரவாக அதிகாரத்தைப் பெற்றிருக்கிறார்கள். அதற்கு என்ன தேவை? கிராம அதிகாரிகள் பரம்பரை பரம்பரையாக இருக்க வேண்டுமென்று நாங்கள் சொல்லவில்லை. 1970-லேயே நாங்களே விதி செய்திருக்கிறோம். கிராம அதிகாரிகளுக்குக் குறைந்த பட்சக் கல்வித் தகுதி இருக்க வேண்டும், குறைந்த பட்சம் எஸ்.எஸ்.எல்.சி. இருக்க வேண்டுமென்று ஜி. ஓ. போட்டிருக்கிறோம். அதை எதிர்க்கிறார்கள், வழக்கு மன்றத்திற்குப் போகிறார்கள். அது வேறு. கிராம அதிகாரிகளைப் புதிய முறையிலே நியமிக்கும்போது, பழைய அதிகாரிகளை 'நேச்சுரல் ஜஸ்டிஸ்' அடிப்படையில், ஜனநாயக நெறிப்படி, அகற்ற வேண்டும். இத்தனை வயது முடிந்தவர்கள் ஓய்வு பெறுகிறார்கள், அவர்களுக்கு ஓய்வூதியம் கொடுக்கிறோம் என்று சொல்ல வேண்டும், அவர்களுக்குப் பணிக் கொடை கொடுக்கிறோமென்று சொல்ல வேண்டும். கல்வித் தகுதி இல்லாதவர்களுக்கு 20 வருடங்கள் சர்வீஸ் இருந்தால் ஓய்வூதியம் கொடுக்கிறோமென்று சொல்ல வேண்டும். இவற்றையெல்லாம் ஆராய்ந்து செய்திருக்க வேண்டும். ஏன் இதற்கு அவசரச் சட்டம்? சட்ட மன்றங்களில் கேட்டிருந்தால், நல்ல கருத்துக் களை நாங்கள் சொல்லியிருப்போம். ரெவின்யூ போர்டை ஒழிக்கும்போது, அரசு மசோதாவைக் கொண்டு வந்தது. அப்போது கருத்துக்களைச் சொன்னோம். ஆனால், கிராம அதிகாரிகளை ஒரே நாளில் ஒழித்திருக்கி றார்கள். மேஜிஸ்டிரேட் கோர்ட்டிலிருந்து ஒருவரை ஜாமீனில் கொண்டுவர கிராம அதிகாரி சர்ட்டிபிகேட் தேவை. அதற்கு 15 ரூபாய் வாங்குவார்கள். இப்போது ரெவின்யூ இன்ஸ்பெக்டர் அந்த சர்ட்டிபிகேட் கொடுக்க 50 ரூபாய் வாங்குகிறார். கிராம ஊழியர்கள் சமஸ்தானாதிபதிகளாக அட்டூழியம் செய் கிறார்கள் என்று சொல்லப்பட்டது. இப்போது ரெவின்யூ இன்ஸ்பெக்டர்கள் சக்கரவர்த்திகளாக இருக்கிறார்கள். இவர்களுக்குக் கூடுதலாகக் கொடுக்க வேண்டியிருக்கிறது. சரியான மாற்று ஏற்பாடுகளைச் செய்வதற்கு முன்பாகவே, 24,000 பேர்களை வெளியே அனுப்பி கிராம ரெவின்யூ அமைப்பையே சீர் குலைத்து அவர்களும் போராடும் நிலைக்கு வந்து, தினமும் 50, 60 பேர்கள் சிறைச்சாலைக்குச் செல்லும் நிலை ஏற்பட்டிருக்கிறது. ஆந்திர மாநிலத்தில் இவ்வாறு மாற்றம் செய்திருக்கிறார்கள். அவர்களுக்கு அங்கே பென்ஷன் கொடுத்திருக்கிறார்கள். கர்நாடக மாநிலத்தில் 5 வருடங் களுக்கான சம்பளம் கொடுத்து 100 ரூபாய் பென்ஷன் கொடுத்திருக்கிறார்கள். நாம்கூட கட்டாய இந்தியை ஒழித்தோம். ஆனால் இந்தி ஆசிரியர்களுக்குப்



பதவிப் பாதுகாப்பு கொடுத்து, சம்பளம் கொடுத்தோம். அந்த முறையிலே கிராம அதிகாரிகளுக்கும் செய்ய வேண்டும். தொழிலாளர்களானாலும், விவ சாயிகளானாலும், ஆசிரியர்களானாலும், கிராம அதிகாரிகளானாலும் அரசின் அணுகுமுறை அடிப்படையிலே தவறு இருக்கிறது என்பதை இந்தச் சந்தர்ப் பத்திலே சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். என்னுடைய குற்றச்சாட்டு எல்லாம், அரசு அணுகுமுறை தெரியாமல் செய்ததல்ல. 24,000 கிராம ஊழியர்களை அகற்றிவிட்டு, தன்னுடைய கட்சியைச் சார்ந்த ஊழியர்களைப் போடலாமென்று நினைத்தார்கள். அது முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. அவர்களுக்குச் சம்பளமும் கொடுத்து, நாட்டிலே எதிர்ப்பு வந்த பிறகு, பப்ளிக் சர்வீஸ் கமிஷன் தேர்வு என்று சொன்னார்கள். அது மாவட்ட ரீதியில் தேர்வு நடத்துமென்று சொன்னார்கள். ஏன் மாவட்ட ரீதியில் தேர்வு நடத்த வேண்டும்? ரிட்டன் தேர்வு மாவட்ட ரீதியில் வையுங்கள். பிறகு மாநில அளவில் செலக்ஷன் செய்து, லிஸ்ட் போடுங்கள். இதிலும் குழப்பமாக இருக்கிறார்கள். உறுதியான நிலையை எடுக்கவில்லை என்பதைத் தெரி வித்துக்கொள்கிறேன்.

அடுத்து, இதற்கு முந்தைய அரசு ஊழல் செய்தது, பல தவறுகளைச் செய்தது, ஆகவே அந்த அரசு தேவையில்லை, ஊழலற்ற நல்ல ஆட்சியை நாங்கள் கொண்டு வருகிறோமென்று நமது மாநிலத்திலுள்ள மக்களிடத்திலே எடுத்துச் சொல்லி, அதை மக்களும் நம்பி, இந்தக் கட்சியை ஆட்சிக்கு அனுப்பி யிருக்கிறார்கள். இன்று தமிழ் நாட்டிலிருந்து பல கோடி ரூபாய் மதிப்புள்ள எரி சாராயம் கடத்தப்பட்டிருக்கிறது . . . .

**மாண்புமிகு திரு. எம். ஜி இராமச்சந்திரன் :** இந்தப் பிரச்சினைக்குப் போவதற்குமுன் என்னுடைய எண்ணத்தை இங்கே வெளியிட விரும்புகிறேன். இன்றைய தினம் காலை நடந்த சட்ட மன்றப் பேரவையில் தமிழக அரசு கேரளாவிற்கு எரி சாராயம் அனுப்ப அனுமதி தந்ததுபற்றி விசாரணை செய் வதற்கு ஓய்வு பெற்ற உச்ச நீதிமன்ற நீதிபதி திரு. கைலாசம் அவர்களை நியமித்து நீதி விசாரணைக்கு உத்தரவிட்டிருக்கிறது என்பதை நான் தெரிவித்துள்ளேன். ஆகவே அதைப்பற்றி இங்கே பேசுவது வேறு பல பிரச்சினைகளை உருவாக்கலாமென்று நான் கருதுகிறேன்.

(பிற்பகல் 5.30)

**திரு. ம. சங்கரலிங்கம் :** தலைவரவர்களே, நமது முதலமைச்சர் அவர்கள் நான் பேசப் போகின்ற எரி சாராயக் கடத்தல் பற்றி விசாரணைக்கு ஓய்வு பெற்ற உச்ச நீதிமன்ற நீதிபதி திரு. கைலாசம் அவர்களைக் கொண்ட விசாரணைக் கமிஷன் ஒன்றை நியமித்திருப்பதாக அறிவித்தார்கள். இந்த அறிவிப்பு சட்டமன்றப் பேரவையில் செய்யப்பட்ட உடனேயே எங்களுடைய கட்சித் தலைவர் அதை ஏற்றுக் கொள்ளவில்லை. அதே நிலையில் நானும் திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் இந்த அவையில் விசாரணைக் கமிஷன் அமைப்பது என்பதை ஏற்றுக்கொள்ளவில்லை என்பதை அழுத்த மாகச் சொல்கிறேன். அதிலே எங்களுக்கு நம்பிக்கை இல்லை. இதைப்பற்றி விசாரணைக்கு ஏற்பாடு செய்வதைப் பொறுத்தவரை, மத்திய அரசோடு கலந்து ஒரு மேல் மட்ட விசாரணையை நடத்த வேண்டும். முதலமைச்சர் குறிப்பிடுகிற ஓய்வுபெற்ற உச்ச நீதிமன்ற நீதிபதியிடமிருந்து எங்களுக்கு நீதி கிடைக்காது என்பதை நான் இந்தச் சந்தர்ப்பத்தில் ஆணித்தரமாகச் சொல்ல ஆசைப்படுகிறேன்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** விசாரணைக் கமிஷனை ஏற்றுக் கொள்கிறார்களா இல்லையா என்பது வேறு விஷயம். உறுப்பினர் அவர்கள் சொல்வது அவருடைய கட்சியின் அபிப்பிராயம். சட்டமன்ற மேலவையைப் பொறுத்தவரை, நாம் இது சம்பந்தமாக என்ன மரபைக் கடைப் பிடித்து வருகிறோம் என்பதையும் பார்க்க வேண்டும். நியமிக்கப்பட்டிருக்கிற விசாரணைக் கமிஷனை உறுப்பினருடைய கட்சியினர் ஒப்புக்கொள்கிறார்களா இல்லையா என்பது பற்றி அவைத் தலைவருக்குக் கவலையில்லை. ஆனால் இந்த விஷயத்தில் நாம் வழக்கமாகக் கடைப்பிடித்துக் கொண்டு வருகிற மரபை எதிர்க் கட்சித் தலைவரவர்கள் ஏற்றுக்கொள்ள வேண்டும்.

**திரு. ம. சங்கரலிங்கம் :** ஒரு விளக்கத்தை நான் சொல்லக் கடமைப் பட்டிருக்கிறேன். நீதி விசாரணை என்றால் அது "பேக்ட் பைன்டிங் கமிட்டி" என்றுதான் பொருள். நீதி விசாரணைக் கமிஷன் அமைத்திருக் கிறோம் என்று சொல்கிறபோது, அது உண்மையான நீதி விசாரணை ஆகாது. அப்படி விசாரணை நடத்துகின்ற கமிஷனுக்கே தண்டனை கொடுக்கின்ற அதிகாரமும் இருக்க வேண்டும். ஆனால் இங்கு அப்படி அல்ல. சம்பவத்திற்குள் நான் போக விரும்பவில்லை. இதுபற்றி ஏற்கெனவே எல்லோரும் பேசிவிட்டார்கள். தவறான மரபாக ஆகிவிடக் கூடாது என்ப தால் தான் நானும் சொல்கிறேன். அது ஒரு "பேக்ட் ஃபைன்டிங் கமிட்டி" மட்டும் தான். அது ரிப்போர்ட்டைக் கொடுத்த பிறகு தான் அரசு அதன் முடிவு மீது விசாரணை நடத்தும், அரசு அதன் பிறகு விசாரணை நடத்துவது





தான் உண்மையான விசாரணை. அரசுக்குக் கிடைத்துள்ள தகவல்களை வைத்துக்கொண்டு அதன்பிறகு அரசு நடவடிக்கை எடுக்கும். நான் விஷயத்திற்குள்ளே போக விரும்பவில்லை. முதலமைச்சர் அவர்களுடைய கருத்தையும் தலைவர் அவர்களுடைய கருத்தையும் கேட்டுத்தான் இதைச் சொல்லுகிறேன். பொதுவாக விசாரணைக் கமிஷன் என்றால், இந்த அரசு என்ன நினைக்கிறது என்பதை மட்டும் நான் இங்கே குறிப்பிட்டுச் சொல்ல விரும்புகிறேன். தொடர்ந்து இந்த அவையில் விவாதம் நடைபெற்றுக் கொண்டிருக்கும்போது, மாண்புமிகு உறுப்பினர் திரு. நீல்நாராயணன் அவர்கள் பேசும்போது, திருச்செந்தூர் சம்பவத்தைப் பற்றிச் சொன்னார். அப்போது அவையில் அமர்ந்திருந்த மாண்புமிகு அற நிலையத் துறை அமைச்சர் 'அது நீதி விசாரணையில் இருக்கிறது. ஆகவே பேசக் கூடாது' என்று சொன்னார். அப்போது அவர் என்ன பேசினார் என்பதை நான் அவையிலுள்ளவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். "மாண்புமிகு முதல்வர் அவர்கள் சென்று அங்கிருந்த மக்களுடைய உணர்வு களைப் பார்த்து விட்டு நீதி விசாரணைக்கு உத்தரவிடவில்லை. ஏதாவது கிடைக்காதா என்று எண்ணிக் கொண்டிருக்கும் எதிர்க் கட்சித் தலைவர் இதைப் பொதுப் பிரச்சினையாக ஆக்கி நாட்டிலே தேவையற்ற குழப்பத்தை ஏற்படுத்தி அநியாயமாக மற்றவர்கள் மீது பழி சுமத்துகிற உணர்வோடு தூண்டிக் கொண்டிருக்கிற நிலைமைக்கு முற்றுப்புள்ளி வைக்க வேண்டு மென்றுதான் அரசு நீதி விசாரணை வைத்திருக்கிறது. முதலமைச்சர் அவர் கள் சென்றபோது அங்கே கொந்தளித்து வந்த புரட்சியை அடக்க முடியாமல் நீதி விசாரணைக்கு ஆணையிடவில்லை" என்று சொன்னார். நான் உடனே எழுந்து அப்படியானால் "திருச்செந்தூர் சம்பவத்தைப் பொறுத்தவரையில், எதிர்க் கட்சித் தலைவருடைய வாயை அடைப்பதற்காக இப்படிச் செய்திருக் கிறார்கள் என்றால் சங்கனாங்குளம் சம்பவத்தில் ஆளும் கட்சியைச் சேர்ந் தவர் இருப்பதால், அவர்கள் எடுக்க நினைத்த அரசியல் முதலீடு கருதித் தான் இந்த நீதி விசாரணையும் வைத்திருக்கிறார்களா? அதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஏற்றுக்கொள்வார்களா?" என்று கேட்டேன். உடனே அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் "இரண்டு விசாரணைகளையும் ஒரே நேரத்தில் வைப்பதற்குரிய அடிப்படைக் காரணம், சரியாகவோ அல்லது தவறாகவோ அதை மக்கள் மத்தியில் ஒரு விவாதத்திற்குரிய பிரச் சினையாக மாற்றும் நிலையைத் தவிர்க்கவேண்டும் என்ற பொது நோக்கத் தின் அடிப்படையில் எடுத்த முடிவுதான் இந்த அரசின் முடிவு" என்று சொன்னார்கள். ஒரு பிரச்சினை மக்கள் மத்தியில் விவாதமாக ஆகி விட்டது என்று கருதுவது ஜனநாயகத்திற்கு விரோதமானது அல்லவா? உண்மை யைக் கண்டு பிடிக்கத்தான் நீதி விசாரணைக்கு ஏற்பாடு செய்திருக்கிறோம் என்று சொன்னால், நாங்கள் ஏற்றுக்கொள்கிறோம். ஆனால் நீங்களே

நோக்கம் கற்பித்து இந்த அவையிலே விவாதிக்கக் கூடாது, நாட்டிலே விவாதிக்கக் கூடாது, எதிர்க் கட்சித் தலைவர் பேசக் கூடாது என்றெல்லாம் சொன்னால் நாங்கள் விசாரணைக் கமிஷனைப் புறக்கணிப்பதைத் தவிர வேறு வழியில்லை.

**மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன்:** மாண்புமிகு அறநிலையத் துறை அமைச்சர் திரு. வீரப்பன் பதில் சொல்லும்போது நான் அவையில் இல்லை. அதை நான் ஏற்றுக்கொள்கிறேன் என்பதில் எனக்கு மாறுபாடு கிடையாது. ஆனால் இந்த எரி சாராயப் பிரச்சினையைப் பொறுத்தவரை, சட்டமன்றப் பேரவையில் எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் என்னை நேரடியாகச் சம்பந்தப்படுத்தி, குற்றச்சாட்டைச் சொல்லி உங்கள்மீது குற்றம் சுமத்துகிறேன் என்று சொன்னார்கள். ஆகவே நான் சொன்னதை ஏற்றுக் கொண்டேன். ஏற்றுக்கொண்ட பிறகு, என்மீது தவறு இருந்தால், நிரூபிக்க அவருக்கு வாய்ப்பிருக்கிறது. அதை நான் நீதி விசாரணையின் மூலம் நிரூபிப்பதற்கு அவருக்கு வாய்ப்புக் கொடுத்திருக்கிறேன். அந்த வகையில் இப்போது நீதி விசாரணை வந்திருக்கிறது. அவர்களே கேட்டிருக்கிறார்கள் என்பதையும் நான் இங்கே குறிப்பிட ஆசைப்படுகிறேன். என்மீது உள்ள பிரச்சினையைப் பொறுத்தவரை, தனிப்பட்ட முறையில் குற்றம் சாட்டப்பட்டுள்ள பிரச்சினை. ஆகவே அதிகமாக இதற்குள்ளே நான் நுழைய விரும்பவில்லை. எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் சொல்லியிருப்பது உண்மையா இல்லை உண்மைக்கு மாறானதா, நான் நிரபராதியா இல்லையா என்பதை நிரூபிப்பதற்கும் வாய்ப்பு கிடைத்திருக்கிறது. தமிழ் உலகுக்கும், தமிழ் நாட்டுக்கும், இந்தியத் துணைக் கண்டத்துக்கும் இந்தச் செய்தி பரவியுள்ளதால், அவர்களுக்கும் இதுபற்றிய உண்மை நிலை தெரியட்டும் என்பதற்காக நீதி விசாரணைக்கு ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர்:** எதிர்க் கட்சித் தலைவர் அவர்களுக்கு ஒன்றைத் தெரிவிக்கிறேன். மாண்புமிகு அமைச்சர் திரு. வீரப்பன் அவர்கள் என்ன பேசியிருந்தாலும், தலைவரின் முடிவை ஏற்று, ஏற்கெனவே நாம் அவையில் கடைப்பிடித்து வரும் மரபைக் கடைப்பிடிக்க வேண்டும் என்பதுதான் மிகவும் முக்கியம். இதுவரை நாம் அனைவரும் கடைப் பிடித்துதான் வந்திருக்கிறோம். நீதிபதியை ஒப்புக்கொள்கிறார்களா இல்லையா என்பது உறுப்பினருடைய கட்சிக்கு உள்ளே உள்ள விஷயம். அவைத் தலைவர் என்ற முறையில் எனக்கு அதைப்பற்றிக் கவலையில்லை.

**திரு. ஆர். டி. சீத்தாபதி:** நீதி விசாரணையைத்தான் புறக்கணிக்கிறோம். நீதிபதியை அல்ல.



**மாண்புமிகு மேலவைத் தலைவர்:** சர்க்காரியா கமிஷனைப் பொறுத்த வரையிலும்கூட, இதுபோல் பிரச்சினை எழுப்பப்பட்டிருக்கிறது. இப்போது எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் வழக்கமான மரபைக் கடைப்பிடிக்க வேண்டும். அதற்கான காலம் வரும்போது பேசுவதற்கு வாய்ப்பிருக்கிறது.

**திரு. ஜேப்பியார்:** எதிர்க் கட்சித் தலைவர் என்று மாண்புமிகு தலைவர் அவர்கள் சொல்கிறார்கள். இந்த அவையில் எதிர்க் கட்சித் தலைவர் கிடையாது.

**மாண்புமிகு மேலவைத் தலைவர்:** சாதாரண மரபுப்படி அவர்கள் ஒரு குழுவின் தலைவராக இருக்கிறார். சம்பிரதாயத்திற்காக அப்படிச் சொல்கிறோம்.

* **திரு. ம. சங்கரலிங்கம்:** எதிர்க் கட்சித் தலைவர் என்கிற பதவிப் பெயர் மூலம்தான் பணி செய்ய வேண்டுமென்ற நிலை எங்களுக்கு இல்லை. சாதாரண உறுப்பினராக இருந்துகொண்டே மக்களுக்குத் தொண்டு செய்வதில் பெருமை படைத்தவர்கள் நாங்கள். உறுப்பினர் என்கிற முறையிலும் நாங்கள் மக்களுக்குப் பணி புரிகிறோம். முதலமைச்சர் அவர்களும் கலந்துகொண்ட அலுவல் ஆய்வுக் குழுவில், எங்கள் கட்சியினுடைய உறுப்பினர்களின் எண்ணிக்கை குறைந்தபோது, நீங்கள் என்னைப் பார்த்து, எதிர்க் கட்சித் தலைவர் என்று தாங்கள் அழைத்தபோது, நான் எதிர்க் கட்சித் தலைவர் அல்ல, திராவிட முன்னேற்றக் கழகக் குழுத் தலைவர் என்பதை நினைவூட்டினேன். ஆனால் முன்பு சட்டமன்றப் பேரவையில் திரு. பொன்னப்ப நாடார் அவர்கள் எதிர்க்கட்சித் தலைவராக இருந்தபோது, சட்டப்படி இருக்க வேண்டிய எண்ணிக்கை இல்லாமல் இருந்தாலும்கூட, அப்போதிருந்த அரசு பெருந்தன்மையோடு அவர்களைக் குறிப்பிடுகிறபோது, எதிர்க் கட்சித் தலைவர் என்று பெருமையோடு கூறி அவையினுடைய மரியாதையை உயர்த்தி, ஆளும் கட்சியின் பெருமையையும் உயர்த்தியது. எதிர்க் கட்சித் தலைவர் என்ற முறையில் இருந்தால்தான் அவைக்கு மதிப்பு என்று சொல்வதைப் பெருமையாகக் கருதி ஏற்றுக்கொள்பவன் அல்ல நான். பதவிப் பெயர் மூலம் பெருமை தேடிக் கொள்ளும் நிலையில் நான் இல்லை என்பதை, மாண்புமிகு தலைவர் அவர்களே, தங்கள் மூலமாக மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜேப்பியார் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். விசாரணைக் கமிஷன் என்று சொன்ன உடனேயே அதைப்பற்றிப் பேசக்கூடாது என்பதை தாங்கள் ஒரு மரபாக ஆக்கிவிடக் கூடாது. விசாரணைக் கமிஷன் என்றால், அது ஒரு 'பேக்ட் ஃபைன்டிங் கமிட்டி' தான். அது விசாரணை நடத்தி, முடிவை அறிவித்து, தண்டனையை வழங்குகிற அதிகாரம் படைத்த ஒன்றல்ல.

[1981 பிப்ரவரி 10

**மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் :** இதை மூன்று பிரிவாகப் பிரித்துக்கொள்ள வேண்டும். அமைச்சர்கள் மட்டத்தில், அதிகாரிகள் மட்டத்தில் இந்த அனுமதி வழங்குவதில் ஊழல் நடந்திருக்கிறதா என்பது ஒன்று. அது இங்கும் இருக்கிறது, அங்கும் இந்தப் பிரச்சினை இருக்கிறது. அதுபோக, அதிகாரிகள் இங்கிருந்து சென்றவர்கள் அங்கே தவறு செய்வதற்கு உடந்தையாக இருந்தார்களா, அங்கு இறக்குமதி செய்தவர்கள் தவறுகள் செய்வதற்கு உடந்தையாக இருந்தார்களா என்பது போன்றவைகளை ஆராய வேண்டும். விசாரணைக் குழு மூலம் இவைகள் எல்லாம் தெரிய வேண்டும் என்று விரும்பித்தான் விசாரணை வைத்திருக்கிறோம்.

**திரு. ம. சங்கரலிங்கம் :** அதனுடைய முடிவு எப்படி இருக்கும் என்பது பற்றி எதுவும் தெரிவிக்க விரும்பவில்லை. ஆனால், நாட்டு மக்கள் எதிர்பார்க்கின்ற, ஒரு பாரபட்சமற்ற நிலையை இந்த நீதி விசாரணை கொண்டுவராது என்பதை மட்டும் சொல்லிக்கொண்டு, இதைப்பற்றி உயர்மட்டக் குழுதான் விசாரணை செய்ய வேண்டும் என்ற கருத்தையும் நான் வற்புறுத்திக்கொண்டு இந்தக் கருத்தை இன்னும் இந்த அரசு புனர்பரிசீலனை செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொண்டு, இந்தப் பிரச்சினையிலே நான் முனைந்து பேசக் கூடாது என்று சொல்வதால், பேச்சை முடித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** நான் தவறாகச் சொன்னதுபோலவும், அதைக் கண்டித்து அமருவது போலவும் இருக்கிறது. இது ஒரு முக்கியமான பிரச்சினை. நான் இதைத் தெளிவுபடுத்துகிறேன்.

விதி 60-ஈ தெளிவாக இருக்கிறது—

"சட்டப்படி அமைக்கப்பட்ட விசாரணைக் குழு நீதி மன்றமாக அல்லது பகுதி நீதி மன்றமாக இயங்க சட்டப்படி அமைக்கப்பட்ட ஆணைக் குழு அல்லது ஆய்வதற்காகவோ, புலனாய்வதற்காகவோ அமைக்கப்பட்ட குழு இவற்றின் ஆய்வில் இருக்கும் ஒரு பொருள்பற்றி விவாதம் எழுப்பும் வகையில் அமையும் தீர்மானம் சாதாரணமாக அனுமதிக்கப்படலாகாது.

எனினும், அவற்றின் ஆய்வுக்கு எவ்வித இடையூறும் ஏற்படுத்தாது என்று தலைவர் கருதினால், அவை கடைப்பிடிக்கும் முறைபற்றியதாகவோ, எப்பொருளைப் பற்றி ஆராய அமைக்கப்பட்டன என்பதைப்பற்றியதாகவோ, விசாரணை எந்நிலையில் உள்ளது என்பதைப்பற்றியதாகவோ உள்ள பொருளை அவையில் எழுப்ப, தலைவர் தாம் கருதுகிறபடி அனுமதிக்கலாம்" இந்த விதியின்படி நான் அனுமதித்திருக்கிறேன். அதில் இப்படி தவறு நடந்தது, அப்படி ஆராய்ந்து விசாரணை நடத்த வேண்டும் என்று இப்படியெல்லாம் விஷயத்திற்குள்ளே போகக்கூடாது.



1981 பிப்ரவரி 10]

THIRU G. VASANTHA PAI : On a point of order, Sir. Can we not here ask that the person of the Commissioner should not be in the person named by the Government? Can we not say that he is not a competent person to hold that office? Can we not say that? I think we can.

**திரு. ம. சங்கரலிங்கம் :** தாங்கள் வாசித்த விதி 60-ஈ 'தீர்மானத்தை அனுமதிப்பது' பற்றியதுதான். ஒத்திவைப்புத் தீர்மானமாக நாங்கள் கொண்டு வருகின்றபோது, அதை அனுமதிப்பது பற்றியதுதான்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** தீர்மானம் எதுவாக இருந்தாலும், இது நீதிமன்றத்தைப் பற்றியதாக இருக்கிறது.

THIRU A. R. DAMODARAN : On a point of order, Sir. The hon. the Leader of the Opposition, Thiru Sankaralingam was not going into the facts of this "Spirit case" or in any way commenting on the possible findings of the Judicial Commission which is a quasi-judicial Commission. What he was saying is that he does not approve of the appointment of a particular individual as an Inquiry Commission and that he wants a separate type of Commission of Inquiry. I mention this because there are Revenue Divisional Officers who are also appointed as quasi-judicial bodies and we have attacked them in this House saying that we do not believe in an inquiry by a Revenue Divisional Officer and that we want a Judicial inquiry. I, therefore, plead that, before you give your decision on this, you may kindiy consider because it would be establishing the precedent for future discussions.

**மாண்புமிகு மேலவைத் தலைவர்:** நான் எப்போதுமே அதிலே அக்கறையாக இருக்கிறேன். இரண்டு சர்க்காரும் சேர்ந்து ஒரு விசாரணைக் கமிஷனை ஏன் நியமிக்கக் கூடாது, மத்திய அரசை ஏன் அணுகக் கூடாது என்றெல்லாம் சொன்னதை இந்த விதியின்படி நான் அனுமதிக்கிறேன். ஆனால், படிப்படியாக உள்ளே போகக்கூடாது என்பதுதான் சொன்னேன். இருந்தாலும், இதை வற்புறுத்தி ஒரு தீர்ப்பாக வேண்டும் என்று சொன்னால், நாளைக்கு நான் தருகிறேன்.

THIRU G. VASANTHA PAI : We are equally anxious that nothing should be said against our Government. But, if somebody says that he is not a fair Tribunal or that he is not competent to preside over such a Tribunal and, then, if anything comes in

favour of the Government, somebody will attribute some motive to the Government. I do not want that. Let the Government have an independent person against whom nothing can be said.

(பிற்பகல் 5-20)

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** மாண்புமிகு உறுப்பினர் திரும்பத் திரும்ப நியமிக்கப்பட்டிருப்பவரைப்பற்றியே குறிப்பிடுகிறார். இப்போது பிரச்சினை அதுவல்ல. நியமிக்கப்பட்ட பிறகு நம்முடைய கடமை என்ன என்பதுதான் நம் முன்னுள்ள பிரச்சினை.

**திரு. ஜி. சுவாமிநாதன் :** மாண்புமிகு தலைவர் அவர்கள் இதில் ஒரு முடிவான தீர்ப்பை வழங்குவதுதான் நல்லது என்று நான் கருதுகிறேன். பல ஆண்டுகளாக இப்படிப்பட்ட பிரச்சினைகள் தோன்றி அப்போதெல்லாம் இதற்கு ஒரு இறுதியான முடிவு எடுக்கப்படாமலிருக்கிற நிலை தொடர்ந்து இருந்து கொண்டிருக்கிறது. சில நாட்களுக்கு முன்பு உயர்நீதிமன்றத்தின் தலைமை நீதிபதி திரு. இஸ்மாயில் அவர்கள் தமிழகத்திலிருந்து மாற்றப்பட்டது குறித்து உச்ச நீதிமன்றத்தில் வழக்கு நடைபெற்றுக்கொண்டிருந்தது. அந்த நேரத்தில் அந்த மாறுதல் குறித்து இந்த அவையில் பேசப்பட்டது. நான் அப்போதே சொன்னேன். உச்ச நீதிமன்றத்தில் இதுபற்றிய வழக்கு இருக்கும்போது, மேலவையில் அதைப்பற்றிப் பேசுவது, மாண்புமிகு தலைவர் அவர்கள் இங்கே எடுத்துக் கூறிய சட்டமன்ற மேலவை விதிகளின்படி, சரியல்ல என்று வாதிட்டேன். ஆனால் இதே அவையில் அதுகுறித்துப் பேசுவதற்கு அனுமதிக்கப்பட்டது. இப்படி ஒரு நேரத்தில் பேசுவதற்கு அனுமதிப்பதும், வேறொரு சமயத்தில் பேசுவதற்கு அனுமதிக்காமல் இருப்பதும் இந்த அவை குறித்த ஒரு தவறான கருத்தை உருவாக்கிவிடும் என்பதால், இதுகுறித்து தலைவர் அவர்கள் ஒரு முடிவான தீர்ப்பை வழங்குவது நல்லதாக இருக்கும் என்று கூறிக்கொள்கிறேன்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** இதுகுறித்து என்னுடைய தீர்ப்பைப் பிறகு வழங்குகிறேன். திரு. சங்கரலிங்கம் தொடரலாம்.

**திரு. ம. சங்கரலிங்கம் :** இந்த விவாதத்தில் நான் எடுத்துச் சொல்ல விரும்புவதெல்லாம், இந்த அரசு நியமித்திருக்கிற கமிஷன்மீது எங்களுக்கு நம்பிக்கையில்லை. அரசால் நியமிக்கப்பட்டிருக்கிற இந்த ஓய்வுபெற்ற நீதிபதியைக் குறித்து நான் இங்கே விரிவாகச் சொல்வது முறையில்லை. என்றாலும், அவர் ஓய்வு பெற்ற காலத்தில் பத்திரிகைகளில் வந்த ரிப்போர்ட்களைப் பார்க்கிறபோது, இந்த நியமனம் சரியாக இருக்காது





என்பதைத்தான் சொல்ல விரும்புகிறேன். எனவே நமது மாநில அரசு மத்திய அரசோடு கலந்து இரண்டு மாநிலங்களிலும் இருக்கிற ரெக்கார்டுகளைப் பார்வையிட்டு ஆராய்ந்து முடிவு சொல்லக்கூடிய அதிகாரம் பெற்ற ஒரு உயர்மட்டக் குழுவை நியமிப்பது மூலமாகத்தான் உண்மையான விசாரணையை நாம் உறுதி செய்ய முடியும். என்னுடைய இந்தக் கோரிக்கையை அரசு ஏற்றுக்கொள்ள வில்லை என்பதால், இதற்கு மேல் இந்த அரசிடம் எதையும் சொல்லிப் பயனில்லை என்று கூறி, நான் என்னுடைய வார்த்தைகளை இத்தோடு முடித்துக்கொள்கிறேன்.

அதே நேரத்தில், ஒரு ஜுடிசியல் கமிஷன் நியமித்தவுடன் அது பற்றி இந்த அவையில் குறிப்பிட்டுப் பேசலாமா, கூடாதா என்பதைப்பற்றி சட்ட ரீதியான ஒரு தீர்ப்பை மாண்புமிகு தலைவர் அவர்கள் பின்னர் வழங்க வேண்டும் என்று கேட்டு அமர்கிறேன்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** மாண்புமிகு உறுப்பினர் திரு. சங்கரலிங்கம் அவர்கள் கேட்டுக்கொண்டதற்கு இணங்க இதுகுறித்து நான் என்னுடைய தீர்ப்பை பிறகு வழங்குகிறேன் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

*** திரு. க. இராமமூர்த்தி :** இது அவையின் மிக முக்கியமான உரிமை குறித்த பிரச்சினையாக இருப்பதால், இதுபற்றி மாண்புமிகு தலைவர் அவர்கள் தமது இறுதியான தீர்ப்பை வழங்குவதற்கு முன்னால் அவையில் உள்ள மற்ற அனைத்துக் கட்சியினரின் அபிப்பிராயத்தையும் இங்கே அவையிலேயோ அல்லது அவைத் தலைவரின் அறையிலேயோ தெரிவிக்க வாய்ப்பளித்து, அவர்களின் கருத்தையும் கேட்டு அறிந்து, அதற்குப் பிறகு தீர்ப்பளிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் :** மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, மேதகு ஆளுநர் அவர்களின் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின்மீது நடைபெற்ற விவாதத்தில் கலந்து கொண்ட அனைத்து மாண்புமிகு உறுப்பினர்களுக்கும் நான் முதலில் நன்றி கூறிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். இந்த விவாதத்தில் கலந்துகொண்ட அனைவரும் எங்களுடைய கட்சிக்கு எதிராக கெட்ட பெயர் வாங்கிக் கொடுக்க வேண்டுமென்ற எண்ணம் இல்லாமல், ஆட்சிப் பொறுப்பை ஏற்றிருக்கிற இந்த அரசு சீராகப் பணி புரிய வேண்டும் என்ற நல்ல நோக்கத்தோடு, தங்களின் உள்ளத்தைத் திறந்து எண்ணங்களை வெளிப்படுத்தியதற்காக அரசின் சார்பாக நான் அவர்களுக்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன்.

[திரு. ம. சங்கரலிங்கம்] [1981 பிப்ரவரி 10

இன்று நீங்கள் சொன்னதை ஏற்று நான் பிரச்சினைக்கு அப்பால் செல்கிறேன். இந்த அவையிலே இதையே தாங்கள் ஒரு முன்மாதிரியாக வைத்துக்கொண்டு, ஒரு தீர்ப்பாக ஆக்கிவிடக்கூடாது என்பதற்காக இதில் ஒரு ரூலிங் தாங்கள் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஒரு பிரச்சினையைப்

(பிற்பகல் 5-10)

பற்றி—இந்தச் சபையானாலும் சரி, அந்தச் சபையானாலும் சரி—ஒரு கமிஷன் அமைக்கப்பட்டவுடனே அதைப்பற்றிப் பேசக்கூடாது என்ற ஒரு மரபை ஏற்றுக்கொண்டிருப்பதாகச் சொல்லியிருக்கிறார்கள். இனிமேல் தெளிவாக ஒரு வரையறை இருக்க வேண்டும் என்பதற்காகத்தான் என்னுடைய கருத்தை எடுத்துச்சொல்லி, இதைப்பற்றிய சட்டத்தை ஆராய்ந்து தாங்கள் தீர்ப்பு வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, எரிசாராயப் பிரச்சினைபற்றி, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவித்திருக்கக்கூடிய விசாரணை நாங்கள் எதிர்பார்க்கின்ற அளவுக்கு நீதி விசாரணையாக இல்லாததால், அது நீதியைக் கொண்டு வராது என்ற கருத்தை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர்:** மேலவை நடவடிக்கை விதி புத்தகத்தில் 60-ஈ விதி—

"சட்டப்படி அமைக்கப்பட்ட விசாரணைக் குழு நீதிமன்றமாக அல்லது பகுதி நீதிமன்றமாக இயங்கச் சட்டப்படி அமைக்கப்பட்ட ஆணைக் குழு அல்லது ஆய்வதற்காகவோ, புலனாய்வதற்காகவோ அமைக்கப்பட்ட குழு இவற்றின் ஆய்வில் இருக்கும் ஒரு பொருள்பற்றி விவாதம் எழுப்பும் வகையில் அமையும் தீர்மானம் சாதாரணமாக அனுமதிக்கப்படலாகாது" என்று இருக்கிறது.

**திரு. ம. சங்கரலிங்கம்:** அடுத்த வரியைப் படியுங்கள்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர்:** "எனினும், அவற்றின் ஆய்வுக்கு எவ்வித இடையூறும் ஏற்படுத்தாது என்று தலைவர் கருதினால், அவை கடைப்பிடிக்கும் முறை பற்றியதாகவோ, எப்பொருளைப்பற்றி ஆராய அமைக்கப்பட்டன என்பதைப் பற்றியதாகவோ, விசாரணை எந்நிலையில் உள்ளது என்பதைப்பற்றியதாகவோ உள்ள பொருளை அவையில் எழுப்ப, தாம் கருதுகிறபடி,



1981 பிப்ரவரி 10]

[மாண்புமிகு மேலவைத் தலைவர்]

அனுமதிக்கலாம்". விசாரணை நல்லபடி நடக்க வேண்டும் என்று சொன்னது தவறில்லை. அதை அப்படியே விட்டுவிடலாம். மேலே போகலாம்.

**திரு. ம. சங்கரலிங்கம்:** அந்த விசாரணைக் கமிஷனுக்கு எந்தவிதமான குந்தகமும் வராமல், சம்பவங்களுக்குள்ளே அதிகமாகப் போகாமல், இன்னார் இன்னார் என்று சொல்லி திசைதிருப்பாத அளவுக்கு தலைவர் அவர்கள் அனுமதிக்கலாம் என்றிருக்கிறது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் விசாரணைக்கு ஏற்பாடு செய்திருந்தாலும், விசாரணைக்கு உத்தரவிட்டிருந்தாலும், சட்ட சபையிலே எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் இந்த விசாரணைக்கு மறுப்பு தெரிவித்திருப்பதால், இப்போது போடப்பட்டுள்ள இந்த விசாரணைக்குப் பதிலாக இரண்டு மாநிலங்களும் இணைந்து மத்திய அரசோடு கலந்து பேசி ஒரு உயர்மட்ட விசாரணைக் குழுவை அமைக்க மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் முன்வருவார்களா?

**மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன்:** மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, கேரளத்திலே என்ன பிரச்சினை இருக்கிறது என்பதுபற்றி இங்கே நான் தெளிவாகச் சொல்ல முடியாது. அங்கே விசாரணை நடந்து கொண்டிருக்கிறது. அதுகுறித்து அங்கே அதிகாரிகள் விசாரித்துக்கொண்டிருக்கிறார்கள். அது தனியாக நடக்கிறது. இங்கு இருப்பது தமிழின அரசு. தங்களுடைய பணியைச் செவ்வனே செய்யாமல் இந்த அனுமதி வழங்குவதில் எங்கே ஒழுங்கீனம் இருக்கிறது என்று பார்ப்பதற்கு அமைக்கப்பட்ட நீதி விசாரணைக் குழு இங்கே இருக்கிறது. தமிழகத்தைப் பொறுத்த வரையில், நாங்கள் நீதி விசாரணைக்கு ஏற்பாடு செய்திருக்கிறோமே தவிர, கேரள மாநிலத்தைக் கலந்துகொண்டு நீதி விசாரணைக்கு ஏற்பாடு செய்ய வேண்டிய அவசியம் இல்லை. அதேபோல, அங்கே இருப்பவர்கள் அதுபற்றி விசாரிக்க அவர்கள் விசாரணைக் குழு அமைக்க வேண்டும் என்று விரும்பினால், அவர்கள் அவர்களுடைய மாநிலத்திற்குள்ளே விசாரணைக் குழு அமைத்துக்கொள்வதில் நாம் குறுக்கிடவும் முடியாது. அதைப்பற்றிக் கவலைப்படவும் முடியாது. அதிகாரிகள் மட்டத்தில் யார் தவறு செய்திருக்கிறார்கள் என்பதைப்பற்றி விசாரித்து அறிவிக்கப்படும்.

**திரு. ம. சங்கரலிங்கம்:** கேரளத்திலே நடப்பது அதிகாரிகள் மட்டத்திலே உள்ள விசாரணை. தமிழகத்திலேயும் அப்படி அதிகாரிகள் மட்டத்திலே உள்ள விசாரணைதான் நடப்பதாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொன்னார்கள். இங்கிருந்து கொண்டு செல்லப்பட்டு, அங்கு கொண்டு சேர்க்கப்பட்டிருக்கிறது. அப்படி இருக்கும்போது இரண்டு மாநில அதிகாரிகளையும்.....

[திரு. எம். ஜி. இராமச்சந்திரன்] [1981 பிப்ரவரி 10

மாண்புமிகு உறுப்பினர் திரு. சங்கரலிங்கம் அவர்கள் மிகவும் அனுபவம் மட்டுமல்லாமல் திறமையும் வாய்ந்தவர் என்பது அவருடைய இன்றைய பேச்சின்மூலம் தெளிவுபடுத்தப்பட்டிருக்கிறது. இதைச் சொல்வது அவருக்கு ஏதோ நற்சான்றிதழ் கொடுப்பதற்காக அல்ல. அவருடைய திறமையைப் பாராட்டுவதற்காகச் சொல்கிறேன். மிகவும் அடக்கத்தோடு, கட்டுப்பாட்டோடு, அன்பு உணர்வோடு பேசினார். அதனால்தான் எங்களைப் பாராட்டும்போதே காலை வாரி விடுவதைப்போல் தாக்குதலையும் சேர்த்து இணைத்து மிக அழகாக இங்கே பேசியதை நாம் பாராட்டாமல் இருக்க முடியாது.

(பிற்பகல் 5-30)

குற்றத்தைச் சொல்லி, இப்படி இருக்கக் கூடாது என்பதற்காகத்தான் சொல்லுகிறோம் என்று சொல்லி, நாங்கள் செய்த தவற்றை நீங்கள் செய்யக் கூடாது என்பதற்காகத்தான் சொல்லுகிறோம் என்று சொல்லி, ஏன், எப்படிச் செய்தார்கள் என்று கேட்பது நியாயம் அல்ல என்று சொல்லி பிரச்சினையை உருவாக்கும்போது நான் ஒன்றைச் சொல்லக் கடமைப் பட்டவனாக இருக்கிறேன். பேரறிஞர் அண்ணா அவர்கள் பதவியில் இருந்தபோது உலகத் தமிழ் ஆராய்ச்சிக் குழுவை எப்படி நடத்தினார்களோ அதைப் பின்பற்றித்தான் நாங்கள் நடந்தோம் என்றால், அதைத் தவறு என்று சொல்ல மாட்டார்கள் என்ற நம்பிக்கை நிச்சயமாக எனக்கு இருக்கிறது. அந்த நம்பிக்கையைக் காப்பாற்றக் கூடிய அளவிற்கு இருப்பார்கள் என்பதில் ஐயமில்லை. தவறுகள் எங்கே இருந்தாலும் தவறாகத்தான் இருக்க வேண்டு மென்று அர்த்தமில்லை. ஆராய்ச்சிக் கருத்தரங்குகளில் யார் யார் பேச வேண்டும் என்பதை நிச்சயித்தது அந்தக் குழுதான், தமிழக அரசு அல்ல. தமிழக அதிகாரிகள் அல்ல, தமிழக அமைச்சர்கள் அல்ல என்பதைப் பணி வோடு தெரிவித்துக்கொள்ளுகிறேன். அந்த உரிமை அவர்களுக்கு அளிக்கப் பட்டிருந்தது. ஆராய்ச்சிக் கருத்தரங்கைப் பொறுத்தமட்டில், நிர்வகிக்கின்ற அத்தனை உரிமைகளும், முன்னாள் நீதிபதி திரு. மகராஜன், திரு. சுப்பையா பிள்ளை போன்றவர்களைக் கொண்ட ஒரு குழுவிடத்திலே ஒப்படைக்கப் பட்டது. அவர்கள்தான் அதை நிறைவேற்றினார்கள். வரவேற்பு இதழ் அச்சிட்டதிலே பிரச்சினைகள் வந்தன. ஆங்கிலத்திலே அச்சடிக்கப்பட்டது என்ற பிரச்சினையை அனைத்துக் கட்சியினரும் எழுப்பினார்கள். இதை அச்சிட்டது தமிழக அரசல்ல. மொழி தெரியாதவர்கள், வெளி நாட்டவர்கள் ஆகியவர்களுக்குத் தர வேண்டுமென்பதற்காகச் செய்தோம் என்று சொன் னார்கள். நாங்கள் இனிமேல் திரும்ப வாய்ப்பு ஏற்படுகிறபோது தமிழிலே அச்சடிக்கப்படும் என்று உத்திரவாதம் கொடுத்தோம். பல்வேறு அறிஞர்



1981 பிப்ரவரி 10] [திரு. எம். ஜி. இராமச்சந்திரன்]

பெருமக்கள், ஆசிரியர்கள் போன்றவர்களுக்கு எல்லாம் யோசனைகள், கருத் துக்கள் இருக்கக் கூடும். அதை நாங்கள் வரவேற்க வேண்டும், சிந்திக்க வேண்டும். அதைப்பற்றி நாங்கள் எங்கள் எண்ணங்களை எழுப்பியாக வேண்டும். ஆனால் எங்கள் மீது குற்றம் சாட்டப்பட்டது என்பதைப்பற்றி எடுத்துக்கூறும்போது, எங்களைப்பற்றிப் பாராட்டிச் சொன்னதையெல்லாம் ஒரு கல்லூரியின் முதல்வராக இருப்பவர் இப்படி அலட்சியப்படுத்தி எங்களைப் பழிவாங்கக் கூடாது. என்னைக் குற்றம் செய்த பாவனாக நினைத்துவிடக் கூடாது. நடுநிலையோடு முதல்வர் பொறுப்பில் இருக்கிறவர், தமிழை நன் றாகத் தெரிந்து பக்குவமாக, பண்போடு உள்ள நல்ல மனிதர் என்று பெயர் பெற்றிருக்கிறவர், விரிவான உள்ளத்தை உள்ளத்திலே வைத்துக்கொண்டிருப் பவர் அதை வெளிப்படையாகக் காட்டத் தயங்காமல் இருக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மேற்கு வங்கத்திலிருந்து வந்திருக்கிறார் ஒரு பேராசிரியர். அவர் பத்திரிகைக்கு ஓர் அறிக்கை வெளியிட்டிருக்கிறார். அதிலே அவர், "எத்தனையோ மாநாட்டுக்கு நான் போயிருக்கிறேன். இப்படிப்பட்ட மாநாடு நடைபெற்றதை நான் என் வாழ்க்கையில் கண்டதில்லை." என்று சொல்லியிருக்கிறார். இதைச் சொல்லும்போது, மேலும் அந்த மாநாட்டில் என்னென்ன நடந்தது, பேசப்பட்டது என்பதையெல்லாம் சொல்லியிருக் கிறார். "பாமர மக்கள் என்று அழைக்கப்படுகிற எழுதப் படிக்கத் தெரியாத மக்கள், தமிழை மட்டும் பேசத் தெரிந்த மக்கள், நடுத்தர மக்கள். வசதி வாய்ந்த மக்கள், படித்த பேரறிஞர்கள், பட்டப் படிப்பு படித்தவர்கள், ஒவ் வொரு இலாக்காவிலும், அலுவலகத்திலும் பணியாற்றுகின்ற விவரம் தெரிந்த வர்கள் ஆகியவர்கள் எல்லாம் ஒட்டுமொத்தமாக இணைந்து மாநாடு நடத்தப் பட்டது" என்று அந்தப் பேராசிரியர் சொல்லியிருக்கிறார். இவரும் ஒரு பேரறிஞர், அவரும் ஒரு பேரறிஞர். இவற்றை எடை போட்டு யார் நல்லவர். யார் கெட்டவர் என்று பார்ப்பதை விட இப்படிப்பட்ட கருத்தும் இருக்கிறது, அப்படிப்பட்ட கருத்தும் இருக்கிறது என்ற இந்த இரண்டையும் எண்ணிப் பார்த்து, எதிர்காலத்தில் பிரச்சினைகளைக் குறைத்துக்கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டுமென்ற வகையில் சொன்னதாக நான் ஏற்றுக்கொண்டு, இதை யெல்லாம் மனதிலே வைத்து திரும்பவும் எங்கள் மீது நல்லெண்ணம் வைத்துக் கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். தாங்களாகவே முன் வந்து உலகத் தமிழ் மாநாட்டில் பங்கேற்றுப் பணியாற்றியவர்களுக்கு நன்றி கூறி இனி எதிர்க் கட்சித் தலைவர் அவர்களும் பங்குகொள்வார்கள் என்று நம்புகிறேன். இதிலே எனக்குச் சந்தேகமில்லை. உலகத் தமிழ் மாநாடு என்பது எம். ஜி. ஆருக்காக நடத்தப்பட்ட நிகழ்ச்சியல்ல. எம்.ஜி.ஆர்.

தமிழகத்தில் மட்டுமல்ல, வேறு எந்த மாநிலமானாலும், ஆளுநர் உரையில் அனைத்துப் பிரச்சினைகளைப்பற்றியும், இந்த அரசு என்னென்ன காரியங்களையெல்லாம் செய்திருக்கிறது என்பதைப்பற்றியும் இனி இந்த அரசு என்னென்ன செய்யப் போகிறது என்பதைப்பற்றியும் முழுமையாக எடுத்துரைக்கும் மரபு இருந்தாலும், நடைமுறையில் அதைச் செயல்படுத்த முடியவில்லை என்பதை இம்மாமன்றம் ஏற்றுக் கொள்ளும் என்று நம்புகிறேன்.

மேதகு ஆளுநர் அவர்கள் இந்த உரையைப் படிக்கும்போது, சில சமயங்களில் “அடேயப்பா எவ்வளவு பக்கம்! இன்னும் முடியவில்லையா! பாவம் ஆளுநர் எவ்வளவு நேரம்தான் நிற்பார்” என்று பேசுவதைக் கேட்டிருக்கிறோம். காரணம், இதெல்லாம் நமக்குத் தெரிந்தவைகள்தாமே, அப்படி இருக்கும்போது எதற்காகத் திரும்பத் திரும்பச் சொல்ல வேண்டும், ஏதோ ஒரு வகையில் கோடிட்டுக் காட்டினால் போதாதா” என்ற எண்ணமே தவிர இதிலெல்லாம் நமக்கு அக்கறையில்லை என்றோ, அலட்சியமாக இருக்கிறோம் என்றோ நான் சொல்லத் தயாராக இல்லை. அந்த வகையில் கோடிட்டுக் காட்டுவது என்ற முறையைப் பின்பற்றி இந்த அரசின் கருத்துக்களை, செயல்முறைகளை, இந்த அரசு செய்த காரியங்களை, இனி என்ன செய்வதாகக் கருதிக் கொண்டிருக்கிறது என்பவைகளையெல்லாம் எடுத்துச் சொல்லுவதற்கான ஒரு வாய்ப்பாக இந்த ஆளுநர் உரை இங்கே வழங்கப்பட்டிருக்கிறது. இங்கே அமர்ந்திருக்கும் மாண்புமிகு உறுப்பினர் திரு. சங்கரலிங்கம் அவர்களும், ஏனைய அனைத்துக் கட்சித் தலைவர்களும், இன்னும் சமுதாயத்தின் பல பிரிவுகளிலிருந்து இங்கே வந்திருக்கும் மாமன்ற உறுப்பினர்களும் இந்த விவாதத்தில் கலந்து கொண்டு தங்களின் கருத்துக்களை எடுத்து வைத்ததன் மூலமாக இந்த அரசுக்கு மிகப் பெரிய உதவி செய்திருக்கிறார்கள் என்பதைச் சொல்லி அவர்களையெல்லாம் உளமாரப் பாராட்டுவதோடு, அவர்களுக்கு நன்றி கூறிக் கொள்ளவும் கடமைப்பட்டிருக்கிறேன்.

ஒரு கருத்தைச் சொல்லும்போது, அது உண்மைதானா அல்லவா என்று தீர்மானிக்கப்பட வேண்டியது வேறு விஷயம். ஆனால், தங்களுக்குக் கிடைத்த தகவல்களின் அடிப்படையில் இந்த மாமன்ற உறுப்பினர்கள் அவர்களின் எண்ணத்தை வெளியிடுவதை நாம் தடுக்கக்கூடாது. அப்படி அவர்கள் தங்களின் எண்ணத்தை வெளியிடச் சுதந்திரம் இருக்க வேண்டும் என்ற ஜனநாயக மரபையொட்டி இந்த மாமன்றத்தில் அவர்களுக்கு வாய்ப்பு தரப்பட்டிருப்பதை எண்ணி, நாம் பெருமைப்படுவதற்கு நியாயம் உண்டு. அப்படிப்பட்ட நிலையில்தான் இங்கே பேசிய சில மாண்புமிகு உறுப்பினர்கள் ஆட்சியில் உள்ளவர்கள் மிக மோசமான பணியில் இறங்குகிறவர்கள் என்றும்,





எதையும் அறியாமல் பதவிக்கு வந்துவிட்டவர்கள் என்று விளக்குவது போன்றும் அல்லது யாரையோ பழி வாங்குவதற்கே சில சட்டங்களையும், தீர்மானங்களையும், எண்ணங்களையும் கொண்டு அவற்றை அமுல்படுத்த விரும்புகிறார்கள் என்பதைப் போன்றும், பேசியிருந்தாலும் அவற்றையெல்லாம் இந்த அரசை நடத்திச் செல்வதற்கான அறிவுக்கு எருவாக ஏற்றுக் கொள்கிறேன் என்று சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

நாம் ஒவ்வொருவரும் ஒவ்வொரு கோணத்திலிருந்து பார்க்கிறோம். எந்தப் பிரச்சினையாக இருந்தாலும், இந்த நிலைமை இருக்கிறது. உதாரணமாக ஐந்தாவது உலகத் தமிழ் மாநாட்டைப்பற்றி எத்தனையோ பேர் எத்தனையோ விதமான கருத்துக்களைச் சொல்லியிருக்கிறார்கள். ஆனால் இங்கே ஒரே ஒரு கட்சியைத் தவிர மற்ற அனைத்துக் கட்சிகளும் பெரும்பாலும் பாராட்டியிருக்கிறார்களே தவிர, முழுமையாக அதைப்பற்றிக் குறை சொல்லவில்லை. குறிப்பாகச் சொல்ல வேண்டுமென்றால், திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்த ஒரு சில உறுப்பினர்கள் மட்டுமே அப்படிக் குறை சொன்னார்கள். அவர்கள் பார்த்த கோணத்திலிருந்து அவர்கள் குறைகளைக் கண்டு இங்கே குறை கூறியிருக்கிறார்கள். நான் அதைத் தவறு என்று சொல்லவில்லை.

இங்கே அவையில் ஒரு பத்திரிகைச் செய்தியைக்கூட படித்துக் காட்டினார்கள். ஜப்பானிலிருந்து உலகத் தமிழ் மாநாட்டிற்கு வருகை தந்திருந்த அறிஞர் ஒருவர் குறைகூறி அந்த மாநாட்டை அரசியல் விழாவாக முடித்துவிட்டனர் என்று குறிப்பிட்டிருக்கிறார் என்றுகூட எடுத்துச் சொன்னார்கள். ஆனால் பாரதப் பிரதமர் முன்பு, பல்வேறு நாடுகளிலிருந்து வந்திருந்த தமிழைத் தாய்மொழியாகக் கொள்ளாத, தமிழைப்பற்றி மட்டும் ஆராய்ச்சி செய்த அறிஞர் பெருமக்கள் எவ்வளவு பாராட்டிப் பேசினார்கள் என்பதை நான் இங்கே எடுத்துச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். ஜப்பானிலிருந்து வந்த வேறு பலரும் மற்றும் ஏனைய நாடுகளிலிருந்து வந்த தமிழ் அறிஞர்களும் அந்த மாநாட்டைப் பாராட்டியிருக்கிறார்கள். இங்கே மாண்புமிகு உறுப்பினர் திரு. சங்கரலிங்கம் அவர்கள் குறிப்பிடாத ஒன்றை அவர் சார்பில் சொல்ல விரும்புகிறேன். அந்த மாநாட்டிற்கு மலேசியா நாட்டிலிருந்து வந்திருந்த ஒருவர் இங்கே மிகவும் பாராட்டிவிட்டு மலேசியா சென்ற பிறகு அங்கேயுள்ள ஒரு பத்திரிகையில் அறிக்கைவிட்டு உலகத் தமிழ் மாநாட்டைப் பாராட்டி முதலில் பேசியதற்காக வெட்கப்பட்டதைப் போல் கூறியிருக்கிறார். அதை என் கவனத்திற்குக் கொண்டுவந்தபோது நான் அதைப் படித்துப் பார்த்தேன்.

அமைச்சரவைக்குப் புகழ் வர வேண்டும் என்பதற்காக நடத்தப்பட்ட நிகழ்ச்சி யல்ல. நாங்கள் அமைச்சரவையிலிருந்து டிஸ்மிஸ் செய்யப்படுவதற்குச் சில பல மாதங்களுக்கு முன்பாகவே, உலகத் தமிழ் மாநாடு நடத்தப்பட வேண்டுமென்று அறிவிக்கப்பட்டு, பலமுறை தள்ளிப் போடப்பட்டு இடையிலே தேதி குறிப்பிட்டவுடனே வெளியேற்றப்பட்டோம். அதற்குப் பிறகு மக்கள் எங்களைத் திருப்பியனுப்பி இதை நிறைவேற்றும் வாய்ப்பை எங்களுக்குத் தந்திருக்கிறார்கள் என்ற வகையில் தொடர்ந்து செய்திருக்கிறோம்.

மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் பேசும்போது, "மதுரையிலே மாநாடு நடந்திருக்கிறது. 12 கோடி ரூபாய்க்கு மேலே செலவு செய்திருக்கிறார்கள். அங்கேயிருக்கின்ற மக்கள் பார்க்கத்தான் போகிறார்கள். இனி எதையும் அங்கே செய்ய வேண்டியதில்லை. இனி எதையும் கொடுக்கப் போவதில்லை. இனி எதுவும் செய்யாமல் இருந்தால் நாங்கள் விடமாட்டோம். அதை மக்கள் மத்தியில் சொல்லுவோம்" என்று பிரச்சினைகளை உருவாக்கி சிக்கலில் மாட்டி வைப்போம் என்று சொல்லுவது போல, மிகத் திறமையாகப் பேசினார். மதுரை மாநகருக்கு இனிமேல் எந்தவிதமான நன்மையும் செய்ய வேண்டியதில்லை என்று முடிவு கட்டிவிட்டதாகவும், 10 ஆண்டுகளுக்கு ஒன்றும் செய்யப்போவதில்லை என்பதைப் போலச் சொல்லி, நாங்கள் உங்களை விடமாட்டோம் என்று சொல்லுவதைப் போல மிகச் சாமர்த்தியத்தோடு பேசினார்கள். அப்படி அவர் பேசித்தான் ஆகவேண்டும். அப்போது தான் நான் சில உண்மைகளை இங்கே சொல்ல முடியும். ஆகவே அவர் அப்படிச் சொல்லுவதை நான் வரவேற்கிறேன். சாலை போடுவது, பல்கலைக் கழகத்திற்கு வசதி செய்து கொடுப்பது, கழிப்பிடங்கள் கட்டுவது, விளக்குப் போடுவது இவை போன்றவைகள் எல்லாம் மக்களுக்குத் தேவையானவை என்பதை யாரும் மறுக்கமாட்டார்கள் என்று நம்புகிறேன். ஒரு மாநகரத்திற்கு 12 கோடி ரூபாய், 10 கோடி ரூபாய், 9 கோடி ரூபாய் செலவழித்திருந்தால், அதிலே அந்த மாநகரத்தின் தேவை முழுவதும் முடிந்துவிட்டது என்று யாரும் சொல்லிவிட மாட்டார்கள். மதுரை மாநகராட்சித் தேர்தல் வந்த போது, மாநகராட்சியை நாங்கள் பிடித்தால், குடிநீர்ப் பிரச்சினையைப் போக்குவோம் என்று சொன்னபோது கேலி செய்தார்கள். பிறகு குடிநீர்ப் பிரச்சினை தீரவில்லையே என்று கேட்டார்கள். இன்று தொட்டிகளைக் கட்டி செய்திருக்கிறோம் என்று பார்க்கும்போது, இவ்வளவு விரைவில் துணிந்து இந்த வாய்ப்பை பயன்படுத்திச் செய்திருக்கிறோம் என்பதைப் பாராட்டாமல் குறை கூறி இருக்கிறார்களே! சட்டமன்றத்திலே சிலர் சொன்னதைப் போல பணத்தைச் செலவழித்ததிலே குறை இருக்கிறது, செலவழித்த பணம் சரியாகச் செலவிடப்படவில்லை என்று கூறியிருந்தால், என்னால்





புரிந்துகொள்ள முடியும். தவறுகள் அதிகாரிகளிடத்தில் இருந்தாலும், அல்லது யாரிடம் இருந்தாலும், அவற்றை நிச்சயமாக வெளிக் கொணர வேண்டுமென்று கூறியிருந்தால், நான் உடனடியாக நன்றியைச் சொல்லியிருப்பேன்.

(பிற்பகல் 5-40)

இது அப்படி அல்ல. ஆகவே இதுபோன்ற பிரச்சினைகளை விமர்சனம் செய்து, எவ்வளவுதான் எதிர்க் கட்சியிலே இருந்தாலும், அல்லது வேறுபட்ட கருத்துகொண்ட கட்சியிலே இருந்தாலும், அதைப் பொது நோக்கோடு பார்க்க வேண்டும். எதிர்க்கட்சித் தலைவர் கலைஞர் கருணாநிதி அவர்கள் சொன்னதைப்போல இருக்க வேண்டும். வள்ளுவர் கோட்டத்தைப்பற்றிச் சொல்லும்போது, அந்தக் கட்டடத்தைக் கட்டுவதன் நோக்கத்தைத்தான் பார்க்க வேண்டும். அதற்கு 50 லட்சம் ரூபாய் என்று சொல்லி, ஒரு கோடி ரூபாய்க்கு மேல் செலவாகிவிட்டது என்று கணக்குப் பார்க்கக்கூடாது என்று சொன்னதை நாம் ஞாபகத்தில் வைத்துக்கொள்ள வேண்டும். தவறுகள் நடந்திருந்தால், அந்தத் தவறுகளை வேண்டுமென்றே செய்திருந்தால், அவைகளைக் கண்டிக்கும் உரிமை நம் அனைவருக்குமே இருக்கிறது என்பதை நான் இங்கே குறிக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து, மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் எடுத்துக் கொண்டது விவசாயம். விவசாயத்தைப்பற்றி பொதுவாக நான் ஒன்றும் சொல்வதற்கில்லை. இருந்தாலும் ஒன்று சொல்ல விரும்புகிறேன். ஏதோ நாயுடு விவசாயச் சங்கத்தைச் சேர்ந்தவர்களிடமும், மற்றும் அந்தச் சங்கத்தின் தலைவர்களிடமும், நான் ஏதோ மிக நெருங்கிய நட்பு கொண்டு இருந்தது போலவும், அந்த நெருங்கிய நட்பு காரணமாக ஏதோ ஒப்பந்தம் செய்து கொண்டது போலவும், அந்த ஒப்பந்தம் செய்து கொண்டதன் காரணமாக அவர்கள் எங்களை ஆதரித்தது போலவும், அந்த ஆதரவின் விளைவாக நாங்கள் ஆட்சிக்கு வந்தது போலவும், அப்படி ஆட்சிக்கு வந்த பிறகு இப்போது அவர்களை நாங்கள் கை விட்டது போலவும், அவர்களுக்கு நாங்கள் சொன்ன வாக்குறுதியை மீறி விட்டது போலவும் பல பேர்கள் அவரவர்கள் வார்த்தைகளிலே சொல்லியிருக்கிறார்கள். மாண்புமிகு அங்கத்தினர் திரு. இராமமூர்த்தி அவர்கள்கூட ஏதாவது சொல்லியிருக்கலாம். நான் அது குறித்து ஒன்றைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். நான் நாயுடு அவர்களைப் பார்க்காமல் இருந்ததில்லை. ஏறத்தாழ 4 முறைகள் சந்தித்திருக்கிறேன். பிரச்சினைகள் அதிகமாக இருந்த நேரத்தில், ஆட்சி கலைக்கப்பட்ட நேரத்திற்கு முன்பே தொடர்பு கொண்டிருந்தேன் என்பதையும்

நேரடியாகப் பேசியிருக்கிறேன் என்பதையும் சொல்லிக் கொள்கிறேன். பல பிரச்சினைகளைத் தீர்ப்பதற்காகப் பேச வேண்டுமென்று வரச் சொல்லியிருந்தேன். ஆட்சிக்கு வந்த பிறகும் அவரை நான் பார்க்க வேண்டும் என்று சொல்லியிருந்தேன். அதற்கு அவர் வர முடியாது என்று அறிவித்தார்கள். நான் அவர் வீட்டிற்கு வந்து பார்க்கிறேன் என்றபோது பார்க்க முடியாது என்று சொன்னார்கள். இந்தப் பிரச்சினையைப் பற்றி கவனிக்கவில்லை என்று யாரும் கருதிக்கொள்ளக்கூடாது என்பதற்காகத் தெரிவித்துக் கொள்கிறேன். தேர்தலிலே அவர்கள் எங்களை ஆதரித்ததாகச் சொல்கின்றார்கள். இருக்கட்டும். 1980 ஆம் ஆண்டு நாடாளுமன்றத் தேர்தல் வந்தபோது, இதே நாயுடு அவர்கள் தலைமையிலேயுள்ள சங்கம் பகிரங்கமாக அறிவித்தது. எந்தக் கட்சியை ஆதரிப்பது, எந்தக் கட்சியை எதிர்ப்பது என்று தீர்மானம் போட்டது? இந்தச் சட்டமன்றத் தேர்தலில் அவர்கள் எங்களுக்கு உதவி செய்ததாகச் சொல்கிறார்கள். ஆனால், அவர்கள் போட்ட தீர்மானம் என்ன? நடுநிலைமை. அவரவர்கள் யார் யாருக்கு வோட்டளிக்க வேண்டுமென்று விரும்புகிறார்களோ அவர்களுக்கு அளிக்கலாம் என்பதுதான் அவர்கள் செய்த உதவி. அதனுடைய பொருள் என்ன? அவர்களுடைய கருத்து எதுவாக இருந்தாலும், அதன்படி செய்ய வேண்டும். அவரவர்கள் விரும்புகின்ற கட்சிகளுக்கு வாக்குகள் அளிக்க வேண்டும் என்ற சூழ்நிலையை அந்தச் சங்கத்திலே ஏற்படுத்தியிருந்தார்கள். அப்படியிருந்தும் எங்களுக்கு வாக்களித்திருந்தார்கள். அந்தக் கட்டுப்பாட்டிலே அவர்கள் எதிராகத்தான் இருந்திருக்கிறார்கள் என்பதை ஒத்துக்கொள்ள வேண்டும். பாராளுமன்றத் தேர்தலிலே எங்களுக்கு வாக்களிக்கலாம் என்று சொல்லியிருக்கலாம் அல்லது வேண்டாம் என்று சொல்லியிருக்கலாம். இரண்டும் இல்லை. நடுநிலை என்று சொல்லிவிட்டார்கள். நடுநிலைமை வகிப்பது என்பது மிக ஆபத்தானது. இந்தப் பக்கம் என்றோ அந்தப் பக்கம் என்றோ சொல்லவில்லை அந்த நிலைமையைத்தான் அவர்கள் கையாண்டார்கள். மாண்புமிகு அமைச்சர் திரு. குழந்தைவேலு அவர்கள் நின்ற இடத்திலே, நாயுடு அவர்கள் இருந்துகொண்டு சொன்னார்கள். 'திரு. குழந்தைவேலு அவர்கள் தோல்வியடைய வேண்டும்' என்று சொல்லியிருக்கிறார்கள். அவர்கள் அங்கு தோற்கடிக்கப்பட வேண்டும் என்று சொல்லியிருக்கிறார்கள். இப்படிப்பட்ட நிலைமைகளைத் தான் அவர்கள் வைத்திருந்தார்கள். மக்கள் என்ன கருதுகிறார்கள்? யாரோ ஒரு தலைவரை நம்பித்தான் இருப்பதாக ஒரு முடிவுக்கு வரக்கூடாது. மக்கள் எதுவும் தெரியாதவர்கள் அல்ல என்பதை இந்த நேரத்திலே யாரும் பார்க்கலாம். யாரை ஆட்சியிலே உட்கார வைக்கலாம் என்று தெரிந்துதான் அவர்கள் செயல்படுகிறார்கள். தமிழக மக்கள் நன்கு செயல்



படுகிறார்கள் என்பதை இங்கே சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். அந்த வகையிலே விவசாயிகள் பிரச்சினைகளைப்பற்றி எடுத்துக்கொண்டால், தேர்தல் நேரத்திலே 74 கோடி ரூபாய் கடன்களை நாங்கள் தீர்ப்பதாகச் சொன்னதாகவும், அப்படிச் சொல்லிவிட்டு அவர்களை ஏமாற்றிவிட்டார்கள் என்றும் சொன்னார்கள். நான் சட்டமன்றத்திலேகூடச் சொன்னேன். 73 கோடி ரூபாய் அளவுக்கு நாங்கள் ரத்து செய்து கொடுத்திருக்கிறோம். விவசாயிகள் கடன்களை ரத்து செய்திருக்கிறோம். எங்கே ரத்து செய்வதற்கு பணம் இருக்கிறது என்றெல்லாம் கேட்டிருக்கிறார்கள். 40 கோடி ரூபாய் ரத்து செய்வோம் என்று அரசு சொல்கிறதே அதற்குப் பணம் எங்கே என்று கேட்கிறார்கள். "சிறு விவசாயிகளின் கடன்களை ரத்து செய்வோம். கடன்களைத் தீர்ப்போம் என்று சொல்கிறீர்கள். எப்படி?" என்று கேட்டிருக்கிறார்கள். நாங்கள் கணக்குகள் காட்டினோம். அதையெல்லாம் செய்யாமல் இல்லை. கடனைத் தீர்த்திருக்கிறோம் என்றால், அந்த நோக்கம் சரியானது என்பதைத்தான் உறுப்பினர்கள் உணர வேண்டும். எதையும் சிந்தித்துச் செய்வதில் அக்கறை உள்ளவர்கள் நாங்கள் என்பதையும் தெரிந்துகொள்ள வேண்டும். வாக்குகளுக்கு என்று தேடி, நாங்கள் மக்களை ஏமாற்றுகின்றவர்கள் அல்லர் என்பதையும் சொல்லிக் கொள்கிறேன். இந்த அரசைப்பற்றி அப்படிப்பட்ட கருத்துள்ளவர்கள் இருந்தால், அவர்கள் நன்கு புரிந்துகொள்வார்கள் என்று எதிர்பார்க்கிறேன்

இங்கே இன்னொன்றைப்பற்றிக் குறிப்பிட நான் கடமைப்பட்டவனாக இருக்கிறேன். இங்கே மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் அவர்களும், மற்றும் இங்கேயிருக்கின்ற மாண்புமிகு உறுப்பினர்கள் சிலரும் விவசாயிகளுடைய பிரச்சினையில் அரசு கடுமையாக நடந்துகொள்கிறது, அதன் அணுகுமுறை சரியில்லை என்று ஒட்டுமொத்தமாக தங்கள் கருத்தைச் சொன்னார்கள். அணுகு முறை என்று சொல்வது எந்த வகையில் சரியல்ல என்ற விளக்கத்தைக் கேட்கிறேன். இதையே நான் கேள்வியாக வைத்துக்கொண்டு பேச வேண்டும் என்று கருதுகிறேன். அணுகுமுறை என்பது என்ன? நாங்கள் 73 கோடி ரூபாய் அளவுக்கு ரத்து செய்து கொடுத்திருக்கிறோமே அந்த

அணுகு முறை தவறு என்று சொல்கிறார்களா? அல்லது அந்தச் சிறு விவசாயிகளுடைய மின் கட்டணத்தைச் செலுத்த 1 பிளஸ் 1 என்று ஒத்துக்கொண்டோமே அந்த அணுகுமுறை தவறா? பேசும்போது ஏதோ சொல்லிவிட்டு விவசாயிகளிடம் போய் நாங்கள் ஒத்துக்கொள்ள முடியாது என்று சொல்கின்றார்களே, அந்த அணுகுமுறை தவறா, அல்லது நாங்கள் பின்பற்றுகின்ற முறை தவறு என்று சொல்கின்றார்களா? அது எங்களுக்குப் புரியவில்லை. நான் கூட ஒரு வார்த்தை சொல்லியிருக்கிறேன். 'விவசாயிகள் கடன்கள் ரத்து செய்யப்படும் இன்னும் இந்தக் கொள்கையிலே இந்தத் தமிழக அரசு பின்வாங்கவில்லை என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன். ஆனால் அது எப்படி என்பதுதான் கேள்வி' என்று சொல்லியிருந்தேன். அன்று மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் கூறும்போது, மிக அழகாகச் சொன்னார்கள். சற்று அமைதியாகவே கூட சொன்னார்கள். மிகத் தெளிவாக மக்கள் புரிந்துகொள்ளும்படி சொன்னார்கள். மத்திய அரசு ஏற்றுக்கொண்டாலும், ஏற்றுக்கொள்ளாவிட்டாலும், அவர்கள் நிதி தந்தாலும், தராவிட்டாலும் தமிழக அரசு இந்தக் கடனை ரத்து செய்ய முன்வரும். இதை நான் தான் பேசினேன். மக்களிடம் வாக்குகள் கேட்கும்போது நான் தான் இந்தக் கருத்தைச் சொன்னேன். சிறு விவசாயிகள் கடன்களைத் தீர்ப்பதற்கு தமிழக அரசு என்கின்ற வகையில், அந்த வாய்ப்புக் கிடைக்குமானால், இந்தக் கடன்களை 5 ஆண்டுகளில் தீர்ப்பதற்கு முயற்சிக்கும் அதை நிறைவேற்றும் என்று சொன்னேன். அவர்கள் இங்கே எடுத்துச் சொன்னதைத்தான் நான் மறுபடியும் சொல்கிறேன். நான் இப்போது பணிவன்போடு சொல்லிக் கொள்கிறேன். இந்தக் கோரிக்கையை ஒத்துக்கொள்ளத் தயாராக இருக்கிறார்களா? இது ஒரு நியாயமான பிரச்சினை என்று ஒத்துக்கொண்டால், அரசு சொன்னதை நிறைவேற்றியாக வேண்டிய அவசியம் இருக்கிறது என்பதை ஒத்துக்கொண்டால், விவசாயிகளுக்குச் சொல்லியவைகளை ஏன் செய்யவில்லை என்று கேட்பதாக இருந்தால், அது நியாயம்தான் என்று ஒத்துக்கொண்டால், நாங்கள் எடுக்கின்ற நடவடிக்கைகளுக்கு மற்ற கட்சியினர்களும் ஒத்துழைப்புத் தரத் தயாராக இருக்கிறார்களா, அந்த ஒத்துழைப்பைத் தருகின்ற ஒரு உத்தரவாதத்தைத் தரத் தயாரா என்று கேட்டுக்கொள்கிறேன். அப்படி உத்தரவாதம் தந்தால், அது எங்களுடைய பணியைச் செய்வதற்கு ஒரு உற்சாகத்தையும், ஊக்கத்தையும் அளிக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

*** திரு. க. இராமமூர்த்தி :** சிறு விவசாயிகளுடைய கடனைத் தீர்ப்பதைப் பொறுத்த வரையில், 5 ஆண்டுகளில் முழுவதும் தீர்ப்பது என்று சொல்லப்பட்டிருக்கிறது. ஓராண்டு ஆகியிருக்கிறது. இனி அரசு என்ன செய்யயிருக்கிறது? அதை எப்படிச் செய்யவிருக்கிறது என்று எங்களுக்கும் தெரிந்தால், அதிலே எந்த அளவுக்கு நாங்களும் ஒத்துழைப்பு தர முடியும் என்பதைப்பற்றிச் சொல்ல முடியும்.



**மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் :** மாண்புமிகு தலைவர் அவர்களே, மாண்புமிகு திரு. க. இராமமூர்த்தி அவர்கள் இன்னொரு 10 நிமிட காலம் தாமதித்துக் கேட்டிருந்தால், தெரிந்து கொண்டிருக்கலாம். அவர்கள் அவசரப்பட்டுவிட்டார்கள். இன்னும் தெளிவாகத் தெரிந்திருக்கும்.

| |

(பிற்பகல் 5-50)

கொள்கையைப்பற்றி முதலிலே பேசுகிறோம். நடைமுறையில் வழிமுறைகளைப் பொறுத்துத்தான் பார்ப்போம். இதுதான் நியதி, இதுதான் முறை. அதற்காகத்தான் ஆளுநர் அவர்கள் உரையையும், நிதி நிலை அறிக்கையையும் தனித் தனியாக வைத்திருக்கிறோம். ஒரு கொள்கையை முதலிலே வைத்துவிட்டு, அதற்குப் பிறகு விளக்கம் சொல்லுகிறோம். இப்போது நான் சொல்லுவது இந்த அரசின் கொள்கை. இதை இந்த மாமன்றத்திலே இருக்கிற நாம் அனைவரும் ஒத்துக்கொள்ளுகிறோமா? சிறு விவசாயிகளுடைய கடன்களை ரத்து செய்வது நியாயம்தான், தமிழக அரசு அதைச் செய்ய வேண்டும். இந்தியத் துணைக் கண்ட அமைச்சரவை இதற்கு உதவி செய்ய வேண்டும் அல்லது ஒத்துழைக்க வேண்டும்—இதில் ஏதாவது ஒன்றை நாம் ஒத்துக் கொள்ளுகின்றோமா? இதற்கு மாண்புமிகு உறுப்பினர் திரு. இராமமூர்த்தி அவர்கள் உடனடியாகப் பதில் சொல்ல முடியாது. நெருக்கடி இருக்கிறது.

*** திரு. க. இராமமூர்த்தி :** மாண்புமிகு முதலமைச்சரவர்கள் சொல்லும்போது, "மத்திய அரசின் துணை இல்லையென்றாலும், மாநில அரசு, என்னுடைய அரசு நிச்சயமாக விவசாயிகள் கடனைத் தீர்க்கும்" என்று சொல்லியிருக்கிறார்கள். அப்படிச் சொல்லுகின்றபோது, மத்திய அரசு எந்த அளவிற்குத் துணை நிற்க முடியுமென்ற சந்தேகம் அவர்களுக்கு வந்திருக்கிறது. மத்திய அரசு பல்வேறு மாநிலங்களில் இருக்கின்ற நிலைமைகளை உத்தேசித்துதான் இதில் முடிவெடுக்க முடியும். முதலமைச்சரவர்கள் வாக்கு கொடுக்கும்போதே இந்த நிலைமைகளைப் பூரணமாகத் தெரிந்துதான் வாக்கு கொடுத்திருக்கிறார்கள்.

**மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் :** இந்தக் கொள்கையை ஒத்துக்கொள்ளுகிறார்களா என்பதற்குப் பதில் இல்லை. கடனை ரத்து செய்ய வேண்டும், ஏழை விவசாயிகளுடைய, சிறு விவசாயிகளுடைய கடன்

களை ரத்து செய்ய வேண்டியது நியாயம்தான், அதைத் தமிழக அரசு செய்தாக வேண்டும். இந்தக் கொள்கையை அவர்கள் அப்படியே ஒத்துக்கொள்கிறார்களா ?

* திரு. க. இராமமூர்த்தி : இந்தக் கொள்கையை ஏற்று அரசுக்குத் துணையாக இருந்திருக்கிறோம் கடந்த ஆண்டு. இந்த ஆண்டு, 5 ஆண்டுகளிலே தொடர்ந்து கடனை ரத்து செய்யப் போகிறோமென்று சொல்லும்போது, அது எப்படி என்று கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : இப்போது கிடைத்த இந்தப பதிலைவிட மகிழ்ச்சியடையக்கூடிய பதில் என்னுடைய வாழ்க்கையில் மந்திரியான பிறகு கிடைத்ததில்லை. மத்தியிலே ஆட்சியில் இருக்கும் காங்கிரஸ் கட்சியின் பிரதிநிதியாக இங்கே இருந்து, அந்தக் கடனை ரத்து செய்ய வழி செய்யுங்கள், நாங்கள் ஒத்துக்கொள்கிறோம், துணை நிற்போமென்று சொல்கிறபோது ஒன்று உறுதியாகிறது. மத்திய அரசு கடனை வசூல் செய்துதான் தீர வேண்டும், கடனை ரத்து செய்யக்கூடாது என்று சொன்னால், அதை எதிர்த்து எங்களுக்குத் துணை நிற்பேன் என்று சொன்னதற்கு, நான் நன்றி கூறிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

* திரு. க. இராமமூர்த்தி : முதலமைச்சரவர்கள், அவர்களுக்கே உரிய முறையில் இந்த வாதத்தைக் கொண்டு செல்லுகிறார்கள். இந்த அரசு, அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசு, இதைச் செய்வோமென்று உறுதியாகச் சொல்லியபோது, இந்த அரசுக்கு என்ன கட்டுப்பாடுகள் இருக்கின்றன என்பதை உணர்ந்துதான் சொல்லியிருக்கிறது. மத்திய அரசு துணையிருந்தாலும், இல்லாவிட்டாலும் இதைச் செய்வோமென்று சொல்லியிருக்கிறார்கள். மத்திய அரசின் துணைக்கு வழி வகையில்லை என்ற நிலையில் . . .

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : ' அவர்கள் நிதி உதவி செய்தாலும், செய்யாவிட்டாலும், ஒத்துக்கொள்ளாவிட்டாலும் ' என்று சொன்னோம். ஆனால் அவர்கள் தடுக்காமல் இருக்க வேண்டும். ரத்து செய்யாதே என்று அவர்கள் சொல்லாமல் இருக்க வேண்டும். அதற்கும் உறுப்பினர்களுடைய ஒத்துழைப்பு தேவை.

* திரு. க. இராமமூர்த்தி : மத்திய அரசு பல்வேறு மாநிலங்களிலே என்ன செய்து கொண்டிருக்கிறது என்பதை மனத்திலே கொண்டு, ரத்து செய்வதைத் தடுக்காமல் இருங்கள் என்று மத்திய அரசிடம் சொல்வதைவிட, அவர்கள்





தடுத்தாலும்கூட, அதையும் தாண்டி இந்தக் கடன்களை ரத்து செய்வதற்கு மாநில அரசின் வருவாயைப் பயன்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன்: இப்போதும் கேட்கிறேன், அப்படி அவர்கள் தடுத்தாலும்கூட, அதை எதிர்த்து, எங்கள் மாநில வருவாயை வைத்துக்கொண்டு கடனைத் தீர்க்கிறோமென்று முடிவெடுத்தால், அதை மாண்புமிகு உறுப்பினரவர்கள் ஒத்துக்கொள்வாரா ?

* திரு. க. இராமமூர்த்தி : மாநில அரசு தன்னுடைய நிதியிலிருந்து இந்தக் கடனைத் தீர்க்க முன் வந்தால், நிச்சயமாக இந்த அரசுக்காகச் சிபாரிசு செய்வோமென்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன்: வார்த்தையிலே வழுக்கல் இருக்கக்கூடாது. ' ஆமாம் ', ' இல்லை ' என்ற கேள்வி வந்த பிறகு, சுற்றிப் போய் ஏதாவது சொல்லி தப்பித்துக்கொள்ளக் கூடாது. எங்களோடு இருப்பீர்கள், இந்த அரசோடு, தமிழகத்தின் மக்களுக்காக, ஏழை விவசாயிகளுக்காக மத்திய அரசோடு போராடுவீர்கள், அவர்கள் தடுத்தால், கூடாதென்று சொன்னால் மாநிலம் முழுவதுமுள்ள தமிழ் மக்களிடமிருந்து கிடைக்கும் பணத்திலிருந்து அந்தக் கடன் தீர்க்கப்படுகிறது, ஆகவே நீங்கள் அப்படிச் சொல்லக் கூடாதென்று தமிழக மக்களுக்காக, ஏழை விவசாயிகளுக்காகச் சொல்ல வேண்டும் . . .

* திரு. க. இராமமூர்த்தி : அந்த வார்த்தையிலே நிச்சயமாக மாறுபாடில்லை. ஆனால் இந்த வாக்குறுதிகள் எந்த அளவிலே வருகின்றன, எந்த அடிப்படையிலே வருகின்றன என்பது சொல்லாமலேயே முதலமைச்சரவர்களுக்கு நன்றாகத் தெரியும். அன்றைக்கும் தெரியும், இன்றைக்கும் தெரியும். காரணம், அந்தப் பொறுப்பிலே அவர்கள் இருக்கிறார்கள். ஒத்துழைப்பு கோரும்போது, எங்களுக்கு வேண்டிய தகவல்களைக் கொடுப்பதும் அவருடைய பொறுப்பாகும்.

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : திரு. இராமமூர்த்தி அவர்கள் இரண்டொரு மாதங்களில் அல்ல, 4, 5 மாதங்களுக்குப் பின்னால் சொல்ல வேண்டும். அவர்கள் தேர்தல் அறிக்கையில் குறிப்பிட்டிருக்கிறார்கள். ஏழை விவசாயிகளுடைய கடனை நிச்சயமாகத் தீர்த்து வைப்பதற்கு வழி காண முயல வேண்டுமென்று கருத்து சொல்லப்பட்டிருக்கிறது. ஆகவே,

வேண்டியிருக்கிறது. இதில் அணுகுமுறை எப்படி இருக்க வேண்டும்? சாதாரண ஏழையெளிய மக்கள் எங்கே போய் கடன் வாங்கினார்கள், எங்கிருந்து பெற்றார்கள், யாரிடமிருந்து பெற்றார்கள், கொஞ்சம் பணம் வைத்திருந்தவர்கள் எல்லாம், கொஞ்சம் வசதி படைத்தவர்கள் எல்லாம் மேலும் முதலாளிகள் ஆவதற்கு எப்படி எப்படியெல்லாம் தூண்டினார்கள் என்பதும் அரசுக்குத் தெரியும். அரசுக்குக் கடன் பாக்கி என்றால், உடனே பிரச்சினை வருகிறது. உண்மையில் ஏழையெளிய மக்களுக்கு விமோசனம் கிடைக்கவில்லை. இப்படி ஏழையெளியவர்களுக்கு வட்டிக்குக் கடன் கொடுத்து பெரும் முதலாளிகள் ஆகியிருக்கிறார்களே, அவர்களைப் பொறுத்த வரை, இந்த அரசு சிந்தித்துக் கொண்டிருக்கிறது. சட்ட வல்லுநர்களையும், எதிர்க் கட்சித் தலைவர்களையும் கலந்து பேச இருக்கிறோம். ஏழையெளிய விவசாயிகள், பிச்சையெடுக்கிற நிலையில் தங்களிடம் இருக்கிற தட்டுமுட்டு சாமான்களையெல்லாம் கொடுக்கிற நிலையில் இருந்தால், அவர்களுடைய கடனை ரத்து செய்வது அரசினுடைய கடமையாகும். ஆனால், சிறு விவசாயிகளுக்கு வட்டிக்குக் கடன் கொடுத்தே பலர் பெரிய பணக்காரர் களாக ஆகியிருக்கிறார்களே அப்படிப்பட்ட ஏழை விவசாயிகளுக்கு, எப்படி யாவது கடனை ரத்து செய்ய வேண்டும் என்பதே அரசின் யோசனையாகும். இன்றைக்கு சிறிய விவசாயிகளுக்குக் கடனைக் கொடுத்து விட்டு, அதிகத் தொகையை எழுதி, அவர்கள் நிலத்தையும் அதில் சூழ்ந்தது அவற்றை யெல்லாம் சேர்த்து எடுத்துக் கொள்ளலாம் என்று ஒரு திட்டம் தீட்டிக் கொண்டிருக்கிறார்களே அந்தக் கடனை முதலில் ரத்துச் செய்ய சட்டம் கொண்டுவருவது பற்றி அரசு யோசித்துக் கொண்டிருக்கிறது. அந்தக் கடனால் இன்றையதினம் அவர்கள் அடிமையாகி இருக்கிறார்கள். ஏழை யெளியவர்களுக்குக் கொஞ்சம் பணத்தைக் கொடுத்து அவர்களை மேலும் மேலும் அடிமைகளாக ஆக்கி, தாங்கள் மேலும் பெரும் பணக்காரர்களாக ஆக வேண்டுமென்ற முதலாளித்துவ மனப்பான்மை, ஏதேச்சாதிகாரப் போக்கு கொண்டவர்களின் வளர்ச்சி ஒரு மோசமான நிலை. அவர்கள் அப்படி வளர்ந்து பெரிய சக்தியை அடக்கம் செய்துகொண்டு, அவர்கள் அங்கேதான் போக வேண்டும், இங்கேதான் போக வேண்டும். போராட்டத் திலே பங்கு கொள்ள வேண்டும் என்று சொன்னால், இவர்கள் குடும்பத்தோடு கலந்துகொள்ள வேண்டிய நிலையில் இருக்கிறார்கள். அவர்களுடைய அந்த அநியாயக் கடன்கள் குறிப்பிட்ட ஆயிரத்திற்கு மேல் இருந்தால், இப்போ உள்ள கடன் தொகையை ரத்து செய்வதுபற்றிச் சட்டம் கொண்டு வரலாமா என்பதுபற்றி அரசு யோசித்துக் கொண்டிருக்கிறது என்பதை நான் இந்த சந்தர்ப்பத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். இந்தப் பிரச்சினை யைப் பொறுத்தவரையில், இங்கே உள்ள அனைவருக்கும் ஒரு பொதுவான





கொள்கைதான் இருக்கும் என்று நான் கருதுகிறேன். முன்பெல்லாம் ஜாதியின் பெயரைச் சொல்லி அடிமைப்படுத்தினார்கள். இன்று பணத்தாலே அடிமைப்படுத்துகிறார்கள். இந்தக் கொத்தடிமை முறை வேண்டவே வேண்டாம். நான் கொத்தடிமை முறை வேண்டாம் என்று சொன்னாலும், ஏழையெளியவர்களை பணக்காரர்கள் இப்படி கொத்தடிமைகளாக ஆக்குகி றார்கள். அவர்களுக்கு நியாயம் கிடைக்காத நிலை இருக்கிறது. ஆகவே, இனிமேல் சட்டம்தான் பேசியாக வேண்டும். அவர்களிடம் நாம் அணுக வேண்டிய முறை என்ன? "நீங்கள் கொடுத்துள்ள கடனைத் தயவுசெய்து விட்டு விடுங்கள்" என்றால், கேட்பார்களா? உடனே போராட்டம்தான் ஆரம் பிப்பார்கள். சங்கம் வைத்துக்கொள்ள உரிமையுண்டு. அவர்களுடைய கோரிக்கைகளைச் சொல்ல உரிமையுண்டு. ஆனால், அது ஜனநாயக முறையில்தான் இருக்க வேண்டும். "தர்ணா" என்றால் 'வேலைக்குப் போகிறவர்களை போகாதே' என்று தடுப்பது எப்படி ஜனநாயக முறை யாகும்? வேலைக்குப் போகிறவர்களை வேலைக்குப் போகாதே என்று தடுப்பதுதான் ஜனநாயகமா? அது எப்படி ஜனநாயக உரிமையாகும்? எண்ண, எழுத, பேச உரிமை இருக்கிறது. வேலைக்கு நான் போக வேண்டாமென்று எண்ண உரிமை இருக்கிறது. இன்னொருவர் வேலைக்குப் போகிறார் என்றால், அவரைத் தடுப்பதற்கு யாருக்கு உரிமை இருக்கிறது? நான் வேலைக்குப் போக மாட்டேன் என்றால், எனக்கு அந்த உரிமை இருக் கிறது. போகாதே என்று சொல்லுங்கள், அதற்கு உரிமை இருக்கிறது. ஆனால் போகாதே என்று தடுப்பது, வன்முறையில் இறங்குவது, இவற்றை யெல்லாம் எப்படி அனுமதிப்பது? சட்டத்தைப் போடாதே, சட்டத்தைக் கொண்டு வராதே, திரும்பப் பெற வேண்டுமென்றெல்லாம் சொன்னார்கள். பேராசிரியர்களுக்கு, ஆசிரியர்களுக்கெல்லாம் மாணவன் போய்ச் சொல்லிக் கொடுப்பதா? அவர்கள் அல்லவா மாணவர்களுக்குப் போய்ச் சொல்லிக் கொடுக்க வேண்டும். ஆசிரியர்களை மட்டும் நான் சொல்லவில்லை. பொது வாகத்தான் எல்லோரையும் சொல்கிறேன்.

அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தை அரசு எடுத்துக்கொள்ளவில்லை என்று சொன்ன உடனே பிரச்சினையாகிவிட்டது. அது குறித்து சட்டத் திருத்தம் அரசு கொண்டுவருவது பற்றி பரிசீலித்துக் கொண்டிருக்கிறது என்று சொல்லியும் போராட்டம் நடைபெறுகிறது. எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் ஏதேதோ சொன்னார்கள். செய்தி போய்ச் சேர 5 நாட்கள் ஆகும் என்றும் சொன்னார்கள். அவர் சொல்லியதைக் கேட்கப் பெருமை யாக இருந்தது. "நீங்கள் அவர்களை விடுதலை செய்யுங்கள்" என்று அவர்கள் சொல்லியபோது, அவருக்கே சிரிப்பு வந்தது. சிதம்பரத்திற்குப்

இடையிலே ஆளுநர் அவர்கள் ஆட்சிக் காலத்தில் என்ன நிலைமைகள் இருந்தன என்பதைப் பரிசீலித்துப் பார்க்க அவர்களுக்கு வாய்ப்பு கிடைத்திருக்கிறது. எனவே அவருக்குத் தெரியாததல்ல.

* திரு. க. இராமமூர்த்தி : இது மிகவும் முக்கியமான பிரச்சினை. எங்களுக்கு அந்த வாய்ப்பு கிடையாது. ஆளுநர் அவர்கள் ஆட்சிக் காலத்தில் எங்களுக்கு அவற்றையெல்லாம் தெரிந்துகொள்ளும் வாய்ப்பு கிடையாது. அதையும் தாண்டி முதலமைச்சரவர்கள் சொன்னது, 240 கோடி ரூபாய்க் கடனை முழுக்க முழுக்க ரத்து செய்வோமென்பதாகும். இது சிறு விவசாயிகளுடைய, ஏழை விவசாயிகளுடைய கடனா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : இப்போது தொகை எவ்வளவு என்ற பிரச்சினைக்குச் சென்று விவரங்களைச் சொல்லத் தேவையில்லை. இப்போது கொள்கையைப் பற்றிச் சொல்கிறேன். என்ன கொள்கை? நாங்கள் எதைச் சொன்னோமோ, எதை வாக்குறுதியாகத் தந்தோமோ அதை நிறைவேற்ற நாங்கள் முயலாமல் இருந்தபோது குற்றம் சாட்டினார்கள். அது உங்களுடைய பொறுப்பு. ஆனால் நாங்கள் சொன்னதை நிறைவேற்ற முயலும்போது உதவி செய்வது உறுப்பினர் அவர்களுடைய பொறுப்பு. உத்தரவாதம் தந்திருக்கிறார்கள். அதற்காக நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். பிரச்சினைகள் தோன்றும்போது, எல்லோருடைய ஒத்துழைப்பும் இருக்குமென்று நம்புகிறேன்.

விவசாயிகள் சம்பந்தப்பட்டவரையில், மிகப் பெரியதொரு பிரச்சினை இருக்கிறதென்பதை இங்கே நான் குறிப்பிட்டாக வேண்டும். சிக்கல் என்பதைத்தான் பிரச்சினை என்று சொல்லுகிறேன். விவசாயிகள் உற்பத்தி செய்கின்ற பொருள்களுக்கு விலை நிர்ணயிப்பது மத்திய அரசு. அதே சமயத்தில் அவர்கள் இடு பொருள்களை வாங்க விரும்பும்போது, அதற்கு விலை உயர்த்துவதும் மத்திய அரசுதான். என்ன ஆவது? பிரச்சினை எங்கே இருக்கிறது? விளை பொருள்களை அவர்கள் விளைவித்த பிறகு, இதுதான் விலை என்று நிர்ணயிக்கிறார்கள். அதே நேரத்தில் இடு பொருள்களுக்கு விலை நிர்ணயிப்பதும் அங்கேதான். அது உயர்த்தப்படுகிறது. இப்போது விவசாயிகளின் நிலைமை என்ன? விவசாயிகளைப்பற்றி எண்ணிடும்போது, இந்த உணர்வு இல்லாமல் இல்லை. அரசின் அணுகுமுறை சரியில்லை என்று சொல்கிறார்கள். இதை உணராமல் இல்லை. நெல்லுக்கு 130 ரூபாய் கொடுக்க வேண்டும், கரும்புக்கு 185 ரூபாய் கொடுக்க வேண்டு



மென்று வற்புறுத்தும்போது, அது போதாதென்றாலும், அதாவது கிடைக்க வேண்டுமென்று சொல்லிப் பார்க்கிறோம். அது கிடைப்பதில்லை. இது போதுமென்று சொல்லுகிறார்கள். கணக்குப்போட்டு சொல்லுகிறார்கள். இந்தக் கணக்குகள் ஏட்டுச் சுரைக்காய்களைப் போலத்தான். அவை நடைமுறையோடு ஒத்து வருகிறதா என்றால் இல்லை. எனவே ஏழை விவசாயிகளுக்குப் பாதுகாப்பு தந்தாக வேண்டிய அவசியமிருக்கிறது. ஏழை விவசாயிகள் பல தரப்பிலே இருக்கிறார்கள். உழைக்கின்ற விவசாயக் கூலிகள் இருக்கிறார்கள். அவர்களுக்குப் பாதுகாப்பில்லை. பாதுகாப்பு அவர்களுக்குத் தந்தாக வேண்டும். கடனைக் கொடுக்காதே என்று சொல்லுகிறார்கள். கடனைக் கொடுக்காதே என்றவுடன் யாருக்கும் திருப்தி வரும். வசதி உள்ளவர்களுக்கும் வாங்கிய கடனைக் கொடுக்காதே என்றால் எவ்வளவு திருப்தி வருமென்பது தெரியும். ஏழையாக இருக்கிறவர்களிடம் வாங்கிய கடனைக் கொடுக்காதே என்று சொன்னால், அவர்கள் அதை நிச்சயமாகப் பின்பற்றுவார்கள். அது இயற்கை. "இந்தத் தொழிற்சாலை உன்னுடையது

(பிற்பகல் 6-00)

தான்" என்று ஒன்றும் தெரியாத சாதாரணத் தொழிலாளர்களிடம் சொன்னால் அவர்கள் என்ன நினைப்பார்கள்? நாங்கள் உழைக்கின்றோம், எங்கள் பங்கு என்று சொல்லி அதன் காரணமாக அவர்கள் உழைக்கின்ற வேகமே கூட இன்னும் குறைந்து போய்விடும். அதேபோல சாதாரண ஏழையெளிய விவசாயிகளுக்கு அரசு கொடுத்துள்ள கடனை "நீங்கள் கட்ட வேண்டாம்" என்று சொன்னால், எப்படி? "கடனைத் திருப்பிக் கொடுக்காதே" என்று ஏழையெளிய விவசாயிகளிடம் சொன்னால், அதைத்தான் அவர்கள் எளிதில் பின்பற்றுவார்கள். ஏழை நடுத்தர விவசாயிகள் 2 அல்லது 3 ஆண்டுகளாக வாங்கிய கடனைக் கட்டாத காரணத்தால், அவர்களுக்கு அரசுக் கடன் மேற்கொண்டு கிடைக்காததால் அவர்களுக்குக் கடனைக் கொடுத்து சில சாதாரண மக்கள் பெரும் பணக்காரர்களாக ஆகியிருக்கிறார்கள் என்பதை ஒரு குற்றச்சாட்டாகவே நான் இந்த அவைக்குத் தெரியப்படுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன். இது விஷயத்தில் அவர்கள் சதித் திட்டமே தீட்டியிருக்கிறார்கள் என்பதையும் நான் குறிப்பிட ஆசைப்படுகிறேன். அவர்கள் அரசுக்குச் செலுத்த வேண்டிய கடனைச் செலுத்தாததை மத்திய அரசு அனுமதிக்கவில்லை. ரிசர்வு வங்கியும் அதை ஏற்றுக்கொள்ள மறுக்கிறது. இந்த 120 கோடி ரூபாயும் வந்தால் தான், அடுத்து பயிர் சாகுபடி செய்ய முடியும். விளைச்சலையும் பெருக்க முடியும். மேற்கொண்டு கடன் கொடுக்க முடியும். 120 கோடி ரூபாய் கடன் வர

போக 5 நாட்கள் ஆகுமா? தடையுத்தரவு போடப்பட்டது. தடையையும் மீறிவிட்டார்கள். அண்ணாமலைப் பல்கலைக் கழக நிர்வாகத்திலே சீர்திருத்தம் வேண்டுமென்று போராடுவது ஒரு தனிப் பிரச்சினை. அங்கே 144 தடையுத்தரவைப் போடுவது, அதை மீறுவது என்பது வேறு. அவர்களை எல்லாம் எப்படியாவது விடுதலை செய்ய வேண்டுமென்று சொல்கிறார்கள். ஜாமீன் கேட்க வேண்டாமென்றும் சொல்லியிருக்கிறார்கள். தடையை மீறுவது குற்றம் இல்லையா? நாட்டிலே சுமூகமான சூழ்நிலை இருக்க வேண்டுமென்று எல்லோரும் சொல்லுகிறார்கள். நாட்டிலே சட்டம் ஒழுங்கு கெட்டு விட்டது, அங்கே போலீசார் போனார்கள், இங்கே போனார்கள் என்றெல்லாம் சொன்னார்கள் பேராசிரியர் எப்படி தவறு செய்தார் என்பது புரியவில்லை. காவல் துறையைச் சார்ந்தவர்கள் தான் தவறு செய்திருக்கிறார்கள் என்றும் சொன்னார்கள். 4 மணிக்கு பஸ்ஸில் போனார்கள் என்று சொன்னார்கள். பள்ளிக்கூடம் இருந்தது என்றும் சொன்னார்கள். அங்கே இருப்பவர்கள்தானே அவர்களை அடித்திருக்க வேண்டும்.

* **திரு. ம. சங்கரலிங்கம்:** நான் சொன்னது குறிஞ்சாங்குளம் என்ற ஊரிலுள்ள ஆரம்பப் பள்ளியைப்பற்றி. அங்குள்ள பள்ளியில் ஊர்க்காரர்கள் கூடியிருந்தார்கள். போலீசார் திருவேங்கடத்தில் உயர்நிலைப் பள்ளியில் முகாமிட்டிருந்தார்கள். 3 மைலுக்கு அப்பால் அது இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன்:** எதிர்க்கட்சித் தலைவருடைய விளக்கத்திற்கு நன்றி. அவர் சொல்லும்போது அப்படித்தான் இருந்தது. ஆக, எதைப்பற்றிச் சொல்வதாக இருந்தாலும், யார் யார் அவர்களுடைய திறமைக்கேற்ப சொன்னாலும், எங்களுக்கும் அதுபோல் திறனாய்வு இருக்கும். காவல் துறையினர் போனார்கள், சில பேர் வந்தார்கள், சில பேர் எட்டிப் பார்த்தார்கள். 5 பேர் செத்தார்கள், கொஞ்சம் பேர்தான் வந்திருந்தார்கள் என்றெல்லாம் முதலிலே சொன்னார்கள். கையெடுத்து கும்பிட்டு, விட்டுவிடச் சொன்னாராம். கும்பிட்டவனைச் சுட வேண்டிய அளவுக்கு ஒரு தமிழ் மகன் காவல் துறையில் இருக்கின்றாரா என்பதை உண்மையிலேயே நான் அறிய வேண்டிய அக்கறை எனக்கு உண்டு என்பதை எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் புரிந்துகொள்ள வேண்டும். "கொஞ்சம் பேர் வந்தார்கள். இவர் சுட்டார். உடனே ஆயிரக்கணக்கான ஆட்கள் வந்து அவர்களைத் தாக்க ஆரம்பித்து விட்டார்கள்" என்றெல்லாம் சொன்னார்கள். இராமாயண கதையில்தான் இப்படிக் கேள்விப்பட்டிருக்கிறோம். ஒரு தலையை வெட்டினால





இன்னொரு தலை வருமென்று கேள்விப்பட்டிருக்கிறோம். இங்கே அதுபோல் ஒவ்வொரு ரத்தத் துளியும் ஒவ்வொரு தலையாக வந்தது என்கிற முறையில் இங்கே எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள்.

(பிற்பகல் 6-10)

எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் அவர்களுடன் பேசியிருப்பார்கள், நான் மறுக்கவில்லை. ஆனால் சொல்ல வந்தவர்கள் யார் யார், எப்படிப்பட்டவர்கள் என்பதையும் பார்க்க வேண்டும். யார் வருகிறார்களோ அவர்களுக்கு ஏற்ப சொல்லும் நிலைமையும் அங்காங்கே உருவாகிறது என்பதையும் நாம் புரிந்துகொள்ள வேண்டும்.

**திரு. ம. சங்கரலிங்கம்:** அந்தச் சம்பவம் தமிழகத்திலே குறிஞ்சாங்குளத்திலே நடைபெற்றிருக்கிறது. அது கோவில்பட்டி தாலூக்காவிலே இருக்கிறது. ரெவின்யூ போர்டு மெம்பர் இல்லாவிட்டாலும், செயலாளர் மட்டத்திலே ஒருவரை அனுப்பி நான் சொன்னதிலே ஏதாவது தவறு இருக்கிறதா என்று ஆராய வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன்:** இதில் நான் அக்கறையுள்ளவன் என்று சொல்லிவிட்டேன். அதை இந்த அரசு விசாரிக்கும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன். இப்படிச் சொல்வதற்கு முன் இதே குறிப்பை எனக்கு நேற்றையதினம் தந்திருந்தால், நிச்சயமாக நான் நடவடிக்கை எடுத்து இப்போது பதில் சொல்லியிருக்க முடியும். ஆனாலும் நாம் இங்கேதான் இருக்கப் போகிறோம். விரைவிலே விளக்கம் தர முடியும்.

இன்னொன்றையும் எடுத்துப் பார்த்தால், மிகவும் நலமாக இருக்கும். அது அண்ணாமலைப் பல்கலைக் கழக விஷயம். எல்லோரும் உன்னிப்பாகக் கவனிக்கிறார்கள். நான் என்ன சொல்லப் போகிறேன் என்று பார்க்கிறார்கள். மாணவர்களைச் சிறையிலே வைக்கவேண்டிய எண்ணம் எங்களுக்கு இல்லை. ஆசிரியர்களையும் சிறையிலே வைக்கவேண்டிய எண்ணம் எங்களுக்கு இல்லை. தவிர்க்க முடியாத காரணத்தால்தான் இப்படிப்பட்ட நிலைமைகள் நிகழ்ந்துவிடுகின்றன. என்னைச் சிறையில் வைத்தால் நான் எவ்வளவு வருத்தமடைவேனோ அதைவிட பல மடங்கு அடுத்தவர்களை சிறையில் வைத்தால் கவலைப்படுபவன் நான். சாதாரண மக்களைச் சிறையிலே வைப்பது கொடுமை என்று சொன்னால், ஆசிரியர்களைச் சிறையிலே வைப்பது மிகவும் கொடுமையான விஷயமாகும். அந்தக் கொடுமையி

ஒழிக்க வேண்டும் என்று சொன்னார். இன்றைக்கு எங்களை ஒழிக்க வேண்டும் என்று சொல்கிறார். எம்.எல்.ஏ.-க்களை விலை பேசுகிறார். எல்லா எம்.எல்.ஏ.-க்களும் வந்துவிடுங்கள் என்று பேசுகிறார். எல்லோரும் போய்விடுவோம், அப்படியென்றால் நமக்கு எந்தவிதமான பிரச்சினைகளும் இல்லை. அப்போது இந்த நாட்டிலே அரசியல் கட்சிகளும் தேவையில்லை. அவருடைய தயவு மட்டும் இருந்தால் போதும். இந்த நிலைக்கு விவசாயச் சங்கத் தலைவர் வருகிறார் என்று சொன்னால், இந்த நாட்டைப்பற்றி அவர் என்ன நினைக்கிறார் என்று பார்க்க வேண்டும். நமக்குப் பல பிரச்சினைகள் இருக்கின்றன. நமக்கென்று சில கொள்கைகள் இருக்கின்றன. ஆனால் அவர், நம்மை விலைக்கு வாங்குவேன் என்றும், நம்முடைய ஆட்சியை ஒழித்துவிடுவேன் என்றும் சொல்கிறார். 'எம்.எல்.ஏ.-க்களே வாருங்கள், நான் உங்களுக்கு அபயம் தருகிறேன்' என்று சொல்கிறார். நீங்கள் ஆயுள் பூராவும் எம்.எல்.ஏ.-க்களாக இருக்கலாம் என்று சொல்கிறார். சாகும் வரை எம்.எல்.ஏ.-வாக இருக்கும் பாக்கியம் யாருக்காவது கிடைக்குமா? இந்த அளவுக்கு அவர் உத்தரவாதம் தருகிறார் என்று சொன்னால் அவர் என்ன எண்ணிக்கொண்டிருக்கிறார் என்பதை நாம் எண்ணிப் பார்க்க வேண்டும். யார் ஆட்சிக்கு வந்தாலும் அவரிடம் தலையாட்ட வேண்டும். இல்லாவிட்டால், அவருடைய ஆட்சியைக் கவிழ்ப்போம் என்று சொல்வார். அவர் விமான நிலையத்திற்குப் போகும் போது கைது செய்யப்பட்டார் என்று சொன்னார்கள். சமூக விரோத காரியங்கள் செய்பவர்கள் விமான நிலையத்திற்குப் போனால் என்ன, ரயில்வே ஸ்டேஷனுக்குப் போனால் என்ன? எப்போது அவர்களைக் கைதுசெய்யக் கூடாது? அன்றைக்கு மத்திய அரசோடு தொடர்பு கொண்டோம். பிரதம அமைச்சர் அவர்கள், இவரைச் சந்திக்க ஏதாவது நேரம் குறித்துக் கொடுத்திருக்கிறாரா என்று கேட்டோம். இல்லையென்ற தகவல் வந்தது. அதற்குப் பிறகுதான் நாங்கள் அவரைக் கைது செய்தோம். பிரதம அமைச்சரைச் சந்திப்பதற்கு நேரம் குறித்து அவரின் அனுமதியைப் பெற்று அவரைச் சந்திக்கப் போகும்போது, நாங்கள் இவரைத் தடுத்திருந்தால், ஏதோ பிரதம அமைச்சரிடம் சொல்லிவிடுவாரோ என்று பயந்துகொண்டு அவரைக் கைது செய்ததாகச் சொல்லலாம். ஆனால் நாங்கள் தொலைபேசியின் மூலம் தொடர்பு கொண்டு அப்படி இல்லை என்று தெரிந்த பிறகுதான் அவரைக் கைது செய்தோம்.



(பிற்பகல் 6-20)

இன்னொன்றையும் சொல்கிறார்கள். மேலவையிலே அல்லது பேரவையிலே இந்தக் கருத்து சொல்லப்படவில்லை என்றாலும், வெளியே சொல்லியிருக்கிறார்கள். பிரதம அமைச்சர் சொன்ன உடனே இவர்கள் நாயுடுவை வெளியே விட்டுவிட்டார்கள் என்று சொல்கிறார்கள். அவர்களுக்கு நான் ஒன்றைத் தெளிவாகச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். பாரதப் பிரதமர் "பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் ஏன் கைது செய்தார்கள் என்று எனக்குத் தெரியவில்லை" என்றுதான் சொன்னார். அவர் ஒன்றும் நாயுடுவைக் கைது செய்திருக்கக் கூடாது என்று சொல்லவில்லை. அவரை நாங்கள் கைது செய்ததும் தவறு என்று சொல்லவில்லை. ஆனால் அவர் சொன்னதெல்லாம் "அந்தச் சட்டத்தின் கீழ் ஏன் கைது செய்தார்கள் என்று எனக்குத் தெரியவில்லை" என்பதுதான். இதில் என்ன பொருள் அடங்கியிருக்கிறது? எனக்கு இன்னும் முழுமையான விவரம் தெரியாது என்பதுதான். விவரத்தைத் தெரிந்து கொள்ள வாய்ப்பு இருக்கிறது, தெரிந்துகொள்வேன் என்ற பொருள்தான் இருக்கிறதே தவிர வேறு அல்ல. இந்த மாநிலத்தில் இருக்கிற ஆட்சி சட்டம் ஒழுங்கைக் காப்பாற்ற, சமூக விரோத சக்திகளைத் தடுக்க, இந்தச் சட்டத்தைப் பயன்படுத்தவில்லை என்றால், இந்தச் சட்டம் எதற்காக? இதை அவர்கள் கேட்டால், பதில் சொல்ல வேண்டியது எங்கள் கடமை. ஒரு மாநிலத்தின் சட்டம் ஒழுங்கைக் காப்பாற்ற வேண்டியது மாநில அரசின் பொறுப்பாகும் என்பதை நான் இங்கே திட்டவட்டமாகச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

அவரை விடுதலை செய்த பிறகு நான் கோவை சென்றிருந்தேன். அங்கே நான் போனபோது அவருடைய சங்கத்தைச் சேர்ந்தவர்களும், மற்ற அரசியல் கட்சிகளைச் சேர்ந்த மதிப்பிற்குரிய தலைவர்களின் பிரதிநிதிகளும் என்னிடம் வந்து "நாங்கள் நாயுடு அவர்களையும் வைத்துக்கொண்டு பேச வேண்டும் என்று விரும்புகிறோம்; பேசி முடிவு செய்கிறோம், அதற்கு வாய்ப்பு தாருங்கள்" என்றார்கள். அதற்கு நான் 'சரி' என்று ஒப்புக்கொண்டேன். நாயுடுவை விடுதலை செய்தால், நாங்கள் 16 ஆம் தேதி குழுக் கூட்டம் நடத்தவிருக்கிறோம். அதில் அரசாங்கத்தின் கருத்தை ஏற்று தீர்மானிக்கப் போகிறோம், எனவே எங்களை நம்பி அவரை விடுதலை செய்யுங்கள், இதன் மூலம் பிரச்சினை குறையட்டும், பேசி முடிக்கலாம் என்று உத்தரவாதம் கொடுத்தார்கள். அவர்கள் கூறியதை நம்பி நான் நாயுடுவுக்கு அனுமதி கொடுத்து விடுதலை செய்யலாம் என்று உத்தரவிட்டேன். இது தான் நடந்தது. ஆனால் சொன்னபடி 16 ஆம் தேதி கூட்டம் நடைபெறவில்லை. பொறுத்திருந்தோம். 18 ஆம் தேதி நடக்கும் என்றார்கள். அதற்கும் சரி என்று இருந்தோம். அப்போதும் நடைபெறவில்லை. அதற்குப் பிறகு

விருந்து நீங்கள் எனக்கு விடுதலை தரவேண்டும். அவர்கள் அனைவரையும் ஜாமீன் இல்லாமல் இந்த அரசு விடுதலை செய்யும் என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன். இந்த அரசு ஆசிரியர்களைச் சிறையில் வைக்காது நிச்சயமாக அவர்களை விடுதலை செய்யும். அதே சமயத்தில், இது ஒரு மரபாக ஆகிவிடக் கூடாது. ஏனெனில், போராடினால் ஏதோ கைது செய்வார்கள், 10 நாட்கள் கழித்து இப்படி விட்டுவிடுவார்கள் என்ற போக்கு வந்துவிடுமானால், அது விரும்பத்தகாத, வேண்டாத ஒரு பழக்கமாகிவிடும். கூடுமானவரையில் மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் சொன்னது போல இந்தப் பிரச்சினைகளை அவர்கள் சந்திக்காத அளவுக்கு அவர்கள் ஆசிரியர்களாக இருந்து மாணவர்களுக்கு என்ன செய்யலாம் என்பதையும் எப்படி பிரச்சினைகள் வரும்போது அணுக வேண்டும் என்பதையும் சொல்லிக் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

விவசாயிகள் பிரச்சினைபற்றி இன்னொன்றையும் குறிப்பிட விரும்புகிறேன். அவர்கள் எதுவுமே செய்யவில்லை என்று சொன்னார்கள். இங்கே ஒரு காரணம் இருந்தால் அங்கே ஒரு காரணம் இருக்கிறது என்று சொன்னார்கள். ஒரு 'ஆக்ஷன்' இருந்தால் ஒரு 'ரீ-ஆக்ஷன்' இருக்கும் என்று சொன்னார்கள். ஒரு செயலுக்குத்தான் எதிரொலி இருக்கும். யாராவது அழுகிறார்கள் என்று சொன்னால், அவரை பக்கத்திலே இருக்கிறவர்கள் யாராவது அடித்திருக்க வேண்டும். இல்லாவிட்டால் அவராகவே காலிலே முள்ளை மிதித்திருக்க வேண்டும். ஆனால் இங்கே அப்படிப்பட்ட நிலைமை இல்லை. காரியத்தையும் அவர்களே உருவாக்குகிறார்கள், எதிரொலியையும் அவர்களே உருவாக்குகிறார்கள். ஒன்றும் தெரியாத விவசாயிகளை ஆசை காட்டி, உண்மையை அவர்களிடம் மறைத்துக் கூறி அவர்களைச் செயலுக்கு இழுக்கிறார்கள். முன்னாலே கலைஞர் ஆட்சிக் காலத்திலேயும் இதையேதான் செய்தார்கள். பஸ்ஸுக்கு தீ வைப்பது, பொருட்களை அழுகிப்போகச் செய்வது, மக்களுக்குத் தேவையான அன்றாட அத்தியாவசியப் பொருட்களை அவர்களுக்குக் கிடைக்காமல் செய்வது, அவைகளை அழிப்பது, போன்ற முறைகளை அவர்கள் போராட்ட நடைமுறைகளாகக் கொண்டிருக்கிறார்கள். நான் கேட்கிறேன், மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் அவர்களைக் கேட்கிறேன், அவர்கள் தாங்கள் உற்பத்தி செய்த பொருட்களைக் கொடுக்க மாட்டோம் என்று சொன்னார்கள், அவர்களைக் கொடுக்க வேண்டும் என்று யாரும் வற்புறுத்தவில்லையே. அவர்கள் உற்பத்தி செய்த பொருட்களை அவர்களாகவே அழித்துவிடுவோம் என்று சொல்லும்போது, அதை எதிர்க்க எங்களுக்கு அதிகாரம் இல்லை. அவர்கள் அவ்வாறு செய்வதை எதிர்க்க முடியாது. நான் நெய்த ஒரு ஆடையை நான் விற்கப் போவதில்லை என்று





சொன்னால், நீ விற்றுத்தான் ஆகவேண்டும் என்று சொல்லும் உரிமை அரசுக்கு இல்லை. ஆனால் இன்னொருவர் உற்பத்தி செய்த பொருளைக் கொண்டுபோக விடமாட்டேன். தடுப்பேன், அதை அழிப்பேன் என்று சொன்னால், அவர்கள் சமூக விரோதிகள் அல்லவா என்ற கேள்வியை நான் கேட்கிறேன். நீங்கள் பதில் சொல்ல வேண்டும். இங்கே இந்த அவையிலே சொல்லாவிட்டாலும் நீங்கள் உங்களுடைய உள்ளத்திற்குப் பதில் சொல்ல வேண்டும். இன்னொருவருக்கு உரிமையான பொருளை, இன்னொருவர் உழைப்பிலே உருவான அந்தப் பொருளைச் சந்தைக்கு அனுப்பி வைக்கும்போது, எந்த வண்டியிலே போகிறதோ அதைத் தடுத்து, மறுத்து, வண்டியிலிருந்து அந்தப் பொருளை கீழே இறக்கி, அழித்து, அந்த வண்டிக்குத் தீ வைத்து, வெடிகுண்டு வைத்து தகர்த்து அவைகளை நாசப்படுத்துவது போன்ற காரியங்களைச் செய்கிறார்கள். இப்படிச் செய்பவர்கள் சாதாரண விவசாயிகளா? குண்டுகள் தயாரித்து வைத்துக்கொள்கிறார்கள் என்று சொன்னால், அவர்கள் யார் என்று பார்க்க வேண்டும். அவர்கள் என்ன ராணுவத்தில் பணியாற்றிவிட்டு இங்கு வந்திருக்கிறார்களா? அவர்களுக்கு இதிலே என்ன முன் அனுபவம்? இப்படிப்பட்ட ஆயுதங்கள், போர்க் கருவிகள் எல்லாம் அவர்களுக்கு எப்படிக் கிடைத்தது? அவைகளை அவர்களுக்கு யார் கொடுத்தது? விவரம் தெரிந்தவர்கள் வேறு யாரோ அவர்களுக்குப் பின்னால் இருந்துகொண்டு இவைகளைச் சொல்லிக்கொடுக்கிறார்களா இல்லையா என்று பார்க்க வேண்டும். 1975-ம் ஆண்டிலேயும் இதே காரியத்தைத்தான் அவர்கள் செய்திருக்கிறார்கள். பாலைக் கொட்டினார்கள், பஸ்ஸைக் கொளுத்தினார்கள், போலீஸ் அதிகாரிகளுக்கு ஆபத்தை உண்டாக்கினார்கள். இல்லையென்று சொல்ல முடியுமா? நான் எல்லாப் புள்ளி விவரங்களையும் வைத்திருக்கிறேன். நேரம் இல்லாததால் அவைகளை நான் இந்த அவையிலே படிக்கவில்லை. சட்ட சபையிலே பேசும்போது ஓரளவுக்கு இவைகளைச் சொன்னேன். 1975 ஆம் ஆண்டு என்று வைத்துக்கொண்டாலும் அப்போதும் போராட்டங்கள் நடந்தன. 1971 ஆம் ஆண்டானாலும் சரி, 1972 ஆம் ஆண்டானாலும் சரி அப்போதும் இந்தப் பிரச்சினைகள் இருந்தன. நிலைமைகள் இவ்வாறு உருவெடுத்திருக்கின்றன. கலைஞர் அவர்கள் சட்டசபையிலே பதில் சொல்லியிருக்கிறார்கள். "என்னோடு பேசும்போது சொல்வதற்கும், அவர் வெளியிலே போய்ச் சொல்வதற்கும் வித்தியாசம் இருக்கிறது. பேச்சை மாற்றுகிறார்" என்று சொல்லியிருக்கிறார்கள். "அவர் இங்கே ஒன்று சொல்கிறார், பேசுகிறார், வெளியிலே ஒன்று பேசுகிறார். ஆகவே அவரை நம்பிப் பயனில்லை" என்றும் சொல்லியிருக்கிறார்கள். சிறைச்சாலையிலேயிருந்து நாங்கள் போராட்டத்தை நிறுத்திவிட்டோம் என்று சொல்லி வெளியே வருகிறார், வந்தபின்பு "முதலமைச்சர் கருணாநிதி சொல்லித்தான் வந்தோம்" என்று சொல்கிறார், எது உண்மை? அன்றைக்கு அந்த ஆட்சியை

அவர்கள் கூட்டம் நடத்தியிருக்கிறார்கள். அதில் ஒரு பகுதியினர் ஒப்புக் கொண்டார்கள், மற்ற பகுதியினர் ஒப்புக்கொள்ளவில்லை. ஆனாலும் பெரும் பாலான விவசாயச் சங்க அமைப்பைச் சேர்ந்தவர்கள் ஒப்புக்கொண்டு 1 பிளஸ் 1 என்கிற திட்டத்தை அமுல்படுத்தலாம் என்றார்கள். இதைவிட அணுகு முறை வேறு எப்படி இருக்க வேண்டுமென்று எதிர்க் கட்சியில் உள்ளவர்கள் எதிர்பார்க்கிறார்கள் என்று எனக்குப் புரியவில்லை. எங்களுடைய அணுகு முறையில் என்ன தப்பு இருக்கிறது என்று எனக்குப் புரியவில்லை. பிறகு வந்து அவர்கள் பேசினார்கள். இப்போதே காலதாமதம் ஆகிவிட்டது. அதாவது 2 மாதம் ஆகிவிட்டது. எனவே இந்த மாதத்திலிருந்தே 1 பிளஸ் 1 வாங்க வேண்டாம், அடுத்த மாதத்திலிருந்து வாங்கலாம் என்றார்கள். அதற்கும் நாங்கள் ஒப்புக்கொண்டோம். இதைவிட ஒரு அரசு எப்படி விட்டுக் கொடுக்க முடியும்? இதைவிட அரசு வேறு எத்தகைய அணுகுமுறையைக் கையாள முடியும்? இதைச் செய்யாமல் விவசாயிகளிடத்திலேயே எல்லாவற் றையும் ஒப்படைத்துவிட்டு, அன்மையிலே என்.ஜி.ஓக்களுக்கு நான் சொன்ன மாதிரி, "நீங்கள் எடுத்துக்கொண்டு மிச்சத்தைத் தாருங்கள்" என்று கேட்பதா அல்லது சட்டத்தை அவர்கள் கையிலேயே விட்டுவிடுவதா? இந்த நேரத்தில் ஒன்றை மட்டும் திட்டவட்டமாகச் சொல்ல விரும்புகிறேன். திரு. நாயுடு அவர்களுடைய நோக்கம் இந்தப் பிரச்சினை தீர்க்கப்பட வேண்டும் என்பதல்ல. விவசாயப் பிரச்சினை தீர்ந்துவிட்டால், நாயுடு போன்றவர்களுக்கு சங்கத்திலே வேலையே இல்லை. அதற்குப் பிறகு அவர் தலைவராக இருக்கவே முடியாது. எப்படி ஒரு நாட்டில் பட்டினிக்கு இடம் இல்லையென்றால் நான் வறுமையைப் போக்கப் போகிறேன் என்று சொல்ல ஆட்கள் தேவையில்லையோ அதுபோல் விவசாயப் பிரச்சினை தீர்ந்துவிட்டால், இவர்களுக்கு இடம் இருக்காது என்பதால், இந்தப் பிரச்சினை தீரக் கூடாது, இந்தப் போராட்டம் தொடர்ந்து நடைபெற்றாக வேண்டுமென்ற எண்ணத்திலே தொடர்ந்து செயல்படுகிறார்கள். ஆகவேதான் இந்தப் பிரச்சினை தொடர்கிறது. எந்த வகையிலும் இந்தப் பிரச்சினை தீர்ந்துவிட வேண்டும் என்கிற எண்ணம் திரு. நாயுடுவுக்கு நிச்சயமாக இல்லை. ஆனால் இந்த அரசைப் பொறுத்தவரை, எப்படியாவது இந்தப் பிரச்சினையைத் தீர்த்துவிட வேண்டுமென்றுதான் விரும்புகிறது.

இன்று காலையிலே கூட ஐ.டி.ஏ. அதிகாரிகள் எங்களைச் சந்தித்தார்கள். அவர்கள் பேசும்போது "நீங்கள் கடன் வசூல் செய்வதைத் தாமதிக்கிறீர்கள், அதை விரைவாக வசூல் செய்ய வேண்டும்" என்றார்கள். காரணம் உலக வங்கி அவர்களைக் கேட்கிறது. நீங்கள் கடன் கொடுத்திருக்கிறீர்கள்; அந்தக் கடன் வசூல் செய்யப்படாமல் இருக்கிறது; அதிலும் குறிப்பாக தமிழகத்திலே கடன் அதிகமாக பாக்கி இருக்கிறது; இதை நீங்கள் வசூல் செய்து கொடுத்தா லொழிய, நாங்கள் உங்களுக்குத் திரும்பக் கடன் கொடுக்கமாட்டோம்"





என்று சொல்கிறார்கள். இந்த நிலைமையில் எங்களுடைய அரசு வேறு எதைச் செய்ய முடியும்? அதுமட்டுமல்லாமல், இந்த அரசு தீட்டுகிற திட்டங்களுக்கு எந்தப் பணத்தை எடுத்து செலவு செய்வது? இப்போது வீட்டுக்கு ஒருவருக்கு வேலை கொடுக்கிறோம் என்கிற திட்டத்தைச் செயல்படுத்தவிருக்கிறோம். எங்களுடைய கொள்கையான இதைப் போன்றே, மத்திய அரசும் செயல்படுத்த விரும்புகிறது. எங்களுக்கும் மத்திய அரசுக்கும் இதிலே வேறுபாடு இல்லை. அவர்கள் நாடு முழுவதும் செய்ய முயற்சிக்கிறார்கள். நாங்கள் மாநிலத்திற் குள்ளே இந்தத் திட்டத்தைச் செய்ய முயற்சிக்கிறோம். அப்படிப்பட்ட திட்டங்களைச் செயல்படுத்த பணம் வேண்டாமா? இந்தப் பணத்தையும் கொடுக்க மாட்டோம் என்று சொல்லி மேற்கொண்டும் எங்களுக்குப் பணம் கொடு என்று விவசாயிகள் போராட்டத்தை நடத்துவது எப்படி நியாயமாக இருக்கும்? இந்த நிலைமையில் எங்கள் அரசு மேற்கொண்ட அணுகுமுறை எப்படித் தவறாகும் என்றுதான் நான் கேட்கிறேன். இதைத் தவிர வேறு அணுகுமுறை இருந்தால் சொல்லலாம். ஆனால் சொல்லவியலாது. காரணம் இதைவிட வேறு நல்ல அணுகுமுறை இருக்கவே முடியாது. வேறு மாநிலங் களில் என்ன நடந்தது என்பதைப்பற்றி இங்கே நான் பிரச்சினையை திசை திருப்ப விரும்பவில்லை. அங்கெல்லாம் இது மிகப் பெரிய சட்ட ஒழுங்குப் பிரச்சினையாக ஆகியிருக்கிறது. நான் இங்கே கொலையே நடக்கவில்லை, களவே நடக்கவில்லை, போராட்டமே நடக்கவில்லையென்று சொல்ல முன்வர வில்லை. மகாத்மா காந்தியடிகள் சொன்னதுபோல், இப்படிப்பட்ட நிலைகள் இங்கே இல்லையென்றால், காவலர்களே தேவையில்லை. அவர் ஒரு முறை சொன்னார், "நான் எதிர்பார்க்கிற இந்திய நாடு காவல் துறையே இல்லாத நாடாக இருக்க வேண்டும். எல்லோரும் நல்லவர்களாக இருந்தால், எதற்காக இங்கே காவல் துறை?" என்று. ஆனால் இன்றையதினம் நாட்டிலே நாம் என்ன பார்க்கிறோம்? எங்கே பார்த்தாலும் ஜாதிப் பிரச்சினைகள் உருவா கின்றன. ஜாதிப் பிரச்சினையிலே கட்சிகளும் இடம் பெறுகின்றன. அதை கட்சிகள் பயன்படுத்துகின்றன. எங்கெங்கு குழப்பம் விளைகிறதோ அதை யெல்லாம்—எங்களையும் சேர்த்துச் சொல்கிறேன்— அவர்கள் பயன்படுத்திக் கொள்கிறார்கள். இதை நான் ஒப்புக்கொள்கிறேன். இப்படிச் செய்தால் நாடு என்ன ஆகும்? வெவ்வேறு கட்சியில் இருப்பவர்கள் ஜாதிகளுடன் தொடர்பு கொண்டிருக்கிறார்கள். இல்லையென்று சொல்ல முடியுமா? ஜாதி என்று வந்து விட்டால், கட்சிக்குள்ளேயே போராடுகிறார்கள். தேர்தலின்போது பல்வேறு கட்சிகளின் சார்பில் மக்களைச் சந்தித்து வாக்குகளைக் கேட்கி றார்கள். ஆனால் வெற்றி பெற்று வந்து விட்டால், ஜாதியின் அடிப்படையிலே ஒன்று சேர்கிறார்கள். இதை இல்லையென்று யாரும் சொல்ல முடியாது. ஜாதியை ஒழிக்க வேண்டுமென்று சொல்கிற அரசியல் கட்சிகளே இப்படிப்பட்ட

நிலைமைகளுக்காளாகிறபோது, சாதாரண மக்கள் என்ன செய்ய முடியும்? பொது மேடைகளிலே பேசுகிறபோது, ஜாதி ஒழிக்கப்பட வேண்டும்; ஜாதி அமைப்பு வேண்டாம், சமுதாயத்திலே ஏற்றத்தாழ்வு எல்லாம் கூடாது என்று சொல்கிறோம். ஆனால் இதையெல்லாம் சொல்லிவிட்டு, இதற்கு நேர் மாறான நடவடிக்கைகளிலும் ஈடுபடுகிறார்கள். நாம் மனச்சாட்சி என்ற ஒன்றை வைத்து இந்த நாட்டுக்கு நல்லது செய்கிறோமா என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். இங்கே தான் என்ன நடந்தது? இங்கே ஆட்சிக்கு நான் எப்படி வந்தேன்? முதலமைச்சர் பதவி எனக்கு எப்படி வந்தது? இந்தப் பிரச்சினையைச் சொல்லித்தானே என்னை இங்கே கொண்டு வந்து சேர்த்திருக்கிறார்கள். எனவே நாட்டிலே இருக்கிற பிரச்சினைகளைத் தீர்க்க நாம் என்ன செய்ய வேண்டும் என்பதை இனியாவது எண்ணிப் பார்க்க வேண்டும். மக்களை எப்படி நம்ப வைத்து நாம் வாக்குகளைப் பெற்றிருக்கிறோம்? எனவே ஒன்றை மட்டும் நாம் தெளிவாக உணர்ந்துகொள்ள வேண்டும். மகாத்மா காந்தியைப் பின்பற்றுபவர்கள் ஆனாலும் சரி, அண்ணாவைப் பின்பற்றுகிறவர்கள் ஆனாலும் சரி, பெருந்தலைவர் காமராஜரைப் பின்பற்றுபவர்கள் ஆனாலும் சரி, அம்பேத்காரைப் பின்பற்றுபவர்கள் ஆனாலும் சரி அல்லது ராதாகிருஷ்ணனைப் பின்பற்றுபவர்கள் ஆனாலும் சரி, தந்தை பெரியாரைப் பின்பற்றுபவர்கள் ஆனாலும் சரி, அவர்கள் மனச்சாட்சியை முன்வைத்து நாட்டுக்கு நல்லது செய்ய வேண்டும் என்ற உணர்வோடு செயல்பட வேண்டும். இந்த வேண்டுகோளை நான் இங்கே விடுக்கும்போது, எங்களோடு எல்லோரும் ஒத்துழைக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். இங்கே ஒரு கதையைக் கூறினார்கள். அப்போது எனக்கு மார்க்சிம் கார்க்கி எழுதிய 'அன்னை' என்கிற கதை தான் நினைவுக்கு வந்தது. கேரளத்திலே 'நீங்கள் என்னைக் கம்யூனிஸ்ட்டாக ஆக்கினீர்கள்' என்ற நாடகம் பரவலாக எல்லா இடங்களிலுமே நடத்தப்பட்டது. அதிலே சாதாரண தொழிலாளி கொடுமையைத் தாங்க முடியாது, இறுதியிலே அவனே அரிவாளைத் தீட்டிக்கொண்டு போய் 'நீங்கள் என்னை கம்யூனிஸ்ட் ஆக்கிவிட்டீர்கள்' என்று சொல்லுவது தான் உச்சகட்டம். அதுபோல் 'அன்னை' என்ற கதையில் மகன் புரட்சியில் ஈடுபடுகிறான். ஏதோ போராட்டத்தில் ஈடுபடுகிறான் என்று தடுத்த அன்னை, கதையின் இறுதிக் காட்சியில் அவளே கொடியைத் தாங்கிக்கொண்டு ஊர்வலத்துக்குத் தலைமை தாங்குகிறாள். இதுவே அந்தக் கதையின் உச்சக்கட்டம். அதுபோல், நாங்கள் வந்துகொண்டிருக்கிறோம். நீங்கள் என்னை அப்படிச் செய்துதான் இங்கே முதலமைச்சர் ஆக்கியிருக்கிறீர்கள். நான் பேசாமல் எப்படியோ எங்கேயோ வேலை செய்துகொண்டு சுதந்திரமாகத் திரிந்துகொண்டிருந்தேன். என்னைக் கொண்டு வந்து நீங்கள்தான் இங்கே முதலமைச்சர் ஆக்கியிருக்கிறீர்கள். இந்த நிலையில் நான் என்ன செய்யட்டும்? நான் இந்த





நாட்டுக்கு என்ன செய்ய வேண்டுமோ அதைச் சொல்லுங்கள், நான் செய்யத் தயாராக இருக்கிறேன். உங்களுக்கு அந்த வாய்ப்பிருக்கிறது. எனவே என்னைப் பயன்படுத்திக்கொள்ளுங்கள். நீங்கள் இந்த நாட்டுக்கு என்ன செய்ய வேண்டுமென்று விரும்புகிறீர்களோ அதை என் மூலம் செய்ய வையுங்கள். தயவுசெய்து அதற்குத் துணை நில்லுங்கள். இதைச் செய்வதிலே தவறு இல்லையென்றே கருதுகிறேன்.

அடுத்து, கண்ணாடியைப் பற்றிச் சொன்னார்கள். வண்ணக் கண்ணாடி மூலம் எப்படித் தெரியும் என்று பேசினார்கள். கண்ணாடி போடுவதே, பார்வை பழுது பட்டால்தான் போடுகிறோம். வெய்யிலைக் கொஞ்சம் பார்க்கக்

(பிற்பகல் 6-30)

கூடாது என்றிருந்தால், அல்லது கண்ணுக்குக் குளிர்ச்சியாக இருக்க வேண்டுமென்றால், வண்ணக் கண்ணாடியைப் போட்டுக் கொள்கிறோம். சிலர் முக அழகுக்காக கோல்ட் பிரேமைச் சேர்த்து, மஞ்சள் கண்ணாடியைப் போட்டுக் கொள்கிறார்கள். ஆனால் நான் சொல்கின்ற கண்ணாடி அறிவுக் கண்ணாடி—பகுத்தறிவுக் கண்ணாடி,—பகுத்துப் பார்க்கின்ற அறிவுக் கண்ணாடியைக் கொண்டு பார்க்க வேண்டும். பகுத்துப் பார்க்கின்ற கண்ணாடியைக் கொண்டு பார்த்தால், உண்மையான வண்ணத்தை நம் கண்ணிலிருந்து மறைக்க முடியாது. அதைப் பெறுவதற்காகத்தான் பகுத்தறிவுக் கொள்கையை ஏற்றுக் கொண்டிருக்கிறோம். அந்த வகையில், சிலர் வேண்டுமென்றே திரும்பத் திரும்ப, 'அதிகாரிகளையெல்லாம் ஒரே நாளில் மாற்றியிருக்கிறோம் என்று சொல்லுகிறார்கள். கிராம அதிகாரிகளைத் திட்டமிட்டு மாற்றுவது என்று முடிவெடுத்தபோது, அதிகாரிகளைப் பழி வாங்கும் நோக்கத்தோடு அவசரக் கோலமாக முடிவு எடுத்ததாகவும், அதற்குப் பிறகு எல்லோரையும் ஒரே நாளில் பழி வாங்கிவிட்டதாகவும் சொன்னார்கள். திருமணமான முதல் இரவு அன்றே ஒருவரிடமிருந்து அதிகாரத்தை எடுத்துக்கொண்டதாக கோர்ட்டில் கூடச் சொன்னார்கள். பிறகு அப்படி இல்லையென்று நிரூபணம் ஆகிவிட்டது. 14—11—1980 அன்று 6,455 பேர்களிடமிருந்து அதிகாரத்தை அதிகாரிகள் திரும்பப் பெற்றிருக்கிறார்கள். இரண்டாவது நாள் 15—11—1980 அன்று 13,018 பேர்களிடமிருந்தும், மூன்றாவது நாள் 16—11—1980 அன்று 3,308 பேர்களிடமிருந்தும், 17—11—1980 அன்று 220 பேர்களிடமிருந்தும், 18—11—1980 அன்று 4 பேர்களிடமிருந்தும், 19—11—1980 அன்று 4 பேர்களிடமிருந்தும் ஆகமொத்தம் 23,009 பேர்களிடமிருந்து அதிகாரத்தை அதிகாரிகள் பெற்றுக்கொண்டார்கள்.

[திரு. எம். ஜி. இராமச்சந்திரன்] [1981 பிப்ரவரி 10

முன்பு 15 ரூபாயாக இருந்தது, இப்போது 50 ரூபாயாக உயர்ந்திருக்கிறது என்று சொன்னார்கள். நான் யாரையும் குறை சொல்லுவதாகக் கருத மாட்டார்கள் என்று நிச்சயமாக நம்புகிறேன். 15 ரூபாய்க்கு வாங்குகிற நிலைமை அண்ணா தி.மு.க. ஆட்சிக்கு வந்த பிறகா ஆரம்பித்தது? எங்கேயோ எப்போதோ முளைத்து பிறகு வளர்ந்து இன்றைக்கு அதிகமாகியிருக்கலாம். 15 ரூபாயாக இருந்தது 50 ரூபாயாக ஆகிவிட்டதென்றால், அதுவும் நாங்கள் சொல்லியல்ல. இது வளர்ந்திருப்பதற்குக் காரணம் தெரிந்தவர்கள் பகிரங்கமாக வெளியே சொல்லாததுதான். இதை மூடி மறைத்தது சரியா? இப்படிப்பட்ட நிலைமைகள் இருக்கின்றன என்பது தெரிந்து, யார் செய்தார்கள் என்பது வெளியே தெரிந்து, மக்கள் மத்தியிலே பரவி இப்படிப்பட்டவர்களா அதிகாரிகளாக இருக்கிறார்கள் என்று மக்கள் பேச ஆரம்பித்தால், நிலைமை என்ன வாகும்? ஆகவே மாண்புமிகு உறுப்பினர்களுடைய ஒத்துழைப்பு தேவை—ஒத்துழைப்பு தாருங்கள் என்று கேட்கிறேன். நாங்கள் குழுவை அமைக்கவிருக்கிறோம். அந்தக் குழுவில் பங்கு பெற்று எங்களுக்கு ஆலோசனையைச் சொல்ல வேண்டும். பிறகு நடவடிக்கை எடுக்காவிட்டால், இந்தக் கேள்வியைக் கேளுங்கள். நடவடிக்கை எடுக்காவிட்டால், இங்கே நாங்கள் இருப்பதில் நியாயம் இல்லை. மாண்புமிகு உறுப்பினர்கள் அந்த ஒத்துழைப்பைத் தந்தாக வேண்டும்.

டாக்டர் கலைஞர் கருணாநிதி முதலமைச்சராக ஆட்சி செய்த நேரத்தில், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி, இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி, நாங்கள் மூவருமாகச் சேர்ந்து எங்கெங்கே பதுக்கல் நடக்கிறதோ அதையெல்லாம் கண்டு பிடித்துத் தரவேண்டுமென்று எண்ணி, பெரிய சரக்கை நிறுத்தி வைத்தோம். திடீரென்று மூன்றாவது நாள், எந்த அதிகாரியிடம் அந்தச் சரக்குகள் பாதுகாப்பாக வைக்கப்பட்டனவோ அதே அதிகாரி அதன் சொந்தக்காரரிடம் கொடுத்துவிட்டார். பிறகுதான் நாங்கள் அந்தத் திட்டத்தைப் பேசிப் பயனில்லையென்று கைவிட்டுவிட்டோம். ஆனால் ஆளும் கட்சியைச் சேர்ந்தவர்களானாலும் சரி, வேறு எந்தக் கட்சியைச் சேர்ந்தவர்களானாலும் சரி, கட்சியில் இல்லாத பெரிய வசதி படைத்தவர்களானாலும் சரி, யாராக இருந்தாலும், தயவுசெய்து சொல்லுங்கள்; நடவடிக்கை எடுக்கிறோம். நாங்கள் அமைக்கின்ற குழுக்களில் எங்களோடு இணைந்து பணியாற்றுங்கள். அதுதான் நீங்கள் தருகின்ற மாபெரும் ஒத்துழைப்பு என்று அத்தனை பேரையும் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.



1981 பிப்ரவரி 10]

திரு. ஜி. சுவாமிநாதன்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் முக்கியமாக ஒன்றைச் சொல்கிறார்கள். இலஞ்ச ஒழிப்புக் குழு என்று சொல்கிறார்கள். இது மிகவும் வரவேற்கக் கூடியது. இதை மிகவும் விரைவாக அமைத்தால் இங்கே இருப்பவர்கள் அதில் கலந்து கொண்டு எங்களாலான ஒத்துழைப்பைத் தரத் தயாராக இருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன்: "இலஞ்ச ஒழிப்பு" அல்ல, "இலஞ்சத் தடுப்பு" என்று எடுத்துக்கொள்ள வேண்டும். இலஞ்சத்தை, ஊழலை, பதுக்கலை, கடத்தலைத் தடுக்கின்ற குழுக்கள், எங்கெங்கே இவைகள் நடைபெறுகின்றனவோ, அவற்றையெல்லாம் கண்டறிவதற்காக அப்படிப்பட்ட பல குழுக்கள் அமைக்கவும், சென்னைக்குத் தனியாக குழுவை அமைக்கவும் அரசு தயாராக இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜி. சுவாமிநாதன் அவர்கள் இங்கே இருக்கின்ற மாமன்ற உறுப்பினர்கள் அத்தனை பேர்களும் ஒத்துக்கொள்கிறார்கள் என்ற வகையிலே சொன்னதை மகிழ்ச்சியோடு, எதிர்ப்பு இல்லை என்ற நம்பிக்கையோடு, ஏற்று வரவேற்கிறேன்.

மதுவிலக்கு பற்றி எடுத்துச் சொன்னார்கள். எங்களிடம் யோசனை கேட்பானேன் என்று சிலர் கேட்டார்கள். நாங்கள் வேறு எங்கே போவது? சட்டமன்றத்திலே வந்து பேசும்போது சட்டமன்ற உறுப்பினர்களுடைய யோசனையைக் கேட்காமல் வேறு யாரைக் கேட்பது? கேட்கவில்லை என்று வாதத்திற்கு வைத்துக்கொள்வோம். அப்போது ஏன் கேட்கவில்லை என்று பிரச்சினையை எழுப்புவார்கள். இப்போதுள்ள நிலைமை என்ன? 'நீங்கள் எதை எப்போது சொல்ல வேண்டுமோ அப்போது சொல்ல மாட்டீர்கள். உங்களைச் சொல்ல வைப்பதற்காகத்தான் நான் இதைக் கேட்டேன்.' ஏதோ நாங்கள் தப்பித்துக்கொள்ள வேண்டுமென்று எண்ணுவதைப் போலவும், மதுவிலக்கைக் கொண்டு வரலாம் என்று முடிவு செய்ததைப் போலவும், அப்படிக் கொண்டு வருவதற்காக, திட்டமிட்டு யாராவது ஏற்றுக்கொள்ளமாட்டார்களா என்று நாங்கள் இருப்பதைப் போலவும் கூறுகிறார்கள். 'குமுதம்' பத்திரிகை கூட தலையங்கம் எழுதியிருக்கிறது. முதலில் பாராட்டிவிட்டு "யார் மீதும் பழி போடாமல் அவர்தான் பொறுப்பேற்றுக்கொள்ள வேண்டும்" என்று கூறியிருக்கிறது. எப்படி இருந்தாலும், 'குமுதம்' தலையங்கத்திற்கு நன்றிக் கடிதம் எழுதவிருக்கிறேன். மிக அழகாக, சுருக்கமாக எழுதியிருக்கிறார்கள். "எம்.ஜி.ஆர். ஆட்சியில் வரவில்லையென்றால், மதுவிலக்கு தமிழ் நாட்டில் வரவே முடியாது" என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். அந்த நம்பிக்கையைப் பெற்றிருக்கிறவன் நான். அவ்வளவு எளிதில் கொள்கையை மாற்றிக்

கொள்பவன் நானல்ல. இந்த மன்றத்திலே இதைச் சிந்தித்துப் பார்க்க
வேண்டும். எத்தனையோ கருத்தைச் சிந்திக்க வேண்டியிருக்கும்,
எத்தனையோ வழிமுறைகளைச் சிந்திக்க வேண்டியிருக்கும் என்பதையெல்
லாம் நாம் நினைத்துப் பார்க்க வேண்டும்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. சித்தாபதி அவர்கள் பேசியதாகக் கேள்விப்
பட்டேன். "மதுவிலக்கு பிரச்சாரக் குழுவுக்கு எம்.ஜி.ஆர். தலைவராக
இருந்தார். அவர் அழைத்து நான் போகவில்லை" என்று அவர் பேசியதாகச்
செய்தி வந்தது. படித்துப் பார்த்தேன். நான் திகைத்தேன். இன்றைக்கு
நான் வேறு கட்சியில் இருக்கலாம். அன்றைக்கு நடந்ததையெல்லாம் நாம்
எப்படி மறந்துவிட முடியும்? இதிலே என்ன பெருமை இருக்கிறது?
திராவிட முன்னேற்றக் கழகப் பொருளாளர் இராமச்சந்திரன், மதுவிலக்குப்
பிரச்சினையைப்பற்றி, மது அருந்துவது தவறு என்பதை மக்களிடம் எடுத்துச்
சொல்லுவதற்கு அழைக்கப்பட்ட குழுவிற்குத் தலைவன் என்று முடிவு
செய்யப்பட்டது. கோவையில் இருக்கின்ற வேறோர் அமைப்பு, சர்வோதய
அமைப்பு, எனக்கு ஒரு கடிதம் எழுதியது. "நாங்கள் இந்தப் பிரச்சாரத்தை
எடுத்துக்கொள்ளுகிறோம். நீங்கள் துணை செய்ய வேண்டும்" என்று
கேட்டுக்கொண்ட நேரத்தில், முதல்வராக இருந்த டாக்டர் கலைஞர்
கருணாநிதி அவர்கள், "நீங்கள் தலைமை தாங்கிப் பணியாற்றுங்கள்.
அவர்கள் துணை புரியட்டும்" என்று சொன்னார்கள். நான் பொறுப்பேற்றுக்
கொண்டேன். கழகத் தலைமை சொன்னதை ஏற்றுக்கொண்டேன். என்ன
நடந்திருக்குமென்று இப்போது நான் புரிந்துகொள்ளுகிறேன்.

(பிற்பகல் 6-40)

**திரு. ஆர். டி. சீத்தாபதி:** தலைவர் அவர்களே, நான் சொன்னது மது
விலக்குக் கொள்கைக்கு மாறான கருத்தல்ல. அறிஞர் அண்ணா அவர்கள்
அமெரிக்க நாட்டுக்குச் சுற்றுப்பயணம் செய்துவிட்டு வந்த பிறகு சொன்
னார்கள். 'ஒரு மனிதன் மதுவை அருந்தலாமே தவிர, அந்த மனிதனுடைய
உணர்வுகளை, மனிதனையே மது அருந்திவிடக்கூடாது' என்று சொல்லியிருக்
கிறார்கள். அதனாலே அந்த நிகழ்ச்சியிலே கலந்துகொள்ள முடியவில்லை
என்று சொல்லிவிட்டேன்.

**மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன்:** மாண்புமிகு தலைவர்
அவர்களே, அவர் விளக்கம் சொன்னதற்கு நன்றி. மதுவிலக்குபற்றிச்
சொன்னார். அவர் சொன்னதையே நான் அதற்கு விளக்கமாகப் பயன்படுத்திக்
கொள்ளலாம் என்று கருதுகிறேன். மது அருந்தலாம், ஆனால் அது



மனிதனை அருந்தக்கூடாது. நான் சொன்னதற்கு அவரும் அதைச் சொல்
கின்றார்கள். அண்ணாவின் கொள்கையைப் பின்பற்றி, அண்ணாவின் பெய
ரிலேயே இருக்கின்ற எங்கள் கழகம் அமைத்திருக்கின்ற ஆட்சியும் மது
விலக்கை ரத்து செய்யக்கூடாது, அதை ஒழுங்காக ஆக்க, சீராக்க வேண்டு
மென்பதற்காகத்தான் எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் சொன்னார்கள்.
"கட்சித் தலைவர் மதுவை அருந்தக் கூடாது என்று சொல்லியிருக்கிறார்.
ஆகவேதான் மதுவிலக்கு வேண்டுமென்றும், மதுவை அருந்தாதே என்றும்
சொல்லி கொள்கையை அரசு அறிவிக்க அண்ணா சமாதிக்குச் செல்லும்போது,
வரமாட்டேன்" என்று சொன்னது அவருக்கு நினைவு இருந்தால், நான்
அதை மறுக்கவில்லை. அதே நேரத்தில் அவர்கள் எவ்வளவு பற்றோடும்
பாசத்தோடும் இருந்தார்கள் என்பதை நான் எடுத்துச் சொல்ல விரும்பு
கிறேன். அவர்கள் அங்கே இருக்கிறார்கள். நான் இங்கே இருக்கிறேன்.
பரவாயில்லை. இந்தக் கொள்கையில் நான் எவ்வளவு தீவிரமாக இருக்கி
றேன் என்பதை அவர்களும் ஒத்துக்கொள்கிறார்கள். மிகத் தீவிரமாக
இருக்கிறேன் என்பதையும் ஒப்புக்கொள்கிறார்கள். இந்த நிலையில் நான்
தீவிரமாக இல்லாமல், அதற்கேற்ற சட்டம் கொண்டுவராமல் எப்படி இருக்க
முடியும்? சட்டம் கொண்டுவந்தது தவறு என்றால், சட்டம் இல்லாமல்
எப்படி வாயளவிலேயே பேசி மதுவிலக்குத் திட்டத்தை நிறைவேற்ற முடியும்?
அப்படி முடியுமென்றால், மகாத்மா காந்தி அவர்கள் காலத்திலேயே செய்
திருக்க முடியும். முதலில் அப்போதிருந்த மெட்ராஸ் ஸ்டேட்டில் திரு.
இராஜாஜி அவர்கள்தான் மதுவிலக்குத் திட்டத்தைக் கொண்டு வந்தார்கள்.
அதுவும் சேலம் மாவட்டத்தில் கொண்டு வந்தார்கள். பிறகு கொஞ்சம்
கொஞ்சமாக மாநிலம் முழுவதற்கும் அதை விரிவுபடுத்தினார்கள். ஏன்?
நான் என்ன சொன்னேன்? குடிக்கக் கூடாது என்று சொன்னேன். குடித்
தால் தண்டனை என்று சொன்னேன். யார் குடித்துவிட்டு வருகிறார்களோ
அவர்களுக்கு ஆயிரம் ரூபாய் அபராதம், 500 ரூபாய் அபராதம், ஒரு வருடம்,
ஆறு மாதம், மூன்று மாதம் சிறை தண்டனை என்று சொல்லியிருந்தேன்.
இப்படியெல்லாம் சொன்னது எதற்காக? இப்படிப்பட்ட தண்டனைகள் இருக்
கின்றன என்பது அவர்களுக்குத் தெரிய வேண்டும் என்பதற்குச் சொன்னேன்.
சிறைச்சாலைக்குள் சென்று பின்பாவது திருந்த வேண்டும் என்பதற்காகத்தான்
அப்படிச் சொன்னேன். அவர்கள் குடித்து விடுவதால் குடும்பம் வீதியிலே
நிற்கிறதே என்று சொன்னேன். எனக்கு மட்டும் அதிலே என்ன லாபம்?
எனக்குக் கெட்ட பெயர்தான் மிச்சம். அப்படி கெட்ட பெயர் வரும் என்பது
எனக்குத் தெரிந்ததுதான். இருந்தும் சட்டம் கொண்டு வந்தேன். ஆனால்
நடந்தது என்ன? என்ன ஆயிற்று? யாரோ ஒரு ஆள் அந்தத் தவற்றைச்
செய்யப்போய், அவன் சிறைக்குச் செல்ல, அவனுடைய வீட்டிலே இருக்கின்ற

பெண்கள், தாய்மார்கள் எல்லாம் வீதியிலே பிச்சையெடுக்கின்ற நிலைமை ஏற்பட்டுவிட்டது. அந்தத் தொழிலாளி வேலை செய்தால்தான் அந்தக் குடும்பம் நடக்கும் என்ற நிலை இருந்தது. நான் என்ன நினைத்தேனோ அதற்கு நேர் விரோதமாக இருந்தது. பெண்கள் அழுதார்கள். இந்தத் தாய்மார்களுக்குத் துன்பம் வரக்கூடாது என்பதற்காகத்தான் சட்டம் கொண்டு வந்தோம். ஆனால் அந்தச் சட்டம் அதற்கு உதவவில்லை. இந்தத் தொல்லைகள்தான் ஏற்பட்டிருக்கின்றன. குடும்பத்தில் பெண்களும், குழந்தைகளும் பட்டினி கிடக்காமல் இருந்தால் போதும் என்றுதான் பார்த்தோம். ஆனால் நிலைமை அப்படி இல்லை. அப்படி குடும்பத்தினர் துன்பப்படும் நிலைமைகள் இருக்கும்போது, அந்தச் சட்டத்தைத் தளர்த்தாமல், அப்படியே வைத்திருந்தால், நான் சர்வாதிகாரியா அல்லது ஜனநாயகவாதியா? நாம் ஜனநாயகத்தைத்தான் நம்பி வந்திருக்கிறோம் என்று சொல்கிறார்கள். அந்த ஜனநாயக முறையில் மக்கள் வாழ வகை செய்ய வேண்டும். அவர்கள் கருத்துக்கேற்றவாறு நாம் நடக்க வேண்டும். "அவர்கள் விரும்பினாலும் விரும்பாவிட்டாலும், நாம் சட்டம் என்று கொண்டு வந்துவிட்டோம். ஆகவே அதை மக்கள் எல்லோரும் ஏற்றுக்கொள்ளத்தான் வேண்டும்" என்று சொல்வது நல்ல ஜனநாயகமாகாது. மக்களுக்குத்தான் சட்டமே தவிர, சட்டத்திற்காக மக்கள் அல்ல என்று சொல்லிக்கொள்கிறேன். ஒரு சட்டத்தைக் கொண்டு வந்தோம் மக்கள் நன்மைக்காக. எந்த நன்மைக்காக அந்தச் சட்டத்தைக் கொண்டு வந்தோமோ அதற்கு அது பயன்படவில்லை. அதற்கு எதிரான பயன் கிடைத்தது என்றால், நான் அதைப்பற்றிச் சிந்திக்க வேண்டாமா? அதிலேயும் குற்றம் சாட்டப்பெற்றுள்ளது. பல முறைகள் குற்றம் சாட்டப்பெற்றது. பலர் இதைப்பற்றிக் குற்றம் சாட்டினார்கள். மக்கள் பிரதிநிதிகள் குற்றம் சாட்டினார்கள். எங்கு பார்த்தாலும் லஞ்சம். மக்கள் பயந்து பயந்து வருகிறார்கள், வாழ்கிறார்கள் என்றெல்லாம் சொன்னார்கள். இந்தச் சட்டத்திற்காக பயந்துகொண்டு இருக்கிறார்கள், இதனால் போலீஸ்காரர்களுக்கு லஞ்சம் ஜாஸ்தியாகக் கிடைக்கிறது என்றார்கள். ஆகவேதான் நான் 25 ரூபாய்க்கு பெர்மிட் என்ற முறையைக் கொண்டு வந்தேன். "வீட்டிற்கு வெளியே குடிக்கக்கூடாது. வாங்கும் மதுவை வீட்டிற்குக் கொண்டுபோய் குடிக்க வேண்டும். வீட்டிற்கு வாங்கிக் கொண்டு போகும் வழியில் வீதியில் குடிக்கக்கூடாது. குடித்துவிட்டு வீதியில் போகக்கூடாது" என்று சொல்லியிருக்கிறோம். இதைச் சொல்லிவிட்டு சாராயத்தைத் தடை செய்யச் சட்டம் கொண்டு வருகிறோம். அதற்குள் இப்போதே சாராயம் இருக்கிறதே, மது இருக்கிறதே, எங்கும் இருக்கிறதே, இனிமேலும் மதுவிலக்கு என்பது எங்கே என்றெல்லாம் கேட்கிறார்கள். பின் ஏன் கவலைப்படுகிறார்கள் மதுவைப்பற்றி? இப்போதே மதுவிலக்கு என்று





ஒன்றில்லை, இப்போது மது வந்த மாதிரிதான் என்றால், இப்போது மதுவிலக்கை ரத்து செய்தேன் என்றே வைத்துக்கொள்ளுங்கள். அதற்காகப் பேச வேண்டியதில்லை, அதைப்பற்றிக் கவலைப்படவேண்டிய அவசியம் இல்லையே. ஆனால் இதை அரசியல் ஆக்கலாமா என்ற நோக்கத்துடன்தான் அதைப் பற்றிப் பேசிக்கொண்டிருக்கிறார்கள். "இந்தப் பிரதேசத்தில் எம்.ஜி. இராமச்சந்திரனுக்கு ஆதரவு இருக்கிறது, மக்களுடைய அன்பைப் பெற்றவன், தமிழர்களுடைய நம்பிக்கைக்கு உரியவன், மது அருந்தக்கூடாது என்ற கொள்கைக்குச் சொந்தக்காரன். அவனே மதுவைக் கொண்டுவந்து மக்கள் மத்தியிலே அவனுக்கு இருக்கின்ற செல்வாக்கைத் தவிர்க்கலாம்" என்று நினைக்கிறார்கள். பின் ஏன் மதுவைக் கொண்டு வந்தேன் என்று சொல்ல வேண்டும்? மேடையிலே என்ன பேசுகிறார்கள்? "எங்கு பார்த்தாலும் சாராயம். சட்டம் போட்டால் அது சர்வாதிகாரம். அணுகுமுறை சரியில்லை" என்று சொல்கிறார்கள். குடிகாரன் அடிக்க வருகிறான், கொலை செய்ய வருகிறான், அக்கிரமம் செய்கிறான். அவனிடம் போய் "கொஞ்சம் அமைதியாக இருங்கள்" என்று நான் சொல்ல வேண்டுமென்று நினைக்கிறார்களா? இதுதான் அணுகுமுறை என்றால், அது எப்படி நடக்க முடியும்? அது எப்படி இயலும்? இந்தப் பிரச்சினைகளையெல்லாம் நாம் அரசியல் ஆக்காமல் இருக்க வேண்டும் உண்மையிலேயே நாங்கள் ஒரு நல்ல எண்ணத்தில்தான் செய்தோம். நாங்கள் யார் மீதோ பழி போட்டுவிட்டுப் போய்விடுபவர்கள் அல்ல என்பதை தயவுசெய்து இங்குள்ள ஒவ்வொரு உறுப்பினரும், கட்சித் தலைவரும் புரிந்துகொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். இந்த அமைச்சரவையைப் பொறுத்தவரையில், எந்தச் சட்டத்தைக் கொண்டு வந்தாலும், அதன் முழுப் பொறுப்பையும் நாங்களே ஏற்றுக்கொள்ளலாமே தவிர, சட்டசபை சொல்லிற்று, நாங்கள் சட்டசபையில் கொண்டுவந்து சட்டம் நிறைவேற்றினோம். அப்படி நிறைவேற்றியதால் ஏற்றுக்கொண்டோம் என்றெல்லாம் சொல்லி அந்த வகையில் தப்பித்துக்கொள்ளத் தயாராக இல்லை. அதற்கு நாங்கள் பின்வாங்கமாட்டோம். பின்வாங்கியவர்கள் தவறி விழுகின்ற நிலையிலும் நாங்கள் பின்வாங்க மாட்டோம். அவர்கள் தூற்றி வருகின்ற நிலையிலும் நாங்கள் பின்

வாங்க மாட்டோம் என்பதை அவர்கள் உணர வேண்டும் என்று தெரிவித்துக் கொள்கிறேன். இதை அவர்கள் உணர வேண்டும். இந்தப் பிரச்சினை நன்கு ஆராய வேண்டிய ஒரு பிரச்சினை. இதுபோன்ற பல பிரச்சினைகள் இருந்துகொண்டிருக்கின்றன.

அடுத்து, வீராணம் திட்டம் பற்றிய பிரச்சினை இருக்கிறது. நிச்சயமாக வீராணம் திட்டம் கூடாது என்பதற்குப் பல காரணங்களைச் சொல்லியிருக்கிறார்கள். மாண்புமிகு செட்டி நாட்டரசர் அவர்கள்கூட இங்கே கருத்து சொன்னதாகக் கேள்விப்பட்டேன். அதைப்பற்றிப் பரிசீலிக்க வேண்டுமென்று சொன்னார்கள் என்று கேள்விப்பட்டேன். அதைப் பரிசீலிப்பதற்கு ஒரு வழி சொல்லியிருந்தால், நன்றாக இருந்திருக்கும். அதிலே ஏற்பட்டிருக்கின்ற தவறுகள், தீமைகள் எல்லாவற்றையும் எண்ணிப் பார்த்திருக்க வேண்டும். அதற்கு ரூ. 250 கோடி செலவழித்தால்தான், வீராணம் திட்டப்படி சென்னைக்குத் தண்ணீர் கிடைக்கும். 400 கோடி ரூபாய் வரையில்கூட செலவாகும் நிலைமைகள் இருக்கின்றன. 15 டி.எம்.சி. தண்ணீர் கிடைக்கும் என்று சொல்கிறார்கள். அப்படி நாம் ரூ. 250 கோடி அளவுக்குச் செலவு செய்தாலும், தண்ணீர் சீராகக் கிடைக்குமா என்று பார்த்தால், அதற்கிடையிலே சில பிரச்சினைகள் இருக்கின்றன. தண்ணீரைத் தள்ளுகின்ற இயந்திரங்கள், கருவிகள் எந்தப் பகுதியில் பழுதுபட்டாலும், அதன் காரணமாக தண்ணீர் கிடைக்காது. இது இயற்கைச் சக்தியோடு இழுத்துச் செல்லப்படுகின்ற தண்ணீர் என்று சொல்கிறார்கள். அதற்கு நமக்கு எங்கேல்லாம் வசதிகள் இருக்கின்றன என்றும் கேட்கிறார்கள். அப்படித் தண்ணீர் வரும்போது, வழியிலே யாரும் தண்ணீர் எடுக்கமாட்டார்களா என்கிறார்கள். அதற்குக் குறுக்கே வரமாட்டார்களா? இதே கேள்வியைத்தான் ஆந்திராவிலே கேட்கிறார்கள். மராட்டிய மாநிலத்திலே கேட்கிறார்கள். ஆந்திரா 5 டி.எம்.சி., மராட்டியம் 5 டி.எம்.சி., கர்நாடகம் 5 டி.எம்.சி., ஆக 15 டி.எம்.சி. நமக்குக் கிடைக்கும். அந்த 15 டி.எம்.சி. தண்ணீரை ஆந்திரா வழியாகத்தான் தமிழகத்திற்குக் கொண்டு வருகிறோம் என்றால், அதைத் திறந்த வாய்க்கால் வழியாகத்தான் கொண்டுவர முடியும். அப்படி இல்லாமல் குழாய்கள் மூலம் கொண்டு வருவது என்று சொன்னால், இன்றுள்ள நிலைமைகளின்படி நமக்கு ரூ. 1,400 கோடி அளவுக்குச் செலவாகும். அது நடக்கக்கூடிய காரியமாகவா இருக்கிறது? யார் இதற்குப் பணம் ஒதுக்குவது? அந்தப் பணத்தை உலக வங்கியில் கடனாக வாங்குவது என்று வந்தாலும், அதற்கு மத்திய அரசு 1/3 பங்குதான் கொடுக்கும். அது கொடுக்கும் வட்டி போக மீதிக்கு நாம்தான் வட்டி செலுத்த வேண்டும். இதெல்லாம் இங்குள்ள உறுப்பினர்களுக்குத் தெரியாததல்ல. அது மட்டுமல்லாமல், அங்கேயிருந்து





தண்ணீர் வரும்போது மற்ற மாநிலத்தவர்களிடம் அவர்கள் வழியில் தண்ணீர் எடுக்கமாட்டார்கள் என்பதற்கு உத்தரவாதம் வாங்கவேண்டும். ஆகவே குழாய்களில் கொண்டுவரலாம் என்றும் சொல்கிறார்கள். ஆந்திர முதல்வர்

(பிற்பகல் 6-50)

மாண்புமிகு திரு. அஞ்சையா அவர்கள், அங்கிருந்து இங்கே வந்த நண்பர் திரு. ஜனார்த்தனம் ரெட்டி அவர்களிடம் ஒரு தகவல் சொல்லியனுப்பியிருக்கிறார்கள். உடனடியாக 5 டி.எம்.சி. தண்ணீர் தருவதற்குத் தயாராக இருக்கிறோம், அதை எடுத்துக்கொண்டு செல்ல ஏற்பாடு செய்வீர்களா என்று கேட்டிருக்கிறார்கள். அதைத் திறந்த கால்வாயில்தான் கொண்டுவர வேண்டும். அதற்கு என்ன பாதுகாப்பு? அதிலிருந்து தண்ணீரை எடுக்க மாட்டார்களா? நம் மாநிலத்திற்குள்ளே, நமது கட்டுப்பாட்டுக்குள்ளே இருக்கின்ற பகுதிகளில் திறந்த கால்வாயில் தண்ணீர் கொண்டு வர முடியாதென்ற நிலைமை இருந்தால், வெளி மாநிலத்திலிருந்து எப்படிக் கொண்டு வருவது? 100-க்கு 90 பகுதி வெளி மாநிலங்களிலுள்ள பகுதிகளில்தான் அந்தத் தண்ணீர் வர வேண்டும். அது எப்படி வந்து சேரும்? யாருக்காகவோ பேசுவது நிச்சயமாக நல்லதல்ல. விராணம் திட்டம் வேண்டாமென்று சொல்லுவது, நிச்சயமாக பொறாமை உணர்ச்சியால் அல்ல. யாருக்கோ அவமானத்தை உண்டாக்க வேண்டுமென்ற உணர்வோடு சொல்லவில்லை. 2001 ஆம் ஆண்டு அல்லது 2005 ஆம் ஆண்டு சென்னை மாநகரத்திலுள்ள மக்களுக்கு எவ்வளவு டி.எம்.சி. தண்ணீர் தேவையோ அதை நாம் கொடுத்தாக வேண்டும். அதற்கான திட்டத்தை இப்போதே போட்டாக வேண்டும். அவர்கள் ஒன்றைச் சொன்னார்கள். கடன், வட்டி பற்றியெல்லாம் சொல்லும்போது, நாங்களும் ஆட்சிக்கு வரப் போகிறவர்கள், ஆகவேதான் கூடாதென்று சொல்லுகிறோமென்று சொன்னார்கள். நம்பிக்கை வைத்திருப்பதைக் கண்டு மகிழ்ச்சியடைகிறேன். நம்பிக்கை வேண்டும். நம்பிக்கை இல்லாமல் மக்கள் வாழ முடியாது. எனக்குப் பெண் பிறக்க வேண்டும், பையன் பிறக்க வேண்டும்; அந்தப் பையன் அல்லது பெண்ணுக்குக் கல்யாணம் செய்ய வேண்டும்; அந்தப் பையன் அல்லது பெண்ணுக்குப் பிள்ளை பிறக்க வேண்டும் அல்லது பெண் பிறக்க வேண்டும்; அந்தப் பேரன் அல்லது பேத்திகளோடு விளையாட வேண்டுமென்று ஆசை வரலாம். ஆனால் அதை வைத்துக் கொண்டு கொள்கையை நிர்ணயிக்க முடியாது. அமைச்சராகப் போகிறோம், வட்டி கடனை ரத்து செய்ய வேண்டும்; ஒத்துக்கொள்ளாமல் இருக்கிறோம் என்று சொன்னால் நியாயமல்ல. பதவிக்கு வந்தாலும், வராவிட்டாலும் மக்களின் பிரதிநிதிகள் என்ற நிலையில் எது நியாயம், எது நல்லது, எது கெட்டது என்று அறிந்து பேச வேண்டும்.

[திரு. செ. முத்துசாமி] [1981 பிப்ரவரி 10

2. தமிழாசிரியர்களுக்கு உயர் பள்ளிகளில் தலைமை ஆசிரியர் பதவி கொடுக்கப்படாதது குறித்து;

3. பணிக்கர் தலைமையிலான ஒருநபர் குழு அறிக்கை வெளியீட்டு அமுலாக்கப்படாதது குறித்து;

4. ஆசிரியர் பயிற்சி பெற்று வேலையில்லாத 40 ஆயிரத்துக்கு மேற்பட்டோருக்கு பணி வழங்கப்படாதது குறித்து;

5. தனியார் பள்ளி ஆசிரியர்கட்கும் பிற ஊழியர்கட்கும் பணிப் பாது காப்பு வழங்கும் விதத்தில் தமிழ்நாடு தனியார் பள்ளி ஒழுங்குபடுத்தும் சட்டத்தில் தக்க திருத்தங்கள் கொண்டு வரப்படாதது குறித்து;

6. நீலகிரி மலையில் பணிபுரியும் ஆசிரியர்கட்கும் அரசு ஊழியர்கட்கு வழங்குவதுபோல் பருவ காலப்படி (Season Advance)) வழங்கப்படாதது குறித்து;

7. ஓசூர் மற்றும் நீலமலை முழுவதும் குளிர்காலப்படி வழங்கப் படாதது குறித்து;

8. செங்கை மாவட்டம் முழுவதும் நகர ஈட்டுப்படி வழங்கப்படாதது குறித்து;

9. தெலுங்கு, கன்னடம், உருது, மலையாளம் மொழிப்பள்ளி மாணவா கட்கு புத்தகங்கள் கல்வி ஆண்டு தொடக்கத்திலேயே தர ஏற்பாடு செய்யாதது;

10. காவலர் துறையினருக்கு சலுகை விலையில் உணவுப் பொருட்கள் தருவதுபோல் ஆசிரியர்கட்கும் பள்ளி, கல்லூரி விடுதி மாணவர்கட்கும் வழங்காதது;

11. எல்லா நிருவாகப் பள்ளிகளையும் அரசு ஏற்று கல்வி வாரியத்தின் கீழ் கொண்டு வாராதது குறித்து;

12. ஆசிரியர்கள் பிரச்சினை தீர்க்கப்பட நிரந்தர அமைப்பாக ஆசிரியர் பணிக்குழு ( Teachers Service Council ) அமைக்கப்படாதது;

13. மேல்நிலைப் பள்ளி ஆசிரியர்கட்கு பணி விதிகள் உடனடியாக வெளியிடப்படாதது;



1981 பிப்ரவரி 10]

14. அண்ணாமலை, மதுரை, சென்னை பல்கலைக் கழக ஆசிரியர்களின் பிரச்சினைகள் தீர்க்கப்படாதது குறித்து;

மேதகு ஆளுநர் அவர்களின் உரையில் எதும் குறிப்பிடப்படாததற்கு இவ்வவை தன் வருத்தத்தைத் தெரிவித்துக் கொள்கிறது.

திருத்தம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, தோல்வியுற்றது.

**மாண்புமிகு மேலவைத் தலைவர்:** அவை முன் உள்ள பிரச்சினை—

"1981 ஆம் ஆண்டு சனவரித் திங்கள் 21 ஆம் நாள் ஆளுநர் அவர்கள் சட்டமன்ற உறுப்பினர்களுக்கு உரை நிகழ்த்தியதற்காக, தமிழ்நாடு சட்டமன்ற மேலவை உறுப்பினர்கள் தங்களுடைய நன்றியை ஆளுநர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றனர்."

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

**மாண்புமிகு மேலவைத் தலைவர்:** மேலவையின் நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. அவை மீண்டும் நாளை காலை 10.30 மணிக்குக் கூடும்.

பின்னர், அவை ஒத்திவைக்கப்பட்டது.

(பிற்பகல் 6-55)

## 7. அவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள்.

### A. Statutory Rules and Orders.

188. Notifications issued with G.O. Ms. No. 2286, Agriculture, dated the 28th November 1980 in regard to the declaration of certain villages to be notified market area for Pochampalli market. [Laid on the table of the House under section 29 (4) of the Tamil Nadu Agricultural Produce Markets Act, 1959 (Tamil Nadu Act 23 of 1959).]

189. Notification issued with G.O. Ms. No. 2276, Agriculture, dated the 27th November 1980 in regard to the exclusion of 126 villages from the notified area of Dharmapuri market for being declared as notified market area for Pennagaram market. [Laid on the table of the House under section 29 (4) of the Tamil Nadu Agricultural Produce Markets Act, 1959 (Tamil Nadu Act 23 of 1959).]

190. Notification issued with G.O. Ms. No. 2268, Agriculture, dated the 25th November 1980, in regard to an amendment to the Tamil Nadu Agricultural Produce Markets Rules, 1962. [Laid on the table of the House under section 29 (4) of the Tamil Nadu Agricultural Produce Markets Act, 1959 (Tamil Nadu Act 23 of 1959)].

191. Notification issued with G.O. Ms. No. 2269, Agriculture, dated the 25th November 1980 in regard to an amendment to the Tamil Nadu Agricultural Produce Markets Rules, 1962. [Laid on the table of the House under section 29 (4) of the Tamil Nadu Agricultural Produce Markets Act, 1959 (Tamil Nadu Act 23 of 1959)].

192. Notification issued with G.O. Ms. No. 2877, Labour and Employment, dated the 22nd December 1980 in regard to the enforcing of all the provisions of Tamil Nadu Catering Establishments Act, 1958 to certain Town Panchayats. [Laid on the table of the House under section 29 (4) of the Tamil Nadu Catering Establishments Act, 1958 (Tamil Nadu Act XIII of 1958).]

*B. Reports, Notifications and Other Papers.*

*24. The Tamil Nadu Prevention of Incitement to Refuse or Defer Payment of Tax Bill, 1981 (L.A. Bill No. 11 of 1981), as passed by the Assembly.

* Circulated to all M.L.Cs. on 9th February 1981.



## இணைப்பு I.

[78 ஆம் பக்கத்தில் உடுக்குறியிட்ட வினா 64-க்கான விடையைக் காண்க.]

1-4-1970 முதல் மாவட்ட கழகப் பள்ளிகளை, அரசு 'பி' பிரிவு பள்ளிகளாக எடுத்துக்கொண்டபோதிலும், 'ஏ' மற்றும் 'பி' பிரிவு ஆசிரியர்களை ஒருங்கிணைப்பது குறித்தும், மற்றும் 'பி' பிரிவு ஆசிரியர் பணிக்கான தனி விதிகள் குறித்தும் அரசின் ஆணைகளை முறையே 2-11-1978 மற்றும் 2-7-1978-ல்தான் வெளியிட முடிந்தது.

2. 'பி' பிரிவு ஆசிரியர்களின் பணியினை முதற்கண் பள்ளிக் கல்வித் துறையில் வரன் முறைப்படுத்தப்பட்டு, அவர்கள் அந்தப் பதவிகளில் தகுதிகாண் பருவம் முடிக்கப்பட்டதாக அறிக்கை கிடைத்த பின்புதான், அவர்களை அரசு ஊழியர்களாகக் கருதி அவர்களுடைய பணியினை கல்லூரிக் கல்வித் துறையில் பதவி உயர்வு கொடுக்கப்பட்டதாகக் கருதி வரன்முறைப்படுத்த அரசால் முடியும்.

3. இது சம்பந்தமாக, பள்ளிக் கல்வி இயக்குநர் மற்றும் கல்லூரிக் கல்வி இயக்குநருடன் தொடர்பு கொண்டு, அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது.

## இணைப்பு II.

[106 ஆம் பக்கத்தில் இனம் 3 (1)-க்கான அடிக்குறிப்பைக் காண்க.]

அரசுக்கு கிடைக்கப்பெற்ற தகவலின்படி சில மாதங்களுக்கு முன்பு குலசேகரம் காவல் நிலைய எல்லைக்குட்பட்ட அலெக்ஸாண்டர்புரத்தில் ஒரு சிறு மாதா கோயில் கட்டப்பட்டது. அதைச் சுற்றி வசித்த சிலருக்கு அம்மாதா கோவிலில் நடைபெறும் இறை வழிபாடு இடைஞ்சலாகப்பட்டது. இவ் வழிபாட்டை எதிர்த்தவர்களுள் ஒருவர் இறந்துபோன ஏ. ஜே. ராஜு. இவர் இந்திரா காங்கிரஸ் அரிசன பிரிவின் மாவட்டத் தலைவர். அம் மாதா கோவிலின் வழிபாடு குறித்து குலசேகரம் காவல் நிலையத்தில் இரு பிரிவினரிடமிருந்தும் மனுக்கள் வரப்பெற்றன. இரு பிரிவினரும் பொது அமைதியை காக்கும்படி எச்சரிக்கப்பட்டனர்.

2. மேற்சொன்ன விஷயமாக 17—1—1981 அன்று அக்கிராமத்தில் பொது இடத்தில் கலவரம் செய்தனர். குலசேகரம் காவல் நிலைய உதவி ஆய்வாளர் சம்பவம் நடந்த இடத்தை பார்வையிட்டு 7 நபர்களை 18—1—1981 காலை

## பொருளடக்கம்


பக்கங்கள்

1. கவன ஈர்ப்பு—
   கும்பகோணம் அரசினர் ஆடவர் கல்லூரி மாணவர் ஒருவர் மர்மமான முறையில் மரணமடைந்தது குறித்து .. .. 235—236

2. தனி உறுப்பினர் தீர்மானம்—
   அனைத்துப் பள்ளிகளையும், கல்லூரிகளையும், அரசே ஏற்று நடத்துவது குறித்து. .. 237—300

3. அறிவிப்புகள்—
   (1) ஆளுநரிடமிருந்து செய்தி .. .. 301
   (2) பேரவைத் தலைவரிடமிருந்து செய்தி .. 301
   (3) அலுவல் ஆய்வுக் குழுவின் முடிவு .. 344

4. அரசின் சட்ட முன்வடிவுகள்—
   (1) தமிழ்நாடு 1981–ஆம் ஆண்டு நிதி ஒதுக்கச் சட்ட முன் வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன் வடிவு எண். 18/1981). .. 301—302
   (2) வரி செலுத்துவதை மறுக்குமாறு அல்லது தள்ளிப் போடுமாறு தூண்டுவதைத் தடுப்பதற்கான தமிழ்நாடு 1981–ஆம் ஆண்டு சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன் வடிவு எண். 11/1981) .. .. 302—344

[திரு. எம். ஜி. இராமச்சந்திரன்] [1981 பிப்ரவரி 10

இங்கே பல கருத்துக்கள் சொல்லப்பட்டன. அவைகளுக்கெல்லாம் பதில் சொல்ல நேரமில்லை. எனவே இதோடு என் பேச்சை முடித்துக்கொள்கிறேன். மற்றவர்கள் சொன்ன கருத்துக்களுக்குப் பதில் சொல்லவில்லை என்று தவறாக நினைக்க வேண்டாம். எல்லாவற்றையும் நினைவிலே வைத்திருக்கிறேன். ஆசிரியர்கள் பிரதிநிதிகள் கருத்துக்களைச் சொன்னார்கள். அவர்களுக்கெல்லாம் பதில் சொல்லியாக வேண்டும். மாண்புமிகு உறுப்பினர் திரு. தாமோதரன் அவர்கள் கருத்துக்களைச் சொல்லியிருக்கிறார்கள். நான் அலட்சியப்படுத்திவிட்டேன் என்று யாரும் கருதக்கூடாது. பதில் சொல்ல நேரமில்லை. பட்ஜெட் செஷன் வர இருக்கிறது. நிச்சயமாக, உறுப்பினர்கள் சொன்ன ஒவ்வொரு கருத்தையும் பரிசீலிப்போம். எங்களுடைய நன்மைக்காக, முன்னேற்றத்திற்காகச் சொல்லப்பட்ட கருத்துக்கள் என்று அவைகளை ஏற்று பரிசீலிப்போம் என்று சொல்லி, ஆளுநர் அவர்கள் உரையை ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று கேட்டு, முடிக்கிறேன்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. க. மீனாட்சிசுந்தரம் அவர்கள் தன்னுடைய திருத்தத்தை வலியுறுத்துகிறாரா, திரும்பப் பெறுகிறாரா?

*திரு. க. மீனாட்சிசுந்தரம்: தலைவரவர்களே, நான் என்னுடைய திருத்தத்தை வலியுறுத்தவில்லை. ஒரு வேண்டுகோளை மட்டும் தெரிவிக்க விரும்புகிறேன்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர்:** முதலமைச்சரவர்கள் பதிலுரை முடிந்தவுடன் சொல்லியிருக்க வேண்டும்.

*திரு. க. மீனாட்சிசுந்தரம்: அண்ணாமலைப் பல்கலைக் கழக ஆசிரியர்களை சிறையிலிருந்து விடுதலை செய்வதற்காக நான் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். முத்தரப்புப் பேச்சு வார்த்தைக்கு ஏற்பாடு செய்து, ஏற்கெனவே நடைப்பட்டிருக்கின்ற கோரிக்கைகளை நிறைவேற்ற ஆக ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன்:** முத்தரப்புப் பேச்சுவார்த்தை என்பது இப்போது தேவையற்றது. பேச வேண்டியவர்கள் நிர்வாகத்தினரும், மற்றவர்களும்தான். அவர்கள் பேசிய பிறகும், அந்தப் பிரச்சினை தீராமலிருந்தால்தான் அரசுக்கு வரும். அப்போது அதற்கு ஏற்பாடு செய்வோம். அதற்கு ஒத்துழையுங்கள் என்று கேட்டுக்கொள்கிறேன்.



1981 பிப்ரவரி 10]

*திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன்: மாண்புமிகு முதல்வரவர்கள் நிபந்தனையின்றி ஆசிரியர்கள் விடுதலை செய்யப்படுவார்களென்று அறிவித்ததற்காக நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். அது மட்டுமல்ல. மாலை நேரங்களிலும், விடுமுறை நாட்களிலும்கூட ஆசிரியர்கள், அலுவலர்கள் கூடுதலாக வேலை செய்து, சிறப்பு வகுப்புகள் நடத்தி, மாணவர்களை நல்ல முறையிலே தேர்வுக்குத் தயாரிக்கின்ற பொறுப்பை ஏற்றுக்கொண்டிருக்கிறார்கள் என்ற செய்தியை அவர்கள் சார்பாகத் தெரிவித்துக்கொள்கிறேன். மேலவையில் முதலமைச்சரவர்கள் முன்பே கொடுத்த வாக்குறுதியில் அவர்கள் நம்பிக்கை வைத்திருக்கிறார்கள். அதில் எந்தவிதமான ஐயப்பாடுமில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஜூலை மாதத்தில் ஏற்பட்ட உடன்படிக்கை ஏதோ சில காரணங்களால் நிறைவேற்றப்படாததால், அதை நிறைவேற்ற, மாண்புமிகு முதல்வரவர்கள் குறிப்பிட்டதுபோல, நடவடிக்கை எடுத்தால் கூடப் போதுமானது. அந்த அளவிற்கு ஓர் உறுதிமொழியை முதல்வரவர்கள் அளிப்பார்களா?

**மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன்:** தலைவரவர்களே, உறுதிமொழிகளைக் கேட்டே நாம் பழகிவிட்டோம். உறுதிமொழி கேட்பதைவிட, உங்கள் கடமையைச் செய்யுங்கள் என்று சொன்னால் பெருமையாக இருக்கும். நாங்கள் எங்கள் கடமைகளை நிச்சயமாகச் செய்வோம்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர்:** திருத்தங்கள் வாக்கெடுப்பிற்கு விடும்போது, மாண்புமிகு உறுப்பினர்கள் விளக்கம் கேட்பது ஒரு தவறான முன்மாதிரியாகிவிடக்கூடாது. அது முறையல்ல.

திரு. க. மீனாட்சிசுந்தரம் அவர்களின் திருத்தம், அவையின் அனுமதியுடன், திரும்பப் பெறப்பட்டது.

திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் அவர்களின் திருத்தம், அவையின் அனுமதியுடன், திரும்பப் பெறப்பட்டது.

திரு. செ. முத்துசாமி: தலைவர் அவர்களே, என்னுடைய திருத்தங்கள் குறித்து, முதலமைச்சர் அவர்களிடமிருந்து சரியான விளக்கம் கிடைக்காததால் வலியுறுத்துகிறேன்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர்:** அவை முன் உள்ள பிரச்சினை—

1. 1—9—1980, 1—12—1980 இரு தேதிகளிலிருந்து வழங்கப்பட வேண்டிய அகவிலைப்படி உயர்வை மத்திய அரசுபோல் ஆசிரியர்கட்கும், அரசு ஊழியர்கட்கும் வழங்கப்படாதது குறித்து;

## தமிழ் நாடு சட்டமன்ற மேலவை.

---

**வியாழக்கிழமை, 1981 பிப்ரவரி 12.**

சென்னை, செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள மேலவை மண்டபத்தில் முற்பகல் 11 மணியளவில் மாண்புமிகு மேலவைத் தலைவர் (டாக்டர் ம. பொ. சிவஞானம்) அவர்கள் தலைமையில் அவை கூடியது.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் இடப்பட்டிருக்கும் உடுக்குறி (■) அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

### 1. கவன ஈர்ப்பு.

**கும்பகோணம் அரசினர் ஆடவர் கல்லூரி மாணவர் ஒருவர் மர்மமான முறையில் மரணமடைந்தது குறித்து.**

■ **திரு. க. மீனாட்சிசுந்தரம்** : மாண்புமிகு தலைவர் அவர்களே, கீழ்க்கண்ட அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினைக் குறித்து மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன் :

"கும்பகோணம் அரசினர் ஆடவர் கல்லூரி மாணவர் இரா. சீனிவாசன், பி.காம்., கல்லூரி அறை எண் 83-ல் மர்மமான முறையில் மரணமடைந்துள்ளதும், இறந்த மாணவருக்கு மாலை அணிவித்து அஞ்சலி செலுத்தவோ, இறுதி ஊர்வலம் நடத்தவோ காவல்துறை தடுத்துள்ளதுமான நிலையில் அக் கல்லூரி மாணவர்கள், ஆசிரியர்கள், பெற்றோர்களிடையே பதட்டநிலை தோன்றியுள்ளது குறித்து".

**மாண்புமிகு திரு. கா. இராசா முகமது** (மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் சார்பில்) : தலைவர் அவர்களே, விவர அறிக்கை @ ஒன்று அவையின் முன் வைக்கப்பட்டுள்ளது.

■ **திரு. க. மீனாட்சிசுந்தரம்** : அந்த மாணவர் இறந்ததற்குப் பிறகு பஞ்சாயத்தார் கூடி பிரேதப் பரிசோதனைக்குப் பிறகு தற்கொலை என்று முடிவு செய்யப்பட்டதாக அறிக்கையிலே தகவல் தரப்பட்டிருக்கிறது. அறிக்கை

---

345 @ 108 ஆம் பக்கத்தில் இணைப்பு I ஆக அச்சிடப்பட்டுள்ளது.

(திரு. பா. ரா. தாமஸ்) [1981 பிப்ரவரி 12

தங்களை அரசு ஊழியர்களாக ஆக்கவேண்டும் என்று கோரிக்கை வைத்து, அதுபற்றி தொடக்கப்பள்ளி ஆசிரியர் சங்கங்கள் வேண்டுகோள் விடுத்திருக்கிறார்கள். இந்த நிலையிலே அரசாங்கம் உயர்மட்டக் குழுவை ஏற்படுத்தி இவற்றையெல்லாம் ஆராய்ந்து எந்தெந்த விதிமுறைகளை வகுத்து எவ்வாறு முறையாக இவர்களையெல்லாம் அரசு ஊழியர்களாக ஆக்கலாம் என்று நாம் சிந்திக்க வேண்டும். தனியார் பள்ளிகளைப் பொறுத்தவரையில், பல பிரிவினராக அவர்கள் இருக்கிறார்கள். சிறுபான்மைப் பிரிவினரின் உரிமைகளை நாம் பறிக்க முடியாதபடி அரசியல் சட்டம் இருக்கிறது. ஜனநாயக அமைப்பின் அடிப்படையிலே இந்தப் பள்ளிகள் அமைந்திருக்கின்றன. அந்தப் பள்ளிக்கூடங்களை நடத்துபவர்கள் அரசியல் செல்வாக்கு உள்ளவர்களாகவும், பெரும் பணக்காரர்களாகவும் இருக்கிறார்கள். ஆகவே, இந்தப் பள்ளிகளையெல்லாம் எடுத்து நடத்துவதென்பது பெரும் தொல்லையாக இருந்தாலும், நாட்டின் கல்வி நிலையை உத்தேசித்து, மக்களுக்குச் சிறப்பான முறையில் கல்வி கொடுக்க வேண்டும் என்றால், அந்தக் கல்வி நிலையங்கள் ஒரு சிறப்பான அமைப்பின்கீழ் வரவேண்டும் என்ற நிலையையும் கருத்தில்கொண்டு, இவைகளை ஏற்றெடுக்க வேண்டும். நல்ல தரமான கல்வி, ஒழுங்கு, கட்டுப்பாடு போன்றவைகள் அரசுப் பள்ளிகளிலும் இருக்கத்தான் செய்கின்றன. நகராட்சிப் பள்ளிகள் என்று சொன்னாலே அவைகள் மிகவும் பின்தங்கிய நிலையில் இருக்கின்றன என்று இருக்கும் கருத்தைப் போக்கும் வகையில் இன்றையதினம் நகராட்சிப் பள்ளிகள் செயல்பட்டுக்கொண்டிருக்கின்றன. மதுரை மாநகராட்சியில் இருக்கும் பள்ளிக்கூடங்களைப் பொறுத்தவரையில், உதாரணத்திற்கு அங்கு இருக்கும் பெண்கள் பள்ளியை எடுத்துப் பார்த்தால், அது தனியார் பள்ளிகளைவிட மிகவும் சிறப்பாகச் செயல்படுகிறது. ஆசிரியர்கள் சிறப்பாகச் சேவை செய்கிறார்கள். தேர்வு விழுக்காடுகூட அதிகமாக வருகிறது. அந்த அளவுக்கு அங்கே மாணவர்களுக்குப் பயிற்சி அளிக்கிறார்கள். நான் சொல்லிக்கொள்வேன், நிர்வாகத்தினுடைய தன்மையைப் பொறுத்து கல்வியின் தரம் இல்லை. பொதுவாக அந்தக் கல்லூரியில் உள்ள சூழ்நிலை, வசதிகள், ஆசிரியர்கள் நியமனம் இவைகளில்தான் கல்வியின் தரம் அடங்கியிருக்கின்றது. பொதுவாகவே அரசுத் துறைகளில் உள்ள பள்ளிகளிலே ஆசிரியர் நியமனம் செய்வதிலே காலதாமதம் ஏற்படுகிறது. இவைபோன்ற குறைகள்தான் அரசுப் பள்ளிகளிலே கல்வி போதனை சரியாக இல்லை என்ற தவறான கருத்து ஏற்படக் காரணமாக இருக்கின்றன. இத்தகைய நிலைமைகளில்தான் தனியார் பள்ளிகளில்தான் கல்வி சிறப்பாக இருக்கிறது என்ற கருத்து இருக்கிறது. நான் சொல்லிக்கொள்கிறேன், தமிழகத்தில் உள்ள ஆசிரியர்கள் அனைவரும் மிகவும் அதிக ஆற்றல் பெற்றவர்கள். அதிலும், அரசுப் பள்ளிகளில் உள்ளவர்கள்தான் மிகவும் சிறப்பான முறையில் ஆற்றலும்



1981 பிப்ரவரி 12] (திரு. பா. ரா. தாமஸ்)

தகுதியும் பெற்றிருக்கிறார்கள். காரணம் அவர்கள் தேர்வாணைக் குழுவால் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள். ஆகவே, அவர்களுடைய திறமையை நாம் சந்தேகிக்கக் கூடாது. தனியார் பள்ளிகளைப் பொறுத்தவரையில், அவர்கள் தான் தரமான கல்வியைக் கொடுக்க முடியும் என்ற கருத்தை நான் ஏற்றுக்

(முற்பகல் 11-10)

கொள்ளவில்லை. ஆனால், தனியார் பள்ளிகளைக் குறித்துப் பேசும்போது, அவற்றையெல்லாம் அரசே மேற்கொள்ள முடியுமா என்ற சிக்கலான வினா எழுந்துகொண்டேயிருக்கிறது. குறிப்பாக, தனியார் பள்ளிகளைப் பொறுத்தவரையிலும், அல்லது சிறுபான்மையினர் நடத்தும் பள்ளிகளைப் பொறுத்தவரையிலும், ஒரு கருத்து சொல்லப்பட்டு வருகிறது. அதாவது அரசியல் சட்டத்தின் 30 (1)-ஏ பிரிவின்கீழ் அவர்களுக்குப் பாதுகாப்பு இருக்கிறது. அந்தப் பிரிவில் என்ன சொல்லப்பட்டிருக்கிறது என்றால் :—

"All communities whether based on language or religion shall have the right to establish and administer institutions of their choice."

ஆனால் இத்தகைய உரிமையைப் பொறுத்தவரையில், உச்ச நீதிமன்றத்திலும் சரி, மத்திய சட்டத் துறையிலும் சரி, ஒரு கருத்து தற்போது நிலவி வருகிறது. அதாவது இத்தகைய பள்ளிகள் முறையாக நிர்வகிக்கப்பட்டால்தான், இத்தகைய அரசியல் சட்ட பூர்வமான பாதுகாப்பு அவர்களுக்கு வழங்க முடியும் என்றும் அவ்வாறு முறையாக நிர்வகிக்கப்படாத பள்ளிகளுக்கு இத்தகைய உரிமை இல்லை என்றும் சொல்லப்படுகிறது. Whenever there is mismanagement or whenever there is maladministration, they cannot claim the security as per this minority provision. அதாவது சிறுபான்மையோருக்கான அரசியல் சட்ட உரிமையை இத்தகைய பள்ளி நிருவாகங்கள் எப்போது பெறலாம் என்றால், அப்பள்ளி நிருவாகத்தை முறையாகச் செயல்படுத்தும் வரைதான் உண்டு என்றும் அவ்வாறு முறையாக நிருவகிக்காத நிலையில் அரசியல் சட்டப் பாதுகாப்பான இவ்வுரிமையை அந்நிருவாகங்கள் இழக்க வேண்டிய நிலையில்தான் இருக்கின்றன என்றும் ஒரு கருத்து சொல்லப்படுகிறது.

பொதுவாக ஊழியரானாலும் சரி, தொழிலாளியானாலும் சரி, அவர்கள் அரசுத் துறையில் பணியாற்றினாலும் சரி, கல்வித் துறையில் பணியாற்றினாலும் சரி, அல்லது தனியார் கல்வி நிறுவனங்களில் பணியாற்றினாலும் சரி, இந்த நாட்டில் மூன்று வகையான பாதுகாப்பை எதிர்நோக்குகிறார்கள். விரும்புகிறார்கள். ஒன்று எக்கனாமிக் செக்யூரிட்டி என்று சொல்லப்படும்

காவல் நிலையத்தில் ஆஜராகும்படி கூறிவிட்டு வந்தார். அவ்வாறு அவர்கள் அன்று காவல் நிலையம் வராததால் அவர்கள் மீது குற்ற எண் 17/81-ல் இந்திய தண்டனைச் சட்டம் 160-வது பிரிவின்கீழ் வழக்கு பதிவு செய்யப் பட்டது.

3. 18-1-1981 இரவு 8-00 மணி அளவில் மறுபடியும் அக்கிராமத்தில் கலவரம் நடந்தது. உதவி ஆய்வாளரும், அவர் பார்ட்டியும் சம்பவம் நடந்த இடம் சென்று ராஜுவையும் மற்றும் 8 பேரையும் இரவு 9.30 மணிக்கு காவல் நிலையம் கொண்டு வந்தனர். காவல் நிலையம் வந்தவுடன் ராஜுவுக்கு வலிப்பு வந்தது. உடனே அவர் டாக்சியில் குலசேகரம் அரசு மருத்துவ மனைக்கு எடுத்துச் செல்லப்பட்டார். ஆனால் வழியில் இறந்து விட்டார். ராஜு காவல் துறையினரின் பொறுப்பில் இருந்தபோது இறந்துவிட்டதால், காவல் துறை நிலை ஆணை எண் 145-வது பிரிவின்படி மெஜிஸ்டிரியல் விசாரணைக்கு உத்தரவிடப்பட்டது. சவப் பரிசோதனையின்போதும் விசாரணையின்போதும் ராஜுவின் உடம்பில் காயம் எதுவும் காணப்பட வில்லை; அவர் ஒரு இதய நோயாளி ( Heart patient ) மற்றும் விரிவ டைந்த இருதயம் உடையவர் ( enlarged heart ) என்றும் விசாரணையில் தெரிய வந்தது. வருவாய்த்துறைக் கோட்ட அலுவலரின் விசாரணை அறிக்கையும் சவப் பரிசோதனையின் முடிவும் இன்னும் கிடைக்கவில்லை. ஆனாலும் அவருடைய இறப்பு மாரடைப்பால் ஏற்பட்டிருக்கக்கூடும் என்று கருதப்படுகிறது. ஆனாலும் விசாரணையின்போது இறந்துபோன ராஜுவை தலைமைக் காவலர் 865 மேனுவல் வயிற்றில் குத்தியதாக சாட்சிகள் கூறினர்.

4. ராஜுவின் சவ ஊர்வலமும், அடக்கமும் 19—1—1981 அன்று நடந்தது. இதற்கு முன்னால் வருவாய்த்துறைக் கோட்ட அலுவலரின் P.S.O. விசாரணைக்குச் சென்றுவிட்டு திரும்பிய குலசேகரம் காவல் நிலைய உதவி ஆய்வாளர் பெருமாளை கூட்டத்தின் ஒரு பிரிவினர் குலசேகரம் மருத்துவ மனை அருகில் கூடி உதவி ஆய்வாளரை விரட்டியும், காவல் துறையினரின் வாகனத்தின் மீது கற்களையும் விட்டெறிந்தனர். இதனால் சில காவலர் களுக்கு காயமும், வாகனத்திற்கு சேதமும் ஏற்பட்டது. காவல் துறை மாவட்டக் கண்காணிப்பாளர் சம்பவ இடம் சென்று நிலைமையைக் கட்டுக்குக் கொண்டு வந்தார். உதவி ஆய்வாளரின் புகாரின் மீது அடையாளம் தெரிந்த நூறு நபர்கள் மீது வழக்கு பதிவு செய்யப்பட்டது. பொது நலம் கருதி உதவி ஆய்வாளர் வேறு இடத்திற்கு மாற்றப்பட்டுள்ளார். தலைமைக் காவலர் 865 மேனுவல், தற்காலிக வேலை நீக்கம் செய்யப்பட்டுள்ளார். குலசேகரம் பகுதியில் இப்போது பதட்ட நிலை இல்லை.





5. இதுகுறித்து வருவாய்த்துறைக் கோட்ட அலுவலரின் பி.எஸ்.ஓ. (P.S.O.) விசாரணை அறிக்கை கிடைத்த பின்பு அதனை அரசு பரிசீ லித்து தகுந்த நடவடிக்கை எடுக்கும். இவ்விசாரணை அறிக்கை கிடைத்த பின்பே முழு விவரங்களும் தெரியவரும்.

## இணைப்பு III.

[109 ஆம் பக்கத்தில் இனம் 3 (2)-க்கான அடிக் குறிப்பை காண்க.]

16-12-1980 அன்று இராமேஸ்வரம் பகுதியிலிருந்து மீன் பிடிக்கச் சென்ற ஐ.பி. 1166 என்ற விசைப்படகு காணப்படவில்லை என்ற செய்தி தந்தி மூலம் 20-12-1980 அன்று பெறப்பட்டு மீன் துறையினால் அப் படகைத் தேடுவதற்கான பணி மேற்கொள்ளப்பட்டது. மாநிலத் துறைமுக அதிகாரி, கடல் வணிகத்துறை தலைமை அலுவலர், கம்பியில்லாத் தந்தி உதவிப் பொறியாளர் ஆகியோர் காணாமற்போன மீன்பிடி விசைப்படகைத் தேடிக் கண்டுபிடிக்க கேட்டுக்கொள்ளப்பட்டார்கள். கடற்கரையோரமுள்ள மீன்துறை அதிகாரிகளும் அறிவுறுத்தப்பட்டனர். இலங்கையிலுள்ள இந்தியத் தூதுவர் அலுவலகத்திற்குத் தந்தி மூலம் செய்தி அனுப்பப்பட்டது.

29-12-1980 அன்று குளச்சலுக்குத் தெற்கே அரபிக் கடலில் இரஷியக் கப்பல் ஒன்று கடலில் சுக்கான் இழந்த ஐ.பி. 1166 விசைப்படகில் செயலிழந்து கிடந்த மூன்று மீனவர்களை மட்டும் கப்பலில் ஏற்றி படகை கடலில் விட்டு விட்டு தூத்துக்குடி வந்தது. சிகிச்சை பலனளிக்காமல் ஒருவர் இறந்து விட்டார். மற்ற இருவரும் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு சிகிச்சை அளிக்கப்பட்டனர். இரஷியக் கப்பல் ஐ.பி. 1166 விசைப்படகைக் காண்ப தற்கு முன்பே படகில் சென்ற ஐவரில் இருவர் உணவும் நீரும் இல்லாமையால் இறந்துவிட்டார்கள் என்ற செய்தி உயிருடன் திரும்பிய மீனவர்கள் மூலம் தெரிந்து கொள்ளப்பட்டது.

இறந்த மீனவர்களின் குடும்பங்களுக்கு ரூ. 5,000 (ரூபாய் ஐயாயிரம்) வரையில் கருணை மானியம் வழங்கப்படும். இதில் ரூ. 2,000 (ரூபாய் இரண் டாயிரம்) மொத்தமாகவும் மீதி ரூ. 3,000 (ரூபாய் மூவாயிரம்) மாதம் ஒன்றுக்கு 100 ரூபாய் வீதம் 30 மாதங்களுக்கு வழங்கப்படும். அவ்வாறு இறக்கும் மீனவர்களின் குழந்தைகள் வாழ்க்கைத் தொழில் கல்வியை மேற் கொள்ள இயலும் வகையில் கூடுதலாக ரூ. 5,000 வழங்கப்படும்.

பொருளாதாரப் பாதுகாப்பு, மற்றது சோஷல் செக்யூரிட்டி என்று சொல்லப்படும் சமூகப் பாதுகாப்பு. மூன்றாவது, சர்வீஸ் செக்யூரிட்டி என்று சொல்லப்படும் பணிப் பாதுகாப்பு. இவ்வாறு மூன்று முறைகளிலும் பாதுகாப்பு தேவைப்படுகிறது.

கல்வி நிறுவனங்களில் பணியாற்றும் ஆசிரியர்களைப் பொறுத்தவரையில்—அவர்கள் அரசுத் துறையில் பணியாற்றினாலும் சரி, தனியார் துறையில் பணியாற்றினாலும் சரி—இந்த மாநிலத்தில் அவர்களுடைய ஊதிய விகிதங்களும், ஓய்வூதிய விகிதங்களும் மற்றவிதமான பணச் சலுகைகளும் ஒன்றாகவே ஆக்கப்பட்டுவிட்டன. எனவே அவர்கள் அனைவரும் ஓரளவுக்குத் திருப்திப்படும்படியான சூழ்நிலை பொருளாதாரத் துறையில் இருந்து வருகிறது.

சமூகப் பாதுகாப்பைப்பற்றிக் குறிப்பிடும்போது, இப்படிப்பட்ட நிலைமை இல்லை. அரசுத் துறையில் உள்ள பள்ளிகளானாலும் சரி, கல்லூரிகளானாலும் சரி, அங்கே பணியாற்றுகிறவர்களுக்குப் பதவி உயர்வு பெறுவதற்கு நல்ல வாய்ப்புகள் இருக்கின்றன. அவ்வாறு அவர்களுக்குப் பதவி உயர்வு ஏற்படும்போது, அதன் காரணமாக ஊதிய உயர்வும் ஏற்படும் நிலையும் அதன் காரணமாக ஓய்வூதியம் அதிகரிக்கும் நிலையும் இருக்கின்றன. ஆனால் தனியார் துறைப் பள்ளிகளானாலும் சரி, கல்லூரிகளானாலும் சரி இந்தச் சமூக நீதி சரியாகக் கிடைப்பதில்லை, தனியார் பள்ளிகளைப் பொறுத்தவரையில், அதிகபட்சம் ஒருவர் தலைமையாசிரியராகப் பதவி உயர்வு பெற முடியும். அப்படிப் பதவி உயர்வு பெற்றால், அந்தப் பதவியில் 15 அல்லது 20 ஆண்டுக் காலம் அவரே தொடர்ந்திருக்கிற நிலை இருக்கிறது. அவருக்குப் பின்னால் இருப்பவர் பதவி உயர்வு பெற வேண்டும் என்றால், தலைமையாசிரியர் பதவியில் இருப்பவர் ஒன்று எதிர்பாராத நிலையில் சாக வேண்டும் அல்லது ஏதாவது அவருக்கு விபத்து ஏற்பட வேண்டும். அப்போதுதான் மற்றவருக்குப் பதவி உயர்வு கிடைக்கும் வாய்ப்பு ஏற்படும் நிலை இருக்கிறது.

பணிப் பாதுகாப்பைப் பொறுத்தவரையில், தனியார் பள்ளிகளில் பணியாற்றும் ஆசிரியர்களுக்கு சாதாரணமாக 75 விழுக்காடு ஆபத்துதான் நிலவி வருகிறது. இன்றையதினம் நிருவாகிகளின் போக்கும், அவர்கள் செயல்படுகிற முறையும் தனியார் பள்ளி ஆசிரியர்களுக்குப் பெரும் தீங்கு உண்டாக்கக் கூடியதாகவே இருக்கின்றன. இன்றுவரை தனியார் பள்ளி நிருவாகிகள் தங்கள் போக்கையும் கருத்தையும், இதைப் பொறுத்தவரையில், மாற்றிக் கொள்ளவே இல்லை. 1952 ஆம் ஆண்டு வரை தொடக்கப்பள்ளி நிலையில் தனியார் பள்ளிகளின் ஆசிரியர்களின் ஊதியத்தில் 3-ல் ஒரு பங்கை மட்டுமே அரசு மானியமாக வழங்கி வந்தது. ஆனால் 1952 ஆம் ஆண்டுக்குப் பிறகு



அரசு தனது வரிப் பணத்திலிருந்தே தொடக்க நிலையில் உள்ள தனியார் பள்ளி ஆசிரியர்களின் முழு ஊதியத்தையும் மானியமாக வழங்கி வருகிறது. 1964 ஆம் ஆண்டு முதற்கொண்டு தனியார் உயர்நிலைப் பள்ளிகளில் பணியாற்றும் ஆசிரியர்களுக்கான ஊதியத்தை முழுமையாக அரசு வரிப் பணத்திலிருந்தே மானியமாக வழங்கிவருகிறது. அது அகவிலைப் படியானாலும் சரி, ஓய்வு ஊதியமானாலும் சரி, முழுவதையும் அரசே தன்னுடைய நிதியிலிருந்து தனியார் பள்ளி ஆசிரியர்களுக்கு அளித்து வருகிறது. 1977 ஆம் ஆண்டு முதற்கொண்டு தனியார் துறையிலுள்ள கல்லூரிகளில் பணியாற்றும் ஆசிரியர்களுக்கான ஊதியத் தொகை முழுவதையுமே அரசே தன் நிதியிலிருந்து மானியமாகக் கொடுத்து வருகிறது. இப்படி முன்னாலிருந்த நிலைமை முழுவதுமாக மாறிய பிறகும்கூட, முதலில் மூன்றில் ஒரு பங்கு அளிப்பது என்ற நிலையை மாற்றி முழுமையாக அரசே ஊதியம் அளிப்பதற்கான நிதிச் சுமைப் பொறுப்பை ஏற்றுக்கொண்ட பிறகும்கூட, தனியார் பள்ளி மற்றும் கல்லூரிகளில் பணியாற்றும் ஆசிரியர்களின் நிலைமை இன்றைக்கும் மிகவும் கேவலமாகவே இருக்கிறது. தனியார் நிருவாகத்தைச் சேர்ந்தவர்கள் ஆசிரியர்களை இன்றும் கொத்தடிமைகளாகவே நடத்துகிறார்கள். இந்த மாநிலத்தின் ஒரு பகுதியைச் சுட்டிக்காட்ட வேண்டுமென்றால், விருதுநகர் கல்வி மாவட்டத்தில் தனியார் பள்ளி ஆசிரியர்கள் கொத்தடிமைகளாகவே நடத்தப்படுகிறார்கள்.

ஆசிரியர்கள் ஊதியம் பெற வேண்டிய முதல் தேதியன்று ஆசிரியர்கள் அனைவரும் வரிசையாக பள்ளியின் தாளாளர் அறைக்கு முன்னால் வந்து நிற்க வேண்டும். ஏவலாளர் ஆசிரியர் ஒவ்வொருவரின் பெயரைக் கூப்பிட்டதும் அந்த ஆசிரியர் அறைக்குள் சென்று முதலில் தாளாளருக்கு வணக்கம் தெரிவித்துவிட்டு, ஊதியத்தைப் பெற்றுக்கொண்டு மீண்டும் வணக்கம் தெரிவித்துவிட்டே வெளியே வர வேண்டும் என்ற நிலைமை இருந்து வருகிறது. இந்த முறை இன்னமும் தேவைதானா என்பதை நாம் எண்ணிப் பார்க்க வேண்டும். இத்தகைய முறைகள் விருதுநகர் கல்வி மாவட்டம் முழுவதும் இருக்கின்றன. அரசாங்கமே ஆசிரியர்களுக்கான முழு ஊதியத்தையும் மானியமாகக் கொடுக்கும் இந்தக் காலத்தில் தனியார் பள்ளிகளின் நிருவாகிகளுக்கு முன் சென்று தனி நபர்களை உயர்த்துகிற காரியங்கள், அல்லது தனி நபரை வணங்குகிற காரியங்கள் நடைபெற வேண்டும் என்றால், இது எவ்வளவு கேவலமான நிலைமை என்பதை இங்கே நான் வேதனையோடு குறிப்பிட விரும்புகிறேன்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர்:** ஒருவேளை ஆசிரியர்களே உள்ளே சென்று மரியாதைக்காகக் கும்பிடுகிறார்களோ என்னவோ?

திரு. பா. ரா. தாமஸ் : இந்த முறையைக் கையாளாவிட்டால், அத்தகைய ஆசிரியர் அந்தத் தனியார் பள்ளியில் தொடர்ந்து பணியாற்ற முடியாத நிலை இருக்கிறது என்ற கருத்தைச் சொல்ல விரும்புகிறேன். இதைச் செய்யாத ஆசிரியர் நிருவாகத்தால் பழி வாங்கப்படுவார். தனியார் பள்ளிகளைப் பொறுத்தவரையில், ஆசிரியர்களைப் பழி வாங்குவது என்பது மிகச் சாதாரண மான விஷயம். ஆசிரியர்கள் தங்கள் கடமையைத்தான் செய்ய வேண்டும் என்று எதிர்பார்க்கிறார்களே தவிர, அவர்களுக்கு உரிமைகள் இருக்கின்றன என்பதை நிருவாகிகள் நினைத்துக்கூடப் பார்ப்பதில்லை. அது மட்டுமல்ல, பதவி உயர்வு என்று வந்தால், தனியார் பள்ளி நிருவாகிகள் தவறான முறை களைக் கையாள்கிறார்கள். அதைப்போலவே ஆசிரியர்களின் நியமனம் என்று வருகிறபோது, பணம் இல்லாமல் எந்த நியமனமும் செய்வதில்லை. அதைப்போலவே ஆசிரியர்களுக்குத் தங்களின் க்ஷேமநல நிதியிலிருந்து கடன் பெறுகிற உரிமை இருந்தாலும், அப்படி விண்ணப்பிக்கும்போது, கடன் மறுக்கப்படுகிற நிலைமை இருக்கிறது. ஒரு ஆசிரியரை தனியார் பள்ளி யிலிருந்து நீக்க வேண்டுமென்று அந்த நிருவாகம் திட்டமிட்டுவிட்டால்; உடனே மாணவர்களின் எண்ணிக்கையை மாற்றி சான்றிதழ் வழங்கி, எண்ணிக்கையைக் குறைத்து, அதன் மூலம் ஒரு பிரிவைக் குறைத்து அங்கே பணியாற்றுகிற ஆசிரியரை வெளியே அனுப்பிவிடும் அவல நிலை இருந்துகொண்டிருக்கிறது. அது மட்டுமல்ல. ஒரு தனியார் பள்ளி நிருவாகத்தில் ஆசிரியர் ஒருவருக்கு க்ஷேமநல நிதியிலிருந்து கடன் பெறுவதற்கான படிவத்தை வழங்கி, அவரது விண்ணப்பத்தை கல்வித் துறைக்கு அனுப்பி கடன் வழங்குவதற்கான அனு மதியைப் பெற்று, இறுதியில் கடன் தொகையை ஆசிரியருக்கு வழங்காமல் நிருவாகமே எடுத்துக்கொண்டிருக்கிறது. ஆனால் ஆசிரியர்தான் அந்தக் கடன் தொகையைத் திரும்பச் செலுத்த வேண்டும் என்ற நிலையை உருவாக்கி யிருக்கிறார்கள். இத்தகைய முறைகேடுகள் தனியார் பள்ளிகளில் சாதாரண மாக நடைபெறுகின்றன.

இந்த நிலைமைகள் காரணமாகத்தான் "கல்வி நீரோடையில் ஏன் இந்த முதலைகள் இருக்க வேண்டும்?" என்று கேட்கத் தோன்றுகிறது. பேரறிஞர் அண்ணா அவர்கள் ஒருமுறை குறிப்பிட்டதைப்போல, சர்க்காருக்கும் சமுதாயத்திற்கும் இடையே இந்த இடைத்தரகர்கள் ஏன் இருக்க வேண்டும் என்று கேட்கத் தோன்றுகிறது. இவர்களெல்லாம் அரசியல் சட்டத்தில் இருக்கிற சட்ட ரீதியான பாதுகாப்பைப் பயன்படுத்திக்கொண்டு, ஆசிரியர்களுக்கு ஒரு பாதுகாப்பற்ற நிலையை உருவாக்கிக்கொண்டிருக்கிறார்கள்.





நமது மாநிலத்தைப் பொறுத்தவரையில், 19 பாலிடெக்னிக்குகளும், மூன்று பொறியியல் கல்லூரிகளும் தனியார் துறையில் செயல்பட்டு வருகின்றன. இங்கே பணியாற்றுகிற ஆசிரியர்களுக்கெல்லாம் பாதுகாப்பு இல்லை என்று அவர்கள் போராடுகிறார்கள். அண்மையில் ராஜபாளையம் பாலிடெக்னிக் ஆசிரியர்கள் பெரும் போராட்டத்தை நடத்தி, தங்களுக்குப் பணிப் பாதுகாப்பு கோரியதன் காரணமாக, பல தொல்லைகளுக்கும் உள்ளானதை நாம் அறிவோம். நமது மாநிலத்தில் கல்லூரிகளிலும் பள்ளிகளிலும் பணியாற்றுகிற ஆசிரியர்களுக்குப் பணிப் பாதுகாப்பு குறித்து சட்டமே இருந்தும்கூட, அவர்கள் சட்டப்படியான பாதுகாப்பைப் பெறமுடியாத அவல நிலை இருந்து வருகிறது.

அது மட்டுமல்ல, பள்ளிகளில் பணியாற்றும் ஆசிரியர்களுக்குப் பணிப் பாதுகாப்புச் சட்டம் இருக்கிறது என்று சொல்லிக்கொண்டிருக்கிற நேரத்தில், இன்னொரு சூழ்நிலையையும் நாம் எண்ணிப் பார்க்க வேண்டியிருக்கிறது. இந்தச் சட்டம் மேல் நிலைப் பள்ளிகளில் பணியாற்றும் ஆசிரியர்களுக்குப் பொருந்தாது என்றும், அந்தப் பள்ளிகளை இச்சட்டம் கட்டுப்படுத்தாது என்றும், அதற்குரிய பிரிவு அந்தப் பணிப் பாதுகாப்புச் சட்டத்தில் இல்லை என்றும் சொல்லப்படுகிறது.

அது மட்டுமல்லாமல், ஆசிரியர்களின் பணிப் பாதுகாப்பைப் பொறுத்த வரையில், கல்வித் துறையின் அலுவலர்களின் அணுகு முறைகளே சரியில்லாமல் இருக்கின்றன. மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் அவர்கள் ஒரு சம்பவத்தை இங்கே குறிப்பிட்டார்கள். ஒரு தனியார் பள்ளி ஆசிரியர் அந்த நிருவாகத்தால் பழிவாங்கப்பட்டு வெளியேற்றப்பட்டபோது அந்த மாவட்டக் கல்வி அதிகாரி அப்பள்ளியிலிருந்து வரும் கடிதப் போக்கு வரத்திற்கு பதில் அளிக்கமாட்டேன், அவரை மீண்டும் பணியில் சேர்த்தால் தான் பதில் அளிப்பேன் என்று சொன்ன நிகழ்ச்சியைக் குறிப்பிட்டார். இதன் காரணமாக அந்த ஆசிரியர் பணியில் சேர்த்துக் கொள்ளப்பட்டிருக்கின்றார். ஆனால் இன்றையதினம் கல்வித் துறையில் இத்தகைய பாதுகாப்பு அளிக்கும் நிலை இல்லை. அவர்களின் அணுகுமுறை சரியாக இல்லை. தனியார் பள்ளி களைப் பொறுத்தவரையில், அங்கே உள்ள ஆசிரியர்கள் அனைவரும் தவறு செய்பவர்களாக கல்வித் துறை அதிகாரிகள் நினைக்கிறார்கள். தாளாளர்கள் தான் சரியாக நடப்பதைப்போல நினைக்கிறார்கள். இப்படிப்பட்ட அணுகு முறை மாறினால்தான், ஆசிரியர்களுக்குப் பாதுகாப்பு ஏற்பட முடியும். சட்டத்திலே பள்ளிக் கல்விக் குழு ஏற்படுத்தப்பட வேண்டும் என்று சொல்லப் பட்டிருக்கிறது. ஒரு பள்ளியில் 20 ஆசிரியர்கள் பணியாற்றினால், அதில் மூன்று பேரைத் தேர்ந்தெடுத்து அந்தக் குழு அமைக்கப்பட வேண்டும் என்று

எப்படி இருந்தாலும், அந்த மாணவருடைய சாவு மர்மச்சாவு என்று அந்தப் பகுதி மக்களும், பெற்றோர்களும் கருதுகிறார்கள். மேலேயிருந்து மாணவன் தொங்கவில்லை. ஜன்னலிலேயிருந்துதான் தொங்கிக்கொண்டிருந்தார். ஆகவே, தூக்குப் போட்டுக்கொள்ள வாய்ப்பில்லை என்ற சந்தேகம் ஏற்பட்டிருக்கிறது. அங்கே சர்வ கட்சியைச் சேர்ந்தவர்கள் உண்ணாவிரதம் இருந்திருக்கிறார்கள். ஆகவே, இதைப் புனர்பரிசிலனை செய்து, மாணவர்களுக்கும் பெற்றோர்களுக்கும் சந்தேகமில்லாமல் ஒரு நீதி விசாரணைக்கு உத்தரவிட அரசு முன் வருமா? இறந்துபோன மாணவருடைய குடும்பத்திற்கு நஷ்டஈடு தரவும் அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. கா. இராசா முகமது:** இந்தச் சம்பவம் குறித்து மாணவப் பிரதிநிதிகள், பஞ்சாயத்தார் முன்னிலையில்தான் விசாரணை நடத்தப்பட்டிருக்கிறது. பிரேதப் பரிசோதனையும் நடத்தப்பட்டது. இவைகளுடைய முடிவுகளின்படிதான் இது தற்கொலை என்று முடிவெடுத்து அறிக்கை கொடுக்கப்பட்டிருக்கிறது. மாணவர்கள ஊர்வலம் நடத்துவதன் மூலம் நிலைமை மேலும் பதட்டத்திற்கு உள்ளாக்கப்பட்டு அசம்பாவிதம் எதுவும் ஏற்பட்டுவிடக்கூடாது என்றுதான் ஊர்வலம் நடத்தக்கூடாது என்று காவல் துறையினர் கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். இப்போது அங்கு எந்த விதமான பதட்டச் சூழ்நிலையும் இல்லை. பஞ்சாயத்தார் எல்லாம் சேர்ந்துதான் இந்த முடிவெடுத்திருக்கிறார்கள். உதவி செய்வதைப் பொறுத்தவரையில், 'தற்கொலை' செய்துகொள்ளும்போதெல்லாம் உதவி எதுவும் செய்வதில்லை. எனவே, உதவி எதுவும் செய்வதற்கில்லை.

**திரு. க. மீனாட்சிசுந்தரம்:** அந்தக் கல்லூரி மாணவர்களுக்கும் காவல் துறையினருக்கும் நீண்டகாலமாகவே மோதல்கள் ஏற்பட்டுக்கொண்டிருக்கின்றன. பல்வேறு சம்பவங்களில் போலீசார் அடக்குமுறைகளைக் கையாண்டிருக்கிறார்கள். இந்த நிகழ்ச்சியில் காவல் துறையினர் தலையிட்டிருக்கக் கூடும் என்று மாணவப் பிரதிநிதிகள் இன்னும் சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். மேலும் மாணவர்கள் அறப் போராட்டத்தில் ஈடுபட திட்டமிட்டிருக்கிறார்கள். வருங்காலத்திலே இதுபோன்ற சம்பவங்கள் ஏற்படாத வகையில் ஒரு நீதி விசாரணைக்கு ஏற்பாடு செய்ய அரசு நடவடிக்கை எடுக்குமா? இந்தக் கருத்தை அரசு புனர்பரிசீலனை செய்யுமா?

**மாண்புமிகு திரு. கா. இராசா முகமது:** இதில் புனர்பரிசீலனை செய்ய வேண்டிய அவசியமில்லை என்று அரசு கருதுகிறது.





## 2. தனி உறுப்பினர் தீர்மானம்.

### அனைத்துப் பள்ளிகளையும், கல்லூரிகளையும் அரசே ஏற்று நடத்துவது குறித்து.

**மாண்புமிகு மேலவைத் தலைவர்:** இந்தத் தீர்மானத்தின்மீது மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. லெட்சுமிகாந்தன் அவர்களும், திரு. வ. ஆர். தாமோதரன் அவர்களும் பேசிவிட்டார்கள். அடுத்து, திரு. முத்துசாமி அவர்கள் ஏற்கெனவே மிகவும் விரிவாகப் பேசிவிட்டார். ஆகவே, இன்று மிகவும் சுருக்கமாகப் பேசி முடிக்க வேண்டுமென்று அவரைக் கேட்டுக்கொள்கிறேன். (திரு. முத்துசாமி அவர்கள் அவையில் இல்லை). மாண்புமிகு உறுப்பினர் திரு. முத்துசாமி அவர்கள் அவையில் இல்லாததால் மாண்புமிகு உறுப்பினர் திரு. பா. ரா. தாமஸ் அவர்களைப் பேசுமாறு அழைக்கிறேன்.

**திரு. பா. ரா. தாமஸ்:** மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, மேலவையிலே தனியார் பள்ளி ஆசிரியர்கள், ஊராட்சி ஒன்றிய ஆசிரியர்கள், நகராட்சி மன்ற ஆசிரியர்கள், ஊராட்சிமன்ற ஆசிரியர்கள் ஆகிய அனைத்துப் பிரிவினரையும் அரசு ஊழியர்களாக ஆக்கவேண்டும், கல்வி சீரான ஒரு நிர்வாகத்தின்கீழே வரவேண்டும், கல்வி வளர்ச்சி முறையாக, சீராக இருக்க வேண்டும் என்ற அடிப்படையிலே அந்த ஊழியர்கள் அனைவரையும் அரசு ஊழியர்களாக ஆக்கவேண்டும் என்று மாண்புமிகு உறுப்பினர் திரு. லெட்சுமிகாந்தன் அவர்கள் கொண்டுவந்துள்ள இந்தத் தீர்மானத்தை ஆதரித்து சில கருத்துக்கள் கூற முன்வருகிறேன். அவர் கொடுத்த தீர்மானத்தைத் தொடர்ந்து 1980 ஆம் ஆண்டிலே ஜூன் மாதம் 20 ஆம் தேதி இரண்டு அவைகளும் சேர்ந்து நடந்த கூட்டுக்கூட்டத்திலே ஆளுநர் உரையிலே ஒரு கொள்கை விளக்கம் கொடுத்து, ஊராட்சி ஒன்றிய ஆசிரியர்களையும் அரசுப் பணியாளர்களாக ஆக்கக்கூடிய கொள்கையை அரசு கொண்டு வருவதாக அறிவிக்கப்பட்டது. அதுமட்டுமன்றி, ஜூன் மாதம் 12 ஆம் தேதி அன்று மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் நம்முடைய மாநிலத்திலேயுள்ள 95 ஆயிரம் ஊராட்சி ஒன்றிய ஆசிரியர்களை அரசு ஊழியர்களாக ஆக்குவோம் என்று கொடுத்த உறுதிமொழி, மாண்புமிகு உறுப்பினர் திரு. லெட்சுமிகாந்தன் அவர்கள் கொண்டு வந்திருக்கக் கூடிய இந்தத் தீர்மானத்திற்கு 75 சதவிகிதம் வெற்றியைக் கொடுத்திருக்கிறது என்று நான் தெரிவித்துக்கொள்கிறேன். ஊராட்சி ஒன்றிய ஆசிரியர்களை அரசு ஊழியர்களாக ஆக்கும் வகையில் பெருமுயற்சி எடுத்திருப்பது குறித்து இந்த அரசுக்கும் மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களுக்கும் நான் நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். ஊராட்சி ஒன்றிய ஆசிரியர்கள் மட்டும்தான் அரசு ஊழியர்களாக ஆக்கப்பட்டார்கள் என்பதால், தனியார் பள்ளி, நகராட்சிப் பள்ளி, மாநகராட்சிப் பள்ளிகளில் இருக்கும் ஆசிரியர்களும்

இருக்கிறது. ஆனால் எந்தப் பள்ளியிலும் அதற்கான தேர்தலை நடத்துவதில்லை. தங்களுக்கு வேண்டிய ஒரு மூன்று ஆசிரியர்களின் பெயரை எழுதிக் கொண்டு அவர்களைக் கொண்ட ஒரு குழு அமைக்கிறார்கள். அவர்களை உபயோகித்து தங்களுக்குத் தேவையான காரியங்களையெல்லாம் செய்து கொள்கிறார்கள். இதன் மூலம் எந்த ஒரு ஆசிரியரையும் வேலை நீக்கம் செய்து விடுகிறார்கள். இப்படிப்பட்ட கேவலமான நிலை பல இடங்களிலும் நடைபெற்றுக்கொண்டிருக்கிறது.

முன்பு கல்வி விதிகளில் (எம்.ஈ.ஆர்.) ஆசிரியர்களின் மேல்முறையீடுகளைப் பொறுத்தவரையில், முதலில் கல்வி இயக்குநருக்கும், அடுத்து கல்வித் துறை செயலாளருக்கும் மேல்முறையீடு செய்யக்கூடிய வசதி இருந்தது. அந்த இரண்டு வசதிகளும் இப்போது நீக்கப்பட்டுவிட்டன. ஆகவே ஆசிரியர்கள் வேலை நீக்கம் செய்யப்பட்டால், பெரிதும் தொல்லைக்கு ஆளாகிறார்கள்.

(முற்பகல் 11-20)

அநேக இடங்களில் வெளியேற்றப்பட்ட ஆசிரியர்களுக்கு, ஆறு வருடங்கள், எட்டு வருடங்கள், பத்து வருடங்கள் ஆகியும் நிவாரணம் கிடைக்காமல் இருக்கிறது. 'Justice delayed is justice denied' என்று சொல்லப்படுகிறது. இப்படி பல வருடங்களுக்கு நிவாரணம் கிடைக்காமல் இருக்கக்கூடிய சூழ்நிலைக்குக் காரணம் இந்தச் சட்டத்தில் உள்ள குறைபாடுகள்தான். ஆகவே இச்சட்டத்திலுள்ள குறைபாடுகளைப் போக்குவதற்கு அரசு முன்வர வேண்டும். ஆசிரியர்கள் எவ்வாறு பாதிக்கப்பட்டிருக்கிறார்கள் என்பதற்கு ஏராளமான எடுத்துக்காட்டுக்கள் சொல்லப்படுகின்றன. ஆனால் நான் ஒரு சில உதாரணங்களை மட்டும் எடுத்துச் சொல்ல விரும்புகிறேன்.

கமுதி என்ற ஊரிலே தலைமையாசிரியராகப் பணியாற்றியவர் திருமதி கோமதி. அவர் நல்ல ஆசிரியர். திறமையாகப் பணியாற்றியவர். நல்ல தேர்வு விழுக்காடுகளைக் கொடுத்தவர். அரசிலிருந்து நல்லாசிரியர் விருதைப் பெற்றிருக்கிறார். அவர் சில தவறுகளைச் செய்வதற்கு நிர்வாகத்திற்கு உடந்தையாக இல்லாததால், நல்லாசிரியர் விருதைப் பெறுவதற்கு நிர்வாகத்திடம் அனுமதியைப் பெற்றுக்கொண்டு சென்னைக்குப் போகவில்லை என்ற காரணத்தால், பணி நீக்கம் செய்யப்பட்டு இரண்டாண்டுகளுக்கு மேலாக அப்படியே இருக்கிறார். நடுவர் மன்றத்திலே கடந்த இரண்டாண்டுகளாக விசாரணை தேங்கிக் கிடக்கிறது. ஆசிரியர் கண்ணீர் வடித்துக்கொண்டிருக்கிறார். 'என்னுடைய நேர்மைக்கு நீதி இல்லையா, நல்ல முறையிலே நான் பணியாற்றினேனே, சிறந்த சேவை செய்தேனே, நல்லாசிரியர் விருதைப்



பெற்றிருக்கிறேனே, ஆனால் ஏன் எனக்கு நீதி கிடைக்கவில்லை?' என்று கேட்டிருக்கிறார். இதற்கெல்லாம் முக்கியமான காரணம் சட்டத்திலே உள்ள குறைபாடுகள்தான்.

சிவகாசிக்கு அருகிலே விளாங்குடியில் உள்ள ஒரு நடுநிலைப் பள்ளியில் ஒருவர் தலைமை ஆசிரியாகப் பணியாற்றினார். அவர் சிறந்த சேவையைச் செய்திருக்கிறார். அந்தப் பள்ளி மேல்நிலைப் பள்ளியாக உயர்த்தப்பட்ட சமயத்தில் இரவு மேற்பார்வைப் பணியைச் செய்ய மறுத்து—நான் இரவு மேற்பார்வைப் பணியைப் பார்க்க வேண்டுமென்றால் பகலில் பார்க்க முடியாது, இரவில் மட்டும் செய்கிறேன், மற்றும் உள்ள பள்ளிக் கடமைகளைச் செய்கிறேன் என்று சொல்லி, எனக்கு முன்னுரிமை அளித்து, தலைமையாசிரியர் விடுப்பில் செல்லும்போது அந்தப் பள்ளியின் பொறுப்பை வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டார். ஆனால் நிர்வாகத்தினர் பள்ளியின் சாவியைத் தரமாட்டேன் என்று சொல்லிவிட்டார்கள். இதற்காக இந்த ஆசிரியர் பணி நீக்கம் செய்யப்பட்டிருக்கிறார் இரண்டாண்டு காலமாக. அவர் மேல் முறையீட்டைக்கூட அனுப்பியிருக்கிறார். சிறுபான்மையினர் உரிமை வேண்டுமென்று பள்ளி நிர்வாகம் நீதிமன்றத்திற்குச் சென்றிருக்கிறது. கல்வித் துறை தலையிட்டு ஆணையைப் பிறப்பித்துவிடும் என்ற அச்சத்தில் நீதிமன்றத்திற்குச் சென்று இடைக்காலத் தடையைப் பெற்றிருக்கிறார்கள் அந்த நிர்வாகத்தினர். சிறுபான்மையினர் உரிமையை நீதிமன்றம் திட்டவட்டமாக வழங்கும் வரையில் கல்வித் துறை எந்த ஆணையையும் வழங்கக்கூடாது என்ற இடைக்காலத் தடையைப் பெற்றிருக்கிறார்கள். ஆகவே கல்வித் துறை தலையிட முடியாத சூழ்நிலை உருவாகியிருக்கிறது. மதம், மொழி என்ற அடிப்படையிலே சிறுபான்மையினர் உரிமையைப் பெறலாம் என்ற நிலைக்கு நீதிமன்றங்களுக்குச் செல்லக்கூடிய வாய்ப்பு இருக்கிறதென்றால், இந்தச் சட்டத்தைத் திருத்தாவிட்டால், நிச்சயமாக ஆசிரியர்களுக்குப் பாதுகாப்பு இல்லாத நிலைதான் ஏற்படும்.

அதே பள்ளியில் உள்ள மற்றொரு ஆசிரியர், நெசவு ஆசிரியர் சிறு விடுப்புக் கேட்டு எழுதினார். அதற்கு நிர்வாகம் மறுப்புத் தெரிவித்தார்கள் என்பதற்காக அதைத் தபாலில் அனுப்பினார். அதற்காக பணி நீக்கம் செய்யப்பட்டிருக்கிறார். இன்று வரை அவர் மீண்டும் பணியில் அமர்த்தப்படவில்லை.

அதே கல்வி மாவட்டத்தில் கல்லூரணி என்ற ஊரில் கோவிந்தன் என்ற ஆசிரியர், எம்.ஏ.,பி.டி. படித்தவர், பணியாற்றினார். அவர்மீது நிர்வாகம் தவறான குற்றச்சாட்டுக்களைச் சுமத்தி அவரைப் பணிநீக்கம் செய்திருக்

(திரு. பா. ரா. தாமஸ்) [1981 பிப்ரவரி 12

கிறது. அதற்கு முன்னதாக கூட்டமாக அழைத்துச் சென்று செருப்பால் அடித்து அவரைக் கட்டாயப்படுத்தி ராஜினாமா கடிதத்தை வாங்கிக்கொண்டு வெளியே அனுப்பினார்கள். கல்வி இயக்குநர் தலையிட்டு அவரை மீண்டும் பணியில் அமர்த்த வேண்டுமென்று ஆணையைப் பிறப்பித்திருக்கிறார். அந்த ஆணைக்கு நிர்வாகம் கீழ்ப்படியவில்லை. அதற்கு மாறாக நீதிமன்றம் சென்று கோவிந்தன் என்ற ஆசிரியர்மீது வழக்குப் போட்டு, அவரைப் பள்ளியில் சேர்க்க முடியாது என்று கூறியிருக்கிறார்கள். ஆணையிட்ட கல்வித் துறையை விட்டு விட்டு ஆசிரியர் மேல் வழக்கைத் தொடர்ந்திருக்கிறார்கள். "உங்கள் ஆணையை எதிர்த்து நிர்வாகம் நீதிமன்றம் சென்றிருக்கிறது; ஆகவே நீங்களும் அதில் ஒரு பார்ட்டியாகச் சேர வேண்டும்" என்று கல்வித் துறையினரைக் கேட்டால், அரசு வழக்குரைஞர் கல்வித் துறை சேர வேண்டாம் என்று கூறுகிறார். அரசு போட்ட ஆணையை நிலைநாட்ட அரசு ஒரு பார்ட்டியாக வரத் தேவையில்லை, ஆசிரியரே தன்னைக் காத்துக்கொள்ளட்டும் என்று கூறக்கூடிய நிலை இருந்தால், எப்படி ஆசிரியர்களுக்குப் பாதுகாப்புக் கிடைக்கும்? இப்படிப்பட்ட அவல நிலைகள் கல்வித் துறையிலே இருக்கின்றன. இதைவிட கேவலமான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. இவ்வாறு பணிநீக்கம் செய்யப்பட்ட ஆசிரியரை மீண்டும் பணியில் அமர்த்த வேண்டுமென்று ஆணை வழங்கப்பட்டிருந்தும், அந்த நிர்வாகம் அதை ஏற்றுக் கொள்ளாமல் நிராகரித்திருக்கும்போது, அதே பள்ளியில் இன்னுமொரு பணியிடத்தை ஏற்படுத்த கல்வித் துறை அனுமதியை வழங்கியிருக்கிறது. பி.எஸ்சி. பணியிடத்தை ஏற்படுத்த கல்வித் துறை அனுமதி வழங்கியிருக்கிறது. இந்தப் பணியிடத்தை அந்த நிர்வாகம் ஏலம் விட்டு பணத்தைச் சேர்த்துக் கொள்கிறது. இது என்ன கொடுமை என்று தெரியவில்லை. இப்படிப்பட்ட பாதுகாப்பு இல்லாத அவல நிலை கல்வித் துறையிலே இருக்கிறது.

சமீபத்தில் கடலூரில் உள்ள செயின்ட் ஜோசப் ஹையர் செகண்டரி பள்ளியில் உள்ள ஆசிரியர்கள் தங்களுக்கு ஓர் ஆலோசனைக் குழு (ஸ்டாஃப் கவுன்சில்) வேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள். ஸ்டாஃப் கவுன்சிலை அமைக்க முடியாது என்று அந்தச் சிறுபான்மையினர் பள்ளியின் தலைமை ஆசிரியர் கூறியிருக்கிறார். சிறுபான்மையினராக இருந்தாலும் சரி, சிறுபான்மையினர் அல்லாத பள்ளியாக இருந்தாலும் சரி, பாதுகாப்புக் கொடுப்பதில் அனைவருக்கும் சமமான அளவில் பாதுகாப்புக் கொடுக்க வேண்டுமென்ற கருத்தைச் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

மேல்நிலைப் பள்ளிகளைப் பொறுத்தவரையில், மேல்நிலைக் கல்வி வகுப்பில் "டாப் டவுன் இண்டக்ஷன்" என்ற முறை கையாளப்படுகிறது. பி.எஸ்சி., பி.டி. படித்த ஆசிரியர்கள் குறைந்தது பத்தாண்டுகள், பதினைந்து ஆண்டுகள்



1981 பிப்ரவரி 12] (திரு. பா. ரா. தாமஸ்)

பணியாற்றியிருக்க வேண்டும். அப்படிப்பட்டவர்களைத்தான் நியமிக்க வேண்டுமென்று விதி இருக்கிறது. ஆனால் இரண்டாண்டுகள் பணியாற்றிய ஒருவரைக்கூட இப்போது நியமித்து விடுகிறார்கள். இதற்குக் காரணம், நிர்வாகத்தின் ஓரவஞ்சனை. சில நேரங்களில் பணத்தைப் பெற்றுக்கொண்டு தவறான முறையில் நியமிக்கிறார்கள். எல்லா நிர்வாகங்களையும் நான் ஒட்டு மொத்தமாகக் குற்றம் சாட்டவில்லை. ஒரு சில நிர்வாகங்கள் நல்ல முறையில் நடக்கின்றன. ஆனால் பணம் வாங்காமல் ஆசிரியர்களை நியமிப்பதில்லை.

அரசாணை எண் 1091-ல் குறிப்பிட்டுள்ள விதியின்படி, மேல் நிலைப் பள்ளிகளில் நியமிக்கப்படும் ஆசிரியர்கள், எம்.ஏ., எம்.எஸ்சி. படிப்புடன் பி.டி.யும் படித்திருக்க வேண்டும். வெறும் எம்.ஏ., எம்.எஸ்சி. மட்டும் படித்திருந்தால் போதாது. ஆனால் பி.டி. இல்லாமல் இருப்பவர்களை நியமித்தால், அவர்கள் நியமித்த மூன்று ஆண்டுகளுக்குள் கரஸ்பாண்டன்ஸ் மூலம் படித்துத் தேறிக்கொள்ளலாம் என்று விதியிருந்தபோதிலும், எம்.ஏ., எம்.எஸ்சி. மட்டும் படித்தவர்களைப் பணி நீக்கம் செய்துவிட்டு, ஐந்தாயிரம், பத்தாயிரம் ரூபாயைப் பெற்றுக் கொண்டு ஆசிரியர்களை நியமிக்கும் அவல நிலை இருக்கிறது. பொதுவாக பதவி உயர்வு என்று பார்க்கும்போது, "மெரிட் அண்டு அபிலிட்டி" அடிப்படையில் செய்ய வேண்டும் என்று விதி இருக்கிறது. ஆனால் நிர்வாகத்தைப் பொறுத்தவரையில், திறமையானவர்கள், ஆற்றல் மிக்கவர்கள் புறக்கணிக்கப்படுகிறார்கள்; கொத்தடிமைகளாக இருப்பவர்கள் ஆதரிக்கப்படுகிறார்கள்.

உதவித் தலைமை ஆசிரியரை நியமிக்கலாம் என்று அரசு விதிமுறை வகுத்திருக்கிறது. மதுரையில் உள்ள பிரிட்டோ ஹையர் செகண்டரி பள்ளியில் பெரும் முறைகேடுகள் இருக்கின்றன. கல்வி இயக்குநர் இந்த முறைகேடுகளைக் கண்டித்திருக்கிறார். ஆனால் அவர்கள் "நாங்கள் சிறுபான்மையினர் பள்ளி, யாரும் எங்களைக் கேட்க முடியாது" என்று சொல்லுகிறார்கள். அவர்களுக்குரிய அந்த உரிமை பறிக்கப்பட வேண்டும். பொதுவாக பழி வாங்க வேண்டுமென்ற நோக்கத்தோடு செயல்படும் நிர்வாகத்தோடு கல்வித் துறையும் சேர்ந்துகொள்ளுகிறதோ என்ற அச்சம் இருக்கிறது. ஆகவே இதைத் தவிர்க்க கல்வி அதிகாரிகள் தங்களுடைய அணுகுமுறையை மாற்றிக்கொள்ள வேண்டும்.

தொழில் கல்வியைப் பொறுத்தவரையில், அநேக பள்ளிகளில் கோளாறுகள் இருக்கின்றன. கல்வித் துறை சட்டத்தின் ஆறாவது அத்தியாயத்தின் பிரிவு 29-ன்படி, பள்ளிகளில் ஒரு பிரிவை மூட வேண்டுமென்றால், அரசின் அனு

மதியைப் பெற வேண்டும். ஆனால் இப்படி அரசின் அனுமதியைப் பெறாமல், ராஜா ஹையர் செகண்டரி பள்ளி, இராமநாதபுரம், அழகப்பா ஹையர் செகண்டரி பள்ளி, காரைக்குடி, பி. கே. மேல் நிலைப் பள்ளி, திருமங்கலம், கண்டனூர் சித்தாள் ஆச்சி மேல்நிலைப் பள்ளி மற்றும் பி. வி. மேல்நிலைப் பள்ளி, பொன்னமராவதி ஆகிய பள்ளிகளில் சில பிரிவுகளை மூடி பல ஆசிரியர்களுக்குப் பாதுகாப்பு இல்லாத நிலையை உருவாக்கியிருக்கிறார்கள். இதையெல்லாம் போக்க அரசு உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

நம்முடைய சென்னை நீதிமன்றத்திலே ஒரு தீர்ப்பு வழங்கப்பட்டிருக்கிறது. தென்னாற்காடு மாவட்டத்தில் உள்ள அருள்மிகு இராமலிங்கம் உயர் நிலைப் பள்ளியில் பணியாற்றிய மாரிமுத்து என்ற ஆசிரியர் 1972 ஆம் ஆண்டில் பணி நீக்கம் செய்யப்பட்டிருக்கிறார், 1979 ஆம் ஆண்டில் அவர் நீதி பெற்றிருக்கிறார். மீண்டும் அவர் அந்த ஆசிரியர் பணியில் அமர்த்தப்பட வேண்டும் என்றும், அவருக்குப் பத்தாயிரம் ரூபாய் வழங்கப்பட வேண்டும் என்றும் தீர்ப்பு வழங்கப்பட்டிருக்கிறது. அந்தத் தீர்ப்பை நிறைவேற்றாமல் நிர்வாகம் உயர்நீதி மன்றம் சென்று இடைக்காலத் தடையைப் பெற்றிருக்கிறது. " சிவில் கோர்ட்டில் இதைப் பெற்றுக்கொள்ளலாம். நடுவர் மன்றம் கொடுத்த தீர்ப்பு செல்லாது. அதற்கு எக்சிகியூட்டிவ் பவர் இல்லை" என்று உயர்நீதி மன்றம்

(முற்பகல் 11-30)

தீர்ப்பை வழங்கியிருக்கிறது. இந்தத் தீர்ப்பை வழங்கிய நீதிபதி சத்தியதேவி, "1972 ஆம் ஆண்டிலிருந்து 7 ஆண்டுகள் வேதனை பெற்றிருக்கிறார். நீதி கேட்டுப் போராடியிருக்கிறார். மீண்டும் பணியில் அமர்த்தவில்லை. பத்தாயிரம் ரூபாயை வழங்க மறுத்திருக்கிறார்கள். ஆகவே மானியம் வழங்கும் அரசு இதில் தலையிட வேண்டும். அரசு அந்தப் பள்ளியின் அங்கீகாரத்தைத் திரும்பப் பெற்றால், மாணவர்கள் பாதிக்கப்படுவார்கள்" என்று கூறியிருக்கிறார். ஊதியத்தையும், மான்யத்தையும் அரசு வழங்குவதால், ஆசிரியர்களுக்குப் பாதுகாப்பு கொடுப்பதற்கு அரசு நடுவர் மன்றத்தினரின் தீர்ப்பை அமுல்படுத்த வேண்டும், செயல் முறைகளை அமைக்க வேண்டும் என்று தீர்ப்பு கூறியிருக்கிறார்கள். இங்கே உச்ச நீதிமன்றத்தின் தீர்ப்பையும் நான் இங்கே சுட்டிக்காட்ட விரும்புகிறேன், அடுத்து சுப்ரீம் கோர்ட் தலைமை நீதிபதி சந்திர சூட், திரு. ரசல் ஆகியோர் ஒரு தீர்ப்பைக் கொடுத்தார்கள். பொதுவாக தனியார் நிறுவனங்களிலே உள்ள சிறுபான்மையினர் பள்ளிகளிலே அரசு தலையிட முடியாது என்று விதிமுறையிலே இருந்தாலும்கூட, அதிலேயும் ஒரு வழிமுறை இருக்கிறது என்று சொல்கிறார்கள். ஒரு அரசு ஏற்பு



கொடுத்து அல்லது அந்த அரசு மான்யம் கொடுத்து அந்த நிறுவனம் நடப்பது என்ற ஒரு கடமை இருந்து, அதை அரசு ஏற்றுக்கொண்டால், சிறுபான்மை யினரால் நடத்தப்படக்கூடிய ஒரு பள்ளியாக இருந்தால்கூட, ரெகக்நிஷன் அல்லது மான்யம் கொடுப்பது தன் பொறுப்பு என்று அரசு ஏற்றுக்கொள்ளும் போது, அங்குள்ள ஆசிரியர்களுக்குப் பாதுகாப்பு இல்லாமல் இருக்குமானால், அதற்குத் தக்கவாறு ஒரு சட்டத்தை உருவாக்குவதற்கு மாநில அரசுக்கு முழு உரிமை இருக்கிறது என்று சொல்லியிருக்கிறார்கள். இந்த இரண்டு கருத்துக் களையும் அடிப்படையாகக் கொண்டு மாநில அரசு செயல்படலாம். ஒரு வேளை இந்தக் கருத்துக்குப் பதில் கொடுக்கும்போது, "சிறுபான்மையினர் பள்ளிகளுக்கு உரிமை இருக்கிறது. இதில் அரசியல் சட்டத்தைத் திருத் தாமல் நாம் ஒன்றும் செய்ய முடியாது. இந்தப் பணிகளை மேற்கொள்ள முடி யாது" என்று காரணம் காட்டினாலும், இந்த ஆசிரியர்களுக்கு முழுமையான பாதுகாப்பு அளிக்கக்கூடிய அளவிலே, இந்தப் பணியார்களை எல்லாம் அரசுப் பணியாளர்களாக மாற்றுவதற்கான நடவடிக்கைகளை எடுத்து அவர்களைப் பாதுகாக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அதற்கான நடவடிக்கை களை எடுத்து அவர்களுடைய குறைகளைப் போக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். எனக்குப் பேச வாய்ப்பளித்தமைக்குத் தலைவர் அவர்களுக்கு நன்றி கூறி அமர்கிறேன். வணக்கம்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : அடுத்து, மாண்புமிகு அங்கத்தினர் திரு. க. மீனாட்சிசுந்தரம் அவர்கள் பேசுவார்கள்.

திரு. ஈ. வே. அ. வள்ளிமுத்து : மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, உறுப்பினர் அவர்கள் கூறியவைகள்பற்றிச் சில கருத்துக்களை நான் கூற ஆசைப்படுகிறேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : அடுத்துப் பேச வேண்டியவரைப் பேசச் சொல்லியிருக்கிறேன். அங்கத்தினர் அவர்கள் பள்ளி நிறுவனம் நடத்துபவர் என்று நினைக்கிறேன்.

திரு. ஈ. வே. அ. வள்ளிமுத்து : ஆம்.

* திரு க. மீனாட்சிசுந்தரம் : மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, இங்கே மாண்புமிகு அங்கத்தினர் திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் அவர்கள் கொண்டு வந்திருக்கின்ற, தனி நபர் தீர்மானத்தின் மீது நான் பேச இருக்கிறேன். 'தனியார் கல்வி நிலையங்கள், உள்ளாட்சித் துறை, மாநகராட்சியின்கீழ் உள்ள கல்வி நிலையங்கள் ஆகியவற்றில் பணி புரியும் ஆசிரியர்கள்-கல்வி ஊழியர்களுக்குப் பூரண பணிப் பாதுகாப்பு அளிக்கும் பொருட்டு கல்வி நிறுவனங்கள் அனைத்தையும் ஒரே சீரான நிர்வாகத்தின்கீழ் கொண்டு வரும்

(திரு. க. மீனாட்சிசுந்தரம்) [1981 பிப்ரவரி 12

பகுத்தறிவுக் கொள்கைகளை இளம் பிராயத்திலேயே போதியுங்கள் என்றார்கள். அதற்கு ஆலோசனைகளையும் சொல்லி வாழ்த்தையும் எழுதித் தந்தார்கள். எனவே, முன்னர் நான் குறிப்பிட்ட அந்தப் பாட்டுக்கு ஒரு புதிய கருத்தை நான் சொன்னேன். அது என்ன?

'வாக்குண்டாம்'', நல்ல பேச்சுத் திறமை உண்டாம், 'நல்ல மனமுண்டாம்' நல்ல உள்ளமுண்டாக்கும், நல்ல உள்ளத் தெளிவுண்டாக்கும், 'மாமலராள் நோக்குண்டாம்', அதாவது மாமலரை கவிஞர்கள் கண்ணுக்கு ஒப்பிடுவார்கள். ஆகவே கண்ணினுடைய ஒளி நன்றாக இருக்கும், 'மேனி நுடங்காது, இந்த மேனி, இந்த உடல் வதங்கவே வதங்காது', அது எப்போது தெரியுமா? என்று கேட்டு, 'பூக்கொண்டு' பூவிலிருந்து பாதம் வரையிலே, அதாவது வேர் வரையிலே 'திருமேனி' என்றால் 'துளசி', 'தும்பி' என்றால் தும்பைச்செடி, 'கையான்' என்றால் 'கையான்துகலை' என்பது. சித்தவைத்திய பாடல்கள் பாடிய அவ்வையார் பாடல் இது. பக்திப் பாடல்கள் பாடிய அவ்வையார் பாடிய பாடல் அல்ல இது. ஆகவே 'திருமேனி'. அதாவது துளசி, 'தும்பை' அதாவது 'தும்பைச் செடி', 'கையான்' அதாவது 'கையான்துகலை' இவைகளையெல்லாம் பூ முதல், பாதம் வரையிலே அதாவது வேர் வரையிலே தனித்தனியாக எடுத்து, பொடி செய்து, 'துப்பு' என்றால் 'நெய்', 'ஆர்'. என்றால் சேர்த்து, அதாவது நெய்யைச் சேர்த்து, அவைகளைக் கலந்து லேகியம் செய்து, சாப்பிட்டு வந்தால், அதாவது தப்பாமல் சார்வார் தமக்கு 'வாக்குண்டாம், நல்ல மனமுண்டாம், மாமலராள் நோக்குண்டாம், மேனி நுடங்காது' என்று நான் சொல்லிக் கொடுத்தேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர்: எவ்வளவு குழப்பமோ அவ்வளவு குழப்பம் இருக்கிறது.

திரு. க. மீனாட்சிசுந்தரம்: மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, அவகாசம் இல்லாத காரணத்தினால், வேகமாகச் சொல்லியிருக்கிறேன். அதனால் குழப்பமாகத் தெரிகிறதே தவிர வேறல்ல. அது எந்த அளவுக்கு என்னைப் பாதித்தது? இப்படி புதிய விளக்கம் கொடுத்துப் போதித்ததனால் அங்கு எனக்குச் சீட்டுக் கிழிக்கப்பட்டது. அந்தப் பள்ளியிலேயிருந்து வெளியேற்றப்பட்டேன். புதுமையைச் சொல்லி அதனாலே பாதிக்கப்பட்டவன் நான். பழைய கருத்தை எடுத்துவிட்டு புதுமையான கருத்தைச் சொல்லிச் சிந்தியுங்கள் என்று சொன்னவர் வாழ்வு இப்படி இருக்கிறது. அறிஞர் அண்ணா அவர்கள் வழியில் இந்த அரசு இருக்கின்ற இந்தக் காலத்திலேயே, அந்தத் தனியார் பள்ளிகளை எடுப்பதற்குத் தயங்கினால், எந்தக் காலத்திலே.



1981 பிப்ரவரி 12] (திரு. க. மீனாட்சிசுந்தரம்)

யார் இதையெல்லாம் செய்யப்போகிறார்கள்? ஆகவே இப்படிப்பட்ட நிலையிலே அவைகளை எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அது மட்டுமல்ல, ஆசிரியர்கள் இந்தப் பள்ளிகளில் எந்த அளவுக்குப் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள் என்பதையும் நான் முக்கியமாக எடுத்துக்கூற விரும்புகிறேன். மாணவர்கள்கூட பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். அப்பள்ளிகளில் மாணவர்களிடம் நன்கொடைகள் வசூலிக்கிறார்கள். மிக அதிகமான அளவுக்கு வசூல் செய்துகொண்டிருக்கிறார்கள். அதையெல்லாம் நாங்கள் அங்கே பார்த்தவர்கள். அங்கே மத போதனைகள் நடந்துகொண்டிருக்கின்றன. அங்கே ஆசிரியர்கள் அடிமைகளைப் போல நடத்தப்படுகிறார்கள். சட்டங்களை அவர்கள் பின்பற்றுவதில்லை. அரசு உத்தரவு போட்டாலும், அதை அவர்கள் நடைமுறைப்படுத்துவதில்லை. அமைச்சர் அவர்கள்கூட இதைக் கூறியிருக்கிறார்கள் என்பதை இங்குள்ளவர்கள் எல்லோரும் அறிவார்கள். சாதாரணமாக அரசு ஒரு உத்தரவு போடுகிறது. மேல் நிலைப்

(முற்பகல் 11-40)

பள்ளிகளில் யார் சீனியராக இருக்கிறார்களோ, தகுதியுடையவர்களாக இருக்கிறார்களோ, அவர்களை உதவித் தலைமை ஆசிரியராக நியமிக்க வேண்டுமென்று உத்தரவு போட்டிருக்கிறது. நாகையிலே இருக்கிற சி.எஸ்.ஐ. பள்ளி நிர்வாகம் இந்த உத்தரவைப் பின்பற்றவில்லை. அந்த சீனியர் ஆசிரியரிடம் மாணவராகப் படித்து ஆசிரியரான அவர்கள் மதத்தைச் சேர்ந்தவரை உதவித் தலைமை ஆசிரியராக்கி, அவருக்குக் கீழே பணிமூப்பு உடைய அவ்வாசிரியர் பணி புரியும் நிலையை உருவாக்கியிருக்கிறார்கள். கல்வித் துறையார் அந்தப்பதவி உயர்வைத் தடுத்து நிறுத்த முடியவில்லை. பூவிருந்தவல்லியிலே டி.பி.எம். நடுநிலைப் பள்ளி என்று ஒரு பள்ளி இருக்கிறது. அந்தப் பள்ளியிலே ஒரு பட்டதாரி ஆசிரியரைத் தலைமை ஆசிரியராகப் போட வேண்டுமென்று இரண்டு வருடங்களாக எழுதிக் கேட்டிருக்கிறார்கள். நம்முடைய கல்வித் துறையும் அங்கே பட்டதாரி ஆசிரியரை நியமிக்க அனுமதித்து, உத்தரவு போட்டிருக்கிறது. அந்தப் பள்ளியிலே ஒருவர் தகுதியுடையவராக இருக்கிறார். உத்தரகுமரன் என்பது அவருடைய பெயர். அந்தப் பதவியில் அமர்த்த அவரிடம் 3,000 ரூபாய் கேட்கிறார்கள். அவர் அந்தத் தொகையைத் தரவில்லை. எனவே அந்த போஸ்டே வேண்டாமென்று திருப்பிக் கொடுத்துவிடுகிறார்கள். 8 ஆம் வகுப்பிலே பி.டி. தர ஆசிரியர்களைத் தலைமை ஆசிரியர்களாக நியமிப்பதால் கல்வியின் தரம் உயரும் என்ற

பொருட்டும், சீரான கல்வி வளர்ச்சியை நிலை நிறுத்தும் பொருட்டும் தமிழ் நாட்டில் உள்ள தனியார் பள்ளிகள், தனியார் கல்லூரிகள், உள்ளாட்சி, மாநகராட்சித் துறை நடத்தும் பள்ளிகள் அனைத்தையும் தமிழ்நாடு அரசே ஏற்று நடத்தத் தகுந்த சட்டத்தை நிறைவேற்றலாம்' என்ற வகையிலே இங்கே ஒரு தீர்மானத்தைக் கொண்டு வந்திருக்கிறார்கள். அதிலே நான் ஒன்றை இங்கே குறிப்பிட விரும்புகிறேன். இந்த தீர்மானத்தைக் கொண்டு வந்திருக்கின்ற அங்கத்தினர் திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் அவர்கள் தனியார் துறையிலே பணியாற்றிக்கொண்டிருப்பவர். அதுபோல இந்தத் தீர்மானத்தை வழிமொழிந்து பேசிய மாண்புமிகு அங்கத்தினர் திரு. பா. ரா. தாமஸ் அவர்களும் தனியார் துறையிலே பணியாற்றிக்கொண்டிருப்பவர்கள்தான். அவர்களில் ஒருவரான மாண்புமிகு உறுப்பினர் திரு. பி. ஆர். தாமஸ் சிறுபான்மையினரால் நடத்தப்படுகின்ற பள்ளியிலே பணியாற்றிக்கொண்டிருக்கிறார். அந்த இரண்டு அங்கத்தினர்களும், அவர்கள் பணியாற்றும் தனியார் துறை நிறுவனங்களில் ஆசிரியர்களுக்குப் பாதுகாப்பு இல்லாமல் இருக்கின்ற நிலைமைகளைப் பற்றி அவர்கள் நன்கு உணர்ந்திருந்ததால், எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். அவர்கள் பணியாற்றுகின்ற தனியார் பள்ளிகளைப் போன்றவைகளைப்பற்றி, அப்படிப்பட்ட நிர்வாகத்தினர்களைப் பற்றி, அச்சமில்லாமல், இங்கு கூறுவதைத் தவிர வேறு வழியில்லாமல் தங்களுடைய கருத்துக்களை முனைப்போடு, உளப்பூர்வமாக எடுத்துச்சொல்லியிருக்கிறார்கள். அவர்கள் பணியாற்றும் துறையாகிய தனியார் துறையைப் பற்றியே எடுத்துச் சொல்லியிருப்பதைப் பார்த்தாலும், அதிலுள்ள உண்மைகள் நமக்குப் புரியும். அவர்கள் பல உண்மையான பிரச்சினைகளை இங்கே எடுத்து வைத்திருக்கிறார்கள். அதிலே அச்சத்திற்கு இடமில்லாமல், அந்த மாதிரியான நிறுவனங்களைப் பற்றி, எதிர்த்தே அவர்கள் கருத்து சொல்லக்கூடிய அளவுக்கு அங்கு நிலைமைகள் இருந்துகொண்டிருக்கின்றன என்பதை எண்ணிப்பார்க்க வேண்டும். அப்படி எண்ணிப் பார்க்கும்போது, அதிலே எந்த அளவுக்கு நியாயம் இருக்கிறது என்பதை நாம் எல்லோரும் நன்கு உணர முடியும் என்று கருதுகிறேன். ஒன்று நான் சொல்வேன். இந்த அரசு காலத்தில் மட்டுமல்ல, டாக்டர் கலைஞர் அவர்கள் காலத்தில் கூட தந்தை பெரியார் அவர்களுடைய வழியிலே அமைக்கப்பட்ட இந்த அரசுகள், பகுத்தறிவுக் கொள்கையை வளர்க்கும் முனைப்புள்ள அரசுகளாகும். ஆனால் இப்போது தனியார் பள்ளிகளிலே இருக்கக்கூடிய நிலைமைகள் என்ன? அந்தப் பள்ளிகள் மதத்தை வளர்ப்பதற்காக என்று சில இருக்கின்றன. வியாபார நோக்கோடு சில பள்ளிகள் செயல்படுகின்றன. ஆசிரியர்களை அடிமைகளாக நடத்துகின்ற பள்ளிகள் இருக்கின்றன. ஆசிரியர்களை அடிமைகளாக்கித்தான் ஒரு ஆண்டான் என தன் பாரம்பரியத்தை நிறுவும் வகையில் செயல்பட்டுக்





கொண்டிருக்கின்றன. அங்கே பெண்களை, ஆசிரியர்களாக வருகின்றவர்களைக் கேவலப்படுத்தி நடத்துகின்ற, வேறு சில சுகத்தை அனுபவிக்க வேண்டுமென்ற நோக்கத்துடன் நடத்துகின்ற பள்ளிகள் இருக்கின்றன. அப்படிப்பட்ட பள்ளிகள்கூட இருக்கின்றன என்பதை நான் ஆதாரபூர்வமாக எடுத்துக் கூற முடியும். ஆக இந்த நாட்டிலே பல தனியார் பள்ளி நிர்வாகிகள் காட்டு தர்பார் நடத்திக் கொண்டிருக்கிறார்கள். அவர்கள் ஒரு தனி ராஜ்யமே நடத்திக்கொண்டிருக்கிறார்கள். தனியார் பள்ளி நிறுவனங்களில் ஆசிரியர்கள் பாதிக்கப்படுகிறார்கள். நானேகூட அப்படி பாதிக்கப்பட்டவனாக இருக்கிறேன். பெரியார், அண்ணா போன்றவர்களெல்லாம் தமிழில் புதுமை வேண்டுமென்றார்கள். தமிழிலே இருக்கக்கூடிய கருத்துக்களிலே, இலக்கண இலக்கியங்களிலே புதுமையைப் புகுத்த வேண்டுமென்று சொன்னார்கள். மாணவர்களின் சிந்தனையைத் தூண்டிவிடுகின்ற அளவுக்கு புதுமைகளைப் புகுத்த வேண்டும் என்று சொன்னார்கள். மாணவர்களிடையே உள்ள மூடக் கொள்கைகளைப் போக்க வேண்டும். பகுத்தறிவுக் கொள்கைகளைப் புகுத்த வேண்டும். அந்த மூடக் கொள்கைகளை முறியடிக்கின்ற வகையிலே, தொடக்கப் பள்ளி நிலையிலே மாணவர்கள் ஆராய்ந்தறிகின்ற அளவுக்கு அவர்களுக்குச் சிந்தனைகளை உருவாக்க வேண்டும், அந்த வகையிலே ஆசிரியர்கள் போதிக்க வேண்டுமென்பதை அவர்கள் கூறி வந்தார்கள் என்பது இங்குள்ள அனைவருக்கும் தெரிந்திருக்கும். நான் ஒரு பள்ளியிலே ஆசிரியராகப் பணியாற்றியிருக்கிறேன். 1955 முதல் 1958 வரை ஒரு பள்ளியிலே ஆசிரியராக இருந்தேன்.

'வாக்குண்டாம் நல்ல மனமுண்டாம், மாமலராள் நல்ல நோக்குண்டாம்...' என்ற அந்தப் பாடலை நான் முழுவதுமாகச் சொல்ல வேண்டியதில்லை என்று நினைக்கிறேன். நான் அந்தப் பள்ளியிலே அந்தப் பாடலைச் சொல்லித் தரும்போது, ஒரு புதுமையான பொருளைச் சொல்லித் தந்தேன். காரணம் என்னவென்றால், ஒரு தடவை நான் தந்தை பெரியார் அவர்களிடம் சென்று "தொடக்கப் பள்ளி ஆசிரியர்கள் மகாநாடு ஒன்று நடத்தப் போகிறேன். அதற்கு ஒரு வாழ்த்துத் தாருங்கள்" என்று அவரிடம் கேட்டேன். அப்போது அவர்கள், "நீங்கள் ஆரம்பப் பள்ளி ஆசிரியர்கள் தானே. பழையவற்றைச் சொல்லி பள்ளிப் பிள்ளைகளை ஆரம்பத்திலேயே கெடுப்பவர்கள்தானே? முதன் முதலில் பிள்ளையார் சுழி போட்டு கல்வியைத் தொடங்கி மூட நம்பிக்கைக்கு வித்திட்டவர்கள் உங்கள் சமுதாயத்தினர் தானே? என்று கேட்டார்கள். நான் அப்படியல்ல என்று, அவருக்குச் சொன்னேன்; பதிலுக்கு அவர் சொன்னார். இனிமேலாவது பகுத்தறிவுக் கொள்கைகளை மாணவர்களுக்குப் போதியுங்கள் என்று சொன்னார்.

(திரு. க. மீனாட்சிசுந்தரம்) [1981 பிப்ரவரி 12

கொள்கையை அரசு வகுத்திருக்கிறது. அதற்கு எதிராகப் பள்ளி செயல்பட்டிருக்கிறது. தகுதியுடையவர் பணம் தரவில்லை என்பதால் அவரைப் போடக்கூடாதென்று, கருதி, கேட்டு வாங்கிய போஸ்டையும் திருப்பிக் கொடுத்திருக்கிறார்கள். இதைக் கட்டுப்படுத்த அரசால் முடியவில்லை. அப்படிப்பட்ட நிர்வாகங்களுக்கு அரசு பணம் கொடுத்து, இப்படிப்பட்ட மோசமான நிலைமைகளை ஊக்குவிக்க வேண்டுமா என்பதைச் சிந்தித்துப் பார்க்க வேண்டும். சிறுபான்மையினத்தைச் சேர்ந்தவர்கள் கல்வி நிறுவனங்களை நடத்தும் போது, அதில் தலையிட அரசுக்கு உரிமையில்லை. அரசியல் சட்டம் அந்தப் பாதுகாப்பை அவர்களுக்குத் தருகிறது. ஆனால் அதே பள்ளியில் பணியாற்றும் சிறுபான்மை இனத்தைச் சார்ந்தவர் பாதிக்கப்படும்போது, அதை நிவர்த்திக்க அரசியல் சட்டத்தில் இடமில்லை. சிறுபான்மை இனத்தைச் சேர்ந்தவர்கள் தொழில் நிறுவனங்களை நடத்துகிறார்கள், ஓட்டல்கள் நடத்துகிறார்கள், கடைகள் வைத்து நடத்துகிறார்கள். அங்கே பணியாற்றும் ஊழியர்கள் பாதிக்கப்பட்டால், அவர்களைப் பாதுகாப்பதற்கு வழிமுறை இருக்கிறது. ஆனால் கல்வி நிறுவனங்களில் வேறுபட்ட ஒரு வழிமுறை இருக்கக் காரணமென்ன? அந்த அளவிற்கு தனியார் நிறுவனங்கள் கட்டுப்படுத்த முடியாத நிலையில் மோசமாக இருக்கின்றன என்பதைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

பெண்களைப் பொறுத்தவரையில், மிகவும் மோசமாக நடத்தப்படுகிறார்கள். இங்கே அந்த விவரங்களைச் சொல்ல நான் அஞ்சுகிறேன். சொல்வதும் மரபல்ல. மாண்புமிகு உறுப்பினர் திரு. தாமஸ் அவர்கள் ஒன்றைச் சொன்னார்கள். ஊதியம் வாங்குகின்றபோது வந்து நின்று நிர்வாகிகளை வணங்கிச் செல்ல வேண்டுமென்ற முறை இருப்பதாகச் சொன்னார்கள். அது மட்டுமல்ல நிலைமை. கும்பகோணத்தில் ஒரு பள்ளி இருந்தது. அந்தப் பள்ளியிலே நிர்வாகி என்ன செய்தார் என்பதைத் தெரிவிக்க விரும்புகிறேன். மாலை 7 மணி வரையில் பெண் ஆசிரியர்கள் அங்கே தங்கிவிட்டுத்தான் செல்ல வேண்டும். கடைசியில் அவரிடம் சொல்லிவிட்டுச் செல்ல வேண்டும். ஒவ்வொருவராக வந்து, சொல்லிவிட்டுச் செல்ல வேண்டும். அப்படிப் பெண்களை நடத்துவதற்கு சில காரணங்கள் இருக்கிறதென்று சொல்லப்படுகிறது. எனவே இவைகளையெல்லாம் தடுக்க முயற்சிகள் எடுத்துக்கொள்ளப்பட வேண்டும். நான் வெளிப்படையாகச் சொல்லவில்லை. மறைமுகமாகத்தான் சொல்கிறேன்.

**திரு. எஸ். ஆர். இராதா:** மாண்புமிகு உறுப்பினரவர்கள் சொல்லுகிற மாதிரி, கும்பகோணத்தில் ஒரு பள்ளி இருக்கிறதா என்பது தெரியவில்லை. இதில், கும்பகோணம் என்று குறிப்பிட்டுச் சொல்லுவது அவசியம்தானா



1981 பிப்ரவரி 12] (திரு. எஸ். ஆர். இராதா)

என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். இதனால் கும்பகோணம் நகரத்திற்கே கேவலமான பெயர் உருவாகிவிடும். தமிழ் நாட்டில் பல பள்ளிகள் இருக்கின்றன. எனவே உதாரணத்திற்காக கும்பகோணத்தை மட்டும் குறிப்பிட்டுச் சொல்லக்கூடாதென்று தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. க. மீனாட்சிசுந்தரம்:** என்னுடைய தொகுதி அந்தத் தொகுதி. பள்ளியின் பெயரைச் சொன்னால், உறுப்பினரவர்களே மிகவும் வருத்தப்படுவார்கள். அப்படிப்பட்ட பள்ளிகள் இருக்கின்றன என்பதற்கு ஆதாரம் தருகிறேன். தனியாகத் தருகிறேன். அவர்கள் மிகவும் வருத்தப்படுகிறார்கள். மாண்புமிகு உறுப்பினரவர்களுக்காகவேதான் நான் அந்தப் பள்ளியின் பெயரைச் சொல்லவில்லை. இப்படிப்பட்ட சூழ்நிலைகள் தனியார் பள்ளிகளிலே இருக்கின்றன என்பதை வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

தனியார் பள்ளிகளில் இப்படி நடக்கக் காரணம் அதிகாரிகள்தான். ஏன் அதிகாரிகள் இதற்குக் காரணம்? அரசுப் பள்ளிகளிலே அதிகாரிகளுக்கு வருவாயில்லை. தனியார் பள்ளிகளில் அதிகாரிகளுக்கு வருவாய் உண்டு. அங்கே நடக்கும் அக்கிரமங்களுக்குத் துணை போகிறவர்கள் அதிகாரிகள்தான். ஒரு ஆசிரியர் பாதிக்கப்படுகிறார் என்றால், நிர்வாகத்தின் மீது புகார் செய்கிறார். அது குறித்து ஆசிரியர் மேல் முறையீடு செய்யும்போது, அதை கவனிக்க வேண்டிய அதிகாரி, நிர்வாகியின் காரில் சென்று, நிர்வாகியின் வீட்டிலே தங்கி, விருந்து உண்டு, அதற்குப் பின்னாலே அலுவலைக் கவனிக்கச் சென்றால், நீதி யாருக்குக் கிடைக்குமென்பதைச் சிந்தித்துப் பார்க்க வேண்டும். இதையும் ஆதாரத்தோடு சொல்லத் தயாராக இருக்கிறேன். அதிகாரிகள் இப்போது என்ன செய்கிறார்கள்? தங்களுடைய வருவாய்க்காக, தங்களுடைய பிழைப்பிற்காக, தங்களுடைய குடும்ப நலத்திற்காக தனியார் பள்ளிகளை அரசு ஏற்பதற்குரிய சூழ்நிலையை தவிர்த்து வருகிறார்கள். அதிகாரிகளை நம்பி, அவர்கள் எல்லாவற்றையும் செய்வார்களென்று நம்பி, அவர்கள் தரும் குறிப்புகளை வைத்து, நடவடிக்கை எடுத்தால் போதுமென்று அரசு நம்பக்கூடாது. முதலிலே அரசு தனியார் பள்ளிகளை ஏற்றுக்கொள்ள வேண்டும் என்ற முடிவுக்கு வர வேண்டும். அதற்குப் பிறகு அதற்குத் தகுந்தாற்போல விதிகளை வகுக்கச் சொல்ல அதிகாரிகளை வற்புறுத்த வேண்டும். அவர்களுக்கு இந்தப் பள்ளிகளின் வாயிலாக நல்வாழ்வு கிடைப்பதால், அரசு அவற்றை ஏற்கலாமா என்று அவர்களிடம் கருத்து கேட்டால், அவர்கள் அதற்கு ஒத்துக்கொள்ளமாட்டார்கள். உதாரணத்திற்கு ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். ஒரே பள்ளியிலிருந்து 2 மேல்முறையீடுகள் வருகின்றன. ஒரு மேல்முறையீடு நிர்வாகத்துக்கு வேண்டியவரிடமிருந்து

(திரு. க. மீனாட்சிசுந்தரம்) [1981 பிப்ரவரி 12

வருகிறது. அவர்களுக்குச் சாதகமாக ஆணையிடப்படுகிறது. ஆனால் அதே காரணத்தைக் காட்டி நிர்வாகத்திற்கு வேண்டாதவரான ஒரு ஆசிரியர் செய்த, இன்னொரு மேல் முறையீட்டில் அதே அதிகாரியால் வேறுவிதமாக ஆணையிடப்படுகிறது. அங்கே கையூட்டு பெற்றிருக்கிறார்களென்பது பொருள். அதிகாரிகள், தனியார் துறை நிறுவனங்களுக்கு மிக மிக உறுதுணையாக இருந்துகொண்டிருக்கிறார்கள். அப்படிப்பட்ட சூழலைத் தவிர்க்க அரசு முயற்சி எடுக்க வேண்டும். இவைகளுக்கெல்லாம் பரிகாரம், தனியார் பள்ளிகளை அரசுடைமையாக்குவதுதான். மாண்புமிகு உறுப்பினர் திரு. தாமஸ் அவர்கள், அரசுப் பள்ளிகளிலே கல்வித் தரமில்லை என்று சொல்வது சரியல்ல என்று சொல்லி, கல்வித் தரம் இருக்கிறதென்று ஆதாரத்தோடு சொன்னார்கள். தனியார் பள்ளிகளில்தான் கல்வித் தரமிருக்கிறதென்று பலர் எண்ணிக் கொண்டிருக்கிறார்கள். அதற்குப் பல காரணங்கள் உண்டு. கட்டிடங்கள் இல்லாத அரசுப் பள்ளிகள் உண்டு. அங்கே 'அட்மாஸ்பியர்' சரியாக இல்லை. பிள்ளைகள் பள்ளிக்கு வந்தவுடன், அவர்களுக்கு படிப்பில் நாட்டமில்லை. சாலையில் செல்லும் பேருந்துகளைப் பார்க்குமளவிற்கு கட்டிடங்கள் பாதுகாப்பு இல்லாமல் பள்ளிகள் இருக்கின்றன. அப்படிப்பட்ட பள்ளிகள் அரசுப் பள்ளிகளாக இருக்கின்றன. இன்னும் அங்கே போதிய ஆசிரியர்கள் இல்லாத நிலை இருக்கிறது. தனியார் பள்ளிகளிலே மாணவர்களை வடிகட்டி, தரமுள்ள மாணவர்களையே சேர்த்துக்கொள்ளுகிறார்கள். ஆனால் அரசுப் பள்ளிகளிலே எல்லோரையும் சேர்த்துக்கொள்ள வேண்டிய கட்டாயம் இருக்கிறது. அங்கே போதனைக்கான உபகரணங்கள் வழங்கப்படவில்லை. அரசியல்வாதிகளின் தலையீடும் அதிகமாக இருக்கிறது. ஊருக்கு இளைத்தவன் பிள்ளையார் கோவில் ஆண்டி, அவனுக்கு இளைத்தவன் பள்ளி ஆசிரியன் என்பார்கள். அரசியல்வாதிகளுக்கு யாரும் கண்ணில் படுவதில்லை, ஆசிரியர்கள்தான் கண்ணில் படுகிறார்கள். தங்களுக்கு வேண்டாதவர்களை மாற்ற வேண்டுமென்று அரசியல்வாதிகள் முயற்சித்து வெற்றி பெறுகிறார்கள். ஆனால் இன்றைக்கு ஒருவர் தனியார் பள்ளியிலே சேருகிறார் என்றால், ரிடையர் ஆகும்வரையில் அங்கேயேதான் பணியாற்றுவார். எனவே அவரால் கல்வியில் போதிய கவனம் செலுத்தி கல்வித் தரத்தை நல்ல முறையில் உயர்த்த முடியும். யாரை காக்காய் பிடித்தால் இங்கேயே இருக்கலாமென்ற சிந்தனை அவர்களுக்கில்லை. எனவே நல்ல கல்வித் தரத்தை அரசுப் பள்ளிகளிலும் உருவாக்க முடியும். சிறந்த கட்டிடங்களை, சிறந்த உபகரணங்களை முதலில் தர வேண்டும். அரசியல்வாதிகளின் குறுக்கீடுகளை முதலிலே குறைக்க வேண்டும். அப்படிச் செய்தால் அரசுப் பள்ளிகளில் நல்ல கல்வித் தரத்தை ஏற்படுத்த முடியும்.



1981 பிப்ரவரி 12] (திரு. க. மீனாட்சிசுந்தரம்)

அடுத்து, ஊராட்சி ஒன்றியப் பள்ளிகளில் பணி புரியும் ஆசிரியர்களை அரசு ஊழியர்களாக்கும் திட்டத்தை அரசு ஏற்றுக்கொண்டிருக்கிறது. அதில் ஏன் பாதிக் கிணறு தாண்ட வேண்டும்? அதை ஏன் அரசுடைமையாக்குவோமென்று சொல்லவில்லை? பாதிக் கிணறு தாண்டினால், அதனால் ஆபத்துதான் ஏற்படும், எனவே இரட்டை ஆட்சி கூடாதென்று சொல்லுகிறோம். நகராட்சி, மாநகராட்சிப் பள்ளிகள் என்னவாயின? அவையெல்லாம் உள்ளாட்சித் துறையிலேதான் இருக்கின்றன. உள்ளாட்சித் துறையிலே இருப்பதை எடுப்பது நல்ல நோக்கமென்றுதானே தொடங்கியிருக்கிறார்கள். ஏன் முழுவதுமாகச் செய்யவில்லை? அதோடு னிதயார் பள்ளிகளையும் எடுக்க வேண்டும். பீகாரிலே அப்படி எடுத்திருக்கிறார்கள். தனியார் பள்ளிகளை அரசுடமை ஆக்கியிருக்கிறார்கள். அங்கேயும் மைனாரிட்டி பள்ளிகளை எடுக்க அரசியல் சட்டத்திலே இடமில்லாததால், மெஜாரிட்டியினர் நடத்தும் பள்ளிகளை எடுத்திருக்கிறார்கள். இங்கே கல்வி அமைச்சரவர்கள் பேசும்போது, மைனாரிட்டியினர் அனுபவிக்கின்ற உரிமையை மெஜாரிட்டியினர் அனுபவிப்பதற்குத் தடையாக இருக்கலாமா, எனவே அதைப்பற்றி ஆலோசிக்கிறோமென்று சொன்னார்கள். சட்டத்தின் மூலம் அவர்கள் பாதுகாப்பு தேடிக்கொண்டிருக்கிற காரணத்தாலே, மற்றொருபுறம் நடக்கும் அக்கிரமங்களைப் பொறுத்துக்கொள்ள வேண்டுமென்ற எண்ணம் நமக்கு இருக்கக்கூடாது. எனவே அந்த நல்ல காரியத்தையும் நம் காலத்திலே செய்தோமென்ற முறையிலே, நம்முடைய அரசு முயற்சிகளை எடுக்க வேண்டுமென்று இந்த

[மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் தலைமை]

(முற்பகல் 11-50)

நேரத்திலே நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். எனவே, நகராட்சி, மாநகராட்சிப் பள்ளிகளிலுள்ள ஆசிரியர்களையும் அரசு விரைவிலே அரசு ஊழியர்களாக ஆக்க வேண்டும். இதற்கு மற்றொரு காரணமும் இருக்கிறது. உள்ளாட்சிகளின் கீழ் அவை இருப்பதால், அரசியல் குறுக்கீடுகள் மிக மிக அதிகம். நகராட்சியினுடைய சேர்மேன் யாரோ அவரைப் போய் ஆசிரியர் காக்காய் பிடித்துக்கொண்டால் தான், அந்த இடத்தில் ஆசிரியர் தொடர்ந்து வேலை செய்ய முடியும் என்கிற நிலைமை இருக்கிறது. இல்லாவிட்டால் குறைந்தபட்சம் அங்குள்ள மெம்பரையாவது காக்காய் பிடிக்க வேண்டும். அதுவும் இல்லாவிட்டால் அவரை எதிர்த்து நிற்கின்ற அரசியல் வட்டாரத்தில் செல்வாக்குப் பெற்றவரையாவது காக்காய் பிடிக்க வேண்டும். ஆகவே அந்த ஆசிரியர்களுக்கு ஆபத்து அதிகமாக இருக்கிறது. உள்ளாட்சி நிறுவனங்களில் ஆசிரியர்கள் அரசியல்வாதிகளுக்கு ஜாலரா தட்டக் கூடிய அளவுக்கு ஆளாக்கப்பட்டிருக்கிறார்கள்.

திரு. சோ. ஆறுமுகம்: உறுப்பினர் அவர்கள் நகராட்சிகளில், நகராட்சி ஒன்றியங்களில் உள்ள பள்ளிகளைக்கூட அரசுடமை ஆக்க வேண்டுமென்று கூறுகிறார்கள். அதே சமயத்தில் அரசாங்கப் பள்ளிகள் என்றால், அரசியல் வாதிகளுக்குப் பின்னால் போக வேண்டுமென்றும் கூறுகிறார்கள். இப்போது அங்கே மக்களுடைய பிரதிநிதிகளுக்குப் பதிலாக அதிகாரிகள்தான் இருக்கிறார்கள். ஆகவே அரசியல்வாதிகளுடைய குறுக்கீடுகள் என்ற பிரச்சினையே வரவில்லை. அதிகாரிகள் இருப்பதால், இப்போதே குறுக்கீடுகள் இல்லாமலிருப்பதற்கான வாய்ப்புகள் இருக்கின்றன.

திரு. க. மீனாட்சிசுந்தரம்: தனியார் பள்ளிகளில் எந்த அரசியல்வாதி தலையிட்டாலும், அங்கு பணிபுரிகின்ற ஆசிரியரை மாறுதல் செய்துவிட முடியாது. ஆனால் உள்ளாட்சி நிறுவனங்களில் இன்றைக்கு அங்கே சேர்மேன் இல்லாவிட்டாலும்கூட, மற்றபடி இருக்கின்ற அரசியல்வாதிகளுக்கு அவர்கள் அஞ்சுகிறார்கள். அதிகாரிகளே இன்றைக்கு அரசியல்வாதிகளுக்கு, குறிப்பாக ஆளும் கட்சிக்கு அஞ்சுகிற சூழ்நிலை இருக்கிறது. ஆகவே தான் எந்த அளவிலும் அரசியல்வாதிகளே தலையிடாத அளவுக்கு மாநகராட்சிப் பள்ளிகளையும், நகராட்சிப் பள்ளிகளையும் அரசுடமையாக்க வேண்டுமென்று நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

திரு. ஜேப்பியார்: ஆளும் கட்சியைப்பற்றி உறுப்பினர் சொன்னார். அவர் சொல்வதைப் பார்த்தால், உறுப்பினரேகூட சில இடங்களில் இப்படிப் பட்ட காரியங்களைச் செய்திருப்பாரோ என்று நான் சந்தேகப்படுகிறேன். எனக்குக் கிடைத்த ஒரு தகவல். இன்பர்மேஷனுக்காக இங்கே அதைச் சொல்கிறேன். மதுரையிலே அவர் ஒன்றைச் சொல்லியிருக்கிறார். ஓர் ஆசிரியரை மாற்றினால், உடனே அங்குள்ள எம்.எல்.ஏ. வீட்டுக்குமுன் போய் மறியல் செய்வேன் என்று சொல்லியிருக்கிறார்கள். அவர் ஒரு ஆசிரியர் பிரதிநிதி. எம்.எல்.சி.யாக இருக்கிறார். எம்.எல்.ஏக்கள் மட்டும் தான் தலையிடுகிறார்கள், எம்.எல்.சி.யான நாமும் அதுபோல் தலையிட்டால் நன்றாக இருக்கும் என்று நினைக்கிறாரா?

திரு. க. மீனாட்சிசுந்தரம்: எம்.எல்.ஏக்களுடைய வீட்டுக்கு முன்னால் மறியல் செய்வேன் என்று பேசியது உண்மை. அது மட்டுமல்ல. ஒரு இடத்திலே அப்படி நடைபெற்றதால், தலைமை தாங்கி போராட்டத்தை நடத்துவதாக அறிவித்தேன். அங்குள்ள எம்.எல்.ஏ. அதாவது வெள்ளக்கோயில் ஒன்றியத்திலே பணிபுரிந்துகொண்டிருந்த ஆசிரியரை தாளவாடிக்கு மாற்ற வேண்டுமென்று மாவட்ட ஆட்சித் தலைவரிடம் சொல்லியிருக்கிறார். அவரைப்பற்றி ஆதாரபூர்வமாக எந்தவித குற்றச்சாட்டையும் கூற முடியாமல்



வாய்மூலமாகவே அவரை மாற்ற வேண்டுமென்று சொல்லியிருக்கிறார். உடனே அவரை ஒன்றியம் விட்டு ஒன்றியம் மாற்றிவிட்டார்கள். அப்படி ஒன்றியம் விட்டு ஒன்றியம் மாற்றுவது மரபல்ல. இருந்தாலும் அவரை மாற்றி விட்டார்கள். நான் உடனே போய் மாவட்ட ஆட்சித் தலைவரிடம் கேட்டேன். "ஆளும் கட்சியைச் சேர்ந்தவர் சொன்னார். ஆகவே மாற்றிவிட்டேன்" என்று மாவட்ட ஆட்சித் தலைவர் சொன்னார். அதுகுறித்து அதற்குப் பிறகு உரிய அமைச்சரிடத்தில் இரண்டு முறை பார்த்துப் பேசினேன். அதிகாரிகளிடத்திலும் அது குறித்துப் பேசினேன். ஆனால் எதுவும் நடக்கவில்லை. வேறு வழியின்றி மாறுதல் செய்யக் கூறிய எம்.எல்.ஏ. வீட்டு முன்பு நான் மறியல் செய்யப் போவதாக அறிவித்தேன். ஏன் எனக்கு அப்படிப்பட்ட ஒரு நிலை ஏற்பட்டது என்பதை உறுப்பினர்கள் எல்லாம் இதிலிருந்தே தெரிந்து கொள்ளலாம். ஆளும் கட்சியினுடைய தலையீடு அங்கே ஏற்பட்டது. ஆகவே தான் எல்லாப் பள்ளிகளையும் அரசுடமையாக்க வேண்டுமென்று நான் கோருகிறேன்.

திரு. ஜேப்பியார்: உறுப்பினர் ஆளும் கட்சி தலையீடு என்று பேசிக் கொண்டேயிருக்கிறார். அந்த ஆசிரியருக்கு அங்குள்ள அரசியல் கட்சியிடத்தில் தொடர்பிருந்தது. அப்படி அவர் அரசியலில் ஈடுபட்டால், அரசியல் மேடையில் பேசினால், பொதுத் தொண்டன் என்ற முறையில், சமுதாயத் தொண்டன் என்ற முறையில் தலையிடுவது தவறா? அப்படிச் செய்வது தவறு என்று உறுப்பினர் கருதுகிறாரா? அவர் எந்தக் கட்சியைச் சார்ந்தவர் என்பதை நான் நிரூபிக்க முடியும். அப்படிப்பட்ட நபர்கள் இருந்தால், இதுபோல் அரசியல் தலையீடுகள் வரத்தான் செய்யும், மாற்றங்களும் வரத் தான் செய்யும்.

திரு. க. மீனாட்சிசுந்தரம்: அனைத்து அரசியல் கட்சி அனுதாபிகளும் இன்றைக்கு ஆசிரியர்களாக இருக்கத்தான் செய்கிறார்கள். அவர் எந்தக் கட்சி என்று நிரூபிக்க முடியும் என்று சொன்னார். நான் கூட டி.ஆர்.டி.யிடம் எழுதிக் கொடுத்தேன். அப்படி அரசியல் சார்புடையவர் என்கிற காரணத்திற்காக அவர் மாற்றப்பட்டிருந்தால், இன்றைக்கு மாநில அளவில் இருக்கின்ற ஆசிரியர்கள் எந்தெந்த கட்சிக்காக தேர்தல் நேரத்தில் பணியாற்றினார்கள் என்பதற்கான ஆதாரங்கள் நிறைய என்னிடம் இருக்கின்றன. பட்டியல் தருகிறேன். அனைவர் மீதும் இதே நடவடிக்கையை எடுக்கிறீர்களா என்று தான் கேட்டேன். ஆளும் கட்சிக்கு சப்போர்ட்டாகத் தான் ஆசிரியர்கள் இருக்க வேண்டுமா? மற்ற கட்சிகளுக்கு சப்போர்ட்டாக இருந்தால், உடனே மாற்றுமா?

(திரு. க. மீனாட்சிசுந்தரம்) [1981 பிப்ரவரி 12

தனியார் பள்ளி ஆசிரியர்களை மட்டும் அங்கே உட்கார்ந்துகொண்டு கேவலப் படுத்தவில்லை. அரசுப் பள்ளி ஆசிரியர்களையும் கேவலமாக நடத்திக் கொண்டிருக்கிறார்கள். ஆசிரியர்களுடைய கவனம் எல்லாம் எப்படி குற்றச் சாட்டுகளுக்கு பதில் சொல்வது என்பதில் இருப்பதால், கல்வி பாதிக்கப்படக் கூடிய நிலை இருக்கிறது. அரசு என்னதான் நல்லெண்ணத்துடன் இருந் தாலும்கூட அங்குள்ள அதிகாரிகள் தங்களுடைய கடமையைச் சரியாகச் செய்வதில்லை. அவர்கள் தங்களுடைய கடமைகளைச் சரியாகச் செய்கிறார் களா, விருப்பு வெறுப்பு இல்லாமல் ஆசிரியர்களிடத்தில் நடந்துகொள் கிறார்களா என்பதைக் கண்காணிக்க வேண்டும். அதற்குரிய அதிகாரிகளை இந்த அரசு நியமிக்க வேண்டுமென்று நான் இந்தச் சந்தர்ப்பத்தில் அரசாங் கத்தை வலியுறுத்திக் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

(நண்பகல் 12-00)

ஏதோ ஒரு அதிகாரிதான் இந்த நாட்டுக்கே கிடைத்தவர் போல அவரைவைத்து எல்லாம் செய்ய வேண்டும் என்ற சூழ்நிலை இன்றைக்கு இருக்கிறது. இதை யெல்லாம் நான் அரசின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். அப்படிப்பட்ட சூழ்நிலையைத் தவிர்த்து, அரசுப் பள்ளிகள் எல்லாம் நல்ல தரமிக்க பள்ளி களாக மாறும் வகையில் நம்முடைய சிந்தனையைச் செலுத்தி அனைத்து தனியார் பள்ளிகளையும், நகராட்சிப் பள்ளிகளையும், மாநகராட்சிப் பள்ளி களையும் அரசுப் பள்ளிகளாக ஆக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டு, முடித்துக்கொள்கிறேன்.

**டாக்டர் இரா. சனார்த்தனம்:** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, தனியார் பள்ளிகள் அனைத்தையும் அரசு ஏற்க வேண்டும் என்ற இந்தத் தீர்மானத்தின்மீது சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். இதைப் பற்றிக் கருத்துத் தெரிவித்த மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லோரும் இந்தக் கருத்திலே ஒருமித்த அளவிலே ஒரே பாட்டுப் பாடியிருந்தாலும்கூட, அதிலே இருக்கிற உண்மை நிலையை நாம் புரிந்துகொள்ள வேண்டும். நாங்கள் இதை ஆதரிக்கிறோம், ஆதரிக்கிறோம் என்று பேசிவிட்டு . . .

**திரு. சோ. ஆறுமுகம்:** மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் ஒரே பாட்டுப்பாடியதாக மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னார்கள். உறுப் பினர்கள் எல்லாம் பேசினார்களே தவிர, பாட்டுப் பாடவில்லை.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்:** பாட்டு என்பது பேச்சைவிட உயர்ந்தது. பாட்டு பாடினார்கள் என்று சொன்னால், மிகவும் இனிமையான முறையிலே பேசியிருக்கிறார்கள் என்று அர்த்தம்.



1981 பிப்ரவரி 12]

**டாக்டர் இரா. சனார்த்தனம்:** நான் குறிப்பிட்டது மாண்புமிகு உறுப் பினர்கள் திரு. மீனாட்சிசுந்தரம், திரு. தாமஸ், திரு. லெட்சுமிகாந்தன் ஆகியோர் எந்தவிதமான மாறுபாடும் இல்லாமல் ஒரே கருத்தை வெளியிட்ட தைத்தான் சொன்னேன். மாண்புமிகு உறுப்பினர் திரு. மீனாட்சிசுந்தரம் அவர்கள் அடிக்கடி தீர்மானத்தை ஆதரிக்கிறேன், ஆதரிக்கிறேன் என்று சொல்லிச்சொல்லி தன் வாதங்களை எடுத்து வைத்தார். அவருடைய வாதத்தி லிருந்தே, தனியார் நடத்துவதிலேயும் தவறு வருகிறது. அரசு நடத்துவ திலேயும் தவறு வருகிறது என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன். அவர் பேசியது தவறு அல்லது குறை என்று நான் சொல்லவில்லை. அவர் பேசிய அந்த நிலைதான் உண்மையான நிலை. தவறு இங்கும் இருக்கிறது. அங்கும் இருக்கிறது. அந்தத் தவறைப் போக்குவது எப்படி என்பதுதான் நம் மிடையே இப்போது இருக்கும் பிரச்சினை. அந்தக் கண்ணோட்டத்தில் அணுகும்போது, இந்தத் தனியார் பள்ளிகள் எல்லாம் எப்படி ஆரம்பிக்கப் பட்டன என்பதை நாம் பார்க்க வேண்டும். ஆரம்பத்திலே மத சார்பாகவும், தனிப்பட்டவர்களின் நல்லெண்ணத்தின் அடிப்படையிலேயும் இந்தத் தனியார் கல்வி நிலையங்கள் வந்தன. பின்னர் பல தொழில்கள் தொடங்கியபோது, கல்வியையும் ஒரு தொழிலாகக் கருதி பள்ளிகளை சிலர் தொடங்கிய காரணத் தினாலே, இந்த நிலைமைக்கு இது வந்துவிட்டது. இந்தக் கல்வியையும் ஒரு லாபகரமான தொழிலாக நடத்தலாம், நம் வீட்டைச் சேர்ந்தவர்களுக்கு வேலை கொடுக்கலாம். இதிலே ஏதாவது ஆதாயம் தேடலாம் பிள்ளைகளை எக்ஸ்கர்ஷன் என்ற பெயரிலே அழைத்துச் சென்று அதிலேயும் ஆதாயம் தேடலாம் என்று இப்படியெல்லாம் எண்ணம் கொண்டவர்கள் நுழைந்துவிட்ட தால்தான், தனியார் பள்ளிகளிலே இந்தப் பிரச்சினைகள் இப்போது வந்து விட்டன. ஆரம்ப காலத்திலே கல்வியைச் சிறப்பாக ஆற்றும் பணியிலேதான் அந்தத் தனியார்களும் அந்தக் கல்வி நிலையங்களைச் சார்ந்தவர்களும் இருந் திருப்பார்கள். ஆகவே, இந்தப் பிரச்சினைகள் அப்போது இருந்திருக்காது. ஆனால் சிறுபான்மையினர் என்ற அடிப்படையிலே பார்க்கின்றபோது, சிறு பான்மையினர் பள்ளிகளும், கல்லூரிகளும் செய்து வருகின்ற காரியங்கள் எந்த நிலைமையிலே இருக்கின்றன என்பதையெல்லாம் நாம் எண்ணிப் பார்க்க வேண்டும். உதாரணமாகச் சொல்லவேண்டுமானால் 'வெஸ்லி' ஹைஸ்கூலில் ஹெட்மாஸ்டர் பதவிக்கு ஒருவரைப் போடவேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. அதுபற்றி அரசின் ஆணை தெளிவாக இருக்கிறது. அரசாணை எண் 1542 என்ற உத்தரவில்

"While making promotions, the School Committee shall first consider the claims of the qualified teachers in that school and if no

such teacher is available, consider appointment of teachers from any other school"

என்று இருக்கிறது. ஆனால் என்ன நடந்தது? இரண்டாண்டு காலமாக அங்கே தமிழாசிரியராக இருந்து தலைமையாசிரியராக வரவேண்டியவருக்கு அந்தப் பதவி வழங்கப்படாத நிலை ஏற்பட்டது. ஆனால் இந்த உத்தரவு தனியார் பள்ளிக்குப் பொருந்துமா என்பதுபற்றி நீதிபதி திரு. வீராசாமி அவர்கள் ஒரு தீர்ப்பு வழங்கியிருக்கிறார்கள். இருந்தபோதிலும், தனியார் தமிழக அரசு அல்லது அரசின் கல்வித் துறை வகுத்திருக்கிற சட்டங்களை, ஆணைகளை அமுல்படுத்தாததால்தான் இந்தக் குழப்பங்கள் வருகின்றன. இந்த ஆணைகளை, சட்டங்களை தனியார் அமுல்படுத்தத் தவறுவதால்தான் தனியார் நிறுவனம்மீது மக்களுக்குக் கோபமும், ஆத்திரமும் ஏற்படுகிறது. சென்னையிலே ஐ.ஐ.டி. கல்லூரி விவகாரம் வந்தது. அந்த நிறுவனம் மிகத் திறமையாக உலகத்திலே பல நாடுகளிலிருந்தெல்லாம் நிதி திரட்டி மிகப் பெரிய அளவிலே வளர்ந்து வந்திருக்கும்போது, ஒரு பிரச்சினைக்குத் தீர்வு காணும்போது, அந்த நிறுவனத்தைச் சேர்ந்தவர்கள் என்ன நிலையை மேற்கொண்டார்கள்? ஒரு பிரச்சினை என்று வரும்போது மற்றவர்களுடன் சேர்ந்து ஒத்துழைக்க வேண்டும். மாறாக என்ன சொன்னார்கள் என்று சொன்னால், 'உங்களுடைய நிதி தேவையில்லை, உங்களுடைய பல்கலைக் கழகம்கூட தேவையில்லை, அதோ அமெரிக்கா இருக்கிறது' என்று அங்கே கையைக் காட்டினார்கள். இந்தப் போக்கு மேலும் வெறுப்பை வளர்த்துக்கொள்ள உதவியதே தவிர, பிரச்சினைகளைத் தீர்த்துக்கொள்வதற்கு உதவவில்லை. தனியார் நிறுவனங்களை நடத்துபவர்கள் நியாய நோக்கோடு நடந்துகொள்ள வேண்டும் என்பதும், அப்படி நடந்தால் இந்தப் பிரச்சினைகள் எழாது என்பதும் என்னுடைய கருத்து. தனியார் பள்ளிகள் ஆகட்டும், நிறுவனங்களாகட்டும் அவர்கள் இதைப் புரிந்துகொள்ள வேண்டும். அதே சமயத்தில் அவர்களை எதிர்க்கின்றபோது, நாமும் சிலவற்றைப் புரிந்துகொள்ள வேண்டும். இப்போது இருக்கும் அனைத்து தனியார் பள்ளிகளையும், கல்லூரிகளையும் தமிழக அரசு நடத்த முடியுமா? இப்போது நமது மாநில வருமானத்தில் 1/4 பங்கை நாம் கல்விக்காகச் செலவழிக்கும் நிலையிலேயே போதுமான அளவுக்குக் கட்டிடங்கள் ஆய்வுக்கூடங்கள் இல்லாமல் இருக்கும் நிலைமை இருக்கிறது. இந்த நிலைமையில் எல்லாப் பள்ளிகளையும் நாமே எடுத்து நடத்துவது சாத்தியமா? இவற்றையெல்லாம் நாம் சிந்திக்க வேண்டும். தனியார் பள்ளிகளிலே தருகின்ற கல்வி நிலைமைகளை நாம் தந்துவிட முடியும் என்ற நிலை வந்த பிறகு 'இதோ நாங்கள் கல்வி தருகிறோம், வாருங்கள்' என்று அழைத்தால், அது நியாயமாக இருக்கும். இப்போது எத்தனையோ நிறுவனங்கள் நல்ல முறையில் கல்வியை வழங்குகின்றன. அந்தக் கதவைச் சாத்துவது எப்படி



நியாயம்? அந்த வசதியை நாம் எடுத்துவிடுவது எப்படி நியாயம்? மதப் பிரசாரத்தை அவர்கள் செய்கிறார்கள். இதைத் தடுக்கக்கூடாது. அவரவர்களுடைய மத எண்ணங்களைச் சொல்வதற்கு அவர்களுக்கு உரிமை இருக்கிறது.

**திரு. பா. ரா. தாமஸ்:** கல்வி நிறுவனங்களில் இன்றையதினம் மத போதனை என்பது நடைபெற முடியாத ஒரு நிலைக்கு இந்த நாடு வந்திருக்கிறது. நம்முடைய அரசுப் பதிவேடுகளைப் பார்த்தால், இன்றையதினம் நூற்றுக்கணக்கான கிறிஸ்தவர்கள் இந்துக்களாக மதம் மாறிக்கொண்டிருக்கிறார்கள். அவர்கள் இன்றைக்கு அரசுச் சலுகை, பொருளாதாரச் சலுகை பெற முடியாத அளவிலே மாறிக்கொண்டிருக்கிறார்கள். ஆகவே, பொருளைக் காட்டியோ, போதனை மூலமாகவோ இன்றைக்கு மதமாற்றம் நடைபெற முடியாத நிலை இருக்கிறது என்பது மட்டுமல்ல, மதமாற்றம் செய்து எந்தப் பள்ளியும் தொடர்ந்து இன்றைய சூழ்நிலையில் நடைபெற முடியாது என்பதையும் நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

**டாக்டர் இரா. சனார்த்தனம்:** என்னைப் பொறுத்தவரையில், நான் சுயமரியாதைக்காரன். மதப் போதனை வேண்டாம் என்று சொல்பவன் நான். அப்படியே இருந்தாலும்கூட, அதைத் தடுக்க வேண்டும், ஒழிக்க வேண்டும் என்று நான் சொல்லவில்லை. ஆனால் அந்த நிலைமை பிற மதத்தினரும் படிக்கின்ற ஒரு பள்ளியோ, ஒரு நிறுவனத்திலோ இருக்குமானால், அந்தப் பிற மதத்தினரை எந்த வகையில் அவர்கள் கட்டாயப்படுத்தலாம் என்கிற முறையிலேதான் நான் இந்தச் சிந்தனையைச் சொல்ல விரும்புகிறேன். அந்த அடிப்படையிலே தனியார் நிறுவனங்கள் எல்லாம் கொஞ்சம் சிந்தித்துப் பார்க்க வேண்டும். ஒரு தனியார் நிறுவனம், தொழில் கல்வி, அறிவியல் கல்வி அல்லது ஆங்கிலத்தில் நல்ல அறிவைத் தருகிறது என்று சொன்னால், அது தவறு என்று நாம் சொல்ல முடியாது. ஆனால், அதற்கு மாறாக, தமிழ் நாட்டினுடைய கல்விக் கொள்கையிலோ, இந்திய அரசினுடைய ஜனநாயக அடிப்படை அமைப்புகளிலோ தரப்பட்டிருக்கின்ற உரிமைகளுக்கு மீறிய செயல்களை அவர்கள் செய்யக்கூடாது என்றும், அப்படி சில நேரங்களில் அவர்கள் செய்வதால்தான் இத்தகைய தீவிர சிந்தனைகள் வருகின்றன என்பதையும் நான் இந்தத் தருணத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். சிறுபான்மை உரிமை என்பது மற்றவர்கள் உரிமையைப் பாதிப்பது என்பதல்ல. அவர்கள் பெற்றிருக்கின்ற உரிமையைக் காப்பாற்றிக்கொள்வதும், பாதுகாத்துக்கொள்வதும் என்ற அடிப்படையிலேதான் அது அமைய வேண்டும் என்று நான் கருதுகிறேன். இப்போது இலங்கையிலே ஆரம்பப் பள்ளிகளை எடுக்க அந்த அரசு முடிவு செய்திருக்

திரு. க. மீனாட்சிசுந்தரம்: என்னைப் போன்றவர்கள் அத்தகைய காரியத்தைச் செய்தால், அதன் காரணமாக என் வீட்டின்முன் மறியல் செய்தால், நான் அதை ஆட்சேபிக்கவில்லை. ஆனால் இத்தகைய சூழ்நிலைகள் இந்தப் பக்கத்திலே இருந்துதான் ஏற்படுகின்றன என்பதுதான் பிரச்சினை.

டாக்டர் இரா. சனார்த்தனம்: மாண்புமிகு உறுப்பினர் திரு. மீனாட்சிசுந்தரம் அவர்களின் வீட்டின் முன் நான் மறியல் நடத்தச் சொல்லவில்லை. ஆனால் நியாயத்தை எடுத்துச் சொல்லத்தான் நாம் இருக்கிறோம். ஏதோ ஒரு உத்தாவில் சில சிறு தவறுகள் ஏற்பட்டுவிடுகின்றன என்பதாலேயே முழுவதுமாக இந்த முறையை எதிர்ப்பது என்பது சரியல்ல. இதற்காக வாதாடுவதும் தவறல்ல என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

தனியார் பள்ளிகளானாலும் சரி, கல்லூரிகளானாலும் சரி, அவற்றை நடத்துகிறவர்களிடம் நாம் காட்டுகிற எதிர்ப்புணர்வை தயவுசெய்து நினைத்துப் பார்க்க வேண்டும். அண்மையில் கோவை பெரியநாயக்கன் பாளையத்தில் உள்ள இராமகிருஷ்ணா வித்யாலயாவில் ஒரு பிரச்சினை தோன்றியபோது, அங்கேயுள்ள மாணவர்கள் கிளப்பிவிடப்பட்டு அந்த வித்யாலயாவைச் சேர்ந்த பல பொருள்கள் சேதப்படுத்தப்பட்டன. திரு. அவிநாசிலிங்கம் செட்டியார் அவர்கள் இந்த மாநிலத்தில் கல்வியமைச்சராக இருந்தவர். அவர்தான் அந்த நிறுவனத்தை நடத்தி வருகிறார். அவர் மனம் சோர்ந்திருக்கிற நிலையில் நான் அவரைச் சந்தித்தேன். இதை எண்ணிப்பார்க்கிறபோது. கல்விக்கூடங்கள் சிலரின் கருவிகளாகப் போய்விட்டதே என்ற வருத்தம் ஏற்படுகிறது.

ஏனவே ஒட்டுமொத்தமாகப் பார்க்கும்போது, தமிழ் நாட்டில் நாம் கல்வி வளர்ச்சியில் அக்கறை காட்ட வேண்டும், தமிழ் நாட்டின் கல்வி வளத்தை அதிகரிக்க வேண்டும், இங்கே பயில்கிற மாணவர்களின் கல்வித் தரத்தை உயர்த்த வேண்டும், மத்திய அரசின் தேர்வுகளில் நமது மாநில மாணவர்கள் மிகப் பெரிய அளவில் வெற்றி பெறவேண்டும். இத்தகைய முறையில் நமது சிந்தனையில்லாமல், வெறும் தனியார் பள்ளிகளை அரசுத் துறையில் மேற்கொள்வது என்பதில் மட்டும் இருந்து பயனில்லை. இத்தகைய நிலைமைகளை நாம் அடைவதற்கு தனியார் பள்ளிகள் தடையாக இருக்குமானால், சட்டப்படி அரசு விதிமுறைகளை வகுத்து அவற்றிற்கு உட்பட்டவைகளாக அந்தத் தனியார் பள்ளிகளை ஆக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அது மட்டுமல்ல, தனியார் பள்ளிகளைப் பொறுத்தவரையிலும், நாம் அவற்றை முழுக்க முழுக்க எடுக்கக்கூடிய நிலையில் இல்லை. இந்தக் கோரிக்கையில் முழுமையான நியாயம் பொதிந்திருப்பதாக நான் ஏற்றுக்



கொள்ள முடியாது என்றாலும், தனியார் கல்வி நிறுவனங்கள் என்பவற்றை சிலரின் தொழிலாக, இன்டஸ்டிரியாக, பணம் சம்பாதிக்கும் இடமாக ஆக்குவது எந்த வகையிலும் சரியல்ல என்று சொல்லிக்கொண்டு அப்படிப்பட்ட கல்வி நிறுவனங்களைக் கட்டுப்படுத்த அரசு சட்டம் கொண்டு வருவதுதான் முறையாக இருக்கும் என்று சொல்லி என் உரையை முடிக்கிறேன்.

திரு. ஜேப்பியார்: மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்களே, தனியார் பள்ளிகளையும் கல்லூரிகளையும் அரசே ஏற்று நடத்த வேண்டும் என்று இங்கே முன்மொழியப்பட்ட தீர்மானத்தின்மீது நடைபெறும் விவாதத்தில் கலந்துகொண்டு நானும் சில கருத்துக்களைச் சொல்வதற்கு அனுமதித்த தங்களுக்கு நான் என் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

தனியார் பள்ளிகளையும், கல்லூரிகளையும் அரசே ஏற்று நடத்த வேண்டும் என்று சொல்வதில் தவறும் இல்லை, அவ்வாறு அரசு ஏற்று நடத்துவதற்குத் தயக்கமும் இல்லை. ஆனால் அதை உடனடியாக ஏற்று நடத்த முடியுமா என்பதுதான் பிரச்சினை. அவைகளையெல்லாம் நாளைக்கோ அல்லது நாளை மறுநாளோ எடுத்துக்கொள்ள முடியுமா என்பதையெல்லாம் எண்ணிப்பார்த்து, அத்தகைய கருத்துக்களையும் உள்ளடக்கிப் பேசினால்தான், இங்கே பேசுகிறவர்களுக்கும், அத்தகைய எண்ணங்களுக்கும் ஒரு மரியாதை ஏற்படும். அதை விடுத்து, ஒட்டுமொத்தமாக "எடு எடு" என்று சொல்லுவதும், எடுப்பதென்றால் அதில் இவ்வளவு விஷயங்கள் இருக்கின்றன என்று சொல்லிக்கொண்டிருப்பதும் எந்த வகையிலே சரி என்றுதான் எனக்குப் புரியவில்லை. தனியார் பள்ளிகளையெல்லாம் அரசே மேற்கொள்ள வேண்டும் என்பதிலே, அவைகள் தவறு செய்வதை அனுமதிக்கக் கூடாது என்பதிலே அரசுக்குக் கருத்து வேறுபாடில்லை என்பதை நான் மாண்புமிகு உறுப்பினர்களுக்குத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். ஆனால் ஒரு பக்கத்திலே இருந்துகொண்டு, ஒரு பக்கத்து நியாயத்தை மட்டும் இங்கே பேசி அதுதான் உண்மையான நிலை என்று சொல்லுவதும், இதற்கெல்லாம் எதிர்ப்பக்கத்திலே இருக்கிற அரசுதான் பொறுப்பேற்க வேண்டும் என்று சொல்வதும் முறைதானா என்பதை நான் இந்த மன்றத்திலே சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. மீனாட்சிசுந்தரம் அவர்கள் இங்கே ஆசிரியப் பெருமக்களுக்கெல்லாம் நல்லது செய்யும் ஒரு கருத்தை மிகவும் மனம் திறந்து எடுத்துக் கூறினார்கள். அதை நான் பாராட்டியாக வேண்டும். அப்போது இடையில் நான் குறுக்கிட்டு ஒரு கருத்தைச் சொன்னேன். ஆசிரியர்கள் அரசியலைப் பேசுவதால்தான் ஒரு சில இடங்களில் அதன் காரணமாக வம்பு

**மாண்புமிகு திரு. கா. இராசா முகமது:** மாண்புமிகு உறுப்பினர் இங்கே கொண்டு வந்திருக்கக்கூடிய தீர்மானத்தை ஆதரிக்கிறாரா இல்லை எதிர்க்கிறாரா என்று அஞ்சத்தக்க அளவுக்கு நிலைமை சென்றுகொண்டிருக்கிறது. அரசு இந்தப் பள்ளிகளின் நிர்வாகத்தை மேற்கொண்டால், இன்னும் கடுமையான ஆபத்து வரும் என்று தான் அவருடைய பேச்சு இங்கே குறிப்பிடுகிறது. அப்படி அவர் பேசியதைப் பார்க்கும்போது, தனியாரிடமே அவை இருந்தால் நல்லது என்கிற முறையில் பேசுவதாகத்தான் தோன்றுகிறது. அரசியல் பிரச்சினை ஆக்காமல் தீர்மானத்தை உறுப்பினர் ஆதரிக்கிறாரா இல்லையா என்பதையும், அதற்கு வலுவான காரணங்கள் இருந்தால் அந்தக் காரணங்களையும் இங்கே சொல்லுமாறு கேட்டுக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் திரு. மீனாட்சிசுந்தரம் அவர்கள் எந்த அரசியல் கட்சியைச் சார்ந்தவர்கள், எந்தக் கொள்கையை உடையவர்கள் என்பதெல்லாம் இந்த நாட்டுக்கே தெரியும். ஆகவே, தீர்மானத்தையொட்டி அவருக்குள்ள வலுவான காரணங்களை மட்டும் இங்கே சொன்னால் நல்லது. அரசியல்வாதிகள் யார் யார் என்றெல்லாம் வாதத்திற்குப் போனால் அதற்கு முடிவே இராது.

**திரு. க. மீனாட்சிசுந்தரம்:** என்னுடைய போக்கிலேதான் நான் போய்க் கொண்டிருந்தேன். நானாக எங்கேயும் போகவில்லை.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்:** உறுப்பினர் அவர்கள் அருள் கூர்ந்து தான் எடுத்துக்கொண்டிருக்கிற தலைப்புக்கு பங்கம் வராமல் முடிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்

**திரு. க. மீனாட்சிசுந்தரம்:** அருள்கூர்ந்து உறுப்பினர் அவர்கள் என்னுடைய பேச்சின் இடையில் தலையிட்டு, திசை திருப்பி விடாமல் துணைத் தலைவரவர்கள் உதவ வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அந்த வகையில் நான் பேசவில்லை. அரசியல் குறுக்கீடு எதுவும் இல்லாமல் கல்வி நிலையங்கள் இருக்க வேண்டும் என்பதுதான் என்னுடைய கருத்து. அரசுடைமையாக்குவதைப் பொறுத்தவரை, அது முதல்படி. அடுத்தபடியாக, கல்வி வாரியம் என்கிற ஓர் அமைப்பை, அரசியல் தலையீடற்ற ஓர் அமைப்பை, கல்வி நிபுணர்களைக் கொண்ட குழுவை அமைத்து, கல்விப் பொறுப்பை அதனிடம் விட்டு விட்டு, நிதி ஆதாரங்களைப் பொறுத்தவரை மட்டும் அரசு வழங்க வேண்டுமென்ற கொள்கையையுடையவன் நான்.

**மாண்புமிகு திரு. கா. இராசா முகமது:** அப்படிச் செய்வதுகூட ஒரு தனியார் முறைபோல்தான் இருக்கும்.



**திரு. க. மீனாட்சிசுந்தரம்:** உடனே அப்படிச் சொல்ல முடியாது. பின்னால் அதில் ஏதாவது பிரச்சினை வருகிறதா என்பதைத் தெரிந்துகொள்ளலாம். அமைச்சர் அவர்கள் சொல்லும்போது, நான் எந்த அரசியல் கட்சியைச் சார்ந்தவன் என்று இந்த நாட்டுக்கே தெரியும் என்று சொன்னார்கள். என்னைப்பற்றி மட்டுமல்ல, ஒவ்வொருவரைப்பற்றியும் இந்த நாடு அறியும். நான் இங்கே சுயேச்சையாகத்தான் அமர்ந்திருக்கிறேன்.

**மாண்புமிகு திரு. கா. இராசா முகமது:** ஒவ்வொருவரைப்பற்றியும் நாடு அறிந்திருப்பதால்தான் நாங்கள் திரும்பவும் இங்கே வந்து உட்கார்ந்திருக்கிறோம். யார் யாரை அறிந்துகொள்வது என்பதைப்பற்றி விவாதிப்பதற்கு இது இடமல்ல. இதைப்பற்றி வெளியே பேசத் தயாராக இருக்கிறேன். நான் இங்கே சொல்வதெல்லாம் தனி நபர் தீர்மானம் கொண்டுவரப்பட்டிருக்கிறது. அனைத்து கல்வி நிறுவனங்களையும் அரசுடைமையாக்க வேண்டுமென்பதற்கான வலுவான காரணங்களை இங்கே சொல்லிக்கொண்டிருக்கிறார்கள் உறுப்பினர் அவர்கள் அதற்கான வலுவான காரணங்களைச் சொன்னால், அரசு அதைப் பின்னர் பரிசீலிப்பதற்கு வாய்ப்பாக இருக்கும். உறுப்பினர் சொல்லிக் கொண்டிருப்பதைப் பார்த்தால், இப்பொழுது இருக்கிற முறையே நல்லது என்கிற மாதிரி இருக்கிறது. அதைத்தான் நான் குறிப்பிட்டேன்.

**திரு. ஜே. எம். மியாகான்:** உறுப்பினர் தீர்மானத்தை ஆதரித்துப் பேசுகிறாரா, இல்லை எதிர்த்துப் பேசுகிறாரா? எதிர்த்துப் பேசுவதுபோல் இருக்கிறது.

**திரு. க. மீனாட்சிசுந்தரம்:** உறுப்பினர் தொடக்கத்திலிருந்தே அவையில் இல்லையென்று நான் கருதுகிறேன். அதனால்தான் அவருக்குக் குழப்பம். நான் ஆதரித்துத்தான் பேசிக்கொண்டிருக்கிறேன். இடையில் உறுப்பினர்கள் தலையிட்டு அதன் காரணமாக நான் அவர்களுக்கு பதில் அளிக்கின்ற நிலைமையில் இருந்ததால் நான் சொன்ன கருத்துக்கள் உறுப்பினருக்குக் குழப்பத்தை ஏற்படுத்தியிருக்கலாம். நான் தீர்மானத்தை ஆதரித்துத்தான் பேசிக் கொண்டு வருகிறேன். நான் அதை எதிர்க்கிறவனே அல்ல. நானே தனியார் பள்ளிக்கூடத்தில் பணியாற்றி பாதிக்கப்பட்டவன். தனியார் மட்டுமல்ல, நகராட்சி, மாநகராட்சி இவைகளின் நிர்வாகத்திலுள்ள எல்லாப் பள்ளிகளையும் அரசுடைமையாக்க வேண்டுமென்ற கொள்கையுடையவன். உள்ளாட்சித் துறை நிலையங்கள் மட்டுமல்ல, அனைத்து கல்வி நிலையங்களும் முழுமையாக எடுத்துக்கொள்ளப்பட்டு அரசுடைமையாக்கப்பட வேண்டும். பொதுவாக ஆசிரியர்கள் பாதிக்கப்படுவதற்கு பெரும் காரணம் அதிகாரிகள்தான். அவர்கள்

இருக்கிறது. காரணம் இதனுடைய வளர்ந்த கட்டத்திலேதான் அவர்கள் அந்த முடிவுக்கு வந்திருக்கிறார்கள். அதனாலே அப்படிச் செய்யக்கூடாது என்று கருதுகிற பெரியவர்கள் இருப்பார்களானால், அவர்கள் ஒரு நியாயமான சிந்தனைக்கு வர வேண்டும் என்பதுதான் என்னுடைய கருத்து.

தனியார் பள்ளிகளைப் பொறுத்தவரையில், இன்றைக்கு அவைகளுக்கு ஒரு கவர்ச்சி இருக்கிறது. காரணம், அங்கே ஆரம்பத்திலிருந்தே குழந்தைகளுக்கு ஆங்கிலம் கற்றுக்கொடுக்கிறார்கள் என்றும், அங்கே அனுப்பினால் குழந்தைகள் ஆங்கில ஆற்றல் பெறுகிறார்கள் என்ற ஆர்வமும் ஆசையும் பெரியவர்களிடம் இருக்கிறது. அதனாலே, அரசுக் கல்லூரிகளிலும் முறையான ஆங்கிலம் அல்லது இப்போது இருப்பதைக் காட்டிலும் நல்ல ஆங்கில அறிவை வளர்ப்பதற்கு நாம் வழிவகை காண வேண்டும். அது ஒரு கட்டம். அதுபோல நர்சரி பள்ளிகள் போன்றவற்றில் தமிழைச் சொல்லிக்கொடுக்க வேண்டும் என்றும் நாம் கட்டாயப் படுத்தவேண்டும். அது இரண்டாவது கட்டம். இந்த இரண்டு நிலையையும் இந்த நாட்டிலே நாம் உருவாக்க வேண்டும். ஏதோ 'ட்விங்கிள், ட்விங்கிள் லிட்டில் ஸ்டார்' டாடி, மம்மி' என்று சொல்லிக்கொண்டு வீட்டுக்குக் குழந்தைகள் வந்துவிட்டால் எல்லாம் வந்துவிட்டது என்று நினைக்கிற பெரியவர்களும், அதிலே எல்லாம் ஆங்கிலம் அடங்கிவிட்டது என்று நினைக்கிற பெரியவர்களும் இன்றையதினம் இருக்கிறார்கள். ஆனால் அதே ஆங்கிலப் பள்ளிகளிலே 'நிலவே நிலவே வா வா' என்று சொல்லிக்கொடுக்கும் நிலைமையும் வர வேண்டும். நிலவைப்பற்றிய தமிழ் பாடங்களைக் குழந்தைகளுக்குச் சொல்லிக்கொடுப்பதன் மூலம் குழந்தைகளுக்குத் தமிழைக் கற்றுக்கொடுப்பதற்கு அந்தத் தனியார் பள்ளிகள் மற்றும் நிறுவனங்கள் முன்வர வேண்டும்.

சில தனியார் பள்ளிகளிலே சென்றால், வணங்க வேண்டும் என்று சொன்னார்கள். வணங்குவதிலே குற்றம் ஒன்றும் இல்லை. ஆனால் வணங்குவது சரியாக இருக்கிறதா என்பதுதான் விவகாரம். அதற்காகத்தான் நாம் முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, நிர்வாகத்தில் சட்ட ரீதியாக சில சிக்கல்கள் இருக்கின்றன. தனியார் நிறுவனங்கள் வழக்குகளின் மூலம், சில நிலைகளைத் தடைப்படுத்தி வைத்திருக்கிறார்கள். அவற்றில் இந்த அரசு உச்சநீதிமன்றத்திலே முறையீடு செய்து விரைவிலே தீர்ப்பைப் பெற வேண்டும். அதன் மூலமாகத்தான் கல்வி நிறுவனங்களைப் பொறுத்தவரையில், நாம் என்ன கொள்கையை வகுத்திருக்கிறோம் என்பதைத் தெளிவுபடுத்தி செயல்பட வழி ஏற்படும்.



அடுத்து, அரசியல்வாதிகள் தலையிடுகிறார்கள் என்ற குற்றச்சாட்டைச் சொல்கிறபோது, எனக்கு வேடிக்கையான ஒரு நிகழ்ச்சி நினைவுக்கு வருகிறது. கலைவாணர் என். எஸ். கிருஷ்ணன் அவர்கள் ஒருமுறை ஒரு கலை நிகழ்ச்சி நடத்தினார்கள். அந்தக் கலைநிகழ்ச்சியிலே அவருக்கு ஊரிலே இருக்கும் ஒரு பெரியவரின் வேடம். அவரை ஒரு ஆசிரியர் அணுகிச் சொல்கிறார் "என்னை வெளியூர் மாற்றிவிட்டார்கள்" என்று. அதற்கு கலைவாணர் பதில் சொல்கிறார், "மகிழ்ச்சி, நாங்கள் எல்லாம் சொந்தமாகச் செலவு செய்துதான் பல ஊர்களையும் பார்க்க வேண்டும் என்ற நிலை இருக்கிறது, ஆனால் உங்களுக்கோ, அந்த நிலை இல்லாமல், அரசாங்கமே உங்களை பல ஊர்களுக்கும் அனுப்பி வைக்கிறது" என்று. அதற்கு அந்த ஆசிரியர் "எனக்கு ஊர்களைப் பார்ப்பதிலே ஆசை, ஆனால் என்னை இந்த ஊர்க்காரர்கள் விட மாட்டார்கள்" என்று சொன்னார். "ஆமாம், நீங்கள் எல்லோருடனும் நல்ல முறையில் நடந்திருக்கிறீர்கள். நல்லமுறையிலே பாடங்களைச் சொல்லித் தந்திருக்கிறீர்கள். அதனாலேதான் விடமாட்டோம் என்கிறார்கள். இதே நிலைமைகள் புது ஊருக்குப் போனாலும் வரும்" என்று சொல்கிறார் கலைவாணர் அவர்கள்.

(பிற்பகல் 12-10)

அதற்கு அந்த ஆசிரியர் "அதுவல்ல காரணம். ஊரிலுள்ள எல்லாரிடத்திலும் நான் கடன் வாங்கிவிட்டேன். அவர்களின் கடனைத் திருப்பிக் கொடுக்காமல் இந்த ஊரை விட்டுப் போவதற்கு ஊர்க்காரர்கள் விடமாட்டேன் என்று சொல்லுகிறார்கள். இதுதான் உபத்திரவத்திற்கான காரணம்" என்று சொல்கிறார். அப்படிப்பட்ட வகையில் ஒவ்வொரு ஆசிரியருக்கும் ஒவ்வொரு வகையான இடையூறுகள் வருகிறபோது, அவர்கள் அரசியல் வாதிகளையோ, வேறு தெரிந்தவர்களையோ அணுகுவது தவறல்ல என்பதுதான் என்னுடைய கருத்து. அத்தகையோரின் குறைகளை எடுத்துச் சொல்லத்தான், மாண்புமிகு உறுப்பினர்களாகிய நாம் இங்கே இருக்கிறோம். காரணம் இவைகளெல்லாம் கம்ப்யூட்டர் மூலமாக இயந்திரங்களால் செய்யப்படுபவையல்ல. சிலருக்குச் சில குறைபாடுகள் ஏற்படலாம். அவைகள் நியாயமான குறைபாடுகளாக இருக்கலாம். அத்தகைய குறைகளைக் களைவதற்காகத்தான் நாம் இருக்கிறோம். அத்தகையோரின் குறைகளை எடுத்துச் சொல்வதில் எந்தத் தவறும் இருக்க முடியாது. அதிலெல்லாம் அதிகாரிகள் நியாயத்தைக் காண வேண்டும் என்று சொல்லும்போது, அவ்வாறு தலையிடுகிறவர்களின் வீட்டுக்கு முன்னால் மறியல் செய்வது என்று சொல்ல ஆரம்பித்தால், இவ்வாறு சொல்கிறவர்களின் வீட்டுக்கு முன்னால் போய் யார் மறியல் செய்வது என்ற கேள்வி எழுத்தான் செய்யும்.

ஏற்பட்டு, பிறகு நீ யார் நான் யார் என்ற விவகாரம் முற்றி, அதற்குப் பிறகு தான் தலையீடு வருகிறது என்று நான் சுட்டிக்காட்டியபோது, "எனக்குத் தெரியாதா, யார் யார் எந்தக் கட்சியில் இருக்கிறார்கள் என்று" என்று திரு. மீனாட்சி சுந்தரம் அவர்கள் குறிப்பிட்டார்கள். இதற்காக நான் உள்ளபடியே அவரைப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். ஆசிரியப் பெருமக்களை யெல்லாம் உள்ளடக்கிய ஒட்டுமொத்தமான ஒரு சங்கத்தை வழிநடத்திச் செல்கிற மாண்புமிகு உறுப்பினர் திரு. மீனாட்சிசுந்தரம் அவர்கள் தயவுசெய்து இந்த மாமன்றத்திற்கு ஒரு உதவி செய்தாக வேண்டும். அவர் தலைமை யேற்றிருக்கிற சங்கத்தில் அங்கம் வகிக்கும் ஆசிரியர்களில் யார் யார் எந்தக் கட்சியைச் சார்ந்தவர் என்றும், அதைப்போலவே வேறு ஆசிரியப் பெருமக்கள் வழி நடத்திச் செல்கிற சங்கங்களில் பங்கேற்று இருப்பவர்களில் யார் யார் எந்தக் கட்சியைச் சார்ந்தவர்கள் என்றும், அதைப்போலவே ஆளும் கட்சியான எங்கள் கட்சியின் சங்கத்தில் இருப்பவர்களில் யார் யார் எந்தக் கட்சியைச் சார்ந்தவர்கள் என்றும், அதோடு வேறு பல அரசியல் கட்சிகளில் இருப்பவர்கள் யார் யார் என்றும் பட்டியல் போட்டு இந்த மன்றத்திற்குத் தந்தால் நன்றாக இருக்கும். இவ்வாறு அரசியல் கட்சிகளில் அங்கம் வகித்து அந்த ஆசிரியப் பெருமக்கள் தங்களின் பணியைச் செய்யாமல் அரசியலையே பெருவாரியாக மனதில் கொண்டு பணியாற்றுகிறவர்களை அடையாளம் கண்டு அவர்கள்மீது நடவடிக்கை எடுக்க மாண்புமிகு உறுப்பினர் திரு. மீனாட்சிசுந்தரம் அவர்கள் தெரிவித்த கருத்து உறுதுணையாக இருக்கும் என்பதால் அதை நான் நன்றி யுணர்வோடு ஏற்றுக்கொள்கிறேன்.

திரு. க. மீனாட்சிசுந்தரம்: ஆளும் கட்சியின் உறுப்பினர்களே புரவலராக இருந்து அமைச்சர்களே தலையிட்டு அதற்கு ஆதரவு தந்து, பல நோட்டீஸ்கள் மூலம் விளம்பரப்படுத்தப்பட்டு புதியதோர் ஆசிரியர் சங்கம் ஆரம்பமாகியிருக்கிறதே அந்தச் சங்கத்தின் உறுப்பினர்களின் பட்டியலை மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜேப்பியார் அவர்கள் அவைக்குத் தந்தால், நான் மற்ற சங்கங்களில் உள்ளவர்களின் பட்டியலைத் தருவதற்குத் தயாராக இருக்கிறேன்.

திரு. ஜேப்பியார்: மாண்புமிகு உறுப்பினர் திரு. மீனாட்சிசுந்தரம் அவர்கள் எங்கோ பின்னாலே செல்கிறார் என்று கருதுகிறேன். மாண்புமிகு உறுப்பினர் திரு. மீனாட்சிசுந்தரம் அவர்களின் தலையீட்டின் காரணமாக ஒன்றாக இருந்த ஆசிரியர் சங்கம் இரண்டாக உடைக்கப்பட்ட விவரமும் வரலாறும் எனக்குத் தெரியாது என்று எண்ண வேண்டாம்.



திரு. க. மீனாட்சிசுந்தரம்: மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் இந்த வகையிலே பேசுவதானால் நானும் இந்த முறையிலேயே விவாதிக்க எனக்கு அனுமதி அளிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. ஜேப்பியார்: விவாதம் என்று வந்துவிட்ட பிறகு இங்கே சொல்லப்படும் கருத்துக்களுக்கு பதில் சொல்ல நானும் கடமைப்பட்டிருக்கிறேன் என்று நான் நினைக்கிறேன். அரசே ஒரு ஆசிரியர் சங்கத்தை உருவாக்கியிருக்கிறது என்று இங்கே சொல்லும்போது, அதற்கு நான் பதில் சொல்லக் கடமைப் பட்டிருக்கிறேன். ஏனென்றால் தொடக்கப் பள்ளி ஆசிரியர்கள் சங்கமாக இருந்தது ஆசிரியர் மன்றமாக மாறிய வரலாறு நமக்குத் தெரியாததல்ல. அது எப்படி வளர்ந்து, விரிந்து கிளையாகப் போய்விட்டது என்பதும் நமக்குத் தெரியாததல்ல. அது இன்றையதினம் எந்த அரசியல் கட்சியைச் சுற்றிக் கொண்டு, தொங்கிக் கொண்டு இருக்கிறது என்பதும் நமக்குப் புரியாததல்ல.

திரு. க. மீனாட்சிசுந்தரம்: மாண்புமிகு உறுப்பினர் இவ்வளவு விவரங்களையும் தெரிந்துகொண்டிருந்தும் என்னைப்பற்றி ஏன் விமர்சித்துக் கொண்டிருக்கிறார் என்றுதான் எனக்குப் புரியவில்லை.

திரு. ஜேப்பியார்: மாண்புமிகு உறுப்பினர் திரு. மீனாட்சிசுந்தரம் "யார் யார் எந்தக் கட்சியில் இருக்கிறார்கள் என்று எனக்குத் தெரியும்" என்று சொன்னதன் காரணமாகத்தான் நானே இந்த விஷயத்தைப்பற்றிப் பேசினேன். இல்லையென்றால் நானும் ஒரு உறுப்பினர், அவரும் ஒரு உறுப்பினர், எனவே நமக்குள் ஏன் வேறுபாடு என்று பேசாமல் இருந்திருப்பேன்.

திரு. க. மீனாட்சிசுந்தரம்: ஒரு இடத்தில் நடவடிக்கை எடுக்கப்பட்டதைக் குறித்து இங்கே பேசப்பட்டது. அப்படிப் பேசும்போது, அத்தகைய நடவடிக்கைகளுக்கு ஆளாகிறவர்கள் பிற இயக்கத்திலும் இருக்கிறார்கள் என்று தான் நான் சொன்னேன். அந்த வகையில் பட்டியலைத் தருவதற்கும் தயாராக இருக்கிறேன் என்று சொல்லிக்கொள்கிறேன்.

திரு. ஜேப்பியார்: நான் கேட்டது அரசியல் கட்சிகளில் இடம் பெற்றிருப்பவர்கள் யார் யார் என்ற விவரமே தவிர குற்றம் புரிபவர்களைப்பற்றிய பட்டியல் அல்ல.

திரு. க. மீனாட்சிசுந்தரம்: சட்டமன்ற உறுப்பினர் வீட்டின்முன் மறியல் செய்வதுபற்றி பேச்சு எழுந்தபோது இதைச் சொன்னேன். இதைச் சொன்னதற்குக் காரணம் சட்டமன்ற உறுப்பினர் தலையீடு செய்ததுதான். அப்படிப்

பட்ட நடவடிக்கையை வேறு எந்தக் கட்சிக்காரர்கள் மீதாவது எடுக்கத் தயாரா என்றும் அப்படி நடவடிக்கை எடுப்பதானால் ஆதாரம் தரத் தயார் என்றும்தான் சொன்னேன்.

திரு. ஜேப்பியார்: பேரறிஞர் அண்ணா அவர்கள் முதன் முறையாக 15 சட்ட மன்ற உறுப்பினர்களோடு இங்கே நுழைந்தபோதே, இப்படிப்பட்டப் பிரச்சினை எழுந்தது. அப்போது ஆளும் கட்சியாக காங்கிரஸ் இருந்தது. அப்போது ஆசிரியர்களையெல்லாம் ஆளும் கட்சியினர் பழிவாங்குகிறார்கள் என்று சொல்லப்பட்டது. அதற்குப் பிறகு நாலும் நண்பர் திரு. மீனாட்சி சுந்தரமும் உள்ளடங்கியிருந்த கட்சி ஆட்சிப் பொறுப்பில் இருந்தபோதும் இதே குற்றச்சாட்டு சொல்லப்பட்டது. இப்போதும் இதே பாட்டுப் பாடப்படுகிறது. ஆக ஒரே ராகம், ஒரே பாட்டு என்ற வகையில் இருக்கிறது. இதை நாம் மறந்துவிடுவதற்கில்லை. பாட்டும் ராகமும் தெரிந்துதான் நாங்கள் எல்லாம் இங்கே அமர்ந்திருக்கிறோம். ஒரே பிரச்சினை தொடர்ந்து வரும்போது அது ஒரே ராகமாகிறது.

(ஒரு குரல்: அது ஒருதலை ராகம் — சிரிப்பு)

எனவே மாண்புமிகு உறுப்பினர் திரு. மீனாட்சிசுந்தரத்திற்கு நான் உள்ளபடியே நன்றி தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். நான் வெளியே பொதுமேடைகளில் பேசுவதற்கும் ஒரு பெரிய பிரச்சினையை உருவாக்கிக் கொடுத்திருக்கிறார். ஆசிரியர்களே, உங்களைப்பற்றி திரு. மீனாட்சிசுந்தரம் அவர்கள் எவ்வளவு அழகாகப் பேசினார் தெரியுமா என்று சொல்ல முடியும். நீங்கள் எல்லாம் எந்தக் கட்சியைச் சார்ந்தவர்கள் என்பதையெல்லாம் அவர்களுக்கு நான் இனி எடுத்துச் சொல்ல முடியும்.

திரு. க. மீனாட்சிசுந்தரம்: மாண்புமிகு உறுப்பினர் இப்படி திசை திருப்ப முனைவதும் கற்பனையில் பேசிக் கொண்டிருப்பதும் சரியல்ல என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

(பிற்பகல் 12-20)

திரு. ஜேப்பியார்: கற்பனை இல்லாதவன் மனிதன் இல்லை. கற்பனை இருக்க வேண்டும். ஆசிரியப் பெருமக்கள் எங்கள் கட்சியிலும் இருக்கிறார்கள். அதை நான் ஒத்துக்கொள்ளுகிறேன். ஆகவே மாண்புமிகு உறுப்பினர் திரு. மீனாட்சிசுந்தரம் அவர்கள் தெளிவாக நாட்டுக்குச் சொல்ல வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.



இந்தத் தீர்மானத்தை முன்மொழிந்து பேசிய திரு. தாயன், பள்ளிகளையெல்லாம் அரசு எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கூறி அதில் உள்ள சிரமங்களையெல்லாம் கோடிட்டுக் காட்டினார்கள். அதெல்லாம் தவறு என்று நான் வாதிடத் தயாராக இல்லை. ஆனால் ஜனநாயக நாட்டில் நாம் ஒன்றைத் தெளிவாக உணர்ந்தாக வேண்டும். அரசாங்கம் தன்னுடைய வருவாயை வைத்துக்கொண்டுதான் பணிகளை மேற்கொள்ள முடியும். படிக்க வேண்டுமென்ற எண்ணம், ஆர்வம் மேலோங்கி இன்று வளர்ந்து வருகிறது. சமுதாயத்தில் மதத்தைப் பரப்ப பள்ளியைக் கருவியாக்கிய காலம் உண்டு. இன்றைக்கு அப்படி இருக்கிறதா இல்லையா என்பது வேறு விஷயம். வெள்ளையர் ஆண்டபோது மக்களிடையே மதம் ஊன்றுவ பள்ளிகளைத் தொடங்கினார்கள். அந்தப் பள்ளிகள் நாட்டிலே நல்ல முறையிலே நடைபெற்றன என்பதைத் தெரிந்துகொண்ட நாமும் ஏன் பள்ளிகளை நடத்தக் கூடாது என்ற எண்ணம் தோன்றி, பிறகு அது வளர்ந்து கடைசியில் வியாபாரமாக ஆகிவிட்டது என்று நமக்குத் தெரிகிறது.

சில பேர்கள், வாத்தியாராக இருப்பவர்கள் வேறு சில இடங்களில் பெற்ற அனுபவத்தை வைத்துக்கொண்டு தனியார் பள்ளிகளை நடத்தாமல் இல்லை என்பதை இந்த மாமன்றத்திலே சொல்லுவதைக் கடமையாகக் கருதுகிறேன்.

திரு. சே. முத்துசாமி: அவைத் தலைவர் அவர்களே, "வாத்தியார்" என்று சொல்லுவது வேறு ஒரு பொருளைக் குறிப்பதால் ஆசிரியர் என்ற பெயரையே பயன்படுத்துமாறு பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்

திரு. ஜேப்பியார்: இனி ஆசிரியர் என்றே சொல்லுகிறேன். அரசாங்கத்திலே பணியாற்றுகிற ஆசிரியப் பெருமக்கள், அரசாங்கத்திலே மானியம் கிடைக்கிறது, மானியம் பெற்றவர்கள் நன்றாக வாழ்கிறார்கள், ஆசிரியராக இருப்பவர்கள் அதிகாரிகளாகப் பதவி உயர்வு பெறுகிறார்கள் என்பதையெல்லாம் தெரிந்துகொண்டவர்கள்கூட சில பள்ளிகளை தனியார் பெயரில் நடத்துகிறார்கள் என்பதை இந்த மாமன்றத்திலே ஆசிரியர்-பிரதிநிதிகள் எடுத்துச் சொல்லத் தவறிவிட்டார்கள். இன்று பத்திரிகையில்கூட ஒரு செய்தியைப் பார்த்தேன். மாண்புமிகு உறுப்பினர் திரு. லெட்சுமிகாந்தன் ஒரு அமைப்பை உருவாக்கியிருப்பதாகப் படித்தேன். தனியார் பள்ளி ஆசிரியர்கள் எல்லாம் அரசு ஊழியர்களுக்கு ஈடாக தங்கள் ஊதியம் உயர்ந்தாக வேண்டுமென்று கேட்கிறார்கள். உதாரணத்திற்கு ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். தனியார் பள்ளியில் சில பள்ளிகளுக்கு மானியம் கிடைப்பதில்லை. மொத்தத்தில் ஒரு பத்து சதவீதத்தினருக்குத்தான் மானியம் கிடைக்கும் என்று நினைக்

கிறேன். மீதி இருக்கின்ற பள்ளிகள் எல்லாம் மானியத்தைப் பெறாத பள்ளிகள்தான். தமிழகத்தில் மொத்தம் 13 ஆயிரம் தனியார் பள்ளிகள் இருக்கின்றன என்று நினைக்கிறேன். அதில் பத்தாயிரத்திற்குள்ளாக நர்சரி பள்ளிகள் மட்டும் இருப்பதாகக் கருதுகிறேன். எனக்குத் தந்திருக்கிற தகவலின் அடிப்படையில் இந்தக் கணக்கைத் தருகிறேன். ஒருவேளை தப்பாகக்கூட இருக்கலாம். ஆனால் இது எனக்குத் தெரிந்த கணக்கு. இந்தப் பள்ளிகளில் மூன்று, நான்கு ஆசிரியர்களை ஒரு பள்ளிக்கு என்று நியமித்தால் கூட, முப்பதாயிரம் பேர்கள் பணியாற்றக்கூடும். அரசுப் பள்ளிகளில் பணியாற்றும் ஆசிரியர்கள் மாதத்திற்கு முன்னூறு, நானூறு ரூபாய் சம்பளம் வாங்குகிறார்கள் என்றால், தனியார் பள்ளி ஆசிரியர்கள் 100 ரூபாயிலிருந்து 150 ரூபாய் வரைதான் பெறுகிறார்கள். அரசாங்கத்தின் மானியத்தைப் பெறாமல், சுய-வேலை வாய்ப்பு என்ற முறையில் அவர்களே வேலையைத் தேடிக்கொள்ளுகிறார்கள். இப்படி முப்பதாயிரம் பேர்கள் வேலையைத் தேடிக்கொள்கிறார்கள். பெரிய மூலதனம் போட முடியாமல் இருக்கும் படித்தவர்கள் சிலர், இப்படிப்பட்ட ஒரு பள்ளியை நடத்தி அதில் 50 பிள்ளைகளைச் சேர்த்துக் கொண்டு ஒரு நான்கு ஆசிரியர்களுக்கு வேலை கொடுத்து மாதம் ஒன்றுக்கு ஐந்து ரூபாய், பத்து ரூபாய் என்ற விகிதத்தில் மாணவர்களிடமிருந்து பெற்றுக்கொண்டு நடத்திக்கொண்டு வருகிறார்கள். இங்கு பணிபுரியக்கூடிய பயிற்சி பெற்ற ஆசிரியர்கள் இந்த நாட்டிலே வேலை செய்ய உரிமை இருக்கிறது, அவர்களால் தங்களுக்குப் பஞ்சப்படி வேண்டுமென்று போராட, வாதாட வழியிருக்கிறது.

திரு. சோ. ஆறுமுகம்: துணைத் தலைவர் அவர்களே, இப்போது நம்முடைய அரசாங்கத்தின் கொள்கை, கல்லூரி வரை இலவசமாகக் கல்வியைக் கற்றுக்கொடுப்பது என்பதுதான். அப்படி இருக்கிறபோது, தனியார் பள்ளிகளுக்குச் சென்று மாதம் ஐந்து ரூபாய், பத்து ரூபாய் கொடுத்து படிக்க வேண்டிய அவசியம் என்ன வந்தது? அரசாங்கமே கல்லூரிவரை இலவசக் கல்வியை வழங்கும்போது, ஏன் ஆரம்பக் கல்வியையும் அரசாங்கம் இலவசமாக வழங்கக் கூடாது? ஒருவேளை மாண்புமிகு உறுப்பினருக்கும் நர்சரி பள்ளிகளுக்கும் ஏதாவது தொடர்பு இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

திரு. ஜேப்பியார்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆறுமுகம் கேட்டதில் நியாயம் இருக்கிறது. தமிழ் நாடு நர்சரி பள்ளிகளுக்கு நான் காப்பாளராக இருக்கிறேன் என்பதை இந்தச் சபையிலே தெரிவிக்க விரும்புகிறேன். அதனாலே அவர்களுக்காக வாதாட வந்தேன் என்று யாரும் நினைக்க வேண்டாம். நர்சரி பள்ளிகளை அரசு எடுத்துக்கொள்ளுவதற்காக ஒரு சட்டம் இங்கே



கொண்டுவரப்பட்டால், அப்போது ஓட்டெடுப்பு நடந்தால், அதை ஆதரித்து ஓட்டுப் போடுவதில் நான் முதலில் இருப்பேன். ஆனால் அவர்கள் ஆசிரியர்களுக்குச் சம்பளம் தர முடியாமல் தவிக்கிறார்கள். அரசாங்கம் இலவசமாகக் கல்வியைத் தருகிறதே என்று குறிப்பிட்டார்கள். அரசாங்கம் என்பது தன்னுடைய வரவு செலவைப் பார்த்து திட்டங்களைத் தீட்டுகிறது. அந்தத் திட்டத்தைத் தாண்டி இருக்கிறது மக்கள் பெருக்கம். இரண்டு மைல் தள்ளி இருக்கின்ற அரசுப் பள்ளிக்கு அனுப்புவதைக் காட்டிலும் பக்கத்திலே உள்ள தனியார் பள்ளிக்கு அனுப்புவது நல்லது என்று சில பெற்றோர்கள் கருதி, ஐந்து ரூபாய், பத்து ரூபாய் கட்டினாலும் பரவாயில்லை என்று கருதி சேர்க்கிறார்கள்.

திரு. கி. ரா. லெட்சுமிகாந்தன்: துணைத் தலைவர் அவர்களே, நான் தீர்மானத்தை முன்மொழிந்து பேசியபோது தீர்மானத்தினுடைய உட்பொருளை மிகத் தெளிவாகச் சொல்லியிருக்கிறேன். அரசின் மானியம் பெறுகின்ற கல்லூரிகள், பள்ளிகள் ஆகியவற்றை உள்ளடக்கி என்னுடைய தீர்மானத்தை முன்மொழிந்து பேசியிருக்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜேப்பியார் நர்சரி பள்ளிகளைக் குறிப்பிட்டிருக்கிறார்கள். நர்சரி பள்ளிகளைப் பொறுத்தவரையில், அவைகள் எவ்வாறு நடைபெறுகின்றன, அவற்றை எப்படி சீரமைக்கலாம் என்பதைப் பற்றி அறிய முன்பே தமிழக அரசு ஒரு குழுவை முன்னாள் பள்ளிக் கல்வி இயக்குநர் டாக்டர் லாரன்ஸ் தலைமையில் அமைத்தது. அந்தக் குழு ஆய்வுகளை நடத்தி தன்னுடைய அறிக்கையை அரசுக்குக் கொடுத்திருக்கிறது. அந்த அறிக்கையிலே மிக முக்கியமான மூன்று அம்சங்கள் குறிப்பிடப்பட்டிருக்கின்றன. அந்த அடிப்படையில் நர்சரி பள்ளிகளில் குறைந்தபட்ச கட்டுப்பாடுகளை விதிக்கலாம் என்று குழு தெரிவித்துள்ளது; இரண்டு, அனைத்து நர்சரி பள்ளிகளிலும் சுகாதார வசதிகள் ஒழுங்காக இருக்க வேண்டும். மூன்றாவது பயிற்சி பெற்ற ஆசிரியர்களை நியமிக்க வேண்டும். அவர்களுக்குக் குறைந்தபட்ச ஊதியம் நிர்ணயிக்கப்பட வேண்டும் என்ற மூன்று அம்சங்களை உள்ளடக்கி ஓர் அறிக்கையை குழு அரசுக்குக் கொடுத்திருக்கிறது. நர்சரி பள்ளிகளைப் பொறுத்தவரையில் இந்த மூன்று அம்சங்களையும் அரசு செயல்படுத்த வேண்டும் என்பது என்னுடைய சொந்தக் கருத்து. என்னுடைய தீர்மானத்திற்கும் இதற்கும் சம்பந்தம் இல்லாவிட்டாலும்கூட, அதைப்பற்றி மாண்புமிகு உறுப்பினர் பேசியிருப்பதால், இந்த மூன்று அம்சங்களையும் அரசு நடைமுறைப்படுத்துவதை அவர் ஆதரிக்கிறாரா என்று அறிய விரும்புகிறேன்.

திரு. ஜேப்பியார் : அரசு மானியம் தருகின்ற பள்ளிகளையும், கல்லூரிகளையும் அரசு மேற்கொள்ள வேண்டும் என்று மாண்புமிகு உறுப்பினர் முன்மொழிந்த தீர்மானத்தை நான் அறிவேன். அதைப் பேசுகிறபொழுது இதையும் சேர்த்துக்கொள்ளலாம் என்றுதான் பேசுகிறேன். மானியம் பெறுகின்ற தனியார் பள்ளிகள், கல்லூரிகள் ஆகியவற்றில் பணிபுரியும் ஆசிரியர்களுக்கு மட்டும மாண்புமிகு உறுப்பினர் உழைக்கிறார் என்பதால்தான் மானியம் பெறாத பள்ளிகளில் உள்ள ஆசிரியர்களுக்கும் ஏன் தரக்கூடாது என்பதற்காகத்தான் நான் அந்தப் பக்கம் போனேன். மானியம் பெறாத பள்ளிகளில் பணியாற்றுகிற ஆசிரியர்களுக்கும் சம்பளப் பாதுகாப்பு வேண்டும். கோரிக்கைகளை அவர்கள் விடாமல் இல்லை. அவர்களுடைய கோரிக்கைக்கு ஏன ஆதரவு தெரிவிக்கவில்லை ?

(பிற்பகல் 12-30)

திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, டாக்டர் லாரன்ஸ் குழு பரிந்துரைத்த அந்த மூன்று அம்சங்களை மதிப்பிற்குரிய திரு. ஜேப்பியார் அவர்கள் ஆதரிக்கின்றார்களா என்று தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

திரு. ஜேப்பியார் : இங்கே சபையிலேயே நாம் பேசிக் கொள்ளலாம். மாண்புமிகு அங்கத்தினர் அவர்களுடைய நோக்கங்கள் நல்ல நோக்கங்கள்தான். அவர்களுடைய நோக்கங்கள் நிறைய இடங்களுக்குப் போகின்றன. போகின்ற இடங்கள் கொஞ்சநஞ்சமல்ல. அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் திண்டிவனத்திலே இருக்கும் கல்லூரியைச் சேர்த்துக் கொள்ள வேண்டும், அந்தக் கல்லூரியைச் சேர்த்துக்கொள்ள வேண்டும், அந்தப் பள்ளியை அரசு ஏற்றுக் கொள்ள வேண்டும் என்றெல்லாம் சொல்லிக்கொண்டிருக்கலாம். அவருடைய எண்ணங்களை நான் ஆதரிக்கிறேன். எவ்வளவோ பெரிய திட்டங்களை எல்லாம் அங்கத்தினர் அவர்கள் வைத்துக்கொண்டிருக்கிறார்கள். ஆசிரியர்கள் பாதுகாப்புக்காக அவர் பேசுகிறார்கள். அதற்காக நிறைய இடங்களுக்குப் போகிறார்கள். அதையெல்லாம் நானும் ஆதரிக்கிறேன். அவர்களுக்குச் சம்பளம் ரூபாய் 5, ரூபாய் 10 என்று இருக்கிறது. மிகக் குறைவாக இருக்கிறது. பள்ளிக்கூடம் நடத்துகின்றவர்கள், தனியார் பள்ளிகளை நடத்துகின்றவர்கள் ரூபாய் 300 அளவுக்குத்தான் கொடுக்கிறார்கள். அவர்களுக்கு ரூபாய் 700 கிடைக்கச் செய்ய வேண்டும். அரசு எடுத்துக்கொண்டு அந்த அளவு கிடைக்கச் செய்ய வேண்டும் என்று நினைக்கிறார்கள். அவர்களுக்கு ரூபாய் 10 என்று இருப்பதை ரூபாய் 20 என்று மாற்றவேண்டும் என்று நினைக்கிறார்கள். அந்த ஆசிரியர்களுக்குச் சம்பளம்கூட கொடுக்க வேண்டும் என்று



இப்படிப் பேசுகிறார்கள். அது என்னவாகும்? ஏழையாக இருப்பவன் ரூபாய் 10 என்பதற்குப் பதில் ரூபாய் 20 என்று வரி கொடுக்கவேண்டியதாக இருக்கும். இதையும் நாம் எண்ண வேண்டும். அந்தத் திட்டத்தைத்தான் மாண்புமிகு அங்கத்தினர் அவர்கள் கொண்டுவருகிறார்கள். இந்த நாட்டிலே திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் அவர்கள் மிக நல்ல காரியமாகத்தான் இதைச் செய்து வருகிறார் என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். தனியார் பள்ளிகள், மானியம் பெறும் பள்ளிகள் இவைகளையெல்லாம் அரசு ஏற்பதில் தயக்கம் இல்லை. வருமானத்திற்கு ஏற்ற செலவுதான் செய்ய வேண்டும். அதற்கேற்றவாறுதான் நாம் திட்டங்கள் போட வேண்டும். இந்த நிலைமைகளையும் நாம் கருத்தில்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இன்றைக்கு ஒரு பள்ளி, நாளைக்கு ஒரு பள்ளி, இன்னொரு நாளைக்கு ஒரு பள்ளி என்ற முறையில் அரசு எடுக்க வேண்டும் என்பதுபோல சொல்கிறார்கள். ஒரே தடவையில், சட்டத்தில் எப்படி நடக்க முடியும் என்பதை நமது மாண்புமிகு அங்கத்தினர் அவர்கள் அறிவார்கள். அவர்களும் விவரங்கள் தெரிந்தவர்தான். அவரும் அப்படிப் பேசுகிறார்கள். இதிலே பல சிக்கல்கள் இருக்கின்றன என்பதை நான் சொல்லிக்கொண்டு, என் உரையை முடித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினர் திரு. செ. முத்துசாமி அவர்கள் பெயரை இந்த அவையில் அழைத்தபோது அவர்கள் அவையிலே இல்லாததால் விடப்பட்டது. அவர் மீண்டும் வந்து பேச வேண்டும் என்று கேட்டுக்கொண்டார்கள். அவர் பேச்சின் எஞ்சிய பகுதிகளை ஐந்து மணித் துளிகளுக்குள் மிகவும் சுருக்கமாகப் பேசி முடிக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

திரு. செ. முத்துசாமி : மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த வாய்ப்பினைத் தந்தமைக்கு நான் நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். இங்கு நான் சில வாதங்களை எழுப்பினேன். ஏன் இந்தப் பள்ளிகளை தேசியமயமாக்க வேண்டும் என்பதற்காக வாதங்களையெல்லாம் எழுப்பினார்கள். மாறி மாறி, வேறு வேறு வாதங்களையெல்லாம் எழுப்பினார்கள். அப்படி எழுப்பியபோது, அதிலே இன்னும் சில பிரச்சினைகளையெல்லாம்கூட எழுப்பினார்கள். இந்தக் கல்வி ஸ்தாபனங்களைப் பொறுத்த அளவில், இந்தப் பள்ளிகளையெல்லாம் அரசே ஏற்று நடத்த வேண்டும். தனித்து இயங்கக்கூடிய பல்கலைக் கழகத்தைப் போல ஒவ்வொரு நிறுவனமும் அமைக்கப்பட வேண்டும் என்றும், நீதித் துறையில் எப்படி அரசு தலையிடக் கூடாது என்று இருக்கின்றதோ அதுபோலவே கல்வித் துறையும் அமைக்கப்பட

வேண்டும். இந்த வாரியத்திலே அரசு தலையிடக்கூடாது என்ற ஒரு கொள்கை இருக்க வேண்டும் என்பதிலே எல்லாச் சங்கங்களுக்கும் ஓரேவிதமான அபிப்பிராயம்தான் இருக்கிறது. இங்கே எழுப்பப்பட்ட வாதங்களின்போது, மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள்கூட ஒரு கவலையைத் தெரிவித்தார்கள். இந்த அவையிலேயே சொன்னார்கள். அதை நான் பாராட்டுகிறேன். உறுப்பினர்கள் செய்யக்கூடிய வாதங்கள், இந்த அவையிலே எழுப்பக்கூடிய வாதங்கள், தனியார் பள்ளிகளை நாட்டுடைமையாக்கப்பட வேண்டுமென்ற வாதங்கள் எதிராக மக்களுக்குப் புரிந்துவிடக்கூடாது என்று கவலைப்பட்டுச் சொன்னார்கள். அந்தக் கருத்துக்கள் மக்களையும் கவர்ந்திருக்கக் கூடியதாக இருக்க வேண்டும் என்று சொன்னார்கள். நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்குச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். பொதுவாகவே அவர்கள் ஒன்றைக் கேட்டார்கள். தனியார் பள்ளிகளிலே இருக்கக்கூடிய பிரச்சினைகள் அரசு அந்தப் பள்ளிகளை ஏற்றுக்கொண்டாலும் இருக்காதா என்ற கருத்தைத் தெரிவித்தார்கள். தனியார் பள்ளிகளிலே இருக்கக்கூடியவர்கள் தனிப்பட்ட முறையில், வியாபார நோக்கத்தோடுதான் பள்ளிகளை நடத்துகிறார்கள். அவர்களின் சொந்த நலனுக்காக, சம்பாதனைக்காக நடத்துகிறார்கள். அரசு நிர்வாகத்தில் குறைபாடுகள் இருக்கலாம். மனிதன் செய்யக்கூடிய காரியங்களில் தவறுகள் இருக்கத்தான் செய்யும். அரசு அமைப்புகளிலே ஏற்படக்கூடிய தவறுகளை திருத்திவிட முடியும். உடனடியாக நடவடிக்கைகளை எடுத்து திருத்திவிடலாம். ஆனால் தனியார் நிறுவனங்களிலே நடக்கக்கூடிய அக்கிரமங்களைத் தீர்க்க முடியாது. அவர்கள் நடத்தக்கூடிய அக்கிரமங்கள் இருக்கிறதே, அவர்களுடைய சமுதாய அந்தஸ்து இருக்கிறதே, அந்தப் பெரிய மனிதர்கள் அரசியலிலே தங்களை ஈடுபடுத்திக்கொண்டிருக்கின்ற சக்தி இருக்கிறதே, அந்த நிலைமைகள் காரணமாக அவர்கள்மீது நேரடியாக சட்டத்தைப் பாய்ச்சமுடியாத அளவிற்கு அதிகாரிகளைக்கூட விலைக்கு வாங்கிவிடுகிறார்கள். அதிகார இயந்திரத்திலே இருக்கக்கூடியவர்களை விலைக்கு வாங்கக்கூடிய நிலைமைகள் இருக்கின்றன. தேர்ந்தெடுக்கப்பட்டு வந்திருக்கின்றவர்கள், இங்கே வந்து நல்ல உள்ளத்தோடு அவையிலேயே சொல்கின்றார்கள். மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள்கூட சில நேரங்களில் அறிவிக்கிறார்கள். எத்தனையோ முறைகள், ஆசிரியர்கள் போராட்டத்தின் காரணமாக அவர்களுக்கு எவ்வளவு அக்கிரமங்கள் நடந்திருக்கின்றன என்று எடுத்துச் சொல்லி துடித்திருக்கிறார்கள். மாண்புமிகு நாவலர் அவர்கள் கல்வி அமைச்சராக இருந்தபோதுகூட, பல நேரங்களில் துடித்துச் சொல்லியிருக்கிறார்கள். அந்தத் தனியார் பள்ளி நிறுவனங்களை நடத்திக்கொண்டிருக்கக்கூடிய பெரிய மனிதர்களை எதிர்த்து இந்தச் சட்டங்கள் பாய முடியவில்லை. அதுதான் இன்றைக்கு இருக்கக்கூடிய நிலை. இப்படி ஒரு



ஜனநாயக ஆட்சியிலே, ஒரு ஜனநாயக நாட்டிலே போட்டி ஜனநாயகமாக அவர்கள் நடத்திக்கொண்டிருக்கிறார்கள். தனியார் துறையிலே இருக்கக்கூடிய அவர்கள் அந்தச் சட்டங்களிலே இருக்கக்கூடிய ஓட்டைகளைப் பயன்படுத்திக்கொண்டிருக்கிறார்கள். இன்றைக்கு சமுதாயத்திலே இருக்கின்ற ஓட்டைகளைப் பயன்படுத்திக்கொண்டு, தனியார் பள்ளி ஆசிரியர்களைக் கண்ணீர் விடச் செய்கிறார்கள். கண்ணீர் விட்டு சாகடிக்கக்கூடிய நிலைமைகள் இருந்துகொண்டிருக்கின்றன. ஒரு பக்கத்திலே மாணவர்களுடைய கல்வி பாதுகாக்கப்பட வேண்டுமென்பது இருக்கிறது. இன்னொரு பக்கம் நல்ல கல்வியைப் போதிக்கக்கூடியவர்கள் நிம்மதியின்றி கண்ணீர் வடித்தே சங்கடப்பட்டுக்கொண்டு, தனிப்பட்டவர்களுக்கு அடிமைகள் போல நடத்தப்படுகிறார்கள். அதனால் ஒரு எழுச்சிபெற்ற, வீரம் பெற்ற கல்வியை மாணவர்களுக்குக் கொடுக்க முடியாத நிலைமைகள் ஏற்படுகின்றன. அந்தக் காரணங்களினால்தான் இங்கே பல விவாதங்கள் எழுப்பப்பட்டிருக்கின்றன. இதை நான் மிகவும் பணிவன்போடு இங்கே மாண்புமிகு முன்னவர் அவர்கள் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். ஆசிரியர்கள் யாரும் தனியார் நிறுவனங்கள்மீது அவர்களுடைய தம்பிக்கு, தங்கைக்கு, உறவினர்களுக்கு வேலை கொடுக்கவில்லை என்ற கோபத்திலே குறை சொல்வதில்லை. இந்த நாட்டிலே சுதந்திரத்திற்கு முன்னாலேயே வெள்ளைக்காரர்கள் பல நிறுவனங்களை தனியார்களிடம் விட்டிருக்கிறார்கள். ஜனநாயக நாடுகளிலே எல்லாம்கூட அவர்கள் தனியார் நிறுவனங்களிடம் அப்போது விட்டிருந்தார்கள். அது போலவே சோஷலிச நாடுகளில் அரசாங்க அமைப்புகளிலே படிக்கக்கூடியவர்களின் கல்வித் தரம் உலகத்திலேயே மிக அதிகமாக இருக்கிறது என்பது நிரூபிக்கப்பட்டிருக்கிறது என்பதை இந்த அவையிலே நான் பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன். அதோடு மட்டுமல்ல, தேசியமயமாக்குவதை அரசு ஒரு அடிப்படைக் கடமையாகக் கொண்டு செயல்பட வேண்டும். அது மக்களுக்காகச் செய்ய வேண்டிய ஒன்றாகும். கல்வியை தேசியமயமாக்கிய காரணத்தினால் உலகத்தில் எல்லா இடங்களிலும் கல்வி உருக்குலைந்துவிட்டது என்று சொல்ல முடியாது. மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே, உங்கள் மூலமாக நான் ஒன்றைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். தனியார் பள்ளிகளில் ஆசிரியர்கள் அடிமைகளாக நடத்தப்படுகிறார்கள். ஆசிரியர்கள் அவர்கள் காலைத் தொட்டுக் கும்பிட்டு சம்பளம் வாங்கக்கூடிய நிலைமைகள் ஜனநாயக நாட்டிலே இவ்வளவு ஆண்டுகளுக்குப் பிறகும் இருந்துகொண்டிருக்கின்றன. அவர்கள் சம்பளம் கொடுக்கும்போது ஒரு ராஜா மாதிரி உட்கார்ந்துகொண்டு, அங்கே அவர்கள் காலைத் தொட்டுக் கும்பிட்டு சம்பளத்தை எடுத்துக்கொள்ளக் கூடிய நிலைமைகள் இருக்கின்றனவே நாட்டிலே, இது அக்கிரமம் அல்லவா? ஜனநாயக நாட்டிலே இது அடுக்குமா, இப்படிப்பட்ட சண்டாளத்தனங்கள்

விரும்புகிறேன். 25 ஆண்டுக் காலம் பணியாற்றி இருக்கும் ஆசிரியர், ஒரே நாளில், எந்தக் காரணமும் இல்லாமல் பணியிலிருந்து நீக்கப்படுகிறார். இது தர்மம்தானா? தர்மம்பற்றிப் பேச மனம் வேண்டாமா? இப்படிப்பட்ட ஆசிரியர்களை வெளியேற்றலாமா? தவறு செய்யாத ஆசிரியர்களை, நேச்சுரல் ஜஸ்டிஸ் இல்லாமல், வெளியேற்றுகின்ற நிலைமைக்கு முடிவு என்ன? எப்படித்தான் அதை முடிவிற்குக் கொண்டு வருவது? எங்களுக்கு வழி தெரியவில்லை. நேஷனலைஸ் செய்யுங்கள் என்று சொல்லுகிறோம். அப்பொழுதுதான் இந்தத் தவறுகளை நீக்க முடியுமென்று சொல்லுகிறேன். மைனாரிட்டி இன்ஸ்டிட்யூஷன்கள் 'மால் அட்மினிஸ்டிரேஷன்' செய்வதைத் தடுத்து ஆசிரியர்களுக்குப் பணிப் பாதுகாப்பு கொடுக்க வேண்டும். நபிகள் நாயகம் சொல்லக்கூடிய குரான் ஆனாலும், ஏசு கிருத்துவின் பைபிளானாலும் அவற்றிலே தனி மனிதனுக்கு மரியாதை, உரிமை தந்திருக்கிறார்கள். அந்த உரிமையை சட்டத்தின் பெயரால், கையிலே எடுத்துக்கொண்டு, அதே மதத்தைச் சேர்ந்த, அதே மொழியைச் சேர்ந்த ஆசிரியர்களையே பழி வாங்குகிறார்கள். அது தர்மம்தானா என்ற பிரச்சினை எழுப்பப்பட்டிருக்கிறது. எனக்குப் பின்னாலே பேசுவதற்கு குறிப்புகளை வைத்திருக்கிற மாண்புமிகு உறுப்பினர்களுக்கு வேண்டுகோள் விடுக்கிறேன். தயவுசெய்து இதற்கு முடிவு சொல்லுங்கள் என்று கேட்டுக்கொள்கிறேன்.

தனியார் பள்ளிகள் எவ்வளவு ஆண்டு வருமானம் திட்டலாமென்று கணக்குப் போடும் அளவிற்கு இன்றைக்குச் சென்றுவிட்டன. நகரத்திலே ஒரு ஹையர் செகண்டரிப் பள்ளியை நடத்தினால், ஆண்டுக்கு 10 லட்சம் ரூபாய் வருமானம் வருமென்று கணக்கு இருக்கிறது. அப்படி 'கலெக்ட்' செய்வதை 'ரெகுலேட்' பண்ணுவதற்கு, அக்கவுண்ட் கொடுங்களென்று கேட்டார்கள். 'நீங்கள் ஆடிட்டரை வைத்துக்கொள்ளுங்கள், அவர் ஆடிட் செய்து கணக்கு கொடுக்கட்டும்' என்று சொல்லப்பட்டது. அது தேவையில்லை என்று அவர்கள் நீதி மன்றத்திற்குச் சென்று, 'ஸ்டே' வாங்கியிருக்கிறார்கள். பி.எல். 480 ஒப்பந்தம் ஆகிவிட்டதால், அதில் வரும் பணத்தைக் கொண்டு எது வேண்டுமானாலும் செய்வேன் என்று சொல்லியமாதிரி ஒப்பந்தம் செய்துகொண்டு, நாங்கள் வாங்கும் பணத்திற்குக் கணக்குக் கொடுக்க மாட்டோமென்று சொல்லுகிறார்கள். பிள்ளைகளிடம் பணத்தை வாங்குகிறார்கள். கல்விக் கூடம் வைத்து வியாபாரம்போல் நடத்துகிறார்கள். எவ்வளவு வசூலிக்க முடியுமோ அவ்வளவு வசூலிக்கிறார்கள். எவ்வளவு கொள்ளை அடிக்க முடியுமோ அவ்வளவு கொள்ளை அடிக்கிறார்கள். கணக்குக் கேட்டால், கொடுக்க முடியாதென்று சொல்லுகிறார்கள். அரசியல்வாதிகள் ஒரு மாநாட்டை நடத்தினால், எத்தனை போடு போடுகிறோம்? உலகத்



தமிழ் மாநாட்டை அரசு நடத்தியது. அதில் இந்தத் தவறு நடந்துவிட்டது, அந்தத் தவறு நடந்துவிட்டதென்று சொல்லுகிறார்கள். ஒரு பள்ளியில் 10 லட்சம் கொள்ளை அடிக்கப்படுகிறது, அதைப்பற்றிக் கவலையில்லையே. இதை அரசியல் கட்சிகள் எல்லோரும் சொல்ல வேண்டாமா என்பதைக் கேட்டு, கடைசியாக ஒரேயொரு பிரச்சினையை மட்டும் தெரிவிக்க விரும்புகிறேன்.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** மாண்புமிகு உறுப்பினரவர்களுக்கு உடல்நலமில்லாததாலும், அவர் மீதுள்ள அக்கறை காரணமாகவும் விரைவில் பேச்சை முடித்துக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. செ. முத்துசாமி :** ஆட்சியில் இருப்பவர்களின் அரசியல் தலையீடுகள் என்பது காலம் காலமாக இருந்து வருவது. அரசியல் ஏற்பட்ட காலத்திலிருந்து இருந்துவரும் பேச்சாகும் அது. ஜனநாயகத்தில் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் வந்து உட்காரும்போது, அவர்களிடம் பிரதிநிதித்துவம் வரும்போது, அவர்களுக்கு முடிவெடுக்கும் அதிகாரத்தை சட்ட ரீதியாகத் தந்துள்ள நிலையில், இதைத்தான் செய்வார்கள். ஜனநாயகத்தில் உள்ள கோளாறு அது. அப்படிப்பட்ட விஷயங்களிலே சில நேரங்களில் தனிப்பட்ட விருப்பு வெறுப்பு அடிப்படையிலே சிலருக்குப் பாதிப்பு ஏற்படுகிறது. அவற்றை வெளிக் கொணரத்தான், போராடி நியாயங்களைப் பெறத்தான் அமைப்புகள் இருக்கின்றன. தலையிடுகிறார்கள், தலையிடுகிறார்கள் என்று சொல்கிறார்கள். தலையிடாமல் நிர்வாகத்தை நடத்த முடியாது. அதிகாரிகள் உண்மையாக இருப்பதாகத் தெரியவில்லை. ஆதலால் கல்வி அமைச்சரவர்களுக்குப் பாதகமான ஒரு பிரச்சினையைக் கொண்டு வந்து தரும்போது, இதை ஏன் செய்யவில்லை என்று கேட்க நிச்சயமாக உரிமை இருக்க வேண்டும். எனக்கும் உரிமை இருக்க வேண்டும், மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவரவர்களுக்கும் உரிமை இருக்க வேண்டும். அதிகாரிகள் மேலே மேலே தங்கள் பதவிகளை உயர்த்திக்கொள்ள வேண்டுமென்று, ஆளும் கட்சிக்காரர்கள் சொல்லுவதற்கு மட்டும், பயந்தால் போதுமென்று ஆட்சியில் இருக்கிறவர்கள் நடுநிலைமை தவறி நடக்கிறார்கள். நடுநிலைமை தவறாமல் இருக்க வேண்டும். கல்வித் துறையைச் சார்ந்த எந்தப் பிரதிநிதி வந்தாலும், நியாயமான முறையில் நடக்க வேண்டும். இருந்தாலும் சில நேரங்களில் தவறு செய்கிறார்கள். அந்தத் தவறுகளின் அடிப்படையிலேதான் சில பிரச்சினைகள் எழுப்பப்படுகின்றன. எதிர்க் கட்சி, ஆளும் கட்சி என்று ஆசிரியர்களைப் பிரித்து பட்டியல் கொடுக்கச் சொன்னால், நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென்று கேட்கிறார்களா? ஆசிரியர்களுக்கு அரசியல் கூடாதென்று சொல்லுகிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜேப்பியார் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். முதலமைச்சரவர்களிடம் சொல்லி,

இருக்கலாமா என்று கேட்டுக்கொள்கிறேன். அங்கே கல்வித் துறை அதிகாரிகள் வந்தால், அவர்களை வரவேற்று, துண்டு போட்டு, மாலை போட்டு அவர்களுக்கு விருந்து கொடுத்து, அவர்களுடைய பலவீனங்களைப் பயன்படுத்திக்கொண்டு, வெளியே அனுப்பிவிடுகிறார்கள். இப்படிப்பட்ட நிறுவனங்களிலே ஆசிரியர்களுக்குப் பாதுகாப்பில்லை. இப்படிப்பட்ட நிலைமைகள் ஒரு பக்கம் இருக்கின்றன என்றாலும், அங்கு கல்வி சீரான முறையில் கிடைக்கிறதா என்றால், அரசாங்கத் துறையிலே நடக்கின்ற பள்ளிகளும் தனியார் பள்ளிகளுடன் போட்டி போடும் அளவிற்கு நல்ல ரிசல்ட்டுகள், பரீட்சை முடிவுகளைக் கொண்டு வந்திருக்கின்றன என்று மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களே இங்கே சொல்லியிருக்கிறார்கள். **இதை நான்** அவையின் உறுப்பினர்களுக்கு எடுத்துச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். எந்த நிறுவனத்திலும் அதன் நடைமுறைகளும், நிர்வாகமும் சரியாக ஆக்கப்படுமானால், அந்த நிறுவனங்கள் நல்ல முறையிலே நிர்வகிக்கப்படுமானால், கல்வி நல்ல முறையில் கிடைக்கும் என்பதை யாரும் ஆட்சேபணை செய்ய முடியாது என்பதை அவையின் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன். கல்விக்கூடங்கள் தேசியமயமாக்கப்படுவதன் மூலம் கல்வியின் தரம் குறைந்துவிடும் என்று யாராவது சொன்னால், அவர்கள் குறைந்த அறிவுள்ளவர்களாகத்தான் இருப்பார்கள் என்று நான் சொல்லாவிட்டாலும், சராசரி அறிவுக்குக் கொஞ்சம் குறைவாகத்தான் சிந்திக்கிறார்கள் என்று சொல்ல வேண்டும். அவர்களை நான் மிகக் குறைவாகச் **சொல்ல முடியாது.** மிக உயர்ந்தவர்கள்கூட **அதை ஆதரிக்கிறார்கள், அந்தத்** தத்துவங்களைச் சொல்லுகிறார்கள், வாதங்களைச் சொல்லுகின்றார்கள். நான் அவர்கள்மீது வைத்திருக்கக்கூடிய மரியாதை காரணமாக, அவர்கள் தவறாகச் சொல்லியிருந்தாலும், அப்படி வாதம் செய்தாலும் அதைப்பற்றி நான் கடுமையாக ஒன்றும் சொல்வதற்கில்லை. என்னுடைய வாதத்தை மட்டும் நான் எடுத்து வைக்கிறேன்.

கோத்தாரி கமிஷன் ஒரு அறிக்கை வைத்திருக்கிறது. அகில இந்திய ரீதியிலே சொல்லியிருக்கிறது 'Several of the managements are busines concerns' என்று சொல்லியிருக்கிறது. அதற்குப் பிறகு அதை மறுத்து யார் சொன்னாலும், அது எடுபடாது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இங்கே தனியார் பள்ளிகளைப்பற்றியும், அங்கீகரிக்கப்பட்ட மானியப் பள்ளிகளைப் பற்றியும் உள்ளாட்சிப் பள்ளிகளைப்பற்றியும் தீர்மானம் வந்திருக்கின்ற நிலையில், நர்சரிப் பள்ளிகளைப்பற்றி எடுத்துச் சொன்னார்கள். அவைகளையும் அரசுப் பள்ளிகளாக ஆக்க வேண்டும் என்று சொல்வது அந்தப் பள்ளி ஆசிரியர்களைக் காப்பாற்ற வேண்டும் என்பதற்காகத்தான் என்பதை நான் மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜேப்பியார் அவர்களுக்குச் சொல்லிக் **கொள்ள விரும்புகிறேன்.**



(பிற்பகல் 12.40)

ஆதலால் அவர்கள் அதை ஆதரிக்கட்டும். நர்சரிப் பள்ளிகளை எடுத்துக் கொள்ள வேண்டுமென்று சொல்லட்டும். கல்வி அமைச்சரவர்கள் அரசுத் துறையிலே நர்சரிப் பள்ளிகளைக் கொண்டுவர வேண்டுமென்று சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். அங்கே தமிழிலே பாடங்களைப் போதிக்க ஏற்பாடுகளைச் செய்ய வேண்டுமென்று சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். அதற்கு ஆதரவு திரட்ட வேண்டிய பொறுப்பு உறுப்பினர் அவர்களுடையதாகும். நாட்டிலே ஆங்கிலத்தில் மோகம் ஏற்பட்ட பிறகு, தமிழில் **நர்சரிப் பள்ளிகள் வந்தால்தான் நல்லதென்று மதுரைப் பல்கலைக் கழகத் துணை வேந்தர்** அவர்கள் சொன்னதைத் தாங்கிக்கொள்ள முடியாமல் கிளப்பி **விடப்பட்டுள்ள** எதிர்ப்பு உணர்வுகளை, தமிழில் பற்று உடையவர்கள் அத்தனை பேரும் வெகுண்டு நின்று நீக்க வேண்டும். துணைத் தலைவர் அவர்கள் **மூலமாகவும், தலைவரவர்கள் மூலமாகவும்** தெரிவித்துக்கொள்கிறேன். **என்னுடைய** உணர்வுக்குச் சற்றும் குறையாமல், அதைவிட உயர்ந்து **விளங்குபவர்கள்** தலைவராகவும், துணைத் தலைவராகவும் இருக்கிறார்கள். **எனவே இந்த** நாட்டிலே இப்படிப்பட்ட அடிப்படைப் பிரச்சினைகளை உருவாக்கும்போது, அவற்றைத் திசை திருப்பப் பார்க்கிறார்கள். அது கூடாதென்பதுதான் எங்களுடைய வேண்டுகோள்.

மைனாரிட்டியினர் நடத்தும் பள்ளிகளில் அல்லாவின் பெயரால் ஏசுவின் பெயரால் நீதி போதனைகள் செய்யட்டும், ஆட்சேபணையில்லை. ஆனால் மைனாரிட்டியினர் என்ற பெயரால் Free to administer என்று வைத்துக்கொண்டு Free to mal-administer என்று ஆகக் கூடாது. அங்கே நடக்கும் அக்கிரமங்கள் இருக்கின்றனவே, அவற்றுக்கு எல்லையில்லை. நீதிமன்றங்களுக்குச் சென்று, அவர்கள் அனுபவித்துக் கொண்டிருக்கிறார்கள். அதனால் பல ஆயிரக்கணக்கான ஆசிரியர்கள் வேலையிழந்து, பட்டினி இருந்துகொண்டிருக்கிறார்கள். இவர்களுக்கு வழிதான் என்ன? மைனாரிட்டியினர் பள்ளிகளைப்பற்றிச் சொல்லும்போது, அதை நடத்தும் ஜாதியினர் துடிக்கிறார்கள். அவர்களைப் பார்த்துக் கூறிக்கொள்கிறேன், "நீங்கள் கல்விக்கூடங்களை நடத்துவது அங்குள்ள ஆசிரியர்களை அடிமைப்படுத்த அல்ல. தனியார் நடத்தும் கல்விக் கூடங்களை எடுக்க வேண்டுமென்று சொல்லவில்லை. ஆனால் அந்தக் கல்விக் கூடங்களை எடுக்க வேண்டுமென்று அரசு முன் வந்தால், அதைத் தடுக்க முடியாது. என்ன போராட்டம் நீங்கள் நடத்தினாலும் உங்கள் மதத்தைச் சேர்ந்த ஆசிரியர்களை வைத்துக்கொண்டே, அந்தக் கொள்கையை வெற்றி பெறச் செய்ய எங்கள் அமைப்புகளால் முடியும்." இந்த நேரத்தில் ஒன்றை மட்டும் தெரிவிக்க

[Thiru J. M. Miakhan] [1981 பிப்ரவரி 12

and the authorities who actually run the institutions, whether they are the private bodies, local bodies or Government themselves. Education of the children is of primary importance for a country's development. Therefore, Government take upon themselves the primary duty of imparting education to the children and spend more than 20 per cent of their income on education. Their spending large amounts on education is quite right and it must be so. But, the Government must also see whether the amounts are properly utilised for the betterment of the students. They should also see whether all the four organs, namely, the students, the teachers, the Government and the people running the institutions, join together and run the institutions properly. That is more important. They should go through this aspect of the matter in the case of every type of education, namely, primary education, secondary education, collegiate education, technical education, etc., and see whether all the institutions run by the Government are run properly. They should do this first and then only they can think of nationalisation of the other educational institutions. Otherwise, no useful purpose would be served. Now, there are certain institutions run by the minorities like Muslims and Christians. The hon. Member Thiru Muthusamy just now made a vehement accusation as though some crime is being committed by the minority communities running these institutions. On the other hand, they are only doing a service to the country by running these institutions. If we take the example of the New College in Madras and verify how many Muslim students are studying there, we will find that not even 10 per cent of the students of that College are Muslims. The same is true in the case of the staff of that college also. We, Muslims, are running more than ten men's colleges and a women's college in this State and I am intimately connected with all these institutions. We are also running several high schools, primary schools, Madarsas and other institutions. Except in Madarsas, you will find in all these institutions a large number of non-Muslim students even though the funds for running these institutions come only from Muslims. We do not make any fuss about it and, on the other hand, we are very happy about it. The Government have got every right to say that these institutions should be run properly, that they should produce audited accounts, etc. I fully agree if they say so. If somebody does not agree and does not act according to stipulations, he may even be imprisoned! however highly placed he may be. The stipulations can be made by the Government, whether the institutions are run by Muslims, Christians or Hindus.



1981 பிப்ரவரி 12] [Thiru J. M. Miakhan]

Sir, I fully appreciate the sentiments expressed by the hon. Member Thiru Jeppiar regarding primary schools and kindergarten schools. As a matter of policy, the Government are trying their level best to give education to all children. But, finance is a limiting factor for them and they have some practical difficulties in implementing their policy. While people admit their children in Standard I with great enthusiasm, we always find that several children drop out at the level of Standard II and Standard III. Several eminent educationists agree that there are drop-outs at the level of Standard II and Standard III. This happens due to various factors like the economic backwardness of parents, the long distances that the children have to walk from their homes to go to school, etc. If the school is a mile away, the parents themselves may have to take the small child to school and bring it back. If both the parents are working, even as labourers, they will not be able to do this. So, even without minding their poverty, they save a few rupees and admit the child in a private school which is nearby. Therefore, I do not see anything wrong in private people running these kindergarten schools. But, the Government may impose conditions for the running of these schools. For example, they may say that English alone should not be given importance in these schools and that Tamil also must be given importance. As a Committee has suggested recently, the Government may impose certain conditions like the provision of sanitary facilities, employing

(பிற்பகல் 1-00)

trained teachers, etc., for the running of these schools. If these are done, of course, I do not think anybody will have any objection. The private parties who are running kindergarten schools are doing real service to the community and to the people. All of them cannot be branded as bad. If anybody wants to admit his children in Government schools only, we have no objection. Nobody forces him to admit his children in the schools run by private people. We should consider the reason why they go to such private schools like St. Mary's. They honestly believe that better education is given in such schools. Whether they are Christians or Muslims, all of them are not connected with the running of private schools. Only a few of them run schools and they take pride in running such institutions where the quality of education is good. They continue to run them efficiently. So far as the Government are concerned, our Education Minister will be there for two or three years. I wish him to continue for even 10 years and more. But he will not

மாநிலத்தில் ஆசிரியர்களுக்கு அரசியல் உரிமையை வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். கேரளாவிலே அந்த உரிமையைத் தந்திருக்கிறார்கள். அரசியலில் ஈடுபட உரிமையைத் தந்துவிட்டு, பட்டியல் கேளுங்கள், தருகிறேன். எந்த ஒரு சங்கமும் வேகமாகப் போராடும்போது, அந்தச் சங்கத்தை உடைத்தால் நல்லதென்று ஆளும் கட்சிக்காரர்கள் நினைக்கிறார்கள். இன்றைக்கு அன்-ஆர்கனைஸ்ட் செக்டார்பற்றி அரசு பயப்படுவதில்லை. அவர்கள் அப்படி இருக்கும்போது, வாக்குகளைப் பெற்று ஆட்சிக்கு வருகிறோம். அந்த அன்-ஆர்கனைஸ்டு செக்டார், ஆர்கனைஸ்டு ஆகும்போது, சக்தியாக வரும்போது தன்னுடைய தேவையைக் கேட்கும்போது, ஆட்சியில் இருப்பவர்களுக்குச் சங்கடம்தான் ஏற்படுகிறது. அதை உடைக்கத்தான் செய்கிறார்கள். இது மாமூலாக வருகிறது.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** ஆளுகின்ற கட்சி சங்கங்களை உடைக்கிறதென்ற கருத்தை நான் மறுக்கிறேன். நாங்கள் எந்த சங்கத்தையும் உடைக்க விரும்பவில்லை. மாறாக, நான் மாநாடுகளில் கலந்துகொள்ளும் போது, எல்லா சங்கங்களும் ஒன்றாகச் சேர வேண்டுமென்ற கருத்தை வற்புறுத்தி வருகிறேன்.

**திரு. செ. முத்துசாமி:** மாண்புமிகு கல்வி அமைச்சரவர்கள் ஆசிரியராக இருந்து வந்த காரணத்தாலே, ஆரம்பத்திலிருந்தே அந்த வேண்டுகோளை விடுத்துக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் சங்கங்களில் ஏற்பட்டிருக்கும் கூறுபாட்டின் . . . .

**மாண்புமிகு திரு. கா. இராசா முகமது:** தகவலுக்காக ஒன்றைத் தெரிந்து கொள்ள விரும்புகிறேன். மாண்புமிகு உறுப்பினர் திரு. முத்துசாமி அவர்கள் பணியாற்றிய சங்கத்தில் சில ஆண்டுகளுக்கு முன்பு பலத்த குழப்பம் ஏற்பட்டு, அது இரண்டாகப் பிரிந்தது. அது அரசியல் காரணமாகவா, உட்பூசல் காரணமாகவா என்பதை அறிய விரும்புகிறேன். சங்கம் உடைய அரசோ, அரசியல்வாதிகளோ காரணமல்ல. ஆசிரியர்களே காரணமாக இருந்து, அதை உடைத்திருக்கிறார்கள் என்பதை மாண்புமிகு உறுப்பினரவர்கள் அவைக்குத் தெரிவித்தால் நலமாக இருக்கும்.

**திரு. செ. முத்துசாமி:** சில உண்மைகளைச் சொல்ல வேண்டுமென்ற நெருக்கடியின் காரணமாகச் சொல்கிறேன். தமிழ் நாட்டிலே 1968-ல் உடையாமல் இருந்த தொடக்கப்பள்ளி ஆசிரியர்கள் கூட்டணியின் பொதுச் செயலாளராக இருந்தவன் நான். அங்கே விவாதம் வந்தது. முன்னாலே சங்கம் உடைக்கப்பட்டதா இல்லையா என்ற பிரச்சினை வந்தபோது, மாண்புமிகு உறுப்பினர் திரு. மீனாட்சிசுந்தரம் அவர்களைப் பார்த்து கல்வி அமைச்சரவர்கள் சொன்னார்கள், சங்கம் உடைபட்டதென்றும், அதற்கு சட்ட ஆலோசகராகத்தான் இருந்ததையும் சொன்னார்கள். புதிதாக நான் எந்த விவரத்தையும் சொல்ல வேண்டியதில்லை.





**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** நான் சொல்ல விரும்புவது, நான் கல்வி அமைச்சராக வந்த பிறகு, அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக்கொண்ட பிறகு, இன்றைய முதல்வர் அவர்கள் தலைமையில் இயங்குகிற ஆட்சி எந்தச் சங்கத்தையும் உடைக்க வேண்டுமென்ற எண்ணத்தில் இல்லை என்பதுதான். அதற்கு மாறாக எல்லாச் சங்கங்களும் ஒன்று சேர வேண்டுமென்ற கருத்தைப் பல இடங்களில் நான் தெரிவித்திருக்கிறேன். தொடக்கப்பள்ளி ஆசிரியர்களின் சங்கங்களுக்கு மட்டுமல்லாமல், பட்டதாரி ஆசிரியர்கள், தமிழாசிரியர்கள் சங்கங்களுக்கும் சொன்னேன். கல்லூரி ஆசிரியர்கள் ஒரே சங்கமாக இருக்கிறார்கள்.

**திரு. செ. முத்துசாமி:** மாண்புமிகு கல்வி அமைச்சரவர்கள் இப்போது செய்தார்கள் என்று சொல்லவில்லை. நேற்று என்ன செய்தார் என்பதுபற்றித் தான் சபையில் விவாதம் வந்தது. அதைத்தான் அவர்கள் சொன்னார்கள். இன்றைக்கு அவர்கள் முயற்சி வெற்றி பெற வேண்டுமென்று எண்ணுகிறேன். சங்கங்கள் ஒன்றாக வேண்டுமென்ற அடிப்படையில் அவர்கள் எண்ணுவதோடு, அதற்கான வாய்ப்புகளையும், ஏற்பாடுகளையும் செய்ய வேண்டும். அதிகாரிகளும் அந்த நோக்கத்தில் இருந்தால், நிச்சயமாக ஆசிரியர்கள் ஒன்றாகும் காலம் விரைவில் வரும், அதில் எந்தவித ஆட்சேபணையும் இல்லை.

(பிற்பகல் 12-50)

ஆனால் பொதுவாக ஆட்சியில் இருக்கக்கூடிய கட்சிகள் சில நேரங்களில் சங்கங்களினுடைய நெருக்கடிகளைப் பொறுக்க முடியாமல் இயற்கையாக நடக்கக்கூடிய நிகழ்ச்சிகளைத்தான் சொன்னேன். அவர்களை சம்பந்தப் படுத்திச் சொன்னேன் என்று மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் எண்ணி விடக்கூடாது. எல்லா அரசுகளிலேயும் நடந்திருக்கக்கூடிய பொது நியதியைத்தான் நான் சொன்னேன்.

**திரு. ஜேப்பியார்:** உறுப்பினர் திரு. முத்துசாமி அவர்கள் ரொம்ப அழகாகப் பேசுகிறார்கள். இந்த நோத்திலாவது நாங்கள் ஒற்றுமையாக வாழப் போகிறோம், அதற்கான முயற்சிகளை மேற்கொள்ளப் போகிறோம், அதற்குரிய முடிவை எடுக்கப்போகிறோம் என்பதாக இந்த சபைக்கு அறிவிப்பாரா?

be there for ever to continue the same policy. So far as private institutions are concerned, the Organisation which runs them continues to remain for ever and it has got some aims and objects. The quality and standard of education is kept at a high level and there is no fail. I think they are doing yeoman service to the community. There is the Avvai Home doing great service by giving education to the destitute children, especially grown up girls. We should help them and the Government should help them in all possible ways.

THIRU P. R. THOMAS: Hon. Deputy Chairman, Sir, while fully appreciating the opinion expressed by the hon. Member, I feel that if the minority communities come forward to surrender their minority privileges, so far as security of service of teachers is concerned, problems would not arise.

THIRU J. M. MIAKHAN: The minority communities have been given certain privileges. I feel that such privileges have been rightly given allowing them to run educational institutions. If it is felt that their attitude is against the interests of the majority or the interests of the country, the Government have the liberty to check them. The Government can call them for a conference and discuss with them and say that such and such aspects are against the interests of the country and that they should not press for those privileges. We are prepared to forego those privileges. Without doing that, the Government or any other person should not point an accusing finger at all the minority institutions. The representatives of teachers here who make a hell of a noise about the rights or privileges of teachers do not at all seem to be concerned with the interests of their wards—students. In certain institutions, especially institutions run by the Government or the local bodies, teachers are not doing their work properly. For example, in a School in Chromepet, some of the teachers do not take classes but merely leave the classes after taking attendance for the students. When I mentioned this to the Headmaster, he feels helpless and he says that a particular teacher belongs to a particular party or is related to a particular person, that he has got some other work to attend to and that the Headmaster could not compel him to take classes. I know for a fact that in a School, Geography class has not been taken for more than six months. Of course, we cannot

[திரு. செ. முத்துசாமி எழுந்தார்....]



say that all the teachers are like that. I am not yielding. The hon. Member had his say and now I am having my say. The students also are to blame. In one institution, I myself saw the students in the first bench standing up, the students in the second bench turning and seeing somewhere else, and the students in the third bench playing cards. When I asked the teacher about this, he said, "If I questioned them, they will beat me up. Because, I am afraid, I just close my eyes to all these, do my job and go away." He himself admitted that while only about 40 pupils were in the class, the Attendance Register would show 80 pupils present as against a strength of 90 pupils. I asked him about this also and he said, "Considering my own security and the security of my children, I do not report anything to the higher authorities". The students also are responsible for such a state of affairs. I do not place the blame squarely on the teachers. The authorities, the management, the teachers and the students themselves are all to blame for such a state of affairs. I would request this agust body to consider ways and means of improving the education of the children and thus improving the standard of society. What happens to these children after they study for 14 or 15 years in such institutions? Do they become cultured people? Sometimes, they become worse in behaviour, than even people who had no education at all. Such students, when they study in colleges, learn only some gimmicks like economics, geography, etc. This drawback exists more in arts colleges than in professional colleges. In professional colleges, the students have the desire to study. But, the situation is otherwise in arts colleges and in schools. One responsible person once told me that just because one teacher had scolded a student, the student's mother, resident of a nearby slum, came that very evening, slapped the teacher on the cheek several times and went away. The teacher was not able to do anything. Such is the state of affairs and such is the respect which the teachers are held in. The teachers are represented in this House and they have been given the privileges. I fully appreciate it and I do not have any grudge about that. The teachers have to shape the future citizens of the country. The representatives of teachers in this House have got a say not only on education but also on other affairs of the country. They are teachers not only for the students but they are teachers also for all of us here. They have come here not only as our colleagues but also as teachers. Therefore, we have got to respect them. But, they should also know the difficulties of others. They should not simply say that all educational institutions

[Thiru J. M. MIAKHAN] [1981 பிப்ரவரி 12

should be nationalised. Do the Government have funds for doing that? Therefore, let the teachers and the Government first co-operate and see that at least half the number of institutions run by the Government are put in order. After that, they may come to the private institutions. Meanwhile, the Government may tell these private institutions that they should maintain proper accounts, that they should recruit teachers only from a pool, etc. I have no objection to that. If these institutions are not up to the mark and act against the interests of students and the community, let them be closed. But, on the other hand, if they contribute to the welfare of the community, let them be there. Many of these private institutions have rendered yeoman service to the community for decades together. Let us not pass a general stricture and say that all of them are corrupt. There may be instances where certain institutions may try to commercialise education and make money or swindle money by falsifying accounts, etc. There are such institutions and I do not deny it. But, the Government may take action against them. They may devise some method by which they can take action against them. But, because a few institutions are like that, we cannot say that all the institutions should be nationalised. I am against such a suggestion.

THIRU P. R. THOMAS : May I know from the hon. Member the meaning for the word 'several'?

THIRU J. M. MIAKHAN : I am not able to catch what the hon. Member says.

திரு. செ. முத்துசாமி : இந்திய பாராளுமன்றத்தால் நியமிக்கப்பட்ட டாக்டர் கோத்தாரி அவர்கள் தலைமையிலான கல்விக் குழு, இந்தியாவில் இருக்கக்கூடிய கல்வி நிறுவனங்கள் எப்படி இருக்கின்றன என்று ஆய்வு நடத்தியது. அந்த ஆய்விலே இங்கிலாந்து, ஜப்பான், ரஷ்யா, அமெரிக்கா போன்ற நாடுகளின் கல்வி நிபுணர்கள் எல்லாம் வந்து கலந்துகொண்டு, அவர்கள் கொடுத்த அறிக்கையில் "Several of the managements are business concerns" என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். அந்த "several" என்ற வார்த்தைக்கு தமிழில் அர்த்தம் என்னவென்று சொல்வார்களா?



1981 பிப்ரவரி 12]

(பிற்பகல் 1-10)

THIRU J. M. MIAKHAN : The hon. Member has mentioned about Kothari Commission Report. If he asked the said Commission, they will perhaps be able to give clarification and I am not concerned with that. What I say is that there are institutions in this country which may not be run properly. But there are hundreds and thousands of other institutions that are being run properly. When such is the case, why should anybody want to victimise them? Please put your house in order and then you can ask the other people who are your neighbours to keep their houses in order. With these few remarks, I close my speech.

* THIRU C. R. LAKSHMIKANDHAN : Sir, on a point of clarification. Hon. member Thiru Miakhan has referred to a few instances in his area with regard to irresponsibility of teachers. I would like to know whether the hon. member has brought it to the notice of the concerned authorities.

THIRU J. M. MIAKHAN: Yes, I have done. I brought the matter to the notice of the Headmaster of the institution. I myself called that particular teacher and asked him about his absence from school. He gave some excuses and he could not properly explain. I even reprimanded him. He belongs to a certain party and I do not want to elaborate on it. Later on, that particular teacher informed me that there were others who were doing the same thing. Out of about 50 or 60 teachers, some 10 or 15 teachers are like that and the Headmaster is helpless.

திரு. செ. முத்துசாமி : மாண்புமிகு உறுப்பினர் திரு. மியாகான் அவர்கள் பேசும்போது ஒரு கருத்தைச் சொன்னார்கள். தன் வீட்டினை சரிப்படுத்திக் கொண்டு அதற்குப் பிறகுதான் அடுத்த வீட்டைப்பற்றிச் சொல்ல வேண்டும் என்று சொன்னார்கள். அதாவது அரசாங்கப் பள்ளிகளில் இருக்கிற குறைபாடுகளை நீக்கிய பிறகுதான் தனியார் துறைப் பள்ளிகளில் நடைபெறும் அக்கிரமங்களைக் களைய வேண்டும் என்று சொல்லுகிறாரா? அல்லது அக்கிரமங்கள் எங்கே நடந்தாலும், அதைக் களைய வேண்டும் என்று சொல்லுகிறாரா? அரசாங்கம் என்பது ஒரு பெரிய அமைப்பு. அதிலே [illegible] தலைமைச் [illegible], எல்லா அரசாங்கத்தின் பொறுப்பில் உள்ள பள்ளிகளில் உள்ள குறைகளை நீக்கிய பிறகுதான் தனியார் பள்ளிகளில் உள்ள குறைகளை நீக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று சொல்வது எப்படி நியாயமாகும்? அக்கிரமங்கள் தொடர வேண்டும் என்று அவர் விரும்புகிறாரா?

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : உறுப்பினர் அவர்கள் பேசிக் கொண்டேயிருந்தால், நிறைய துணைக் கேள்விகளைக் கேட்டுக்கொண்டிருப்பார்கள். சீக்கிரம் முடிவுக்கு வர வேண்டும்.

திரு. செ. முத்துசாமி : மாண்புமிகு துணைத் தலைவரவர்களே, அவர்கள் எங்களைப் பார்த்து மிக அக்கறையோடு கேள்வி கேட்டிருக்கிறார்கள். நாங்கள் ஒற்றுமையைச் சொல்லித்தரக்கூடியவர்கள்தான். ஆனால் சங்கங்கள் என்பது இந்த நாட்டிலே வளரும்போது அதற்கு விபத்துக்கள் என்று சொல்லும்போது, இந்தக் கேள்வியைக் கேட்பவர்கள் தரப்பிலேயே, அண்ணாவினுடைய கொள்கையை வைத்துக்கொண்டு, இன்றைக்கு உடைபட்ட கட்சியில் அதே கொள்கையைச் சொல்லிக்கொண்டிருக்கக்கூடியவர்கள், காமராஜர் பெயரைச் சொல்லிக்கொண்டிருக்கக்கூடிய கட்சிகள், ஒரே கொள்கைகளைச் சொல்லிக்கொண்டிருப்பவர்கள். காந்தியின் பெயரால் கொள்கைகளைச் சொல்லிக்கொண்டிருப்பவர்கள் இப்படி காரல் மார்க்ஸ் தத்துவத்தின் பெயரால் சொல்லிக்கொண்டிருப்பவர்கள். இவர்களுடைய நிலைமைகள் மாறிமாறி இந்த நாட்டினுடைய சமுதாயத்தில் கட்சியில் இயற்கையாக உடைபாடுகள் தவிர்க்க முடியாததாக இருக்கின்ற காரணத்தால், இந்தச் சங்கத்தையும் அது பாதித்திருக்கிறது. அந்த ஒற்றுமை விரைவாக வர வேண்டும் என்பதில் எங்களுக்கு உணர்ச்சி உண்டு. அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தையும் திராவிட முன்னேற்றக் கழகத்தையும் இணைப்போம் என்று பல தலைவர்கள் அடிக்கடி நாட்டிலே அறிக்கை விட்டு விட்டு அவர்களும் சொல்லிக்கொண்டிருப்பது போல் அவர்களுடைய முயற்சிகளும் வெற்றி பெற வேண்டும், அதற்கு உறுப்பினர் அவர்களும் ஒத்துழைக்க வேண்டுமென்று (பலத்த சிரிப்பு) நான் உறுப்பினர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

திரு. ஜேப்பியார் : இது சங்கம் தான். சங்கம் ஒற்றுமையாக இருக்க வேண்டும். அப்படி இருந்தால்தான் உரிமைகள் நிறைவேற வாய்ப்பு உண்டு. அரசியல் கட்சிகளை விட்டு விடலாம். சங்கங்கள் ஒன்று சேர்வார்களா ?

திரு. செ. முத்துசாமி : ஒரு நல்ல கருத்தை இங்கே சொன்னார்கள். சங்கங்கள் ஒரே கொள்கையைக் கொண்டிருக்கின்றன. இருந்தும் உடைந்து விடுகின்றன. கட்சிகளும் ஒரே தலைவர் பெயரால் ஒரே கொள்கையைக் கொண்டிருக்கின்றன. அவைகளும் உடைந்து விடுகின்றன. இதை நான் தெளிவுபடுத்துகிறேன். வெவ்வேறு பொருளாதாரக் கொள்கையை வைத்துக் கொண்டு அவர்கள் எதிர்க் கட்சிகளாக இருந்தால், எங்களுக்கு ஆட்சேபனையில்லை. எங்களுக்கும் அப்படித்தான். எல்லாப் பள்ளிகளையும் தேசியமயமாக்கிவிட்டால், இப்போது உடைந்துபோன மூன்று சங்கங்களுக்கும்



வித்தியாசம் இல்லை. அதைத்தான் சொல்கிறோம். ஆகவே அந்த நிலைமைகளும் சமுதாயத்தில் நிச்சயமாக காலங்கள் மாறும்போது வரும். அதிலே சில உடைந்த சங்கங்களை ஒவ்வொரு அரசியல் கட்சியும் தங்களுடைய சக்திக்கேற்ப பயன்படுத்துவார்களானால், ஒற்றுமை என்பது அரிதான ஒன்றாகி விடும். ஒற்றுமையைச் சொல்வதுதான் எளிதாக இருக்கும். இந்த நேரத்தில் அரசியல் கட்சிகள் எங்களுடைய சங்கங்கள் ஒன்று சேர்வதற்கு குறுக்கே நிற்காமல் அந்தந்தத் தலைமைகளை ஒன்று சேர்ப்பதற்கு உறுப்பினர் அவர்களும் ஒத்துழைக்க வேண்டுமென்று இந்த சபையில் விவாதம் வந்துவிட்ட காரணத்தால் நான் கேட்டுக்கொள்கிறேன். ஆசிரியர்களே பள்ளிகளை நடத்துகிறார்கள் என்கிற வாதம் அவர்களுக்கு சாதகம் ஆகிவிடாது. ஆசிரியர்கள் பள்ளி மானேஜர்களாக ஆகிவிட்டால், அவர்கள் வியாபாரிகளாக ஆகி விடுகிறார்கள். பள்ளி செகரட்டரி ஆகிவிட்டால், மானேஜருக்கு அடிமையாக ஆகிவிடுவார். அவர் பின்னால் போகாவிட்டால் அவர் அங்கே இருக்க முடியாது. இதெல்லாம் மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களுக்கு நிறைய தெரியும். திரு. ஜேப்பியார் அவர்கள் அடிக்கடி அதிகமாக கல்வி அமைச்சர் அவர்களோடு கலந்து விவாதித்து நர்சரிப் பள்ளிகளுடைய காப்பாளராக இருக்கட்டும். ஆனால் நர்சரிப் பள்ளிகள் தனியார் கொள்ளை ஸ்தாபனங்களாக இருப்பதற்கு அவர்கள் காப்பாளராக இருக்கக்கூடாது. அங்கே கொள்ளையடிக்கிறார்கள். முதலே இல்லாத கொள்ளை. எம்.ஏ. படித்தவர்கள்கூட 100 ரூபாய் சம்பளம்தான் பெறுகிறார்கள். அவர்களையும் அங்கே கொள்ளையடிக்கிறார்கள். அங்கே இருக்கக்கூடிய கொள்ளை சாதாரணமான கொள்ளை இல்லை. ஆதலால் தயவுசெய்து அங்கே கொள்ளையடிக்காவிட்டால் தான் பாதுகாப்பாளராக இருப்பேனே தவிர, இல்லாவிட்டால் இருக்க மாட்டேன் என்று அறிக்கை விட்டால், ஆசிரியர் சமுதாயம் பூராவும் திரு. ஜேப்பியார் அவர்களை வாழ்க மாவீரன் ஜேப்பியார் வாழ்க என்று வாழ்த்தும் என்பதையும் தயவுசெய்து அந்தப் பதவியை வகிக்க வேண்டுமா இல்லை வேண்டாமா என்பது குறித்து ஒரு முடிவுக்கு விரைவில் வரட்டும் என்பதையும் சொல்லி வாய்ப்பளித்த தலைவரவர்களுக்கு நன்றியைத் தெரிவித்து முடிக்கிறேன்.

THIRU J. M. MIAKHAN : Mr. Deputy Chairman, Sir, since this Resolution concerns minorities. I would like to say a few words.

As far as education is concerned. there are four organs of society which are concerned with the running of educational institutions. They are the teachers, the students, the Government,

திரு. ஜே. எம். மியாகான் : நான் அப்படிச் சொல்லவில்லை. அரசாங்கம் தன்னுடைய பொறுப்பில் இருக்கிற பள்ளிகள் சரியாக நடக்கின்றனவா என்றும் பார்க்க வேண்டும். அதே நேரத்தில் தனியார் நிறுவனங்கள் சரியாக நடக்கின்றனவா என்றும் பார்க்க வேண்டும். இதில் நான்கு பேர் சம்பந்தப்பட்டிருக்கிறார்கள். அதாவது ஆசிரியர்கள், மாணவர்கள், அரசாங்கம், தனியார் கல்வி நிறுவனங்கள். இந்த நால்வரும் ஒவ்வொரு வீட்டுக்காரர்கள். இவர்கள் ஒவ்வொருவரும் தங்கள் வீட்டை சரியாக வைத்துக்கொள்ள வேண்டும் என்று தான் சொன்னேன்.

திரு. ஜேப்பியார் : மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. மியாகான் அவர்கள் இவ்வளவு அழகாகத் தமிழில் பேசுவதால் இனி ஆங்கிலத்தில் பேசாமல் தமிழிலேயே பேசினால் நன்றாக இருக்கும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. ம. சங்கரலிங்கம் : மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்களே, தனியார் தீர்மானங்களை விவாதிக்கிற நாளை, கட்சி சார்பில்லாத, காழ்ப்புணர்ச்சிக்கு அப்பாற்பட்ட, சமுதாயத்தைக் காக்கும் நல்ல கருத்துக்களை இந்த அவையில் எடுத்துச் சொல்லி விவாதிப்பதற்காகத்தான் வைத்திருக்கிறோம் என்பதை நான் முதலில் நினைவுபடுத்த விரும்புகிறேன். இன்றைய தினம் அவையின் முன் விவாதிக்கப்படும் தீர்மானம் இந்த நாட்டின் எதிர்காலத்தைப்பற்றிச் சிந்திக்க வாய்ப்புத் தருகிற தீர்மானமாகும். அதாவது தமிழகத்தில் கல்விக்கான நாற்றங்காலை எவ்வாறு சீரமைப்பது என்பதுதான் பிரச்சினை. இங்கே உள்ள பள்ளிகளெல்லாம் இந்தச் சமுதாயத்தின் எதிர்கால நாற்றங்கால்கள் என்பதை நாம் அறிவோம். இந்த நாற்றங்கால்களில் பயின்று வருகிறவர்கள் பண்பு பெற்று, அறிவு பெற்று, ஆற்றல் பெற்று இந்த நாட்டை எதிர்காலத்தில் நல்ல முறையில் வழி நடத்திச் செல்ல வேண்டிய நல்ல பிரஜைகள் என்ற நிலையில் அவர்கள் பயிலுகின்ற பள்ளிகள் எவ்வாறு இருக்க வேண்டும் என்ற கருத்துக்களை வெளியிடுகிறோம். ஆசிரியர்களானாலும் சரி, அரசியல்வாதிகளானாலும் சரி, அவர்களெல்லாம் இந்த நாட்டின் பிரஜைகள் என்ற நிலையில் நாட்டைச் சீரமைக்க வேண்டும் என்ற உணர்வில் அவர்கள் அனைவரும் தங்களின் கருத்துக்களை இங்கே எடுத்துரைத்திருக்கிறார்கள். அந்தக் கோணத்திலிருந்து பார்க்கும்போது, அவை முன்னுள்ள தீர்மானம் மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் அவர்களால் முன்மொழியப்பட்டுள்ளது. ஆசிரியர்களின் நலனைக் காக்க, இந்தப் பள்ளிகள் சீராக நடைபெற, அரசே இந்தப் பள்ளிகள் அனைத்தையும் ஏற்று நடத்த வேண்டும் என்ற தீர்மானத்தை அவர் முன்மொழிந்திருக்கிறார். அவர் முன்



மொழிந்ததை ஒட்டியும் வெட்டியும் பல்வேறு கருத்துக்கள் இந்த அவையிலே எடுத்து வைக்கப்பட்டிருக்கின்றன. ஆனால் இங்கே பேசிய எந்த ஒரு மாண்புமிகு உறுப்பினரும் திரு. லெட்சுமிகாந்தன அவர்கள் எந்தக் காரணத்திற்காக இந்தத் தீர்மானத்தைக் கொண்டு வந்தாரோ அந்தக் காரணம் சரியானதல்ல என்று பேசவில்லை. இந்த நாட்டில் உள்ள பள்ளிகளெல்லாம் ஒழுங்காக நடைபெறுகின்றன என்றோ, நாம் எதிர்பார்த்த அளவில் அவைகள் முறையாக நடைபெற்று வருகின்றன என்றோ நம்மால் சொல்லிக்கொள்ள முடியவில்லை. எனவே அவற்றைச் சீரமைக்க வேண்டுமென்றால், அனைத்து பள்ளிகளையும் கல்வி நிறுவனங்களையும் அரசே தன் பொறுப்பில் ஏற்று நடத்த வேண்டும் என்பதுதான் இந்தத் தீர்மானத்தின் நோக்கமாகும். அந்தத் தீர்மானத்தின் முதற் பகுதியில், ஆசிரியர்களின் நலன் காக்க இந்தத் தீர்மானம் கொண்டுவரப்படுவதுபோல் இருக்கிறது. ஆசிரியர்களின் நலன் காக்கப்பட்டால், அவர்கள் முழு நேரமும் கல்விப் பணியில் ஈடுபட்டு, அதன் மூலமாக நாட்டின் கல்வித் திறன் உயர்ந்து மாணவர்கள் நலம் உயர்ந்து வருங்காலத்தின் நிலையும் உயரும் என்ற நோக்கத்தில் சொல்லப்பட்டதே தவிர, ஆசிரியர்களையெல்லாம் ஒரு சார்புடையவர்களாக மாற்றி அவர்களைப் பற்றியே சிந்திக்க வேண்டும் என்ற அடிப்படையில் அல்ல என்பதை நான் தெரிவிக்க விரும்புகிறேன்.

ஆசிரியர்கள் சமுதாயத்தில் மதிக்கப்படத் தக்கவர்கள். இதில் கருத்து வேறுபாட்டிற்கு இடம் இருக்க முடியாது. நம்முடைய குழந்தைகளைக் காக்கிற பெரியவர்கள் ஆசிரியர்கள் என்று மதிக்கப்படுகிற நிலைக்கு ஆசிரியர்கள் தங்களை உயர்த்திக்கொள்ள வேண்டும். அதற்குத் தகுந்தாற்போல் நடந்து காட்ட வேண்டும் என்பதைத்தான் இந்த நாடு அவர்களிடம் எதிர்பார்க்கிறது.

நாமெல்லாம் வாழ்வதும், பொருள் தேடுவதும், நல்ல வீட்டையும், நாட்டையும் அமைத்து நல்லாட்சியையும் அமைப்பதெல்லாம் நாம் பெற்ற பெருஞ்செல்வங்களான நம் குழந்தைகள் தொடர்ந்து நமக்குப் பிறகு நன்கு வாழ வேண்டும் என்ற எண்ணத்தில்தான். நம்முடைய பெருஞ்செல்வங்களான குழந்தைகள் பண்பு பெறாமல், அறிவு பெறாமல், ஆற்றல் பெறாமல் இருந்தால், நாம் வாழ்ந்ததில் பயனே இல்லை என்ற கருத்தில்தான் இன்றைய பள்ளிகள் முதலில் சீரமைக்கப்பட வேண்டும் என்ற கருத்தை இங்கே தெரிவித்து விவாதித்துக்கொண்டிருக்கிறோம்.

[திரு. ம. சங்கரலிங்கம்] [1981 பிப்ரவரி 12

வேண்டும், அதிலே மாணவர்கள் பயில வேண்டுமென்று நினைத்தார்கள். பள்ளிகளை ஆலயமாகக் கருதினார்கள். ஆசிரியர்களை நடமாடும் தெய்வமாகக் கருதினார்கள். பள்ளியை ஆரம்பித்தவர்கள் செல்வந்தர்களாக இருந்தாலும், அவர்கள் படிக்காதவர்கள். அப்போது படிக்காதவர்களிடம் உயர்ந்த பண்பு இருந்தது. ஆகவே பள்ளிகளைச் சிறப்பாக நடத்தினார்கள். இப்போது அவர்களுடைய பிள்ளைகள் பயின்று வெளிநாடுகளுக்குச் சென்று மேல் கல்வியைப் பெற்று வந்து அதே நிறுவனங்களை சீர்குலைத்து நடத்திக்கொண்டிருக்கிறார்கள். அங்கு எங்கு என்று எண்ணாதபடி எங்கும். பதினெட்டாவது நூற்றாண்டில் தஞ்சையில் ஓர் அரசருக்கு அமைச்சராக இருந்த தாயுமானவர் பாடினார். நம்மையெல்லாம் பார்த்து, அரசியல் இயக்கங்களையெல்லாம் பார்த்துப் பாடினார். "கல்லாத பேர்களே நல்லவர்கள்; நல்லவர்கள்" என்று பதினெட்டாவது நூற்றாண்டிலே பாடியிருக்கிறார். அத்தோடு நிறுத்தவில்லை. "கற்றறிந்த நனி மூடர்" என்றும் பாடியிருக்கிறார். கற்றவர்கள் பேரில் அவ்வளவு கடுமையான நோக்கு இருநூறு ஆண்டுகளுக்கு முன்பே இருந்திருக்கிறது. இதை ஒப்பிட்டுப் பார்க்கும்போது, பணத்தை மாத்திரம் கட்டிய செல்வந்தர்களாக இருந்தவர்கள், கல்விச்சாலைகளைத் தோற்றுவித்து நடத்தி வந்திருக்கிறார்கள் என்று நாம் எடுத்துக்கொள்ளலாம். ஆனால் அவர்களுடைய உறவினர்கள், வாரிசுகள் படித்து பட்டம் பெற்று இன்றைக்கு அவற்றை நடத்தும்போது அந்த நல்ல நிலைமை இன்றைக்கு இல்லை. ஆகவே நம்முடைய கல்வி முறையில் அந்த அளவிற்குக் குறைபாடுகள் அமைந்துவிட்டன என்பதை உணர்கிறோம். நம்முடைய தந்தையர் கல்வி கற்காமல் இருந்து தரத்தோடு நடத்திய நிலை, தனயன், பேரன் பேரனுக்குப் பேரன் ஆகியவர்கள் வெளிநாட்டிக்குப் போய் டாக்டரேட் பட்டம் பெற்று வந்து நடத்தும்போது இல்லை. முன்னோர் நடத்தியதைப்போல இன்று கல்விக்கூடங்களை நடத்த முடியவில்லை என்று எண்ணுகிறபோது, கல்வித் துறையில் மிகப் பெரிய சீர்திருத்தங்களைச் செய்ய வேண்டிய நிலையில் நாம் இருக்கிறோம்.

மாணவர்கள் ஆரம்பப் பள்ளியைக் கடந்து, உயர்நிலைப் பள்ளிக்கு வந்து மேல் நிலைப் பள்ளிக்கு வருகிறபோது, அட்மிஷனுக்காக ரூபாய் கொடுக்க வேண்டிய நிலை இருக்கிறது. பிறகு கல்லூரிக்குச் செல்லும்போது ரூபாய் கொடுக்க வேண்டிய நிலை இருக்கிறது. பிறகு தொழில் கல்லூரிக்குச் செல்லும்போது, அட்மிஷனுக்காக ரூபாய் கொடுக்க வேண்டிய நிலை இருக்கிறது. ஒரே இடத்தில் பல பள்ளிகள் இருந்தாலும், சில பள்ளிகள் சிறப்புப் பெயர் பெற்றிருக்கின்றன. படிக்கும் பையன், அவன் தந்தை, தாய் ஆகிய அனைவரும் அந்தச் சிறப்புப் பள்ளியிலேயே படிக்க வேண்டும் என்று



1981 பிப்ரவரி 12] (திரு. ம. சங்கரலிங்கம்)

என்றுகிறார்கள். எனக்குத் தெரிந்த எம்.எல்.சி. இருக்கிறார், எம்.எல்.ஏ. இருக்கிறார், அவர் ஃபோன் பண்ணி வாங்கித் தருகிறேன் என்று சொல்லுகிறார் என்று சொல்லி தகப்பன் பையனை அழைத்துச் செல்லுகிறார். ஃபோன் பண்ணியும் நடக்கவில்லை. மேல் நிலைப் பள்ளியில் அட்மிஷனுக்காக ஐநூறு ரூபாய் கேட்கிறார்கள். தகப்பனும் கொடுக்கிறார். பையனுக்கு இடம் கிடைக்கிறது. படிக்கிறான், வெற்றி பெறுகிறான். பிறகு கல்லூரிக்குப் போகிறான். அங்கே இரண்டாயிரம் ரூபாய் கேட்கிறார்கள், தருகிறான். படிக்கிறான், பிறகு வெற்றி பெறுகிறான். பிறகு ஃபுரொஃபஷனல் கோர்சான மெடிக்கல், என்ஜினியரிங் ஆகியவற்றுக்கு ஐந்தாயிரம், பத்தாயிரம் ரூபாய் கொடுத்துச் சேர்ந்து படித்து வெற்றி பெறுகிறான். இப்படியெல்லாம் படித்த ஒருவன் பிறகு அதிகாரியாக நிர்வாகப் பொறுப்பில் வரும்போது, அவன் ரூபாய் வாங்கக் கூடாது என்று சொல்லுவதில் நியாயம் என்னவிருக்கிறது? ஆரம்பத்திலிருந்தே தந்தை பணம் கொடுத்ததைப் பார்த்து, அந்தச் சூழ்நிலையிலே வளர்ந்தவன் அவன். ஆகவே இந்த நிலையைக் களைய வேண்டியது யாருடைய பொறுப்பு. இத்தகைய சூழ்நிலைக்கு யார் பொறுப்பாக இருந்தாலும் சரி, இந்த நிலை அகற்றப்பட வேண்டும். இன்றைய மாணவர்கள் நாளை வளர்ந்து வரும்போது அதிகாரியாக, டைரக்டராக, ஐ.ஏ.எஸ். அதிகாரியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டு அனுப்பப்படுகிறார்கள். அவர்கள் திறமையாக நல்லுணர்வுடன் நிர்வாகத்தை நடத்திக்கொண்டு வருகிறார்கள். அவருடைய ஐம்பதாவது வயதில் பணம் இல்லாமல், தன்னுடைய மகள், மகன் திருமணத்தைச் செய்யும்போது தவறு செய்வதைப் பார்க்கிறோம். தவறு செய்கிறவர்கள் சூழ்நிலையின் காரணமாகத் தவறு செய்கிறார்கள். தவறு செய்த பின்னணியிலேயே வளர்ந்து வந்ததன் காரணமாக அவர்கள் தவறு செய்கிறார்கள். இத்தகைய சூழ்நிலை கல்வி நிலையங்களுக்குள் நுழையலாமா என்பதை ஒவ்வொருவரும் சிந்தித்துப் பார்த்து, தக்க பரிகாரத்தைக் காண கடமைப்பட்டிருக்கிறோம். இதிலே இரண்டு மூன்று வேறுபாடுகள் இருக்கலாம். அதைப்பற்றி பின்னாலே சிந்திக்கலாம்.

கல்வி நிலையங்களைப் பொறுத்தவரையில், மாநிலம் முழுவதும் அரசுப் பள்ளிகளும் இருக்கின்றன, தனியார் பள்ளிகளும் இருக்கின்றன. அரசுப் பள்ளி சிறப்பாக நடைபெறுகிறதோ, இல்லையோ, அதில் ஒரு தவறு நடந்தால், அதைப்பற்றிக் கேட்கிற உரிமை எல்லோருக்கும் இருக்கிறது. அதைப்பற்றி அரசு அதிகாரிகளிடத்திலே, அமைச்சர்களிடத்திலே எடுத்துச் சொல்லலாம் என்ற நம்பிக்கை இருக்கிறது. ஆனால் தனியார் பள்ளிகளில் நமக்கு அத்தகைய நம்பிக்கை இல்லை. அவர்களுடைய நல்லெண்ணத்தோடு பேச

[திரு. ம. சங்கரலிங்கம்] [1981 பிப்ரவரி 12

இந்த விவாதத்தில் நாம் இன்று ஒரு முடிவுக்கு வரப் போவதில்லை. அல்லது நாளையேகூட ஒரு முடிவுக்கு வரப்போவதில்லை. எல்லோரும் ஆழ்ந்து சிந்திக்க வேண்டும், அறிவோடு சிந்திக்க வேண்டும். மற்ற மாநிலங்களோடு ஒப்பிட்டுப் பார்க்கும்போது, நமது மாநிலத்தில் உள்ள கல்வி நிறுவனங்களின் நிலை ஓரளவு மனநிறைவு கொள்ளத் தக்கதாக இருக்கலாம். ஆனால் பிரச்சினை அதோடு முடிந்துவிட்டதாகக் கருதக்கூடாது. இந்த நாடு விடுதலை பெற்று 30 ஆண்டுகளுக்குப் பிறகு நாம் எதிர்பார்த்த அளவுக்கு சிறப்பான முறையில் கல்வியில் முன்னேற்றம் அடைந்திருக்கிறோமா என்று சிந்திக்க வேண்டும். பிற நாடுகளோடு அதிலும் மேலை நாடுகளோடு ஒப்பிட்டுப் பார்க்கிறபோது, நமது மாணவர்களின் தரமும், கல்வியின் தரமும் மிகவும் பின்தங்கியிருக்கின்றன என்பதை யாரும் மறுக்க முடியாது. தனியார் பள்ளிகளில் உள்ள குறைகளை என்னுடைய நண்பர்கள் இங்கே சுட்டிக்காட்டிய போது, அத்தகைய குறைகள் அரசுப் பள்ளிகளில் இல்லாமல் இருக்கின்றன என்று திருப்தி கொள்ளலாம். அந்தக் குறைகளைப் போக்குவதில் நம் எல்லோருக்குமே பொறுப்பு இருக்கிறது. அரசு என்பது சமுதாயத்தின் சொத்து. அது ஒரு கட்சிக்கு மட்டுமே சொந்தமானது அல்ல. ஜனநாயகத்தில் அரசு என்பது ஆளும் கட்சியால் இயக்கி வைக்கப்பட்டாலும், எதிர்க் கட்சியால் குறைகள் எடுத்துச் சொல்லப்பட்டு இயக்கி வைக்கப்படும் ஒரு இயந்திரம். அரசு செயல்படுவதில் தவறுகள் நடந்தால், அதைச் சுட்டிக் காட்டி, அதைத் திருந்தச் செய்வது எதிர்க் கட்சிகளின் கடமை. அந்த வகையிலே எதிர்க் கட்சியும் அரசை இயக்கிக் கொண்டிருக்கிறது.

ஒரு கட்சி ஆட்சியில் தற்போது இருக்கிறது என்று கருதினால், பள்ளிகள் அரசு கையிலே வரக்கூடாது என்றும், இன்னொரு கட்சி ஆட்சியில் வந்தால் எடுத்துக்கொள்ளலாம் என்றும் கருதுவது கூடாது. காரணம் அரசு என்பது ஒரு 'சாவரின் பாடி'. அரசு தன் பொறுப்பில் அனைத்துப் பள்ளிகளையும் மேற்கொள்ள வேண்டும் என்று நினைக்கும்போது, அதன் மூலம் பல நல்ல காரியங்களைச் சிறப்பாகச் செய்ய முடியும் என்ற நம்பிக்கையில்தான் அதை விரும்புகிறோம். தற்போது இருக்கும் குறைகளைத் தீர்க்க முடியும் சுட்டிக் காட்ட முடியும் என்று நம்புகிற நிலையில்தான் இந்தத் தீர்மானத்தை இந்த வடிவத்தில் வடித்திருக்கிறார்கள் என்று நான் நினைக்கிறேன்.

தனியார் பள்ளிகளைப் பொறுத்த இங்கே பல்வேறு கருத்துக்களை என்னுடைய நண்பர்கள் எடுத்துச் சொன்னார்கள். அவையெல்லாம் மிகைப்படுத்தப்பட்ட கருத்துக்கள் என்று சொல்லிவிட முடியாது. ஓரளவு அதைவிட விஞ்சியே



1981 பிப்ரவரி 12] [திரு. ம. சங்கரலிங்கம்]

காணப்படுகிறது என்பதுதான் உண்மை. ஆனால் பிற மாநிலங்களோடு ஒப்பிட்டுப் பார்க்கும்போது, இவைகள் சிறியனவாகத் தோன்றலாம். சில தனியார் பள்ளிகளில் ஒரு குறிப்பிட்ட அளவுக்கு மாணவர்களின் அட்டெண்டன்ஸ் இல்லை என்ற கட்டத்திலேயிருந்து தவறுகள் ஆரம்பமாகின்றன. மாணவர்கள் குறைவாக இருந்தால், ஊரில் இல்லாத மாணவர்களின் பெயர்களையும் பதிவேட்டில் எழுதி வைத்துக்கொண்டு, அதற்காக ஒரு ஆசிரியரைப் பெறுவார்கள். இத்தகைய குறைபாடுகள் குறிப்பாக மிஷனரி பள்ளிகளில் தான் அதிகமாக இருக்கின்றன. நான் யாரையும் குறை சொல்வதற்காக இதைச் சொல்லவில்லை. உண்மையை மறுக்கவோ மறைக்கவோ கூடாது என்ற கருத்தில் இதைச் சொல்லுகிறேன். தனியார் பள்ளி ஒன்றில் 45 மாணவர்கள் இருந்தால்தான், ஒரு ஆசிரியரைப் பெற முடியும் என்ற நிலையில், 40 மாணவர்கள் மட்டுமே இருந்தால், இல்லாத ஆறு மாணவர்களின் பெயரையும் அங்கே எழுதி வைத்துக்கொண்டு, இன்ஸ்பெக்ஷன் நாளன்று யாரையாவது இரண்டு பேரை அழைத்து வந்து உட்கார வைத்துக் காட்டி, ஆசிரியரைப் பெறுகிறார்கள்.

(பிற்பகல் 1-20)

அது தவறு என்று சொன்னாலும்கூட, அந்தப் பள்ளியில் 40 மாணவர்களுக்கு ஒரு ஆசிரியர் என்று இருக்கிறார். ஆனால் நம் மாநிலத்தில் பரவாயில்லை. ஆந்திர மாநிலத்தில் "கோஸ்ட் காலேஜ்" இருக்கிறது. காலேஜ் இருக்கிறதென்று வருடந்தோறும் மானியம் வாங்கியிருக்கிறார்கள். நான்கு வருடங்கள் சென்று பார்த்தால், அப்படிப்பட்ட ஒரு காலேஜ் இல்லை என்ற செய்தியை பத்திரிகையில் படித்து வியப்புற்றேன். இந்த நிலை நம்முடைய மாநிலத்தில் இல்லை. 45 மாணவர்களுக்குப் பதில் 40 மாணவர்கள் இருக்கலாம். ஐந்து மாணவர்களை அதிகப்படுத்திக் காட்டியிருக்கலாம். இந்த அளவில் பிற மாநிலங்களோடு நம் மாநிலத்தை ஒப்பிட்டுப் பார்த்தால், இயக்குகிற நிலையில் நாம் உயர்ந்திருக்கிறோம். அதை யாரும் மறுக்க முடியாது. இது யாருக்கும் தனிப்பட்ட முறையில் சொந்தமல்ல. தமிழ் உணர்வு, தமிழ் நாட்டுக்குரிய தனிப் பண்பு ஆகியவற்றால் உயர்ந்திருக்கிறோம் என்பதை இது காட்டுகிறது. இந்தப் பள்ளிகள் எல்லாம் மேலும் சிறப்பாக அமைய என்ன செய்ய வேண்டும் என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். பள்ளிகள் எல்லாம் எப்படித் தோன்றின என்ற கல்வி வரலாற்றைத் திருப்பிப் பார்க்க வேண்டும். வெள்ளையர்கள் ஆட்சிக்கு வந்த பிறகு இப்போதிருக்கக் கூடிய வடிவிலே பள்ளிகளைத் தொடங்கி வைத்தார்கள். அதற்கு முன்பெல்லாம் ஊரிலே இருக்கின்ற செல்வந்தர்கள் பள்ளிகளை ஆரம்பித்தார்கள். ஊரிலே நல்ல பள்ளிகள் நடக்க

[1981 பிப்ரவரி 12

**மாண்புமிகு மேலவைத் தலைவர்** : அவை முன் உள்ள பிரச்சினை :

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ் நாடு 1981 ஆம் ஆண்டு நிதி ஒதுக்கச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 18/1981) பரிந்துரை செய்வதற்காக ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்".

தீர்மானம் அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

சட்ட முன்வடிவு, பரிந்துரை செய்வதற்காக, ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப் பட்டது.

பரிந்துரை எதுமில்லை.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்** : தலைவர் அவர்களே,

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ் நாடு 1981 ஆம் ஆண்டு நிதி ஒதுக்கச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 18/1981) திருப்பியனுப்பப்பட வேண்டும்"

என்று முன்மொழிகிறேன்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர்** : அவை முன் உள்ள பிரச்சினை :

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ் நாடு, 1981 ஆம் ஆண்டு நிதி ஒதுக்கச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 18/1981) திருப்பியனுப்பப்பட வேண்டும்".

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

**(2) வரி செலுத்துவதை மறுக்குமாறு அல்லது தள்ளிப்போடுமாறு தூண்டுவதைத் தடுப்பதற்கான தமிழ் நாடு 1981 ஆம் ஆண்டு சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 11/1981.)**

**மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்** : தலைவர் அவர்களே,

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, வரி செலுத்துவதை மறுக்குமாறு அல்லது தள்ளிப்போடுமாறு தூண்டுவதைத் தடுப்பதற்கான தமிழ் நாடு 1981 ஆம் ஆண்டு சட்ட முன்வடிவு @ (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 11/1981) ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்"

என்று முன்மொழிகிறேன்.

---

@ 349-351 ஆம் பக்கங்களில் இணைப்பு III ஆக அச்சிடப்பட்டுள்ளது.



1981 பிப்ரவரி 12]

**மாண்புமிகு மேலவைத் தலைவர்** : முன்மொழியப்பட்ட தீர்மானம் :

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, வரி செலுத்துவதை மறுக்குமாறு அல்லது தள்ளிப்போடுமாறு தூண்டுவதைத் தடுப்பதற்கான தமிழ் நாடு 1981 ஆம் ஆண்டு சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 11/1981) ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்".

THIRU K. RAMAMOORTHY : Sir, I move the following amendment standing in my name :—

"That the Tamil Nadu Prevention of Incitement to Refuse or Defer Payment of Tax Bill, 1981 (L.A. Bill No. 11 of 1981), as passed by the Assembly, be referred to a Select Committee."

THIRU P. R. THOMAS: I second the amendment, Sir.

**திரு. க. இராமமூர்த்தி** : மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்ட முன்வடிவு மிக முக்கியமான சட்ட முன்வடிவு என்பதோடு, சில கூடுதல் அதிகாரங்களை கேட்கிறார்கள் என்பதைவிட சாதாரண மனிதனுக்கு இருக்க வேண்டிய உரிமைகளைப் பறிக்கின்ற ஒரு சட்ட முன்வடிவு என்றுதான் இதைச் சொல்ல வேண்டும். அந்த அளவிலேதான் இன்றைக்கு இந்தச் சட்டம் அரசினாலே அறிமுகப்படுத்தப்பட்டிருக்கிறது. இந்தச் சட்ட முன்வடிவு அரசுக்குச் சில உரிமைகளைத் தருகிறது என்பதைவிட, கூடுதல் அதிகாரங்கள் அரசுக்கு, ஆட்சிக்குத் தருகிறது என்பதைவிட, மிகத் தேவையான, அத்தியாவசியமான மனித உரிமைகளையே பறிக்கின்ற ஒரு சட்ட முன்வடிவாகத்தான் வந்திருக்கிறது என்பதை இந்த நேரத்திலே சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். அதோடு மட்டுமல்ல, நேற்று முன்தினம் அல்லது இரண்டு நாட்களுக்கு முன்னதாக என்று நினைக்கிறேன். நம்முடைய மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் அவருக்கே உரிய முறையிலே ஒரு விளக்கத்தைத் தந்தார்கள். சட்டங்களை எந்த அளவுக்குக் கடுமையாக ஆக்குகிறோமோ அந்த அளவுக்குத் தவறு செய்பவன் தப்பித்துக்கொள்ள முயல்வான் என்று சொன்னார்கள். அதுபோல, எந்த அளவுக்கு சட்டங்கள் மூலம் கடுமையான நடவடிக்கைகள் எடுக்கின்றோமோ அந்த அளவுக்கு, அதன் விளைவாக ஏற்படுகின்ற நிலைமைகளை நாம் சந்தித்தாக வேண்டும். வேறு ஒரு நிலையிலே இருந்து பார்க்கின்றபோது, இந்தச் சட்ட முன்வடிவைப் பொறுத்தவரையில், அதனுடைய பல்வேறு பிரிவுகள் இருக்கின்ற உரிமைகளைப் பறிக்கிறது என்றுதான் சொல்ல வேண்டும். அரசாங்கத்திற்கு ஏற்கெனவே சட்டபூர்வமாக சில வாய்ப்புகள், வசதிகள் எல்லாம் இருக்கின்றன. இன்றைக்கு மாநிலத்திலே எந்தத்

வேண்டியிருக்கிறது. அவர்கள் நல்லெண்ணம் அற்றவர்களாக மாறி, திட்டம் போட்டு, பணம் வாங்கி, கல்வி நிலையத்தைச் சீர்குலைத்து, வாழ்ந்துகொண்டிருக்கிறார்கள். ஆகவே இவற்றையெல்லாம் சட்டத்தால்தான் திருத்த வேண்டிய சூழ்நிலையில் இருக்கிறோம்.

சர் சி. பி. இராமசாமி ஐயர், நம்முடைய சென்னை மாநகரில் வாழ்ந்த பெரிய அரசியல்வாதி, நிர்வாகத் திறமை வாய்ந்தவர். அவர் திருவிதாங்கூர் சமஸ்தானத்தில் திவானாக இருந்தார். 1947 ஆம் ஆண்டுக்கு முன்னால் திவானாக இருந்தார். 1947 ஆம் ஆண்டு இந்தியா சுதந்திரம் அடைந்த பிறகு, அவரே தொடர்ந்து திவானாக இருந்தார். அரசியல் அமைப்பில் எனக்கு உரிமை இருக்கிறது Sovereignty rests with the prince என்று சொன்னார். மாகாணத்திற்குத்தான் விடுதலை அளிக்கப்பட்டது. சமஸ்தானத்திற்கு விடுதலை கொடுக்கவில்லை என்று சொன்னார். பிறகு சர்தார் பட்டேல் அவரைக் கூப்பிட்டு இந்திய யூனியனோடு இருங்கள் என்று சொல்லி அப்படியே எழுதி வாங்கிவிட்டார். சுதந்திர திருவிதாங்கூர் என சர். சி. பி. இராமசாமி முதலில் அறிவித்தார். அமெரிக்காவோடு பேசிவிட்டு அதன் நாற்பத்தி எட்டாவது நாடாக இருக்க ஒப்புக்கொண்டார். பிறகு வேறு வழியில்லாமல் குத்தப்பட்டார். பிறகு அவருடைய மகன் எம்.பி. யாக இருந்தார். அவருக்கு அரசியல் தெரியும், சட்டம் தெரியும். இது ஒரு வரலாறு. புதிதல்ல. அப்படிப்பட்ட துணிவுடையவர், ஆற்றல் உடையவர், ஆரம்பக் கல்வியை தேசியமயமாக்கினார். நேஷனலைஸ் பண்ணுகிறபோது திருவிதாங்கூர் சமஸ்தானத்திற்கு சக்தி இருந்தது. கிறித்துவ மிஷனரி இந்தியாவில் அதிகச் செல்வாக்கு பெற்று பள்ளிகளையும், கல்லூரிகளையும் நிர்வகித்துக் கொண்டிருந்த இடம் திருவிதாங்கூர். அவ்வளவு சக்தி வாய்ந்த பள்ளிகளை சமஸ்தானம் எடுத்து கோட்டையம் பிஷப்பைக் கைது செய்து சிறையில் அடைத்தார். அழகப்பபுரம் சாமியார் நவமணியைக் கைது செய்து ஜெயிலில் போட்டார். பள்ளியையெல்லாம் எடுத்து நடத்தினார். அவ்வளவு சக்தி நமக்கு இல்லை. அவ்வளவு சட்டப் பாதுகாப்பு, அரசியல் அமைப்பு துணை செய்யவில்லை. இந்தச் சூழ்நிலையில் என்ன செய்ய வேண்டுமென்று நாம் பார்க்க வேண்டும்.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் அடுத்து தனி உறுப்பினர் அலுவல் நாள் அன்று தொடர்ந்து பேசுவார். மேலவையின் காலை நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவடைந்தன. அவை மீண்டும் பிற்பகல் 4 மணிக்குக் கூடும்.

பின்னர், அவை ஒத்திவைக்கப்பட்டது.

(பிற்பகல் 1-30)





அவை மீண்டும் பிற்பகல் 4 மணியளவில் கூடியது.

(மாண்புமிகு மேலவைத் தலைவர் தலைமை)

## 3. அறிவிப்புகள்.

### (1) ஆளுநரிடமிருந்து செய்தி.

**மாண்புமிகு மேலவைத் தலைவர்:** ஆளுநர் அவர்கள் தமிழ்நாடு 1981 ஆம் ஆண்டு நிதி ஒதுக்கச் சட்ட முன்வடிவை ஆய்விற்கு எடுத்துக்கொள்வதற்கு தனது இசைவைத் தெரிவித்துள்ளார்கள்.

### (2) பேரவையிலிருந்து செய்தி.

**மாண்புமிகு மேலவைத் தலைவர்:** பேரவையால் நிறைவேற்றப்பட்டு, அரசியலமைப்புச் சட்டப்படி பணச் சட்ட முன்வடிவு என பேரவைத் தலைவரால் நிர்மானிக்கப்பட்டு, அவரது கையொப்பத்துடன் இம்மேலவையின் பரிந்துரைக்காக அனுப்பி வைக்கப்பட்டுள்ள தமிழ்நாடு 1981 ஆம் ஆண்டு நிதி ஒதுக்கச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 18/1981) பேரவைத் தலைவரிடம் இருந்து பெற்றுள்ளேன்.

பேரவையால் நிறைவேற்றப்பட்டு மேலவையின் இசைவிற்காக பேரவைத் தலைவரின் கையொப்பத்துடன் அனுப்பி வைக்கப்பட்டுள்ள வரி செலுத்துவதை மறுக்குமாறு அல்லது தள்ளிப்போடுமாறு தாண்டுவதைத் தடுப்பதற்கான தமிழ்நாடு 1981 ஆம் ஆண்டு சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 11/1981) பிரதியினைப் பேரவைத் தலைவரிடமிருந்து பெற்றுள்ளேன்.

## 4. அரசின் சட்ட முன்வடிவுகள்.

### (1) தமிழ்நாடு 1981 ஆம் ஆண்டு நிதி ஒதுக்கச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 18/1981.)

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** தலைவர் அவர்களே,

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ் நாடு 1981 ஆம் ஆண்டு நிதி ஒதுக்கச் சட்ட முன்வடிவு @ (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 18/1981) பரிந்துரை செய்வதற்காக ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்"

என்று முன்மொழிகிறேன்.

---

@ 346–348 ஆம் பக்கங்களில் இணைப்பு II ஆக அச்சிடப்பட்டுள்ளது.

(திரு. க. இராமமூர்த்தி) [1981 பிப்ரவரி 12

செலுத்துவதை மறுக்குமாறு அல்லது தள்ளிப் போடுமாறு யாதொரு நபரை அல்லது நபர்களின் வகுப்பை அல்லது பொதுவாகப் பொதுமக்களை ஊக்குவித்து அல்லது தூண்டி, அவ்வாறு ஊக்குவிப்பது அல்லது தூண்டிவிடுவது மாநிலத்தின் பாதுகாப்பிற்கோ, பொது அமைதிக்கோ, கண்ணியத்திற்கோ, ஒழுக்க நெறிக்கோ...” என்று சொல்லப்பட்டிருக்கிறது. கண்ணியத்திற்கோ, ஒழுக்க நெறிக்கோ என்ற வார்த்தைகளுக்கு எவ்வளவு வேண்டுமானாலும், எப்படி வேண்டுமானாலும் விளக்கம் சொல்ல முடியும். நீதிமன்றங்கள் இது தான் கண்ணியம், இதுதான் ஒழுங்கு முறை என்ற முடிவிற்கு வரவில்லை. சந்தர்ப்பங்கள், சூழ்நிலைகள் இவற்றை வைத்துத்தான் அவற்றுக்கான பொருளை அறிந்துகொள்ள முடியும். ஆகவே அந்த வார்த்தைகளையெல்லாம் பயன்படுத்தி, அதற்காக சட்டத்தின் துணை கொண்டு நடவடிக்கை எடுப்பது, தண்டிப்பது என்ற நிலையைக் கொண்டுவருகிறபோது, மிகச் சாதாரணமானவர்கள், எளியவர்கள் ஆகியோர்களை பெரிய சட்டச் சிக்கலில் கொண்டு வந்து வைக்கும் நிலை ஏற்படும். அதைப் போலவே ஆங்கிலத்தில் 3-வது பிரிவில் சொல்லியிருக்கிறார்கள்.

“. . . . . . such rent and if such encouragement or incitement undermines the security of the state or public order or decency. . . . . . .” ஆங்கிலத்தில், “decency or morality” என்ற வார்த்தைகள் இருக்கின்றன. இதற்கு எப்படி முடிவு சொல்லப் போகிறார்கள்? என்னால் வரி கட்ட முடியவில்லை, வாங்கிய கடனைத் திருப்பிச் செலுத்த முடியவில்லை. இதற்காகக் கடன் வாங்கினோம். கடன் வாங்கியபோது நியாயமென்று சொன்னார்கள். இப்போது என்னால் கட்ட முடியவில்லை என்று சொல்கிறபோது, அரசாங்கம் அதைத் தள்ளி வைக்கிறது. ஆறு மாதங்கள் அவகாசம் தருகிறேன், கட்டிவிடுங்கள் என்று சொல்லுகிறார்கள். அப்படி மூன்று ஆண்டுகள்கூட அரசாங்கம் தள்ளி வைத்திருக்கிறது. சில நேரங்களில் இப்படி அரசாங்கம் ஆறு மாதங்கள் தள்ளி வைக்கிறபோது, ஒரு வருடம் தள்ளி வைக்கிறபோது அல்லது மூன்று வருடங்கள் தள்ளி வைக்கிறபோது, அந்தக் காலத்திற்குள் திருப்பிச் செலுத்த முடியவில்லை. முதலில் ஆறு மாதங்கள் தள்ளி வைத்து மேலும் ஆறு மாதங்கள் தள்ளி வைக்க வேண்டுமென்ற உணர்வு ஏற்படுவதற்கு அரசாங்கமே காரணமாக இருக்கிறது. சில நேரங்களில் நாங்கள் கேட்க வேண்டியிருக்கிறது. எங்களால் வரி கட்ட முடியவில்லை, கடன் பாக்கியைச் செலுத்த முடியவில்லை என்று கேட்கும்போது நாட்டு மக்கள் கேட்கும்போது, அதற்குப் பிறகு

வரி செலுத்துவதை மறுக்குமாறு அல்லது தள்ளிப் போடுமாறு தூண்டுவதைத் தடுப்பதற்கான தமிழ்நாடு 1981 ஆம் ஆண்டு சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 11/1981) 

1981 பிப்ரவரி 12] (திரு. க. இராமமூர்த்தி)

அரசுக்கு அந்த உணர்வு வருகிறது. மேலும் ஆறு மாதங்கள் தள்ளிக் கொடுக்கலாமென்ற உணர்வு வருகிறது. அது தவிர்க்க முடியாத ஒன்றாகும். அதாவது ஜனநாயகத்தில் இவை தவிர்க்க முடியாத ஒன்றாகும். அப்படி ஆட்சியே செய்திருக்கிறது. இத்தனைக்கும் பிறகு அப்படிக் கேட்பதே தவறு என்ற நிலை வந்தால், இந்தக் கடன்களைத் திருப்பிச் செலுத்த முடியவில்லையே என்ற உணர்வை வெளிப்படுத்துவது எப்படி. ஏற்கெனவே அரசு தள்ளிக் கொடுத்துள்ளது. இப்போது இந்தச் சூழ்நிலைக்கு அவர்களைத் தள்ளுவது நல்லதல்ல. அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிப் பொறுப்பை ஏற்பதற்கு முன், விவசாயிகளின் கடன்களைத் தள்ளி வைக்க வேண்டுமென்று கோரிக்கை வைத்தது. தள்ளி வைக்க வேண்டுமென்று சொல்லும்போது, வாங்கியதைக் கட்ட முடியவில்லை என்பதுதான் காரணம். கட்டுவதற்கில்லை என்று சொல்லுவது கடுமையாக வருகிறது, அவசியமாக வருகிறது, தேவையாக வருகிறது. இந்த நிலையில், கேட்பதே சட்ட விரோதம், வா சிறைக்கு, ஐந்து ஆண்டுகள் உள்ளே வைக்கிறேன், குறைந்த பட்சம் இரண்டு ஆண்டுகள் உள்ளே வைக்கிறேன், 2,000 ரூபாய் அபராதம் போடுகிறேன் என்று சொல்லுவது, ஒரு ஜனநாயக அரசு செய்யக்கூடிய செயலாக இராது. நாட்டு மக்களுடைய, கடன் வாங்கியவர்களுடைய அவலங்களை எந்த அளவிற்கு மாண்புமிகு முதல்வரவர்கள் உணர்ந்திருக்கிறார்கள் என்பதை ஆளுநர் உரையின் மீதான விவாதத்திற்கு அவர் அளித்த பதிலிலிருந்து உணர்வு பூர்வமாகப் பார்க்க முடிந்தது. பல்வேறு கருத்துக்களில் நாங்கள் ஒத்துப்போகலாம், அல்லது பிரிந்துபோகலாம். அவதிப்படுபவர்களுடைய கடன்களை எப்படி ரத்து செய்வது, தள்ளுவது, எப்படி அவர்களுக்குச் சௌகரியங்களைத் தேடிக் கொடுப்பது என்ற உணர்வுகளை அவருடைய பேச்சில் பார்க்க முடிகிறது. அந்த உணர்வுகளை மதிக்கின்ற அரசு, அந்த உணர்வோடு இருக்கின்ற அரசு, நிச்சயமாக அந்த உணர்வுகளை எப்படிக் கொண்டுவருவது என்பதை அறிய வேண்டும். நான் ஏழையாக இருக்கிறேன், பணம் செலுத்த முடியவில்லை, என்று சொல்லித்தான் ஆக வேண்டும். அப்படிச் சொன்னாலே சட்டம் இருக்கிறது, தண்டித்துவிடுமென்ற நிலைமை இருந்தால், யாரால் சொல்ல முடியும்! ஏழைகள் கடனைக் கொடுக்க முடியாதவர்களாக மட்டுமல்ல, அந்தச் சங்கடத்திலே அவதிப்படுகிறவர்களை நசுக்கும் கொடுங்கோல் சட்டமாக இது மாறிவிடுமென்று தெரிவித்துக்கொள்கிறேன்.

(திரு. க. இராமமூர்த்தி) [1981 பிப்ரவரி 12

தவறு நடந்தாலும், ஆட்சிக்கு உணர்த்தவோ, அரசுக்கு இடித்துரைக்கவோ போராட்டம் நடத்த முடியாது. பாதிக்கப்பட்டவர்கள் தங்கள் உரிமைகளைக் கேட்டோ, அவர்களது தேவைகளை உணர்த்தவோ அல்லது சட்டபூர்வமான கிளர்ச்சிகளில் ஆர்ப்பாட்டங்களில் ஈடுபடவோ முடியாத நிலை ஏற்படும். தங்களுடைய கோரிக்கைகளை அரசுக்கு அறிவிக்க சில நடவடிக்கைகள் எடுக்கும்போது, அந்த நடவடிக்கைகளைத் தடுத்து நிறுத்துவதற்கு அரசாங்கத்துக்கு நிறைய அதிகாரங்கள் இருந்துகொண்டிருக்கின்றன. அந்த அதிகாரத்தை பல்வேறு சட்டங்கள் மூலமாக நிறைவேற்றிக்கொள்ள முடியும். அதற்கேற்ற சட்டங்கள் இருக்கின்றன. இந்த ஆட்சி வரி இல்லாமல் செயல்பட முடியாது. இதில் யாருக்கும் சந்தேகம் இல்லை. அதிலே போய் யாரும் குறுக்கே நிற்க முடியாது. ஆனால் சில சூழ்நிலைகள் ஏற்படுகின்றபோது, சில அவசியங்கள் ஏற்படுகின்றபோது, சில உணர்வுகளை உருவாக்கியாக வேண்டும். ஆனால் இந்தச் சட்ட முன்வடிவைப் பொறுத்தவரையில் இது அடிப்படையிலேயே கை வைக்கின்ற சட்டமாக இருக்கிறது. இந்தச் சட்டத்தைப்பற்றிச் சொல்லும்போது ஒன்று சொல்கிறேன். இன்றைய சூழ்நிலையிலே வரி செலுத்த வேண்டாம் அல்லது வரி செலுத்த மாட்டேன் என்று சொன்னால், அவரைக் கடுமையாகத் தண்டிக்கலாம். ஐந்து ஆண்டுகள் சிறை அல்லது ரூபாய் 5,000 அபராதம் அல்லது இரண்டும் என்ற அளவுக்கு அதிகபட்சமான தண்டனையையும், குறைந்த பட்சமாக இரண்டு ஆண்டுகள் சிறைவாசம் விதிக்கின்ற நிலைமையையும் கொண்டுவருவது, இந்தத் தமிழகத்திலே உள்ளவர்கள் ஏதோ வரி கட்டாத நிலையிலே ஆணித்தரமாக இருப்பது போலவும், ஒரு பயங்கர போக்கிலே இருப்பது போலவும் சட்டம் ஒழுங்கு மூலமாகத்தான் இந்த அரசாங்கத்தினுடைய வருவாயை வசூலிக்க வேண்டுமென்ற நிலையில் இருப்பது போலவும் நிலைமைகளை உருவாக்குகிறார்கள். ஆக இங்கே இருப்பவர்கள் சட்டத்தைத் தவிர வேறு எதற்கும் பயப்படமாட்டார்கள் என்று சொல்வதுபோல இருக்கிறது. மக்களை மக்களாக நடத்த முடியாத சூழ்நிலை இருப்பதால் தான் இந்தச் சட்ட முன்வடிவு கொண்டு வருவதும், அதில் அப்படிப்பட்ட பிரிவுகள் அமைவதும் என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்பு

(பிற்பகல் 4-10)

கிறேன். இந்த நாட்டிலேதான் சில அடிப்படையான தேவைகளை, உரிமைகளை ஆட்சிக்கு எடுத்துக்காட்டுவதற்கு காந்தியடிகள் சட்ட மறுப்பு இயக்கம் நடத்தினார்கள். இங்கேதான் மிகப் பெரிய அளவிலே நாடு தழுவிய வரி



1981 பிப்ரவரி 12] [திரு. க. இராமமூர்த்தி]

கொடா இயக்கம் நடைபெற்றது. அன்றைக்கு வெள்ளையர் ஆட்சிக்கு எதிராக, நாம் அடிமைகளாக இருந்தபோது, வரிகொடா இயக்கம் நடத்தினோமென்று அதை நியாயப்படுத்த முனையலாம். நான் இந்த நேரத்தில் ஒன்றை நினைவுபடுத்த விரும்புகிறேன். வரி கொடா இயக்கம் என்பது, மக்களின் குறைகளை ஆட்சிக்குப் பலமுறை எடுத்துக் கூறியதற்குப் பின்பு, கடுமையான ஆயுதமாக வந்தது. இன்றைக்கு ஆட்சிப் பொறுப்பிலே இருக்கிறவர்கள் வரி கொடா இயக்கத்தைச் சட்டபூர்வமாகத் தடை செய்தாலும், வரி கொடுக்க மாட்டேன் என்று சொன்னாலே தண்டனை, உன்னுடைய குறைகள் எதுவாக இருந்தாலும், இந்த நிலைக்குப் போகக் கூடாது என்று சொல்லும் நிலை வருமானால், அதனால் ஏற்படும் விளைவுகள் நல்லதாக இராது. வரி கொடுக்க மறுப்பதென்பது அரசாங்கத்தினுடைய கவனத்தை ஈர்ப்பதற்கான மிக மிக அவசியமான ஒரு நடவடிக்கை யாகும். வரி கொடுக்க மாட்டேன் என்று சொல்பவர்கள் முழுக்க முழுக்க நிரந்தரமாக வரி கொடுக்கப் போவதில்லை என்ற நிலைக்கு வருவதில்லை. அவர்களுடைய குறைகள் கேட்கப்படும்வரை, அதற்குப் பரிகாரம் தேடும்வரை, இது அவசியமென்ற உணர்வால், இதற்கான நடவடிக்கைகளில் ஈடுபடும் கட்டாயத்தில் இருக்கிறார்கள். அவர்களுடைய குறைகள் எப்போது முடிவடைகிறதோ, அப்போது அவர்கள் வரி கொடுக்கும் நிலை ஏற்படுகிறது. வரி கொடுக்க மாட்டேன் என்று சொல்லுவதைச் சட்டபூர்வமாக நிறுத்துவதற்கான அவசியம் அரசுக்கு ஏற்பட்டிருக்கிறது. வரி கொடுக்க மாட்டேன் என்று சொல்லுபவர்கள் அதிகமாக இருக்கிறார்கள் என்பது போலவும், அதைச் சமாளிக்க அரசால் முடியவில்லை என்பது போலவும், வரி கொடுக்கச் சொல்லுகின்ற அளவிற்கு அல்லது அந்த உணர்வுகளை உருவாக்குகின்ற அளவிற்கு அதிகாரத்தில் ஆட்சியில் இருப்பவர்களுக்குச் செல்வாக்கு இல்லை என்று ஒப்புக்கொள்வது போலவும் நிலைமைகள் அமைந்துள்ளன. ஆகவே, இந்தச் சட்ட முன்வடிவில் கொண்டுவரப்படுகிற பல்வேறு பிரிவுகள் சாதாரணமாக ஒவ்வொருவருக்கும் இருக்க வேண்டிய உரிமைகளில் கை வைப்பதாக இருக்கிறது. இதிலே இன்னொன்று சொல்லப்பட்டிருக்கிற. பல்வேறு பிரிவுகள் சட்டபூர்வமாக விளக்கம் தர முடியாத அளவிற்கு அமைந்துள்ளன. நீதிமன்றங்களில் எல்லா வார்த்தைகளுக்கும், எல்லாச் சட்டங்களுக்கும் விளக்கம் தருகிறார்கள். ஆனால் சில வார்த்தைகளுக்கு விளக்கமோ, முடிவோ நீதிபதியோடு முடிந்துவிடுவதில்லை. உதாரணத்திற்கு ஒன்றைச் சொல்லுகிறேன். ". . . யாதொரு தொகையைச்

(திரு. க. இராமமூர்த்தி) [1981 பிப்ரவரி 12

செலுத்துவதை மறுக்குமாறு அல்லது தள்ளிப் போடுமாறு யாதொரு நபரை அல்லது நபர்களின் வகுப்பை அல்லது பொதுவாகப் பொதுமக்களை ஊக்குவித்து அல்லது தூண்டி, அவ்வாறு ஊக்குவிப்பது அல்லது தூண்டிவிடுவது மாநிலத்தின் பாதுகாப்பிற்கோ, பொது அமைதிக்கோ, கண்ணியத்திற்கோ, ஒழுக்க நெறிக்கோ. . ." என்று சொல்லப்பட்டிருக்கிறது. கண்ணியத்திற்கோ, ஒழுக்க நெறிக்கோ என்ற வார்த்தைகளுக்கு எவ்வளவு வேண்டுமானாலும், எப்படி வேண்டுமானாலும் விளக்கம் சொல்ல முடியும். நீதிமன்றங்கள் இது தான் கண்ணியம், இதுதான் ஒழுங்கு முறை என்ற முடிவிற்கு வரவில்லை. சந்தர்ப்பங்கள், சூழ்நிலைகள் இவற்றை வைத்துத்தான் அவற்றுக்கான பொருளை அறிந்துகொள்ள முடியும். ஆகவே அந்த வார்த்தைகளையெல்லாம் பயன்படுத்தி, அதற்காக சட்டத்தின் துணை கொண்டு நடவடிக்கை எடுப்பது, தண்டிப்பது என்ற நிலையைக் கொண்டுவருகிறபோது, மிகச் சாதாரணமானவர்கள், எளியவர்கள் ஆகியோர்களை பெரிய சட்டச் சிக்கலில் கொண்டு வந்து வைக்கும் நிலை ஏற்படும். அதைப் போலவே ஆங்கிலத்தில் 3-வது பிரிவில் சொல்லியிருக்கிறார்கள்.

". . . . . such rent and if such encouragement or incitement undermines the security of the state or public order or decency. . . . . ." ஆங்கிலத்தில், "decency or morality" என்ற வார்த்தைகள் இருக்கின்றன. இதற்கு எப்படி முடிவு சொல்லப் போகிறார்கள்? என்னால் வரி கட்ட முடியவில்லை, வாங்கிய கடனைத் திருப்பிச் செலுத்த முடியவில்லை. இதற்காகக் கடன் வாங்கினோம். கடன் வாங்கியபோது நியாயமென்று சொன்னார்கள். இப்போது என்னால் கட்ட முடியவில்லை என்று சொல்கிறபோது, அரசாங்கம் அதைத் தள்ளி வைக்கிறது. ஆறு மாதங்கள் அவகாசம் தருகிறேன், கட்டிவிடுங்கள் என்று சொல்லுகிறார்கள். அப்படி மூன்று ஆண்டுகள்கூட அரசாங்கம் தள்ளி வைத்திருக்கிறது. சில நேரங்களில் இப்படி அரசாங்கம் ஆறு மாதங்கள் தள்ளி வைக்கிறபோது ஒரு வருடம் தள்ளி வைக்கிறபோது அல்லது மூன்று வருடங்கள் தள்ளி வைக்கிறபோது, அந்தக் காலத்திற்குள் திருப்பிச் செலுத்த முடியவில்லை. முதலில் ஆறு மாதங்கள் தள்ளி வைத்து மேலும் ஆறு மாதங்கள் தள்ளி வைக்க வேண்டுமென்ற உணர்வு ஏற்படுவதற்கு அரசாங்கமே காரணமாக இருக்கிறது. சில நேரங்களில் நாங்கள் கேட்க வேண்டியிருக்கிறது. எங்களால் வரி கட்ட முடியவில்லை, கடன் பாக்கியைச் செலுத்த முடியவில்லை என்று கேட்கும்போது நாட்டு மக்கள் கேட்கும்போது, அதற்குப் பிறகு



1981 பிப்ரவரி 12] (திரு. க. இராமமூர்த்தி)

அரசுக்கு அந்த உணர்வு வருகிறது. மேலும் ஆறு மாதங்கள் தள்ளிக் கொடுக்கலாமென்ற உணர்வு வருகிறது. அது தவிர்க்க முடியாத ஒன்றாகும். அதாவது ஜனநாயகத்தில் இவை தவிர்க்க முடியாத ஒன்றாகும். அப்படி ஆட்சியே செய்திருக்கிறது. இத்தனைக்கும் பிறகு அப்படிக் கேட்பதே தவறு என்ற நிலை வந்தால், இந்தக் கடன்களைத் திருப்பிச் செலுத்த முடியவில்லையே என்ற உணர்வை வெளிப்படுத்துவது எப்படி. ஏற்கெனவே அரசு தள்ளிக் கொடுத்துள்ளது. இப்போது இந்தச் சூழ்நிலைக்கு அவர்களைத் தள்ளுவது நல்லதல்ல. அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிப் பொறுப்பை ஏற்பதற்கு முன், விவசாயிகளின் கடன்களைத் தள்ளி வைக்க வேண்டுமென்று கோரிக்கை வைத்தது. தள்ளி வைக்க வேண்டுமென்று சொல்லும்போது, வாங்கியதைக் கட்ட முடியவில்லை என்பதுதான் காரணம். கட்டுவதற்கில்லை என்று சொல்லுவது கடுமையாக வருகிறது, அவசியமாக வருகிறது, தேவையாக வருகிறது. இந்த நிலையில், கேட்பதே சட்ட விரோதம், வா சிறைக்கு, ஐந்து ஆண்டுகள் உள்ளே வைக்கிறேன், குறைந்த பட்சம் இரண்டு ஆண்டுகள் உள்ளே வைக்கிறேன், 2,000 ரூபாய் அபராதம் போடுகிறேன் என்று சொல்லுவது, ஒரு ஜனநாயக அரசு செய்யக்கூடிய செயலாக இராது. நாட்டு மக்களுடைய, கடன் வாங்கியவர்களுடைய அவலங்களை எந்த அளவிற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உணர்ந்திருக்கிறார்கள் என்பதை ஆளுநர் உரையின் மீதான விவாதத்திற்கு அவர் அளித்த பதிலிலிருந்து உணர்வு பூர்வமாகப் பார்க்க முடிந்தது. பல்வேறு கருத்துக்களில் நாங்கள் ஒத்துப்போகலாம், அல்லது பிரிந்துபோகலாம். அவதிப்படுபவர்களுடைய கடன்களை எப்படி ரத்து செய்வது, தள்ளுவது, எப்படி அவர்களுக்குச் சௌகரியங்களைத் தேடிக் கொடுப்பது என்ற உணர்வுகளை அவருடைய பேச்சில் பார்க்க முடிகிறது. அந்த உணர்வுகளை மதிக்கின்ற அரசு, அந்த உணர்வோடு இருக்கின்ற அரசு, நிச்சயமாக அந்த உணர்வுகளை எப்படிக் கொண்டுவருவது என்பதை அறிய வேண்டும். நான் ஏழையாக இருக்கிறேன், பணம் செலுத்த முடியவில்லை, என்று சொல்லித்தான் ஆக வேண்டும். அப்படிச் சொன்னாலே சட்டம் இருக்கிறது, தண்டித்துவிடுமென்ற நிலைமை இருந்தால், யாரால் சொல்ல முடியும்? ஏழைகள் கடனைக் கொடுக்க முடியாதவர்களாக மட்டுமல்ல, அந்தச் சங்கடத்திலே அவதிப்படுகிறவர்களை நசுக்கும் கொடுங்கோல் சட்டமாக இது மாறிவிடுமென்று தெரிவித்துக்கொள்கிறேன்.

(திரு. க. இராமமூர்த்தி) [1981 பிப்ரவரி 12

(பிற்பகல் 4-20)

ஆகவே, உணர்வுகளை வெளிப்படுத்த இடம் தராத அரசாக இது ஆகிவிடும். போராடிச் சுதந்திரம் பெற்றிருக்கிறோம். சட்டத்தைப் போடும்போது சுதந்திர உணர்வோடு சட்டத்தைப் போட வேண்டும், செயல்படுத்த வேண்டும். சுதந்திரத்தைப் பெற்றது அத்தகைய நிலையை உருவாக்கத்தான். சுதந்திரம் கிடைத்த பிறகு, சுதந்திர நாட்டிலே ஒரு அடிமைகளாக வாழ்கிறோம் என்கிற உணர்வு வரக்கூடாது. நமது கைகளையும், கால்களையும் இணைத்துச் சங்கிலியால் கட்டிப்போடுவது எந்த ஒரு அரசுக்கும் நல்லதல்ல, குறிப்பாக அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசுக்குக் கொஞ்சமும் நல்லதல்ல என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இன்னொன்றையும் சொல்ல ஆசைப்படுகிறேன். யார் தூண்டி விடுகிறார்கள் என்பதைப் பற்றிய குறிப்பு 3-வது பிரிவிலேவருகிறது. நேர்முகமாகவோ மறைமுகமாகவே தூண்டிவிடுபவர்கள் 'instigates directly or indirectly' என்று சொல்லியிருக்கிறார்கள். "அரசுப் பணியாளர்கள் மீது குற்ற வகையிலான வன்முறையைப் பயன்படுத்த நேரடியாகவோ, மறைமுகமாகவோ தூண்டினாலும் அவருக்கு ஐந்தாண்டு வரை கடுங்காவல் தண்டனையும், ஐயாயிரம் ரூபாய் வரை அபாரதத் தண்டனையும் விதிக்கப்படும்" என்று வருகிறது. நேரடியாகவோ மறைமுகமாகவோ என்று இருக்கிறது. மறைமுகமாகவோ என்று இருக்கிறதே அது எப்படி என்று எனக்குப் புரியவில்லை.

"instigates directly or indirectly the use of criminal force against public servants generally or any class of public servants or any individual public servant, shall be punished with rigorous imprisonment for a term which may extend to five years and with fine which may extend to five thousand rupees" என்று ஆங்கிலத்தில் இருக்கிறது. 'dir ctly' என்று சொல்லும்போது நேரடியாக அரசு அதிகாரிகள் வந்தால், அவர்களைக் தடுத்து விடுங்கள் அல்லது அடித்து விடுங்கள் என்று சொல்வது தண்டிக்கப்பட வேண்டிய ஒன்று என்பதில் எங்களுக்கு மாறுபட்ட கருத்து கிடையாது. அரசு அதிகாரிகள் தங்களுடைய கடமையைச் செய்ய வரும்போது, கடமையைச் செய்யவிடாமல் தடுத்து கொடுமைப்படுத்துங்கள் என்று சொல்வது தவறு. அதை நான் ஏற்றுக்கொள்கிறேன். ஆனால் 'directly' என்கிற வார்த்தைக்குப் பின் 'indirectly' என்று சொல்லியிருப்பது அவ்வளவு நல்லதல்ல. யாராவது 4 பேர் பேசிக்கொண்டிருக்கிறார்கள். இந்தச் சம்பவத்திற்காக ஒரு அரசு



1981 பிப்ரவரி 12] (திரு. க. இராமமூர்த்தி)

அதிகாரி வருகிறார். அப்போது நானே அந்த இடத்தை நோக்கி வந்து கொண்டிருக்கிறேன். அப்போது அதிகாரியினுடைய பார்வை என்மேல்படுகிறது. அப்போது காவல் துறையினர் என்னைத் தான் பிடித்துக்கொண்டு செல்வார்கள். அவர்கள் என்ன சொல்வார்களென்றால் இராமமூர்த்தி அங்கே நின்றுகொண்டிருந்தார் தூண்டிவிட்டார் என்று சொல்வார்கள். ஆனால் அவருக்கு அதில் சம்பந்தமே இருக்காது. அவர்தான் தடுத்தார் என்று சொல்வார்கள். அரசு, சட்டங்களைக் கொண்டுவரும்போது யாருக்குச் சட்டப் பாதுகாப்பு தேவை என்பதைப்பற்றி ஆராய்ந்து கொண்டுவர வேண்டும். யார் பாதிக்கப்படுவார்களோ அவர்களுக்குத்தான் அதிகமான சட்டப் பாதுகாப்பு தரவேண்டும். ஆனால் உண்மையில் பாதிக்கப்படுபவர்களை நடுத்தெருவில் நிற்க வைத்திருக்கிறார்கள். அவர்களை இந்த நாட்டை விட்டே துரத்த வேண்டுமென்கிற நிலையில் சட்டத்தைக் கொண்டுவரக் கூடாது. இதனால் நீதிமன்றத்திற்கு அதிகமான வழக்குகள் வர வாய்ப்பு ஏற்படும். நிரபராதிகள், ஏழையெளியவர்கள் மேலும், மேலும் வழக்கறிஞர்கள் நாடிச்செல்ல வேண்டிய நிலையும் அவர்கள் மேலும், மேலும் வழக்கறிஞர்களுக்கு பணத்தைக் கொட்டிக் கொடுக்க வேண்டிய நிலையும் அவர்கள் அதன் காரணமாக ஓட்டாண்டிகளாகவும், பிச்சைக்காரர்களாகவும் ஆக்கப்படுகின்ற நிலையும் உருவாகும். ஏழையெளியவர்களுக்கு, கடன்காரர்களுக்கு நிச்சயமாக இதனால் எந்தவிதமான பாதுகாப்பும் ஏற்படாது. அரசு அதிகாரிகள் கடமையைச் செய்ய வரும் போது தடுத்தால், கொடுமைப்படுத்தினால் அரசு அத்தகைய போக்கைத் தடுத்து நிறுத்துவதில் தவறில்லை. ஆனால் directly என்று சொல்லி அப்படி ஒரு சட்டம் வருமானால், அது தமிழகத்திலுள்ள சாதாரண ஏழையெளிய மக்களுடைய உணர்வைக் கொப்பளித்து விடச் செய்யும். அத்தகைய ஒரு நிலையை தமிழகத்தில் மீண்டும் இந்த அரசு உருவாக்க வேண்டாம். சமாதான காலத்தில் இப்படிப்பட்ட சட்டங்களைக் கொண்டு வந்து மனிதாபிமான உணர்வுகளை நசுக்கி அதன் காரணமாக மனித உணர்வுகளைக் கொப்புளிக்கச் செய்வது அவ்வளவு நல்லதல்ல. அரசுக்கு எதிராக உணர்வுகளை எழுப்பச் செய்கின்ற சட்டம் இது. அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசினுடைய நன்மையைக் கருதியும், தமிழக மக்களுடைய நன்மையைக் கருதியும் அரசு இந்தச் சட்டத்தை மறுபரிசீலனை செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். ஏற்கெனவே இது சட்டப் பேரவையில் நிறைவேறியிருப்பதால், மாண்புமிகு அமைச்சர் அவர்களை நான் மறுபடியும் கேட்டுக்கொள்கிறேன். இந்த ஆட்சியினுடைய நலன் கருதி, தமிழகத்திலுள்ள மக்களுடைய ஒட்டுமொத்தமான நன்மையைக் கருதி, ஏழையெளி

யவர்களுடைய நலன் கருதி இந்தச் சட்ட முன்வடிவை மேலும் ஆய்ந்து முடிவெடுக்க வேண்டும். நான் சொல்லியுள்ள நிலைமைகளைப் பற்றியெல்லாம் நிதானமாகப் பரிசீலிக்க வேண்டும். அவசரத்தில் இதைக் கொண்டு வந்திருக்கிறார்கள். அன்றைக்கு இருந்த சூழ்நிலையில் ஒருவேளை இது அவசரமாகக் கொண்டு வரப்பட்டிருக்கலாம். அல்லது அவசரச் சட்டமாகச் செயல்படுத்த வேண்டிய அவசர நிலையை அரசுக்கு அது உருவாக்கியிருக்கலாம். ஆனால் இன்றைக்கு அத்தகைய ஒரு அவசரச் சூழ்நிலை இல்லையாதலால் அல்லது அந்த அவசரச் சட்டம் கொண்டு வரப்பட்டதன் நோக்கமோ, அவசரமோ முடிந்துவிட்ட நிலையில் அரசு நிதானமாக ஆராய்ந்து ஒரு முடிவுக்கு வர வேண்டும். இதிலுள்ள பல்வேறு சங்கடங்களை, விளைவுகளை நல்ல முறையில் ஆய்ந்து, அலசிப் பார்த்து ஒரு நல்ல சட்டத்தை, முறையான சட்டத்தை நிறைவேற்ற வேண்டியது நம்முடைய கடமை. அப்படிப்பட்ட ஒரு நல்ல சட்டத்தை நிறைவேற்றுவதற்கு வாய்ப்பளிக்கின்ற வகையிலே இந்தச் சட்ட முன்வடிவை ஒரு பொறுக்குக் குழுவுக்கு, இந்த அவையினுடைய அனைத்துக் கட்சி உறுப்பினர்களும் கொண்ட குழுவுக்கு அல்லது அரசு நினைக்கின்ற ஒரு குழுவுக்கு அனுப்பி இதை முழுமையாக அலசி, ஆராய்ந்து ஒரு முடிவுக்குக் கொண்டுவர வாய்ப்பு தர வேண்டும். அப்படிச் செய்வதன் மூலம்தான் இந்தச் சட்டம் தன்னுடைய நோக்கத்தை ஈடேற்றும். எதுவாக இருந்தாலும் இந்த அரசுக்கு ஒன்றைத் தெளிவாகச் சொல்கிறேன். சுதந்திரம் பெற்ற நாட்டிலே இருக்கின்ற எல்லோரையும் மீண்டும் அடிமைகளாக ஆக்குவது நல்லதல்ல. அந்நியன் நம்மை ஆண்டால் மட்டும்தான் நாம் அடிமை என்பதல்ல. நம்மை நாமே அடிமையாக்குவதும் அடிமைத்தனம் தான். இப்படியெல்லாம் நாமே நம்மை அடிமையாக்கிக்கொள்வது ஜனநாயகத்திற்குப் புறம்பான செயல், அது நல்லதும் அல்ல, சுதந்திரம் வாங்கித் தந்தவர்களுக்கும் நல்லது செய்வதாகாது, நல்லதாக அமையாது என்று சொல்லி அமைகிறேன்.

*திரு. ஆ. நல்லசிவன்: தலைவரவர்களே, இந்த மசோதாவை, எங்கள் கட்சியின் சார்பிலே நான் எதிர்க்கிறேன். முதலிலே, இந்த மசோதாவைப் பொறுத்தவரையில், இதனுடைய நோக்கத்தை நான் ஆட்சேபிக்கிறேன். கிளர்ச்சி செய்யும் உரிமை இந்த நாட்டிலே யாருக்கும் இருக்கக்கூடாது என்று இந்த அரசு நினைக்கிறதா? அதாவது, எனக்குத் தெரிந்தவரையில், தமிழக அரசைப் பொறுத்தவரையில், கிளர்ச்சி எதுவுமே செய்யக் கூடாது என்கிற முறையில்தான் ஆளுநர் உரையிலும் சொல்லியிருக்கிறார்கள். 1972 ஆம்





ஆண்டிலே அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் ஆரம்பிக்கப்பட்ட காலத்தில் அவர்களுக்கு திராவிட முன்னேற்றக் கழகம் செய்தது தவறு, மாறுபாடானது என்று தோன்றியவுடனே கிளர்ச்சி செய்ய ஆரம்பித்தார்கள். அப்படி அவர்கள் செய்ததெல்லாம் சட்டப்பூர்வமான காரியங்களா? அன்றைக்கு இருந்த சட்டங்களை மீறித்தான் அதைச் செய்தார்கள். அன்றைக்கு இருந்த எம்.எல்.ஏ.-க்கள் எல்லாம் ராஜிநாமா செய்ய வேண்டுமென்று கிளர்ச்சி செய்தார்கள். அப்படிச் செய்தது சட்டத்திற்கு உட்பட்ட ஒன்றா? சட்டமன்ற உறுப்பினர்கள் ஒரு முறை தேர்ந்தெடுக்கப்பட்டால், 6 வருடம் வரை உறுப்பினர்களாக இருக்கலாம் என்பது சட்டப்படி உள்ள மரபு. அப்படி உரிமை இருந்தும் கூட எம்.எல்.ஏ. க்கள் எல்லாம் ராஜிநாமா செய்ய வேண்டுமென்று கூறி ஆட்களைத் திரட்டிச்சென்று உறுப்பினர்களுடைய வீடுகளுக்கு முன்னால் மறியல் செய்தார்கள். அவர்களுடைய வீடுகளுக்குச் சென்று மனு கொடுத்தார்கள். சட்டப்பூர்வமாகப் பார்த்தால், அது கூட தவறு தானே. 5 ஆண்டு காலம் இருக்கலாம் என்பது சட்டப்படி உள்ளது. அப்படி இருக்கும் போது, ஏன் ராஜிநாமா செய்ய வேண்டுமென்று கிளர்ச்சி செய்தார்கள்? நம்முடைய நாட்டிலே ஒரு ஆட்சி நடைபெறுகிறது என்றால், மக்களுக்கு உள்ள குறைகளை எடுத்துச் சொல்ல, எதிர்க்கட்சிகளுக்கு உள்ள குறைகளை எடுத்துச் சொல்ல உரிமை இருக்கிறது, கிளர்ச்சி செய்ய உரிமை இருக்கிறது. மக்களுக்கு இருக்கின்ற அந்த உரிமையைப் பறிப்பது சரியல்ல. அன்றைக்கு சட்டத்திற்கு விரோதமாக பொதுமக்களின் ஆதரவுடன் கிளர்ச்சி செய்தார்கள். அது அன்றைக்கு அவர்களுக்கு நியாயமாகப்பட்டது. ஆனால் இன்றைக்கு அதுபோல் யாராவது கிளர்ச்சி செய்தால், அது சட்டவிரோதமானது என்று கருதுகிறார்களா? வரி கொடா இயக்கத்தைச் சரியில்லையென்று இந்த அரசு சொல்லுகிறது. உள்ளபடியே வரி கொடா இயக்கத்தை முதன் முதலில் துவக்கியது மகாத்மா காந்தியடிகள் தான். யாருக்கு எதிராக அவர் வரி கொடா இயக்கத்தைத் துவக்கினார்? அந்நிய ஏகாதிபத்தியத்துக்கு எதிராக மகாத்மா காந்தியடிகள் வரி கொடா இயக்கத்தைத் துவக்கினார். இன்றைக்கு நாட்டிலுள்ள நிலப்பிரபுக்களுக்கு எதிராக, ஏகபோக முதலாளிகளுக்கு எதிராக ஏழையெளியவர்கள் கிளர்ச்சி செய்ய உரிமை இல்லையா? வரி கொடா இயக்கத்தில் ஈடுபடுபவர்களுக்கு 5 வருட ஜெயில் தண்டனை என்று சொல்வது தவறு. அப்படி 5 வருடம் உள்ளே போடுவோம் என்று சொல்வது நீங்களே ஏற்றுக்கொள்ளும் மகாத்மா காந்தியடிகளுடைய கொள்கைக்கு விரோதமான செயல். வரி கொடா இயக்கம் என்பது சாத்வீக,

அஹிம்சா போராட்டத்துக்கு உட்பட்ட ஒன்று. அஹிம்சா முறையில் ஏற்பட்ட உச்சகட்ட போராட்டம்தான் 'வரி கொடா இயக்கம் என்பது. நிதி பிரச்சினையைப் பொறுத்தவரையில், அரசுக்கெதிராக எந்த நபரும் கிளர்ச்சி செய்யக் கூடாது என்று இந்த அரசு எதிர்பார்க்கிறதா? சட்டமன்றத்தில் மட்டும் வாதாடினால் போதும் என்று அரசு நினைப்பது சரிதானா? ஆளும் கட்சி எதிர்க்கட்சியாக இருந்தபோது கிளர்ச்சி செய்யும் உரிமை வேண்டும். ஆனால் அதே கட்சி ஆளும் கட்சியாக வந்தவுடனே நாட்டு மக்களுக்குக்

(பிற்பகல் 4-30)

கிளர்ச்சி செய்ய உரிமை இல்லையா? அடுத்தபடியாக, இன்னொரு விஷயத்தையும் நான் சொல்ல விரும்புகிறேன். இந்தமாதிரி கிளர்ச்சி பண்ணவேண்டிய அவசியம் வந்திருக்கிறது என்பது நடைமுறையிலே தெரிகிறதா? இல்லையா? 63 கோடி ரூபாய் விவசாயிகளின் கூட்டுறவுக் கடனை இந்த அரசு தள்ளுபடி செய்திருக்கிறது. அதுகூட, வறட்சி ஏற்பட்டவுடனே, வெள்ளம் ஏற்பட்டவுடனே, புயல் ஏற்பட்டவுடனே இந்த அரசு தானாகவே முன்வந்து அதை அறிவிக்கவில்லை. போராட்டத்தைப்பற்றி எவ்வளவுதான் மாறுபட்ட கருத்து இருந்தாலும், இந்தச் சலுகையைக் கூட விவசாயிகள் போராடித்தான் பெற்றார்கள். இன்னும் இதுபோன்ற நிலைமைகள் இருப்பதால்தான், விவசாயிகள் நாயுடு அவர்களின் பின்னாலே போய்க் கொண்டிருக்கிறார்கள். இந்தமாதிரி நிலைமைகளை வளரவிடுவதற்குப்பதிலாக, ஏழை விவசாயிகளின் கஷ்டங்களை, துன்பங்களைப் போக்க இந்த அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். நான் அன்றைக்கே நிலைமைகளை எடுத்துச் சொன்னேன். திரு. நாராயணசாமி நாயுடுவால் எந்த அளவுக்கு இந்த நிலைமைகளை உருவாக்க முடியும் என்று சொன்னார்கள். 1980 பிப்ரவரிக்கு பிறகு ஆளும் கட்சியினர் அவர்களுக்கு வாக்குறுதி கொடுத்தார்கள். இன்றைக்கு 63 கோ ரூபாய் தள்ளுபடி செய்ததற்குப் பிறகும் கூட இந்தக் கிளர்ச்சி ஏற்பட்டிருக்கிறது. இரண்டு தினங்களுக்கு முன் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பேசும்போது கூட, திரு. இராமமூர்த்தி அவர்களைப் பார்த்து, "இது சிறு விவசாயிகளுடைய கோரிக்கை என்று நீங்கள் ஒத்துக் கொள்கிறீர்களா?" என்று கேட்டார்கள். அவர்களுக்கு இந்த உதவிகள் முதலிலேயே வழங்கியிருந்தால், இந்த அளவுக்கு நிலைமைகள் வந்திருக்காது. ஆனால், இப்பொழுது கொண்டு வந்திருக்கக்கூடிய இந்தச் சட்ட முன்வடிவை கிளர்ச்சியே கூடாது என்ற முறையிலே அவர்களைப் பயப்படுத்துவதற்காகத்



தான் கொண்டு வந்திருக்கிறார்கள். என்ன காரணத்தைக் கொண்டு, இப்படியொரு அவசரச் சட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறார்கள்? வரி கொடுக்கக் கூடாது என்று ஏன் பேசக்கூடாது? அவர் இப்போது ஆளுங்கட்சியாக இருக்கிறார்கள். அவர் எதிர்க்கட்சியாக இருந்தபோது, கிளர்ச்சி செய்யவில்லையா? அப்போது இருந்த சட்டத்தை அவர் மீறவில்லையா? அவர் தமிழ் நாட்டிலே ஆட்சிப் பொறுப்புக்கு வந்துவிட்ட காரணத்தால், தமிழ் நாட்டு மக்களுக்குக் கிளர்ச்சி செய்யவேண்டிய அவசியம் இல்லையா? அல்லது அவர்களுக்கு உரிமை இல்லையா? இப்போது உருவாகிக்கொண்டிருக்கும் கிளர்ச்சி அவர்கள் நினைப்பது போல இல்லை. கிளர்ச்சியே உருவாகக் கூடாது என்று எந்த அடிப்படையில் அவர்கள் எதிர்பார்க்கிறார்கள்? தயவு செய்து அந்தப் போக்கை அவர் தவிர்க்க வேண்டும். திரு. நாராயணசாமி நாயுடுவைக் காட்டி, தமிழ் நாட்டு மக்களுக்கு இருக்கும் நிரந்தரமான கிளர்ச்சி உரிமையை அரசு பறிக்கக்கூடாது. சமீபத்தில்தான் அரசு அலுவலர்கள் அங்கெல்லாம் சென்று வரி வசூலிக்கிறார்கள். இப்படி வரி வசூல் செய்ய வேறு வழி இருக்கும்போது, ஏன் இப்படிச் செய்கிறீர்கள்? கிராமம் கிராமமாகச் சென்று வசூலித்தார்களே. அந்த முறையைக் கையாளலாமே, அரசினர் அடிக்கடி சொல்லக்கூடிய மகாத்மா காந்தி அவர்களின் கொள்கையை இந்தச் சட்ட முன்வடிவு அவமதிப்பதாகாதா அடக்குமுறை மூலமாக, கடுமையான தண்டனைகள் மூலமாக நாட்டுமக்களைச் சந்திக்கலாம் என்று அரசு நினைத்தால், பின்னர் நிச்சயமாக இப்படிச் செய்தது தவறு என்று உணரவேண்டிய காலம் வரும். மக்களுக்கு இருக்கும் உரிமையில் கை வைக்கக்கூடாது. இந்தச் சட்டத்தை வாபஸ் வாங்க வேண்டும். இந்தச் சட்டம் இந்த அரசுக்குக் கெட்ட பெயர் தரப்போகிறது. இந்தச் சட்டம் மக்களுக்கு எதிராக, ஜனநாயக உரிமைக்கு எதிராக இருக்கிறது என்று கூறி, இதை வாபஸ் வாங்க வேண்டுமென்று கூறி, இதைக் கொண்டுவந்தால், தொடர்ந்து எதிர்ப்பேன் என்று கூறி அமைகிறேன் வணக்கம்.

திரு. ம. சங்கரலிங்கம் : தலைவர் அவர்களே, இந்த அவையிலே கொண்டு வந்திருக்கக்கூடிய ஜனநாயக உரிமையற்ற, ஜனநாயகத்தையே இல்லாமலாக்குகின்ற இந்தச் சட்ட முன்வடிவை திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் மிக வன்மையாகவும், உறுதியாகவும் நான் எதிர்க்கிறேன். இந்தச் சட்டமுன்வடிவு, நமது அரசியல் சட்டப்படி அடிப்படை உரிமையையே இல்லாமல் ஆக்குகின்ற ஒரு சட்டமுன்வடிவு. சட்டப்படி பார்த்தால், இது செல்லுபடி கூட ஆகாது என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நான் தெரிவித்துக்

கொள்கிறேன். நாட்டில் குறைந்த சட்டங்களை வைத்து ஆட்சி புரிவது தான் ஒரு நல்ல அரசின் இலக்கணமாக இருக்கும். எதற்கெடுத்தாலும் அவசரச் சட்டம் கொண்டு வந்து, அதைப் பிறகு சட்டமாக மாற்றுவதற்கு தனனிடத்திலே இருக்கக்கூடிய வாய்ப்பைப் பயன்படுத்துவதால், ஜனநாயக அடிப்படையிலே இந்த நாட்டில் இருக்கக்கூடிய மக்கள் ஆளும் கட்சியினரை நம்பி ஒப்படைத்த பெரும் பொறுப்பைத் தவறாகப் பயன்படுத்தி, மக்களுடைய நம்பிக்கைக்குப் பாத்திரமாக இருக்க வேண்டிய அரசினர் அதற்கு மாறாக அந்த நம்பிக்கையை இழந்து வருகிறார்கள் என்பதை நான் சுட்டிக்காட்டக் கடமைப் பட்டிருக்கிறேன். இங்கு கொண்டு வரப்பட்டிருக்கும் இந்தச் சட்டமுன்வடிவின் நோக்கம் நாட்டில் வரி கொடுப்பவர்களை யாராவது தடுத்தால், அவர்கள் மீது சட்டப்படி நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதுதான். இந்தச் சட்டம் இல்லாமலேயே அந்த நடவடிக்கையை எடுக்க முடியும். யார் வரி தரவில்லையோ அவர்களிடமிருந்து வரியை வசூல் செய்வதற்கு 'ரெவின்யூ ரெக்கவரி ஆக்ட்'டு உபயோகப்படுத்தலாம். வசூல் செய்வதுதான் நோக்கமாக இருக்கிறது. வரி கட்டாதே என்றோ, கொஞ்சம் கழித்துத்தான் கட்ட வேண்டும் என்றோ, இன்ஸ்டால்மென்ட்டில் கட்டவேண்டும் என்றோ, தள்ளுபடி செய்ய வேண்டும் என்றோ ஒருவரும் பேசக்கூடாது என்று ஒரு தடையுத்தரவு போடுவதுதான் அரசினுடைய நோக்கம். உண்மையிலேயே, ஜனநாயகப் பாதையைவிட்டு சர்வாதிகாரப் பாதைக்குப் போய் சர்வாதிகாரத்துக்குக் காவலர்கள் என்ற பெயருக்கு அரசினர் இன்றையதினம் வந்திருக்கிறார்கள். ஒரு அவசரச் சட்டம் போட்டார்கள். அதுகூடத் தேவையில்லை. 10 ஆயிரம் பேரைக் கைதுசெய்ய, அவசரச் சட்டம் தேவையில்லை. 'ஆன்டி சோசியல் ஆக்ட்' என்ற அடிப்படையில் கூட கைது செய்ய முடியும். ஜனநாயக ரீதியில் இப்போது வைத்திருக்கும் இவ்வளவு சட்டங்கள் இருக்கும்வரையில், அரசினரை யாரும் ஒன்றும் செய்துவிட முடியாது. 'தேசிய பாதுகாப்புச் சட்டம்' இல்லாமலேயே திரு. நாராயணசாமி நாயுடுவைக் கைதுசெய்து கோர்ட்டிலே கொண்டுபோய், ரிமாண்ட் வாங்கி வைத்துக்கொள்ளலாம். இவ்வளவும் இருக்கும்போது, ஜனநாயக நாட்டிலே, ஜனநாயகத்தைப் 'பேசிக் கொண்டே' ஆட்சிபுரியும் ஆளும் கட்சியினர் அதற்கு மாறான இந்தச் சட்ட முன்வடிவைக் கொண்டு வருகிறார்கள். ஒருவேளை இந்த விவசாயப் போராட்டத்திற்காக ஒரு அவசரச் சட்டமாகப் போட்டு, இதுபோல கொண்டு வந்த மற்ற சட்டங்களையெல்லாம் தானாகவே சாகவிட்டதுபோல இதையும் சாக விடுவார்கள் என்று நம்பினோம். ஆனால் இப்போது இதை அரசு சட்ட



முன்வடிவாகக் கொண்டு வந்து, இரண்டு அவைகளிலேயும் நிறைவேற்றி, அவர்கள் நிரந்தர ஜனநாயக விரோதிகள், சர்வாதிகாரச் சின்னங்கள், மக்களின் அடிப்படை உரிமையையே இல்லாமல் ஆக்கியவர்கள் என்ற பெருமைக்கு ஆளானவர்கள் என்ற பெருமையை அவர்களோடு இணைந்துக் கொண்டிருக்கிறார்கள் என்று நான் நினைக்கிறேன். நான் சொல்வதாக இருந்தால், எதிர்க் கட்சியைச் சார்ந்தவர் சொல்கிறார் என்று ஆளும் கட்சியினர் நினைக்கலாம். ஆனால் அவர்களை ஆட்சி பீடத்திற்கு அமர்த்துவதற்கு உறுதுணையாக இருந்த மார்க்கிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி மெம்பர் அவர்கள் ஆலோசனை சொல்லியிருக்கிறார்கள். அடுத்துவரும் தேர்தலில் கூட அவர்களுக்குத் துணையாக இருக்கப்போகும் அவர் உரிமையோடும், உணர்வோடும் சொல்லிய அந்த ஆலோசனை அவர்களுடைய காதில் எப்போதும் இருக்க வேண்டும். ஜனநாயக நாட்டிலே வரிவிதிப்பு மிகவும் இன்றியமையாதது. வரிகொடுக்க வேண்டியது மிகவும் கட்டாயமான ஒன்று. அப்போதுதான் ஆட்சி இயந்திரம் இயங்க முடியும். ஆனால், சில நேரங்களில் வரிவிதிப்பு குறித்த கொள்கை மாற வேண்டும். நாம் இன்னும் தவறானதொரு வரிவிதிப்பு முறையையே வைத்துக்கொண்டிருக்கிறோம். அரசு அமைக்கப்பட்டு ஆட்சிமுறை கொண்டு வந்தபிறகு, முதலிலே வருவாயாக இருந்தது நிலமும், நிலத்திலிருந்து வரும் வருமானமும்தான். அது குறைந்து வந்து, நம்முடைய வரித்தொகையில் 5 சதவீதமாகத்தான் இப்போது இந்த நிலவரி இருக்கிறது. அதை ரத்து செய்வது மிகவும் இன்றியமையாதது. நெற்பயிர் செய்பவர்களுக்கு அரசாங்கம் வரி கொடுக்க வேண்டிய காலம் வரும். அது வரி என்ற பெயரில் இல்லாமல் இருந்தாலும் மானியம், சப்சிடி என்ற முறையில், கொடுக்கவேண்டிய ஒரு காலத்திற்கு நாம் சென்றுகொண்டிருக்கிறோம். ஆலை முதலாளிகளிடமிருந்தும், வேறு பல்வேறு தொழிற்சாலைப் பொருட்களின்மீதும் எக்சைஸ் டியூட்டி போட்டு அதிலிருந்து வரும் வருமானத்தைக் கொண்டு நாட்டை ஆள்வதும், நாட்டிலே இன்றியமையாத தொழிலாக இருக்கக்கூடிய விவசாயத்திற்கு வரியை ரத்து செய்து அந்தத் தொழிலை ஊக்கப்படுத்துவதும் ஆன ஒரு காலகட்டத்

(பிற்பகல் 4-40)

திலே நாம் இருக்கிறோம். நிலவரியைக் கட்டாதவர்கள் மீது இந்தச் சட்ட முன்வடிவைக் கொண்டு வரவில்லை. ஆனால், 'நிலவரியைக் கட்டாதே' என்று தூண்டி விடுகிறவர்கள்மீது இந்தச் சட்டமுன்வடிவு கொண்டு வரப்பட்டிருக்கிறது என்று சொல்லப்பட்டிருக்கிறது. இங்கே நான் பேசுவதேகூட நிலவரி

யைக் கட்டாதே என்று தூண்டுவதாகும். நிலவரியை ரத்து செய்யுங்கள் என்று பேசினால்கூட, அது வரியைக் கட்டாதே என்று தூண்டுவதாகத்தான் அர்த்தம். இங்கே சட்டமன்றத்தில் நாங்கள் பேசுகிறோம் என்றால், அதற்குக் காரணம் வரி விதிப்பு முறையில் ஒரு 'ரேஷனல் திங்கிங்' வேண்டும் என்பதால் தான். ஒரு புரட்சிகரமான சிந்தனை அரசுக்குத் தேவை என்று சுட்டிக் காட்டத்தான் இப்படி இங்கே பேசுகிறோம் என்று பொருள். அரசாங்கத் திற்கு ஆலைகள் மூலமாக வருவாய் வருகிறது, எக்சைஸ் மூலமாக வருவாய் வருகிறது; அந்நியச் செலவாணி மூலமாக வருவாய் வருகிறது, சுற்றுலா மூல மாக வருவாய் வருகிறது என்று சொல்லி இவைகளை வைத்துக்கொண்டு ஆட்சி செய்ய வேண்டும் என்றும், வெறும் நில வரியை நம்பி ஆட்சி செய்ய வேண்டாம் என்றும் சொல்கிறோம். காரணம் விவசாயிகள் உற்பத்தி செய்யும் நெல்லுக்கும் மற்ற விளைபொருள்களுக்கும் இப்போது உற்பத்திச் செலவுக்கு ஏற்ற வகையில் விலை கிடைக்கவில்லை. எனவே ஒரு விவசாயி 10 கோட்டை நெல் பயிரிட்டால் அரசு அவனுக்கு ரூபாய் 50 மானியமாகக் கொடுக்க வேண்டும். 100 கோட்டை நெல் பயிரிட்டால், இன்னும் அதிகமான தொகை கொடுத்து ஊக்குவிக்க வேண்டும் என்ற கருத்தில் இங்கே பேசுகிறோம். இப்படிப் பேசுவதற்குத்தான் இன்றையதினம் இந்த ஆட்சி தடை விதித்திருக் கிறது என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். இங்கே பேசும்போது உறுப்பினர்களான எங்களுக்கு 'இம்யூனிட்டி'—பாதுகாப்பு இருக்கிறது.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : தலைவர் உறுப்பினர்களைப் பாது காக்கிறார்

திரு. ம. சங்கரலிங்கம் : ஆனால் இதே சிந்தனையில் நாங்கள் வெளியே போய் பேசினால், அதுவே தூண்டிவிட்ட குற்றமாகிவிடும்.

திரு. ஜி. சுவாமிநாதன் : எனவேதான் பேசுவதையெல்லாம் சட்டமன்றத் திலேயே பேசுவது நல்லது

திரு. ம. சங்கரலிங்கம் : இப்படிப் பேசக்கூடாது என்று சொல்லுவதற் குப் பெயர்தான் சர்வாதிகாரம். அதை இந்த ஆட்சியாளர்கள் செய்கிறார்கள் என்பதுதான் என்னுடைய குற்றச்சாட்டாகும். இந்த நாட்டில் எத்தனையோ விதமான போராட்டங்கள் நடைபெற்றிருக்கின்றன. மாண்புமிகு உறுப்பினர் திரு. நல்லசிவன் அவர்கள் பேசும்போது, ஒரு கருத்தைச் சொன்னார். இந்த ஆட்சி விவசாயிகளுக்காக ரூபாய் 73 கோடி அளவுக்குக் கடன் தொகையை





ரத்து செய்திருக்கிறது என்றால், அதற்குக் காரணம் திரு. நாராயணசாமி நாயுடு அவர்களின் போராட்டம்தான். அந்தப் போராட்டம்தான் ஆட்சியாளர் களின் சிந்தனையைத் தூண்டிவிட்டது. ஏழை விவசாயிகளின்மீது கருணை காட்டச் செய்து, எதிர்க் கட்சிகளின் ஒத்துழைப்பையும் கேட்கக்கூடிய சூழ் நிலையை உருவாக்கியதே திரு. நாயுடு அவர்களின் போராட்டம்தான். இந்த நிலையில், இத்தகைய உணர்வினை வெளியே எடுத்துச் சொல்வது கூடாது என்று தடைவிதிப்பது மிகவும் தவறாகும்.

கன்னியாகுமரி மாவட்டம் தமிழகத்தோடு வந்து சேர்ந்தபோது, "மணி யங்கரம்" என்ற ஒரு வரி இருந்தது. அதை எதிர்த்து அப்போது மக்கள் போராட்டம் நடத்தி வரி கொடுக்க மறுத்தார்கள். வரி கொடுக்க மறுத்த காரணத்தால், விவசாயிகளின் சொத்தினை அரசாங்கம் ரெவின்யூ ரெக்கவரி ஆக்ட் கீழ் ஏலம் போட முனைந்தது. அப்போது நிலத்தை ஏலம் போட்டால், யாரும் ஏலத்தில் எடுக்கக்கூடாது என்று மக்கள் தீர்மானித்தார்கள். இதன் காரணமாக அரசாங்கத்தில் நிலங்களை ஏலம் விட்டபோது, எடுப்பதற்கு ஆளே இல்லாமல் போய்விட்டது. அப்போது திரு. ஆர். வெங்கட்ராமன் அவர்கள் இங்கே அமைச்சராக இருந்தார். எனவே அதைக் குறித்து இங்கே ஒரு சட்டம் கொண்டு வந்து அது செலக்ட் கமிட்டிக்கு விடப்பட்டு உறுப்பினர்கள் அந்த மாவட்டத்தைச் சுற்றிப் பார்த்து, மக்களின் கருத்தை அறிந்து, இறுதியில் அந்த வரியை அரசு அடியோடு ரத்து செய்தது. இப்படிப்பட்ட நிலையில், ஒரு வரி அநியாய வரியாக இருக்கும்போது, தேவையற்ற பளுவாக இருக்கும்போது, வரி விதிப்பு முறையை மாற்றி யமைக்க வேண்டும் என்று மக்கள் விரும்பினால், அதைப்பற்றிப் பேசவும், அரசு அதை ஏற்காத நிலையில் மக்களிடத்தில் எடுத்துச் சொல்லி அரசுக்கு வரி கொடுக்காதீர்கள் என்று சொல்வதும் ஒரு ஜனநாயக உரிமையாகும். இதைச் செய்வது அரசாங்கத்தை இயங்க விடாமல் செய்வதற்காக அல்ல. அரசாங்கத்திற்கு வரி செலுத்துவதைத் தடுக்க வேண்டும் என்ற அடிப் படையில் அல்ல. அரசாங்கத்தின் சிந்தனையில் ஒரு மாற்றத்தைக் கொண்டு வர வேண்டும் என்ற அடிப்படையில் இதைச் சொல்கிறோம். இங்கே பேசியும் பயனில்லை என்றால், கூட்டம்போட்டு மக்களிடம் எடுத்துச் சொல்ல வேண்டியிருக்கிறது. அப்படியும் பயனில்லை என்றால், போராட்டத்தின் மூலமே உணர்த்த வேண்டும் என்ற நிலை ஏற்பட்டால், அதையும் செய்வோம். இந்த முறைகளெல்லாம் ஜனநாயக நாட்டில் அங்கீகரிக்கப்பட்ட முறைக

இந்த நாட்டில் எவ்வளவு விவசாயிகள் இருக்கிறார்கள் என்பதை அவைக்கு நான் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். அவர்களுக்கு இந்த அரசு எந்த அளவு நன்மை செய்ய விரும்புகிறது என்பதையும் நான் தெரிவிக்கக் கடமைப் பட்டிருக்கிறேன். இரண்டு தினங்களுக்கு முன்னால், ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் உரையில் பேசிய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஒரு கருத்தைத் தெரிவித்தார்கள். அதை நாம் எண்ணிப் பார்த்தால், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் விவசாயிகளின் மீது எவ்வளவு அக்கறையும் நல்லெண்ணமும் கொண்டிருக்கிறார்கள் என்பது புரியும். சிறிய விவசாயிகளிடம் பெரிய தனவந்தர்கள் குறைந்த அளவு பணத்தைக் கொடுத்துவிட்டு அதிகமான தொகைக்கு பிராமிசரி நோட்டு எழுதி வாங்கிக் கொண்டு அதன் மூலம் இறுதியில் அவர்களின் நிலத்தை எடுத்துக்கொள்கிற நிலைமை உருவாகி யிருக்கிறது ; அப்படிப்பட்ட விவசாயிகளைக் காப்பாற்ற வேண்டிய பொறுப்பு இந்த அரசுக்கு இருக்கிறது என்று தெளிவாகக் கூறியிருக்கிறார்கள். இதன் மூலம், இந்த அரசு அடித்தளத்திலிருக்கும் சிறிய விவசாயிகளைக் காப்பாற்ற விருக்கிறது என்பதைத்தான் நாம் உணர வேண்டும். அதுமட்டுமல்லாமல்

(பிற்பகல் 4-50)

அவர்கள் இங்கே பேசுகின்றபோது விவசாயிகளுக்கு நாங்கள் 42 கோடி ரூபாயைத் தள்ளுபடி செய்திருக்கிறோம் என்று சொன்னார்கள். 42 கோடி ரூபாயைத் தள்ளுபடி செய்யும்போது இங்கே "அதற்கு நிதியாதாரமில்லை, ஆனால் 42 கோடி ரூபாயை ஒதுக்கியிருக்கிறீர்களே" என்றெல்லாம் கேட்டார்கள். இன்றைக்கு அந்த 42 கோடி ரூபாய் 50 கோடி ரூபாயாக ஆகி, பிறகு 73 கோடி ரூபாயாக ஆகியிருக்கிறது. 73 கோடி ரூபாய் மட்டுமல்லாமல், அதற்கு மேல் எவ்வளவு ஆனாலும், விவசாயிகளுக்குச் செய்ய இந்த அரசு தயாராக இருக்கிறது என்று இங்கே முதலமைச்சர் சொன்னார்கள். அதை யெல்லாம் சொன்ன பிறகுதான, இந்தச் சட்ட முன்வடிவு இங்கே வந்திருக்கிறது. சட்ட முன்வடிவை மட்டுமே படித்துவிட்டு, அதிலே இருக்கின்ற ஒவ்வொரு பிரிவை மட்டும் படித்துவிட்டு அதிலே இருக்கின்ற அர்த்தத்தைப் பார்த்துவிட்டுப் பேசுகின்ற போதுதான் இந்த அரசின் முக்கியமான நோக்கம், முக்கியமான கடமை ஆகியவற்றையெல்லாம் பேசவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன். ஆனால் இங்கே பேசுகின்றபோது ஒன்றைச் சொன்னார்கள். திரு. நாராயணசாமி நாயுடு அவர்களின் கிளர்ச்சிக்குப் பிறகுதான் இந்தச் சட்ட முன்வடிவை நாங்கள் கொண்டு வந்தோம் என்று சொன்னார்கள். அவருடைய கிளர்ச்சிக்குப் பிறகுதான் இந்த



வரியைத் தள்ளுபடி செய்தோம், விவசாயிகளுக்கு நன்மை செய்தோம் என்றெல்லாம் சொல்லுவது முற்றிலும் உண்மைக்கு மாறானது. பின்னே நான் சொல்லுகிறபோது இவையெல்லாம் உறுப்பினர்களுக்கு நன்றாகத் தெரியும் என்பதைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

அது மட்டுமல்லாமல், இந்தச் சட்ட முன்வடிவைக் கொண்டு வருவதற்கு முன்னாலே விவசாயச் சங்கங்களைச் சேர்ந்தவர்களையும், மற்றவர்களையும் பல முறை தமிழக முதல்வர், புரட்சித் தலைவர், அழைத்துப் பேசி அரசின் எண்ணங்களைச் சொன்னார்கள். "விவசாயிகளுடைய கடன் சுமைகளைப் போக்குவதற்கு நாங்கள் தயாராக இருக்கிறோம்" என்று சொன்னார்கள் என்பது உறுப்பினர்களுக்கெல்லாம் தெரியும். சொன்னது மட்டுமல்லாமல், அவற்றை ஏற்றுக்கொண்டு, ஏற்றுக்கொண்டபடி பின்னாலே அதைச் செய்தார்கள். ஜனநாயகத்தைக் காப்பாற்ற வேண்டும் என்பதற்காகத்தான் இந்தச் சட்ட முன்வடிவைக் கொண்டு வந்திருக்கிறோம். இன்றைக்கு தமிழ் நாட்டில் எவ்வளவு விவசாயிகள் இருக்கிறார்கள் என்று பார்த்தால் 50 இலட்சம் பேர்கள் இருக்கிறார்கள். இந்த 50 இலட்சம் பேர்களில் எவ்வளவு பேர் பெரிய விவசாயிகள், எவ்வளவு பேர் நடுத்தர விவசாயிகள், எவ்வளவு பேர் சிறு விவசாயிகள் என்று எண்ணிப் பார்க்க வேண்டும்.

**திரு ஆ. நல்லசிவன் :** தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் சிறு விவசாயிகளைப்பற்றிக் கூறுகிறார்கள். ஒரு காலத்தில் வரி கொடா இயக்கத்தில் சிறு விவசாயிகள் ஈடுபடுகிறபோது, அவர்களைச் சும்மா விட்டுவிடுவார்களா ? பெரிய விவசாயிகள் பேரில் மட்டும் நடவடிக்கை எடுப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் :** 50 இலட்சம் பேரில் 5 இலட்சம் பேர்கள் தான் பெரிய விவசாயிகள். பெரிய விவசாயிகளிடமிருந்து, சிறு விவசாயிகளையும், நடுத்தர விவசாயிகளையும் காப்பாற்ற வேண்டிய பொறுப்பு ஜனநாயகத்தில் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசுக்கு இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இன்றைக்கு வரி கொடுக்கவில்லை, கடனைத் திருப்பிக் கட்டவில்லை என்றால், அவைகள் ஆண்டுக்காண்டு அதிகரித்துப் போய், இன்றைக்கு ஆயிரம் ரூபாய் கொடுக்க வேண்டும் என்பது பிறகு ஐந்தாயிரம் ரூபாய், பத்தாயிரம் ரூபாய் என்று பெருகிவிடும். பெரிய விவசாயி இந்தப் பணத்தை பேங்கில் போட்டு வைத்திருப்பான். அரசு ரெவின்யூ ரெக்கவரி ஆக்டின்படி வசூல் செய்ய முற்படும்போது, பெரிய விவசாயி

னாகும். அத்தகைய ஜனநாயக முறைகளை இன்றைய ஆட்சியாளர்களான நீங்கள் ஒழிக்கிறீர்கள் என்பதுதான் என்னுடைய குற்றச்சாட்டாகும். இதன் காரணமாக ஏற்படவிருக்கும் சிறுமையும், பெருமையும் ஆளுங் கட்சியை சாரப் போகிறது.

அதுமட்டுமல்ல. இந்தச் சட்டம் நிறைவேறுவதன் மூலம் இன்னொரு அபாயமும் இருக்கிறது. இப்போதே வழக்குகளைப் போடும்போது போலீஸ்காரர்கள் ஊரில் உள்ள அனைத்து செக்ஷன்களையும் போடுகிறார்கள். இனி அரசியல்வாதிகளின் மீது வழக்குப் போட வேண்டுமென்றால், இவர் வரி கொடுக்க வேண்டாம் என்று சொன்னார் என்று பொய் வழக்குப் போடுவார்கள். ஒரு முனிசிபல் பில் கலெக்டர் யார் மீதாவது வழக்கு தொடர வேண்டுமென்றால்கூட இவர் வரி கொடுக்க வேண்டாம் என்று சொன்னார்' என்று சொல்லி வழக்குப் போடலாம். இதைப்போலவே பஞ்சாயத்து வரி கட்டாதே என்று சொன்னார் என்று சொல்லியும் வழக்குப் போடலாம். இப்படிச் செய்வதன் மூலம் இந்தச் சட்டம் இந்த அரசை ஒரு ஜனநாயக விரோதியாக ஆக்கப் போகிறது. இதன் மூலம் இந்த ஆட்சி ஆட்டம் காணத்தான் இந்தச் சட்ட முன்வடிவு உதவப் போகிறதே தவிர, இது அவர்களுக்குத் தீமையாக முடியப் போகிறதே தவிர, வேறொன்றுமில்லை. எனவே இதில் எச்சரிக்கையாகச் சிந்தித்து, சட்ட முன்வடிவை நிறைவேற்றுகிற எண்ணத்தைக் கைவிட வேண்டும் என்று மிக அன்போடும் உரிமையோடும் கேட்டுக் கொள்கிறேன்.

இது ஒரு ஜனநாயக விரோதமான சட்டம். சட்டப் பேரவையில் இந்தச் சட்ட முன்வடிவு நிறைவேற்றப்பட்டது. இங்கே மேலவையில் ஆளுங் கட்சிக்கு இருக்கிற பெரும்பான்மை காரணமாக இது நிறைவேறும் என்ற நம்பிக்கை அவர்களுக்கு இருப்பதால், நாங்கள் சொல்லும் இந்தச் சிந்தனை அவர்கள் காதில் ஏறாது என்றே நான் நினைக்கிறேன். காதில் ஏறுகிறது என்று சொல்லுகிறார்கள். மிகவும் மகிழ்ச்சி. எனவே இந்தச் சட்ட முன்வடிவைக் கைவிட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இந்த வேண்டுகோளை ஏற்கத் தயாராக இல்லை என்றால், மாண்புமிகு உறுப்பினர் திரு. இராமமூர்த்தி அவர்கள் கூறியதைப் போல், இதை ஒரு பொறுக்குக் குழுவுக்கு விட்டாவது நாடு முழுவதும் அந்தக் குழு சென்று மக்களின் கருத்தை அறிந்து வர வேண்டும் என்று கூறி, இந்தச் சட்ட முன்வடிவை நான் வன்மையாக எதிர்க்கிறேன். மாண்புமிகு வருவாய்த்



துறை அமைச்சர் அவர்கள் எங்களையெல்லாம் விட மிகவும் அதிகமான ஜனநாயக உணர்வு உள்ளவர்கள். எனவே அவர் இந்தக் கருத்துக்களை ஏற்று, இந்தச் சட்ட முன்வடிவைக் கைவிடுவார் என்ற நம்பிக்கையைத் தெரிவித்து, இச்சட்ட முன்வடிவை எதிர்த்து அமைகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் :** மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, அவையின் முன்னுள்ள சட்ட முன்வடிவைப் பற்றிய கருத்துக்களை, மாண்புமிகு எதிர்க் கட்சி உறுப்பினர்கள் இங்கே தெரிவித்திருக்கிறார்கள். அவர்கள் அனைவரும் இந்தச் சட்ட முன்வடிவை மட்டுமே படித்துவிட்டு அவர்களுடைய கருத்துக்களைத் தெரிவித்திருக்கிறார்கள் என்பதில் ஐயமில்லை. அதுதான் நியாயம் என்றாலும், இந்தச் சட்ட முன்வடிவோடு, இந்த ஆட்சி அமைந்த பிறகு எப்படிப்பட்ட சட்ட முன்வடிவுகளையெல்லாம் நிறைவேற்றியிருக்கிறது என்பதையும், விவசாயிகளுக்கு எப்படிப்பட்ட நன்மைகளையெல்லாம் இந்த அரசு செய்திருக்கிறது என்பதையும் ஒன்றன் பின் ஒன்றாக எண்ணிப் பார்த்து அதோடு இந்தச் சட்ட முன்வடிவையும் சேர்த்துப் பார்த்திருந்தால், நிச்சயமாக இந்தச் சட்ட முன்வடிவை அவர்கள் வரவேற்றிருப்பார்கள். இந்த அரசு விவசாயிகளுக்காக என்னென்ன நன்மைகளையெல்லாம் செய்திருக்கிறது என்பதை எல்லோரும் அறிவார்கள். இதற்கு முன்னால் இருந்த எந்த அரசைக் காட்டிலும் இந்த அரசு விவசாயிகளிடத்தில் நல்ல நம்பிக்கை வைத்து, அவர்கள் படுகிற கஷ்டத்தை உணர்ந்து, அவர்களின் நன்மைக்காக என்றே பல சட்ட முன்வடிவுகளைக் கொண்டு வந்து நிறைவேற்றியிருக்கிறது. அதோடு, அண்மையில் வரிச் சலுகைகளையும் கொடுத்திருக்கிறது. எனவே இவற்றையெல்லாம் எண்ணிப் பார்த்து, இந்தச் சட்ட முன்வடிவை ஆராய்ந்து பார்த்தால், இதை எதற்காகக் கொண்டு வந்திருக்கிறோம் என்பது அவர்களுக்குப் புரியும்.

ஒரு ஜனநாயக நாட்டில் ஜனநாயக முறைப்படி தேர்ந்தெடுக்கப்பட்ட ஓர் அரசு இப்படிப்பட்ட ஒரு சட்டத்தைக் கொண்டு வருகிறது என்றால், அத்தகைய கட்டாயத்திற்கு அந்த அரசு தள்ளப்பட்டிருக்கிறது என்பதுதான் அர்த்தமாகும். நாட்டிலுள்ள மைனாரிட்டிகள், மெஜாரிட்டி வகுப்பினர் ஆக, எல்லோருக்கும் ஜனநாயகம் பயன்பட வேண்டும். அதே முறையில் ஜனநாயக முறைப்படி தேர்ந்தெடுக்கப்பட்ட அரசும் நாட்டின் அனைத்துப் பகுதி மக்களையும், அனைத்துப் பிரிவு மக்களையும் காப்பாற்ற வேண்டும்; எல்லோருக்கும் பாதுகாப்புத் தர வேண்டும். இந்த வகையில்தான் அரசு இன்றையதினம் இந்தச் சட்ட முன்வடிவைக் கொண்டு வந்திருக்கிறது என்பதை நான் இங்கே தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

பேங்கிலிருந்து பணத்தை எடுத்து கட்டி விடுவான். சிறு விவசாயி 50 ரூபாயாக இருந்தால் கட்டுவான். நான்கைந்து ஆண்டுகளான பிறகு ஆயிரமாயிரம் ரூபாயைக் கட்டுவது என்றால், சிறு விவசாயிகளுக்குக் கஷ்டம். சில நேரங்களில் அப்படிக் கட்டுவதற்கு அவர்கள் தயாராக இருக்கிறபோது, கட்டக்கூடாது என்று தடுக்கிறார்கள். சமுதாயக் கட்டுப்பாடு, ஊர்க் கட்டுப்பாடு ஆகியவற்றுக்குப் பயந்து அவர்கள் கட்டமுடியாத நிலையை ஏற்படுகிறது என்பதையெல்லாம் நாம் எண்ணிப் பார்க்க வேண்டும். அவர்களை அந்த இக்கட்டிலிருந்து காப்பாற்ற வேண்டிய பொறுப்பு ஜனநாயக முறையில் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசுக்கு இருக்கிறதா இல்லையா என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். இவற்றை எண்ணிப் பார்த்தால், அவர்களைக் காப்பாற்ற வேண்டிய கடமை அரசுக்கு இருக்கிறது என்பது உறுப்பினர்களுக்கு நன்றாகத் தெரியும்.

இங்கே பேசுகிறபோது இந்திய மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்த தலைவர் திரு. நல்லசிவன் அவர்கள், 500 பேர்கள் சேர்ந்து வரி வசூலைச் செய்தார்கள் என்று சொன்னார்கள். அது முற்றிலும் உண்மைக்கு மாறானது என்பதைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன். 500 பேர் செல்லாமலேயே அவர்கள் கொடுத்திருக்கிறார்கள் என்றால், அப்படிக் கொடுத்தவர்களில் பெரும்பாலானவர்கள் சிறு விவசாயிகள்தாம் என்பது எல்லோருக்கும் தெரியும். இந்தச் சட்ட முன்வடிவு நிறைவேற்றப்பட வேண்டுமென்று நாங்கள் சொல்லுகிறபோது, இந்த அரசு இந்தச் சட்ட முன்வடிவைக் கொண்டு வருவதற்கு முன்னாலே, நான் முதலிலே சொன்னபடி, என்னென்ன காரியங்களைச் செய்திருக்கிறது என்பதை எண்ணிப்பார்த்தால், இந்தச் சட்ட முன்வடிவு நியாயத்தின் அடிப்படையிலேதான் கொண்டுவரப் பட்டிருக்கிறது என்பதை நிச்சயமாக ஏற்றுக்கொள்வார்கள். இதற்கு முன்னாலே எத்தனையோ அரசுகள் இருந்தன. காங்கிரஸ் ஆட்சி இருந்தது, அதற்குப் பிறகு திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி இருந்தது. அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி இருந்தது. ஆனால் முன்பிருந்தவர்கள் எல்லாம், இயற்கை இடர்ப்பாடு நேரிட்டபோது விவசாயிகளுக்கு என்னென்ன நிவாரணங்களைச் செய்தார்கள், இப்போது நாங்கள் எப்படிச் செய்கிறோம் என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும்.

புயல், வெள்ளம் போன்ற இயற்கை இடர்ப்பாட்டால் விவசாயிகளுக்கு நஷ்டம் ஏற்பட்டால், அவர்களுக்கு வருகிற மகசூல் 13 பைசா, அல்லது இரண்டு அணா, அல்லது இரண்டரை களம் விளைந்திருந்தால் மட்டும்



வரியையும், தண்ணீர் தீர்வையையும் முழுவதுமாகத் தள்ளுபடி செய்தார்கள் முன்பு. ஆனால் இன்றைக்கு 37 பைசாவுக்குக் குறைவாக இருந்தால், அதாவது 50 சதவீதத்திற்குக் குறைவாக இருந்தால், அவர்களுக்குத் தண்ணீர் தீர்வை, வாய்தா ஆகியவற்றை பூரணமாகத் தள்ளுபடி செய்து கொடுக்கிறது புரட்சித் தலைவரின் அரசு. அது மட்டுமல்லாமல் புயல், வெள்ளத்தால் பாதிக்கப்படுகிற போது, சிறு விவசாயிகளுக்கு இந்த அரசு உரம் கொடுக்கிறது, மோட்டார் பழுதடைந்திருந்தால், அவற்றைச் சீர் செய்து தருகிறது, சேற்றைத் தூர் எடுக்கிறது, மணல் மேடிட்ட நிலங்களில் மணலை அப்புறப்படுத்துகிறது. இப்படிப்பட்ட நன்மைகளை எல்லாம் புரட்சித் தலைவர் அரசு செய்துவிட்டுத் தான் இந்தச் சட்ட முன்வடிவைக் கொண்டு வந்திருக்கிறது.

தக்காவிக் கடனைப் பொறுத்த வரையில், இது செத்த கடன், இதைத் தள்ளிவிட்டோம் என்று பெருமைப்பட்டுக் கொள்கிறார்களே என்றெல்லாம் சிலர் சொன்னார்கள். இந்த அரசு முதலில் தள்ளி வைத்த தக்காவிக் கடன் 5 கோடி ரூபாய். அதற்குப் பிறகு 20 கோடி ரூபாயாக அது ஆகியிருக்கிறது. இதனால் தமிழகத்தில் நன்மை அடைந்தவர்களின் எண்ணிக்கை 9,15,559. இதற்கு முன்னாலே எந்த அரசு காலத்திலாவது இந்த அளவுக்குக் கடன் தள்ளுபடி செய்யப்பட்டிருக்கிறதா ? இதற்கு முன்னாலே எப்போதும் இல்லை என்பதை நாம் சொல்ல முடியும். தக்காவிக் கடனை இப்படித் தள்ளுபடி செய்தது திரு. நாராயணசாமி நாயுடுவின் கிளர்ச்சிக்கு முன்னாலா, பின்னாலா என்று பார்த்தால், கிளர்ச்சிக்கு முன்புதான்.

கூட்டுறவுக் கடனைப் பொறுத்த வரையில், குறுகிய காலக் கடனாகவும், நீண்ட காலக் கடனாகவும், மத்திய காலக் கடனாகவும் மாற்றி, இரண்டு ஆண்டிலிருந்து 6 ஆண்டுகளுக்குள் கொடுக்கலாம் என்று கொண்டு வந்தது இந்த அரசுதான். அந்தக் கூட்டுறவுக் கடன்களுக்கு இந்த அரசுதான் ஜாமீன் கொடுத்திருக்கிறது. ஜாமீன் என்றால், அந்தப் பணத்தை அவர்கள் கொடுக்கா விட்டால், அரசு கொடுக்க வேண்டும் என்பது எல்லோருக்கும் நன்றாகத் தெரியும். நேற்று முதலமைச்சர் அவர்கள் பேசுகிறபோது, 50 கோடி ரூபாயைத் தள்ளுபடி செய்ததால் நன்மை அடைந்த விவசாயிகளின் எண்ணிக்கை 4,56,000 என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். இன்னும் இது நீளும் என்று சொல்லுகிற போது, மேலும் 9 இலட்சம் பேர்கள் பயனடைவார்கள். மொத்தம் 13 இலட்சம் விவசாயிகள். கூட்டுறவுக் கடனைத் தள்ளுபடி செய்வதால் நன்மை அடைந்திருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன். கூட்டுறவுக் கடன் ஆனாலும் சரி, வேறு எந்தக் கடன் ஆனாலும் சரி, இந்த அரசு எப்படி உதவி செய்திருக்கிறது என்பதை உறுப்பினர்கள் எண்ணிப் பார்க்க வேண்டும்.

பெரிய போராட்டம் நடைபெறுவது மின் கட்டணத்திற்காக. நம்முடைய மாநிலத்தில் போதிய அளவிற்கு மின் உற்பத்தி செய்யப்படவில்லை. அண்டை மாநிலங்களிலிருந்துதான் வாங்குகிறோம். முதலில் எந்த அளவிற்கு வாங்கினோம், இப்போது எந்த அளவிற்கு வாங்குகிறோம் என்பதைப் பார்க்கும்போது 1972, 1973, 1974, 1975, 1976 ஆகிய ஆண்டுகளில் மற்ற மாநிலங்களிலிருந்து மின்சக்தியை வாங்குகிறபோது யூனிட் ஒன்றுக்கு 9 பைசா கொடுத்தோம். ஆனால் விவசாயிகளுக்கு வழங்கியது 14 பைசாவுக்கு. இந்த அரசு வந்த பிறகுதான், எல்லோருக்கும் 14 பைசா என்று இருந்ததை, சிறு விவசாயிகளுக்கு 12 பைசா என்றும் பெரிய விவசாயிகளுக்கு 14 பைசா என்றும் ஆக்கியிருக்கிறது. முன்பு யூனிட் ஒன்றுக்கு 9 பைசா கொடுத்து வாங்கினோம். ஆனால் இப்போது யூனிட் ஒன்றுக்கு 28 பைசா கொடுத்து வாங்குகிறோம். அதாவது முன்பு வாங்கியதைப் போல மூன்று மடங்கு பணம் கொடுத்து இன்றைக்கு வாங்குகிறோம். அன்றைக்கு 9 பைசாவுக்கு வாங்கியது,

(பிற்பகல் 5-00).

ஒரு யூனிட்டுக்கு இன்றைக்கு 28 பைசா. அன்றைக்கு பம்ப்செட் இருக்கிற இடத்திலே, அதைக் கொண்டுபோய் வைக்க ஒரு யூனிட்டுக்கு 45 பைசா இவ்வளவு செலவுசெய்து இன்றைக்கு 12 பைசாவுக்கும், 14 பைசாவுக்கும் மின் சக்தி கொடுத்த அரசுதான், இந்தச் சட்ட முன்வடிவைக் கொண்டு வருகிறது என்றால், இதை நாம் எண்ணிப்பார்க்க வேண்டும். அன்றைக்கு மீட்டர் சார்ஜ் 5 ரூபாயாக இருந்தது. இன்றைக்கு ரூ. 2-ஆக இருக்கிறது. இதைச் செய்த அரசுதான் இந்தச் சட்ட முன்வடிவைக் கொண்டு வருகிறது. அப்படிக் கொண்டுவருகிறது என்றால், இந்தச் சட்ட முன்வடிவினுடைய உண்மை நோக்கம் என்ன என்பதைப்பற்றி நாம் எண்ணிப் பார்க்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அது மட்டுமல்ல, நான் இங்கே சொல்ல விரும்புகிறேன். இன்றிருக்கின்ற ஜனநாயக முறைப்படி, சிறு விவசாயிகளைக் காப்பாற்ற வேண்டியிருக்கிறது. இன்று மெஜாரிட்டியினரிடமிருந்து மைனாரிட்டியினரைக் காப்பாற்ற வேண்டிய நிலைமை இல்லை. ஏன் இந்தச் சட்ட முன்வடிவை இப்போது கொண்டுவர வேண்டும் என்று கேட்டார்கள். அப்படிச் சட்ட முன்வடிவை ஏன் கொண்டுவர வேண்டுமென்று கேட்கிறபோது, வரி கட்டாவிட்டால் தண்டனை கொடுக்க வழி இருக்கிறது என்றார்கள். வரி கட்டாவிட்டால், ஏன் தண்டனை இல்லை? வரி கட்டாமலிருந்தால், அப்பேர்ப்பட்டவர்கள் மீது நடவடிக்கை எடுப்பதற்கு வேறு சட்டங்கள் இருக்கின்றன என்று சொன்னார்கள். நான் சொல்கிறேன்,





வரி கட்டாவிட்டால் அந்தச் சட்டத்தின் மூலம் அவர்களைத் தண்டிக்க முடியாது. ஆனால் வரி வசூல் செய்வதற்கு ரெவின்யூ ரெகவரி ஆக்ட் இருக்கிறது என்பதை நான் ஏற்றுக்கொள்கிறேன். ஆனால் ஒரு சிலர் வரியைக் கொடுக்காதே, வரியைக் கொடுக்காதே என்று சொல்கின்றபோது, வரியைக் கொடுக்க பயப்படுகிறார்கள். அவர்களுக்குச் சமுதாயக் கட்டுப்பாட்டை விதிக்கிறார்கள். அப்படிக் கட்ட பயப்படுகின்றவர்களுக்கு, அந்தக் கட்டுப்பாடுகளிலிருந்து அவர்களைக் காப்பாற்ற, பாதுகாக்கத்தான் இந்தச் சட்ட முன்வடிவு. ஒரு காவல் நிலையம் இருப்பதுபோல இந்தச் சட்ட முன்வடிவு. ஒரு காவல் நிலையம் என்று இருந்தால்தான், தவறு செய்பவர்கள் தவறு செய்யாமல் இருப்பார்கள். ஒரு உதாரணத்திற்குச் சொல்வோமானால், ஒரு ஊரில் ஆயிரம் பேர்கள் இருப்பார்கள், ஒரு ஊரில் 300 பேர்கள் இருப்பார்கள், ஒரு ஊரில் 200 பேர்கள் இருப்பார்கள். அவர்களில் தவறு செய்பவர்கள் எத்தனை பேர்கள் இருப்பார்கள்? ஒரு நான்கைந்து பேர்கள் இருப்பார்கள் என்று வைத்துக்கொள்வோம். குடியிருப்பவர்கள் மெஜாரிட்டி பேர்கள். குற்றம் செய்பவர்கள் மைனாரிட்டி. அந்த ஊரில் மெஜாரிட்டி அளவில் இருப்பவர்கள் குற்றம் செய்பவர்கள் அல்ல. மைனாரிட்டி அளவில் குற்றம் செய்பவர்கள் இருந்தாலும், அங்கு காவல் நிலையம் தேவைப்படுகிறது அங்கே இருக்கின்ற மெஜாரிட்டி மக்களைக் காப்பாற்றுவதற்குக் காவல் நிலையம் இருக்கிறது. அதுபோலவே, மெஜாரிட்டி விவசாயிகளைக் காப்பாற்றுவதற்கு என்று இந்தச் சட்ட முன்வடிவைக் கொண்டுவரவேண்டிய கட்டாயத்திலே இந்த அரசு இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. க. இராமமூர்த்தி :** வரி கட்டவில்லை என்றால், இந்தச் சட்ட முன்வடிவிலே அவர்களைத் தண்டிப்பதற்கு வாய்ப்புகளில்லை என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். வரி கட்டாவிட்டால் நேரடியாகவோ மறைமுகமாகவோ இந்தச் சட்ட முன்வடிவிலே தண்டிப்பதற்கு வாய்ப்பு இருக்கிறது. வரி கட்ட முடியாது அல்லது வரி கட்டவில்லை என்று ஒருவர் மறுத்தால், இன்னொருவருக்கு அது தூண்டுதலாக அமைகிறது. அந்த அளவில் அதையும் தண்டனைக்குரியதாகக் கொண்டு வரி கொடுக்க மறுப்பவரையும் தண்டனைக்குக் கொண்டுவர முடியும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இதிலே நியாயம் இருப்பதனாலே, அமைச்சர் அவர்கள் என் திருத்தத்தை ஏற்றுக்கொள்வார்கள் என்று கருதுகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் :** நான் இதுவரையிலே பேசுகிறபோது, இந்த அரசு ஒவ்வொரு துறையிலும் சிறு விவசாயிகளுக்கு எவ்வளவு நன்மைகளைச் செய்தது என்பதைத் தெரிவித்தேன். அது மட்டுமல்ல, மேலும்

for the conduct of the business of the company, as well as the company, shall be deemed to be guilty of the offence. . . ". I want to know which limited Company has committed such an offence. Why should such a provision be made ? The object of the Bill was said to be this. Some of the people belonging to the Agriculturists Association are preventing the people from paying the dues to the Government. What is the necessity for bringing clause 5 of the Bill relating to offences by Companies ? There should be some reason for bringing this clause.

**மாண்புமிகு திரு. எல். டி. சோமசுந்தரம் :** ஒன்றைச் சொல்ல மறந்து விட்டேன். மாண்புமிகு உறுப்பினர் திரு. நல்லசிவன் அவர்கள் பேசும்போது ஒன்றைச் சொன்னார்கள் எம்.எல்.ஏ. க்கள் ராஜினாமா செய்ய வேண்டுமென்று கிளர்ச்சி செய்தீர்களே என்று சொன்னார்கள். யார் யார் ஓட்டு போட்டு, அவர்களைத் தேர்ந்தெடுத்தார்களோ, அவர்கள் கேட்டார்கள். இப்போதும் அப்படித் திரும்பப் பெறக்கூடிய அளவிற்கு ஒரு சட்டத்தை மத்தியப் பேரரசு கொண்டுவர வேண்டுமென்று சொல்லுகிறோம். அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் இன்றைக்கும் அந்தக் கொள்கையை வைத்திருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். கம்பெனி என்று பெயர் வைத்துக் கொண்டு, யாராவது அப்படிச் செய்தால், அவர்கள்மீது நடவடிக்கை எடுக்க வேண்டுமென்பதற்காகத்தான் குறிப்பிட்டிருக்கிறோம், குறிப்பிட்டு எந்தக் கம்பெனியையும் குறிப்பிடவில்லை என்பதைத் தெரிவித்து, சட்டமுன்வடிவை சட்டமாக்கித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** மாண்புமிகு உறுப்பினர் திரு. க. இராமமூர்த்தி அவர்கள் தம்முடைய திருத்தத்தை வலியுறுத்துகிறாரா அல்லது திரும்பப் பெறுகிறாரா ?

**திரு. க. இராமமூர்த்தி :** தலைவரவர்களே, என்னுடைய திருத்தத்தை வலியுறுத்துகிறேன்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** அவை முன் உள்ள பிரச்சினை—

"That the Tamil Nadu Prevention of Incitement to Refuse or Defer Payment of Tax Bill, 1981 (L.A. Bill No. 11 of 1981), as passed by the Assembly, be referred to a Select Committee."

திருத்தம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, தோல்வியுற்றது.

பிரிவு 2, அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.



**பிரிவு 3.**

**திரு. க. இராமமூர்த்தி :** தலைவரவர்களே, என்னுடைய பெயரில் கொடுக்கப்பட்டிருக்கிற கீழ்க்கண்ட திருத்தங்களை முன்மொழிகிறேன் :—

(i) In clause 3, *delete* the words—

'or by signs, or by visible representations, or otherwise.'

(ii) In clause 3, sub-clause (*a*) (i) *delete* the following words :—

'or amount payable to the Government or any local authority, or payable under any law or custom having the force of law for any services rendered to the community or any rent of agricultural land.'

(iii) In clause 3, sub-clause (*a*) (ii), *delete* the words 'or public order or decency or morality'.

(iv) In clause 3, sub-clause (*a*) (ii) (*A*), delete the words 'or public order or decency or morality'

(v) In clause 3, *delete* sub-clause (*a*) (ii) (*B*).

(vi) In clause 3 (*b*), *for* the words 'five years', *substitute* the words 'three years' and *for* the words 'five thousand', *substitute* the words 'two hundred and fifty' and also *delete* the words 'but such rigorous imprisonment shall not be less than two years and such fine shall not be less than three thousand rupees'."

**திரு. ம. சங்கரலிங்கம் :** மாண்புமிகு உறுப்பினர் திரு. க. இராமமூர்த்தி அவர்கள் முன்மொழிந்த திருத்தங்களை நான் வழிமொழிகிறேன்.

**திரு. க. இராமமூர்த்தி :** மாண்புமிகு தலைவரவர்களே, இந்தச் சட்ட முன்வடிவின் பல்வேறு நோக்கங்களை விவரித்துச் சொல்லிய மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சரவர்களுக்கு இதிலே சங்கடம் இருக்கிறது. நான் மெத்தப் பணிவோடு சொல்லுகிறேன், அவருடைய பல்வேறு விளக்கங்கள், இந்தச் சட்டமுன்வடிவை மனப்பூர்வமாகக் கொண்டுவரவில்லை என்ற காரணத்தால்தான், முழுமை பெறவில்லை என்று நினைக்கிறேன். என்னால் உங்களுக்கு விளக்க முடியவில்லையோ என்று அவர்களே சொன்னார்கள். மனப்பூர்வமாக அவர்கள் இந்தச் சட்டத்தைக் கொண்டுவராததால்தான், இந்த

மேலும் நன்மைகளைச் செய்வதற்கு இந்த அரசு எண்ணிக்கொண்டிருக்கிறது. அவர்களுக்கு நன்மைகளைச் செய்வதற்கு இந்த அரசு மனப்பூர்வமாக இருக்கிறது. அது மட்டுமல்ல, மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவர் அவர்கள் இந்த மேலவையிலும் பேரவையிலும் பேசியது ஒரு எடுத்துக்காட்டாக இருக்கின்றது. இந்த விவசாயிகள் சம்பந்தமாக எல்லாக் கட்சித் தலைவர்களையும், விவசாயச் சங்கத் தலைவர்களையும் அழைத்துப் பேசியிருக்கிறார்கள். அதுவும் நமது அங்கத்தினர்களுக்கு நன்றாகத் தெரியும். இவ்வளவு செய்த பிறகும், நாட்டிலே என்ன நடக்கிறது என்றால், வரி கொடுக்கக்கூடாது என்று தடை போடப்படுகிறது. அதுவும் எப்படிப் போடப்படுகிறது என்பது உறுப்பினர்களுக்குத் தெரியும். செய்தித் தாள்களிலே வந்தது. அதை நான் இங்கே எடுத்துச் சொல்வதற்குக் காரணம் இருக்கிறது. அது மறுக்கப்படவும் இல்லை.

இராமநாதபுரம் மாவட்டத்திலுள்ள கிராமங்களில் பெரும்பாலானவற்றில், பொது இடத்திலே பெரிய மணி ஒன்றைக் கட்டி; யாருடைய வீட்டிலாவது ஜப்தி நடந்தால், அதைப் பார்ப்பவர்கள் இந்த மணியை அடிக்க வேண்டும். மணிச் சத்தம் கேட்டவுடன் ஊர்மக்கள் திரண்டு வர வேண்டும். பின்னர் அதிகாரிகளுடன் போராடி அவர்களை ஜப்தி செய்வதிலிருந்து திருப்பியனுப்ப வேண்டும். இதுதான் இந்த நாட்டிலே நடைபெறுகிறது என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

இன்னொன்றும் சொல்கிறேன். தூத்துக்குடிக்கு அருகே உள்ள கிராமத்தில் ஜப்தி செய்ய அதிகாரிகள் வந்தார்கள். அங்கு விவசாயிகள் ஒன்று திரண்டு வந்து, அவர்களைக் கொண்டு சென்று பஞ்சாயத்து அலுவலகத்திலே விட்டு விட்டு, தாழ்ப்பாளைப் போட்டுவிட்டார்கள். அதற்குப் பிறகு அந்த ஊரில் உள்ள பெரியவர்கள் அவர்களை வெளியே அனுப்பியிருக்கிறார்கள் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

திருச்சி மாவட்டத்தில் ஒரு விவசாயிகள் சங்கத்தில் வைத்துள்ள நோட்டீஸ் :- "தமிழக அதிகாரிகள் வந்தால் கூறுங்கள். ஒன்பது அம்சக் கோரிக்கை நிறைவேறும்வரை அரசாங்கக் கடன், கூட்டுறவுக் கடன், பஞ்சாயத்து கிஸ்தி, மின் வரி எதுவும் கட்டமாட்டோம்" என்று. இப்படி அவர்கள் சொல்கிறார்கள். அதனால் பாதகம் இல்லை. மேலும் அவர்கள் சொல்கின்றார்கள். "அதையும் மீறி ஜப்தி நடவடிக்கைகளில் ஈடுபட்டால், அதனால் ஏற்படும் சம்பவங்களுக்கு நாங்கள் பொறுப்பாளர்கள் அல்ல. எங்கள்



ஒன்பது அம்சக் கோரிக்கைகள் நிறைவேறுகிற வரையில் யாரும் இங்கே வரக் கூடாது. அதிகாரிகளுக்கு எச்சரிக்கை" என்று சொல்லியிருக்கிறார்கள். "சூழ்ச்சியுடன் தமிழக அரசு அறிவித்துள்ளதை இங்கே கவனிக்க வேண்டும். அந்த 60 கோடி ரூபாய் என்று அவர்கள் குறிப்பிடுவதையும் நாம் எண்ணிப் பார்க்க வேண்டும்—அந்த 60 கோடி ரூபாய் கண்துடைப்புச் சலுகைகளைச் சங்கம் ஏற்கவில்லை. எனவே கடன், வரி, வட்டி, மின் கட்டணம் வசூலிக்க கிராமங்களுக்குள்ளே செல்ல வேண்டாம். மீறிச் சென்று விவசாயிகளை அவமானப்படுத்தினால், அதனால் ஏற்படும் விளைவுகளுக்கு நீங்கள்தான் பொறுப்பாளி."—தமிழக விவசாயிகள் சங்கம், திருச்சி மாவட்டம்.

அடுத்தது. 16—8—1979 அன்று மணப்பாறை நிலவள வங்கி 'லேண்ட் டெவலப்மெண்ட் பாங்க்' பணியாளர் திரு. பழனியப்பன் அவர்கள் கடனை வசூலிக்கச் சென்றபோது தாக்கப்பட்டார். 17—8—1979 அன்று மணப்பாறை வங்கி மேனேஜர் திரு. மாரியப்பன் கடன் பாக்கியை வசூலிக்கச் சென்றபோது தாக்கப்பட்டார். இப்படி எவ்வளவோ இருக்கின்றன. அங்கத்தினர்களுக்குப் படித்துக்காட்ட முடியும். இவைகளையெல்லாம் படித்துக் காட்டத் தேவையில்லை என்று நினைக்கிறேன். கடைசியாக ஒன்று தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. ஆ. நல்லசிவன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, படித்துக் காட்டிய குற்றவாளிகள் மீது அரசு நடவடிக்கை எடுக்க சட்டத்தில் இடமில்லை என்று சொல்கிறார்கள். இப்போது இந்தச் சட்டமுன்வடிவை அரசு ஏன் கொண்டுவருகிறது என்பதற்கான பதிலைச் சொல்ல வேண்டும்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : நான் முதலிலேயே சரியாகச் சொல்லவில்லையோ அல்லது என்னாலே அந்த அங்கத்தினர்கள் புரிந்து கொள்ளக்கூடிய அளவுக்குச் சொல்ல முடியவில்லையோ தெரியவில்லை. இப்படியெல்லாம் நடப்பதால் தான் சிறிய விவசாயிகள் வரி கட்டவில்லை. ஊர்களில் ஜாதிக் கட்டுப்பாடு, ஊர்க்கட்டுப்பாடு என்று வைக்கிறார்கள். அதிலிருந்து அந்த விவசாயிகளை நாம் காப்பாற்றவேண்டியிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அண்மையில் 14—8—1980 அன்று நாமக்கல்லில் நடந்த ஒரு பொதுக் கூட்டத்தைப் பற்றிச் சொல்கிறேன். பேசியவர்களின் பெயர்களைச் சொல்ல வேண்டாம் என்று கருதுகிறேன். விவசாயிகள் காவல் நிலையத்திற்குப் போகும்போது, 10 அல்லது 20 பேர்கள் ஒன்றாகச் செல்ல வேண்டும். அப்படிச்

நிலைமை என்று நினைக்கிறேன். எனக்கு அவர்களைபற்றித் தெரியும். அவர்கள் எந்த அளவிற்கு எதிர்க் கட்சி உறுப்பினராக நின்று, போராட்ட உணர்வுகளோடு வளர்ந்தவர், என்பது தெரியும். மாணவராக நின்று, அண்ணாமலைப் பல்கலைக் கழகத்திலே உரிமைகளுக்காகக் குரல் கொடுத்துப் போராடியவர் என்பதும் தெரியும். துர்பாக்கியவசமாக உரிமைகளுக்குப் போராடும் போராட்டத்தைத் தடை செய்யும் நிலை அவர்களுக்கு உருவாகி யிருக்கும் நிலையில், அதற்கான விளக்கங்களைச் சொல்லுவதில் அவர்களுக் கிருக்கும் சங்கடத்தை என்னால் உணர முடிகிறது.

(பிற்பகல் 5-20)

**மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் :** இது எப்படி இருக்கிறது என்றால் பொதுவாகக் கிராமங்களிலே இப்படிச் சில பேர் செய்வார்கள். அதாவது யாருக்காவது குழி பறிக்க வேண்டுமென்றால், அவரை நன்றாகத் தூக்கி வைத்து, ஐஸ் வைத்துப் பேசுவார்கள். அதுபோல் குழி வெட்டி வைக்கும் இடங்களிலும் மேலே ஏதாவது லேசான பொருள்களைப் போட்டு மூடி வைப்பார்கள். பிறகு அங்கிருந்து போய்விடுவார்கள்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** நல்ல வேளை பட்டணத்தில் அப்படி வைக்கமாட்டார்களே!

**மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் :** பட்டணத்திலுள்ளவர்கள் அப்படி அல்ல, துப்பாக்கியால் சுடுவார்கள். அதுவல்ல இங்கே பிரச்சினை. நான் இந்தச் சட்டத்தை முன்மொழிந்து பேசுகிறபோதே, இதனால் 42 லட்சம் சிறிய விவசாயிகளுக்குப் பாதுகாப்பு வரும், அதனால் தான் கொண்டு வந்தோம் என்று சொல்லியிருக்கிறேன். பல தடவை இதைப்பற்றிச் சொல்லி யிருக்கிறேன். அதைத்தான் நான் குறிப்பிட்டு "என்னால் விளங்க வைக்க முடியவில்லை" என்று சொன்னேன். உறுப்பினர் சொல்வதுமாதிரி மனப் பூர்வமாக நான் கொண்டுவரவில்லையென்று சொல்வதில் உண்மை இல்லை. பல தடவை அதுபற்றி நான் விளக்கியிருப்பதால்தான் அப்படிக் கூறினேன். அரசாங்க மட்டத்தில் ஒரு முடிவெடுக்கும்போது, மனப்பூர்வமாகத்தான் கொண்டு வருவோம்.

**திரு. க. இராமமூர்த்தி :** மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டது போல் எனக்கு உண்மையிலேயே ஒரு எண்ணம் உண்டு. குழி பறிப்பு பற்றிச் சொன்னார்கள். அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசுக்கு குழி பறிக்க வேண்டுமென்ற எண்ணம் இருக்கலாம். ஆனால் நிச்சயமாக அண்ணா



திராவிட முன்னேற்றக் கழக அரசு ஆட்சியில் இருக்கும்போது, மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு மட்டும் தனிப்பட்ட முறையில் குழி பறிக்கிற முயற்சியில் ஈடுபடமாட்டேன். இந்த அமைச்சரவை இருக்கும்வரை தொடர்ந்து மாண்புமிகு அமைச்சரவர்கள் பதவியில் இருக்க வேண்டுமென்பது தான் என்னுடைய ஆசை.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** இதைத்தான் அமைச்சர் அவர்கள் குழி பறிப்பதாகச் சொன்னார். (சிரிப்பு.)

**திரு. க. இராமமூர்த்தி :** இந்தச் சட்ட முன்வடிவின் பல்வேறு நிலைமைகளை எல்லாம் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். என்னுடைய திருத்தங்கள் மிகவும் இன்றியமையாதவை. வரி, கடன் பாக்கி இவைகளைப் பொறுத்தவரை, நான் மீண்டும் சொல்கிறேன். "மறைமுகமாகவோ" என்று சொல்கிற நிலை வரும்போது, ஒருவரோ அல்லது பலரோ அல்லது அவர்கள் எவருமே தூண்டி விடாமல் நான் மட்டும் தனிப்பட்ட முறையில் செலுத்த மாட்டேன் என்று தெரிவித்தால், அது கூட சட்டபூர்வமாகத் தூண்டுதல் என்று விளக்கம் கொடுத்து இன்றைக்கு நீதிமன்றத்திற்குச் செல்ல முடியும். ஆகவே, இது தவிர்க்கப்பட வேண்டிய ஒன்று. இன்னொரு நிலையையும் சொல்கிறேன். அப்படிப்பட்டவர்கள் வரி செலுத்த முடியவில்லையென்று விண்ணப்பிக்கலாம் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இங்கே சொன்னார்கள். இங்கே தான் பிரச்சினையே வருகிறது. அப்படிப்பட்ட கருத்தை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் எப்போது ஏற்றுக் கொண்டார்களோ, அதன் பிறகு அது சம்பந்தமாக நடவடிக்கை எடுப்பதற்குள்ளாக இடையிலே அதிகாரிகள் வசூலிக்க வருகிறார்கள் என்று வைத்துக் கொள்வோம். எப்படிக் கட்டுவது? நான் மனு கொடுத்திருக்கிறேன், ஆகவே இப்போது கட்ட முடியாது என்று சொல்லலாமா? அது சட்டபூர்வமாக நியாயமா இல்லையா? ஆனால் அதுவே மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய நோக்கத்திற்கு மாறாக அல்லவா அமைந்திருக்கிறது. சட்ட முன்வடிவின் நோக்கத்திற்கு மாறாக அல்லவா அமைந்திருக்கிறது. இதை நான் இங்கே சொல்வதில் தவறு இல்லையென்று கருதுகிறேன். உணர்ச்சிபூர்வமாக பாதிக்கப்படக் கூடியவர்களுக்குப் பாதுகாப்பு தரக்கூடிய வகையில் இந்தச் சட்ட முன்வடிவு கொண்டுவரப்பட வேண்டும். நாங்களெல்லாம் திரு. நாராயணசாமி நாயுடுவை மறந்துவிட்டோம். ஆனால் ஆளும்கட்சித் தரப்பிலிருந்து திரு. நாராயணசாமி நாயுடுவை திரும்பத் திரும்பச் நினைவு படுத்திக் கொண்டிருக்கிறார்கள். இங்கேயுள்ள பிரச்சினை எல்லாம் விவசாயி

களுடைய பிரச்சினைகள் சம்பந்தப்பட்டவை. பலதரப்பினருக்கு உணர்ச்சி பூர்வமான கொந்தளிப்பு ஏற்பட வாய்ப்பிருக்கிறது. இதிலுள்ள சங்கடங்களை, சிக்கல்களை அரசாங்கம் தவிர்த்திருக்கலாம்.

73 கோடி ரூபாய்க்கான கடன்களைத் தள்ளுபடி செய்திருக்கிறது இந்த அரசு என்று பெருமையோடும், உரிமையோடும் இங்கே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். அதற்காகப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். மறுக்கவில்லை. அது தேவையானது தான். ஆனால் அதே நேரத்தில், இந்தச் சங்கடங்களைத் தீர்க்கின்ற வகையில், சங்கடங்களுக்கு உதவுகின்ற வகையில் அரசு ஆவன செய்ய வேண்டும். அரசு வரி வசூலிப்பதை மட்டும் தன்னுடைய முக்கியமான கடமையாகக் கருதாமல், சங்கடப்படக் கூடிய விவசாயிகள் சமுதாயத்தின் எந்தப் பிரிவினராக இருந்தாலும், அவர்களுக்கெல்லாம் உதவ வேண்டும். போனால் போகட்டும் என்று தள்ளுபடி செய்தோம் என்று சொல்வது ஏழையெளியவர்களுக்கு உதவ வேண்டுமென்ற நல்ல மனப் பான்மையைக் காட்டுவதல்ல. உரிமையுள்ள மனிதன் என்ற முறையில் எனக்கு அதைக் கேட்பதற்கு உரிமை இருக்கிறது. அரசு தன்னுடைய கடமையைச் செய்வது எப்படி அதனுடைய உரிமையோ அதுபோல் ஏழையெளியவர்கள் சங்கடப்படும்போது அரசு அவர்களுக்குத் துணை நிற்க வேண்டுமென்று சொல்லுவதற்கும் உரிமை இருக்கிறது. அப்படிச் செய்யுங்கள் என்று நிர்பந்திப்பது என்னுடைய உரிமை. 73 கோடி ரூபாய் தள்ளுபடி செய்து கொடுத்தோமே என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கூட அவர்களுக்கே உரிய முறையில் மிக அழகாகச் சொன்னார்கள். இந்த ஆண்டு சிறிய விவசாயி களுக்குக் கடனைத் தள்ளுபடி செய்திருக்கிறோம், வரும் ஆண்டுகளிலும் ஒவ்வொரு ஆண்டும் தள்ளுபடி செய்யவிருக்கிறோம் என்றும் சொன்னார்கள்! யாருக்கு என்றும் எவ்வளவு என்றும் சொல்லவில்லை. இந்த நேரத்தில் அதை மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்களாலும் சொல்ல முடியாது. அவரிடமிருந்து வருகின்ற வரை நான் கேட்டுத் தானே ஆக வேண்டும். சிறிய விவசாயிகளும் அதை கேட்டுத் தானே ஆக வேண்டும். அந்தப் பலனைப் பெற எனக்கு உரிமையுண்டு. சிறிய விவசாயி என்ற முறையில் அதைக் கேட்க உரிமையுண்டு. இடையில் அதிகாரிகள் வசூலிக்க வரும்போது முதலமைச்சர் அவர்கள் உறுதிமொழி தந்திருக்கிறார்கள். அரசு அந்த நம்பிக்கையைத் தந்திருக்கிறது, இப்போது நிர்பந்தத்திற்காதே என்று சொல்ல உரிமை இல்லையா? மாண்புமிகு அமைச்சருடைய நோக்கத்திற்கு எதிராக இந்தச் சட்டம் அமைந்திருக்கிறதோ என்று நான் அச்சப்படுகிறேன். மாண்புமிகு வருவாய்த்



துறை அமைச்சர் அவர்கள் இதை எந்த அளவுக்கு முடியுமோ அந்த அளவுக்கு உணர்ச்சிபூர்வமாக, அறிவுபூர்வமாகக் கொண்டுவர வேண்டும். இன்னொன்றையும் சொல்ல ஆசைப்படுகிறேன். இங்கே பெரிய, நடுத்தர, சிறிய விவசாயிகள் என்றெல்லாம் சொன்னார்கள். பெரிய, நடுத்தர, சிறிய விவசாயிகள் என்கிற பெயரெல்லாம் விவசாயக் கடன்களைப் பொறுத்தவரையில், இருக்கலாம். மற்ற கடன்களைப் பொறுத்த வரையில் சில சங்கடங்கள் ஏற்படும்போது, எதிர் பார்க்காமல் இயற்கையின் விபரீதங்கள், விபத்துக்கள் ஏற்படும்போது, அரசு இயந்திரம் தானாகச் செய்ய வேண்டிய கடமைகளைச் செய்துகொண்டு தான் இருக்கும். வெள்ளப் பெருக்கு வருகிறது. அதுபோல் வறட்சி ஏற்பட்டு நஷ்டம் ஏற்படுகிறது என்கிற நிலை வரும்பேது அரசு அவர் களுக்காகப் பரிதாபம் காட்டித்தான் ஆக வேண்டும். ஆனால் அரசு என்ன செய்யும்? கடைசி நாள் வரை வரி கட்டாமல் இருந்தால், அதற்கான ஜப்தி நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். மனித உணர்வோடு அதை நிறுத்தி வைக்க வேண்டுமென்று சொல்கிற உரிமை அரசுக்கு உண்டு. இப்படிச் செயல் படுவதற்கு இடையே, அவர்கள் வசூலிக்க வரும்போது என்னால் பணம் கொடுக்க முடியாது, அதற்குரிய வாய்ப்பு இல்லை, வசதியில்லை, ஒரே நாளில் நஷ்டத்தை அடைந்துவிட்டேன் என்று சொல்லுவதற்கு பாதிக்கப்பட்டவர் களுக்கு உரிமை உண்டா இல்லையா! அந்த உரிமையை ஒரு ஜனநாயக நாட்டிலே எப்படித் தடுக்க முடியும்? மின்சாரக் கட்டணத்தை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். அவர்கள் சொன்னது தான் உண்மையான காரணமாக இருக்குமானால், நான் ஒன்றை வேடிக்கையாக அல்ல, உண்மையாகவே சொல்கிறேன், மாண்புமிகு தலைவரவர்கள் மன்னிக்க வேண்டும். அவர்கள் சொல்லும் காரணம் உண்மையாக இருக்குமானால், உண்மையிலேயே எனக்கு எதிரிலே இருக்கும் உங்களைத் தான் சட்டப்படி கைது செய்ய வேண்டும். மின்சாரக் கட்டணத்தைச் செலுத்த மாட்டேன் என்று சொன்னால், வசூலிக்க வேண்டாம் என்று இந்த அரசு முன்பு அவர் களுக்கு உத்தரவு அனுப்பியதா இல்லையா? இங்கே இருக்கிற வேறு எந்த அரசியல் கட்சியும் அதற்குத் தலைமை ஏற்கவும் இல்லை. அப்படிச் சொல்ல வும் இல்லை, அதிகாரபூர்வமாகக் குரல் கொடுக்கவும் இல்லை. ஆனால், ஆட்சிப் பொறுப்பிலே இருந்த அரசு அன்றைக்கு யாராவது ஒருவர் ‘ நான் விவசாயச் சங்கத்திலே தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறேன், மின் கட்டணத்தைச் செலுத்த மாட்டேன் ’ என்று கடிதம் எழுதினால் போதும், அவர்களிடமிருந்து மின்சாரக் கட்டணத்தை வசூலிக்க வேண்டியதில்லையென்று சொல்லியதா

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. இராமமூர்த்தி அவர்கள் முதலிலே பேசும்போது இவைகளையெல்லாம் சேர்த்துப் பேசியிருந்தால் நான் பதில் சொல்லும்போது சேர்த்துப் பதில் சொல்லியிருப்பேன். நான் பதில் சொன்னதற்குப் பிறகும் அதே விஷயத்தைத் திரும்பக் கேட்டிருக்கிறார்கள். நான் முதலிலேயே சொல்லிவிட்டேன், வரி கொடுக்காதே என்று சொல்வதைத் தடுப்பதற்குச் சட்டம் இல்லை. வரி கொடுக்காமல் இருந்தால், வசூல் செய்யத்தான் ரெவின்யூ ரெக்கவரி ஆக்ட் இருக்கிறது. வரி கொடுக்காதே என்று பொதுமக்களைத் தூண்டுவது அரசுக்குத் துரோகம் விளைவிக்கக்கூடிய செயல். அதைத் தடுக்கும் சட்டம் இந்தியன் பீனல் கோட் பிரிவு 124-ஏ. நீதிமன்றம் இன்றைக்கு மிகவும் விளக்கமாகத் தீர்ப்பளித்திருக்கிறது. இந்தியன் பீனல் கோடு பிரிவு 124-ஏ-யில் தண்டனை வழங்க இயலாது என்று நீதிமன்றம் சொல்லியிருக்கிறது. அதனால்தான், இதைக் கொண்டு வந்திருக்கிறோம். மற்றவைகள் எல்லாம் முதலிலே சொன்னதைத்தான் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசியிருக்கிறார்கள். ஒரு சட்டம் கொண்டு வரப்படுகிறது என்று சொன்னால், அந்தச் சட்டத்தைக் கொண்டு வந்தவுடனே அதை உபயோகப்படுத்துவது இல்லை. 10—11—1980-லேயே சட்டம் வந்துவிட்டது. இரண்டு-மூன்று மாதங்களாக அந்தச் சட்டத்தைப் பயன்படுத்தவில்லை. ஆகவே, சட்டம் இருக்கிறது என்ற காரணத்தினாலேயே, அதை உடனடியாகப் பயன்படுத்துவதில்லை. தேவை இருந்தால்தான் பயன்படுத்துகிறோம். மேலும், சட்டத்திலே மிகவும் விளக்கமாகப் போடப்பட்டிருக்கிறது.

Incitement undermines the security of the State or public order or decency or morality or the sovereignty of India

என்று போடப்பட்டிருக்கிறது. இதைச் சொல்கிறபோது, இந்தச் சட்டத்தைப் பயன்படுத்தி ஒருவர் மீது நடவடிக்கை எடுக்கும்போது, 'இந்த நிலைமைகள் எல்லாம் இருக்கின்றன, 'இவர் இப்படியெல்லாம் செய்தார்' என்று நிரூபிக்க வேண்டிய பொறுப்பிருக்கிறது என்பது மாண்புமிகு உறுப்பினர்களுக்குத் தெரியும். யார் இப்படிச் செய்தார், யார் தூண்டினார் என்று யாரை 'அக்யூஸ்' செய்து, யார்மீது வழக்குத் தொடரப்படுகிறதோ அவர் அப்படியெல்லாம் செய்தார் என்று நிரூபிக்க வேண்டிய பொறுப்பு அரசுக்குத்தான் இருக்கிறது. ஆகவே, இந்தச் சட்டத்தைப் போட்டவுடனேயே அதை யார் மீதும் தவறாகப் பயன்படுத்த முடியாது.

திரு. க. இராமமூர்த்தி : இந்தச் சட்ட முன்வடிவிலே 'டீசென்சி அண்டு மொராலிட்டி' (Decency and morality) என்று இருக்கிறது.





அந்த 'டீசென்சி அண்டு மொராலிட்டி' 'Decency and morality' என்பதற்கு யாருமே இதுதான் 'டீசென்சி' (decency) இதுதான் 'மொராலிட்டி' (morality) என்று சொல்லும் சந்தர்ப்பங்கள் இருக்காது. இந்த வார்த்தைகளுக்கு என்ன meaning என்ன definition கொடுக்கிறார்கள்? இந்த வார்த்தைகளுக்கு என்ன பொருள் கொடுத்து எந்த அடிப்படையிலே மற்றவர்களைக் குற்றவாளிகளாக்கப் போகிறார்கள் என்பதற்கு விளக்கம் தேவை.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : இதை நிரூபிக்க வேண்டிய பொறுப்பு இந்த வழக்கைப் போடுகின்றவர்களுக்குத்தான் இருக்கிறது. இந்தச் சட்டத்தைத் தவறாகப் பயன்படுத்தக்கூடாது என்ற அளவிலேதான் இப்படிக் கொண்டுவரப்பட்டிருக்கிறது. இந்தச் சட்டத்ினுடைய உயிர்நாடியே இதுதான். மற்றவர்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கும் பாதுகாப்பே இதுதான். யார் தண்டிக்கப்பட வேண்டும் என்பதற்காக யார் மீது வழக்கு தொடரப்படுகிறதோ அவர்களுக்குச் சாதகமாக இருக்கும் வாக்கியமே இதுதான். சாதகமாக இருக்கும் வாக்கியத்தைப் பாதகமாக இருக்கிறது என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் நினைத்துக்கொண்டிருக்கிறார்கள்.

திரு. க. இராமமூர்த்தி : சட்டமன்ற உறுப்பினர் என்ற முறையைத் தவிர்த்து, வழக்கறிஞர் என்ற முறையிலே மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய வாதத்தை ஏற்றுக்கொள்கிறேன். ஆனால் 'டீசென்சி' (decency) 'மொராலிட்டி' (morality) என்ற வார்த்தைகளுக்கு விளக்கம் வேண்டும். அல்லது இந்த இரண்டு வார்த்தைகளையும் விட்டுவிட வேண்டும்

(பிற்பகல் 5-40)

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : அதுமட்டுமல்ல

"Security of the state, public disorder, decency, morality, sovereignty of the state"

என்றெல்லாம் இருக்கிறது. இவைகளெல்லாம் குற்றஞ்சாட்டப்பட்டவருக்கான பாதுகாப்புகள். அந்தப் பாதுகாப்பைத்தான் மாண்புமிகு உறுப்பினர் திரு. இராமமூர்த்தி அவர்கள் வேண்டாம் என்று சொல்லுகிறார். இந்த அரசு இந்தச் சட்டத்தை தவறாகப் பயன்படுத்திவிடக்கூடாது என்பதற்காகக் கொடுக்கப்பட்டிருக்கிற பாதுகாப்புகள் இவைதாம். சட்ட வல்லுநர்களை எல்லாம் கலந்தாலோசித்து 'இத்தகைய சட்டபூர்வமான பாதுகாப்பைக்

கொடுக்க வேண்டுமென்று கொண்டுவந்திருக்கிறோம். இதை அரசு தவறாகப் பயன்படுத்தக்கூடாது என்று சேர்த்திருக்கிறோம் என்பதை மட்டும் நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினர் தனது திருத்தத்தை வலியுறுத்துகிறாரா அல்லது திரும்பப் பெறுகிறாரா ?

திரு. க. இராமமூர்த்தி : தலைவர் அவர்களே, என்னுடைய திருத்தத்தை நான் வலியுறுத்துகிறேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : அவைமுன் உள்ள பிரச்சினை—

(i) In clause 3, delete the words "or by signs, or by visible representations, or otherwise."

(ii) In clause 3, sub-clause (*a*) (*i*), delete the following words : "or amount payable to the Government or any local authority, or payable under any law or custom having the force of law for any services rendered to the community or any rent of agricultural land."

(iii) In clause 3, sub-clause (*a*) (*i*) delete the words "or public order or decency or morality."

(iv) In clause 3, sub-clause (*a*) (*ii*) (*A*), delete the words "or public order or decency or morality"

(v) In clause 3, delete sub-clause (*a*) (*ii*) (*B*).

(vi) In clause 3 (*b*), for the words "five years" substitute the words "three years" and for the words "five thousand" substitute the words "two hundred and fifty" and also delete the words "but such rigorous imprisonment shall not be less than two years and such fine shall not be less than three thousand rupees."

திருத்தம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, தோல்வியுற்றது.

பிரிவு 3, அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

பிரிவு 4, அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.



பிரிவு 5.

திரு. க. இராமமூர்த்தி : மாண்புமிகு தலைவர் அவர்களே, கீழ்க்கண்ட திருத்தத்தை நான் முன்மொழிகிறேன் :—

In sub-clause 2 (*a*) of clause 5, *delete* the words "or other association of individuals".

திரு. ம. சங்கரலிங்கம் : தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. இராமமூர்த்தி அவர்கள் முன்மொழிந்த இந்தத் திருத்தத்தை நான் வழிமொழிகிறேன்.

திரு. க. இராமமூர்த்தி : இந்தத் திருத்தத்தைப் பொறுத்த அளவில், ஒன்றைமட்டும் நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். தூண்டிவிடுகிறவர்கள் என்று சொல்லுகிறபோது அவர்கள் யார் யார் என்பதை அரசு விளக்கமாகச் சொல்லியிருக்கிறது. இதற்கு 'கம்பெனி' என்று போட்டிருக்கிறார்கள். கம்பெனி என்று சொல்லுகிறபோது ?

"It includes a firm or other association of individuals" என்று சொல்லப்பட்டிருக்கிறது.

இந்தச் சட்டம் இங்கே கொண்டு வரப்பட்டதன் பின்னணி (background) என்னவென்று எனக்குப் புரிகிறது. திரு. நாராயணசாமி நாயுடு அவர்களையும், விவசாயச் சங்கத்தையும் மனதில் கொண்டுதான் இந்தச் சட்ட முன்வடிவே கொண்டு வரப்பட்டிருக்கிறது என்று நான் எண்ணுகிறேன். திரு. நாராயணசாமி நாயுடு அவர்களும், விவசாயச் சங்கமும் ஒரு குறிப்பிட்ட நேரத்திற்கு மட்டும் வந்து போகிற பெயரும் இயக்கமுமே தவிர, அது நிரந்தரமானதல்ல. எனவே அவர்களை நிரந்தரமானவர்களாக மனதில் கொண்டு இப்படிப்பட்ட ஒரு சட்டத்தைக் கொண்டு வருவது எந்த வகையிலும் நியாயமில்லை. சங்கம் என்று வரும்போது, சிலவற்றை எடுத்துச் சொல்ல எல்லோராலும் முடிவதில்லை. ஒரு 10 பேர் பேசத் தெரியாமல் இருக்கலாம். அல்லது 1,000 பேர் பேசத் தெரியாமல் இருக்கலாம். அவர்களுக்கு நியாயமான குறைகளும் இருக்கலாம். அப்படிப்பட்ட நிலையில் என்னைப் போன்ற ஒருவரோ அல்லது மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்களைப் போன்ற ஒருவரோ அவர்களின் குறைகளை எடுத்துச் சொல்லுகிற பொறுப்பை ஏற்றுக் கொள்ளக்கூடும். அந்தப் பொறுப்பை ஏற்றுக்கொள்கிறவர்களை எல்லாம் தூண்டிவிடுகிறவர்கள் என்ற அடிப்படையில் கொண்டு வந்து அவர்களைச் சட்டப்படி தண்டிப்பது

என்பது நல்லதல்ல. அப்படிப்பட்ட நிலையில் இந்தச் சட்டம் கொண்டு வரப்படுவதன் காரணமாக அரசில் இருப்பவர்கள் எந்த அளவுக்கு இரும்புக் கரங்களோடு அல்லது மனதை இரும்பாக்கிக்கொண்டு, இந்தச் சட்ட முன் வடிவைக் கொண்டு வந்திருக்கிறார்கள் என்பது நமக்குப் புரிகிறது. எனவே தான் "தயவு செய்து இந்தப் பிரிவை சட்ட முன்வடிவிலிருந்து நீக்கி விடுங்கள்" என்று நான் மிகவும் பணிவன்போடு கேட்டுக் கொள்கிறேன். வாய்திறந்து பேச முடியாது இருப்பவர்களின் குறைகளை எடுத்துச் சொல்பவர்களையெல்லாம் தண்டிக்கிற நிலை அரசுக்கும் நல்ல தல்ல, நாட்டுக்கும் நல்லதல்ல. எனவே இந்தத் திருத்தத்தின் நியாயத்தை உணர்ந்து இந்த வார்த்தைகளை திரும்பப்பெற வேண்டும் அல்லது கைவிட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினர் தமது திருத்தத்தைத் திரும்பப் பெறுகிறாரா அல்லது வலியுறுத்துகிறாரா ?

திரு. க. இராமமூர்த்தி : திருத்தத்தை நான் வலியுறுத்துகிறேன்

மாண்புமிகு மேலவைத் தலைவர் : அவை முன் உள்ள பிரச்சினை—

In sub-clause 2 (*a*) of clause 5, *delete* the words "or other association of individuals".

திருத்தம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, தோல்வியுற்றது.

பிரிவு 5, அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

பிரிவுகள் 6, 7, பிரிவு 1. சட்டமியற்றும் முறை, நெடுந்தலைப்பு ஆகியவை, அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டன

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : மாண்புமிகு தலைவர் அவர்களே,

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட வரிசெலுத்துவதை மறுக்குமாறு அல்லது தள்ளிப்போடுமாறு தூண்டுவதைத் தடுப்பதற்கான தமிழ்நாடு 1981 ஆம் ஆண்டு சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 11/1981) நிறைவேற்றப்பட வேண்டும்"
என்று முன்மொழிகிறேன்.



மாண்புமிகு மேலவைத் தலைவர் : அவை முன் உள்ள பிரச்சினை—

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட வரிச்செலுத்துவதை மறுக்குமாறு அல்லது தள்ளிப்போடுமாறு தூண்டுவதைத் தடுப்பதற்கான தமிழ்நாடு 1981 ஆம் ஆண்டு சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 11/1981) நிறைவேற்றப்பட வேண்டும்"

திரு. ம. சங்கரலிங்கம் : தலைவர் அவர்களே, இங்கே கொண்டு வரப் பட்ட திருத்தங்கள் அனைத்தும் தோல்வியுற்றிருந்தாலும், இங்கே சொல்லப் பட்ட கருத்துக்களின் முக்கியத்துவத்தை உணர்ந்து, ஜனநாயக மரபுகளுக்கு உகந்த முறையில் இந்த நிலையிலாவது இந்தச் சட்ட முன்வடிவைப் பொறுக் குக் குழுவுக்கு விட முன்வருவாரா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினர்களுக்கு நான் ஒன்றைத் தெரிவிக்க விரும்புகிறேன். நேற்றைக்கு முன்தினம்கூட நான் இதைப்பற்றிக் குறிப்பிட்டேன். சட்ட முன்வடிவைப் பிரிவுவாரியாக நிறைவேற்றிய பிறகு, இறுதியில் வாக்கெடுப்புக்கு விடும்போது, அமைச் சருக்குக் கோரிக்கை விடுவது என்பது மரபுக்கு ஒவ்வாததாகும். திரு. சங்கரலிங்கம் அவர்களுக்கும் இது தெரியாததல்ல.

திரு. ம. சங்கரலிங்கம் : சட்டத்தை இறுதியாக நிறைவேற்றுவதற்கு முன்னர்கூட அரசு தனது கருத்தை மாற்றிக் கொண்டு எங்கள் கோரிக்கையை ஏற்கலாம் என்ற அடிப்படையில் நான் எனது கோரிக்கையை மீண்டும் இங்கே வற்புறுத்துகிறேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : இது மரபுக்கு உகந்ததல்ல என்பது உறுப்பினருக்கு நன்கு தெரிந்திருந்தும் இவ்வாறு பேசுவது சரியல்ல. இப் போது மாண்புமிகு உறுப்பினர் என்ன செய்யப் போகிறார் என்பது வேறு விஷயம். இருந்தாலும் இப்படி ஓட்டுக்கு விடும்போது அமைச்சருக்குக் கோரிக்கை விடுவது என்பது விதிமுறைகளின்படியும் சரியில்லை, மரபுப்படி யும் சரியல்லை.

திரு. ம. சங்கரலிங்கம் : மாண்புமிகு அமைச்சர் அவர்கள் எங்கள் கருத்தை ஏற்று இதைப் பொறுக்குக் குழுவுக்குக்கூட விட முடியாது என்றி ருப்பதை எதிர்த்து, நான் வெளிநடப்புச் செய்கிறேன்.

உறுப்பினர் திரு. ம. சங்கரலிங்கம் அவையிலிருந்து வெளிநடப்பு செய்தார்.

இல்லையா ? ஆகவே இந்தச் சட்டப்படி உங்களை அல்லவா கைது செய்திருக்க வேண்டும். எனவே தான், நான் சொல்கிறேன் இந்த சட்ட முன்வடிவு நடைமுறையில் சாத்தியமானதும் அல்ல, நியாயமற்றதும்கூட. அதுமட்டுமல்ல, பலவற்றை இங்கே சொன்னார்கள். அங்கே வந்தால் அடி, இங்கே வந்தால் விடாதே என்றெல்லாம் கூடச் சொன்னதாகச் சொன்னார்கள், என்று அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : உறுப்பினர் சொல்வதைப் பார்த்தால் எனக்கே பயமாக இருக்கிறது. (சிரிப்பு)

திரு. க. இராமமூர்த்தி : இந்த அரசு ஏன் அப்படிப்பட்டவர்கள் மீது நடவடிக்கை எடுக்கத் தவறியது ? தனியாக இப்படிப்பட்ட குற்றங்கள் நடைபெற்றால், அதற்கெல்லாம் இந்தியன் பீனல் கோடிலேயே தண்டனை வழங்க வழிவகை இருக்கிறது. ஏன் இதை அரசு நடைமுறைப்படுத்தவில்லை ?

(பிற்பகல் 5-30)

நான் இன்னொன்றையும் கேட்க விரும்புகிறேன். அதிகாரிகள் தங்கள் கடமைகளைச் செய்யவிடாமல் அவர்களைத் தடுப்பதும், தூண்டுவதும் குற்றம் என்று சொன்னார்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. நல்லசிவன் அவர்கள் கூட " நீங்கள் இதையெல்லாம் செய்யவில்லையா ? " என்று கேட்டார். காவல் துறையினரிடம் கோபம் கொண்டு, அவர்களுடைய வீட்டிற்குச் சென்று அவர்களுடைய மனைவிமார்களிடம், ' உங்களுடைய கணவன்மார்களை இப்படிச் செய்ய வேண்டும் என்று நீங்கள் சொன்னீர்களா ? ' என்று சொல்லி ஒரு போராட்டம் நடத்தவில்லையா ? ஆகவே, போராட்டம் என்பது அரசாங்கத்தினுடைய கவனத்தை ஈர்க்கும் வகையில் மக்கள் பயன்படுத்தும் ஓர் ஆயுதம். அந்தப் போராட்டம் வன்முறையாக மாறாமல் பார்த்துக்கொள்ள வேண்டியது ஆட்சியின் கடமை. அதையெல்லாம் விட்டுவிட்டு, ' இப்படிச் செய்தால் ', ' இப்படிச் சொன்னால் ' இதோ ஒரு சட்டம் இருக்கிறது என்று சொல்லி வெறும் சட்டத்தையே நம்ப வேண்டிய கட்டாயம் ஒரு அரசுக்கு இருக்குமானால், அரசு மற்ற எல்லா ஆதரவையும் இழந்து வருகிறது என்பதை அரசில் இருப்பவர்கள் உணர்ந்திருக்கிறார்கள் என்பதைத்தான் இது காட்டுகிறது. என்னைப் பொறுத்தவரையில், அதைப்பற்றி அதிகமாக நான் கவலைப்படவில்லை. சாதாரண ஏழை மக்கள் எந்த அளவுக்குப் பொருளாதார ரீதியாகப் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள் என்பதைப் பார்க்க வேண்டும். கடன் கட்ட முடியாமல் இருப்பவர்கள், ஏழ்மை நிலையில் இருப்பவர்கள் யார் யார்



என்பதை நாம் கண்டறிய வேண்டும். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொல்லியதைப் போல, சிறிய விவசாயிகள் ' பாண்டுகள் மூலமாக,' ' ப்ரோ-நோட் '-கள் மூலமாகக் கடன் வாங்கிவிட்டு, இருக்கின்ற சொத்தையெல்லாம் இழக்கின்ற நிலைமைக்கு இன்றையதினம் ஆளாகியிருக்கிறார்கள். கொஞ்சநஞ்சம் கழுத்திலே காதிலே போட்டிருக்கிற மாலையை, கம்மலையெல்லாம் கொண்டுபோய் அடகு வைத்துவிட்டு அவைகளைத் திரும்ப மீட்க முடியாத நிலைமையில இருக்கிறார்கள். அவர்களுக்குக் கடன் நிவாரணச் சட்டம் இந்த அரசு கொண்டு வந்திருக்கிறதென்று சொன்னால், அதை அவர்கள் கேட்காமலேயே வந்திருக்கிறோமா என்பதைப் பார்க்க வேண்டும். ஆக, கேட்கக் கூடிய உரிமையை ரத்துசெய்துவிட்டு ' நாங்கள் செய்கிறோம் ' என்று சொன்னால், ஒரு பெரிய அட்சயபாத்திரம் வைத்துக் கொண்டு தாராளமாக எடுத்துக்கொடுக்கும் நிலையா நம் மாநிலத்தில் இருக்கிறது ? அப்படி ஒரு நிலைமை இருந்தால் கூட, அது ஒரு தாராள அரசாக இருக்குமே தவிர, அது ஒரு ஜனநாயக அரசாக, சுதந்திர உரிமைகள் பெற்ற மக்கள் வாழ்கின்ற, மாநிலத்திற்குச் சொந்தமான ஆட்சியாக, அரசாக இருக்காது. அடிமைகளாக மக்களை வைத்துக்கொண்டு நிலையாக ஆட்சி செய்ய முடியாது. ஏழையெளியவர்களுக்கு அவர்களின் சுதந்திர உணர்வை வெளிப்படுத்த வழியில்லாமல் செய்துவிட்டு வெறும் சட்டங்களையே நம்பியிருக்கும் அரசு மக்கள் நல அரசு என்றும் நாம் ஏற்றுக்கொள்ள முடியாது.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : உரிமைகள் பற்றிப் பேசுகின்றபோது இதோடு நின்றுவிடுவது நல்லது.

திரு. க. இராமமூர்த்தி : நான் என்னுடைய திருத்தத்தைக் கொண்டு வந்திருக்கிறேன். அவைகளையெல்லாம் ஏற்றுக்கொண்டால், இந்தச் சட்டத்தை எதிர்க்க வேண்டிய அவசியம் இருக்கிறது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அவைகளை ஏற்றுக்கொள்வார்கள் என்று நான் நம்புகிறேன். ஏற்றுக் கொள்ளாமல் இந்தச் சட்டத்தை நிறைவேற்றிக்கொண்டு, இதைச் செயல்படுத்துவதில் நான் ஒத்துழைக்காமல் இருக்கிறேன் என்று பின்னர் நினைக்கக் கூடாது. குறைந்தபட்சம் இரண்டு ஆண்டுகள் சிறை. அதிகபட்சம் ஐந்து ஆண்டுகள் சிறை என்று சொன்னால், இது மிகவும் பயங்கரமாக இருக்கிறது. ஆகவே, அவர்களைக் கைது செய்து நீதி மன்றத்திற்கு அழைத்துச் செல்லும் காவல் துறையினருக்கு இந்தச் சட்டத்தை கடுமையாக, மிகவும் பலமாகப் பயன்படுத்தும் வாய்ப்பை ஏற்படுத்தித் தரும் என்பதைச் சொல்லி, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நியாய உணர்வோடு என்னுடைய திருத்தங்களை ஏற்கவேண்டும் என்று கேட்டுக்கொண்டு, அமைகிறேன்.

இணைப்பு II

[301 ஆம் பக்கத்தில் இனம் 4(1)-க்கான அடிக் குறிப்பைக் காண்க.]

## L.A. BILL NO. 18 OF 1981.

(As passed by the Assembly)

*A Bill to provide for the appropriation of certain further moneys out of the Consolidated Fund of the State for the service of the financial year which commenced on the 1st April* 1980.

BE it enacted by the Legislature of the State of Tamil Nadu in the Thirty-second Year of the Republic of India as follows :—

1. *Short title.*—This Act may be called the Tamil Nadu Appropriation Act, 1981.

2. *Supplementary appropriation out of the Consolidated Fund for the financial year which commenced on the 1st April* 1980.—The State Government may appropriate out of the Consolidated Fund of the State for the financial year which commenced on the 1st April 1980, a further sum not exceeding fifty crores, forty lakhs and eighty-five thousand rupees being moneys required to meet—

(*a*) the supplementary grants made by the Tamil Nadu Legislative Assembly for that period, as set forth in column (3) of the Schedule ; and

(*b*) the supplementary expenditure charged on the Consolidated Fund of the State for that period, as set forth in column (4) of the Schedule.



## THE SCHEDULE.

(*See* section 2)

| *Demand number.* | *Services and purposes.* | Sums not exceeding: *Voted by the Legislative Assembly.* | Sums not exceeding: *Charged on the Consolidated Fund of the State.* | *Total.* |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| | | RS. | RS. | RS. |
| 4 | General Sales Tax and Other Taxes and Duties—Administration. | 3,000 | .. | 3,000 |
| 9 | Head of State, Minister and Headquarters Staff. | 3,98,000 | .. | 3,98,000 |
| 11 | District Administration | 1,81,87,000 | .. | 1,81,87,000 |
| 14 | Jails | 1,000 | .. | 1,000 |
| 15 | Police | 4,37,99,000 | .. | 4,37,99,000 |
| 17 | Education | 40,28,000 | .. | 40,28,000 |
| 18 | Medical | 76,26,000 | .. | 76,26,000 |
| 19 | Public Health | 5,67,80,000 | .. | 5,67,80,000 |
| 20 | Agriculture | 1,05,95,000 | .. | 1,05,95,000 |
| 21 | Fisheries | 1,29,000 | .. | 1,29,000 |
| 23 | Co-operation | 2,84,000 | .. | 2,84,000 |
| 24 | Industries | 17,50,000 | .. | 17,50,000 |
| 25 | Cinchona | 8,30,000 | .. | 8,30,000 |
| 28 | Community Development Projects, etc. | 82,04,000 | .. | 82,04,000 |
| 29 | Labour including Factories | 1,71,000 | .. | 1,71,000 |
| 30 | Social Welfare | 27,41,000 | .. | 27,41,000 |

| (1) | (2) | (3) | (4) | (5) |
|---|---|---|---|---|
| 31 | Welfare of the Sheduled Tribes and Castes, etc. | 13,73,000 | .. | 13,73,000 |
| 33 | Housing .. .. .. | 3,37,000 | .. | 3,37,000 |
| 38 | Public Works—Establishment and Tools and Plant. | 15,39,000 | .. | 15,39,000 |
| 39 | Roads and Bridges .. .. | 1,90,83,000 | .. | 1,90,83,000 |
| 40 | Road Transport Services and Shipping .. | 9,19,000 | 1,25,000 | 10,44,000 |
| 43 | Miscellaneous .. .. | 10,52,000 | .. | 10,52,000 |
| 48 | Capital Outlay on Agriculture .. | 13,56,000 | .. | 13,56,000 |
| 49 | Capital Outlay on Industrial Development | 1,45,00,000 | .. | 1,45,00,000 |
| 50 | Capital Outlay on Irrigation | 21,56,000 | .. | 21,56,000 |
| 51 | Capital Outlay on Public Works—Building | 1,06,26,000 | .. | 1,06,26,000 |
| 52 | Capital Outlay on Roads and Bridges .. | 1,000 | .. | 1,000 |
| 54 | Capital Outlay on Forests. .. | 16,57,000 | .. | 16,57,000 |
| 55 | Miscellaneous Capital Outlay. .. | 1,45,50,000 | .. | 1,45,50,000 |
| 56 | Loans and by Advances by the State Government. | 27,92,85,000 | .. | 27,92,85,000 |
| | **Grand Total ..** | **50,39,60,000** | **1,25,000** | **50,40,85,000** |

I Certify that this is a Money Bill.

K. RAJARAM,
Speaker,
*Tamil Nadu Legislative Assembly.*

Fort St. George,
Madras,
12-2-81.



## இணைப்பு III

[302 ஆம் பக்கத்தில் இனம் 4(2)-க்கான அடிக் குறிப்பைக் காண்க.]

## L.A. BILL No. 11 OF 1981.

(As passed by the Assembly)

*A Bill to prevent incitement to refuse or defer payment of tax and other dues payable to the Government, local authorities, etc.*

Be it enacted by the Legislature of the State of Tamil Nadu in the Thirty-second Year of the Republic of India as follows :—

1. *Short title and commencement.*—(1) This Act may be called the Tamil Nadu Prevention of Incitement to Refuse or Defer Payment of Tax Act, 1981.

(2) It shall be deemed to have come into force on the 10th November 1980.

2. *Definitions.*—In this Act, unless the context otherwise requires,—

(*a*) "Government" means the State Government;

(*b*) "public servant" shall have the same meaning as in section 21 of the Indian Penal Code (Central Act XLV of 1860).

3. *Punishment for incitement to refuse or defer payment of land revenue, tax, etc., due to the Government,* etc.—Notwithstanding anything contained in any law for the time being inforce, whoever by words, either spoken or written or by signs or by visible representations, or otherwise,—

(*a*) (i) encourages or incites any person or class of persons, or the public generally, to refuse or defer payment of, or to resist or obstruct payment or collection of, any land revenue, tax, rate, cess or other dues or amount payable to the Government or any local authority, or payable under any law or custom having the force of law for any services rendered to the community or any rent of agricultural land or anything recoverable as arrears of, or along with, such rent and if such encouragement or incitement undermines the security of the State or public order or decency or morality or the sovereignty of India; or

(ii) encourages or incites any person or class of persons, or the public generally, to refuse or defer payment of, or to resist or obstruct payment or collection of,—

(A) any rate, cess or other dues or amount payable to the Tamil Nadu Electricity Board and if such encouragement or incitement undermines the security of the State or public order or decency or morality; or

(B) any dues or amount payable to any co-operative society (including State and primary land development banks), registered or deemed to be registered under the Tamil Nadu Co-operative Societies Act, 1961 (Tamil Nadu Act 53 of 1961) and if such encouragement or incitement undermines the security of the State or public order or decency or morality; or

(*b*) instigates directly or indirectly the use of criminal force against public servants generally or any class of public servants or any individual public servant,

shall be punished with rigorous imprisonment for a term which may extend to five years and with fine which may extend to five thousand rupees, but such rigorous imprisonment shall not be less than two years and such fine shall not be less than three thousand rupees.

4. *Abetment to be an offence.*—Whoever abets the commission of any offence punishable under section 3 shall be deemed to have committed that offence.

5. *Offences by companies.*—(1) Where an offence under this Act has been committed by a company, every person, who, at the time the offence was committed, was in charge of, and was responsible to, the company for the conduct of the business of the company, as well as the company, shall be deemed to be guilty of the offence and shall be liable to be proceeded against and punished accordingly:

Provided that nothing contained in this sub-section shall render any such person liable to any punishment, if he proves that the offence was committed without his knowledge, or that he had exercised all due diligence to prevent the commission of such offence.

(2) Notwithstanding anything contained in sub-section (1), where any offence under this Act has been committed by a company and it is proved that the offence has been committed with the



consent or connivance of, or is attributable to any neglect on the part of, any director, manager, secretary or other officer of the company, such director, manager, secretary or other officer shall also be deemed to be guilty of that offence and shall be liable to be proceeded against and punished accordingly.

*Explanation.*—For the purposes of this section,—

(*a*) "company" means any body corporate and includes a firm or other association of individuals; and

(*b*) "director" in relation to a firm means a partner in the firm.

6. *Power to make rules.*—(1) The Government may make rules to carry out the purposes of this Act.

(2) All rules made under this Act shall be published in the *Tamil Nadu Government Gazette* and, unless they are expressed to come into force on a particular day, shall come into force on the day on which they are so published.

(3) Every rule made under this Act shall, as soon as possible after it is made, be placed on the Table of both Houses of the Legislature, and if, before the expiry of the session in which it is so placed or the next session, both Houses agree in making any modification in any such rule or both Houses agree that the rule should not be made the rule shall thereafter have effect only in such modified form or be of no effect, as the case may be, so, however, that any such modification or annulment shall be without prejudice to the validity of anything previously done under that rule.

7. *Repeal and saving.*—(1) The Tamil Nadu Prevention of Incitement to Refuse or Defer Payment of Tax Ordinance, 1980 (Tamil Nadu Ordinance 9 of 1980) and the Tamil Nadu Prevention of Incitement to Refuse or Defer payment of Tax (Amendment) Ordinance, 1981 (Tamil Nadu Ordinance 1 of 1981), are hereby repealed.

(2) Notwithstanding such repeal, anything done or any action taken under the said Tamil Nadu Ordinance 9 of 1980, as amended by the said Tamil Nadu Ordinance 1 of 1981, shall be deemed to have been done or taken under this Act.

திரு. க. இராமமூர்த்தி : தலைவர் அவர்களே, இந்த அவைக்கு இங்கே கொண்டு வரப்பட்டிருக்கிற சட்ட முன்வடிவு நியாயமற்றது என்பதை எடுத்துக் கூறியும், அரசு பிடிவாதமாக இதை நிறைவேற்ற வேண்டும் என்ற கருத்தையே தெரிவித்துக் கொண்டிருக்கிற நிலையில், இந்தச் சட்டம் நிறைவேற்றப்படும் சூழ்நிலையில் இதில் கலந்து கொண்டிருக்க விரும்பவில்லை என்று கூறி, இந்த முறைக்கு எதிர்ப்பு தெரிவிக்கும் வகையில் நான் அவையிலிருந்து வெளிநடப்பு செய்கிறேன்.

உறுப்பினர் திரு. க. இராமமூர்த்தி அவையிலிருந்து வெளிநடப்பு செய்தார்.

திரு. ஆ. நல்லசிவன் : அரசு பிடிவாதமாக இந்தச் சட்டமுன்வடிவை நிறைவேற்ற விரும்புவதை எதிர்த்து நானும் அவையிலிருந்து வெளிநடப்பு செய்கிறேன்.

உறுப்பினர் திரு. ஆ. நல்லசிவன் அவையிலிருந்து வெளிநடப்பு செய்தார்.

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

3. அறிவிப்புகள்.

(3) அலுவல் ஆய்வுக் குழுவின் முடிவு.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : இன்று கூடிய அலுவல் ஆய்வுக் குழுவின் முடிவின்படி, அவை நாளை மட்டும் நடைபெறும். நாளை அரசின் சட்ட முன்வடிவுகள் ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்படும்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : அவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. அவை மீண்டும் நாளை காலை 10-30 மணிக்குக் கூடும்.

பின்னர், அவை ஒத்தி வைக்கப்பட்டது.

(பிற்பகல் 5-47)



## இணைப்பு I

[235 ஆம் பக்கத்தில் இனம் 1-க்கான அடிக்குறிப்பைக் காண்க.]

1980 நவம்பர்-டிசம்பர் திங்களில் நடந்த பல்கலைக் கழகத் தேர்வின் போது கும்பகோணம் அரசு ஆடவர் கலைக் கல்லூரி மாணவர்கள் வகுப்பறையின் 'பூட்டு' களை உடைத்துவிட்டார்கள், அதுமுதல் அறைகள் பூட்டப் பெற இயலவில்லை.

2. 27—1—1981 காலையில் எட்டு மணிக்கு கல்லூரியின் சார்ஜன்ட் திரு. ஆர். வி. விக்டர் வழக்கம்போல் சுற்றிப் பார்த்துக் கொண்டு வரும்போது கல்லூரியின் பிரதான கட்டிடத்தின் மேல் மாடியில் தென் பகுதியிலுள்ள எண்பத்து மூன்றாம் எண்ணுள்ள அறையில் ஒரு உடல் தொங்கிக் கொண்டிருப்பதைக் கண்டு கல்லூரி அதிகாரிகளுக்குத் தகவல் கொடுத்தார். தொங்கிக் கொண்டிருந்த அவ்வுடல் திருச்சி மாவட்டம் உடையார்பாளையம் வட்டம் (வாழைக்குறிச்சி தபால் நிலையம்) மதனத்தூர் கிராமத்திலிருக்கும் திரு. ரங்கராஜன் என்பவரின் மகனும் அக்கல்லூரியிலேயே முதலாமாண்டு வணிகவியல் படித்துக் கொண்டிருந்தவனுமான திரு. ஆர். சீனிவாசன் என்னும் மாணவனுடையது என்று உறுதி செய்யப்பட்டது.

3. உடனே இச்செய்தி காவல் துறையினருக்கு அறிவிக்கப்பட்டது. அவரது பெற்றோருக்கும் இச்செய்தி காவல் துறையினரால் அறிவிக்கப்பட்டது. இம்மாணவரது பெற்றோர்கள் அன்று காலை 11 மணிக்கு கல்லூரிக்கு வந்துவிட்டார்கள்.

4. திரு. ஆர். சீனிவாசன் மதனத்தூர் கிராமத்திலிருந்து தினமும் கல்லூரிக்கு வந்து படித்துக் கொண்டிருந்த மாணவன். இந்தக் கல்லூரியுடன் இணைக்கப்பட்ட விக்டோரியா ஜூபிலி விடுதிக்கு இம் மாணவன் 26—1—81 தேதி இரவு வந்து தன்னுடைய நண்பர்களுடன் சில மணி நேரம் தங்கி இருந்ததாகத் தெரிகிறது.

5. காவல் துறையினர் இறந்த மாணவனுடைய பெற்றோர்கள், உறவினர்கள், மாணவப் பிரதிநிதிகள், பஞ்சாயத்துக்காரர்கள் முன்னிலையில் விசாரணை நடத்தினார்கள். பிறகு காவல் துறையினர் பிரேத பரிசோதனைக்காக அருகில் உள்ள கும்பகோணம் அரசினர் மருத்துவ மனைக்கு பிரேதத்தைக் கொண்டு சென்றனர். பிரேத பரிசோதனை செய்த டாக்டர் இது தற்கொலை என்று கூறியுள்ளார்.

அன்று, அசம்பாவிதம் ஏதும் ஏற்படக் கூடாது என்பதற்காக மாணவர்கள் ஊர்வலம் மேற்கொள்வதை காவல் துறையினர் அனுமதிக்கவில்லை. நிலைமையைக் காவல் துறையினர் கவனித்து வருகின்றனர்.

## தமிழ்நாடு சட்ட மன்ற மேலவை.

---

வெள்ளிக்கிழமை, 1981 பிப்ரவரி 13.

சென்னை, செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள மேலவை மண்டபத்தில் முற்பகல் 10-30 மணியளவில் மாண்புமிகு மேலவைத் தலைவர் (டாக்டர் ம. பொ. சிவஞானம்) அவர்கள் தலைமையில் அவை கூடியது.

### 1. வினாக்கள்-விடைகள்.

### உடுக்குறியிட்ட வினாக்கள்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : வினாக்கள் 69, 70 மற்றும் 71 ஒத்தி வைக்கப்படுகின்றன.

வினாக்கள் 72, 73 ஆகியவை இறுதியில் எடுத்துக் கொள்ளப்படும்.

### பொருட்காட்சிகளில் சூதாட்டம்.

* 74 வினா.—திரு. ம. சங்காலிங்கம் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) 1—1—1979 முதல் 15—6—1980 வரை கன்னியாகுமரி மாவட்டத்தில் எத்தனை பொருட்காட்சிகளுக்கு அனுமதி வழங்கப்பட்டது ?

(இ) அவைகளில் சூதாட்டம் நடத்தப்பட்டதால், பொது மக்கள் பெருமளவில் பாதிக்கப்பட்டார்கள் என்று அரசுக்கு முறையீடு ஏதும் வந்துள்ளதா ?

(உ) ஆம் எனில், அதன் மீது அரசு எடுத்த நடவடிக்கை யாது?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : (அ) ஏழு.

(இ) இல்லை.

(உ) கேள்விக்கு இடமில்லை.

[1981 பிப்ரவரி 13

### ஏகாரசபுரம் சாலை.

* 75 வினா.—திரு. க. மீனாட்சிசுந்தரம் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) தலைஞாயிறு ஒன்றியத்தைச் சேர்ந்த ஏகாரசபுரம் சாலை, கடந்த இருபத்தேழு ஆண்டுகளாக செப்பனிடப்படாததை அரசு அறியுமா?

(இ) ஆம் எனில் அச்சாலையை விரைவில் செப்பனிட அரசு மேற்கொண்ட நடவடிக்கைகள் யாவை?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : (அ) ஆம்.

(இ) சமீபத்தில் உணவுக்கு வேலைத் திட்டத்தின் கீழ் ரூ. 9,000 செலவில் இச்சாலை மறுபடியும் அமைக்கப்பட்டது. மேலும் வேலை உத்திரவாதம் (Employment Guarantee) திட்டத்தின் கீழ் இச்சாலையில் கி.மீ. 0/0-1/0-ல் மண்வேலை செய்யப்பட்டுள்ளது.

திரு. க. மீனாட்சிசுந்தரம் : தலைவர் அவர்களே, இந்தச் சாலை 27 ஆண்டுகளாக செப்பனிடப்படாமல் இருந்த நிலையில், மாவட்ட ஆட்சித் தலைவர் நடத்திய மாவட்ட வளர்ச்சிக் கூட்டத்தில் இந்தச் சாலையைப் பற்றி நான் குறிப்பிட்டு, இச்சாலை ஊராட்சி ஒன்றியச் சாலையா, ஹைவேஸ் சாலையா, பி.டபிள்யூ.டி. சாலையா என்று கேட்டபோது, அதைக் கண்டு பிடிக்க முடியவில்லை என்று கூறினார். அதற்குப் பின்னாலே நான் வலியுறுத்திய பிறகு, இன்றைக்கு வேலை நடந்திருப்பதை அறிந்து மகிழ்ச்சியடைகிறேன். இருந்தாலும் இது கப்பிச் சாலையாக ஆக்கப்படுமா என்பதையும் இச்சாலை எந்தப் பிரிவைச் சேர்ந்த சாலை என்பதையும் அரசு அறிவிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைஞாயிறு ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள ஊராட்சி ஒன்றியச் சாலை, மண் சாலையாக இருக்கிறது. சமீபத்தில் ஒன்பதாயிரம் ரூபாய் செலவில் அது செப்பனிடப்பட்டிருக்கிறது. இன்னும் போடப்படாத பகுதிகளில் ஏதாவது இருந்தால், மாண்புமிகு உறுப்பினர் எடுத்துக் கூறினால், உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படும்.



1981 பிப்ரவரி 13]

### உள்ளாட்சி மன்ற ஆசிரியர்களுக்கு மிதிவண்டிக் கடன்.

* 76 வினா.—திரு. க. மீனாட்சிசுந்தரம் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) ஊராட்சி ஒன்றிய, நகராட்சி ஆசிரியர்கட்கு மிதிவண்டிக் கடன் வழங்க ஆணையிருந்தும், பணமில்லை என்ற காரணம் காட்டி, பெரும்பாலான ஊராட்சி ஒன்றியங்கள் மற்றும் நகராட்சிகளில் அக்கடன் வழங்கப்படுவதில்லை என்பதை அரசு அறியுமா?

(இ) ஆம் எனில், மிதி வண்டிக் கடன் பெறுவதற்கு தகுதியுடைய ஆசிரியர்கள் அனைவருக்கும் வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : (அ) மற்றும் (இ) அரசு ஊழியர்களுக்கு மிதிவண்டி வாங்குவதற்கான முன் பணம் வாங்க ரூ. 400-லிருந்து ரூ. 600 வரை அரசு உயர்த்தியுள்ளது. ஊராட்சி ஒன்றியங்கள், பேரூராட்சிகள், பேரூராட்சி நகரியங்கள் ஆகியவற்றில் பணி புரியும் ஊழியர்களுக்கும் (ஊராட்சி ஒன்றிய ஆசிரியர்கள் உட்பட) சென்னை மாநகராட்சி, மதுரை மாநகராட்சி மற்றும் நகராட்சிகள், நகராட்சி ஒன்றியங்கள் ஆகியவற்றில் பணிபுரியும் ஊழியர்களுக்கும் மேற்படி சலுகையினை அரசு நீடித்துள்ளது. இக்கடன்களை ஒன்றிய நிதி நிலைமைகளுக்கேற்ப மதிப்பீட்டில் ஒதுக்கீடு செய்து பணம் வழங்க வேண்டுமென்றும் ஆணையிடப்பட்டுள்ளது. ஆனால் சில இடங்களில் நிதிப் பற்றாக் குறை காரணமாகவோ மற்றும் எல்லா ஊழியர்களும் ஒரே சமயத்தில் கோரிக்கை விடுப்பதாலோ உடனடியாக வழங்க சிறிது தாமதமோ கஷ்டமோ ஏற்படுகிறது. இது குறித்து ஊர் வளர்ச்சி இயக்குநர் நடவடிக்கை எடுத்து நிதி வசதி உள்ள ஊராட்சி ஒன்றியங்கள், அவ்வொன்றியத்தில் பணி புரியும் ஆசிரியர்களில் ஒரு வருடத்திற்கு 25 சதவீதம் மிதிவண்டிக் கடன் வழங்கவும் இப்படி படிப்படியாக இதை அமூலாக்கவும், அப்படி நிதி வசதி இல்லையெனில் விசேட மானியம் பெற ஊரக-வளர்ச்சி இயக்குநருக்கு பிரேரணை அனுப்பும்படியும் எல்லா ஊராட்சி ஒன்றிய ஆணையர்களுக்கும் சுற்றறிக்கை அனுப்பியுள்ளார். நகராட்சியைப் பொறுத்தவரையில் பொதுவாக புகார்கள் எதும் வரவில்லை என்றும் நிதி நிலையைப் பொறுத்து நிதி ஒதுக்கீடு செய்யப்பட வேண்டும் என்றும் அறிவுரை வழங்கப்பட்டுள்ளதாக நகராட்சி நிர்வாக இயக்குநரும் தெரிவித்துள்ளார்.

[1981 பிப்ரவரி 13

புகார்கள் வெளியிலிருந்து அரசுக்கு வரவில்லை என்பதைத்தான் மாண்புமிகு அமைச்சர் சொல்லியிருக்கிறார். ஆகவே தனிப்பட்ட புகார்கள் வந்தால், கண்டிப்பாக நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. ம. சங்கரலிங்கம் : புகார் வந்ததா என்று நான் கேட்கவில்லை. என்னுடைய மூலக் கேள்வியில், "சென்னை மாநகராட்சிப் பள்ளி ஒன்றில் சாராய வியாபாரம் நடைபெறுவதுபற்றி அரசின் கவனத்திற்கு வந்துள்ளதா?" என்றுதான் கேட்டிருக்கிறேன். அப்படிப்பட்ட தகவல் எதுவும் அரசின் கவனத்திற்கு வரவில்லை என்று சொல்லுவது இந்த அவையை அவமதிப்ப தாக ஆகும் என்று குறிப்பிட்டு கேள்விகளுக்குரிய பதிலைத் தயாரிக்க தலைவர் அவர்கள் ஆணை பிறப்பிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள், "அவையை அவமதிப்பதாகும்" என்று சொல்லுவதைவிட "அவையை மதிப்பதாக ஆகாது" என்று சொன்னால் சரியாக இருக்கும்.

திரு. ம. சங்கரலிங்கம் : அப்படியே மாற்றிக்கொள்ளலாம்.

மாண்புமிகு திரு. சொ. நீ. இராசேந்திரன் : அரசின் கவனத்திற்கு வரவில்லை என்பதைச் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். மாநகராட்சிக் கூட்டத்தில் பேசப்பட்டவுடனே மாநகராட்சி அதிகாரிகள் அப்போது நடவடிக்கை எடுத்து ஆணையிட்டிருக்கிறார்கள். அதன் காரணமாக அரசுக்குத் தகவல் வரவில்லை. அவர்களே முடித்து விட்டதால் அரசுக்குத் தகவல் வரவில்லை.

திரு. ம. சங்கரலிங்கம் : அரசு என்று சொன்னவுடனே எல்லாம் அதிலே அங்கமாக வருகிறது. அரசு என்றால் அமைச்சரவை மாத்திரமல்ல. மாநகராட்சி அதிகாரிகள் அரசின் ஒரு அங்கம்தான். இத்தகைய விடைகள் தவறு செய்கிறவர்களுக்கு ஊக்கம் அளித்துவிடும் என்பதால்தான் நான் இதைச் சொல்கிறேன்.

### கடல் அரிப்பு.

* 78 வினா.—திரு. ம. சங்கரலிங்கம் : மாண்புமிகு கைத்தறி-கதர்த்துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) 1980 ஆகஸ்டில் கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ள சில கடற்கரை ஓர கிராமங்கள் கடல் அரிப்பால் பாதிக்கப்பட்டது பற்றி அரசின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டுள்ளதா ?



1981 பிப்ரவரி 13]

(இ) ஆம் எனில், எந்தெந்த கிராமங்கள் பாதிக்கப்பட்டன ?

(உ) அதனால் ஏற்பட்ட நஷ்டம் எவ்வளவு ?

(எ) கடல் அரிப்பைத் தடுப்பதற்கு அரசு எடுத்த நடவடிக்கை யாது ?

மாண்புமிகு திரு. சொ. நீ. இராசேந்திரன் : (அ) ஆம்.

(இ) விளவங்கோடு தாலுகாவில், இறயமன்துறை, பூத்துறை, சின்னத்துறை மார்த்தாண்டம்துறை, வள்ளவிளை, நீரோடித்துறை ஆகிய கிராமங்கள் கல்குளம் தாலுகாவில் குளச்சல் கிராமம் பாதிக்கப்பட்டன. அகஸ்தீஸ்வரம் தாலுகாவில் கோவளம் கிராமத்திலும் கடல் அரிப்பு ஏற்பட்டது.

(உ) விளவங்கோடு தாலுகாவில் 3 வீடுகள் முழுமையாகவும் 69 வீடுகள் பகுதியாகவும், கல்குளம் தாலுகாவில் 17 வீடுகள் முழுமையாகவும் 95 வீடுகள் பகுதியாகவும் சேதமடைந்தன.

(எ) கடல் அரிப்பை, மணல் மூட்டைகள் மூலம் தற்காலிகமாக நிறுத்த ஏற்பாடு செய்யப்பட்டது. நிரந்தரமாக இம்மாதிரி பாதிப்புகளைத் தடுக்கும் பொருட்டு, பல்வேறு இடங்களில் கடல் தடுப்புச் சுவர் கட்டும் வேலைகளைச் செய்ய உத்தேசித்து அவற்றிற்கான மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டு ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.

(முற்பகல் 10-40)

திரு. ம. சங்கரலிங்கம் : சுமார் 20 வீடுகள் முழு அளவிலும், சுமார் 100 வீடுகள் ஒரு பாதியளவுக்கும் பாதிக்கப்பட்டதாகச் சொல்லப்பட்டது. முழு அளவுக்குப் பாதிக்கப்பட்ட வீடுகளுக்கு திரும்பக் கட்டுவதற்கு என்ன உதவி அளிக்கப்பட்டது ? அதுபோலவே குறையளவுக்குப் பாதிக்கப்பட்ட வீடுகளைக் கட்ட என்ன உதவி அளிக்கப்பட்டுள்ளது என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சொ. நீ. இராசேந்திரன் : கல்குளம் தாலுகாவில் 17 வீடுகள் முழுமையாகவும், 95 வீடுகள் பகுதியாகவும் சேதமடைந்துள்ளன. விளவங்கோடு தாலுகாவில் 3 வீடுகள் முழுமையாகவும் 69 வீடுகள் பகுதியாகவும் சேதமடைந்துள்ளது ; சேதத்தின் மதிப்பு ரூபாய் 27,600 என்று கணக்கிடப் பட்டுள்ளது. பகுதியாகச் சேதமடைந்துவிட்ட வீடுகளுக்கு ரூபாய் 50-ம், முழுமையாகச் சேதமடைந்துவிட்ட வீடுகளுக்கு ரூபாய் 100-ம் உதவியாக அளிக்கப்பட்டது. அதற்கு ரூபாய் 10,200 உதவித் தொகையாகக் கொடுக்கப் பட்டுள்ளது.

திரு. ம. சங்கரலிங்கம் : முழுமையாகப் பாதிக்கப்பட்ட வீடுகளுக்கு ரூபாய் 100 கொடுத்தால் எப்படி வீட்டைத் திருப்பிக் கட்ட முடியும் ? ஒரு கட்டு ஓலை ரூபாய் 50 விற்கிறது, ஒரு மூங்கில் ரூபாய் 25 என்று விற்கிறது. அப்படி

திரு. க. மீனாட்சிசுந்தரம் : நிதியில்லாத ஊராட்சி ஒன்றியங்களிலிருந்து புரபோசல் அனுப்பினால் அரசு நிதி வழங்கும் என்று குறிப்பிட்டிருக்கிறார். புரபோசல் அனுப்பிய ஒன்றியங்களுக்கு இதுகாறும் அரசு சிறப்பு நிதியை வழங்கவில்லை என்பதை அரசின் கவனத்திற்குக் கொண்டு வந்து, அவற்றை உடனடியாக வழங்க அரசு ஏற்பாடு செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

அடுத்து, மாநகராட்சிகளிலும், நகராட்சிகளிலும் எந்த ஒரு ஆசிரியருக்கும் . . . .

மாண்புமிகு மேலவைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினர் தெளிவாக, ஒழுங்காக ஒரு கேள்வியைக் கேட்டுவிட்டு, அடுத்து ஒன்று என்று சொல்லுவது, முதல் கேள்விக்குத் துணைக் கேள்வியா? சொல்லுவதையெல்லாம் சேர்த்து ஒரே கேள்வியாகக் கேட்க வேண்டும்.

திரு. க. மீனாட்சிசுந்தரம் : உறுப்பினராகி மூன்றாண்டுகள்தான் ஆகிறது. பழக்கமில்லை. ஆகவே தயவுசெய்து மன்னிக்க வேண்டுகிறேன். மாநகராட்சியிலும், நகராட்சிகளிலும் எந்த ஒரு ஆசிரியருக்கும் இதுவரை வழங்கப்படவில்லை. இதற்குக் காரணம் அரசாணை வந்து சேரவில்லை என்று நகராட்சிகளில் சொல்லப்படுகிறது. ஆகவே உடனடியாக அரசாணையைப் பிறப்பித்து மாநகராட்சிக்கும், நகராட்சிகளுக்கும் அனுப்ப ஆவன செய்யப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : ஊராட்சி ஒன்றியங்களில் நிதி நிலைமை சரியில்லை என்றால், அரசாங்கத்தின் மூலமாக விசேட மானியம் கொடுக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. எந்தெந்த ஒன்றியங்களில் கொடுக்கப்படாமல் இருக்கின்றன என்பதைத் தெரிவித்தால், அவைகளைச் சரிபார்த்து உடனடியாகக் கொடுப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்படும். மாநகராட்சிகள், நகராட்சிகள், நகரியங்கள் போன்றவற்றில் உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று நிர்வாக இயக்குநர் கேட்டுக்கொண்டுள்ளார். எந்த இடத்தில் சரியாக நடவடிக்கை எடுக்கவில்லை என்று சொன்னால், உடனடியாகப் பரிசீலனை செய்து நடவடிக்கை எடுக்கப்படும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் : ஊராட்சி ஒன்றியப் பகுதிகளில், ஊராட்சி ஒன்றியப் பள்ளிகளும் இருக்கின்றன, தனியார் பள்ளிகளும் இருக்கின்றன. ஊராட்சி ஒன்றியங்களில் நிதி இல்லாததால், ஊராட்சி ஒன்றியப் பகுதிகளில் இருக்கின்ற தனியார் பள்ளியில் உள்ளவர்களுக்கு மிதி வண்டிக் கடன் வழங்கப்படவில்லை. இது குறித்து அரசின் நிலை என்ன? இது சம்பந்தமாக உள்ள குறைபாடுகளை நிவர்த்தி செய்ய அரசு முன்வருமா?





மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: மூலக் கேள்வி ஊராட்சி ஒன்றிய, நகராட்சி ஆசிரியர்களைப் பொறுத்தது. தனியார் பள்ளிகளைப் பற்றி தனியாகக் கேள்வி போட்டால், சரியான பதிலைச் சொல்லுகிறேன்.

திரு. க. மீனாட்சிசுந்தரம்: தனியார் பள்ளிகளுக்கு ஒரு இலட்சத்து இருபதாயிரம் ரூபாயைத் தனியாக ஒதுக்கி அரசு ஆணை பிறப்பித்திருக்கிறது. மாநில அளவில் இது போதவில்லை என்பதால், அதற்கு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். சென்னை மாநகராட்சிக்கு அந்த ஆணை வந்து சேரவில்லை என்று சொல்லப்படுகிறது என்பதையும் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

### சாராய வியாபார குற்றச்சாட்டு

* 77 வினா.—திரு. ம. சங்கரலிங்கம்: மாண்புமிகு கைத்தறி–கதர்த்துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) சென்னை மாநகராட்சிப் பள்ளி ஒன்றில் சாராய வியாபாரம் நடைபெறுவதுபற்றி அரசின் கவனத்திற்கு வந்துள்ளதா?

(இ) ஆம் எனில், அதன்மீது அரசு எடுத்த நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. சொ. நீ. இராசேந்திரன்: (அ) இதுவரை இத்தகைய தகவல்கள் ஏதும் அரசின் கவனத்திற்கு வரவில்லை.

(இ) இவ்வினாவிற்கு இடமில்லை.

திரு. ம. சங்கரலிங்கம் : 3—9—1980 அன்று மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் ஒரு கூட்டத்தில் பேசுகிறபோது, பல மாநகராட்சிப் பள்ளிகள் சட்ட விரோத நடவடிக்கைகளுக்கு உறைவிடமாக உள்ளன என்றும், சென்னையில் ஒரு மாநகராட்சிப் பள்ளியில் சாராய வியாபாரம் நடத்தப்பட்டது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது என்றும் பேசியிருக்கிறார்கள். 3—9—1980 தினமணி பத்திரிகையில் இச்செய்தி வெளி வந்திருக்கிறது. இப்படி ஓர் அமைச்சர் கண்டுபிடித்து கூட்டத்தில் பேசி, பத்திரிகையில் செய்தி வெளி வந்திருக்கிறபோது, அரசுக்குத் தகவல் வரவில்லை என்று கூறுவதில் என்ன பொருள் இருக்கிறது?

மாண்புமிகு திரு. சொ. நீ. இராசேந்திரன் : மாண்புமிகு எதிர்க் கட்சி உறுப்பினர் சொன்ன, 3—9—1980 அன்று நடந்த கூட்டத்தில் நானும் கலந்து கொண்டேன். மாண்புமிகு கல்வியமைச்சர் அவர்கள் அதைக் குறிப்பிட்டுச் சொன்ன உடனே நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. ஆனால் தனிப்பட்ட

கடல் அரிக்கின்ற இடங்களில் பாதிக்கப்பட்ட வீடுகளைக் கட்டிக்கொடுக்க அரசு முன்வருமா? இத்தகைய நிலை கன்னியாகுமரி மாவட்டத்தில் இருக்கின்றது. இங்கு கடல் அரிப்பு அடிக்கடி ஏற்படுவதனாலே, அந்தக் கடல் அரிப்பை நிரந்தரமாகத் தடுக்க அரசு மத்திய அரசிடம் நிதியுதவி கோரியுள்ளதா? அப்படியென்றால், அதன் நிலை எவ்வாறு உள்ளது?

மாண்புமிகு திரு. செ. நீ. இராசேந்திரன் : கன்னியாகுமரி மாவட்டத்தில் ஓலைகள் விலை குறைவாக இருப்பதால்தான், உடனடியாக வேலையை முடிப்பதற்கென்று முழுமையாகச் சேதம் அடைந்த வீடுகளுக்கு ரூபாய் 100 என்றும், பகுதியாகச் சேதம் அடைந்த வீடுகளுக்கு ரூபாய் 50 என்றும் உதவியளித்திருக்கிறோம். அதுவே சரியாக இருந்தது. கன்னியாகுமரி மாவட்டத்தில் விளவங்கோடு தாலுகாவில் 14 கிராமங்களையும், கல்குளம் தாலுகாவில் 12 கிராமங்களையும் அகத்தீஸ்வரம் தாலுகாவில் 13 கிராமங்களையும் சேர்ந்து 30 கிலோ மீட்டர் தூர அளவிற்குள் கடல் அரிப்பு இருக்கிறது. அந்தப் பகுதியில் இருக்கும் கடல் அரிப்பைத் தடுக்க தடுப்புச்சுவர் கட்டுவதற்கு என்று 590 லட்சம் ரூபாய் மதிப்பீடு தரப்பட்டு, திட்டம் ஒன்றை மாநில அரசு தயார் செய்து மத்திய அரசுக்கு அனுப்பியிருக்கிறது. இத்திட்டம் மத்திய அரசின் பரிசீலனையில் இருக்கிறது.

டாக்டர் இரா. சனார்த்தனம் : இதுபோல, கடல் அரிப்பு ஏற்பட்டு பிறகு தடுப்பதைக் காட்டிலும், சிங்கப்பூரில் கடற்கரைப் பகுதிகளை அதிகப்படுத்தி முன்னெச்சரிக்கையாகக் கடல் அரிப்பைத் தடுப்பதாகச் சொல்கிறார்கள். இது போன்று, கடல் அரிப்பைத் தடுக்க அரசு ஏதேனும் முயற்சி எடுக்குமா? அது பற்றி ஏதேனும் ஆய்வு பரிசீலனையில் இருக்கிறதா?

மாண்புமிகு திரு. செ. நீ. இராசேந்திரன் : மேல் நாடுகளில் கடல் அரிப்புகளை முன்னெச்சரிக்கையாகத் தடுப்பதுபோல், இந்த அரசும் கவனமாகப் பரிசீலித்துக்கொண்டிருக்கிறது. கடல் அரிப்பைத் தடுப்பதற்கான ஏற்பாடுகளைப் பற்றி ஆய்வு செய்து வருகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ம. சங்கரலிங்கம் : அமைச்சர் அவர்கள் ரூபாய் 590 லட்சம் மதிப்பில் ஒரு திட்டம் தயாரிக்கப்பட்டு மத்திய அரசினுடைய அனுமதிக்கு அனுப்பப்பட்டதாகச் சொல்கிறார்கள். இப்போது அந்தத் திட்டம் மத்திய அரசின் பரிசீலனையில் இருக்கிறதா? அதற்குப் பதில் வந்துள்ளதா?

மாண்புமிகு திரு. செ. நீ. இராசேந்திரன் : 1980 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதத்தில் இது சம்பந்தமாக நடவடிக்கை எடுக்கப்பட்டு திட்டம் மத்திய அரசுக்கு அனுப்பப்பட்டிருக்கிறது. அதன் முடிவு தெரிவதற்கு முன்பாக







உடனடியாக இதைச் செய்து கொடுக்க வேண்டுமென்று மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் நினைவு கூர்ந்ததையொட்டி தமிழக அரசு கீழ்க்குறிப்பிட்ட கிராமங்களில் ஏற்படும் கடல் அரிப்பைத் தடுக்க ஏற்பாடு செய்திருக்கிறது. இந்த இடங்களில் கடல் அரிப்பைத் தடுக்க 1979-80 ஆம் ஆண்டில் கடல் அரிப்புத் தடுப்புச் சுவர் கட்டுவதற்கு என்று சுமார் 2½ கோடி ரூபாய் செலவு செய்யவிருக்கிறது. ராசாக்கமங்கலம், இனயம், முள்ளூத்துறை, கடியப்பட்டிணம், பள்ளத்துறை, காந்தி மண்டபத்திற்கும் நீச்சல்குளத்திற்கும் இடையில் சிறிய விளைத்துறை, பெரிய விளைத்துறை, நீரடிகல்துறை, இராமன்துறை, வாணியக்குடி, பெரிய கல்துறை, கோவளம், மேல்மிடாலம், புத்தன்துறை, கேசவ புத்தன்துறை ஆகிய கிராமங்கள் உடனடியாகக் கவனிப்பதற்கு இந்த அரசு ரூபாய் 2½ கோடி ஒதுக்கியிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

## வள்ளுவர் கோட்டம்

* 72. வினா—திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் : மாண்புமிகு செய்தி அறநிலையத்துறை அமைச்சர் அவர்கள் கீழ்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :

(அ) வள்ளுவர் கோட்டத்தில், பார்வையாளர் கட்டணம் மூலமாக, 1980 ஜூன் வரை அரசுக்குக் கிடைத்த வருமானம், ஆண்டுவாரியாக எவ்வளவு?

(இ) இங்கு அமைக்கப்பட்டுள்ள அரங்கம் தனியார்களுக்கு, வாடகைக்குத் தரப்படுகிறதா?

(உ) ஆம் எனில், அதன் மூலம் அரசுக்குக் கிடைத்த வருமானம் எவ்வளவு?

மாண்புமிகு திரு. இராம. வீரப்பன் : (அ) வள்ளுவர் கோட்டத்தில் பார்வையாளர் கட்டணம் மூலமாக 1980 ஜூன் வரை அரசுக்குக் கிடைத்த வருமானம் ஆண்டு வாரியாகக் கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

| நிதி ஆண்டு | | | பார்வையாளர் கட்டணம் மூலம் கிடைத்த வருமானம் |
|---|---|---|---|
| (1) | | | (2) |
| 1976–77 | .. | .. | ரூ. [illegible],48,770·75 |
| 1977–78 | .. | .. | ரூ. 2,40,23[illegible]·50 |
| 1978–79 | .. | .. | ரூ. 2,99,145.50 |
| 1979–80 | .. | .. | ரூ. 3,48,6[illegible].50 |
| 1980–81 (ஜூன் முடிய) | .. | .. | ரூ. 99,160,50 |
| மொத்தம் | | .. | ரூ. 12,35,93[illegible]·75 |

(இ) வள்ளுவர் கோட்டத்தில் உள்ள அரங்கம், அரசுத் துறைகள், அரசுத்துறை நிறுவனங்கள், தனியார்கள் ஆகியோருக்கு சில நிபந்தனைகளுடன் வாடகைக்குத் தரப்படுகிறது.

(உ) வள்ளுவர் கோட்டம் அரங்க மண்டபம் ஒதுக்கீடு மூலம் அரசுக்குக் கிடைத்த வருமானம் ஆண்டு வாரியாக கீழே கொடுக்கப்பட்டுள்ளது:—

| நிதி ஆண்டு. (1) | அரங்க மண்டபம் ஒதுக்கீடு மூலம் கிடைத்த வருமானம் (2) |
|---|---|
| 1976–77 .. .. | |
| 1977–78 .. .. | ரூ. 1,750–00 |
| 1978–79 .. .. | ரூ. 3,000–00 |
| 1979–80 .. .. | ரூ. 9,000–00 |
| 1980–81 .. .. (ஜனவரி முடிய) | ரூ. 2,000–00 |
| மொத்தம் .. | ரூ. 15,750–00 |

**திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் :** இப்போது மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கொடுத்த விவரங்களின்படி வள்ளுவர் கோட்டத்தின் மூலமாக அரசுக்கு ஒரு சீரான வருமானம் வருவது தெளிவாகத் தெரிகிறது. இந்த வள்ளுவர் கோட்டத்திலே திருக்குறள் பற்றித் தொடர் சொற்பொழிவுகள் நடத்தவும், சாதாரண பாமர மக்கள் கூடப் புரிந்துகொள்ளும் வகையில் வகுப்புகள், வள்ளுவர் பற்றி ஒலி-ஒளி காட்சி போன்ற வசதிகளை ஏற்படச் செய்வதன் மூலம், மக்கள் வள்ளுவர் பற்றியும், திருக்குறளைப் பற்றியும் தெரிந்துகொள்ள அரசு ஏற்பாடுகள் செய்யுமா?

**மாண்புமிகு திரு. இராம. வீரப்பன் :** வருமானத்தைப் பற்றிய விவரங்கள் தரப்பட்டன. செலவுகள் பற்றித் தரவில்லை. வருகின்ற வருமானம் பற்றி மட்டும்தான் தெரிவிக்கப்பட்டது. மாண்புமிகு அங்கத்தினர் அவர்கள் சீரான வருமானம் வருகின்றது என்ற கருத்தைத் தெரிவித்தார்கள். ஆனால் வருமானம் வருகின்ற அளவுக்குச் சீரான செலவும் இருந்து கொண்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு அங்கத்தினர் அவர்கள் அங்கே வருகின்ற மக்களுக்கு திருக்குறள் சம்பந்தப்பட்ட விவரங்களைத் தெளிவுபடுத்துகின்ற அளவுக்கு வேண்டிய முயற்சிகளை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். வள்ளுவர் கோட்டத்தில் அப்படிப்பட்ட முயற்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டுமென்று சிலர் கருத்துக்கள் சொல்லியிருக்கிறார்கள். அது அரசின் பரிசீலனையில் இருந்து கொண்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.



**டாக்டர் இரா. சனார்த்தனம் :** வள்ளுவர் கோட்ட அரங்கிலே ஒலி கேட்பதற்குச் சரியாக இல்லை. ஆகவே, அந்த அரங்கை ஏர்கண்டிஷன் செய்யும் யோசனை அரசுக்கு உண்டா?

**மாண்புமிகு திரு. இராம. வீரப்பன் :** வள்ளுவர் கோட்டத்தில் ஒலி அமைப்புகள் சரியாக இல்லை என்ற அடிப்படையில், சுமார் 2½ லட்சம் ரூபாய் செலவு செய்து, இப்போது அதிலே சில திருத்தங்கள் செய்யப்பட்டிருக்கின்றன. அதன் காரணமாக இப்போது ஓரளவுக்கு ஒலி அமைப்புகள் சரி செய்யப்பட்டிருக்கின்றன. இருந்தாலும் அது முழுமையாக அடைக்கப்பட்ட அரங்காக, ஏர்-கண்டிஷன் செய்யப்பட்டதாக இருந்தால், முழுமையாக ஒலி அமைப்புகள் சரியாக இருக்கும் என்று நிபுணர்கள் தெரிவித்தார்கள். அந்த அரங்கை ஏர்-கண்டிஷன் செய்வது என்றால், பல லட்சக் கணக்கான ரூபாய்களை முதலீடு செய்யவேண்டிய அவசியம் இருக்கிறது. ஆகவே நிதி வசதிகளைப் பொறுத்தும், அதன் அவசியத்தைப் பொறுத்தும் தான் அரசு அதைப்பற்றிப் பரிசீலிக்க இயலும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. க. மீனாட்சிசுந்தரம் :** அரசியல் கலப்பு இல்லாத இலக்கிய, கலாச்சார குழுக்களுக்கு மட்டுமே வள்ளுவர் கோட்டத்தில் இடம் அளிப்பது என்ற அடிப்படையிலே தொடக்கக் காலத்திலே கோட்டம் தொடங்கப்பட்டதாக நான் அறிகிறேன். இப்போது ஊழியர்கள் மகாநாடுகள், கருத்தரங்குகள் எல்லாம் நடத்துவது என்பதற்காகவும் வாடகைக்கு விடுவதாகச் சொல்கிறார்கள். அது போன்ற எல்லாச் சங்கங்களுக்கும் வாய்ப்பளிக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. இராம. வீரப்பன் :** அரசியல் கலப்புள்ள நிகழ்ச்சிகளுக்குத் தரக்கூடாது என்ற விதிதான் இப்போதும் இருக்கிறது. ஆகவே அரசுத் துறை சம்பந்தப்பட்ட நிறுவனங்கள் அல்லது மற்ற அமைப்புகள், அரசியல் நிகழ்ச்சிகள் அல்ல என்கின்ற அந்த உறுதிப்பாட்டின் மீதுதான், அந்த அடிப்படையின் மீதுதான், வள்ளுவர் கோட்டத்தில் இட ஒதுக்கீடு செய்யப்பட்டு வருகிறது. அதற்கான வாடகையும் நிர்ணயிக்கப்பட்டு விதிக்கப்படுகிறது. மாண்புமிகு அங்கத்தினர் அவர்களுக்குத் தேவைப்பட்டு, ஏதாவது அப்படிப்பட்ட நிறுவனங்களுக்கு அனுமதி வேண்டுமென்று வந்தால் அந்த விதிகளுக்குட்பட்ட வேண்டுகோளாக இருக்குமானால், அது பரிசீலிக்கப்படும்.

[1981 பிப்ரவரி 13

(முற்பகல் 10.50)

**திரு. க. இராமமூர்த்தி :** வள்ளுவர் கோட்டத்தை ஏர்-கண்டிஷன் செய்வது பற்றி அமைச்சரவர்கள் குறிப்பிட்டார்கள். வள்ளுவர் கோட்டம் தமிழகத்தின் கலைப் பொக்கிஷமாக இருக்கிறது. இன்றைக்கு பெருமளவில் பார்வையாளர்கள் வந்து போகிற நிலையை, அரசு கொடுத்த தகவல்களிலிருந்து அறிகிறோம். அந்தக் கோட்டத்தை ஏர்-கண்டிஷன் செய்தால், மக்கள் வந்து, அதைப் பார்க்கின்ற வாய்ப்பு தவறிப் போகும் நிலை ஏற்படும். யாரும் உள்ளே போக முடியுமென்ற நிலை மாறிவிடும். எனவே ஏர்-கண்டிஷன் இல்லாமல், வேறு முறைகளில் வசதிகள் செய்து பார்வையாளர்கள் தடுக்கப்படாமல் இருக்கும் முறையில், ஒரு மாற்றுத் திட்டத்தை உருவாக்குவதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா ?

**மாண்புமிகு திரு. இராம. வீரப்பன் :** இப்போது நிகழ்ச்சி நடக்கிற அந்தக் கூடத்தைத்தான் ஏர்-கண்டிஷன் செய்ய வேண்டும். அந்தக் கூடத்தைப் பொறுத்தவரை, பார்வையாளர்கள் வந்து பார்க்கும்படியான சிறப்புக்கள் இல்லை. அதற்கு மேலே போய் சுற்றி வந்து, குறள்கள் பொறிக்கப்பட்டுள்ளதையும், வள்ளுவர் வீற்றிருக்கிற தேரையும் பார்க்க வேண்டும். எந்த நோக்கத்திற்காக இந்த அரங்கம் கட்டப்பட்டதோ, இந்தியாவிலேயே பெரிய அரங்கமாகத் திகழ வேண்டுமென்று எழுப்பப்பட்டிருக்கிறதோ, அந்த நோக்கத்தை நிறைவு செய்ய வேண்டுமென்ற வகையிலே 3,000, 4,000 பேர்கள் உட்கார்ந்து நிகழ்ச்சிகளைச் சிறப்பாகக் கேட்க வேண்டுமென்றால், அங்கேயுள்ள ஒலி அமைப்புகள் சரியாக இருக்க வேண்டும். பக்கத்திலே போக்குவரத்து அதிகமாக உள்ளதால், அதன் சத்தம் கட்டிடத்தையே அதிர வைக்கிற காரணத்தால், நிகழ்ச்சிகளைச் சரியாக மக்களால் கேட்க முடியவில்லை. அந்தச் சத்தத்தைத் தடுத்தால்தான், நிகழ்ச்சிகளைக் கேட்க முடியும். அது, அந்த அரங்கத்தை ஏர்-கண்டிஷன் செய்தால்தான் சாத்தியமாகுமென்று தெரிவித்திருக்கிறார்கள். அப்படி ஒருவேளை அங்கே குளிர்சாதன இயந்திரங்கள் பொருத்தப்பட்டால்கூட, பார்வையாளர்கள் வந்து பார்ப்பதற்கு எத்தவிதமான குந்தகமும் இராது.

**திரு. சி.ரா. லெட்சுமிகாந்தன்:** திருக்குறள் ஆய்விற்கு மூன்று பல்கலைக்கழகங்களுக்கும் நிதி ஒதுக்கப்படுகிறதா? அந்த ஆய்வு தொடர்ந்து நடைபெறுகிறதா ?



1981 பிப்ரவரி 13]

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** மூலக் கேள்விக்கும், மாண்புமிகு உறுப்பினரவர்கள் கேட்ட கேள்விக்கும் என்ன சம்பந்தம் ? வள்ளுவர் என்ற பெயர் வருவதைத் தவிர வேறு சம்பந்தமில்லை. எனவே இதை அனுமதிக்க மாட்டேன்.

**திரு. ஜேப்பியார்:** கலைவாணர் அரங்கத்திலே குறைந்த கட்டணத்திலே சினிமாக் காட்சிகளைக் காட்டுவதுபோல, வள்ளுவர் கோட்டத்திலும், அரசு விழாக்கள் இல்லாத நேரங்களில், நடனம், கலை நிகழ்ச்சிகளை இலவசமாகவோ, குறைந்த கட்டணத்திலோ நடத்த அரசு முயலுமா?

**மாண்புமிகு திரு. இராம. வீரப்பன்:** வள்ளுவர் கோட்டத்தைப் பராமரிக்கிற செலவையே இப்போது அரசால் சமாளிக்க முடியாமல் திணறிக் கொண்டிருக்கிறது. ஆகவே அந்தச் செலவைச் சமாளிக்க தக்க முறைகள் தெரிந்த பிறகு, இலவசக் கலை நிகழ்ச்சிகளை நடத்த முடியுமா என்பதுபற்றி அரசு பரிசீலிக்கும்.

Thiru G. VASANTHA PAI: Sir, instead of air-conditioning, may I suggest to the Hon. Minister to grow shady trees in the place? I have seen people coming and visiting the Valluvar Kottam and I have myself taken many people there and they have all appreciated the beauty of the place. I agree with the hon. Member Thiru K. Ramamoorthy that air-condition will spoil the beauty of the place. I request the Government to see whether trees could be grown and fountains could be installed so that the place is put to use in accordance with the principles of the great poet.

**மாண்புமிகு திரு. இராம. வீரப்பன்:** மாண்புமிகு உறுப்பினரவர்கள் ஆலோசனை வழங்கியிருக்கிறார்கள், கேள்வி கேட்கவில்லை. இப்போது அங்கே மரங்களை வளர்க்கிறோம். அங்கே மரம் வளர்க்கப் போதுமான தண்ணீர் இல்லை. ஆகவே மரங்களை வளர்க்கவும் கஷ்டமாக இருக்கிறது. மாண்புமிகு உறுப்பினரவர்களின் யோசனைப்படி மரங்களை வளர்த்தால்கூட, வளர்ந்த மரங்களே வள்ளுவர் கோட்டத்தின் அழகைக் கெடுக்கக்கூடும். எனவே அவைகளை மிகப் பெரிய மரங்களாக வளர்க்க முடியாது. ஆகவேதான் திறந்த வெளி அரங்காகவே இருக்க வேண்டுமென்று, முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன. எல்லா அமைப்புகளையும் முன்பே சரியாகக் கவனிக்காததால், அந்த இடம் அதற்கான சூழ்நிலைகளைப் பெற முடியாமல் இருக்கிறது. இருந்தாலும் அதை ஏற்படுத்திவிட்ட காரணத்தாலே, அந்தக் குறையை நிவர்த்திக்க வேண்டிய அவசியத்தில் இருக்கிறோம்.

**டாக்டர் இரா. சனார்த்தனம்: இம்மாதிரி சுற்றுலா விடுதிகளைக் கட்டும் போது, சிங்கவால் குரங்குகளால் சுற்றுலாப் பயணிகளுக்கு ஆபத்து வாரா இடங்களில் அவை கட்டப்படுமா?**

**மாண்புமிகு திரு. இராம. வீரப்பன்:** எப்போதுமே சிங்கவால் குரங்குகளால் மனிதர்களுக்கு ஆபத்து ஏற்படுவதில்லை. இன்னும் சொல்லப் போனால், மனிதர்களால்தான் சிங்கவால் குரங்குகளுக்கு ஆபத்து ஏற்படுகிறது என்பது உலகம் முழுவதுமே ஏற்றுக்கொண்ட ஒன்று.

**மாண்புமிகு மேலவைத் தலைவர்:** வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் இடப்பட்டிருக்கும் உடுக்குறி (*) அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

## 2. அறிவிப்புகள்.

### (1) ஆளுநரிடமிருந்து செய்தி.

**மாண்புமிகு மேலவைத் தலைவர்:** மேதகு ஆளுநரிடமிருந்து 12—2—1981 தேதியிட்ட கீழ்க்கண்ட செய்தி வந்துள்ளது :—

"நான் 21—1—1981 அன்று சட்டமன்ற உறுப்பினர்களுக்கு உரையாற்றியதற்காக தாங்கள் அனுப்பிய நன்றியறிவிப்புத் தீர்மானத்தினை மனநிறைவுடன் பெற்றுக்கொண்டேன்."

### (2) பேரவைத் தலைவரிடமிருந்து செய்தி.

**மாண்புமிகு மேலவைத் தலைவர்:** சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்டு, சட்டமன்ற மேலவையின் இசைவிற்காக மாண்புமிகு பேரவைத் தலைவரால் கையொப்பமிட்டு அனுப்பி வைக்கப்பட்டுள்ள கீழ்க்கண்ட சட்ட முன்வடிவுகளின் பிரதிகளை மாண்புமிகு பேரவைத் தலைவரிடமிருந்து பெற்றுள்ளேன்:

(1) தமிழ் நாடு 1981 ஆம் ஆண்டு கடன் நிவாரண (திருத்தச்) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 8/1981).

(2) 1981 ஆம் ஆண்டு பொது வக்ஃபுகள் (காலவரையறையை நீட்டித்தல்) தமிழ் நாடு திருத்தச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 3/1981).





(3) 1981 ஆம் ஆண்டு பச்சையப்பன் பொறுப்புக் கழக (நிர்வாகத்தை அரசு எடுத்துக் கொள்ளுதல்) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 19/1981).

## 3. உரிமைப் பிரச்சினை.

**விற்பனை வரி விதிப்பு மற்றும் கேளிக்கை வரி விதிப்பு கூடுதல் வரி போடுவது குறித்து முன்னதாகவே பத்திரிகைகளில் செய்தி வந்துள்ளது குறித்து.**

**மாண்புமிகு மேலவைத் தலைவர்:** விற்பனை வரி விதிப்பு குறித்த சில விவரங்களும் கேளிக்கை வரி விதிப்பு கூடுதல் வரி போடுவது குறித்தும் பத்திரிகைகளில் முன்னதாகவே செய்தி வந்துள்ளது குறித்து உறுப்பினர் திரு. தாமோதரன் அவர்கள் மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் மீதும், மாண்புமிகு நிதி அமைச்சர் மீதும் 10—2—1981 அன்று அவையில் உரிமைப் பிரச்சினை எழுப்ப அனுமதி கோரினார். அவர் தனது விவாதத்தில் 29—12—1980 தேதியிட்ட "இந்தியன் எக்ஸ்பிரஸ்" செய்தித் தாளில் குதிரைப் பந்தயத்தின் மீது கேளிக்கை வரி உயர்த்தப்போவது குறித்தும், 26—12—1980 தேதியிட்ட "இந்தியன் எக்ஸ்பிரஸ்" பத்திரிகையில் விற்பனை வரி மீது கூடுதல் வரி விதிப்பது குறித்தும் செய்திகள் வந்துள்ளதைச் சுட்டிக்காட்டி, அவ்விதமான வரி விதிப்பு விவரங்கள் அவைக்கு அறிவிக்கப்படு முன்பே செய்தித் தாள்களில் வெளிவருவது அவை உரிமை மீறிய செயலாகும் என்றும், அரசின் ஆண்டு நிதி நிலை அறிக்கை வருவதற்கு முன்பாக வரி விதிப்பு விவரங்கள் வெளியிடப்பட்டுள்ளது அவை உரிமை மீறிய பிரச்சினையாகும் என்றும் விவாதித்தார். மேலும் இது இரகசியப் பாதுகாப்புச் சட்டத்திற்கு விரோதமான செயல் என்றும் சுட்டிக் காட்டினார்.

மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் அவர்கள் பேசும்போது, "செய்தித் தாளில் வந்திருக்கும் செய்தி அரசால் சொல்லப்படவில்லை, அமைச்சராலும் சொல்லப்படவில்லை, அரசு அதிகாரிகளாலும் சொல்லப்படவில்லை" என்று கூறினார். "கிண்டி குதிரைப் பந்தய வரியை 20 சதவிகிதத்திலிருந்து 25 சதவிகிதமாக உயர்த்தியிருக்கிறோம். வித்தியாசம் 5 சதவிகிதம் தான். ஊட்டியில் 10 சதவிகிதமாக இருந்ததை 25 சதவிகிதமாக உயர்த்தியிருக்கிறோம். வித்தியாசம் 15 சதவிகிதம். இன்டர்வென்யூ பெட்டிங் வரி 10 சதவிகிதமாக இருந்ததை 25 சதவிகிதமாக உயர்த்தியிருக்கிறோம். வித்தியாசம் 15 சதவிகிதம். செய்தித் தாளில் 10 சதவிகிதம் ஏற்றப்போகிறார்கள் என்று வந்திருக்கிறது. அவர்கள் கற்பனையாக எழுதியிருக்கிறார்கள்" என்றும் கூறினார். மேலும், 5—1—1981

[1981 பிப்ரவரி 13

களக்காட்டில் சுற்றுலா விடுதி.

* 73 வினா.—திரு. ம. சங்கரலிங்கம் : மாண்புமிகு செய்தி-அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) திருநெல்வேலி மாவட்டம், களக்காட்டில் உள்ள வன விலங்கு சரணாலயத்தை ஒட்டி, சுற்றுலா விடுதி ஒன்று அமைக்கும் திட்டம் ஏதும் அரசிடம் உள்ளதா ?

(இ) ஆம் எனில், அத்திட்டத்திற்கு ஒதுக்கப்பட்டுள்ள தொகை எவ்வளவு ?

மாண்புமிகு திரு. இராம. வீரப்பன்: (அ) & (இ) தற்சமயம் இல்லை.

திரு. ம. சங்கரலிங்கம்: களக்காடு வன விலங்குச் சரணாலயத்தை ஒட்டி 1½ லட்சம் ரூபாய் செலவில் 40 படுக்கைகள் கொண்ட ஓய்வு இல்லம் கட்ட வேண்டுமென்று செயற்குறிப்பு அனுப்பப்பட்டிருக்கிறது. வன விலங்குத் துறை தலைமை அதிகாரிக்கு அதை அனுப்பியிருக்கிறார்கள். அங்கே சிங்கவால் குரங்கு என்ற இனம் இருக்கிறது. இந்தியாவில் அத்தகைய இனம் அழிந்து வரும் நிலையில், அவற்றைப் பாதுகாக்க வேண்டுமென்றும், பறவைகளின் சரணாலயத்தை அங்கிருந்து பார்க்கிற அளவிற்குக் கோபுரம் ஒன்றைக் கட்ட வேண்டுமென்றும் கோரி, அரசுக்கு அனுப்பப்பட்டிருக்கிறது. அது அரசின் கவனத்திற்கு வந்திருக்கிறதா?

மாண்புமிகு திரு. இராம. வீரப்பன்: இங்கே கேட்டிருக்கிற கேள்வி, "திருநெல்வேலி மாவட்டம், களக்காட்டில் உள்ள வன விலங்குச் சரணாலயத்தை ஒட்டி, சுற்றுலா விடுதி ஒன்று அமைக்கும் திட்டம் ஏதும் அரசிடம் உள்ளதா? ஆமெனில், அத்திட்டத்திற்கு ஒதுக்கப்பட்டுள்ள தொகை எவ்வளவு" என்பதாகும். எனவே இந்தக் கேள்வி சுற்றுலாத் துறைக்கு அனுப்பப்பட்டு, அங்கிருந்து தகவல்கள் பெறப்பட்டிருக்கின்றன. சுற்றுலாத் துறையிடத்தில் இப்படிப்பட்ட செயற்குறிப்பு ஒன்றுமில்லை. மாண்புமிகு உறுப்பினரவர்கள் இப்போது தெரிவிப்பதிலிருந்து, வனத் துறைக்கு அனுப்பியிருக்கிறார்களென்று தெரிகிறது. ஆகவே தனியாக ஒரு கேள்வி போடுவார்களானால், நான் வனத்துறையோடு தொடர்பு கொண்டு, அங்கே அப்படி ஏதாவது திட்டம் இருக்கிறதா என்று ஆய்ந்து, பதில் தர முடியும்.

திரு. ம. சங்கரலிங்கம்: களக்காட்டிலுள்ள வன விலங்குச் சரணாலயத்தைச் சுற்றி ஒரு சுற்றுலா விடுதி கட்டுவதற்கு செயற்குறிப்பு இருக்கிறதா என்று நான் கேட்டிருக்கிறேன். அது சுற்றுலாத் துறைக்கு அனுப்பப்பட்ட



1981 பிப்ரவரி 13]

தென்று சொன்னார்கள். எனவே இன்னொரு கேள்வி நான் போடுவதைவிட, அமைச்சரவர்களே வனத் துறையோடு தொடர்பு கொண்டு, அத்தகைய செயற்குறிப்பு இருக்கிறதா என்று பார்த்து, அதைச் செய்து, அங்கே சுற்றுலாப் பயணிகள் அதிகமாக வருவதற்கான சூழ்நிலைகளை உருவாக்குவார்களா ?

மாண்புமிகு திரு. இராம. வீரப்பன்: திருநெல்வேலி மாவட்டத்தைப் பொறுத்தவரையில், சுற்றுலாத் துறைக்கான வளர்ச்சிப் பணிகள் மேற்கொள்ளப்பட வேண்டுமென்ற ஒரு அடிப்படைக் கருத்து அரசின் சுற்றுலாத் துறையிடத்தில் இருக்கிறது. ஆகவே வனத் துறைக்கு அப்படிப்பட்ட கருத்து அனுப்பப்பட்டிருக்குமானால், அதைப் பரிசீலித்து, சுற்றுலாத் துறையின் நிதிவசதிக்கேற்ப, சுற்றுலாத் துறையோ, சுற்றுலா வளர்ச்சிக் கழகமோ அதைச் செய்ய இயலுமா என்பதைப் பரிசீலித்து, தக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

திரு. ம. சங்கரலிங்கம்: திருநெல்வேலி மாவட்டத்தில் சுற்றுலாத் துறை மையங்களைச் சிறப்பாக அமைப்பதற்கான திட்டம் அரசின் கவனத்தில் இருக்கிறதென்று அமைச்சரவர்கள் சொன்னார்கள். களக்காடு பகுதியில், தலையணைப் பகுதியிலே பெரிய அளவில் பாம்புப் பண்ணையும், சிவனார்ப் பேரியில் ஒரு மியூசியம், ஒரு லைப்ரரி, 40 படுக்கைகள் கொண்ட சுற்றுலா விடுதி ஆகியவற்றைக் கட்டவும், பூந்தகுளம் பகுதியில் பறவைகள் சரணாலயத்தைப் பார்க்க கோபுரமும் அமைப்பதற்காக திட்டம் வனத் துறையில் இருக்கிறது. அதைச் சுற்றுலாத் துறை பெற்று அல்லது இரண்டு துறைகளும் சேர்ந்து செய்வதற்கு அரசு முயற்சிகளை மேற்கொள்ளுமா?

(முற்பகல் 11-00)

மாண்புமிகு திரு. இராம. வீரப்பன்: சுற்றுலாத் துறை என்பது பெரும்பாலும் மாண்புமிகு உறுப்பினர்களாலும், பொது மக்களாலும் வரவேற்பைப் பெற்றிருக்கக்கூடிய ஒரு துறை. ஒரு விளம்பரத் துறையும் கூட. ஆனால் இதற்கு வரக்கூடிய நிதி ஆதாரங்கள் மிகவும் குறைவு. அதனால், பல திட்டங்களை நிறைவேற்ற வேண்டுமென்று எண்ணினாலும் கூட, அவற்றை நிறைவேற்ற முடியாத சூழ்நிலையில் இருக்கிறோம். களக்காட்டில் சுற்றுலா விடுதி அமைப்பதைப் பொறுத்தவரையில், திருநெல்வேலியில் வனவிலங்கு புகலிடங்கள் இரண்டு இருக்கின்றன. ஆகவே இப்படிப்பட்ட ஒரு கருத்துரு அரசுக்கு அனுப்பப்பட்டிருந்தால், அதை மீண்டும் பரிசீலித்து இருக்கிற நிதி வசதியையொட்டி, எப்போது அரசு அதைச் செயல்படுத்த முடியும் என்பதையும் பரிசீலித்துத்தான் அரசு அதற்கான முயற்சிகளை மேற்கொள்ளும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அன்று கேளிக்கை வரிச் சட்டத்தின்கீழ் ஓர் அறிவிப்பு செய்து அந்த வரி ஏற்றத்தை நடைமுறைப்படுத்திவிட்டபடியால் இதற்கும் நிதிநிலை அறிக்கைக்கும் எந்தவிதத் தொடர்பும் இல்லை என்று விளக்கினார்.

திரு. தாமோதரன் அவர்கள் எழுப்பிய பிரச்சினையை இரு பகுதிகளாகப் பிரிக்கலாம், (1) வரி விதிப்பு குறித்த விவரங்களை அவைக்கு வெளியிடும் முன்பு செய்தித் தாளில் வெளியிடுவது, (2) நிதிநிலை அறிக்கை அவைக்கு அளிக்கப்படுவதற்கு முன்பாக அதில் காணப்படும் விபரம் வெளியானது குறித்து.

அவை நடந்துகொண்டிருக்கும்போது கொள்கை குறித்த அறிக்கைகளை அவைக்கு முதலில் அளிக்கவேண்டுமென்பது மரபு. மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர், அவரோ அல்லது அரசோ அல்லது அரசு அதிகாரிகளோ இந்த விவரத்தைச் செய்தித்தாளுக்குத் தரவில்லை என்று விளக்கமாகக் கூறினார். மேலும் இச்செய்தி செய்தித்தாளில் பிரசுரிக்கப்பட்ட நாட்களில் அவைக் கூட்டம் இல்லை. எனவே அந்த மரபும் மீறப்படவில்லை.

பொதுநலன் குறித்து அறிக்கைகளைச் சட்டப்பேரவைகளுக்குத் தருமுன் சொல்வதானது அவையின் உரிமைப் பிரச்சினையில் வராது.

இரண்டாவதாக, நிதி நிலை அறிக்கையில் வரக்கூடிய விவரம் முன்னதாக வெளியிடப்படுவதும் அவையுரிமைப் பிரச்சினையில் வராது. இதுகுறித்து இங்கிலாந்து பாராளுமன்றத்தில் இரண்டு முன் மாதிரிகள் உள்ளன. அவை 'தாமஸ் வழக்கு', மற்றும் 'டால்டன் வழக்கு'-மாகும். இந்த இரண்டு வழக்குகளும் நிதி நிலை அறிக்கையின் விவரங்களை முன்னதாக வெளியிடப்பட்டுள்ளது குறித்தவையாகும். இந்த இரண்டு வழக்குகளிலும் எழுப்பப்பட்ட பிரச்சினை அவை உரிமை மீறிய பிரச்சினைகள் அல்ல என்று தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது. இந்தியப் பாராளுமன்றத்திலும், பிற மாநிலச் சட்டமன்றங்களிலும் இம்மாதிரியான தீர்ப்புகள் வழங்கப்பட்டுள்ளன.

"1960-ஆம் ஆண்டு நிதி நிலை அறிக்கை அவையில் வெளியிடப்படுவதற்கு முன் அதில் கண்டுள்ள அழகுபொருட்கள்மேல் விதிக்கப்படும் விற்பனை வரி குறித்த விபரம் முன்னதாகவே பத்திரிகையில் வெளிவந்தது பற்றி டாக்டர் ஏ. இலட்சுமணசாமி முதலியார் அவர்கள், 18—3—1960 அன்று ஓர் உரிமைப் பிரச்சினையை இந்த அவையில் எழுப்பியபோது, அப்போதைய தலைவர் டாக்டர் பி. வி. செரியன் அவர்கள் கீழ்க்கண்டவாறு தீர்ப்பளித்தார்:—





"வரவு-செலவுத் திட்டத்தில் வரி விதிப்புச் செயற் குறிப்புகள் குறித்த செய்தி அவைக்கு அளிக்குமுன்பு வெளியே பரவுவது பின்வரும் காரணங்களால் அவை உரிமை மீறிய பிரச்சினையாகக் கொள்ளமுடியாது" என்று அவர் தீர்ப்பளித்தார்.

காரணங்களாவன:

1. அவை முன் நிதி நிலை குறித்த செயற்குறிப்புகள் வைக்கப்படும் வரை அவைகள் அரசு இரகசியமாகுமே தவிர அவையின் உரிமையாகாது.

2. அத்தகைய செயற் குறிப்புகள் குறித்த செய்திகள் 'அமைச்சரவை இரகசியம்'. பொது மக்களின் நலனைக் கருத்தில் கொண்டு அவற்றை அமைச்சரவை பாதுகாக்க வேண்டுமென்றிருந்தபோதிலும், அதை முன்னதாக வெளியிடுவது அவையின் உரிமைப் பிரச்சினை ஆகாது.

3. அரசின் வரி விதிப்பு குறித்த செயற்குறிப்புகளை முதலில் சட்டமன்ற உறுப்பினர்களுக்குத் தெரிவிக்க வேண்டுமென்பது, ஏற்பளிக்கப்பட்ட அவை உரிமைகளில் சேர்க்கப்படவில்லை."

எனவே, திரு. தாமோதரன் அவர்கள் எழுப்பிய பிரச்சினை மேலெழுந்தவாரியாகப் பார்க்கும்போது, அவை உரிமை மீறிய செயல் அல்ல என்று தீர்ப்பு கூறுகிறேன்.

## 4. கவன ஈர்ப்பு.

(1) மாநில மொழி தெரியாத தலைமை நீதிபதி உயர்நீதி மன்றத்திற்கு நியமனம் செய்யப்பட்டதன் விளைவாக தமிழக மக்களிடையே நிலவும் பதட்ட நிலை குறித்து.

திரு. ஆ. நல்லசிவன்: தலைவர் அவர்களே, கீழ்க்கண்ட அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினைக் குறித்து மாண்புமிகு உணவு மற்றும் சட்ட அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்:

"மாநில மொழி தெரியாத தலைமை நீதிபதியை உயர் நீதிமன்றத்திற்கு தமிழக முதல்வர் ஆட்சேபம் தெரிவித்தும், நியமனம் செய்யப்பட்டதன் விளைவாக, எல்லா நீதிமன்றங்களிலும் தமிழில் நடவடிக்கைகளை நடத்துவது என்ற தமிழக அரசின் முடிவுக்கு ஏற்பட்டுள்ள தடங்கல் காரணமாக தமிழக மக்களிடையே நிலவும் பதட்ட நிலை குறித்து".

@ 447—44 ஆம் பக்கங்களில் இணைப்பு I ஆக அச்சிடப்பட்டுள்ளது.

[திரு. ஆ. நல்லசிவன்] [1981 பிப்ரவரி 1

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : தலைவரவர்களே, விவர அறிக்கை @ அவை முன் வைக்கப்பட்டுள்ளது.

திரு. ஆ. நல்லசிவன் : சென்னை உயர் நீதிமன்றத்தில் காலியாக இருக்கும் தலைமை நீதிபதி ஸ்தானத்திற்கு உயர் நீதிமன்ற நீதிபதிகளில் தமிழராக உள்ள ஒருவரை சீனியாரிட்டி அடிப்படையில் நியமிக்க வேண்டும். தமிழ் தெரிந்த ஒருவர் அப்படித் தலைமை நீதிபதியாக இருப்பதன் மூலம் எல்லா கோர்ட்டுகளிலும் தமிழை நடைமுறைப்படுத்த வேண்டுமென்ற அரசின் நோக்கம் நிறைவேறும் வகையில் இந்த அரசு மத்திய அரசை வற்புறுத்துமா?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாநிலங்களின், குறிப்பாக உயர் நீதிமன்றத் தலைமை நீதிபதியும் மற்றும் நீதிபதிகளும் அந்தந்த மாநில மொழி தெரிந்தவர்களாக இருக்க வேண்டுமென்ற கருத்தை மத்திய அரசுக்கு தமிழ்நாடு அரசு இரண்டு முறை ஏற்கெனவே வலியுறுத்தியிருக்கிறது. அது மட்டுமல்ல; தமிழக அரசினுடைய கொள்கையின் அடிப்படையிலும் கூட, தலைமை நீதிபதியாக இருந்தாலும் சரி அல்லது நீதிபதிகளாக இருந்தாலும் சரி, மாநில மொழி தெரிந்தவர்களாக அவர்கள் இருக்க வேண்டுமென்ற கருத்தையும் ஏற்கெனவே தமிழக அரசு மத்திய அரசுக்குத் தெரிவித்திருக்கிறது. ஏற்கெனவே இப்பிரச்சினை சட்டப் பேரவையில் எழுப்பப்பட்டு மத்திய அரசுக்கு இக்கருத்தை மாநில அரசு வலியுறுத்தி மீண்டும் தொடர்பு கொண்டிருக்கிறது.

(முற்பகல் 11-10)

(2) மூர் மார்க்கெட்டிலுள்ள வியாபாரிகள் தங்களது கட்டடத்தைவிட்டுக் காலிசெய்ய வேண்டும் என்று நோட்டீஸ் கொடுத்துள்ளது குறித்து.

திரு. ம. சங்கரலிங்கம் : மாண்புமிகு தலைவர் அவர்களே, கீழ்க்கண்ட அவசரப் பொதுமுக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினைக் குறித்து மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

"மூர் மார்க்கெட்டிலுள்ள வியாபாரிகள் மூன்று மாதங்களுக்குள் தங்களது கட்டிடத்தைக் காலி செய்து தர வேண்டுமென்று சென்னை கார்ப்பரேஷன் நோட்டீஸ் கொடுத்திருப்பதால் எழுந்துள்ள பிரச்சினை குறித்து".

@ 449-450 ஆம் பக்கங்களில் இணைப்பு II ஆக அச்சிடப்பட்டுள்ளது.



1981 பிப்ரவரி 18] [திரு. ம. சங்கரலிங்கம்]

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவர் அவர்களே, விவர அறிக்கை @ ஒன்று, அவையின் முன், வைக்கப்பட்டுள்ளது.

திரு. ம. சங்கரலிங்கம் : தலைவர் அவர்களே, விவர அறிக்கையில் 1,492 வியாபாரிகள் இருப்பதாகவும் இந்தப் பகுதியை ரயில்வே துறையினர் தங்களுக்கு வேண்டும் என்று அரசிடத்தில் கேட்டிருப்பதால் அவர்களுக்கு அந்தப் பகுதியைக் கொடுக்கும் வகையில் இந்த ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. அந்த வியாபாரிகளுக்கு மாற்று இடமாக கண்ணப்பர்திடல், சைடன்ஹாம் சாலை, அல்லிக்குளம் போன்ற பகுதிகளில் இடம் ஒதுக்கிக்கொடுப்பதாகச் சொல்லியிருக்கிறார்கள். அப்படி ஒதுக்கிய இடங்களிலேயும் எல்லாவிதமான வசதிகளையும் செய்து கொடுப்பதற்குக் காலதாமதமாகிறது என்று வியாபாரிகள் சொல்கிறார்கள். அவர்கள் விரும்பியவாறு அந்த வசதிகள் செய்து கொடுக்காமல், புதிய கட்டிடங்கள் கட்டுவதற்கு ஏற்பாடுகள் செய்யாமலிருப்பதை அவர்கள் ஒரு குறையாக எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். மேலும், நம்முடைய மூர் மார்க்கெட்டுக்குப் பக்கத்தில் இருக்கும் விக்டோரியா ஹாலுக்குப் பக்கத்தில் டெல்லியில் "பாலிகா பஜார்" இருப்பதைப் போன்று ஒரு பாதாள மார்க்கெட் ஏற்படுத்துவதற்கு அரசு முயற்சி செய்யுமா? அதுபற்றிய பரிசீலனையை இந்த அரசு மேற்கொள்ளுமா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : மூர்மார்க்கெட் வியாபாரிகளுடைய பிரச்சினை சம்பந்தமாக ஏற்கெனவே நானே அந்த வியாபாரிகளுடைய கூட்டத்தைக் கூட்டி இருக்கின்ற பிரச்சினைகளை 24—10—1980 ஆம் தேதியன்று விளக்கியிருக்கிறேன். அந்தப் பிரச்சினைக்கு முடிவு ஏற்படும் வகையில் அவர்களும் 'ஒரு மாதத்திற்குள் காலிசெய்து கொடுக்கிறோம்' என்று சொன்னார்கள். அதற்குப் பின்னர் கண்ணப்பர் திடல் என்ற இடத்தில் 413 பேருக்கு இடம் ஒதுக்கீடு செய்து, அவர்களுக்கு வேண்டிய குடிதண்ணீர் வசதி, தெரு விளக்கு வசதி, சாலை வசதி எல்லாம் செய்யப்பட்டது. அந்த இடத்திற்கு 413 பேர்களும் போகலாம். மற்றவர்களுக்கு மாற்று இடம் கொடுக்கும் வகையில் அல்லிக்குளத்திலே கட்டிடங்கள் கட்டுவதற்குண்டான திட்டங்கள் போடப்பட்டு வருகின்றன. அவைகள் முடிந்தவுடன் மற்றவர்களுக்கும் கொடுக்கப்படும். மூர் மார்க்கெட்டிலே இருப்பவர்கள் காலி செய்து கொடுத்தால், ரயில்வே எக்ஸ்பான்ஷன் திட்டத்தை விரைவாக்க முடியும் என்று ரயில்வே துறையினரும், மாண்புமிகு மத்திய ரயில்வே அமைச்சர் அவர்களும் நமது அரசுக்குக் கடிதம் எழுதியிருக்கிறார்கள். அதிலேயும், எவ்வளவு சீக்கிரமாகக் காலி செய்து கொடுக்க முடியுமோ அவ்

[மாண்புமிகு திரு. சி. பொன்னையன்] [1981 பிப்ரவரி 13

பேரவை சட்ட முன்வடிவு எண் 8/1981) ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்."

என்று முன்மொழிகிறேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர்: முன்மொழியப்பட்ட தீர்மானம் வருமாறு:
"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ் நாடு 1981 ஆம் ஆண்டு கடன் நிவாரண (திருத்தச்) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 8/1981) ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்".

* Thiru A. R. DAMODARAN: Sir, the Tamil Nadu Debt Relief (Amendment) Bill which is being introduced by the Government today seeks to amend Act 13 of 1980 which was brought forth last year. Right from 1975-76, we have had a spate of Debt Relief Acts and Ordinances. It started with Act 15 of 1976 wherein temporary relief was given to certain classes of agricultural labourers, landless labourers, rural artisant, etc. Then agiin we had another Act in Act No. 31 of 1976 where debt relief was provided to small farmers, landless labourers, rural artisans, etc. Over the years, in 1977, 1978 and 1979, various amendments were carried out to these Acts.

The Government of Tamil Nadu, when they introduced Act 40 of 1979, stated that it would be a comprehensive Bill for the removal indebtedness of certain classes of people. Even at that time, Members of the House pleaded with the then Law Minister, Thiru Narayanaswamy Mudaliar, that this was a very important Bill which should be referred to a Select Committee because many Members had doubts about the provisions of these Bills. Our request were not accepted at that time and Act 40 of 1979 was rushed through with the result that within hardly 8 or 9 months another comprehensive Act, Act 13 of 1980, was introduced by the Government which was also rushed through the House without reference to a Select Committee. Now, today we have L.A. Bill No. 8 of 1981 which seeks to amend Act 13 of 1980. I hope that the Hon. the Law Minister is aware of the confusion that is being created in our Law Courts. I believe that over 2 lakhs of petitions have been filed in Courts in respect of the Tamil Nadu Debt Relief Act. In many of the District Courts, from what I have discussed with the members of the legal profession, many of those who should have been able to claim relief



1981 பிப்ரவரி 13] [Thiru A. R. Damodaran]

under the Debt Relief Act have not been able to do so because of the many amendments which the Government have brought forth from time to time causing judicial confusion of the worst order.

Sir, this L.A. Bill No. 8 of 1981 seeks to make an amendment to the definition section (*d*) of Act 13 of 1980.

(முற்பகல் 11-20)

The law prescribes that 'debtor' means any person from whom any debt is due and whose annual household income does not exceed Rs. 4,800 per annum. According to the new Bill which the Hon. Minister has introduced, we now seek to extend this to persons who are paying income-tax, persons who are paying sales-tax, persons who are paying property tax, and persons who are paying profession tax and the result of this amendment will be that the law will be practically a dead letter in so far as many persons are concerned. I wish to point out that if these amendments are carried out, it will result in very few persons claiming benefit under the Tamil Nadu Debt Relief Act. I am reminded of an old couplet from a poem saying,

"What a tangled web we weave
when first we practise to deceive"

I use this word because right from 1975 we have been saying, "We are going to give debt relief to various classes of persons." Actually, if the Hon. the Law Minister calls for a report from the courts of our land, he will be able to find out the number of persons who are able to claim relief under the amendment which he has just now introduced. For example, even when Act 13 of 1980 was passed, we had Bill 40 of 1979 where all these provisions, which the Hon. Minister now seeks to introduce, had already been included.

(மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் தலைமை.)

My first question is this. When the Government consider such a comprehensive legislation, should it not study the provisions which have already been introduced in this regard and why those provisions were not included in Act No. 13 of 1980? I, therefore, wish to point out that all these errors of omission and commission arise, because the Government have not accepted our plea to refer this important Bill to a Select Committee. I wish

to reiterate this point because when we have important bills placed before the Legislature, it is not fair for the Government to expect that all of us would come fully posted with the details of previous legislation on this subject. In fact, I am grateful to the Legislature Secretariat which has helped me to get the previous enactments on the subject, namely, relief of indebtedness. I am not able to deal comprehensively with all these amendments that have been moved. I wish to state that in so far as the present amendment is concerned, it has been considerably lightened with the result that very few debtors are ging to get any relief from this Bill. I do not know what inspired the Government to bring forth this amendment. The amendments about the persons paying income-tax, sales-tax, agricultural income-tax, etc. are all too obvious amendments and all of them are automatically excluded, because they have more income. But so far as profession tax is concerned, I feel the amendment is not correct. It has been prescribed by the Government now that those with a half-yearly income of more than Rs. 1,200 will be excluded from the benefits of the Act. It means that a person who is easing Rs. 200 per month will not be able to claim relief under this Bill.

I have always held the view that if the Government are sincere in their belief that some degree of relief should be given to debtors, the extent of the relief should be up to Rs. 4,800 even in so far an annual income of Rs. 4,800, hen such people should also be a man earns Rs. 400 per month and if he pays profession tax on an anuual income of Rs. 4,800, then such people should also be entitled to claim relief under this Bill. If we take the present salary-structure, even the Last Grade Government Servants or the Grade IV Government servants as they are called, earn about Rs. 3,700 to Rs. 3,800 per annum. It is not fair to exclude this class also from the relief that is contemplated under this Bill. Of course, it is now too late. If it had been referred to a Select Committee, I might have been able to know the Government's position also as to why this particular clause had been introduced in this fashion. I would plead with the Government to consider whether in so far as profession tax is concerned, the limit could be raised from Rs. 1,200 to Rs. 4,800 per annum.

Then, Sir, this Bill also seeks to bring in the question of holding of agricultural lands. We have a separate Act, Act No. 31 of 1976 which deals with landless labourers, rural artisans and small



farmers. It was then said that a small farmer could hold half hectare of land growing plantation crops or one irrigated crop and one-fourth hectare of perennially irrigated land. One-fourth of an hectare means about 70 cents. Now, in this Bill which the Government have introduced, they have defined the agricultural holding as five acres of irrigated land or ten acres of unirrigated land worth Rs. 25,000. My point is that if the Government introduce different definitions in different enactments, the Courts are finding it extremely difficult because persons who claim relief under Act 31 of 1976 will be confused with L.A. Bill 8 of 1981. I can tell you that in the mofussil, in the District Courts, many Advocates have said that they are not able to get any relief because of the conflicting defintions that have been introduced in various legislations. My request would be that Act 15 of 1976, Act 31 of 1976 and the present L.A. Bill 8 of 1981, should all be comprehensively studied by the Law Department and if there are only conflicting definitions in these various enactments, they should be resolved so that judicial confusion may not result.

Sir, I would like to end by saying that I hope that this will be the final curtain on the amendments to the Tamil Nadu Debt Relief Act. I have mentioned to the Government before and, even at the risk of being misunderstood, I would, like to reiterate here that the more and more of legislation that they bring in regarding non-payment of debts incurred by various classes of society, although a certain relief is essential, they are inculcating in the people a feeling that this is going to be a perennial feature of our economy. The entire credit structure in our State has come to a stand still and he the rate of interest that is now being charged unofficially is nearly 28 per cent to 30 per cent. A loan of Rs. 100 by a farmer means that he has to give one bag of paddy as interest on that loan. What the Government are doing is that they are depriving the farming class of very essential inputs of credit. I hope that the curtain would have been drawn on amendments to the Tamil Nadu Debt Relief Act so that hereafter at least debts which are incurred legitimately will be repaid to those to whom they are due. Only recently, the Government have brought forth a Bill whereby even if we talk about not paying taxes, we are likely to be imprisoned for five years. I feel that the Hon. the Law Minister will have to have a big programme in the Sixth Five-Year Plan for constructing more jails in Tamil Nadu. He is introducing so much of punitive legislation. I hope

that we will bring to a finale all these amendments hat are being brought forth because I do not want to encourage the people of Tamil Nadu is not repaying debts. We have been traditionally brought up to think that a debt has to be repaid and the promise used to be extraced from he son of a dying father that he would pay the debts of the father. I would not like Government to change that philosophy of Tamilians by inculcating in them a feeling that debts, to whichever quarter they may be due, should not be repaid in the hope that they will be getting relief. Thank you.

திரு. க. இராமமூர்த்தி : மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு 1981 ஆம் ஆண்டு கடன் நிவாரண திருத்தச் சட்ட முன்வடிவினைப் பொறுத்த வரையில், இது பல்வேறு கிரமமான சங்கடமான, சட்டத்திற்கு ஏற்பில்லாத விளைவுகளைத்தான் உருவாக்கிவிடும் என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

அதுமட்டுமல்ல. இந்தச் சட்டம் 19—4—1980 தேதியிலிருந்தே அமுலுக்கு வந்துவிட்டதாகக் கருதப்பட வேண்டும் என்று இந்தச் சட்டத்திற்கு 'ரிட்ராஸ்பெக்டிவ் எபெக்ட்' கொடுக்கப்பட்டிருக்கிறது.

(முற்பகல் 11-30)

இதனுடைய விளைவுகளை எண்ணிப் பார்க்க வேண்டும். கடனில் மூழ்கித் தத்தளித்துக் கொண்டிருக்கிற ஏழைகளுக்கு அரசு சட்டபூர்வமாக உதவ வேண்டும் என்றுதான் கடன் நிவாரணச் சட்டமே கொண்டுவரப்படுகிறது. மாண்புமிகு உறுப்பினர் திரு. ஏ. ஆர். தாமோதரன் அவர்கள் கூறியதைப் போல, பெற்ற கடனைத் திரும்பச் செலுத்த வேண்டுமென்ற உணர்வைப் பெற்றவர்கள் தமிழகத்திலே இருக்கிறார்கள். குடும்பத் தலைவன் தான் பெற்ற கடனைத் திரும்பச் செலுத்த முடியாமல் இறந்து போய்விட்டால், அல்லது செலுத்த முடியாமல் போய்விட்டால், என் தந்தை பெற்ற கடனை நான் ஏன் கட்ட வேண்டுமென்று கேட்காமல் பிள்ளைகள் கடனை ஏற்று திரும்பச் செலுத்துகிற உணர்வைப் பெற்ற சமுதாயம்தான் தமிழகத்திலே இருந்து கொண்டிருக்கிறது. அப்படிப்பட்ட உணர்வை மதிக்கின்ற அளவிலே சட்ட பூர்வமாகக் கடனைத் தள்ளுபடி செய்வதற்காக அரசாங்கம் இந்தச் சட்டத் திருத்தத்தைக் கொண்டு வந்திருக்கிறது. இன்னும் சொல்லப் போனால், இந்தச் சட்டம் நிறைவேறிய பிறகுகூட இதனுடைய பலனை



சிலர் ஏற்றுக்கொள்ளுவதில்லை. சட்டப்படி ஏற்றுக்கொள்ள முடியும் என்றாலும் கூட, வாங்கிய கடனை எப்படிக் கொடுக்க மறுப்பது, வட்டியை எப்படிக் குறைத்துக்கொடுப்பது என்று சொல்லி, அவர்களாகவே வலியச் சென்று திருப்பிச் செலுத்தும் சூழ்நிலை இன்றைக்கு இருக்கிறது. அப்படிப் பட்ட சூழ்நிலையில் உள்ளவர்களுக்கு சட்டபூர்வமான பாதுகாப்புத் தர வேண்டுமென்றுதான் நாம் கருதுகிறோம். ஆனால் சட்டத்தைக் கொண்டு வருகிறபோது அந்தச் சட்டமே அவர்களுக்குத் தலைப் பளுவாக அமைந்து விடக் கூடாது. அரசு எடுக்கின்ற நடவடிக்கைகள் அவர்கள் வாழ்க்கையைக் கெடுக்கின்ற விளைவுகளை உருவாக்கக் கூடாது என்பதிலே அரசாங்கம் மிகுந்த எச்சரிக்கையோடும், கவனத்தோடும் இருக்க வேண்டும்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. ஏ. ஆர். தாமோதரன் அவர்கள் கடந்த காலத்திலே கொண்டு வந்த சட்டங்களைப் பற்றியும், அதனுடைய விளைவுகளைப் பற்றியும் விரிவாக எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். ஆகவே அதன் உள்ளே புக நான் விரும்பவில்லை. ஆனால் கடன் நிவாரணச் சட்டம் எப்படி இருக்க வேண்டும் என்பதற்கு முன்மாதிரியாக ஒன்றைக் குறிப்பிடுவது அவசியம் என்று கருதுகிறேன். காங்கிரஸ் ஆட்சிக் காலத்திலே மூதறிஞர் இராஜாஜி அவர்கள் முதலமைச்சராக இருந்தபோது கொண்டு வந்த கடன் நிவாரணச் சட்டத்தினால் பலன் பெற்ற ஆயிரக்கணக்கான, இலட்சக்கணக்கான மக்கள் நினைவிலே இன்னும் அந்தக் கடன் நிவாரணச் சட்டம் இருக்கிறது. அதற்குப் பிறகு பல ஆண்டுகள் அந்தச் சட்டத்தின் அவசியம் இல்லாமல் இருந்து, அதற்குப் பிறகு மீண்டும் பெருந்தலைவர் காமராஜ் அவர்கள் ஆட்சிக் காலத்திலே கொண்டுவரப்பட்டது என்பதை நினைவு படுத்துகிறேன். திரு. இராஜாஜி அவர்கள் கொண்டு வந்த சட்டம் எப்படிப் பட்ட சமுதாய மாற்றத்தை, பொருளாதார மாற்றத்தை உருவாக்கியது, அதனால் எவ்வளவு பேர் பயன் பெற்றார்கள் என்பதையெல்லாம் நாம் எண்ணிப் பார்க்க வேண்டும். அரசாங்கம் ஒரு நடவடிக்கையை எடுக்கிறபோது, அது முழுவதும் சமுதாயத்திற்குப் பலன் அளிக்கிற வகையிலே இருக்க வேண்டும். அப்படி இல்லாமல், கடன் நிவாரணச் சட்டத்தை ஆண்டுக்கு ஒரு முறை, அல்லது ஆறு மாதங்களுக்கொருமுறை அரசு கொண்டு வந்து கொண்டிருக்கும் என்ற உணர்வு இருந்தால், பல நல்ல நிலைமைகள் மாறி விடும். சமுதாயத்தினுடைய அமைப்பே (structure) அடிபட்டுப் போய்விடும்.

லவு சீக்கிரமாகக் கொடுக்க வேண்டும் என்று நமது மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்குக் கடிதம் அனுப்பியிருக்கிறார்கள். இப்படிப்பட்ட நிலையில் நான் ஒரு முடிவெடுத்து மத்திய அரசுக்குச் சீக்கிரமாக அனுப்ப வேண்டிய நிலைமையில் நாம் இருக்கிறோம். ஆகவேதான் அவர்களை உடனடியாக மாற்று இடங்களுக்குப் போக வேண்டும் என்று கேட்டிருக்கிறோம்.

திரு. ம. சங்காலிங்கம் : மாற்று இடம் கொடுப்பதோடு மாற்று இடத்தில் அவர்கள் போய் கடைகட்டிக் கொண்டு தங்கள் வியாபாரத்தைத் தொடங்கி நடத்துவதற்குரிய ஒரு கால அவகாசத்தையும் கொடுக்க வேண்டும். பொதுமக்களும், பிற பகுதியிலிருந்து மாநிலத் தலைநகரத்திற்கு வருகின்ற மக்களும் தங்களுக்குத் தேவைப்படும் பொருட்களை வாங்குவதற்குரிய ஒரு மைய இடமாக இருப்பதால், டெல்லியில் இருக்கும் 'பாலிகா பஜார்' போன்று மூர் மார்க்கெட்டின் பக்கத்திலே இருக்கும் விக்டோரியா ஹாலுக்குக் கீழே ஒரு மார்க்கெட் அமைக்கும் செயற்குறிப்பை அரசு பரிசீலிக்குமா ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : அவர்களுக்குப் போதுமான கால அவகாசம் ஏற்கெனவே கொடுக்கப்பட்டது. 24—10—1980 லேயே நான் அவர்களுடன் இதுபற்றி கூடிப்பேசினேன். ஏற்கெனவே 4 மாதங்கள் ஆகி விட்டன. இதற்குள்ளாக அவர்கள் மாற்று ஏற்பாட்டின்படி நடந்திருக்க முடியும். ஆனால், மாற்றிடம் அளித்த பிறகும் போகக்கூடாது என்ற எண்ணம் அவர்களுக்கு இருக்கக்கூடாது என்று சொல்லிக்கொள்கிறேன். அப்படிப் போகக் கூடாது என்ற எண்ணம் வளர்ந்தால், நமக்கு வரக்கூடிய திட்டம் நின்று விடும். உடனடியாகக் காலி செய்து கொடுக்கவில்லை என்று சொன்னால், 5 கோடி ரூபாய்க்கான திட்டம் வராமல் ஒத்திப்போடப்படும் நிலை ஏற்பட்டுவிடும். நான் மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். மூர் மார்க்கெட் வியாபாரிகள் யாராவது வந்தால், அவர்களிடத்திலும் இந்தக் கருத்துக்களை எடுத்துச்சொல்லவும்.

அடுத்து, டெல்லியில் இருப்பதுபோல 'பாலிகா பஜார்' போன்ற கடையை ஏற்படுத்த வேண்டும் என்று சொன்னால், உடனடியாக அது முடியாது. அதுபோன்ற கட்டிடம் கட்ட வேண்டும் என்று சொன்னால், குறைந்தது இரண்டாண்டுகளாவது ஆகும். மேலும், மாநகராட்சிக்குப் போதுமான நிதிவசதி இல்லை. அல்லிக்குளம் என்ற பகுதியில் பலமாடிக் கட்டிடம் கட்டலாம் என்று உத்தேசித்திருக்கிறோம்.

திரு. ம. சங்காலிங்கம் : மாண்புமிகு தலைவர் அவர்களே, ஒரு ஒழுங்குப் பிரச்சினை.



சட்டமன்ற மேலவை விதி 42-ன் கீழ் இந்த அவையில் அவசரப் பொது முக்கியதததுவம் வாய்ந்த பொருள பற்றி கவன ஈர்ப்புத் தீர்மானம் கொண்டு வாலாம். நான் கொண்டு வநத தீரமானம் இப்போது வந்திருக்கிறது. இதறகுமுன மாணபுமிகு உறுப்பினர் திரு. நலலசிவன் அவர்கள் கொண்டு வநத கவன ஈரபபுத் தீரமானம் எடுததுககொளளபபட்டது. விதி 42-ன் கீழ் கவன ஈர்ப்புத் தீர்மானம் கொண்டு வந்தால், அதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தான் பதில் சொல்ல முடியும். இதறகு முன்பெல்லாம் மாண்புமிகு அமைச்சர்கள் தான் பதில் சொல்லியிருக்கிறார்கள். ஆனால் அவர்கள் இந்த அவையிலே கவன ஈர்ப்புத் தீர்மானத்திற்கான பதிலைப் படித்து, அது எனனவென்று புரிந்துகொண்டு அதன்மேல் கேள்விகளைக் கேட்பதைவிட அநதப் பதிலை ஒரு அறிக்கையாக இந்த அவையிலே வைத்தால், அதை ஏற்கெனவே படித்துவிட்டு அதன் மீது கேள்விகளையும் விளக்கங்களையும் கேடபதறகு வசதியாக இருக்கும் என்று இந்த அவையின் அங்கத்தினர்களாகிய நாஙகள வேண்டுகோள் விடுத்தோம். அதனபடி இப்போது அறிக்கைகள் வைக்கப்படுகின்றன. ஆனால், மாண்புமிகு உறுப்பினர் திரு. நல்லசிவன் அவர்கள் கொண்டு வந்த கவன ஈர்ப்புத் தீர்மானத்திற்குக் கொடுத்திருக்கும் அறிக்கையில் மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய கையெழுத்து இலலை. தலைமைச் செயலாளர் திரு. கார்த்திகேயன் அவர்கள் கையெழுத்திட்டு அறிக்கை வந்திருக்கிறது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்லவேண்டிய அறிக்கைக்குப் பதிலாக தலைமைச் செயலாளர் அவர்கள் கையெழுத்துப் போட்டு அந்த அறிக்கையை இந்த அவையிலே வைக்கலாமா என்று தாங்கள் விளக்க வேண்டும்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : இதுவரையில் எப்படி அறிக்கைகள் வைக்கப்பட்டனவோ அதுபோல அறிக்கைகள் மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய பெயரில்தான் வர வேண்டும். அதுதான் என்னுடைய முடிவு.

## 5. அரசின் சட்டமுன்வடிவுகள்.

### (1) தமிழ் நாடு 1981 ஆம் ஆண்டு கடன் நிவாரண (திருத்தச்) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 8/1981).

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, "சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ் நாடு 1981 ஆம் ஆண்டு கடன் நிவாரண (திருத்தச்) சட்ட முன்வடிவு @ (சட்டமன்றப்

@ 451–455 ஆம் பக்கங்களில் இணைப்பு III ஆக அச்சிடப்பட்டுள்ளது.

இந்தச் சட்டத்தைப் பொறுத்த வரையில், நான் ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். இந்தச் சட்டத்தை ஓராண்டு காலத்திற்கு முன்னதாக வந்துவிட்டதாகக் கருத வேண்டுமென்று சொல்லப்பட்டிருக்கிறது. ஏற்கெனவே இருந்த சட்டத்தின் அடிப்படையிலே நீதிமன்றத்திற்குச் சென்று ஏற்கெனவே தீர்ப்பைப் பெற்றுவிட்டவர்கள், அந்தத் தீர்ப்பின் மூலமாகத் தப்பித்துக் கொண்டவர்கள் என்ன ஆவார்கள்? அவர்கள் தப்பித்துக் கொள்ளலாம். ஆனால் வழக்கறிஞர்கள் வாராமல் இருந்தார்கள், நீதிமன்ற வேலைப் பளுவின் காரணமாக வேகமாகச் செயல்படாத நிலை ஆகிய காரணங்களினால், அத்தகைய தீர்ப்பைப் பெறாமல் காலம் கடந்திருந்தால், அவர்களுக்குப் பலன் இல்லை என்ற நிலை இருந்தால், ஒரே பிரிவைச் சேர்ந்த இரண்டு பேரை அரசாங்கம் எப்படி நடத்துகிறது என்பதை நாம் எண்ணிப் பார்க்க வேண்டியிருக்கிறது. இப்படிப்பட்ட நிலைமை அரசாங்கத்தின் மீது அவநம்பிக்கை கொள்ளும் நிலைமையை உண்டாக்கும். ஒரு சிலர் தப்பித்துக்கொள்ள வேண்டுமென்ற எண்ணத்தில் அரசாங்கம் இப்படிச் சட்டம் கொண்டு வந்திருக்கிறதோ என்று வாதிடலாம். இந்த அரசாங்கத்தின் நடைமுறைகள் சந்தேகத்திற்கு அப்பாற்பட்டதாக இருக்க வேண்டும். 'Caesar's wife must be above suspician" நிலையில், இந்தச் சமுதாயத்தினுடைய நல்வாழ்வுக்காகக் கொண்டுவரப்பட்ட கடன் நிவாரணச் சட்டம் என்ற உணர்வு மக்களுக்கு வர வேண்டும். வேதனையோடு சொல்லுகிறேன், இந்தச் சட்டத் திருத்தம் அந்த உணர்வை உண்டாக்கவில்லை.

இப்படிப்பட்ட சட்டத் திருத்தத்தால் எற்படும் இன்னுமொரு ஆபத்தை எடுத்துச் சொல்ல விரும்புகிறேன். இந்தச் சட்டத்தின்படி நீதிமன்றங்களில் பல வழக்குகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. நடைமுறையில் உள்ள கடன் நிவாரணச் சட்டத்தின்படி, 'இந்தச் சலுகைகள் எனக்கு உண்டு, ஆகவே நான் செலுத்தத் தேவையில்லை' என்று நீதிமன்றத்திலே வழக்கு போடப்பட்டிருக்கிறது. அதற்கான ஸ்டாம்ப் ஒட்டி வழக்குகளைத் தாக்கல் செய்திருக்கிறார்கள், வழக்கறிஞர்களுக்குப் பணமும் கொடுத்தாகிவிட்டது. இதற்கிடையிலே இன்னுமொரு சட்டத் திருத்தத்தைக் கொண்டு வந்து அந்தச் சலுகைகள் அவர்களுக்குக் கிடையாது என்று சொல்லும் நிலைமை வருமானால், அவர்களுக்கு ஏற்பட்ட பணச் செலவை யார் ஈடு கட்டுவது? அவர்களாகச் சென்று வழக்குப் போட்டார்களா? இந்த அரசாங்கம் போட்ட சட்டத்தின் விளைவாக அவர்கள் வழக்கு மன்றத்திற்குப் போயிருக்கிறார்கள். இப்போது அந்தச் சலுகை அவர்களுக்கு இல்லை





யென்று அரசாங்கம் சொல்லியிருக்கிறது. இப்படிச் சொல்லுவதற்கு அரசாங்கத்திற்கு அதிகாரம் இருக்கிறது. ஆனாலும் இந்த அரசாஙகத்தின் சட்டத்தை நம்பிச் செலவு செய்திருக்கிறார்களே, அந்தச் செலவை யார் ஈடுகட்டுவது? இந்த உணர்வு இந்த அரசாங்கத்திற்கு ஏற்பட்டிருகக வேணடாமா என்று கேட்க விரும்புகிறேன். அதனால்தான் திரும்பத திரும்ப நான் சொல்லுகிறேன், சடடங்களைக் கொணடு வருகிறபோது, அதனுடைய விளைவுகளைத் தெளிவாகப் புரிந்துகொண்டு கொண்டுவர வேண்டும என்று. பொருளாதார ரீதியில் அடிபட்டிருக்கும் ஏழையெளியவாகளுக்கு உதவி செய்ய வேண்டுமென்று சட்டங்களைக கொண்டு வரும்போது மிகுந்த முன்னெச்சரிக்கையோடு கொண்டுவர வேண்டும். இந்தச் சட்டம் கடனபட்டவர்களுக்கு வீணான பளுவைத் தந்திருக்கிறது. இந்தச் சட்டத்தின் அடிப்படையிலே நீதிமன்றத்தில் உள்ள வழக்குகளுக்கு மீணடும் சார்டிபீகட் கொடுத்தாக வேண்டும். அதற்காக அவர்கள் பழையபடி ஒவ்வொரு இடமாகச் சென்றாக வேண்டும். இதைப்பற்றி திரும்பத் திரும்ப நான் சொலல விரும்பவில்லை. ஏற்கெனவே 'கிராம அலுவலர்களைப் பொறுத்தவரையில், அனுபவபட்டிருக்கிறோம். அதை வேறு சொல்லி அதிகமாகக் கோபத்தை உண்டாக்க வேண்டாமென்று கருதுகிறேன். இந்தக் கடன் நிவாரண மசோதாக்கள் அவர்களை மேலும் கடன்காரர்களாக மாற்றுகிற நிலையைத்தான் உண்டாக்குகின்றன. சட்டத்தால் நிவாரணம் கொடுக்க வேண்டுமென்று நினைக்கிறார்கள். இனால் இந்தச் சட்டம் ஏற்கனவே கடன் பெற்றிருக்கிற விவசாயிகளை, ஏழையெளியவர்களை மேலும் பெரும் கடன்காரர்களாக ஆக்கி அதிலிருந்து மீளமுடியாத அளவிற்கு அவர்களை அழுத்திவிடும் நிலைக்கு கொண்டுபோய் விடுகிறது. இந்தச் சட்டத்தை கொண்டுவர வேண்டுமென்ற உணர்வு நியாயமானதாக இருக்கலாம். ஆனால் உணர்வுகளுடைய விளைவு இப்படிப்பட்ட நிலைமையை உருவாக்குகிறது என்பதைச் சொல்ல விரும்புகிறேன்.

(முற்பகல் 11-40)

நான் இன்னொன்றையும் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். கடன் நிவாரணத் திருத்தச் சட்டம் என்பதைப் பொறுத்த அளவில், கடன் நிவாரணம் என்று வருகின்றபோது, இது ஏதோ பிச்சைக்காரர்களுக்கு, ஒன்றுமே இல்லாதவர்களுக்கு உதவுவதற்காக அரசு எடுத்திருக்கின்ற நடவடிக்கை என்று கருதுகிறார்கள். ஏழைகள் ஏழைகள் என்று நாம் சொல்கின்றபோது, அந்த ஏழைகள் என்பதற்கு ஒரு தனியான இலக்கணத்தை உருவாக்கு

வதாக நினைக்கிறோம். கடன் நிவாரணத்தைப் பொறுத்த அளவில், அது அல்ல உண்மை. யாருக்குக் கடன் கொடுத்திருக்கிறார்கள்? பிச்சைக்காரர்களுக்கா கடன் கொடுக்கிறார்கள்? ஒன்றுமே இல்லாதவர்களுக்கா கடன் கொடுக்கிறார்கள்? நீதி மன்றத்திற்குச் சென்று அதற்குப் பரிகாரம் காணக் கூடிய அளவுக்கு இருக்கக்கூடியவர்கள், பொருளாதார நிலையில் ஓரளவுக்கு வளமாக இருக்கக்கூடியவர்கள்தான் கடன் வாங்கக்கூடியவர்களாக இருக்கிறார்கள். நடுத்தர மக்கள்தான் ஏழ்மையான நிலையிலே இப்போது இருக்கிறார்கள். அப்படிப்பட்டவர்களுக்குத்தான், கடன்பட்டிருப்பவர்களுக்குத் தான் இந்தக் கடன் நிவாரணச் சட்டத்தின் பலனைக் கொடுக்க முடியும். ஏழைகளுக்குக் கடன் நிவாரணம் அளிக்க வேண்டும் என்பதற்கான சட்டம் இது. கொஞ்சம் ஏழையாக இருக்கும், உண்மையிலேயே பயந்து கொண்டிருக்கும் ஏழைகள் இன்னும் ஏழைகளாக ஆகாமல் தடுப்பதற்காகத் தான் இந்தக் கடன் நிவாரணச் சட்டம் இருக்க வேண்டும்.

இந்தக் கடன் நிவாரணச் சட்டம் பற்றிப் பேசும்போது, மாண்புமிகு அங்கத்தினர் திரு. ஏ. ஆர். தாமோதரன் அவர்கள் புரொஃபெஷன் டாக்ஸ பற்றிச் சுட்டிக்காட்டினார்கள். மாதம் ஒன்றுக்கு ரூ. 200 வருமானம் இருந்தாலும்கூட, அவர்களுக்குக் கடன் நிவாரணச் சட்டம் கிடையாது என்று சொன்னார்கள். கடன் நிவாரணச் சட்டத்தின் நோக்கம்தான என்ன? வெறும் விளம்பரத்திற்காகவா இந்தக் கடன் நிவாரணச் சட்டம்? எந்தச் சமுதாயத்தை நாம் வாழ வைக்க வேண்டுமென்று எண்ணினோமோ அந்த எண்ணம் உண்மையாக இருக்குமானால், அதனுடைய பலன்கள் அவர்களுக்குக் கிடைத்தாக வேண்டும். அந்த எண்ணத்திற்கு இந்தச் சட்டம் குறுக்கே நிற்கிறது என்றுதான் சொல்ல வேண்டும்.

இன்னொன்றையும் குறிப்பிட விரும்புகிறேன். தனியார் கடனாளி களையும், பொதுவான கடனாளிகளையும் ஒன்றுபடுத்துவதாகும். அதிலே மாண்புமிகு அங்கத்தினர் திரு. ஏ. ஆர். தாமோதரன் அவர்கள் சொன்னதை நான் முழுக்க முழுக்க ஆதரித்து நிற்கவேண்டிய கட்டாயத்திற்குள்ளாக்கப் பட்டிருக்கிறேன். விவசாயிகளுடைய கடன்களை அவர்களுடைய சொத்து மதிப்பீட்டை வைத்து மதிப்பிடுவது முறையல்ல. அவர்கள் ஏழை என்ற நிலை எப்போது வருகிறது? ஏழைகள் என்பதற்கு என்ன பொருள்? அவர் களால் கடனைத் திரும்பச் செலுத்த முடியவில்லை என்பதுதான். அதாவது அவர்கள் செய்கின்ற தொழில் விளைவாக, இயற்கையின் சீற்றங்களாலே அல்லது வேறு தவிர்க்கமுடியாத காரணங்களினாலே, அவர்கள் தொடர்ந்து





வருவாயை இழந்து நின்று, கடனாளியாகி, சொத்தையும் விற்றுக் கொடுக்க வேண்டிய நிலைமையில் இருக்கின்றார்கள். ஒருவர் இருவர் பாதிக்கப்பட் டிருக்கிறார்கள் என்பதற்காகச் சொல்லவில்லை. ஒரு மாநிலத்திலே பெரு வாரியானவர்கள் அப்படி இருக்கின்றார்கள் என்று சொல்லும்போதுதான் கடன் நிவாரணச் சட்டம் ஏற்படுகிறது. இப்படி இரு சாரார்களையும் சேர்த்து, ஒன்றுபடுத்தி ஒரு சட்டம் கொண்டுவருவது முறையாக இருக்காது என்பதைச் சொல்லிக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். என்னைப் பொறுத்தவரையில், 'ரிட்ராஸ்பெக்ட்டிவ் எபக்ட்' நியாயமற்றது என்பது மட்டுமல்ல, இப்படி 'ரிட்ராஸ்பெக்ட்டிவ் எபக்ட்' கொடுப்பதால் நம்மை நாமே குறை கூறுவதாக இருக்கிறது. இந்த அரசு சரியாகச் செய்ய வில்லை; முழுமையாக முன்னதாகவே சட்டம் கொண்டுவரவில்லை. ஒரு ஆண்டுக்கு முன்னால் கொண்டு வந்த சட்டத்தில் சொல்லாமல் விட்டு இப் போது சொல்வதற்கு யாரைத் தண்டிப்பது? அதிலே ஒருவருக்கு ஒரு சட்டம், இன்னொருவருக்கு ஒரு சட்டம் என்று இருக்கிறது. வழக்கு மன்றம் தீர்ப்பளித்துவிட்டது. அந்தச் சட்டத்தின்படி அவர்களுக்குப் பரிகாரம் உண்டு. அந்தத் தீர்ப்பு அளிக்கப்பட்டதற்குப் பிறகு பரிகாரம் இல்லை என்ற நிலை இருக்கிறது. தீர்ப்பளித்ததற்கு அப்புறம் எக்சிகியூஷன் இருக்கிறது. சட்டபூர்வமாக வழக்கு மன்றத்திலே இருந்தால், எக்சிகியூஷனில் இருப்பவர் களை இது எப்படிக் கட்டுப்படுத்தும்? இப்படிப்பட்ட நிலைமைகள் இருக்கு மானால், வழக்குகளை எப்படி ரீஓபன் செய்வது? நடைமுறைச் சட்டத் திற்கு ஏற்புடையதாக இருக்க வேண்டும். எனவே இந்த அரசைப் பொறுத்தவரையில், சட்டங்கள் கொண்டுவரும்போது, நீதிமன்றங்கள் வேலை யற்றுக் கிடக்கின்றன. இந்தச் சட்டங்கள் வந்தால் அவர்களுக்கு முழுமையாக வேலை கிடைத்துவிடும் என்ற அளவில் செய்யக்கூடாது. அப்படிப்பட்ட நிலைமைகள் இருக்கக்கூடாது.

குறிப்பாக இந்தச் சட்டத்தைப் பொறுத்தவரையில், இது தமிழகத்தின் பொருளாதார சீர்திருத்தச் சட்டமாக இருக்க வேண்டும். தமிழகத்திலே அடித்தளத்திலே இருக்கின்ற சமுதாயத்தினுடைய, மக்களுடைய நிலைமைகளை மாற்றி அவர்களை வாழ்விக்கின்ற அளவுக்கு இருக்க வேண்டும். இங்கே கொண்டு வந்திருக்கின்ற சட்டம் அந்த அளவுக்குச் செயல்படுத்தப்படவில்லை என்றால், நேர் எதிரான விளைவுகளை உண்டாக்கும். தமிழகத்திலே சாதாரண வாழ்வாவது வாழமுடியும் என்று வந்திருப்பவர்களை ஓட்டாண்டிகளாக பிச்சைக்காரர்களாக ஓட்டிவிடுகின்ற சட்டமாக இந்தச் சட்டம் அமைந்துவிடும் என்று சொல்லிக்கொள்கிறேன். இந்தச் சட்டத்தைப் பொறுத்தவரையிலே, இந்தக் குறைகளையெல்லாம்

பரிசிலனை செய்ய வேண்டும். இந்தச் சட்டத்திலேயுள்ள குறைகளையெல்லாம் நீக்கிவிட்டு, முழுமையான சட்டமாகக் கொண்டுவர வேண்டும் என்ற கோரிக்கையை விடுத்து அமைகிறேன்.

* திரு. ஆ. நல்லசிவன் : இந்தச் சட்டத்தைக் கொண்டு வரும்போது, 4,800 ரூபாய்க்குக் குறைவான வருமானம் உள்ளவர்களுக்கு நிவாரணம் செய்து கொடுத்தார்கள். அந்த நிவாரணத்தை வசதியுள்ளவர்கள் பெற்று விடக் கூடாது என்ற் நோக்கத்தோடு இந்தச் சட்ட முன்வடிவு சில திருத்தங்களைக் கொண்டு வந்திருக்கிறது. அது சம்பந்தமாக என் கட்சியின் சார்பிலே சில கருத்துக்களைக் கூற விரும்புகிறேன்.

முதலிலே, இந்தச் சட்டத்தின்கீழ் கடன் நிவாரணத்திற்கு மனு செய்யக்கூடிய தேதியை 1980-ஆம் வருடம், டிசம்பர் மாதம் 31-ஆம் தேதியோடு முடித்துவிட்டார்கள். அதற்குள் சுமார் 2 லட்சம் மனுக்கள் வந்துள்ளன என்று மாண்புமிகு அங்கத்தினர் திரு. ஏ. ஆர். தாமோதரன் அவர்கள் இங்கே கூறினார்கள். இன்னும் கிராமங்களிலே இந்தச் சட்டத்தினால் கிடைக்கக்கூடிய பலனை உணர்ந்து மனு செய்ய வேண்டியவர்கள் பலர் இருப்பதாகத் தெரிகிறது. பல மாவட்டங்களில் பல கிராமங்களில் அப்படிப்பட்டவர்கள் இன்னும் இருப்பதாகத் தகவல் இருப்பதால், மனுச் செய்வதற்கு என்று அந்தத் தேதியை இன்னும் ஒரு ஆறு மாத காலம் தள்ளி நீடிக்க வேண்டும் என்று அரசைக் கேட்டுக் கொள்கிறேன். அதுவும் குறிப்பாக அரசுத் தரப்பிலிருந்து திருத்தங்கள் என்ற அடிப்படையிலே வந்தவைகளை அவர்கள் அறிந்திருக்க முடியாது. அவர்கள் அப்படி நிவாரணம் இருக்கிறது என்று தெரிந்து மனுச் செய்வதற்கு நேரம் இருக்க வேண்டும். இந்தக் கடன் நிவாரணச் சட்டத்தின் பலனை அவர்கள் அனுபவிக்க வேண்டும். ஆகவே அவகாசத்தை மேலும் ஒரு 6 மாத காலத்திற்கு நீட்டிக்கவேண்டும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, இன்னொன்றைக் குறிப்பிட விரும்புகிறேன். மாண்புமிகு அங்கத்தினர் திரு. ஏ. ஆர். தாமோதரன் அவர்கள்கூடச் சொல்லியிருக்கிறார்கள். அதாவது, புரோபஷன் டாக்ஸ் கட்டுபவர்களைப் பொறுத்த வரையில், ரூ. 4800-க்குக் கீழே வருமானம் வருகின்றவர்களுக்கும் இந்தக் கடன் நிவாரணம் உண்டு என்ற அடிப்படையிலே, அதிலே எவ்வித குழப்பமும் இல்லாத அளவுக்குத் திருத்தம் செய்ய வேண்டும் என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். அதை நான் ஆதரிக்கின்றேன்.

இதிலே இன்னொரு விஷயத்தைப் பற்றிச் சொல்ல விரும்புகிறேன். அது என்னவென்றால், ஒருவர் வருடத்திற்கு ரூ. 1,200 வரை வீட்டு வாடகை வரக்



கூடிய அளவுக்கு வீடு வைத்திருந்தால், அந்த வீட்டிலேயே, சொந்த வீட்டிலேயே குடியிருப்பவராக இருந்தால், அவருடைய மற்ற வருமானத்தோடு இந்த ரூ. 1,200 ஐயும் கூட்டி, அவர்களுக்கு ரூ. 4,800 வந்தால் அவர்களுக்கு இதிலே நிவாரணம் இல்லாமல் இருக்கிறது. அதாவது அவர்களுக்கு மற்ற வருமானம் 3,600 ரூபாய் வந்து, மாதம் ரூ. 100 வருமானம் வரக்கூடிய வீட்டிலே குடியிருந்தால், நிவாரணம் இல்லை. அவர்களுக்கு ரூ. 4,800க்கு மேல் வருமானம் என்று காரணம் காட்டி நிவாரணமில்லாமல் போய்விடும். அவர்களுக்கும் இந்த நிவாரணம் கிடைக்க வழிசெய்ய வேண்டும். அதற்கேற்ப திருத்தம் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, விதவையாக இருந்தால், மைனர் குழந்தையாக இருந்தால், அவர்களுக்கு சொத்து மதிப்பு ரூ. 25,000-க்குள் இருந்தால், அவர்களுக்குத் திருப்பிக் கிடைக்கும் என்று கூறப்பட்டுள்ளது. அதிலே விதவைகள், குழந்தைகள் என்று இருப்பதை வைத்துக்கொள்ளலாம். ஆனால் பொதுவாக Female person என்றிருப்பதை எடுத்துவிடவேண்டும். சிலர் பெண்கள் மூலம் கடன் கொடுத்து லேவாதேவி பண்ணுகிறார்கள். அவர்களும் இதிலே தப்பித்துக்கொள்ள வாய்ப்பிருக்கிறது. இப்படி விதவைகளுக்கு, குழந்தைகளுக்குப் பாதுகாப்பு அளிக்கின்ற நேரத்தில் இவர்களிடம் கடன் பெற்றவர்களுக்கு நிவாரணம் இல்லாமல் போகிறது. ஆகவே இது பாரபட்சமாகும். 4,800 ரூபாய் வருமானத்துக்குக் குறைந்த அனைவருக்கும் கடன் நிவாரணம் கிடைக்க வேண்டும். ரூ. 25,000-க்கும் குறைவான மதிப்புள்ள சொத்துக்களை வைத்திருக்கும் கடன் கொடுத்தவர்களுக்கு அரசாங்கத்திலிருந்து பணம் கொடுத்தால், இருவருக்கும் பாரபட்சமில்லாமல் சலுகை காட்டியதாக இருக்கும். ஆக விதவைகளுக்கும், மைனர் குழந்தைகளுக்கும், கடன் வாங்கியவர்களுக்கும் இதனால் நன்மை செய்ய முடியும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். நான் கொடுத்திருக்கும் திருத்தங்களையும் சேர்த்து நிறைவேற்றி, மக்களுக்கு கடன் நிவாரணச் சட்டத்தின் பலன் பூரணமாகக் கிடைக்க வழிசெய்ய வேண்டுமென்று கேட்டுக்கொண்டு அமைகிறேன். வணக்கம்.

(மூற்பகல் 11-50)

திரு. ஜி. சுவாமிநாதன் : மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவரவர்களே, கடன் நிவாரண திருத்தச் சட்ட முன்வடிவின்மீது ஓரிரண்டு கருத்துக்களை, மாண்புமிகு உறுப்பினர் திரு. தாமோதரன் அவர்கள் சொன்னதையடுத்து, குறிப்பிட விரும்புகிறேன். இந்தச் சட்டத்திற்கு எத்தனை திருத்தங்கள் வந்திருக்கின்றன என்பதுபற்றி மாண்புமிகு உறுப்பினர் திரு. தாமோதரன் அவர்கள் சொன்னார்கள். முன்னாலே இந்த அவையிலே

திருத்தச் சட்டம் வந்தபோது, அப்போது சட்ட அமைச்சராக இருந்த திரு. நாராயணசாமி முதலியார் அவர்கள், முழுமையான சட்டமாக மிக விரைவிலே கொண்டு வரப்படும், இனி இப்படிப்பட்ட திருத்தங்கள் வராதென்று சொன்னார்கள். அப்படி அவர்கள் மேலவையிலே பேசியதை மாண்புமிகு சட்ட அமைச்சரவர்கள் பார்க்கலாம். எனவே அவ்வப்போது ஒரு சட்டம் வருகிறபோது, முழுமையான சட்டம் வர வேண்டுமென்று உறுப்பினர்கள் கேட்பதும், உடனே, முழுமையான சட்டம் வரப் போகிறதென்று அமைச்சர்கள் உறுதியளிப்பதும் கடந்த பல ஆண்டுகளாக நடந்து வருவதைப் பார்க்கிறோம். இப்படி திருத்தச் சட்டங்கள் வருகின்ற காரணத்தால் ஏற்படுகின்ற சங்கடங்களை மாண்புமிகு உறுப்பினர் திரு. ஏ. ஆர். தாமோதரன் அவர்கள் சொன்னார்கள். இன்னொரு கருத்தையும் நான் சொல்ல விரும்புகிறேன். கடன் நிவாரணச் சட்டம் என்று வருகிறபோது, தனியார்கள் கொடுத்த கடனைத் திருப்பிக் கொடுக்க வேண்டாமென்று சொல்லுகிறோம். குத்தகைதாரர்கள் குத்தகை அளிக்க வேண்டியதில்லை என்று சொல்லி, மாரட்டோரியம் பல ஆண்டுகளாகக் கொடுக்கிறோம். ஆனால் அரசுக் கடனானாலும், வங்கிக் கடனானாலும், கூட்டுறவுக் கடனானாலும் திருப்பிக் கொடுக்க வேண்டும். யாராவது அவற்றைக் கொடுக்க வேண்டாமென்றால், 5 ஆண்டுகள் உள்ளே தள்ளுவோம் என்று சொல்கிற நிலைமைகள் இருக்கும்போது, அடிப்படையிலே ஒரு தவறான கருத்து நாட்டு மக்கள் மத்தியிலே உருவாகுமென்பதைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

தமிழ்நாடு 1981 ஆம் ஆண்டு கடன் நிவாரணத் திருத்தச் சட்டத்தை நான் ஆதரிப்பேன் என்றாலும், ஒரு கருத்தை முடிவாகச் சொல்ல விரும்புகிறேன். கடன் நிவாரணச் சட்டம் கொண்டு வருவதற்கு அடிப்படையான காரணம் "ரூரல் பாவர்ட்டி" என்று சொல்லுகிறார்கள். ரிசர்வ் வங்கி ரூரல் சர்வே என்று ஒன்றை நடத்தியது. கடந்த 2, 3 ஆண்டுகளில் கிராமங்களிலுள்ள ஏழைகளின் நிலைமைகள் மிகவும் மோசமாக இருக்கின்றன என்று அந்த சர்வேயில் சொல்லுகிறார்கள். திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி நடந்துகொண்டிருந்தபோதிலும், அதைத் தொடர்ந்து அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி நடக்கிறபோதும், கிராமங்களிலுள்ள மக்களின் ஏழ்மை நிலை அதிகமாகிக்கொண்டு வருகிறது என்ற நிலையில் பிரதமரிடம் அதிகமாக நிதி கேட்கும் நிலை இருக்கிறது. முதலமைச்சர் அவர்கள் டெல்லிக்குச் சென்றிருக்கிறார்கள். கிராமங்களிலுள்ள ஏழை மக்கள், நகரங்களிலுள்ள ஏழை மக்கள், அதாவது Below the poverty line வறுமைக் கோட்டுக்குக் கீழே இருப்பவர்கள் எத்தனை பேர் இருக்கிறார்கள் என்று



பார்த்து, எந்த மாநிலத்தில் அதிகமாக இருக்கிறார்கள் என்று பார்த்து தனியாக நிதி ஒதுக்கீடு செய்ய வேண்டுமென்று கேட்கிறார்கள். இந்த நிலையில் நாட்டிலுள்ள மக்களின் ஏழ்மை நிலையைப் போக்குவதற்கு, இப்படிப்பட்ட சட்டங்களைக் கொண்டு வருவதால் எந்தவிதப் பலனும் ஏற்படுவதில்லை. சாதாரண மக்களின் ஏழ்மை நிலையைப் போக்க, அவர்கள் கடன் வாங்காமல் வாழ்க்கை நடத்த தக்க வழி முறைகளை அரசு ஏற்படுத்த வேண்டும். வாங்கிய கடனைத் திருப்பிக் கொடுக்க வேண்டாமென்று சட்டத்தைப் போடுவது நாட்டுக்கும் நல்லதல்ல, மக்களுக்கும் நல்லதல்ல, அரசுக்கும் நல்லதல்ல என்று சொல்லி, என் பேச்சை முடித்துக்கொள்கிறேன்.

திரு. ம. சங்கரலிங்கம் : மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவரவர்களே, அவையிலே கொண்டு வரப்பட்டிருக்கிற கடன் நிவாரணச் சட்டத்தின் உணர்வினை நான் வரவேற்கிறேன். ஆனால் அரசு என்ன நினைக்கிறதோ, அதைச் செய்து முடிக்கிற அமைப்பு இந்தச் சட்டத்திலே இல்லை என்பது என்னுடைய கருத்து. காரணம், அரசு எதையோ நினைக்கிறது, தான் நினைத்ததையே அமுல்படுத்துவதற்கு முற்படுகிறது. ஆற அமர ஆலோசனை செய்து சமுதாயத்தின் பல்வேறு பிரிவினர்களின் கருத்துக்களைத் தெரிந்து, சட்டங்களை இயற்றுவதுதான் இதுவரை உள்ள மரபு. அந்த மரபை மீறுவதால் வருகிற தொல்லைதான் இப்படிப்பட்ட திருத்தங்கள். இதற்கு முன்பு, இதே அமைச்சரவை சார்பிலே கடன் நிவாரணச் சட்டம் வந்தபோது, நாங்கள் சொன்னது, 'இந்தக் கருத்தை ஆதரிக்கிறோம், ஆனால் சொல்லியிருக்கிற திருத்தங்கள் நீங்கள் நினைக்கிற விளைவைக் கொண்டுவராது', என்பதுதான். சமுதாயத்திலுள்ள ஒவ்வொரு பிரிவினருக்குமுள்ள தொல்லைகளைப் பரிபூரணமாகத் தெரிந்துகொள்ளாமல் செய்யப்பட்ட சட்டத் திருத்தமாகும், கோட்டையிலே உட்கார்ந்துகொண்டு இதைத் தீட்டுகிறோம், எனவே இதைப் பொறுக்குக் குழுவிற்கு அனுப்பி, இரண்டு அவை உறுப்பினர்களும் மாநிலத்தின் பல பகுதிகளுக்குச் சென்று, கடன் பெற்றவர்கள் நிலை, ஒவ்வொரு மாவட்டத்திலும் உள்ள சூழ்நிலை இவைகளைப் பார்த்து, சட்டம் முழு வடிவம் பெற வேண்டுமென்று சொன்னோம். ஆனால், அது தேவையில்லை, இது காம்பிரஹென்சிவ் சட்டம் என்று நீதித் துறையிலே மிகுந்த அனுபவம் பெற்ற அன்றைய சட்ட அமைச்சரவர்கள் சொன்னார்கள். நாங்கள் நம்பினோம். நாங்கள் சொன்ன கருத்துதான் உண்மையான கருத்து, அவர்கள் சொன்னது தவறு என்று அரசே ஏற்றுக்கொள்வதுபோல, இன்றைக்குத் திருத்தங்களைக் கொண்டு வந்திருக்கிறது. இப்போதுகூட சட்டம் அறிமுகப்படுத்தப்பட்டிருக்கிறது. நாங்களும் பெரிய நிபுணர்களல்ல. எங்களுக்குத்

தெரிந்ததைச் சொல்லுகிறோம். இதனால் என்னென்ன விளைவுகள் ஏற்படுமென்பது மக்களைச் சந்திக்கும்போதுதான் தெரியும். அனுபவம் காலத்திற்குக் காலம் மாறுபடுகிறது என்ற பொதுத் தத்துவத்தை ஒப்புக்கொள்ளவோமானால், இவ்வளவு வேகப்பட வேண்டிய அவசியமில்லை. இப்போதே ஒரு பொறுக்குக் குழு போட்டு, அக்குழு மாவட்டங்களில் சுற்றுப் பயணம் செய்ய வேண்டும். மாண்புமிகு சட்ட அமைச்சரவர்கள் தலைமையில், 5, 6 சிட்டிங்ஸ் நடத்தி, எல்லோருடைய கருத்துக்களையும் தெரிந்து, முழு வடிவம் கொடுத்து, திருத்தம் தேவையென்றால் அதைச் செய்யலாம், இல்லையென்றால் இதையே மன்றத்தில் நிறைவேற்றலாம். அப்படிச் செய்தால், இன்னும் 6 மாதங்கள் கழித்து இன்னொரு திருத்தத்தைக் கொண்டுவர வேண்டியதில்லை. ஆற அமர ஆலோசித்து, முறையாகச் சட்டங்களை நிறைவேற்றாததால், பல சிக்கல்கள் எழுகின்றன. இப்போது மனு கொடுப்பதற்கான காலம் முடிந்து விட்டது. இந்தச் சட்டத்தின்படி நிவாரணம் அளிப்பதில் பாதகம் வந்து விடும் என்று அஞ்சுகிறோம், வசதி உள்ளவர்கள் பலன் பெற்று விடுவார்களென்று அஞ்சுகிறோம் என்று சொல்லி, இந்தச் சட்டத் திருத்தத்தை, 'ரெட்ராஸ்பெக்டிவ் எபக்ட்' கொடுத்து, கொண்டு வருகிறோம். இந்தச் சட்டத் திருத்தத்தைப்பற்றி இப்போதுதான் நாங்கள் அறிய முடிந்தது. உடனே அதைப் படித்து, எங்கள் கருத்துக்களைச் சொல்லியிருக்கிறோம். இனி பல பகுதிகளுக்கு நாங்கள் செல்லும்போது, இன்னும் பல விளைவுகளைப் பார்க்க முடியும். அவற்றை இப்போதே சொல்ல முடியாது. எனவே சட்டங்களை நிறைவேற்றுவதில் இப்போது கையாளப்படும் முறை கண்டிக்கத் தக்கது. இந்தச் சட்ட முன்வடிவை வேகமாக நிறைவேற்றுகிறார்கள். கடன் நிவாரணச் சட்டம், ஆகவே வேகமாக நிறைவேற்றுகிறோமென்று சொல்லலாம். வேகமாகச் செய்ய வேண்டியதைச் செய்யலாம். சட்டங்களை நிறைவேற்றுவதில் அந்த முறையைக் கைவிட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். எந்தச் சட்டத்தைக் கொண்டு வருவதாக இருந்தாலும், பொறுக்குக் குழுவிற்கு அனுப்பி, பொறுக்குக் குழு உறுப்பினர்கள் அதற்கான விவரங்களைத் தயார் செய்து, முடிவெடுத்து, அதற்குப் பிறகு சட்டங்களை நிறைவேற்ற வேண்டும். ஒருநாள் அங்கே கொண்டு வருகிறோம், மறுநாள் இங்கே கொண்டு வருகிறோம். நாங்கள் என்ன சொன்னாலும், 'ஆம்' என்று சொல்லுபவர்கள் அதிகமாக இருப்பதால், 'இல்லை' என்று சொல்லுபவர்கள் குறைவாக இருப்பதால், நிறைவேற்றிவிடலாமென்று எண்ணும் நிலையை அரசு கொள்ளக்கூடாது. மாண்புமிகு அமைச்சரவர்கள் சட்டத் துறையில் வல்லுநராக இருப்பதால், இந்த முறையை ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். நாங்கள் சட்டத்தின் உணர்வுகளை ஆதரிக்கிறோம். ஒவ்



வொருவரின் வருமானத்தையும் நிர்ணயிக்கும்போது அவர்களுடைய வீட்டு வருமானத்தையும் சேர்த்து, 4,800 ரூபாய் என்று சொல்லியிருக்கிறார்கள். அதை எப்படி நிர்ணயிப்பது? ஒருவர் வருவாய் கூடுதல் என்பார், ஒருவர் இல்லை என்பார். அதை எப்படி நிர்ணயிப்பது? சட்டத்தை நிறைவேற்றிய பிறகு, பல்வேறு நெருக்கடிகள் வரும்போது, அதற்காக 'ரூல்ஸ் ஃபிரேம்' செய்கிறார்கள். அவை கோர்ட்டில் அடிபடும்போது, திடீரென்று இன்னொரு சட்டம் கொண்டுவரும் அவல நிலை உருவாவது கேலிக் கூத்தாக இருக்கிறதென்று தெரிவித்துக்கொள்கிறேன். 10 நாட்களுக்குள் நிறைவேற்றாவிட்டால், ஆபத்து ஒன்றும் வந்துவிடப் போவதில்லை. எனவே உடனடியாகப் பொறுக்குக் குழு போட்டு, சிந்தனை செய்து, அடுத்து வரும் சட்டமன்றத் தொடரில் இதை நிறைவேற்ற வேண்டுமென்று சொல்லி, இந்தச் சட்டத்தின் உணர்வுகளை ஆதரித்து, இதனைச் செம்மையாக நிறைவேற்ற இன்னும் ஆற அமர சிந்திக்க அவகாசம் கேட்டு, அமைகிறேன்.

(நண்பகல் 12-00)

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவரவர்களே, 19-11-1980 அன்று பிறப்பிக்கப்பட்ட இந்த அவசரச் சட்டத்தை என்னென்ன காரணங்களின் அடிப்படையில் பிறப்பித்தோம் என்பதைப்பற்றி இந்தச் சட்ட முன்வடிவினுடைய எக்ஸ்பிளனேட்டரி நோட்டில் தெளிவாகக் குறிப்பிட்டிருக்கிறோம். 19—4—1980 அன்று அமுலுக்கு வந்த சட்டத்தைப் பொறுத்தவரையில், 1—1—1980-க்கு முன்னால் வாங்கப்பட்டு, நிலுவையாக உள்ள கடன்காரர்களுக்கு 31—12—1979-க்கு முன்னால் ஆண்டு நிகர வருமானம் ரூபாய் 4,800-க்கு உட்பட்டிருந்தால், அவர்களுக்குக் கடன் நிவாரணம் அளிக்க வேண்டுமென்ற அடிப்படையில் கொண்டுவரப்பட்டது. ஆனால் இந்தச் சட்டத்தை நடைமுறைப்படுத்தும் போது எங்கோ வருமான வரி, விற்பனை வரி, வீட்டு வரி, சொத்து வரி, தொழில் வரி போன்றவைகளையெல்லாம் கணிசமான அளவுக்குச் செலுத்துபவர்கள் கூட, இந்தச் சட்டத்தின் பலனை தவறான வழியில் அடைய முயல்கிறார்கள் என்கிற புகார் அரசுக்கு வந்ததால்தான் மீண்டும் இந்தத் திருத்தத்தைக் கொண்டுவரவேண்டிய அவசியம் ஏற்பட்டது.

(மாண்புமிகு மேலவைத் தலைவர் தலைமை)

அது மட்டுமல்லாமல், ஏற்கெனவே கொண்டுவரப்பட்ட சட்டம் 18-10-1980 வரைதான் என்று குறிப்பிட்டுச் சொல்லியிருந்தாலும் கூட, கிராமப்புற

[திரு. சி. பொன்னையன்] [1981 பிப்ரவரி 13

என்றால் இங்கே 20 ஏக்கர் வருகிறது. அதுபோல் 1 லட்சம் ரூபாய் என்று பார்க்கும்போது. தஞ்சையைப் பொறுத்தவரையில், 40 ஏக்கர் வருகிறது. இப்படிப்பட்டவர்கள்கூட இதன் மூலம் பயன்பெற முற்படுவார்கள். பொதுவாக இப்படிப்பட்டவர்கள் கிராமப்புறத்திலே 80 பெர்சன்ட் இருப்பதால், அவர்களும் இதன் மூலம் பலன் பெற ஈடுபடக்கூடிய நிலை ஏற்படும் என்பதால், ஏதோ ஒரு விதத்தில் வருவாய்க்கு நாம் கட்டுப்பாடு விதித்தாக வேண்டியவர்களாக இருக்கிறோம். நாம் 25 ஆயிரம் ரூபாய் மதிப்புள்ள வீட்டுக்கு 1,200 ரூபாய் வருமானம் என்று வரையறுத்துள்ளோம். திரு. நல்லசிவன் ஒன்றைத் தெளிவாகச் சுட்டிக் காட்டினார்.

(பிற்பகல் 12.10)

மாண்புமிகு உறுப்பினர் திரு. நல்லசிவன் அவர்கள் பேசும்போது, இன்னொன்றைச் சொன்னார்கள். 'ஃபீமேல் பர்சன்' பற்றியது அது.
"the market value of the property owned by such widow, minor child or female person"
என்று மெயின் ஆக்ட்லே தெளிவாகக் குறிப்பிடப்பட்டிருக்கிறது.
'Female person' means ........ whose marriage has been dissolved by a decree of divorce or has been declared null and void or annulled by a decree of nullity ....... "
இதையும் அதோடு சேர்த்துப் படிக்க வேண்டும். அந்த அடிப்படையிலேதான் அந்த வார்த்தை போடப்பட்டிருக்கிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. எ. ஆர். தாமோதரன் அவர்கள் பேசும்போது, 31/1976 மற்றும் 13/1980 போன்ற பல கடன் நிவாரணச் சட்டங்கள் வந்து பல பிரச்சினைகள் எழுப்பப்பட்டிருப்பதாகச் சொன்னார்கள். 21/1976 ஐப் பொறுத்தவரையில் அதனுடைய பலனை ஜூலை 29, 1976 வரை கடன்பட்டவர்கள் பெற முடியும். 13/1980-ஐப் பொறுத்தவரையில், அதனுடைய பலனை ஜனவரி 1, 1980 வரை பெற முடியும். அந்த அடிப்படையிலேதான் இது கொண்டுவரப்பட்டிருக்கிறது. மேற்சொன்னவைகள் போன்ற கடன் நிவாரணச் சட்டங்களைக் கொண்டு வந்து. இனிமேலும் 'அனாமலீஸ்' ஏற்படாமல் இருப்பதற்காகத்தான், மக்கள் மத்தியிலே இருந்து வருகின்ற பிரச்சினை என்னவென்பதை ஆய்ந்து அந்த அடிப்படையிலே ஒரு முழு நிவாரணம் அளிப்பது நல்லது என்று மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. இராமமூர்த்தி, திரு. தாமோதரன், திரு. சங்கரலிங்கம் போன்றவர்கள் சொன்னார்கள். அந்தக் கருத்தை நான் ஏற்றுக்கொள்கிறேன். இதுபோன்ற பிரச்சினைகள்



1981 பிப்ரவரி 13] [திரு. சி. பொன்னையன்]

வரும்போது 'செலக்ட் கமிட்டிக்குச் சென்று வந்திருந்தால், இந்தப் பிரச்சினைகள் எழாமல் இருந்திருக்கும். நடைமுறையிலே இப்போது சட்டத்தை அமுல்படுத்தியபோது எழுந்த பிரச்சினைகளை வைத்துத்தான் இந்தச் சட்ட முன்வடிவு இப்போது கொண்டுவரப்பட்டிருக்கிறது. எனவே, மாண்புமிகு உறுப்பினர்கள் இதை ஏற்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. க. இராமமூர்த்தி: ஒரேயொரு விளக்கம் மட்டும் நான் கேட்கிறேன். இந்தக் கடன் நிவாரணச் சட்டத்தின் அடிப்படையிலே தங்களுக்கு இது பொருந்துகிறது என்ற உணர்விலே நீதிமன்றத்திற்குச் சென்றவர்களுக்கு, இன்றைக்கு இந்தச் சட்டத்திற்கு 'ரிட்ராஸ்ப்பெக்டிவ் எஃபெக்ட்' கொடுப்பதால் அது அவர்களுக்குப் பொருந்தாத நிலையில் இருப்பதால், இந்தச் சட்டத்தைக் கொண்டு வந்ததனால் நீதி மன்றத்திற்குச் சென்றவர்களுக்கு ஏற்பட்ட செலவுத் தொகையை, நஷ்டத்தை இந்த அரசு ஏற்றுக் கொள்ளுமா, ஏற்றுக் கொண்டு அவர்களுக்கு நிவாரணம் அளிக்குமா ?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : அது ஒரு தனிப்பட்ட பிரச்சினை. அதுபற்றி, மாண்புமிகு உறுப்பினர் அவர்களிடம் நான் தனியாகக் கலந்து பேசுகிறேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : அவை முன் உள்ள பிரச்சினை—

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ் நாடு 1981 ஆம் ஆண்டு கடன் நிவாரணத் (திருத்தச்) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 8/1981) ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்".

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

சட்ட முன்வடிவு, பிரிவு வாரியாக, ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

பிரிவு 2, அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

பிரிவு 3.

Thiru K. RAMAMOORTHY: Sir, I move the following amendment standing in my name :—

"In clause 3, sub-clause (iii) for the words "whether let out or in the occupation of the owner' insert the word 'are' ".

"In clause 3, sub-clause (vii) Exdlanation for the words 'which, in the opinion of the authority prescribed in this behalf' substitute the words 'on the basis of the price fixed according to the Government's Revenue rules'."

**Thiru A. J. DOSS:** Sir, I second it.

*திரு. க. இராமமூர்த்தி:* தலைவர் அவர்களே, என்னுடைய திருத்தத்தை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஏற்றுக்கொள்வார்கள் என்று கருதுகிறேன். காரணம் பல்வேறு நிலைமைகளையெல்லாம் அவர்கள் விளக்கிச் சொல்லியிருக்கிறார்கள். ஏறக்குறைய இதே உணர்விலேதான் அவர்கள் செயல்படுகிறார்கள் என்பதால், அவர்கள் இதை ஏற்பார்கள் என்று நான் நினைக்கிறேன். சொத்து மதிப்பு என்று வரும்போது, குடியிருக்கின்ற வீடுகளுக்கு மதிப்பு போட்டிருக்கிறார்கள். இந்தச் சட்டத் திருத்தம் எந்த அளவுக்கு மக்களுக்கு உதவியாக இருக்கிறது என்று சொன்னால், கிராமப்புறங்களிலே சொந்தமாக வீடு வைத்திருப்பவர்கள், அந்த வீடுகளை வாடகைக்கு விடாமல் அவர்களே குடியிருந்தாலும், இந்தச் சட்டத்தினுடைய பலன்களை அவர்கள் பெற முடியாமல் போகிறார்கள். ஒரு விஷயத்தை நாம் எல்லோரும் நன்றாக அறிந்திருக்கிறோம். நமது கிராமப்புறங்களிலே எப்போதோ பாட்டன் காலத்திலே கட்டிவிட்டுப் போன வீடுகள் நிறைய இருக்கின்றன. அந்த வீடுகளை விற்றால் தங்களுக்கு மரியாதைக் குறைவு. அவமானம் என்று கருதிக்கொண்டு, வீடு இருக்கின்ற அமைப்புக்கும் வாழுகின்ற வாழ்க்கைக்கும் சம்பந்தமில்லாமல், பட்டினி கிடந்துகூட அந்த வீடுகளைக் காப்பாற்றிக் கொண்டு, அவைகளை ரிப்பேர் கூடச் செய்ய முடியாத அளவுக்கு வாழ்ந்து கொண்டிருக்கும் மக்கள் ஏராளமாக இருக்கும் மாநிலம் நம்முடைய தமிழகம். ஆகவே, அப்படி ஒரு சென்டிமென்ட் காரணமாக வைத்துக்கொண்டிருக்கும் வீட்டின் மதிப்பு எவ்வளவு இருக்கும் என்று சொல்லி அவர்களுக்கு நிவாரணம் அளிக்க வேண்டிய நிலை ஏற்பட்டுவிடும். ஒரு வீட்டுக்குச் சொந்தக்காரர் குடியிருக்கும் வீட்டுக்கேகூட இந்த நிலைமைகள் வரக்கூடும். இவைகளையெல்லாம் தவிர்க்க வேண்டும். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஒன்றைக் கோடிட்டுக் காட்டினார்கள். சென்னையிலே 1 லட்சம் ரூபாய் மதிப்பிலே அல்லது பல லட்சம் ரூபாய்கள் மதிப்பிலே வீடுகளை வைத்துக் கொண்டிருப்பவர்களுக்கும், கிராமத்திலே வீடுகளை வைத்துக் கொண்டிருப்பவர்களுக்கும் 'டிஸ்ப்பாரிட்டி' வருகிறது என்று சொன்னால் எப்படி? எந்தவிதமான வருவாயும் இல்லாமல் சென்னையிலே வீடு வைத்துக்கொண்டிருக்க முடியாது. இங்கே இருக்கிற சூழ்நிலை வேறு, அங்கே இருக்கிற சூழ்நிலை வேறு, கிராமப்புறங்களிலே எந்தவிதமான வருமானமும் இல்லாமல் அவர்கள்



மானத்தைக் காப்பாற்றிக் கொள்ள, மரியாதையைக் காப்பாற்றிக் கொள்ள அந்த வீட்டிலேயே இருக்க வேண்டிய ஒரு கட்டாயத்திலே அவர்கள் இருக்கிறார்கள். ஆகவே, தயவுசெய்து என்னுடைய திருத்தத்தை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஏற்பார்கள் என்று நான் நம்புகிறேன்.

அடுத்தபடியாக, இந்தச் சட்டத்தில் பிரிவு 7-க்குக் கொடுத்திருக்கும் திருத்தம் பற்றிச் சொல்கிறேன். இந்தச் சொத்துக்களுடைய வருவாயை மதிப்பு செய்வது . . . .

*மாண்புமிகு மேலவைத் தலைவர்:* பிரிவு 7 வரும்போது அதை எடுத்துக் கொள்ளலாம்.

*திரு. க. இராமமூர்த்தி:* பிரிவு 3-ல் உட்பிரிவு 7-ன்மீது பேசுகிறேன். இந்தச் சட்டத்திலே அதுசம்பந்தமாக 'which, in the opinion of the authority prescribed in this behalf' என்று சொல்லப்பட்டிருக்கிறது. அதாவது தமிழிலே இந்த மதிப்பீட்டைப் போடுவது யார் என்ற நிலையைக் கொடுக்கிறார்கள். நான் சொல்வது, சொத்து மதிப்பைக் கொடுப்பதற்குச் சில முறைகள் இருக்கின்றன. அந்த அடிப்படையிலேதான் மதிப்புப் போடுகிறோம். இன்றைக்கு ஒரு நிலத்திற்கு அதனுடைய விலை மதிப்பு இவ்வளவு ரூபாய், இத்தனை ஆயிரம் ரூபாய், இல்லை சில லட்ச ரூபாய் என்று போடுவது, அல்லது அந்த மதிப்பை மாற்றிப் போடுவது என்பது மிகச் சாதாரணமாகச் செய்கின்ற ஒன்று. ஆகவே, அது நியாயமான, முறையான மதிப்பாகாது. அதனுடைய சொந்தக்காரருக்கு அதனாலே வருவாய் இருந்தால்தான், இந்த நிலைமைகளே தவிர அதை சும்மா வைத்துக் கொண்டிருக்கும்போது, இந்த வகையிலே மதிப்பிடுவது சரியாகாது. ரெவின்யூ விதியின்படி மதிப்பு செய்யும் போது அந்த நிலத்தை வைத்திருப்பவர்களுக்கு உண்மையிலேயே அது ஒரு சலுகையாக அமையும், ஒரு நியாயமான கடன் நிவாரணமாகக் கூட அமையும் என்பதைச் சொல்லி, திருத்தத்தை ஏற்க வேண்டும் என்று கேட்டு அமைகிறேன்.

*மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:* மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கொடுத்த முதல் திருத்தத்தைப் பொறுத்தவரையில் (for the words 'whether let out or in the occupation of the owner' insert the word 'are') எனக் குறிப்பிட்டிருக்கிறார்கள். இங்கு ஒன்றை நான் குறிப்பிட விரும்புகிறேன். தற்போது இருக்கின்ற சட்டங்களின் அடிப்படையில்

மக்களுக்கும் இதன் பலன் சென்றடைய வேண்டுமென்ற நல்லெண்ணத்தில் 31—12—1980 வரை என்று அதை நீட்டிக்கச் செய்ய முடிவெடுத்து இந்த அவசரச் சட்டம் கொண்டுவரப்பட்டது.

இங்கே குறிப்பாக மாண்புமிகு உறுப்பினர்கள் திருவாளர்கள் ஏ. ஆர். தாமோதரன், இராமமூர்த்தி ஆகியோர் நல்லபல ஆலோசனைகளைக் கூறினார்கள். இந்தச் சட்டத்தின் மூலம் பணக்காரர்களும், பெரும் நிலச் சுவான்தாரர்களும் எந்தவிதத்திலும் பயனடைந்துவிடக் கூடாது என்கிற நல்லெண்ணத்தில்தான் இதைக் கொண்டு வந்திருக்கிறோம். குறிப்பாக ஒரு நபர் அல்லது ஒரு குடும்பத்திலுள்ள யாராவது ஒரு நபர் ஒன்று அல்லது இரண்டு ஆண்டுகளாக வருமான வரி, மத்திய வரி அல்லது மாநில வரி செலுத்துபவர்கள் 1-10-1979-க்கு முன்னால் அசையா சொத்துக்களான வீட்டுக் கட்டிடங்கள் போன்றவற்றிலிருந்து வருகின்ற வருமானம், அதாவது வீட்டு வரி, சொத்து வரி போன்றவை, 1,200 ரூபாய்க்கு மேல் செலுத்துவார்களானால், அவர்களுக்கு இந்தச் சலுகை சென்றடையக் கூடாது என்கிற அடிப்படையில் இது கொண்டுவரப்பட்டது. அதுபோல் ரூபாய் 1,200-க்கு மேல் அரை ஆண்டுக்கு புரபஷன் டாக்ஸ் செலுத்துபவர்களுக்கு இதன் பலன் சென்றடையக் கூடாது என்கிற அடிப்படையில் இது கொண்டுவரப்பட்டது. அதுபோல் புஞ்சை நிலம், நஞ்சை நிலம் இவையெல்லாம் குறிப்பிட்ட ஏக்கருக்கு மேல் இருப்பவர்களுக்கு, அதுபோல் 'இம்மூவபிள் பிராப்பர்ட்டீஸ்' 25 ஆயிரம் ரூபாய்க்கு மேல் மதிப்புள்ள 'அக்ரிகல்சரல் பிராப்பர்ட்டி கம்ப்ளீட் வித் நான்-அக்ரிகல்சரல் பிராப்பர்ட்டி' 25 ஆயிரம் ரூபாய்க்கு மேல் உள்ளவர்களுக்கு இதன் பலன் சென்றடையக் கூடாது. வீடுகளைப் பொறுத்த வரையில், ஏற்கெனவே 10 ஆயிரம் ரூபாய் வரை அவர்கள் சொத்து மதிப்பு இருந்தால், சலுகைக்கு உட்பட்டிருந்தால், 25 ஆயிரம் ரூபாய் வரை நீட்டிப்பது என்று சட்டத்திலே கொண்டு வந்தோம். இங்கே மாண்புமிகு உறுப்பினர் திரு. ஏ. ஆர். தாமோதரன் அவர்கள் பேசும்போது புரபஷன் டாக்ஸைப் பொறுத்தவரையில், வெறும் 1,200 ரூபாய் என்று போட்டிருப்பது உகந்ததல்ல, போதுமானதல்ல என்று சுட்டிக்காட்டினார்கள். அதுகுறித்தும் எக்ஸ்பிளனேஷன் கொடுக்கப்பட்டிருக்கிறது. புரபஷன்ஸ் டாக்ஸைப் பொறுத்தவரையில், அப்படிக் குறிப்பிட்டிருந்த போதிலும் 4,800 ரூபாய்க்கு உட்பட்ட வரை ஒரு குடும்பத்திலுள்ளவர்களை ஒரு யூனிட் என்று வரையறுத்து அவர்களுக்கு அது பொருந்தும் என்று விதிவிலக்கு அளித்து எக்ஸ்பிளனேஷன் மூலம் தெளிவாக விளக்கப்பட்டுள்ளது. இதிலே இன்னொரு முக்கியமான பிரச்சினையை இங்கே சொல்ல விரும்புகிறேன். இந்தச் சட்டத்தின் மூலம் கடன் நிவாரணம் ஏழை



யெளியவர்களுக்குக் கிடைக்க வேண்டும். அவர்கள் பயன்பெற வேண்டும் என்று கொண்டுவரப்பட்டது. ஆனால், இதிலே தொழிற் பணி மூலம் வருமானம் வருகிறது, புரபஷனல் இன்கம் வருகிறது. மற்றும் புராப்பர்ட்டி மூலம் வருகிறது. தொழில் பணி மூலம் வருகின்ற வருமானத்தைப் பொறுத்த வரையில் புரபஷன் டாக்ஸ் என்கிற வகையில் போடப்படுகிறது. சொத்து என்று சொல்லும்போது, அதன் அளவு எவ்வளவு என்று இடத்துக்கு இடம் நிர்ணயிப்பதில் சிக்கல்கள் இருக்கின்றன. உதாரணத்திற்கு விவசாய நிலம் என்று தஞ்சையில் எடுத்துக்கொண்டால், ஒரு ஏக்கருக்கு 5 ஆயிரம் ரூபாய் மதிப்பு இருக்கிறது. நஞ்சையைப் பொறுத்தவரை, அதுதான் அங்கு நிலை. 5 ஏக்கர் நஞ்சை வைத்திருந்தால், அதனுடைய மதிப்பு 25 ஆயிரம் ரூபாய். அதே நேரத்தில் 10 ஏக்கர் புஞ்சை வைத்திருந்தால் அதனுடைய மதிப்பு 25 ஆயிரம் ரூபாய் என்று கணக்கிடப்பட்டு, அதற்கு உட்பட்டு சொத்து நிலம் நஞ்சை அல்லது புஞ்சை நிலம் வைத்திருந்தால், அவர்களுக்கு இது பொருந்தும். ஆனால் அதற்கு மேல் போனால், அவர்களுக்கு இந்தச் சலுகை போகக் கூடாது என்ற அடிப்படையில் தான் இந்தச் சட்டம் போடப்பட்டது. ஆனால், அதற்கு மேலே உள்ளவர்களும் இதன் பயனை அடைய முற்பட்டதால்தான், இந்தச் சட்டத் திருத்தம் கொண்டுவரப்பட்டது. மாண்புமிகு உறுப்பினர் திரு. நல்லசிவன் அவர்களும் மற்றவர்களும் ஒரு கருத்தைச் சுட்டிக்காட்டினார்கள். இந்தச் சட்டத்தைப் பொறுத்தவரையில், வீட்டு வரி, சொத்து வரி போன்றவற்றைப் பொறுத்தவரையில் நகர்ப் புறத்திலே ஒரு வீடு வைத்திருந்து அதிலிருந்து 1,200 ரூபாய் வாடகை நேரடியாகப் பெற்றால் அல்லது 1,200 ரூபாய் மதிப்புள்ள வீடு என்று அளவிடப்பட்டு அவர்கள் அனுபவித்துக் கொண்டிருந்தால், அத்தகையவர்களுக்கும் மேலுள்ளவர்களுக்கும் அந்தச் சலுகை இல்லையா என்று சொன்னார்கள். 1,200 ரூபாய் வாடகை வரக்கூடிய வீடு என்று கணக்கிடும்போது, அந்த வீட்டினுடைய மதிப்பு தாராளமாக 25,000 ரூபாய்க்கு மேல் உள்ளதாக மதிப்பிடப்படுகிறது. நாம் 4,800 ரூபாய் வரை உள்ளவர்களுக்குச் சலுகை தர வேண்டுமென்று முடிவு செய்தால், சொத்தினுடைய அடிப்படையில் கணக்கிட்டுப் பார்த்தால், 1 லட்சம் ரூபாய்க்கு அசையா சொத்து வைத்திருப்பவர்களுக்கும் நாம் இந்தச் சலுகையைக் கொடுத்தாக வேண்டும். இந்தச் சட்டத்தைப் பொறுத்த

not only for rural but also urban areas -ல் உள்ளவர்களுக்குக் கொடுக்க வேண்டுமென்று இருப்பதால், இந்தப் பிரச்சினை வருகிறது. 4,800 ரூபாய் வீட்டிலிருந்து வருமானம் வருகிறது என்று மதிப்பிட்டால், வீட்டின் மதிப்பு 1 லட்சம் ரூபாய் என்று மதிப்பிடப்படுகிறது. அப்படிப் பார்க்கும்போது, 5 ஏக்கர் நஞ்சைக்கு 25 ஆயிரம் ரூபாய் மதிப்பிடுகிறோம்.

குறிப்பாகப் பிரிவு 3-லே சுட்டிக் காட்டியிருப்பதைப்போல பஞ்சாயத்து, முனிசிபாலிட்டி, கார்ப்பரேஷன் போன்றவற்றில் டாக்சைப் பொறுத்த வரையில்,

'tax is levied on the basis of the rental value which is determined botn for the tenanted house and the owner occupied houses'

என்றிருக்கிறது. எந்த அடிப்படையில் ஏற்கெனவே வரி நிர்ணயிக்கப்பட்டதோ அதையே பேசிசாக வைத்து இது கொண்டு வரப்பட்டிருக்கிறது. மூலச் சட்டங்களிலே இருக்கின்ற முறைதான் கடைப்பிடிக்கப்பட்டிருக்கிறது.

The position is made clear in this Act also, which is already there in the several other existng Acts என்ற அடிப்படையிலே இருப்பதால் மாற்றம் எதுவும் தேவையில்லை என்று கருதுகிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் whether let out or in occupation of the owner என்று கூறியது இந்த அடிப்படையிலேதான் என்று கருதுகிறேன்.

In clause 3, sub-clause (vii), explanation, for the words 'which in the opinion of the authority prescribed in this behalf', substitute the words 'on the basis of the price fixed according to the Government's Revenue Rules' என்று குறிப்பிட்டிருக்கிறார்கள்.

(பிற்பகல் 12-20)

இந்தத் திருத்தத்தைப் பொறுத்தவரை, இந்திய உச்ச நீதிமன்றமும், வேறு பல உயர்நீதி மன்றங்களும் ஏற்கெனவே ஒரு கருத்தைச் சொல்லியிருக்கின்றன. அதாவது 1966 ஆம் ஆண்டு தமிழ் நாடு நில உச்ச வரம்புச் சட்டத்தின் அடிப்படையில், இந்தக் கருத்தை நமது மாநில உயர்நீதி மன்றம் ஏற்றுக் கொள்ளாவிட்டாலும், உச்ச நீதிமன்றத்திற்கு மேல் முறையீடு செய்தபோது செக்ஷன் 5-ஐப் பொறுத்தவரையில், இந்தக் கருத்து சொல்லப்பட்டிருக்கிறது. அதாவது (Assistant Commissioner versus Binny & Company) என்ற வழக்கில் உச்ச நீதிமன்றம் கீழ்க்காணும் கருத்தை வழங்கியிருக்கிறது.

"Market value is the price which a willing purchaser will pay to a willing vendor" எனவே இதன் அடிப்படையில்தான் இந்தத் திருத்தச் சட்டம் கொண்டு வரப்பட்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர்



அவர்கள் பேசும்போது According to Revenue rules என்று குறிப்பிட்டார். There are no specific Revenue Rules as such. ஆனால், "Revenue Guidelines" என்றிருக்கின்றது. தற்போது கொண்டு வரப்பட்டிருக்கிற புரொவிஷனின் உட்கருத்தும், மாண்புமிகு உறுப்பினரின் எண்ணத்திற்கும் அதிகமான மாற்றமோ வித்தியாசமோ கிடையாது. (Revenue Guidelines) அடிப்படையில்கூட "Market value has to be determined only according to the concluded sales already conducted in the neighbouring locality" என்று தெளிவுபடுத்தப்பட்டிருக்கிறது. எனவே இதன் அடிப்படையில் பார்த்தாலும், மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் எண்ணம் ஈடேறும் நிலை இருக்கிறது என்பதைச் சொல்லி, எனவே அவர் தமது திருத்தத்தை வலியுறுத்த வேண்டாம் என்று கேட்டு அமைகிறேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. இராம மூர்த்தி அவர்கள் தமது திருத்தத்தைத் திரும்பப் பெறுகிறாரா அல்லது வலியுறுத்துகிறாரா?

Thiru K. RAMAMOORTHY: Sir, I do not insist on my amendment.

திருத்தம், அவையின் அனுமதியோடு, திரும்பப் பெறப்பட்டது.

பிரிவு 3, அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

பிரிவுகள் 4 முதல் 6 வரை, அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டன.

பிரிவு 7.

Thiru K. RAMAMOORTHY: Sir, I move the following amendment standing in my name:—

"In clause 7, delete sub-clauses (1) and (2)"

Thiru A. R. DAMODARAN: Sir, I second it:

* திரு. க. இராமமூர்த்தி: மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் என்னுடைய திருத்தத்திற்கு ஏறக்குறைய முன்பே பதில் சொல்லியிருக்கிறார் என்பதால், இப்போது ஒரே ஒரு கருத்தை மட்டும் சொல்லி முடித்துக்கொள்கிறேன். இந்தச் சட்ட முன்வடிவைக்

கொண்டு வருவதற்கான காரணங்களைப் பற்றிச் சொல்லும்போது, அரசுத் தரப்பில் என்ன சொல்லப்பட்டிருக்கிறது என்பதை நான் இங்கே குறிப்பிட விரும்புகிறேன்.

" Certain instances were brought to the notice of the Government that certain well-to-do persons are also trying to avail of the benefits of the Act. It was, therefore, decided to amend the Act suitably so that the benefits of the Act are not available to such well-to-do persons." என்று சொல்லப்பட்டிருக்கிறது. சட்ட முன்வடிவின் 7-வது பிரிவில் யாரெல்லாம் கடனாளியாகக் கருதப்படுவார்கள், யாருக்கெல்லாம் இந்தச் சலுகைகள் தரப்பட வேண்டும் என்பது பற்றிச் சொல்லப்பட்டிருக்கிறது. இந்தச் சட்ட முன்வடிவை தற்போதுள்ள நிலையிலேயே நிறைவேற்றினால், இதனால் எத்தகையோருக்கெல்லாம் பாதகம் ஏற்படும் என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். தோற்றத்தில் பெரியவர்களாகத் தோன்றுகிற மிகச் சாதாரணமான ஏழை மக்கள், வருவாய் இல்லாதவர்கள் எல்லாம்கூட பாதிக்கப்படுவார்கள். கடன் நிவாரணச் சட்டத்தைப் பொறுத்தவரையில், மற்ற சட்டங்களோடு அதைச் சமப்படுத்துவது சரியல்ல. காரணம், கடன் நிவாரணச் சட்டம் என்பதே ஒரு குறிப்பிட்ட சூழ்நிலைக்காகக் கொண்டு வரப்படுவதாகும். மற்ற சட்டங்களில் கொடுக்கப்படுகிற " டெபனிஷன் " வேறு இந்தச் சட்டத்திற்கான டெபனிஷன் வேறு என்று தான் இருக்க வேண்டும்.

கிராமங்களைப் பொறுத்த வரையில், வீடுகளுக்கு 'ரெண்ட்டல் வேல்யூ' (Rental value) எப்படி நிர்ணயிக்கப்படுகிறது என்பது மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கே கூட நன்கு தெரியும். நாமெல்லாம் கிராமத்தைச் சேர்ந்தவர்கள்தான். பஞ்சாயத்தின வருவாயைக் கூடுதலாக்க வேண்டும் என்ற எண்ணத்திலேகூட சில இடங்களில் ரெண்ட்டல் வேல்யூவை அதிகப்படுத்துவது உண்டு பஞ்சாயத்துத் தலைவரே வீட்டு மதிப்பு எதுவாக இருந்தாலும் " உங்கள் வீட்டு ரெண்ட்டல் வேல்யூவை அதிகப்படுத்தப் போகிறோம். அப்படிச் செய்தால்தான் வேறு பத்து வீடுகளுக்கும் அந்த வகையில் வரி போட முடியும் " என்று சொல்லி வீட்டுக்காரரின் அனுமதியோடு அதிகப்படுத்துவது கூட உண்டு. பஞ்சாயத்துக்களுக்கு ஏற்ற வகையிலே வீட்டின் மதிப்பை அதிகரிப்பதும் உண்டு. அப்படிப்பட்ட நிலையின் இந்த மதிப்பையே வருவாய்க்கான பூரண மதிப்பாகக் கொள்ளக்கூடாது என்பதைத்தான் நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். இது மாண்புமிகு அறநிலையத் துறை அமைச்சர் அவர்களுக்கே நன்கு தெரியும். செட்டி நாட்டுப் பகுதிகளில் பல



வீடுகள் எவ்வளவோ லட்ச ரூபாய் செலவு செய்து கட்டப்பட்டுள்ளன. ஆனால் அவைகளின் சொந்தக்காரர்கள் அந்த அளவுக்கு வாழ்க்கை நடத்த முடியாதவர்களாக இருக்கிறார்கள். எனவேதான் சொல்லுகிறேன், பஞ்சாயத்துக்களுக்குச் செலுத்தும் வரியின் அடிப்படையில் அல்லது ஒப்புக்கொண்ட வரியின் அடிப்படையில்—ரெண்ட்டல் வேல்யூ—அடிப்படையில் இதை நிர்ணயிப்பது முறையாக இருக்காது. எனவே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் என்னுடைய திருத்தத்தை ஏற்க வேண்டும் என்று கேட்டு அமைகிறேன்.

| |

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :** மாண்புமிகு தலைவர் அவர்களே, ஆரம்பத்திலேயே மாண்புமிகு உறுப்பினர் திரு. இராமமூர்த்தி அவர்கள் பேசும்போது, இந்தச் சட்டத்தை அமுல்படுத்துகிறபோது, சிலருக்கு ஏற்படக்கூடிய இடையூறுகளைப்பற்றி இங்கே சுட்டிக் காட்டினார்கள். அந்த அடிப்படையில்தான் நானும் அதை ஒப்புக்கொண்டேன். இப்படிப்பட்ட பிரச்சினைகள் மக்கள் மத்தியில் உருவாகாமல் இருந்திருக்க வேண்டுமென்றால், இதை செலக்ட் கமிட்டி மூலமாக முழுமையாக விவாதித்து ஆலோசித்துக் கொண்டு வந்திருந்தால், இவைகளையெல்லாம் தவிர்த்திருக்க முடியும்.

ரூரல் டெட்டார்களையும், அர்பன் டெட்டார்களையும் ஒருங்கிணைக்கிறபோதுதான், இத்தகைய பிரச்சினைகள் உருவாகின்றன என்பதை நான் ஒப்புக்கொள்கிறேன். ஆனால் தற்போது வசதிபடைத்த சிலர் அசையாச் சொத்துக்களை நகர்ப் புறத்திலும், கிராமப்புறத்திலும் வைத்துக் கொண்டு இந்தச் சட்டத்தின் பலனையும் அனுபவிக்க முயற்சிக்கிறார்கள் என்று அரசின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டதால், அதன் அடிப்படையில் இந்தத் திருத்தம் கொண்டு வரப்பட்டது. விதி 3 மற்றும் 6-ல் சொல்லப்பட்டிருப்பதைப் போன்று விற்பனை வரி, மைய-மாநில விற்பனை வரி, வருமான வரி செலுத்துகிறவர்கள் மற்றும் அதிகப்படியான தொழில் வரி, வீட்டு வரி ஆகியவற்றைக் கட்டுகிறவர்களும் இந்தப் பலனை அனுபவிக்கிற சூழ்நிலை இருந்ததால்தான், இந்தத் திருத்தமே கொண்டுவரப்பட்டிருக்கிறது. 3-வது மற்றும் 6-வது பிரிவுகளில் உள்ள திருத்தங்களை நடைமுறைப்படுத்த வேண்டுமென்றால், அவைகளுக்கு சட்டபூர்வமான தகுதி கொடுக்க வேண்டுமென்றால், 7-வது பிரிவில் இருக்கிற 1 மற்றும் 2 உப பிரிவுகள் இருக்கத்தான் வேண்டும். இல்லையென்றால், இந்தச் சட்டம் முழுமையானதாக ஆகாது என்று சொல்லி, மாண்புமிகு உறுப்பினர் தமது திருத்தத்தை வற்புறுத்த வேண்டாம் என்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. இராமமூர்த்தி அவர்கள் தமது திருத்தத்தைத் திரும்பப் பெறுகிறாரா அல்லது வலியுறுத்துகிறாரா?

**திரு. க. இராமமூர்த்தி:** தலைவர் அவர்களே, நான் முன்மொழிந்துள்ள திருத்தத்தை வலியுறுத்தவில்லை என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

திருத்தம், அவையின் அனுமதியோடு, திரும்பப் பெறப்பட்டது.

பிரிவுகள் 7, 8, பிரிவு 1, சட்டமியற்றும் முறை, நெடுந்தலைப்பு ஆகியவை, அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டன.

**திரு. ப. மாணிக்கம்:** தலைவர் அவர்களே, ஒரு விளக்கம் கேட்க விரும்புகிறேன் . . . .

**மாண்புமிகு மேலவைத் தலைவர்:** உறுப்பினர்களுக்கு நான் நேற்றே சொல்லியிருக்கிறேன். ஓட்டெடுப்பின்போது இடையில் பேசுவதும் அதை அனுமதிப்பதும் விதிமுறைக்கு மாறானது. திரும்பத் திரும்ப இதைச் செய்வது சரியல்ல.

**திரு. ப. மாணிக்கம்:** எனவேதான் நான் ஓட்டெடுப்புக்கு முன்பே கையை உயர்த்தினேன். புரொவிசோ 4-ல் கீழ்க்கண்டவாறு சொல்லப்பட்டிருக்கிறது:

"Proviso (iv) shall apply only to a person whose annual house-hold income exceeds four thousand and eight hundred rupees and such person shall not be deemed to be a debtor for the purposes of this Act ;"

இதன் அடிப்படையில் விவசாயி நிவாரணம் கோரும்போது . . . .

**மாண்புமிகு மேலவைத் தலைவர்:** விளக்கம் என்றால் ஒரு வாக்கியத்தில் கேட்க வேண்டும். அதை விடுத்து ஒரு சொற்பொழிவாற்றினால் அது எப்படி சரியாகும்?

**திரு. ப. மாணிக்கம்:** விவசாயிகள் நிவாரணம் கேட்டால், நீ, உன் மனைவி, குழந்தை ஆகியோரின் வயது என்ன என்று கேட்டு, இவ்வளவு பேரும் ஒரு குடும்பத்தில் சம்பாதிக்கும்போது, உங்களின் மொத்த வருவாய் இவ்வளவு இருக்கிறது என்று சொல்லி, அதன் அடிப்படையில் அவர்களின்





[Thiru J. M. Miakhan]

விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படுகின்ற சூழ்நிலை இருக்கிறது. எனவே இதற்குரிய வகையில் விதிமுறைகளைத் திருத்த அமைச்சர் அவர்கள் முன் வருவாரா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு தலைவர் அவர்களே,

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட தமிழ்நாடு 1981 ஆம் ஆண்டு கடன் நிவாரணத் (திருத்தச்) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 8/1981) நிறைவேற்றப்பட வேண்டும்"

என்று முன்மொழிகிறேன்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர்:** அவை முன் உள்ள பிரச்சினை—

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ்நாடு 1981 ஆம் ஆண்டு கடன் நிவாரண (திருத்தச்) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 8/1981) நிறைவேற்றப்பட வேண்டும்".

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

(பிற்பகல் 12-30)

**(2) 1981 ஆம் ஆண்டு பொது வக்ஃபுகள் (காலவரையறையை நீட்டித்தல்) தமிழ்நாடு திருத்தச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 3/1981).**

**மாண்புமிகு திரு. கா. இராசா முகமது:** மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே,

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, 1981 ஆம் ஆண்டு பொது வக்ஃபுகள் (காலவரையறையை நீட்டித்தல்) தமிழ்நாடு திருத்தச் சட்ட முன்வடிவு @ (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 3/1981) ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்".

என்று முன்மொழிகிறேன்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர்:** முன்மொழியப்பட்ட தீர்மானம்:

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, 1981 ஆம் ஆண்டு பொது வக்ஃபுகள் (காலவரையறையை நீட்டித்தல்) தமிழ்நாடு திருத்தச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 3/1981) ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்".

---

@ 101-102 ஆம் பக்கங்களில் இணைப்பு IV ஆக அச்சிடப்பட்டுள்ளது.

THIRU J. M. MIAKHAN: Hon. Chairman, on the general principles of the Amending Bill, I agree that the Government require an extension of time for filing another 1,000 suits. But I feel that the mere extension of the period by three years will not do any good. They have stated that already about 10,950 cases have been filed to recover lands and properties which belong to the wakfs. Another 1,000 cases have to be filed. Therefore, they are asking for extension. I support this Amending Bill seeking to give extension of time but still, by passing this Bill, I do not think the main objective will be achieved. As a matter of fact, many more cases could have been instituted but, that has not been done. Many people, rich and poor, have bequeathed lands for noble causes under Islamic law and these properties have not been properly administered. The heirs and descendants are utilising the income for their personal benefit and the income is not utilised for the purpose for which it was intended originally. In many cases, I can say, the income from properties will exceed even one lakh of rupees and the income is used for purposes other than the original purpose of the wakf.

The Hon. Minister is aware of it but he feels helpless. But, I would like to enlighten the House on certain facts. I was once talking to the former Pleader of the Wakf Board, an Advocate. He was my personal friend and class-mate. Now, he has been elevated to a higher position. When I asked him why cases could not be instituted and taken to Court, he said that that was humanly impossible to do. There is such a huge mass of cases. Therefore, I request the Hon. Minister to reorganise the wakf set-up. With the present wakf set-up nothing can be done because it is not all right. I do not make any personal complaint against any person connected with the wakf or against its Chairman. Let me not be misunderstood. But, I would like to say that the present set-up is not conducive to the proper administration of the wakf properties. The Hon. Minister is aware that thousands of cases are still pending not only with the Courts but also with the Wakf Board itself. They have not been cleared and people come far-off places like Kanniyakumari and Tirunelveli to the Wakf Board office here in connection with those cases. After coming here, they come to know about the adjournment of cases and they go back Sometimes, the cases are kept pending for even 10 or 12 years. I have discussed this with the Hon. Minister and he is fully aware of all these things.



Thiru G. SWAMINATHAN: The hon. Members are not aware of it. It is not sufficient if the Hon. Minister alone is aware of it.

Thiru J. M. MIAKHAN: That is why I am trying to enlighten to the best of my ability. I suggest that this Wakf Board should be regionalised. For example, Tirunelveli, Kanniyakumari and Ramanathapuram may be clubbed together and a regional office may be formed. If a Regional Board is formed in that area, the members belonging to the local region will know about the wakf properties much more intimately than the people who are sitting in Madras. What happens now is that the Hon. Minister nominates some 15 people as Wakf Board members. Though they may give their addresses as residing elsewhere, most of them reside in Madras only. They just sit across the table and try to clear the cases. If there are at least four regional offices, the members in the Regional Boards will know about the cases much better and they can handle them much better. They can look into the cases in a better way and render justice. Now, thousands and thousands of cases are pending and it is humanly impossible for the present Board to deal with them. If there are Regional Boards, they can bestow some more attention on these cases and some more people may also be made members of the Boards. Then the Hon. Minister will have opportunity not to appoint about 15 people, but to appoint about 60 people. The Government may appoint about sixty people to such Regional Boards. Moreover, I request the Hon. Minister to bestow some attention and see that a Special Bench or Special Court is created to clear the cases that have been filed so far. Even now, nearly 10,000 cases are pending and the Hon. Minister now wants some more cases to be filed. These cases can never be cleared and they will go on for another 30 years. Even the sons and grandsons of the present parties to the cases may not be able to know the result in these cases. Therefore, I request the Government to constitute a Special Court to clear these cases. At least as an *ad hoc* arrangement, till these pending cases are cleared, some special arrangement has to be made. Unless that is done, the purpose for which this extension is sought will not be served.

In my view, the people who are appointed to these posts should be conversant with Islamic law, Shariat, Muhammadan law and the law of the land. If they are appointed for various other reasons,

they just go and sit there. If there are 15 members, actually three persons attend to the work and they just take the signatures of the other members. If the wakf properties are administered properly, it will be of benefit not only to the Muslims but to the entire Tamil Nadu. It will benefit other communities also. There are certain wakfs which are not denominational. Though the properties were bequeathed by a Muslim, the beneficiaries belong to other communities also. Therefore, the Government will have to take some steps to see that these wakfs are adminissered more properly. The former Government appointed a One man Commission and I think that the Report of that Commission is with the Hon. Minister. In that report, some valuable suggestions have been made as to how the Board is to be-organised. I have also given my own suggestions on various points. I request the Hon. Minister to take these things into consideration and see that the walk properties are administered properly.. As a matter of fact, I wanted to take some time for mentioning these points, when speaking on the Governor's Address. One Hindu lady bequeathed properties worth one crore of rupees at present, in Chompet. The Fakruddin Shanthi Colony is situated on that property. Fakhruddin was the General of Tippu Sultan. The monument is there.

மாண்புமிகு மேலவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திருத்தத்தை யொட்டிப் பேசாமல் சரித்திரம் முழக்கச் சொல்கிறார்கள்.

திரு. ஜே. எம். மியாகான்: முக்கியமான இன்ஃபர்மேஷன்தான் கொடுக்கிறேன்.

The lady bequeathed that land. At that time, it was worth only a few thousands of ruppes but now it is worth more than one crore of rupees. The land has passed several hands. The Government themselves have bought some land and set up the Government bus-coach factory. The Indira Cotton Factory is there and the entire Radha Nagar is situated on that property. If the Government, if the Wakf Board can redeem these things, it will benefit not only the Muslim community but the entire country. Similarly, there are several wakfs and the beneficiaries of those wakfs are using the income for their personal benefit and not for the purposes intended. While supporting this Bill, I would like to request the Hon. Minister to look into the suggestions I have made. Thank you.





(பிற்பகல் 12-40)

திரு. ம. சங்கரலிங்கம்: மாண்புமிகு தலைவர் அவர்களே, வக்ஃப் போர்டு சார்பில் வழக்குகள் பதிவு செய்வதற்கு இஸ்லாமிய, கலாசார, சமய அறநிலையங்களுக்குச் சொந்தமான சொத்துக்களை அதனுடைய பணிகளுக்காக கையகப்படுத்துவதற்கும் வகைப்படுத்துவதற்கும், தேவைப்படுகிற இடங்களில் வழக்குகள் போட்டுப் பெறுவதற்கு அவசரச் சட்டத் திருத்தமாக இந்தத் திருத்தம் வந்திருக்கிறது. இதை நான் ஆதரிக்கிறேன்.

நமது மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அதில் முனைப்பாக இருக்கிறார்கள். பல இடங்களில் வக்ஃப் போர்டுக்குச் சொந்தமான சொத்துக்களைக் கையகப்படுத்துவதற்கு நல்ல பணிகளைப் புரிந்துகொண்டிருக்கிறார்கள். அதற்கான முயற்சிகளை எடுத்து வருவதை நான் அறிகிறேன். கன்னியாகுமரி மாவட்டத்தில் பொட்டல்புதூருக்குச் சொந்தமான ஏராளமான சொத்துக்கள், குறிப்பாக வெள்ளமடம் என்ற பகுதியையொட்டி, நிலங்கள் அதிகமாகத் தனியார்கள் கையிலே இருந்துகொண்டிருக்கின்றன. அவைகளைக் கையகப்படுத்துகின்ற பணியில் அவர்கள் ஈடுபட்டிருக்கிறார்கள். அந்தப் பணி சிறப்பாக நடந்துகொண்டிருக்கிறது. அந்த நிலங்களைப் பயன்படுத்திக் கொண்டிருப்பவர்கள் அவர்கள் கையிலிருந்து போகாமல், அவர்களே வைத்துக்கொள்ள வேண்டுமென்பதற்காக, அவர்களுக்குச் சாதகமாகச் செய்ய முடியுமா என்று என்னிடம் கேட்டார்கள். நான் அப்போது, "அது முறையல்ல. அந்தச் சொத்துக்கள் சமய வளர்ச்சிகளுக்காக, கலாசார வளர்ச்சிக்காக, கல்வி வளர்ச்சிக்காக என்று ஒதுக்கப்பட்ட சொத்துக்கள். அவைகள் உங்கள் கையிலே இருந்தால், அதைக் கொடுத்துவிட வேண்டும். அல்லது அதற்கான குத்தகையைக் கொடுக்க வேண்டும்" என்று சொன்னேன். "உயர்ந்த குத்தகையைக் கொடுத்து அந்தப் பணிகளைச் செய்ய வேண்டும். சிறப்பாக நடத்த வேண்டும். அதற்கு நீங்கள் உதவ வேண்டும்" என்று சொல்லியிருக்கிறேன். அன்றைய சூழ்நிலையில் நிலங்களைக் குறைந்த தொகைக்குக் குத்தகை எடுத்திருக்கிறார்கள். ஒரு ஏக்கர் நிலத்தை மூன்று ரூபாய், ஐந்து ரூபாய் என்று குத்தகைக்குப் பெற்றிருக்கிறார்கள். இவைகளையெல்லாம் முறைப்படுத்துவதற்கு வக்ஃப் போர்டு முயற்சி எடுக்கிறது. அதற்குத் தடையாக இருக்கக்கூடாது என்று சொன்னேன். அப்படி நான் சொன்னபோது, அவர்கள் என் மீது வருத்தப்பட்டுக்கொண்டுதான் சென்றிருப்பார்கள் என்பதை உணருகிறேன். கன்னியாகுமரி மாவட்டத்திலே வெள்ளமடம் பகுதியில் வக்ஃப் போர்டுக்குச் சொந்தமான இடம் இருக்கிறது. அங்கே ஒரு கல்லூரி அமைக்க இஸ்லாமியர்கள் பணம் சேர்த்து வங்கியிலே போட்டு வைத்

இருந்தார்கள். வக்ஃப் போர்டினுடைய இடங்களைக் கையகப்படுத்திக் கொண்டிருந்தவர்கள் விட்டுக் கொடுக்காததனால், அந்தப் பணியே அங்கே வர முடியாமல் போயிற்று. 1959-லே சட்டம் கொண்டுவரப்பட்டது. பிறகு 1970-க்குள் வழக்குகள் பதிவு செய்ய வேண்டும் என்று சொல்லி, அத்தகைய நிலங்களையெல்லாம் கையகப்படுத்த வேண்டும் என்று சொல்லி, அதனடிப்படையில் 10,000 வழக்குகள் பதிவு செய்யப்பட்டிருக்கின்றன. இன்றைக்கு 10 ஆண்டுக் காலம் ஆகிவிட்டது. அந்தக் காலம் முடிகின்ற நிலையில், இன்னும் ஆயிரம் வழக்குகள் பதிவு செய்யப்பட வேண்டியிருப்பதால், மேலும் மூன்றாண்டுகளுக்கு அந்தக் காலத்தினை நீடித்துக்கொள்கின்ற சட்டமாக இந்தச் சட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறார்கள். நான் வேண்டிக்கொள்வதெல்லாம், இந்தச் சட்டத்துறை இன்னும் வலிவுபடுத்தப்பட வேண்டும். இன்று சட்டத்துறை வழக்குகளைப் பதிவு செய்வதற்கு வேண்டிய சூழ்நிலைகளை, வசதிகளைச் செய்து கொடுக்க வேண்டும். இதற்காக நாம் இன்னும் 3 வருடங்கள் நீடித்துக் கொடுக்கிறோம். அந்தத் துறைக்கு வேண்டிய வசதிகளைச் செய்து கொடுத்து, இந்தச் சட்டத்தினை நாம் அமுல்படுத்துவதன் மூலம், இந்த நாட்டின் அறநிலையத்துறை நன்கு செயல்பட, நான் சொல்வது இந்து அறநிலையத் துறையை அல்ல, இஸ்லாமிய, கலாச்சார, சமய, கல்வி சார்பான அறப் பணிகள் சிறக்க வேண்டும் என்று நான் சொல்லிக்கொள்கிறேன். லாயம் பகுதியிலும் இஸ்லாமியர்கள் இருக்கிறார்கள். அங்கு இந்து சகோதரர்களும் இருக்கின்றார்கள். அவர்கள் அங்குள்ள கோவிலுக்கு சொத்துக்களை எழுதி வைத்திருக்கிறார்கள். இந்துக்கள் முஸ்லீம் கோயிலுக்குப் போய் வழிபடுகிறார்கள். அவர்கள் குடும்பத்திலே உள்ளவர்கள் அல்லது குழந்தைகள் நோய்வாய்ப்பட்டால், அங்கே போய் வழிபடுகிறார்கள். அவர்களுடைய நிலங்களை அந்தக் கோயிலுக்கு விட்டுக் கொடுக்கிறார்கள். ஆகவே இந்தச் சட்டத்தின் மூலம் அந்தப் பணிகள் சிறப்பாக நடைபெறச் செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். 10,000 வழக்குகள் போடப்பட்டிருக்கின்றன. அவைகளில் எத்தனை வழக்குகளில் நிலங்கள் கையகப்படுத்தப்பட்டிருக்கின்றன என்ற விவரம் தெரிந்தால், நல்லதாக இருக்கும். இந்த 10,000 வழக்குகளில் எத்தனை வழக்குகள் எத்தனை காலமாக நிலுவையில் இருக்கின்றன என்று அறிந்தால், பயனுடையதாக இருக்கும் என்று சொல்லிக்கொள்கிறேன். இந்தப் பணி சிறக்க இன்னும் வேகமாக வேலை செய்யவேண்டுமென்று கோருகிறேன். அதன் மூலம் இஸ்லாமியச் சமுதாயம் வளர்ந்து, இந்த நாட்டினுடைய வளர்ச்சிக்கும் கல்வி வளர்ச்சிக்கும் இந்தச் சட்டம் பயன்படுகிற ஒரு சூழ்நிலையை உருவாக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு அமைகிறேன். வணக்கம்.





**மாண்புமிகு திரு. கா. இராசா முகமது :** மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட தமிழ் நாடு 1981 ஆம் ஆண்டு பொது வக்ஃபுகள் காலவரையறையை நீட்டித்தல் திருத்தச் சட்ட முன்வடிவு மேலவையின் ஒப்புதலைப் பெறுவதற்காக வந்திருக்கிறது. இந்தச் சட்ட முன்வடிவின்மீது மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களும், மாண்புமிகு உறுப்பினர் திரு. மியாகான் அவர்களும் சில கருத்துக்களைச் சொல்லியிருக்கிறார்கள். இந்தக் கால வரையறையை நீடிப்பதிலே அரசினுடைய கருத்தையே எதிர்க்கட்சித் தலைவர் அவர்களும், மாண்புமிகு அங்கத்தினர் திரு. மியாகான் அவர்களும் கொண்டிருப்பதால், இதைப்பற்றி நான் அதிகமாக விளக்கவேண்டிய அவசியம் இல்லாமல் இருக்கிறது. ஆனாலும் கூட இந்தச் சட்ட முன்வடிவையொட்டி அவர்கள் தெரிவித்திருக்கின்ற கருத்துக்களை அரசு கவனத்திலே கொண்டு தேவையான விளக்கங்களை அறிக்கையின் மூலமாகவோ அவையில் வைப்பதன் மூலமாகவோ செய்ய முடியும் என்று கருதுகிறேன். அதிலே குறிப்பாக கையகப்படுத்தப்பட்ட சொத்துகளின் விவரங்களைப்பற்றிக் கேட்டிருக்கிறார்கள். அந்த வழக்குகள்பற்றிய விவரங்கள் எல்லாம் கேட்டிருக்கிறார்கள். எதையெதை அவையிலே வைக்க முடியுமோ அவைகளை நிச்சயமாக வைத்து விளக்கம் அளிக்க முடியும் என்று கருதுகிறேன். அதிலே சில சட்ட முன்வடிவிலே இல்லாவிட்டாலும் கூட, விளக்கத்திற்காக நான் ஒன்றைச் சொல்லிக் கொள்ளக் கடமைப்பட்டவனாக இருக்கிறேன். வக்ஃப் என்பது அறப் பணிகளைச் செய்கிறது. அப்படிச் செய்கின்றபோது இஸ்லாமிய நெறிமுறைகளின்படி இறைவனின் பெயரால் அறப்பணிகளை வக்ஃப் செய்கிறது என்று சொல்ல வேண்டும். 'In the name of Allah' இறைவனின் பெயரால் அறப்பணிகள் செய்யப்படுகின்றன. ஆனால் அப்படி இறைவனின் பெயரால் நடத்தப்படுகின்ற அறப் பணிகளுக்காக இருக்கின்ற சொத்துக்களை முத்துவல்லிகள் எந்த அளவுக்கு உண்மையாகப் பயன்படுத்துகிறார்கள் என்று பார்க்க வேண்டும். இறை நம்பிக்கையின் பெயரால், இறைவனின் பெயரால், வக்ஃப் சொத்துக்களைப் பராமரிப்பதில் முறைகேடுகள் இருக்குமானால், அவைகளையெல்லாம் இந்தச் சட்டங்களின் மூலமாக, திருத்தங்கள் மூலமாக திருத்திவிட முடியுமா என்பதையும் நாம் சற்று யோசித்துப்பார்க்க வேண்டும். இன்னும் சொல்லப்போனால், ஆண்டவனுக்கே பயப்படாதவன், இந்த அரசுக்கும், சட்டங்களுக்கும் பயப்படுவானா ? அந்த அளவுக்கு முறைகேடுகள் நடந்துகொண்டிருக்கின்றன. ஆனாலும் கூட மதம் சம்பந்தப்பட்ட விஷயம் என்ற அடிப்படையிலே ரொம்பவும் தீவிரமாகப் போய் அது பலருக்கு அதிருப்தியை உண்டாக்கிவிடக் கூடாது என்று எச்சரிக்கையாக இருந்து முறையாக இதைச் செய்ய

வேண்டும். அதிலே திட்டமிட்டு நல்ல நிர்வாகத்தின் கீழ் செயல்படச் செய்ய வேண்டும் என்ற அடிப்படையிலேதான் நாம் செயல்பட்டுக் கொண்டிருக்கிறோம். குறிப்பிட்ட பல இடங்களில் நூற்றுக்கணக்கான ஏக்கர்கள் இருக்கின்றன. அதிலே கன்னியாகுமரி மாவட்டத்தில் தனியார்கள் பயன்படுத்திக்கொண்டிருக்கின்ற நிலங்கள் இருக்கின்றன. அந்தப் பகுதியில் நன்செய் நிலங்கள் 80 ஆயிரம் ரூபாய், ஒரு லட்சம் ரூபாய் அளவிலேகூட விலைபோகிறது. அதிலே எவ்வளவு வருமானம் வருகிறது என்று கேட்டால், 2 ஆயிரம், 3 ஆயிரம் தான் வருகிறது என்று சொல்கிறார்கள். அப்படித்தான் கணக்கிலே வருகிறது. நாங்கள் அவைகளையெல்லாம் கையகப்படுத்தி முறையான நிர்வாகத்திலே கொண்டுவருகிறோம். இப்படி ஒவ்வொரு மாவட்டத்திலும் இருக்கின்றன. முக்கியமான இடங்களிலே ஒரு மாதிரிக்காகச் செய்வோம். இதைப் பார்த்து மற்றவர்கள் திருந்த வேண்டும் என்ற அடிப்படையிலேதான் நாம் சில காரியங்களைச் செய்து கொண்டிருக்கிறோம். வருமானத்தைப் பொறுத்த அளவிலே, அவர்கள் அதைச் சரியாகப் பயன்படுத்தவில்லை. அதைப்பொறுத்து வந்த புகார்களின் அடிப்படையிலே நடவடிக்கைகளைத் தொடர்ந்து எடுத்துக்கொண்டு வருகிறோம். அதிலே தனி போர்டு, வழக்கு மன்றம் இருக்க வேண்டும் என்று கருத்து சொல்லியிருக்கிறார்கள். அதையும் அரசு கவனத்திலே கொள்ளும். அதுபோலவே ரீஜினல் கமிட்டி இருக்க வேண்டியது அவசியம் என்று சொன்னார்கள். மாண்புமிகு அங்கத்தினர் அவர்கள் கருத்தை அரசு வரவேற்கிறது. அந்த அடிப்படையிலே விரைவாக தக்க நடவடிக்கை எடுக்க முயற்சி செய்வோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். வக்ஃப் போர்டு சொத்துக்களின் மதிப்பைப் பொறுத்துச் சொல்வதானால், அதனுடைய மதிப்பு கிட்டத்தட்ட 6 கோடி ரூபாய் என்று சொல்லலாம். ஆறு ஆயிரம் வக்ஃப் போர்டுகள் தமிழகத்திலே இருக்கின்றன. சராசரியாக ஒரு வக்ஃபுக்கு ஒரு லட்சம் என்று வைத்தாலும் அது 6 கோடி ரூபாய்க்கு வரும்.

திரு. ஆ. நல்லசிவன் : இன்னும் அதிக மதிப்பு வரும். அறுபது கோடி ரூபாய் வரும், அமைச்சர் அவர்கள் சொல்லும் கணக்குப்படி.

மாண்புமிகு திரு. கா. இராசா முகமது : இருக்கலாம். சில வக்ஃப் போர்ட் சொத்து மதிப்புகள் 5 கோடி, 10 கோடி ரூபாய் என்றுகூட இருக்கிறது. அதனுடைய மதிப்புகளையெல்லாம் திரும்பவும் கணக்கெடுக்க வேண்டும். அதற்கான நடவடிக்கைகளையெல்லாம் எடுத்து உண்மையான மதிப்புகளைப் பார்க்க வேண்டும். அதன் மூலம் எவ்வளவு வருமானம் வருகிறது என்பதைப்



பார்க்க வேண்டும். அந்த வருமானம் முறையாகப் பயன்படுத்தப்படுகிறதா என்பதைப் பார்க்க வேண்டும். இதையெல்லாம் நாம் பார்க்கிறோம். அதையெல்லாம் உணர்ந்துதான் நாம் ஆட்சிப் பொறுப்புக்கு வந்த பிறகு, வக்ஃப் டெவலப்மெண்ட் லோனை அதிகப்படுத்தி இந்த 7 லட்சம் ரூபாயைத் தமிழக அரசு கொடுக்கிறது. வெறும் இடமாக வைத்திருக்கக்கூடிய இடங்களில் எல்லாம் கடைகளைக் கட்டி, வக்ஃப் போர்ட் வருமானங்களை அதிகப்படுத்த வேண்டும் என்பதிலே நாம் கவனம் செலுத்துகிறோம். இருக்கின்ற சொத்துக்களையும் காப்பாற்ற வேண்டுமென்பதிலே அரசு தீவிரமாக இருக்கிறது. உண்மையாக ஒன்று சொல்வேன். இந்த ஆட்சி வந்த பிறகு கூடுமான வரையிலே,—கூடுமானவரை என்று சொன்னதற்குக் காரணம், அதிலே ஒரு சதவிகிதம் தவறு இருக்கலாம், ஆகவே கூடுமானவரை என்று சொல்கிறேன்— அறநிலையத்திற்குச் சொந்தமான சொத்துக்களைத் தனியாரோ, அரசு நிறுவனங்களோ பயன்படுத்திக்கொள்வதற்கு நான் அனுமதிப்பதில்லை.

(பிற்பகல் 12-50).

உறுப்பினர் அவர்கள் சொல்லக்கூடிய அந்தப் புகார்களெல்லாம் கடந்த காலங்களிலே நடைபெற்றவையாகும். அவைகளை மீட்டுக் கொண்டுவர முனைப்போடு செயல்பட்டுக்கொண்டிருக்கிறோம். வக்ஃப் போர்டு உறுப்பினர்களுக்கு சட்டங்கள் தெரிந்திருக்க வேண்டுமென்ற அடிப்படையில் . . .

Thiru. J. M. MIAKHAN : There is no time-limit and they can always be taken over. For other things, there may be a time-limit. But, for these properties there is no time-limit. They can always be taken over.

மாண்புமிகு திரு. கா. இராசா முகமது : நாம் உடனடியாக ஒரு இடத்திற்குப் போய், நேரடியாக அந்த இடத்தை நம்முடைய நிர்வாகத்திற்குக் கொண்டுவர முடியாது. வக்ஃப் ரூல்ஸ் என்று விதிகள் இருக்கின்றன. அவற்றைப் பராமரிக்கிறவர்கள் சரியாகச் செய்யவில்லை என்றால், விசாரணை செய்து நடவடிக்கை எடுக்கிறோம். அப்போது அவர்கள் அரசுக்கு மனுச் செய்கிறார்கள். அதையும் நிராகரித்தால், வழக்கு மன்றத்திற்குச் செல்லுகிறார்கள். அங்கே தீர்ப்பு அளிக்க பல காலமாகிறது. அவைகளையும் மனதிலே கொண்டு, காரியங்களைச் செய்ய வேண்டியிருக்கிறது. அதற்கு அப்பாற்பட்டு, உறுப்பினர்களாக இருக்கிறவர்களுக்குச் சட்டம் தெரிந்திருக்க வேண்டுமென்று சொல்லுகிறார்கள். சரியச் சட்டங்களைத் தெரிந்து செயல்படுத்த முடியாத முஸ்லீம்கள் இருக்க முடியாது. அதிலும் அங்கே வழக்கறிஞர்கள்,

மருத்துவர்கள் எல்லாம் இருக்கும்போது, அவர்கள் தெரிந்துதான் வைத்திருக்கிறார்கள். சாரியத் சட்டங்களைத் துணையாக இருத்தி, அவைகளை முறையாக நிறைவேற்றுவதில் எந்தவித மனமாச்சரியங்களுக்கும் இடமில்லாமல் நடுநிலையோடு செயல்படுகிறார்களா என்பதைப் பார்க்க வேண்டும். சிலர் விஷயம் தெரிந்தவர்களாக இருப்பார்கள். ஆனால் முடிவெடுக்க முடியாதவர்களாக, பல்வேறு நிர்ப்பந்தங்களுக்குப் பணிந்து போகும் சூழ்நிலைச் சூள்ளவதை நாம் பார்க்கிறோம். ஆகவேதான் இந்த போர்டைப் பொறுத்த வரையில், வழக்கறிஞர்கள் இருக்கிறார்கள், மருத்துவர்கள் இருக்கிறார்கள், விஷயம் தெரிந்தவர்கள் இருக்கிறார்கள். முறையாக வக்ஃப் போர்ட் செயலாற்றி வருவதையும் பார்க்கிறோம் . . .

**திரு. ஜே. எம். மியாகான்** : எத்தனை வழக்கறிஞர்கள் இருக்கிறார்கள் ?

**மாண்புமிகு திரு. கா. இராசா முகமது** : எத்தனை பேர்கள் என்று கேட்கும்போது, அதை இரண்டு விதமாக எடுத்துக்கொள்ளலாம். இஸ்லாமியச் சட்டங்களை நன்கு தெரிந்தவர்களெல்லாம் வழக்கறிஞர்கள்தான். இஸ்லாமியச் சட்டங்களைத் தெரிந்து வைத்திருக்கிறார்களா, இல்லையா என்பதுதான் முக்கியம். அனைத்துச் சட்டங்களையும் முறையாகப் பயின்றவர்கள், பொது மேடைகளில் தங்களுடைய திறமைகளை நிரூபிக்கக் கூடியவர்கள்தான் அங்கே இருக்கிறார்கள். வக்ஃப் சொத்துக்களை முறையாகப் பரிபாலனம் செய்ய நடவடிக்கைகளை இந்த வாரியம் எடுக்கிறது. நடவடிக்கைகளைக் காலதாமதமில்லாமல் எடுக்க அக்கறை எடுத்துக் கொண்டிருக்கிறது. வக்ஃப் வாரியம் செய்யக்கூடிய காரியங்கள் முறையாகவும், நல்ல காரியங்களுக்குப் பயன்படுகிற வகையிலும் இருக்க வேண்டுமென்பதை உணர்ந்து கொண்டிருக்கிறது என்ற அடிப்படையில் பார்க்கும்போது, கடந்த காலத்தைவிட இப்போது முன்னேற்றம் ஏற்பட்டிருக்கிறதென்பதைப் பார்க்கிறோம். குறைபாடுகள் இருக்கின்றன, இல்லையென்று சொல்லவில்லை. இப்போது காலத்தை நீட்டிப்பதற்கான அடிப்படை நோக்கம், 1980 டிசம்பர் 31 ஆம் தேதியோடு முடிவடைகிறது என்பதுதான். மேலும் 3 ஆண்டுகளுக்கு நீட்டிப்பதால், எஞ்சியுள்ள ஆயிரம் வழக்குகளையும் எடுத்துக்கொண்டு, அந்தச் சொத்துக்களையும் காப்பாற்ற முடியுமென்ற காரணத்தால்தான். ஆயிரம் வழக்குகளை 1980-க்குள் முடித்திருக்க முடியும். ஆனால் அவற்றுக்கான தஸ்தாவேஜுகள் கிடைக்கவில்லை. புள்ளி விவரங்கள் கிடைக்கவில்லை. அவற்றுக்கான டாகுமென்டுகள் அழிக்கப்பட்டிருக்கின்றன. அவைகளையெல்லாம் கண்டுபிடித்து, வழக்குப் போட வேண்டுமென்று



சொல்லும்போது, காலம் தேவைப்படுகிறது. அந்தச் சொத்துக்களை நல்ல முறையில் பயன்படுத்த வேண்டும், எந்த நோக்கத்தோடு அறக் கட்டளை உண்டாக்கப்பட்டதோ, அதற்காக அந்தச் சொத்துக்கள் பயன்படுத்தப்பட வேண்டுமென்ற நல்லெண்ணத்தில்தான் அரசு செயல்படுகிறது. மாண்புமிகு உறுப்பினர்கள் சொன்ன மற்ற விஷயங்களையும் அரசு கவனத்தில் கொண்டு, தேவையான விளக்கங்களைக் கொடுக்கக் கடமைப்பட்டிருக்கிறதென்று சொல்லி, இதை நிறைவேற்றித் தர வேண்டுமென்று கேட்டு, அமைகிறேன்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர்** : அவை முன் உள்ள பிரச்சினை—

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, 1981 ஆம் ஆண்டு பொது வக்ஃபுகள் (காலவரையறையை நீட்டித்தல்) தமிழ்நாடு திருத்தச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 3/1981) ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்."

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

பிரிவுகள் 2, 3 ஆகியவை, அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டன.

பிரிவு 1, சட்டமியற்றும் முறை, நெடுந்தலைப்பு ஆகியவை, அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டன.

**மாண்புமிகு திரு. கா. இராசா முகமது** : மாண்புமிகு மேலவைத் தலைவரவர்களே,

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, 1981 ஆம் ஆண்டு பொது வக்ஃபுகள் (காலவரையறையை நீட்டித்தல்) தமிழ்நாடு திருத்தச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 3/1981) நிறைவேற்றப்பட வேண்டும்"

என்று முன்மொழிகிறேன்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர்** : அவை முன் உள்ள பிரச்சினை—

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, 1981 ஆம் ஆண்டு பொது வக்ஃபுகள் (காலவரையறையை நீட்டித்தல்) தமிழ்நாடு திருத்தச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 3/1981) நிறைவேற்றப்பட வேண்டும்".

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

[1981 பிப்ரவரி 13

(5) 1981 ஆம் ஆண்டு பச்சையப்பன் பொறுப்புக் கழக (நிர்வாகத்தை அரசு எடுத்துக்கொள்ளுதல்) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 19/1981).

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மாண்புமிகு மேலவைத் தலைவரவர்களே,

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, 1981 ஆம் ஆண்டு பச்சையப்பன் பொறுப்புக் கழக (நிர்வாகத்தை அரசு எடுத்துக்கொள்ளுதல்) சட்ட முன்வடிவு @ (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 19/1981) ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்"
என்று முன்மொழிகிறேன்.

இந்தச் சட்ட முன்வடிவை, இதற்கு முன்னாலே போடப்பட்ட அவசரச் சட்டத்திற்குப் பதிலாகக் கொண்டு வருகிறோம். பச்சையப்பன் அறக் கட்டளையைச் சேர்ந்த பல்வேறு கல்வி நிறுவனங்களில் இருக்கும் நிலைமைகளை அடிப்படையாகக் கொண்டும், உறுப்பினர்களிடத்திலிருந்தும், மாணவர்களிடத்திலிருந்தும், ஆசிரியர்களிடத்திலிருந்தும், பொது மக்களிட மிருந்தும் வந்த கருத்துக்களையும் வைத்து அவசரச் சட்டம் கொண்டு வந்தோம். இப்போது சட்ட முன்வடிவு அவையின் முன்னாலே வந்திருக்கிறது. அதன்மேல் ஆய்வை நடத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர்களின் கருத்துக்கள் தெரிந்த பிறகு, பதில் சொல்கிறேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : முன்மொழியப்பட்ட தீர்மானம்—

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, 1981 ஆம் ஆண்டு, பச்சையப்பன் பொறுப்புக் கழக (நிர்வாகத்தை அரசு எடுத்துக்கொள்ளுதல்) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 19/1981) ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்"

இன்னும் அரை மணி நேரம்தான் இருக்கிறது. சட்ட முன்வடிவு அதற்குள் நிறைவேற்றப்பட வேண்டும். ஏழு உறுப்பினர்கள் பேச வேண்டுமென்று பெயர் கொடுத்திருக்கிறார்கள். எனவே ஒவ்வொருவரும் 5 நிமிடங்களில் தங்கள் பேச்சை முடித்துக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளுகிறேன்.

@ 102-108 ஆம் பக்கங்களில் இணைப்பு V ஆக அச்சிடப்பெற்றுள்ளது.



1981 பிப்ரவரி 13]

திரு. க. இராமமூர்த்தி : ஆன் எ பாயின்ட் ஆஃப் ஆர்டர். தலைவரவர்களே, இந்தச் சட்ட முன்வடிவு மற்றைய சட்ட முன்வடிவுகளிலிருந்து மாறுபட்டது. இந்தச் சட்ட முன்வடிவு ஒரு புதிய சூழ்நிலையை உருவாக்குகிறது. அமைச்சரவர்கள் இதுபற்றி கருத்துக்களைச் சொன்னால், தொடர்ந்து விவாதத்தில் உறுப்பினர்கள் கலந்துகொள்ள வாய்ப்புள்ளதாக இருக்கும். இந்தச் சட்ட முன்வடிவை அறிமுகப்படுத்த பின்னணி (பேக்கிரவுன்ட்) என்ன என்பதைப்பற்றி அமைச்சரவர்கள் தெரிவிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மாண்புமிகு தலைவரவர்களே, அவசரச் சட்டத்தை நாம் கொண்டு வந்ததற்கான சூழ்நிலையை மாண்புமிகு உறுப்பினர்களின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். பச்சையப்பன் அறக்கட்டளையினர் சென்னையிலே கந்தசாமி நாயுடு கல்லூரி என்ற பெயரில் ஒரு கல்லூரியை நடத்தி வருகிறார்கள். அந்தக் கல்லூரிக்கு வீட்டு வசதி வாரியம் ஓரிடத்தை—கட்டிடத்தைத் தந்திருக்கிறார்கள். அதை வாங்கு வதற்கான ஒரு நிலையும் ஏற்பட்டிருக்கிறது. அதை வாங்குகிறவரைக்கும் வாடகை தர வேண்டுமென்று ஒரு ஒப்பந்தம் செய்யப்பட்டிருக்கிறது. வாடகையும் தரவில்லை. அந்த இடத்தை கிரயம் செய்வதற்காக அதாவது வீட்டு வசதி வாரியம் இன்னொரு கல்வி நிறுவனத்திற்கு ஒரு பகுதியை விற்பதற்கு ஒப்பந்தம் செய்துவிட்ட பிறகு, கல்லூரி நடத்துவதற்கு குறைந்த பட்சம் எவ்வளவு இடம் இருக்க வேண்டுமோ அவ்வளவு இடம் இல்லாத காரணத்தால், பல்கலைக் கழகம் அதற்குத் தந்திருந்த அங்கீகாரத்தை ரத்து செய்கின்ற முயற்சியிலே இறங்கியது. அப்போதுதான் மாணவர்கள் வேலை நிறுத்தமும், ஆசிரியர்கள் வேலை நிறுத்தமும் ஏற்பட்டது. உறுப்பினர்களிட மிருந்தும் அதற்குத் தொடர்பான கருத்துக்கள் தெரிவிக்கப்பட்டன.

(மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் தலைமை)

அதை நாம் பார்க்கின்றபோது, அறக்கட்டளை நிர்வாகத்தைச் சேர்ந்தவர்கள் அதை அக்கறையோடு, கவனத்தோடு நடத்தாத காரணத்தால், ஒரு கல்லூரியையே மூட வேண்டிய சூழ்நிலை உருவானதை உணர்ந்தோம். அதற்கு முந்தைய வருடம், கிண்டியிலுள்ள செல்லம்மாள் கல்லூரியில் வேலைநிறுத்தம் ஏற்பட்டது, மாணவிகள் வேலைநிறுத்தம் செய்தார்கள். அவர்கள் கோரிக்கை களைப் பார்க்கின்றபோது, அவை மிகச் சாதாரணமானவையாக இருந்தன.

[திரு. செ. அரங்கநாயகம்] [1981 பிப்ரவரி 13

(பிற்பகல் 1-00)

அதைப் போலவே நான் காஞ்சிபுரத்துக்குப் போயிருந்தபோது அங்கேயுள்ள பெண்கள் கல்லூரியில் கடந்த இரண்டு வருடங்களாக சயன்ஸ் படிக்கும் மாணவிகள் சயன்ஸ் பிராக்டிக்கல் செய்ய முடியாத சூழ்நிலை இருப்பதாகச் சொன்னார்கள். இப்போது நாம் நடத்துகின்ற மேல் நிலைப் பள்ளிகளில் எங்காவது அத்தகைய சயன்ஸ் பிராக்டிக்கல் செய்ய வசதியில்லையென்றால், அருகிலுள்ள வேறு கல்லூரியுடன் அதை இணைத்து அல்லது வேறு ஒரு இடத்திற்குச் சென்று சயன்ஸ் பிராக்டிக்கல் செய்யக் கூடிய அளவுக்கு ஏற்பாடுகளை நாம் செய்திருக்கிறோம். காஞ்சிபுரம் பெண்கள் கல்லூரியைப் பொறுத்தவரை, அருகில் ஆண்கள் கல்லூரி இருக்கிறது. இருந்தும், அவர்கள் அதற்குரிய எந்த ஏற்பாட்டையும் செய்யவில்லை. மேலும் சென்னை அருகில் தான் இருக்கிறது. அவர்கள் அதற்குரிய வசதி வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுக்கவில்லை. சயன்ஸ் பிராக்டிக்கல் செய்யாவிட்டால், அவர்கள் படிக்கும் படிப்பு பயனில்லாதது. அதுபோல், அங்கே பிரின்சிபாலைப் போட முடியாத நிலை இருந்தது. ஆசிரியர்கள் வேலையில்லை என்று சொல்லிக் கொண்டிருந்தார்கள். சர்ப்ளஸ் டீச்சர்களைத் தந்தால், அரசு வேலை தரத் தயாராக இருக்கிறது. வேக்கன்டாக அவர்கள் வைத்துக்கொண்டிருந்தார்கள். காஞ்சிபுரத்திற்கு நான் போயிருந்தபோது, அங்குள்ள ஆசிரியர்கள் என்னை வந்து பார்த்தார்கள். இப்படியெல்லாம் தவறுகள் நடைபெற்ற காரணத்தால் தான் இதுமற்றிய சிந்தனையே சென்றது. அது மட்டுமல்லாமல், சில 'இர்ரகுலாரிட்டீஸ்' கூட நடைபெற்றிருக்கின்றன. 1980 ஆம் ஆண்டுக்குப் பிறகு அரசு பொறுப்பேற்கும் வரை அங்கே டிரஸ்ட் போர்ட் மீட்டிங் நடந்து வந்திருக்கிறது. ஆனால் அவர்கள் எந்தவிதமான மினிட்ஸ்-ம் எழுதவில்லை. அதுமட்டுமல்லாமல், அரசு பொறுப்பேற்றபோது, கையெழுத்துப் போட்ட பிளாங் செக்ஸ் நிறைய இருந்தன. ஆனால் நாம் அதை மேற்கொண்ட பிறகு தான் இந்த "இர்ரகுலாரிட்டீஸ்" தெரிய வந்தது. அதோடு கூட, அரசு பொறுப்பேற்பதற்கு 2, 3 மாதத்திற்குள் நிறைய பேரை அங்கே அப்பாயின்ட் பண்ணியிருக்கிறார்கள். கல்லூரிகளில் ஆசிரியர் பணிக்கான அனுமதியை அரசிடத்திலிருந்து வாங்கித்தான் அவர்களை நியமிக்க வேண்டும். எதையும் கவனிக்காமல், ரோஸ்டர்-ம் இல்லாமல் ஒரே டிப்பார்ட்மென்டில் 7, 8 பேரை நியமனம் செய்திருக்கிறார்கள். எந்த ஒரு மானேஜ்மென்ட்டும் அவர்களைப் போல் அரசாங்க விதியை மதிக்காது போனதே இல்லை. அத்தகைய செயல்களை அவர்கள் அங்கே செய்து கொண்டிருந்தார்கள். சர்ப்ளஸ் போஸ்ட்ஸ் இருக்கிறது என்றால், நாம்



1981 பிப்ரவரி 13] [திரு. செ. அரங்கநாயகம்]

பணிப் பாதுகாப்பு தந்திருப்போம். இப்போது நாம் எங்காவது சர்ப்ளஸ் டீச்சர்ஸ் இருந்தால், தேவையான கல்லூரிக்கு அவர்களை அனுப்பி பணிப் பாதுகாப்பு தருகின்ற திட்டத்தைச் செயல்படுத்திக் கொண்டிருக்கிறோம். சர்ப்ளஸ் டீச்சர்களை அவர்கள் வைத்துக்கொண்டு நமக்குத் தெரிவிக்காமல் இருந்தால் அல்லது சம்பளம் தந்துகொண்டிருந்தால், அவர்களுக்கு நாம் சம்பளம் தர மாட்டோம். அவர்களுடைய அறக்கட்டளை தான் பணத்தைத் தர வேண்டும்.

செல்லம்மாள் கல்லூரியில் தவறுகள் நடந்ததால், பிரின்சிபால் லீவ் போட்டார். வேறு ஒரு அம்மையாரை அங்கே போட்டார்கள். பிரின்சிபாலாக இருந்த அவருக்கு பொறுப்பைத் தராமல் விட்டிருக்கிறார்கள். இப்போது அரசு பொறுப்பேற்ற பிறகு, அந்த அம்மையாருக்கு அதற்குரிய அதிகாரத்தைத் தந்திருக்கிறோம்.

அடுத்து, யு.ஜி.சி.-யிலிருந்து 5 லட்சம் ரூபாய் கிரான்ட் தந்திருக்கிறார்கள். அதை வாங்கி கல்லூரிக்குப் பயன்படுத்த வேண்டும். இதுவும் அங்கே உள்ள ஒரு முக்கிய குறைபாடு. நான் ஏற்கெனவே இந்த அவையிலே கூறியிருக்கிறேன். சேலம் சாரதா கல்லூரி, கோவை அவிநாசிலிங்கம் கல்லூரி இவற்றையெல்லாம் போய்ப் பார்த்தால், இவற்றுக்கு 2, 3 கோடி ரூபாய்க்கு மேல் சொத்துக்கள் இருக்கின்றன. அத்தனையும் நன்கொடை மூலமாகவும் மானியமாகவும் பெற்றதை அவற்றை வைத்து கட்டியிருக்கிறார்கள். பச்சையப்பர் சேர்த்து வைத்துவிட்டுப் போனது போல் அங்கே யாரும் அறக்கட்டளைகளை வைத்து விட்டுச் செல்லவில்லை. திறமையும், அக்கறையும் இந்த நிர்வாகத்துக்கு இருந்திருந்தால், கோடிக்கணக்கான ரூபாய் மதிப்புள்ள பொதுச் சொத்துக்களை நல்ல முறையில் பயன்படுத்தி, நல்ல முறையில் உருவாக்கக் கூடிய சூழ்நிலை ஏற்பட்டிருக்கும். ஆனால் அவர்கள் அதைச் செய்யவில்லை. இங்குள்ள உறுப்பினர்கள் பச்சையப்பன் கல்லூரிக்குப் போனால் கூட, எந்தவித முன்னேற்றமும் அங்கே இல்லை என்பதைத் தெரிந்துகொள்ளலாம். 10, 15 ஆண்டுகளாக எந்த ஒரு புதுக் கட்டடமும் அங்கே எழுப்பப்படவில்லை. அது முன்னேறிக்கொண்டு வருவதற்கான சூழ்நிலையே இல்லை. ஐந்து லட்சம் ரூபாய் யு.ஜி.சி.-யிலிருந்து தந்திருக்கிறார்கள். அதையும் அவர்கள் வாங்கிப் பயன்படுத்தவில்லை. அதற்குரிய நடவடிக்கையையும் எடுக்கவில்லை. தென்னங்குடி என்கிற ஒரு எஸ்டேட் சீர்காழிக்கு அருகில் இருக்கிறது. நூற்றுக்கணக்கான ஏக்கர் விஸ்தீரணத்தில் இருக்கக்கூடிய அந்த சொத்திலிருந்து வருவாயை நல்ல முறையில் எடுக்கின்ற முயற்சியில் ஈடுபட

இல்லை. சென்னை நகரிலும் நிறைய சொத்துக்கள் இருக்கின்றன. மவுண்ட் ரோடு, சைனா பஜார் போன்ற புகழ் வாய்ந்த வீதிகளில் கூட சொத்துக்கள் இருக்கின்றன. வக்ஃப் போர்டு பற்றி இங்கே சொல்லும்போது, மாண்புமிகு உறுப்பினர்கள் அதனுடைய மதிப்புகளைப் பற்றியெல்லாம் இங்கே சொன்னார்கள். இன்றைக்கு இதனுடைய சொத்துக்களிலிருந்து வருகின்ற வாடகைக்கும் நாம் சென்று பார்த்து கணக்கிட்டுப் பார்க்கின்ற வாடகைக்கும் மிகப் பெரிய இடைவெளி இருக்கிறது. குறைந்த வருவாயைத் தான் நிர்வாகத்திற்கு, அதை அனுபவிப்பவர்கள் தந்துகொண்டிருக்கிறார்கள். இதுபோன்ற பிரச்சினைகளையெல்லாம் பார்த்தால், இதை எடுத்தது எவ்வளவு பெரிய சரியான செயல் என்பதை மாண்புமிகு உறுப்பினர்களே புரிந்துகொள்வார்கள். கொடுக்கின்ற வாடகை குறைவு என்றால், சரியான, நியாயமான வாடகையைப் பெற வேண்டும். அவர்கள் நியாயமான வாடகையைத் தரவில்லையென்றால், கோர்ட்டுக்குப் போக வேண்டும். ஆகவே தான் இதிலுள்ள சொத்து சம்பந்தமான எந்தவிதமான சட்டபூர்வமான நடவடிக்கையையும் அக்கறையோடு, ஆர்வத்தோடு நிர்வாகம் எடுக்கவில்லை என்பதை இங்கே தெரிவித்துக்கொள்ள ஆசைப்படுகிறேன். கந்தசாமி நாயுடு அவர்கள் பச்சையப்பன் அறக்கட்டளைக்குத் தந்த சொத்து சென்னையிலே 22 ஏக்கர் இருக்கிறது. அவர் பெயரில் இருந்த சொத்தை பச்சையப்பன் அறக்கட்டளையை நம்பித் தந்திருக்கிறார்கள். இந்த நிலையில் அவர்கள் 10 ஏக்கருக்கு ஒரு ஏற்பாடு செய்யவில்லையென்றால், எப்படி? இரண்டு வருடங்களாக அவர்கள் பட்ஜெட் போடவில்லை. பொதுப் பணத்தில் அறக்கட்டளையை நடத்திக்கொண்டிருக்கிறவர்கள் பட்ஜெட் போடாமல் அறக்கட்டளையை நடத்திக்கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்குக் கொஞ்சம் ஆர்வமும் அக்கறையும் இருந்தால், பச்சையப்பன் அறக்கட்டளை சார்பாக சென்னையிலே மிக நல்லமுறையில் ஒரு கல்லூரியை நடத்தியிருக்க முடியும். பிற்படுத்தப்பட்டவர்களுக்காகவும் தாழ்த்தப்பட்டவர்களுக்காகவும் மிக நல்ல முறையில் பணியாற்றி அறக்கட்டளை ஏற்படுத்தப்பட்டதன் நோக்கத்தை முழுமை பெற்றிட வாய்ப்பினை ஏற்படுத்தியிருக்க முடியும். இப்போது அது இத்தகைய ஒரு வாய்ப்பை இழந்து நிற்கிறது. ஆகவே தான், இந்த அரசு இத்தகைய ஒரு தீவிர நடவடிக்கையை எடுத்திருக்கிறது. இதுபோன்ற வேறு விவரங்கள் உறுப்பினர்களுக்கு ஒருவேளை தெரிந்திருக்கலாம். அப்படி ஏதாவது தெரிந்திருந்தால், அதையும் உறுப்பினர்கள் தெரிவித்தால், எங்களுக்கு அது உதவிகரமாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.





* திரு. க. இராமமூர்த்தி : பச்சையப்பன் அறக்கட்டளையை அரசு சில ஆண்டுகளுக்கு ஏற்பது தொடர்பான இந்தச் சட்ட முன்வடிவை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் எந்தத் தகவல்களின் அடிப்படையிலே, உணர்வின் அடிப் படையிலே கொண்டு வந்திருக்கிறார்கள் என்பதை நான் எண்ணிப் பார்க் கிறேன். அவர்களுடைய அதே உணர்வோடு என்னுடைய உணர்வுகளையும் இணைத்துக்கொள்கிறேன். இங்கே பச்சையப்பன் அறக்கட்டளை குறித்த சட்ட முன்வடிவினை அவை முன் வைத்து சில தகவல்களை மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் தந்திருக்கிறார்கள். இந்தச் சமுதாயத்திலே 100 ஆண்டு களுக்கு முன்னதாகவே மிகப் பெரிய அளவிலே பொருளீட்டி, தான் ஈட்டிய அந்தப் பொருளைக் கொண்டு மற்றவர்களுக்குப் பயன் கிடைக்க வேண்டுமென் பதற்காக பெருத்த கொடை உணர்வோடு, தாராள உணர்வோடு, நல்ல மனத் தோடு கொடைவள்ளல் பச்சையப்பன் அவர்களால் ஏற்படுத்தப்பட்டது. இந்த பச்சையப்பன் அறக்கட்டளை என்கிற அமைப்பு. அதற்கென தரப்பட்டுள்ள நன்கொடைகள், மானியம் இவற்றையெல்லாம் இங்கே மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் சுட்டிக்காட்டியதுடன், அது வளர்ந்திருக்க வேண்டிய நிலைகளைப்பற்றியெல்லாம் கூடக் குறிப்பிட்டார்கள். உண்மையில் அது இன்றைக்கு எப்படி வளர்ந்திருக்கிறது என்பதையும் நாம் ஆராய்ந்து பார்க்க வேண்டும். இந்து தர்மத்திற்காக பச்சையப்பன் அவர்கள் இந்தச் சொத்துக்களை அறக்கட்டளைக்கு எழுதி வைத்தார். அது அன்றைக்கு சமயத் துறைகளிலே செலவாகியது. கல்வித் துறைக்கு, கல்வி வளர்ச்சிக்கு அதனுடைய உதவி பெறுவதற்கான வாய்ப்பு இல்லாமலிருந்த நிலையில் "நார்ட்டன் துரை" அவர்கள் கல்வி தர்மத்தையும் உள்ளடக்கியதுதான் இந்து தர்மம் என்கிற வழக்கினை தொடுத்து, உயர்நீதி மன்றத்தில் வெற்றியும் பெற்றார். அதன் பிறகுதான் அதன் விளைவாகத்தான் கல்வி வளர்ச்சிக்கு இந்த அறக்கட்டளை யிலிருந்து செலவு செய்யலாம் என்கிற நிலை உருவாகியது. கால அளவில் பள்ளிக் கல்வி, உயர் நிலைக் கல்வி, கல்லூரிக் கல்வி என்று வளர்ந்து தொன்மையான இன்றைக்கு இருக்கும் நிலைத்து நிற்கின்ற இந்த

(பிற்பகல் 1-10)

அறிவாலயங்கள் உருவெடுத்தன. அதனுடைய நிர்வாகம் எப்படி கெட்டுப் போயிருக்கிறது என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். நான் மெத்த வேதனையோடு சொல்கிறேன், இதையெல்லாம் பார்க்கும்போது 'ஃபிலந்திராபிக்' உணர்வோடு, சமுதாயத்திற்கு நன்மை செய்ய வேண்டு மென்ற உணர்வோடு, பெரும் தொகைகளை ஒதுக்கி அறக்கட்டளைகள் ஏற்படுத்துவதற்கு இதுபோன்ற நடவடிக்கைகள் தடங்கலாக, தடையாக

அவர்கள் மெத்தவும் மகிழ்ச்சியடைகிறார்கள். அதுமட்டுமல்ல, அறக்கட்டளைகளை ஏற்படுத்தியவர்களின் சொந்தக்காரர்கள் இன்றையதினம் ஏழ்மை நிலையில் இருக்கும்போது, பல கோடிக்கணக்கான ரூபாய் மதிப்புள்ள அறக்கட்டளையின் சொத்துக்களை யாரோ தங்களுடைய வாழ்க்கைத் தேவைகளுக்காக அல்லது வேறு பல காரணங்களுக்காக எடுத்துக்கொள்கிறார்கள் என்ற உணர்வு அவர்களுக்கு வருவது அறக்கட்டளைகளுக்கு நல்லதல்ல. அந்தமாதிரி உணர்வுகளுக்கு இடமில்லாமல் செயல்பட வேண்டும். இப்போது நடவடிக்கை எடுத்திருக்கும் இந்த நேரம் சரியானது என்று என்னால் சொல்ல முடியவில்லை. இப்போதாவது இதிலே நுழைந்திருப்பது வரவேற்கப்படவேண்டிய ஒன்று. இந்த அறக்கட்டளையிலே யார் யாரெல்லாம் இருந்தார்கள், இந்த அறக்கட்டளையை அரசு மேற்கொள்ளும் போது யாரெல்லாம் இருந்தார்கள் என்ற விவரங்கள் இந்த அவையிலே வைக்கப்படும் அளவுக்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டு, அமைகிறேன்.

(பிற்பகல் 1-20)

* Thiru A. R. DAMODARAN : Sir, this Bill provides for the taking over of the management of the Pachaiyappa's Trust, a Trust which has been in existence for over a hundred years and which has been rendering a lot of good service in so far as education is concerned in Tamil Nadu.

The hon. Member Thiru Ramamoorthy mentioned that this had been probably the only Institution that existed in Tamil Nadu which provided for boys of the Backward communities to be admitted and educated. I want the hon. Members to remember that this was done prior to 1925 when the late Thiru Muthiah Mudaliar introduced the communal G.O. Therefore, this is a charity that has looked after the educational interests of the Backward Communities and it has a very treasured place in the minds of those who are interested in the education of the Backward Communities. If you will pardon my reminiscing, the members of my family were associated with the Board of Trustees of the Pachaiyappa's Charities a long time ago, not now. Sir, in 1927, 1928 or 1929, when my father was a Member of the Madras Corporation, he was elected a Trustee to the Pachaiyappa's Charities in those days. In 1932 or 1933 the late Dr. A. L. Mudaliar was the Secretary or Chairman of the Trust Board and he was associated with the Trust Board right



up to 1941 when he was a Member of the Trust Board. My late uncle, Thiru A. Doraisami Mudaliar was also a Member of the Trust Board and later my cousin Dr. Venugopal. The point is that the members of the Trust Board in those days were anxious to bring up the institution to its present level. In fact, in 1941 when the Pachaiyappa's College was locaed in George Town, where it was located in a building in which there were a number of shops and in an extremely crowded locality, lakhs of rupees were spent to bring the college to its present campus in Aminijikarai where we have a now a beautiful campus. The Hon. Minister has mentioned about various irregularities committed by the Board of Trustees. I would be the last person to say that the Government should not take over a private trust if it is mismanaged. I would not subscribe to the view expressed by the teacher-representatives that all private educational trusts should be taken over. I will not subscribe to that view. I have held the view that if there is a Board which mismanages a public trust, we would certainly welcome the Government taking it over. But, in this case, I think the Government should also be fair because I want the charges to be made public. I want the public to know who are the trustees who are misusing public trusts. We must remember that two trustees were elected only about two weeks prior to this measure. After the Court's decision, Thiru N. D. Sundaravadivelu and Thiru Isari Velan of the ruling Party were just then admitted into the Trust Board when the Trust Board was superseded by the Government of Tamil Nadu. Now, when this Bill is being introduced and when it is published all over Tamil Nadu, the impression should not be created that all members of the Board of Trustees were crooks or scoundrels or were swindling the funds of the Trust Board. In fact, I would like Government, though not immediately to appoint a committee, since they have already got a managing committee, to bring out a specific report within six months outlining the irregularities, serious or otherwise, financial or otherwise, committed by the Board of Trustees, because I do not want these people to enter public life hereafter. It is important that we should exclude them from all public trusts. I will not go into the legal complications at the present moment. Generally, when mention is made about irregularities, an opportunity will have to given to answer the charges of

[Thiru A. R. Damodaran] [1981 பிப்ரவரி 13

irregularities and the matter may be taken to Court. But, nonetheless, I support the Government in their action, if they feel that irregularities have been committed.

The next point is that the Government want to administer the Pachaiappa's Charities which run educational institutions — Schools and Colleges — in Kancheepuram, Chidambaram, Cuddalore, etc. I had the privilege in 1968 of presenting 10 acres of land to the late Perarignar Anna, when he was the Chief Minister, for the formation of Kandasami Naidu College for Women in Cuddalore which is functioning very well. I can say frankly that we have no trouble as far as this College is concerned. It was at the same time that the Kandasami Naidu College for Women in Kancheepuram and Kandasami Naidu College for Men in Madras were also started. One difficulty is that there is no use in going by the properties that were endowed in the past which may be worth crores of rupees. Unfortunately, the properties do not fetch much income now a days because of certain inelastic principles. My point is this. The Government have appointed a five-member Committee of Management. The Committee consists of (1) Director of Sports and Youth Services Madras, (2) Joint Secretary to Government Home Department, (3) Joint Secretary to Government, Law Department, (4) Deputy Secretary to Government, Finance Department, dealing with Collegiate Education files and (5) Director of Collegiate Education, Madras. Sir, temporarily this may be all right. But there is one feeling which I must mention. There is a difference between the management of Government Colleges and the management of Colleges run by private bodies, and we must have continuity of management as far as the educational institutions are concerned. If the Government were to transfer the Director of Sports and Youth Services in public interest within six months, I can very well imagine the fate of these institutions because all the officers in the Committee of Management are liable to be transferred and it will take atleast six months for them to find out what the assets of the Pachaiyappa's Charities are. To go into the deeper question, we must have a permanent body of five people who know something about finance, who know something about education. In fact, in 1976 Mr. Justice Sadasivam was appointed but he had to give up because of the judgment of the High Court which came later. We want a body which will manage the institutions for some time and we should see that there is continuity of management. I will



1981 பிப்ரவரி 13] [A. R. Damodran]

plead with the Hon. Minister to consider this aspect. If the Government entirely bureaucratise the Board of Management of the Pachaiyappa's Charities, then growth will be impossible.

Nothing is mentioned in this Bill about the appointment of a Secretary for the Board of Management.

(The Deputy Chairman sounded the gong)

Sir, I will finish in one or two minutes. The Government have mentioned about the irregularities found in the management. The Government have not stated who will be the Chief Executive Officer of the Administration. The Board of Trustees, like the Board of Directors, will have a meeting once a month or once in two months to consider the agenda and will not go into other matters in depth. The officer who is to administer the trust is of very great importance and the Hon. Minister may kindly consider the question of appointing a competent man as Secretary. I am not certain whether the present person will continue as Secretary will have to be appointed. I would suggest that when the administration is handed over two years later to the Charities, I would like the Government to consider whether they should not formulate a certain scheme of election to the Board of Trustees. It is only in the recent past that various abuses have crept in, because it has become a very prestigious position for politicians to aspire for. Even the A.I.A.D.M.K. wanted its own members on the Board, when it became the ruling party. The D.M.K. had its own members before. All these abuses did not occur before political parties wanted to have a place in the Board of Trustees. I do not know why they wanted to come if they were not interested in education and there are also other reasons. We must exclude politicians from trying to grab trusteeship position and misusing it for their ends. I am completely against the misuse of public trusts. In this regard I hope the Government will also consider whether a scheme should not be drafted for election to the Board of Trustees. This is now done on the basis of a scheme which has been formulated by the High Court. I hope the Government will take more interest in the Pachaiyappa's Charities. The Hon. Minister should not forget that he dare not take over a Muslim Trust or a Christian Trust; but he has taken over a very big Hindu Trust and, therefore, I would say that he has got a very great responsibility to see that it is

administered properly because it is likely to be misunderstood, if proper growth is not ensured in this institution. I wish all success to the Government in their efforts to see that things are set right in this great institution which is looking after literally tens of schools and colleges and this institution should be helped to continue the good service which it has been rendering to the members of the backward community for which it was originally created. Thank you.

**செல்வி அ. லீலாவதி :** மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்களே, பச்சையப்பன் பொறுப்புக் கழக நிருவாகத்தை அரசே ஏற்றுக்கொள்ளும் சட்ட முன்வடிவைப் பொறுத்தவரையில், நான் அனைத்து ஆசிரியர்களின் சார்பாகவும் முழுமையாக வரவேற்கிறேன். இம்மாதிரியான ஒரு சட்ட முன் வடிவு கொண்டு வரப்படுவதே ஒரு துணிச்சலான காரியம் என்றுதான் ஆசிரியர்கள் அனைவரும் நினைக்கிறார்கள். நானே நேரில் சென்று செல்லம்மாள் கல்லூரி, கந்தசாமி நாயுடு கல்லூரி மற்றும் பச்சையப்பன் பள்ளி போன்றவற்றைப் பார்த்து வந்திருக்கிறேன்.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்:** சட்ட முன்வடிவு நிறைவேற்றப்படும்வரை அவையின் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

**செல்வி அ. லீலாவதி :** அந்தக் கல்லூரிக் கட்டிடங்கள் எல்லாம் மிகவும் கேவலமான முறையில் இருக்கின்றன. சாதாரண தொடக்கப் பள்ளிகள்கூட அத்தகைய கட்டிடங்களில் இருக்க முடியாது அப்படிப்பட்ட கட்டிடங்களிலேதான் இதுவரை கல்லூரிகளை நடத்தி வந்திருக்கிறார்கள். கல்லூரி ஆசிரியர்களும், பள்ளி ஆசிரியர்களும் இதை மிகவும் வன்மையாகக் கண்டித்திருக்கிறார்கள். விஞ்ஞான பரிசோதனைக்கூடங்கள்கூட அங்கெல்லாம் இல்லாத நிலையில் மாணவர்களுக்கு எப்படி பாடங்களை ஒழுங்காகக் கற்றுக் கொடுக்க முடியும் என்று அப்போதே வன்மையாக எதிர்த்திருக்கிறார்கள். அதற்காக போராட்டம்கூட நடத்தியிருக்கிறார்கள். இப்படிப்பட்ட நிலையில் ஒரு சில ஆண்டுகளுக்காவது அரசு அந்தக் கல்லூரிகளையும் பள்ளிகளையும் தன் பொறுப்பில் எடுத்துக்கொண்டு நிலைமையைச் சீர் செய்வதற்கு முன் வந்ததற்காக நான் ஆசிரியர்களின் சார்பாக நன்றி கூறக் கடமைப்பட்டிருக்

(பிற்பகல் 1-30)

கிறேன். இதே மாதிரியாக பல நிறுவனங்கள் தமிழகத்திலே இருந்து வருகின்றன. அவற்றுக்கு இது ஒரு பாடமாக இருக்கும். அவர்கள் உண்மையான நல்லெண்ணத்திலே தங்கள் நிறுவனங்களை வைத்திருக்க நினைப்பார்கள் என்று நம்புகிறேன்.



சென்னை ஆசிரியர்கள் சங்கத்தின் சார்பில் கடந்த 26—3—1978 அன்று நடந்த கூட்டத்தில் கல்வியமைச்சர் அவர்கள் கலந்துகொண்டு, தனியார் பள்ளி ஆசிரியர்களின் துன்பங்களும், துயரங்களும் இந்த அரசுக்குத் தெரியும் என்றும், எந்த நிறுவனமாக இருந்தாலும், மைனாரிட்டி நிறுவனமாக இருந்தாலும் சரி, வேலை செய்யும் ஆசிரியர்களுக்கு வேலைப் பாதுகாப்பு கொடுத்துத் தீருவேன் என்றும், நிர்வாகச் சீர்கேட்டைச் சரி செய்வதாகவும் உறுதிமொழியை அளித்தார்கள். அதன்படி துணிச்சலாக முதன் முறையாக இந்த மாதிரி சட்ட முன்வடிவைக் கொண்டு வந்திருப்பதை நாங்கள் வரவேற்கிறோம். இந்த மாதிரியான நிலையில் அநேக தனியார் பள்ளிகளும், தனியார் கல்லூரிகளும் தமிழகத்திலே இருக்கின்றன என்பது எல்லோருக்கும் தெரியும். இதைப்பற்றி பல ஆசிரியர்களும், ஆசிரியப் பிரதிநிதிகளும் கூறியிருக்கிறார்கள். ஆகவே அரைத்த மாவையே நான் அரைக்க விரும்பவில்லை. இந்த மாதிரியான நிறுவனங்களை அரசு எடுக்க முன்வரவேண்டுமென்று இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்ளுகிறேன்.

ஆசிரியர்களுக்கு வேலைப் பாதுகாப்பு இல்லாமல் இருக்கிறது. தமிழ்நாடு தனியார் பள்ளிகள் ஒழுங்குபடுத்தும் சட்டம், 1973-ல் எவ்வளவு முரண்பாடுகள் இருக்கின்றன என்பதை சென்னை உயர்நீதிமன்ற நீதிபதி திரு. சத்தியதேவ் அவர்கள் செப்டம்பர் 1979-ல் தெரிவித்துள்ளார். நடுவர் மன்றம் கூறும் ஆணைகளை சிவில் கோர்ட் தீர்ப்பாக எடுத்துக்கொள்ளத்தக்க வகையில் சட்டத்தில் வழிவகை செய்ய வேண்டுமென்றும். இத்தகைய வழிவகை கூட்டுறவுச் சட்டத்திலும், பஞ்சாயத்துச் சட்டத்திலும் செய்யப்பட்டிருக்கிறது என்றும் தெரிவித்திருக்கிறார். ஆகவே காலம் தாழ்த்தாமல் அரசு தனியார் பள்ளி ஒழுங்குபடுத்தும் சட்டத்தில் ஆசிரியர்களுக்கு நிரந்தரப் பணிப் பாதுகாப்புக் கொடுக்க வேண்டுமென்று இந்தத் தருணத்தில் கேட்டுக் கொள்கிறேன்.

பல உறுப்பினர்கள், பள்ளிகளை அரசு எடுத்து நடத்தினால், அதனால் தரம் குறைந்துவிடும் என்று கூறினார்கள். அது சரியல்ல. தனியார் பள்ளிகளையும் அரசே எடுத்துக்கொள்ள வேண்டும் என்றும், தனியார் நிறுவனங்களில் முறைகேடுகள் நேர்கிறபோது அனைத்தையும் அரசே எடுத்துக்கொள்ள வேண்டும் என்றும் கேட்டு அமைகிறேன். வணக்கம்.

[திரு. க. இராமமூர்த்தி] [1981 பிப்ரவரி 13

இருக்கும் அந்த உணர்வோடு அப்போதும் நிலைமைகள் உருவெடுத்திருக்கின்றன. பச்சையப்பன் கல்லூரிகள் ஒரு பல்கலைக்கழகம் ஆகின்ற அளவுக்கு அதற்கு சொத்துக்கள் இருக்கின்றன. 'இந்து' என்ற உணர்வோடு செயல்பட வேண்டிய அவசியம் இந்த அறக்கட்டளையோடு பிறந்த ஒன்றாகும். தமது தர்மம் இந்து மதத்திற்கு என்று ஆரம்பத்திலேயே பச்சையப்பன் அவர்கள் குறிப்பிட்டுக் காட்டியதால், அதற்கும் முக்கியத்துவம் கொடுக்க வேண்டும். நான் பச்சையப்பன் கல்லூரி மாணவன். அதற்காகப் பெருமைப்படுபவன். நான் அந்தப் பச்சையப்பன் கல்லூரியில் படிக்கும்போதுகூட, அந்தக் கல்லூரியை 'அழகான கல்லூரி' என்று சொல்வார்கள். அப்பொழுது தெய்வாம்ச அமைவான கல்லூரி இதுதான். சென்னையிலே வேறு எந்தக் கல்லூரியையும் இப்படிச் சொல்லமாட்டார்கள். இப்படி ஆரம்பத்திலேயே மத உணர்வோடு ஆரம்பித்தும் செயலாற்றினார்கள். மேலும், சமுதாயத்திலே அடித்தளத்தில் இருந்தவர்களுக்கு, பின் தங்கியவர்களுக்கு, ஏழைகளுக்குச் சிபாரிசு இல்லாமல் ஏங்கியவர்களுக்கு வாய்ப்புக் கொடுத்தது இந்தக் கல்லூரி தான். சில கல்லூரிகள் பல இடங்களிலே உருவாகி இருக்கின்றன. அவைகளிலே சிலவற்றை அவற்றின் நிர்வாகம் சீர்கெட்டிருக்கிறது என்ற உணர்வோடு அரசு ஏற்றிருக்கிறது என்பதைப் பார்க்கும்போது இந்தக் கல்லூரியையும் நாம் சீர்செய்ய வேண்டியது மிகவும் அவசியம்.

இன்னொரு விஷயம் என்னவென்றால், தமிழகம் முழுக்க இருக்கின்ற பல ஆலயங்களிலேயும் இன்றைக்கும் பச்சையப்பன் அறக்கட்டளைகள் சார்பில் கட்டளை மற்றும் மண்டகப்படி சிறப்புகள் நடைபெறுகின்றன. ஆங்காங்கே இருக்கின்ற சொத்துகளிலேயிருந்து வருகின்ற வருவாயிலேயிருந்து அந்தச் சிறப்புகள் நடைபெறுகின்றன. (மணியடிக்கப்பட்டது) நான் அந்தக் கல்லூரியின் மாணவன் ஆகையால் இரண்டொரு வார்த்தைகள் கூட சொல்கிறேன். கல்விக்காக பெருமளவுக்குத் தொண்டு செய்கிற அதே நேரத்திலே, கொஞ்சமும் குறையாத அளவுக்கு இந்துக்களுடைய உணர்வுகளுக்கு முக்கியத்துவம் கொடுத்து பல ஆலயங்களிலே அறக்கட்டளைகள் செயல்படுகின்றன. அவைகளெல்லாம் கூட இப்போது முறையாக நடைபெறுகிறதா என்று கண்காணிக்க வேண்டும். அரசு ஏற்றெடுக்கும் போது இன்றைக்கு இருக்கும் பொறுப்பை ஏற்றுக்கொள்வதோடல்லாமல், சில மாற்றங்களையும் நாம் உருவாக்க வேண்டும். மாண்புமிகு அமைச்சர் அவர்கள்கூட வேதனையோடு சொன்னார்கள். சென்னை நகரத்திலே இருக்கின்ற மிக மதிப்பு வாய்ந்த சொத்துக்களிலே இருந்து வரும் வருமானம் எவ்வளவு குறைவாக இருக்கிறது என்று சொன்னார்கள். இப்பொழுது கிடைத்துள்ள வாய்ப்பை அரசு பயன்படுத்திக்கொண்டு குறைகளையெல்லாம் சீர் செய்து



1981 பிப்ரவரி 13] [திரு. க. இராமமூர்த்தி]

முழுமையாக அந்த அறக்கட்டளைக்கு ஈட்டித் தருவதிலே அரசு நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். சில தவிர்க்க முடியாத காரணங்களினாலே அதிகாரிகள் இந்த அறக்கட்டளைகளில் அறங்காவலர்களாக வந்து விடுகிறார்கள். இந்த அறக்கட்டளையின் பின்னணியைப் (பேக்கிரவுண்ட்டைப்) பார்த்துப் புரிந்து, அவர்கள் பணியாற்றும் வகையிலே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அவர்களுக்கு 'இன்ஸ்ட்ராக்ஷன்ஸ்' கொடுக்க வேண்டும்.

இன்னொரு விஷயத்தையும் நான் கேட்க விரும்புகிறேன். பச்சையப்பன் அறக்கட்டளையை அரசு ஏற்றெடுக்கும்போது, இந்தப் பச்சையப்பன் அறக்கட்டளைக்கு இருக்கும் வேறுபல நிறுவனங்களுடைய பொறுப்பும் இதிலே அடங்குகிறதா? சட்டபூர்வமாக அவைகளும் இதிலே அடங்குகின்றனவா? (அடங்குகிறது என்ற வகையிலே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உட்கார்ந்து கொண்டு தலையசைத்தார்கள்). அடங்குகிறது என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்கிறார்கள். மகிழ்ச்சி. அதன் தொடர்பாக இருக்கும் எல்லாக் கல்வி நிலையங்களையும் இதிலே கொண்டுவர வேண்டும்.

இந்த அறக்கட்டளையின் முழுமையான மதிப்பையும், மரியாதையையும் மீட்டுத்தர வேண்டும் என்று கேட்டுக்கொண்டு இந்த அறக்கட்டளையை ஏற்றெடுக்கும்போது பொறுப்பை ஒப்புக்கொண்டிருக்கும் அதிகாரிகள் தங்களுக்கு ஏதோ வேலையளிக்கப்பட்டிருக்கிறது என்ற அளவிலே காரியங்களைச் செய்யாமல், இந்து மதத்தைச் சேர்ந்த ஒரு பெரிய செல்வந்தர் தம் வாழ்நாள் பூராவும் ஈட்டிய பொருளை இதற்கென்று ஒப்படைத்து, அவர் கூறிய அந்தக் கருத்துக்கள், வெளியிட்ட உணர்வுகள் ஈடேறும் அளவுக்கு அந்த அறக்கட்டளையைச் செயல்படச் செய்து காரியங்கள் ஆற்ற வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இந்த அறக் கட்டளைகளை கடந்த காலத்திலே ஏற்படுத்தியபோது எந்த நோக்கத்தோடு கொண்டு வந்தார்களோ அது நிறைவேற வேண்டுமென்ற முழு உணர்வோடு செய்தார்கள். அவர்கள் பெரும் செல்வந்தர்களாக இருந்தபோது இவற்றையெல்லாம் செய்தார்கள். ஆனால், அவர்களுடைய குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் இன்றைக்கு வாழ்க்கைக்கு வழியில்லாமல் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். அவர்கள் தங்களுடைய முன்னோர்கள் பெருமளவிலே ஈட்டிய பொருளை—தங்களுடைய வாரிசுகளைப் பற்றிக் கொஞ்சம்கூடக் கவலைப்படாமல்—எல்லாவற்றையும் வழங்கி இந்த அறக்கட்டளைகளை ஏற்படுத்தினார்கள் என்றும், குறைந்தபட்சம் அவர்களுடைய முன்னோர்கள் எண்ணிய கருத்துக்களுக்கேற்ப, அவர்கள் எதிர்பார்த்த நோக்கங்களுக்கேற்ப கொஞ்சம் கூட தவறு ஏற்படாமல் இந்த அறக்கட்டளைகள் எல்லாம் நிர்வகிக்கப்படுகின்றன என்பதைப் பார்க்கும்போது

[திரு. க. மீனாட்சிசுந்தரம்]    [1981 பிப்ரவரி 13

நிலைமையை மாற்றி நிரந்தரமாகச் சட்டத்தை இயற்றி எங்கெங்கே ஊழல்கள் நடைபெறுகின்றனவோ அங்கெல்லாம் ஒரு குறிப்பை அவர்களிடம் கேட்டு, அவர்கள் தருகின்ற சமாதானம் சரியாக இல்லையென்றால், மீண்டும் சட்டம் கொண்டு வராமல் ஏற்கெனவே நிறைவேற்றப்பட்ட நிரந்தரச் சட்டத்தின் மூலமாக அரசே ஏற்றுக் கொள்ளுகிற முறையில் சட்டத்தை இயற்ற மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் பரிசீலனை செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. எ. ஆர். தாமோதரன் அவர்கள், நிர்வாகக் குழுவில் அரசு அலுவலர்களைப் போட்டிருக்கிறார்கள் என்று குறிப்பிட்டார்கள். அவர்கள் தவறு செய்யாதவர்கள் என்று சொல்ல முடியாது என்றாலும்கூட, அந்த அளவுக்குத் தவறுகள் மலிந்துவிட முடியாது. அவர்கள் மேல் நாம் கண்காணிப்பை ஏற்படுத்த முடியும்.

அதிகாரச் சார்பற்ற ஆலோசனைக் குழுவை, கல்வியாளர்கள், மேலவை ஆசிரியப் பிரதிநிதிகள், மற்ற தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள், கல்லூரியின் நிர்வாகத்திலே இருக்கக்கூடிய ஆசிரியர்களிலே தேர்ந்தெடுக்கப்படக்கூடியவர்கள் ஆகியவர்களைக் கொண்டு ஒரு அட்வைசரி கமிட்டியை நியமிக்க கல்வி அமைச்சர் அவர்கள் சிந்திக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். பொறுப்புக் குழுவிற்கு பின்னாலே தேர்தல் நடத்தப்படும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. அதையெல்லாம்கூட விரைவிலே செய்வதற்கு இப்போதே திட்டம் தீட்ட வேண்டும். திரும்ப அவர்களிடம் ஒப்படைக்காத வகையில் தொடர்ந்து நிரந்தரமாக அரசே தன் கையில் வைத்துக்கொள்ளும் வகையில் சட்டம் இயற்ற வேண்டும் என்று கேட்டு, அமைகிறேன்.

திரு. ஆ. நல்லசிவன்: துணைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்ட முன்வடிவை நான் முழு மனதுடன் வரவேற்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் திரு. மீனாட்சிசுந்தரம் அவர்கள் சொன்னதை நான் வலியுறுத்த விரும்புகிறேன். இரண்டு வருஷத்திற்கு மட்டும் ஏன் எடுக்கிறார்கள்? அந்த நிறுவனத்தைச் செம்மையாக நடத்த, ஐந்து வருடங்களுக்காவது ஏற்று நடத்தலாம்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. இராமமூர்த்தி அவர்கள் டிரஸ்டுகளைப் பற்றிச் சொன்னார்கள். மிகவும் மோசமாக நடைபெறுகின்ற டிரஸ்டுகளைப் பார்த்த பின்பு இனி, யாரும் டிரஸ்டுகளை ஏற்படுத்தமாட்டார்கள் என்று சொன்னார்கள். அக்காலத்தில் டிரஸ்டுகளை ஏற்படுத்தியவர்கள் பணத்தை



1981 பிப்ரவரி 13]    [திரு. ஆ. நல்லசிவன்]

வைத்துக்கொண்டு வேறு காரியத்திற்குப் பயன்படுத்த முடியாது என்று கருதினதால், டிரஸ்டுகளை ஏற்படுத்தினார்கள். இப்போது பணத்தை வைத்து பல காரியம் செய்ய இயலுமாதலால் யாரும் பணத்தைத் தரப் போவதில்லை. எனவே, அதைப்பற்றி நாம் கவலைப்பட வேண்டியதில்லை. எனவே, ஏற்கெனவே இருப்பதற்கு முதலில் பாதுகாப்புக் கொடுக்க வேண்டும். மாண்புமிகு உறுப்பினர் திரு. மீனாட்சிசுந்தரம் அவர்கள் சொன்ன மாதிரி, ஒரு நிரந்தரமான சட்டத்தைப் போட்டு சர்க்கார் கையில் அதிகாரத்தை வைத்துக்கொண்டு, நிர்வாகம் தவறு செய்யும்போது, அந்த நிறுவனத்தை அரசு எடுத்துக்கொள்ளுவது நல்லது. இப்போது பச்சையப்பன் அறக்கட்டளையை எடுத்துக் கொண்டிருக்கிறார்கள். தமிழ் நாட்டில் எங்கெல்லாம் இந்த மாதிரியான நிறுவனங்கள் இருக்கின்றனவோ அவற்றையெல்லாம் தன் பொறுப்பில் எடுக்க வேண்டாமா என்று அரசு யோசனை செய்ய வேண்டும்.

(பிற்பகல் 1-40)

இங்கே பல விஷயங்களைப்பற்றிப் பேசினார்கள். பச்சையப்பன் கல்லூரியில் இருந்த ஊழல் நிலைமைகளைப் பற்றித் தெரிந்து அந்தக் கல்லூரியை அரசு எடுத்துக்கொண்டிருக்கிறது. சிவகங்கையில் ஒரு கல்லூரியை எடுத்திருக்கிறது. இதுபோலவே நாகர்கோவிலில் பயனீர் கல்லூரியை எடுத்திருக்கிறது. இந்தக் கல்லூரிகளையெல்லாம் அரசு ஏற்ற பிறகு, அந்தக் கல்லூரிகளின் ஆசிரியர்களுக்குப் பாதுகாப்பு ஏற்பட்டிருக்கிறது. இந்தமாதிரி டிரஸ்டைப் பொறுத்து மட்டும் நான் சொல்லவில்லை. தெய்வத்தின் பெயராலே எத்தனையோ டிரஸ்ட்டுகள் நடந்து வருகின்றன. இந்த டிரஸ்ட்டுகளின் கதியே எப்படி இருக்கின்றன என்பதை அவை முன்னவர், சென்ற சட்ட முன்வடிவின் மீது பேசுகையில், குறிப்பிட்டார். அப்படியிருக்க தெய்வத்தின் பெயரைச் சொல்லாமல் செயல்படுகின்ற டிரஸ்ட்டுகளை யார் ஒழுங்காக நிர்வகிக்கப் போகிறார்கள்? பொதுவாக டிரஸ்ட்டுகளிலே இருப்பவர்கள் எல்லாம் ஒழுங்காக நடத்திக் கொண்டிருக்கிறார்களா? அரசு, கல்வி மான்யத்தின் மூலமாகக் கல்விக்காகப் பெருமளவுக்கு நிதி ஒதுக்கீடு செய்து செலவு செய்து கொண்டிருக்கிறது. எனவே, இப்போது தனியார் உதவி தேவையில்லை. அந்தக் காலத்தில்தான் தனியார் நிறுவனங்கள் தேவைப்பட்டன. அவைகளுக்கு தேவைக்கு மேற்பட்ட சொத்துக்கள் இருக்கின்றன. அந்தச் சொத்துக்களை, நிலங்களை, வருமானங்களை அவர்களே நிர்வாகம் பண்ணியிருக்கிறார்கள். அவைகளை அவர்கள் ஒழுங்காக நிர்வாகம் பண்ணினால், ஒன்றும் செய்வதற்கில்லை. ஆனால் அங்கேயெல்லாம் இப்போது ஊழல்கள் இருக்கின்றன. அப்படி ஊழல்கள் மலிந்தபிறகு தானே, தோன்றி

* திரு. க. மீனாட்சிசுந்தரம் : மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்களே, பச்சையப்பன் பொறுப்புக் கழக நிர்வாகத்தை அரசு எடுத்துக் கொள்ளும் இந்தச் சட்ட முன்வடிவை நான் வரவேற்கிறேன். பேரறிஞர் அண்ணா அவர்கள் பயின்ற நிறுவனம் இது. ஒருசமயம் தஞ்சை மாவட்டத்திலே வேதாரண்யம் பகுதியிலே உள்ள சில தனியார் பள்ளிகளையும்—அவற்றில் நடைபெற்ற ஊழல்களைப்பற்றி எடுத்துச் சொல்லி—அரசுடைமையாக்க வேண்டுமென்று அவர் முதலமைச்சராகப் பொறுப்பில் இருந்தபோது, அவருடைய நுங்கம்பாக்கம் இல்லத்திலே சென்று நாங்கள் வேண்டுகோள் விடுத்தபோது, அப்போது அந்த நிறுவனங்கள் மிகச் சிறப்பாக நடைபெற்றதை மனதிலே கொண்டு, பச்சையப்பன் கல்லூரி மிகச் சிறப்பாக நடைபெறுகிறதே, இராமகிருஷ்ண மடங்களால் நடத்தப்படும் வித்தியாசாலைகள் நல்ல முறையில் நடைபெறுகின்றனவோ, அவைகளைக் கூட எடுத்துக்கொள்ள வேண்டுமென்று சொல்கிறீர்களே என்று எங்களைக் கேட்டார். அந்த அளவிற்கு, அந்தக் காலத்திலே மிகச் சிறப்பாக நடைபெற்ற ஒரு நிறுவனமாகும் இது. அதற்குப் பின்னாலே, ஊழல் நிறைந்த பள்ளிகள் எங்கே இருக்கின்றனவோ அவைகளை யெல்லாம் இந்த அரசு ஆராய்ந்து அவைகளை அரசுடைமையாக்குகிற முயற்சியிலே ஈடுபடும் என்று பேரறிஞர் அண்ணா அவர்கள் குறிப்பிட்டார்கள். அந்த அடிப்படையிலே நம்முடைய மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் இன்னின்ன குறைபாடுகள், குற்றச்சாட்டுக்கள் தனியார் பள்ளிகளிலே இருக்கின்றன என்று நாங்கள் தொகுத்துக் கூறுவதற்கு முன்னாலே, அவரே ஆசிரியராக இருந்து அனுபவித்த காரணத்தால், நாங்கள் தொகுத்துச் சொல்ல வேண்டிய அவசியமே இல்லாமல் . . . . .

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, இதில் எல்லாம் எனக்கு அவ்வளவு அனுபவம் இல்லை.

திரு. க. மீனாட்சிசுந்தரம் : குறைபாடுகளில் அவருக்கு அனுபவம் என்று நான் சொல்லவில்லை. ஆசிரியர்களுக்கு இருக்கின்ற சங்கடங்களை உணர்ந் திருக்கிற வகையிலே அனுபவம் உள்ளவர்தான் அவர். அதை அவர் மறுக்க முடியாது. அந்த வகையிலே குறைபாடுகளை உணர்ந்து அதற்கேற்ப மிகத் தீவிரமாக—ஏன், புரட்சிகரமாக என்று கூடச் சொல்லலாம்—இந்தச் சட்டத் தைக் கொண்டு வந்திருக்கிறார்கள். இதற்கு பாராட்டக் கடமைப்பட்டிருக் கிறேன். ஆசிரியர்கள் சமுதாயத்தின் சார்பிலே வரவேற்கக் கடமைப்பட் டிருக்கிறேன்.





மாண்புமிகு உறுப்பினர் திரு. ஏ. ஆர். தாமோதரன் அவர்கள் பேசுகிற போது, ஆசிரியர்கள்-பிரதிநிதிகள் எல்லாம் எல்லாப் பள்ளிகளையும் அரசு எடுக்க வேண்டுமென்று சொல்லுகிறார்கள் என்பதை எடுத்துச் சொல்லி, தான் அப்படிச் சொல்ல இயலாது என்பதைக் கோடிட்டுக் காட்டினார்.

" குணம்நாடிக் குற்றமும் நாடி அவற்றுள் ;
மிகைநாடி மிக்க கொளல "

என்று திருவள்ளுவர் சொன்னார். அதைப்போல நம்முடைய தமிழ் நாட்டில் இருக்கக்கூடிய தனியார் நிறுவனங்களை எடுத்துப் பார்த்தால், மிகக் குறைந்த சதவீத நிறுவனங்கள்தான் மிகச் சிறப்பாக நடைபெறுகிற நிறுவனங்களாக இருக்கும். ஆகவே மிக விரைவிலே இந்த அரசு, இப்படிப்பட்ட நடவடிக்கையில் ஈடுபட்டாக வேண்டுமென்று வலியுறுத்த வேண்டிய கட்டாயத்திலே நாங்கள் இருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. இராமமூர்த்தி அவர்கள் இங்கே குறிப்பிட்ட தைப்போல, அறக்கட்டளைகள் தவறாகப் பயன்பட்டால், ஊழல் நிறைந்த இடமாக மாறிவிட்டால் முறைகேடுகள் மலிந்து விட்டால், அரசு சரியான நேரத்திலே தலையிட்டு எடுத்துக்கொள்ளும் என்ற உணர்வு ஏற்படுத்தினால்தான் பிற்காலத்திலே அறக்கட்டளைகளை ஏற்படுத்த முன்வருவார்கள் என்ற அடிப்படையிலே, சரியான நேரத்தில் சரியான நடவடிக்கையை எடுத்திருக்கிறார்கள் என்று சொல்லி வரவேற்கிறேன்.

இரண்டாண்டு காலத்திற்கு எடுத்துக்கொள்ளப்படும் என்று குறிப்பிடப் பட்டிருக்கிறது. ஆசிரியர்களைப் பொறுத்தவரையில், என்னைப் பொறுத்த வரையில், இரண்டாண்டு என்று இருக்கக் கூடாது. தனியார் நிறுவனங்களை அரசே ஏற்பதை ஓரளவிற்கு ஒத்துக்கொண்டிருக்கக்கூடிய வகையில் பின்னாலே தீர்ப்பு வரும் என்ற நிலை இல்லாமல் தொடர்ந்து நிரந்தரமாக அரசே தான் நடத்த வேண்டுமென்ற வகையிலே சட்டத்திலே பிரிவுகள் இருக்க வேண்டும். சில ஆண்டுகள் ஆன பிறகு அவர்களிடமே ஒப்படைக்கப்பட்டு மீண்டும் ஊழல் ஏற்பட்டு மீண்டும் அரசே எடுப்பது போன்ற நிலைமைகள் தேவையில்லை. ஒருமுறை அரசு எடுத்துவிட்டால், தொடர்ந்து அரசிடத் திலே இருக்க வேண்டும் என்ற வகையிலே சட்டத்திலே ஷரத்துக்கள் இடம் பெற வேண்டும். பொதுவாக நம்முடைய தமிழகத்திலே இருக்கக்கூடிய தனியார் கல்வி நிறுவனங்களில் ஊழல்கள் நிறைந்துவிட்டால், அவற்றை எடுக்க தனித்தனியாகச் சட்டத்தைக் கொண்டு வந்து, அவ்வப்போது எடுக்கும்

50, 60 வருடங்கள் ஆன பிறகு இந்த நிலைமைகள் ஏற்பட்ட பிறகுதானே கேட்க முடிகிறது. மாண்புமிகு உறுப்பினர் திரு. ஏ. ஆர். தாமோதரன் அவர்கள் புதிய நிர்வாகம் ஏற்படுத்துவதை எலக்ஷன் வைத்துச் செய்யலாம் என்று சொன்னார்கள். மீண்டும் தனியார் போர்டை நியமித்து, அதனிடம் பச்சையப்பன் டிரஸ்டை ஒப்படைக்க வேண்டுமா என்று கேட்கிறேன்.

**திரு. ஏ. ஆர். தாமோதரன் :** மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் பேசும்போது எலக்ஷன் வைத்துச் செய்ய வேண்டும் என்று சொல்லவில்லை. இந்த டிரஸ்டுகளில் இன்னின்ன மாதிரியெல்லாம் செய்து கொண்டிருக்கிறார்கள் என்றுதான் சொன்னேன். இந்த மாதிரியான டிரஸ்ட் களிலே, நிறுவனங்களிலே நுழையும்போது, எடுக்கின்றபோது, அரசு நன்கு யோசனை செய்து எடுக்க வேண்டும் என்று சொன்னேன். எலெக்ஷன் எல்லாம் வைத்துச் செய்யலாம் என்று சொல்லவில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. ஆ. நல்லசிவன் :** எலெக்ஷன் என்று சொன்னாலும் சரி, நியமனம் என்று சொன்னாலும் சரி, மீண்டும் தனியார் கைகளிலே ஒப்படைக்க வேண்டுமா என்பதைத்தான் நான் கேட்கிறேன். அவைகளை அரசு ஒரு 4, 5 வருடங்களில் எடுக்கலாம். இப்படிப்பட்ட நிறுவனங்களை 50 அல்லது 60 ஆண்டுகள் பொறுத்து, பின்பு அங்கே ஊழல்கள் மலிந்துவிட்ட பிறகுதான் எடுப்பது என்று இருக்க வேண்டுமா? அவைகளை அப்படி எடுத்துத்தான் திருத்த வேண்டுமா என்று கேட்டுக்கொள்கிறேன். அப்படித் தவறுகளைக் கண்டித்துக் கேட்க வேண்டும் என்றாலும், மைனாரிட்டி நிறுவனப் பாது காப்பு என்று சொல்கிறார்கள். அவைகளை எடுத்துக் கொள்வதற்கு கான்ஸ்டிடியூஷன் குறுக்கே நிற்கிறது என்று சொல்கிறார்கள். ஆகவே அரசு இது மாதிரியான சந்தர்ப்பங்களையாவது பயன்படுத்திக் கொள்ளலாம் அல்லவா என்று கேட்டுக் கொள்கிறேன்.

**திரு. க. இராமமூர்த்தி :** மைனாரிட்டியினர் இருப்பதற்காக மெஜாரிட்டி யினர் தண்டிக்கப்பட வேண்டுமா?

**திரு. ஆ. நல்லசிவன் :** மைனாரிட்டிப் பள்ளிகளை எடுக்க வேண்டு மென்று சொல்லும்போது, அரசியல் சட்டத்தைக் காட்டி அதிலே திருத்தம் வந்த பிறகுதான் அப்படி எடுக்க வேண்டும் என்று சொல்கிறார்கள். அது இல்லை, நான் சொல்வது மற்ற நிறுவனங்கள் அனைத்தையும் உடனடியாக



எடுத்துக் கொள்ள வேண்டும் என்பதல்ல. தவறுகள் செய்யும் போதாவது உடனே எடுங்கள். இந்த நிறுவனத்தை 5 வருடத்துக்கு எடுத்து அந்தக் காலத்தில் தவறுகள் இல்லாமல் நடத்தி பின்னர் அரசுடைமையாக்க ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, இந்தச் சட்டத் திருத்த மசோதாவை நான் மனப்பூர்வமாக ஆதரிக்கிறேன் என்பதைத் தெரிவித்துக் கொண்டு, அமைகிறேன். வணக்கம்.

**திரு. ம. சங்கரலிங்கம் :** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, பச்சையப்பன் பொறுப்புக் கழகத்தை அரசு, அதிலே ஏற்பட்ட நிர்வாக ஊழலைக் காரணமாகக் கொண்டு, ஏற்றெடுத்து அதைச் சீர்திருத்த முயற்சி எடுத்துக் கொண்டிருப்பதை நான் பாராட்டி வரவேற்கிறேன். அதற்காக ஒரு அவசரச் சட்டம் பிறப்பிக்கப்பட்டு அதை ஏற்றெடுத்திருக்கிறது. இப்போது அதை முறைப்படுத்துவதற்கு இந்தச் சட்டம் கொண்டு வரப்பட்டிருக்கிறது. கொடைவள்ளல் பச்சையப்பன் அவர்களின் வரலாறை இந்த நாட்டிலுள்ள எல்லோரும் படித்திருக்கிறார்கள். உழைப்பால் உயர்ந்த அவர், அவரைப் போலவே அவருடைய கல்வி நிறுவனங்களில் சேர்ந்த மாணவர்கள் எல்லாம் அறிவு பெற்று வளர வேண்டும் என்று விரும்பினார்கள். அதற்காக பல நிறுவனங்களை அமைக்கின்ற வகையில், நிர்வகிக்கின்ற வகையில் அறக் கட்டளையையும் ஏற்படுத்தி, அது சீரும் சிறப்புமாக நடக்க வேண்டும் என்று கருதி, அவருடைய குடும்பத்தினர் பொறுப்பில் நடத்தக்கூடாது என்ற முறை யில் வைத்திருக்கிறார். உயர்நீதி மன்றம்கூட அதை ஒழுங்குபடுத்தியிருக் கிறது. மக்களுடைய பிரதிநிதிகள் அடங்கிய கார்ப்பரேஷன், பல்கலைக் கழகப் பிரதிநிதிகள் போன்றவர்கள் அடங்கிய குழுவை வைத்திருக்கிறார்கள். இப்படி ஒரு முறையை நிறுவி, அறப்பணி நல்ல முறையில் நடப்பதற்கு வழி செய்திருக்கிறார்கள். அப்படித் திட்டமிட்டு முறைப்படுத்திய பிறகும்கூட, அதிலே தவறுகள் ஏற்பட்டிருக்கின்றன. அந்தத் தவறுகளை மாணவர்கள் சுட்டிக்காட்டி, ஆசிரியர்கள் சுட்டிக் காட்டி, பல போராட்டங்கள் ஏற்பட்டு இன்றைக்கு அரசு அதை ஏற்றெடுத்து ஒழுங்குபடுத்த முயற்சி எடுத்திருக் கிறது. அதை நான் உண்மையிலேயே பாராட்டுகிறேன். அந்த முயற்சி வெற்றி பெறுகிற நிலையிலே, அமைவதற்கு என்னுடைய ஒன்றிரண்டு ஆலோசனைகளைச் சொல்வது முறை என்று நான் கருதுகிறேன்.

இந்தச் சட்ட முன்வடிவில் அந்தக் கழகத்தை நிர்வகிக்கின்ற தற்காலிகக் குழு என்று இருக்கிறது என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. அதிலே எல்லா அதிகாரிகளும் இருக்கிறார்கள், ஆனால் கல்வித் துறைச் செயலாளர் இல்லை.

அந்தக் குழுவிலே கல்லூரிக் கல்வி இயக்குநர் அவர்கள் இருக்கிறார்கள். ஆகவே அவர் தேவையில்லை என்று விடப்பட்டிருக்கலாம். ஆனால் என்னுடைய கருத்து, உறுதியாகவே சொல்கிறேன், கல்வித் துறைச் செயலாளர் அந்தக் குழுவிற்குத் தலைமை வகிக்க வேண்டும். அதற்கு அடுத்து நிர்வாகக் குழு உறுப்பினர்களிலே ஒருவரை அந்தக் குழுவின் தலைவராக நியமிக்க வேண்டும் என்று சொல்லியிருக்கிறார்கள். அரசு உள்துறை இணைச் செயலாளர், சட்டத்துறை இணைச் செயலாளர் இவர்கள் எல்லாம் அக்குழு உறுப்பினர்கள் என்று சொல்லப்பட்டிருக்கிறது. இந்தக் குழு மூன்று, நான்கு கல்லூரிகளை நிர்வகிக்கின்ற ஒரு அமைப்பாதலால், நிச்சயமாகக் கல்வித் துறைச் செயலாளர் அவர்கள் அதிலே இடம் பெற வேண்டும். அவர் அதிலே தலைமைப் பொறுப்பேற்க வேண்டுமென்பது என்னுடைய கருத்து. கல்வித் துறைச் செயலாளர்தான் அந்தக் குழுவிற்குத் தலைமை வகிக்க வேண்டுமென்று தெரிவித்துக்கொள்கிறேன். கல்வித்துறை இயக்குநர் ஓர் உறுப்பினராக இருக்கலாம் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன். இந்தக் குழுவினுடைய செயலாளர் ஒரு முழு நேர வேலைக்கென்று ஒதுக்கப்பட்டவராக, ஒரு ஐ. ஏ. எஸ். அதிகாரியாக இருக்க வேண்டும். இந்த நிர்வாகத்தை நடத்தி, இரண்டு ஆண்டு காலத்திற்குள்ளாக இதிலேயுள்ள சீர்கேடுகளையெல்லாம் நீக்கி செம்மைப்படுத்தியாக வேண்டும். அப்படிச் செய்வதால்தான் அந்தக் கழகம் நன்றாக நடக்க முடியும். ஆகவே ஒரு திறமையான, துடிப்போடு செயல்படுகின்ற ஒரு ஐ. ஏ. எஸ். அதிகாரியை இந்தக் குழுவினுடைய முழுப் பொறுப்பாளியாகப் போட்டு, இதிலேயிருக்கக்கூடிய ஏராளமான சொத்துக்களைப் பராமரிக்க வேண்டும். அந்தச் சொத்துக்களிலிருந்து இப்போது மிகக் குறைந்த வருவாய்தான் வந்து கொண்டிருக்கிறது என்றுகூட மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சுட்டிக் காட்டினார்கள். அந்தச் சொத்துக்களை இப்போது எடுத்து வைத்திருப்பவர்களேகூட தொடர்ந்து வைத்திருக்கின்ற நிலைமைகள் இருந்தாலும்கூட, இன்றைக்கு அவர்கள் கொடுத்து வருகின்ற குறைந்த வாடகை அல்லது குத்தகைத் தொகையை அதிகப்படுத்தி ஏற்றிக் கொடுக்கச் செய்ய வேண்டும். அதன் மூலம் இந்த நிறுவனத்திற்கு அதிக லாபம் வருகின்ற நடைமுறைகளை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும். அந்த அதிகாரத்தை அவர்களுக்குக் கொடுத்து, அதில் தக்க நடவடிக்கைகளை எடுத்துச் செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

இந்த மாதிரியான பொறுப்பு நிறுவனங்களில், கல்லூரிகளில் நடைபெறுகின்ற நிர்வாகச் சீர்கேடுகளை இவ்வளவு நாட்கள் நீடிக்க விடுவது தவறு. ஆண்டுதோறும் தணிக்கை நடைபெற வேண்டும். இப்போதுகூட ஆண்டுக்கு ஒரு



முறை ஆடிட் பார்ட்டிகள் சென்று கணக்குகளைத் தணிக்கை செய்கிறார்கள். 'பைனான்சியல் இயர்' முடிந்தவுடன் ஜூன் 31 ஆம் தேதியில் இறுதியாக ஒரு பைனான்சியல் ஸ்டேட்மெண்டை, அவர்களுடைய வரவு-செலவுபற்றிய ஸ்டேட்மெண்டைத் தணிக்கை செய்யும் அடிப்படையிலே தரவில்லையென்றால், உடனடியாகக் கல்வித் துறை இயக்குநர் அவர்கள் அந்த ஸ்தாபனத்திற்குள்ளே நுழைந்தாக வேண்டும். அந்த நிலைமைகளை நாம் சரி பார்க்க வேண்டும். ஒரு பைனான்சியல் ஸ்டேட்மெண்ட் வர வேண்டும். ஒரு வருட முழுவதும் பணம் பெற்று, அரசாங்க நிதியிலிருந்து மானியம் பெற்று, பல்கலைக் கழக மானியக் குழுவிலேயிருந்து நிதியைப் பெற்று அவர்களுடைய நிதியை அதிலே சேர்த்து செலவு செய்த பிறகு இரண்டு மாதங்களுக்குள்ளாக அந்த பைனான்சியல் ஸ்டேட்மெண்டை தணிக்கைக்குத் தரவில்லையென்றால், அதிலே ஊழல் இருக்கிறது என்பதை நாம் அறிந்து கொள்ளலாம். அந்தக் கணக்குகளைப் பார்ப்பதற்கு அனுப்புகின்ற அதிகாரிகள் துணையோடு அந்தத் தவறுகளையெல்லாம் மறைத்து விடுவார்கள். அப்படி இரண்டு மாதங்களுக்குள் பைனான்சியல் ஸ்டேட்மெண்டு வரவில்லையென்று சொன்னால், உடனடியாகக் கல்வித் துறை அலுவலர்கள், அதிகாரிகள் அந்த நிர்வாகத்தைத் தாங்களே நேரடியாக நடத்துகின்ற பொறுப்பை எடுத்துக் கொள்ள வேண்டும். அந்த அளவுக்கு நாம் விதிமுறைகளை அமைத்துக் கொள்ள வேண்டும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். இப்படிப்பட்ட தவறுகளைச் செய்யும்போது விட்டு விடுகிறோம். பிறகு அதுவே ஒரு பெரிய பூதமாக அல்லது அதிர்ச்சி அளிக்கின்ற அளவுக்கு வளர்ந்து விடுகிறது. அதற்குப்பின் மக்கள் போராட்டங்களில் ஈடுபடுகிற அளவுக்கு வந்து விடுகின்றது. இதற்காக மாணவர்கள் போராடுகிறார்கள். ஆசிரியர்கள் போராடுகிறார்கள். இப்படிப்பட்ட நிலைமைகள் உருவாகிவிடக் கூடாது. இதிலே அவர்கள் உரிமையிலே நாம் தலையிடுவதாகச் சொல்லலாம். இரண்டு மாதங்களில் ஒரு பைனான்சியல் ஸ்டேட்மெண்ட் கொடுக்காமல் இருந்தால், அங்கே ஊழல்கள் நடந்திருக்கின்றன என்பதுதான் பொருள். அவைகளை நன்கு பராமரிக்கின்ற முறையில் சட்டங்கள் அமைந்திருக்குமானால், இன்று இந்த நிலைக்குப் பச்சையப்பன் டிரஸ்ட்டை அரசு எடுத்து நடத்த வேண்டிய நிலை ஏற்பட்டிருக்காது. அந்தத் தவறுகளை அங்கேயே திருத்தியிருக்க முடியும். அங்கேயே விஷயங்கள் முடிவடைந்திருக்கும் என்பதை இந்தச் சந்தர்ப்பத்திலே எடுத்துக் காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

[திரு. ம. சங்காலிங்கம்] [1981 பிப்ரவரி 13

இன்று அரசு பொறுப்பை ஏற்றிருக்கிறது. இந்தப் பொறுப்புகளை ஏற்ற பிறகு, அரசு அங்கேயிருக்கின்ற நிர்வாகச் சீர்கேடுகளைப்பற்றிய அறிக்கையை இந்த அவையிலே வைப்பதாகச் சொல்கிறது. இது சம்பந்தப்பட்ட அறிக்கைகளை இந்த அவையிலே வைக்க வேண்டும். அதன் மீது மாண்புமிகு உறுப்பினர்கள் தங்களுடைய கருத்துக்களை எடுத்துச் சொல்ல வேண்டும். அதற்கான வாய்ப்பு வசதிகளை உருவாக்கித் தரவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். ஒரு வருடத்திற்குள்ளாக அந்த நிர்வாகம் எப்படிச் சீர்படுத்தப்படுகிறது என்பதைப்பற்றியும் விவாதிக்க வேண்டும். மேலும் இந்தக் கழகத்தைச் செம்மைப்படுத்துவதற்கு நாம் எடுக்கின்ற முயற்சிகள் வெற்றி பெற வேண்டும். அந்த முறையில் செம்மையாகச் செயல்படுவது நல்லது என்பதைத் தெரிவித்துக் கொண்டு, இந்த சட்டத் திருத்தத்தைப் பாராட்டி அமைகிறேன், வணக்கம்.

(பிற்பகல் 1-50)

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மாண்புமிகு துணைத் தலைவரவர்களே, இங்கே ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட்ட சட்ட முன்வடிவின் மீது மாண்புமிகு உறுப்பினர்கள் தெரிவித்த கருத்துக்களை நான் கவனத்தில் எடுத்துக் கொண்டிருக்கிறேன் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். பொதுவாக உறுப்பினர்கள் இந்தச் சட்ட முன்வடிவை வரவேற்றமைக்காக நான் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். பல்வேறு கருத்துக்களை எடுத்துச் சொல்லி, உறுப்பினர்கள் தங்கள் உணர்வுகளை வெளியிட்டிருக்கிறார்கள். குறிப்பாக இன்றைக்கு நாம் ஒரு நடவடிக்கை எடுக்கின்றபோது, பல்வேறு ஒழுங்கீனங்களைச் சொல்லி நடவடிக்கை எடுக்கின்றபோது, அங்கே இதற்கு முன்னாலே பொறுப்பிலே இருந்தவர்கள்மீது ஒரு அபிப்பிராயம் நாட்டிலே உருவாகத்தான் செய்யும். அதிலே நல்லவர்களும் இருந்திருக்கலாம். மதிப்பிற்குரிய தெ. து. சுந்தரவடிவேலுபற்றிச் சொன்னார்கள். அப்படிப்பட்டவர்களெல்லாம் அங்கே இருக்கின்ற நிலைமையில், நாம் சில கருத்துக்களைத் தெரிவிக்கின்றபோது, நல்லவர்களைக்கூட தவறாக நினைக்கின்ற வாய்ப்பை ஏற்படுத்துகின்றது. நான் இங்கே ஒரு கருத்தைத் புகார்கள் சொல்லவில்லை. அங்கே இருக்கின்ற குறைபாடுகளைச் சொன்னேன். அந்தச் சூழ்நிலையிலே அரசு அதை ஏற்றிருக்கிறது. இப்போது சட்டத் துறையிலே இருந்து ஒரு அதிகாரி, நிதித் துறையிலே இருந்து ஒரு அதிகாரி, உள் துறையிலே இருந்து ஒரு அதிகாரி, கல்வித் துறையிலே இருந்து கல்லூரிக கல்வி இயக்குநர் ஆகியவர்களை உறுப்பினர்களாக்கி, ஐ. ஏ. எஸ், அதிகாரி



1981 பிப்ரவரி 13] [திரு. செ. அரங்கநாயகம்]

ஒருவரின் தலைமையில் ஒரு குழுவை நியமித்திருக்கிற காரணம், இப்போது அங்கே இருக்கின்ற குறைபாடுகளைத் தெரிந்து, அவற்றை நீக்குவதற்கான முயற்சிகளை எடுக்க வேண்டுமென்பதற்குத்தான் அந்த அடிப்படையிலேதான் குறிப்பிட்ட துறைகளிலே இருந்து அதிகாரிகளைப் போட்டிருக்கிறோம். அங்கிருக்கும் குறைபாடுகளைத் தெரிந்து கொள்ளுகிறபோது, இன்னின்னார் சம்பந்தப்பட்டிருக்கிறார் என்று தெரியும்போது, நிச்சயமாக அவர்கள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டி வரும். நடவடிக்கை எடுக்கத்தான் போகிறோம். அப்போது யார், என்ன தவறுகள் செய்தார்கள் என்பது மாண்புமிகு உறுப்பினர்களுக்கும், மக்களுக்கும் தெரியும். இத்தகைய நடவடிக்கைகள் எடுப்பது, இனி மேல் யாராவது இப்படிப்பட்ட பொறுப்புக்கு வந்தால், இத்தகைய தவறுகளைச் செய்யாமல் இருக்க வேண்டுமென்பதற்குத்தான். அரசாங்கம் எடுத்துக் கொண்டால், நாம் கேட்க முடியும் என்ற கருத்தை மாண்புமிகு உறுப்பினர் திரு. நல்லசிவன் அவர்கள் சொன்னார்கள். அரசாங்கம் எடுத்துக் கொண்டாலும் ஒரு சில தவறுகள் ஏற்படலாம். டிரஸ்டுகள் என்று வரும் போதுதான் தவறுகள் செய்வார்கள், அதிகாரிகள் தவறு செய்ய மாட்டார்கள் என்ற நிலைமைக்குப் போக முடியாது. தனி நபர் என்று வரும்போது, அதிகமான தவறுகள் ஏற்படுகின்றன என்பதுதான் இப்போதுள்ள நடைமுறையாகும். அதிகாரிகள் அரசாங்கத்திற்கு அஞ்சி நடக்கும் வாய்ப்பிருந்தால், ஓரளவிற்கு நல்ல முறையில் காரியங்களைச் செய்வார்கள். தவறு செய்கின்றவர்களைக் கண்டு பிடிக்கும்போது, தவறு செய்கின்றவர்களை, எந்த நிர்வாகமாக இருந்தாலும், தண்டிக்கும் வாய்ப்பு இருக்கிறது. நாம் இப்போது எடுத்துக் கொண்டாலும், திருப்பித் தரும்போது, நல்லதொரு வாய்ப்பை உருவாக்கி யார் வந்தாலும் இந்தச் சட்டத்திலிருந்து தப்பிக்க முடியாது என்ற நிலையை உருவாக்கினால், பிறகு ஏற்படும் நிலைமைகளை நாம் முறையாகச் சந்திக்க முடியும். இப்போது இரண்டு ஆண்டுகளுக்கு எடுத்துக் கொண்டிருக்கிறோம். இருக்கும் நிலைமைகளுக்கேற்ப, அதிகார வரம்பை வைத்து, அப்படிச் செய்திருக்கிறோம். மறுபடியும் நிர்வாகத்தைத் தருகிறபோது, வருகின்றவர்கள் இது போன்ற குறைபாடுகளை ஏற்படுத்தாவண்ணம் போதிய ஏற்பாடுகளை ஏற்படுத்திக்கொள்ள விரும்புகிறேன். அதைத்தான் மாண்புமிகு உறுப்பினர் திரு. தாமோதரன் அவர்களும் சொன்னார்கள். புதிய முறைகள் வரும்போது, இத்தகைய நிலைமைகளுக்கு இந்த நிர்வாகம் ஆளாகாத வகையில் இருக்குமென்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

கொண்டிருக்கிற நடவடிக்கைகளை நிச்சயமாகத் தெரிவிப்போமென்று கூறி, ஆதரவு தெரிவித்த அத்தனை பேருக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** அவை முன் உள்ள பிரச்சினை—

"சட்ட மன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட 1981 ஆம் ஆண்டு, பச்சையப்பன் பொறுப்புக் கழக (நிர்வாகத்தை அரசு எடுத்துக்கொள்ளுதல்) சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 19/1981) ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்."

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

சட்ட முன்வடிவு, பிரிவு வாரியாக ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

(பிற்பகல் 2-00)

பிரிவு 2, அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

பிரிவு 3.

THIRU K. RAMAMOORTHY : Sir, I move the following amendment standing in my name :—

"In clause 3, sub-clause (2), after the words 'said Committee' *insert* the following as new items (1) and (2)—

(1) Secretary to Government, Education Department

(2) Commissioner and Secretary to Government, Commercial Taxes and Religious Endowments Department

and renumber other items accordingly".

THIRU A. R. DAMODARAN : Sir, I second it.

**திரு. க. இராமமூர்த்தி :** இங்கு நடைபெற்ற விவாதங்கள் என்னுடைய திருத்தத்தினுடைய தேவையை முழுமைப்படுத்தியிருக்கின்றன. ஆகவே இந்தத் திருத்தத்தின் பெயரால் ஒன்றும் சொல்லவில்லை. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்தத் திருத்தத்தை ஏற்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். கல்வித் துறைச் செயலாளர் இதிலே இடம் பெறுவது என்பது இதிலே இருக்கின்ற மற்றவர்களுடைய கருத்துக்களைப் பற்றி வேறுவிதமாக நினைப்பதாகக்





கொள்ளாது. பெருமளவில் சொத்துக்களை வைத்துள்ள ஒரு அறக்கட்டளை நிர்வாகத்தை நடத்தும்போது, பல்வேறு முடிவுகளை எடுக்க வேண்டி வரும். அப்படி எடுக்கும்போது அதை ஆணித்தரமாக அரசோடு தொடர்பு கொண்டு செயல்படுத்திட அரசுக் கல்விச் செயலாளர் அதில் பொறுப்பேற்றிருப்பது நல்லது. பல நேரங்களில் அறக்கட்டளை முடிவுகளை எடுக்கும்போது, அங்கே சாதாரண அரசு அதிகாரிகள் இருந்தால், முடிவெடுப்பதில் தயக்கம் ஏற்பட வாய்ப்பிருக்கிறது. அதையெல்லாம் தாண்டி நல்லமுறையில், ஆணித்தரமாக ஒரு அதாரிட்டி (authority) என்ற முறையில் முடிவெடுக்க, கட்டாயம் அங்கே அரசுக் கல்விச் செயலாளர் இருக்க வேண்டும். மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் அங்கே சேர்மேன் இருக்க வேண்டுமென்ற கருத்தைச் சொன்னார்கள். கல்வித் துறைச் செயலாளர் அங்கே இடம் பெற்றிருந்தாலே, அவர் சேர்மேனாக இருப்பதற்கான வாய்ப்பிருக்கிறது. அதுபோல் மதத் தொடர்பான முடிவுகளை எடுக்க அங்கே கமிஷனர் அண்ட் செக்கரட்டரி டு கவர்ன்மென்ட், கமர்சியல் டாக்சஸ் அண்ட் ரிலிஜியஸ் என்டோமென்ட் டிப்பார்ட்மென்ட் இடம் பெற வேண்டுமென்பது பற்றியும் திருத்தம் கொடுத்திருக்கிறேன். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நேரமின்மையால் அதைப்பற்றிக் குறிப்பிடவில்லையென்று கருதுகிறேன். மதத் தொடர்பாகவும் இந்த அறக்கட்டளை நிர்வாகம் செய்து கொண்டிருக்கிறது. அதற்கென பல்வேறு சொத்துக்கள் இருக்கின்றன. பல்வேறு விதமான செலவுகள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. அவைகள் முறையாக நடைபெறுகின்றனவா என்பதைக் கண்காணிக்கவும், சொத்துக்களை முறைப்படுத்துதல், அதுசம்பந்தமாக பல தகவல்களைத் தொகுத்தல் போன்ற வேலைகளுக்கு அந்தத் துறையிலே இருக்கின்ற ஒருவர் அறக்கட்டளையிலே, அரசு அமைத்திருக்கின்ற குழுவிலே இடம் பெறச் செய்ய வேண்டும். அது தான் முறை. பெரிய அளவில் சொத்து இருக்கிறது. அதைப் பல பிரிவாகப் பல்வேறு இடங்களில் செலவு செய்துகொண்டிருக்கிறார்கள். பல ஆலயங்களில் இதிலிருந்து சேவை செய்யப்படுகிறது. இவற்றையெல்லாம் முறைப்படுத்தவும், ஒழுங்கு படுத்தவும் இந்தத் துறை சம்பந்தப்பட்டவர் அங்கே நிச்சயம் இடம் பெற வேண்டும். இவற்றை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஏற்பதில் சங்கடம் இராது என்று கருதுகிறேன். இதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஏற்பதன் மூலம் அரசு எந்த நோக்கத்திற்காக ஏற்றதோ அந்த நோக்கம் முழுமை பெற முடியும் எனச் சொல்லி, என் தீர்மானத்தை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** ஒரே ஒரு கருத்தை மட்டும் சொல்கிறேன். இது இந்துக்கள் தொடர்பானது என்பதை உணர்ந்துதான் அத்தனை அதிகாரிகளையும் இந்துக்களாகப் பார்த்துப் போட்டிருக்கிறோம்.

**திரு. க. இராமமூர்த்தி:** இந்து அதிகாரிகள் என்பதல்ல பிரச்சினை. ஆலயங்களைக் கண்காணிக்கின்ற துறை ரிலிஜியஸ் என்டோமென்ட் துறை. இதை முறைப்படுத்தவும், ஒழுங்குபடுத்தவும் அரசாங்கச் செயலாளர், கமர்சியல் டாக்ஸஸ் அன்ட் ரிலிஜியஸ் என்டோமென்ட் டிப்பார்ட்மென்ட் அவர்கள் அங்கு இடம் பெற்றால்தான் சுலபமாகவும், சிறப்பாகவும் செய்ய முடியும். தமிழகத்தில் இருக்கின்ற இந்து ஆலயங்களைப் பொறுத்தவரை, அவைகள் பாரம்பரைப் பெருமைகளையெல்லாம் மிகப் பெரிய அளவில் உணர்த்திக் கொண்டிருக்கின்றன. அதற்காக எந்த அளவுக்கு இந்த அறக்கட்டளைகளை உருவாக்கியவர்கள் செலவு செய்திருக்கிறார்கள், பொறுப்பேற்றிருந்திருக்கிறார்கள் என்பதையெல்லாம் எண்ணிப் பார்க்க வேண்டும். சிதம்பரம் திருவண்ணாமலை கோயில் கூட நல்ல முறையில் உருவாக்கப்பட்டது. வெளி நாடுகளுக்குச் சென்று பெருமளவில் கஷ்டப்பட்டு செட்டிநாட்டுக்காரர்கள் பணம் திரட்டியதால்தான். அவை இன்றைக்கு நொடிந்து போகாமல் தமிழகத்துக்குப் பெருமை தேடித் தரத்தக்க அளவில் இருக்கிறது. அதுபோல் பச்சையப்பன் அறக்கட்டளை ஏற்பட்டதன் விளைவாக இன்றையதினம் பல்வேறு காரியங்கள் ஆலயங்களின் மூலம் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. அவை தொடர்ந்து நல்ல முறையில் நடைபெற வேண்டுமானால், அது தொடர்புடைய அரசாங்கச் செயலாளர் அங்கே இடம் பெற வேண்டும், பங்கேற்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. ம. சங்கரலிங்கம்:** கொடுக்கப்பட்டுள்ள திருத்தத்தையொட்டி ஒரே ஒரு கருத்தை மட்டும் சொல்கிறேன். உண்மையிலேயே இந்தத் திருத்தம் கொண்டுவரப்பட்டதன் நோக்கம் மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய சட்டத்தின் நோக்கம் முழுமை பெற வேண்டும், சட்டம் சிறப்பாக அமைய வேண்டும் என்பதற்காகத் தான் வெறும் கட்சி அடிப்படையில் இங்கே ஆளும் கட்சியினர் கொண்டு வந்திருக்கிறார்கள், ஆகவே எதிர்க் கட்சியினராகிய நாங்களெல்லாம் எதிர்க்க வேண்டுமென்ற எண்ணத்தில் கொண்டுவரவில்லை. பொதுவாகவே இங்கே பேசிய எல்லா உறுப்பினர்களுடைய எண்ணமும் இம்மாதிரியான நிர்வாகங்கள் சரியாக நடக்க வேண்டும். கல்வி நிலையங்கள் சிறப்பாக இருக்க வேண்டும் என்பது தான். இதை என்ன நோக்கத்திற்காக நாம் மேற்கொண்டோமோ அந்த நோக்கம் உண்மையிலேயே தோற்று





விட்டால், இதுமாதிரி நாம் வருங்காலத்தில் மேற்கொள்ளவிருக்கின்ற மற்ற இடங்களிலும் இதே மாதிரி தோல்வியடையத்தான் வாய்ப்பாக அது அமையும். இங்கே நாம் திருத்தத்தைக் கொடுப்பதும், வலியுறுத்துவதும், பிறகு திரும்பப் பெறுவதுமாக ஒரு மரபை எல்லாவற்றுக்கும் பின்பற்றி வந்தாலும்கூட, இந்த விஷயத்தைப் பொறுத்தவரையில், இதை அமைச்சர் அவர்கள் ஏற்றுக்கொண்டு சட்டத்தை முழுமை பெறச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இந்து சமயத்தைச் சார்ந்த அதிகாரிகளைத்தான் அங்கே போட்டிருக்கிறோம் என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். இவர்கள் எல்லாம் மாற்றத்திற்கு உரியவர்கள் தான். இவர்களை மாற்றாமல் இருக்க முடியாது. இந்த அறக்கட்டளை கல்வித் துறையையொட்டி இருப்பதால், அவசியம் இதில் அரசாங்கக் கல்விச் செயலாளர் இடம் பெற வேண்டும். இந்த அறக் கட்டளை இந்து தர்மத்தையும் சார்ந்திருப்பதால், இந்து அறநிலையக் கமிஷனர் இதில் இடம் பெற வேண்டும். எப்போதும் நாம் அவையில் கடைப் பிடிக்கப்படும் மரபை இதில் பார்க்காமல் பின் விளைவுகளை எண்ணி மாண்புமிகு அமைச்சர் அவர்கள் திருத்தங்களை ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** அவசரச் சட்டத்திற்குப் பதிலாக இதைக் கொண்டு வந்திருக்கிறோம். விரைவாக நிறைவேற்ற வேண்டுமென்ற எண்ணத்தில் இதைக் கொண்டு வந்திருக்கிறோம். அதை நிர்வகிக்கின்ற அனுபவத்தின் அடிப்படையிலும், உறுப்பினர்கள் சொல்லியுள்ள நல்ல கருத்துக்களின் அடிப்படையிலும் தேவையான நடவடிக்கைகளைப் பின்னால் எடுத்துக் கொள்ளலாம். இப்போது இந்தச் சட்ட முன்வடிவை நிறைவேற்றித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. க. இராமமூர்த்தி:** உறுப்பினர்களுடைய உணர்வுகளை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஏற்றுக்கொண்டதற்கு நன்றியைத் தெரிவிக்கும் வகையில் என்னுடைய திருத்தத்தை திரும்பப் பெறுகிறேன்.

திருத்தம், அவையின் அனுமதியுடன், திரும்பப் பெறப்பட்டது.

பிரிவுகள் 3 முதல் 16 வரை, அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டன.

பிரிவு 1, முகப்புரை, சட்டமியற்றும் முறை, நெடுந்தலைப்பு ஆகியவை அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டன.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** துணைத் தலைவரவர்களே, "சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, 1981 ஆம் ஆண்டு பச்சையப்பன் பொறுப்புக் குழு (நிர்வாகத்தை அரசு எடுத்துக்கொள்ளுதல்) சட்ட

[திரு. செ. அரங்கநாயகம்] [1981 பிப்ரவரி 13

இப்போதேகூட அங்கே ஒரு செயலர் பதவி இருக்கிறது. அந்தப் பொறுப்புக்கு அரசு அதிகாரி ஒருவரை நியமிக்க நினைத்துக் கொண்டிருக்கிறோம். அதற்குக்கூட ஐ. ஏ. எஸ்.க்கு சம அந்தஸ்துள்ள அதிகாரியை நியமிக்க இருக்கிறோம். நிதி சம்பந்தமான பணிகளைக் கவனிக்க ஒருவரை நியமிக்க நடவடிக்கை எடுத்திருக்கிறோம். ஆகவே அன்றாட நிர்வாகத்தைப் பொறுத்த வரையில், அரசு அதிகாரிகள் அங்கே முழு நேர அலுவலர்களாக இருந்து காரியங்களைச் செய்வார்களென்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மேற்கொண்டு வேறு பல கருத்துக்களை மாண்புமிகு உறுப்பினர்கள் அரசின் கவனத்திற்குக் கொண்டு வந்திருக்கிறார்கள். தனியார் துறையிலே நடைபெறுகிற நிர்வாகங்களையெல்லாம் எடுத்துக்கொள்ள வேண்டுமென்ற தீர்மானம்பற்றி நேற்றைய தினம் இங்கே பேசப்பட்டது. மாண்புமிகு உறுப்பினர்கள் அந்தத் தீர்மானத்தில் கருத்துக்களைச் சொன்னதற்குப் பிறகு, இன்றைய தினம், இந்தச் சட்ட முன்வடிவில் பேசும்போது, அதையும் தொடர்பு படுத்திப் பேச வேண்டிய நிலையில் கருத்துக்களைச் சொல்லியிருக்கிறார்கள். தனியார் நிர்வாகங்களை, ஆசிரியர்களின் பிரச்சினைகளை அடிப்படையாக வைத்து. அரசு எடுத்துக்கொள்ள வேண்டுமென்ற கருத்து சொல்லப்படுகிறது. பொதுவாக சமுதாய நிலைமை, மாணவர்களின் கல்வி நிலைமை என்ற அடிப்படையை வைத்து தனியார் கல்வி நிறுவனங்களை அரசு எடுத்துக் கொள்ள வேண்டுமென்ற கருத்தும் சொல்லப்படுகிறது. ஆசிரியர்களுடைய பிரச்சினைகளை மட்டும் வைத்து, இந்த நிர்வாகங்களை அரசு எடுத்துக் கொள்ள வேண்டுமென்று சொல்லும் மாண்புமிகு உறுப்பினர்களுக்கு நான் ஓர் உறுதிமொழி கொடுக்க விரும்புகிறேன். அரசு இப்போது எடுக்கும் நடவடிக்கைகளின் காரணமாக, தனியார் துறையிலே பணிபுரியும் ஆசிரியர்கள், பேராசிரியர்கள் அனைவருக்கும் அரசாங்கக் கல்லூரிகளில் ஆசிரியர்களுக்குள்ள பாதுகாப்பைத்தர முயற்சிகளை எடுத்துக்கொண்டு வருகிறோம். குறிப்பாகச் சொல்ல வேண்டுமானால், கல்லூரி ஆசிரியர்கள் நேரடியாக ஊதியத்தைப் பெறும் வாய்ப்பைப் பெற்றிருக்கிறார்கள். அது தனியார் துறையிலே இருக்கும் முக்கியமான குறைபாட்டைப் போக்குவதாக இருக்கிறது. அது போன்று பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்திக் கொண்டு வருகிறோம். ஆசிரியர்களின் பணிப் பாதுகாப்பு, சம்பளப் பாதுகாப்பு என்ற அடிப்படையிலே மட்டும் கருத்துக்களைச் சொல்வதாக இருந்தால், அதைத் தீர்க்க நடவடிக்கை எடுக்கிறோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். மற்றபடி தனியார் துறை நிறுவனங்களில் இருக்கும் குறைபாடுகளைப் போக்க அரசுக்கு மிகுந்த



1981 பிப்ரவரி 13] [திரு. செ. அரங்கநாயகம்]

அக்கறை இருக்கிறது. ஆனால் அவற்றை எடுக்க முடியாத சூழ்நிலை இருக்கிறது. பொதுவாக அவற்றை எடுக்க வேண்டுமென்று சொன்னால், உடனே நஷ்ட ஈடு கொடுக்க வேண்டுமென்று கணக்குப் போட்டுப் பார்த்தால், பல நூறு கோடி ரூபாய் அளவிற்குத் தரவேண்டி வருகிறது. அந்த அளவிற்குத் தனியார் கல்வி நிறுவனங்களுக்குச் சொத்துக்கள் இருக்கின்றன. பச்சையப்பன் அறக் கட்டளையை எடுத்துக் கொண்டால், நாம் 5 கோடி, 10 கோடி ரூபாய் இருக்குமென்று சொல்லுகிறோம். அவர்கள் 20 கோடி, 30 கோடி என்று சொல்லுகிறார்கள். இதை நாம் முழுமையாக எடுத்துக் கொண்டால், 30 கோடி ரூபாய் தரவேண்டி வரும். எனவே இருக்கின்ற குறைபாடுகளைப் போக்குவதற்கு, இருக்கின்ற அதிகார வரம்புகளைப் பயன்படுத்தி, சமுதாயத்தில் இதனால் ஏற்றத் தாழ்வுகளை ஏற்படுத்தக் கூடாது. ஏற்றத் தாழ்வு என்று சொல்வது பொருளாதார ரீதியில் அல்ல. உரிமை என்று பார்க்கும்போது, மைனாரிட்டிக் கல்லூரிகளை விட்டுவிட்டு, மெஜாரிட்டிக் கல்லூரிகளை எடுப்பதென்பது சமுதாயத்திலே வேறுமாதிரியான ஒரு ஏற்றத்தாழ்வை ஏற்படுத்தும். மைனாரிட்டி நிறுவனங்கள் சிறந்ததாக இருக்கின்றன என்ற நிலைக்கு வந்துவிடும். பெரும்பான்மையான மக்களுக்கு இருக்கின்ற உரிமைகளை மைனாரிட்டி மக்களுக்குத் தர வேண்டுமென்பதுதான் அரசியல் சட்டத்தை உருவாக்கியவர்களின் எண்ணமாக இருந்ததே தவிர, வேறு ஒன்றுமில்லை. மெஜாரிட்டி மக்களுக்கு இல்லாத உரிமை இன்றைக்கு மைனாரிட்டி மக்களுக்கு இருக்கிறதென்ற நிலைமை இருக்கிறது. அதை நாம் சீர்படுத்துவதற்கு, அந்த ஏற்றத் தாழ்வுகளைப் போக்குவதற்கு உடனடியாக நடவடிக்கை எடுக்கவில்லை என்றால், அதனால் வேறுவிதமான விளைவுகள் ஏற்படுமென்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இவையெல்லாம் அரசின் கவனத்தில் இருக்கின்றன.

மற்றபடி சட்ட முன்வடிவின்மீது மாண்புமிகு உறுப்பினர்கள் சொன்ன கருத்துக்கள் அரசின் கவனத்தில் இருக்கின்றன. 6 மாதத்திற்குள் ஒரு அறிக்கை தர வேண்டுமென்று சொன்னார்கள். முதலிலே நான் சொன்னது அந்த அடிப்படையிலேதான். ஆறு மாதம் அல்லது ஒரு வருடம் கழித்து அதிகாரிகள் என்ன செய்து கொண்டிருக்கிறார்கள் என்பதையும், அரசு கொண்டுள்ள நம்பிக்கைக்கேற்ப நடவடிக்கை எடுத்திருக்கிறார்களா என்பதையும் அறிய மாண்புமிகு உறுப்பினர்களும், மக்களும் விரும்புவார்கள் என்பதை உணர்கிறோம். அந்த உணர்வை மதித்து, அரசு எடுத்துக்

முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 19/1981) நிறைவேற்றப்பட வேண்டும்"

என்று முன்மொழிகிறேன்.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்:** அவை முன் உள்ள பிரச்சினை:

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட 1981 ஆம் ஆண்டு, பச்சையப்பன் பொறுப்புக் கழக (நிர்வாகத்தை அரசு எடுத்துக் கொள்ளுதல்) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 19/1981) நிறைவேற்றப்பட வேண்டும்."

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

**மாண்புமிகு மேலவைத் தலைவர்:** இத்துடன் இன்றைய நிகழ்ச்சிகள் முடிவுற்றன. அவை மீண்டும் 26–2–1981 அன்று முற்பகல் 10-30 மணிக்குக் கூடும்.

26—2—1981 மற்றும் 27—2—1981 ஆகிய இரு நாட்களிலும் தமிழ்நாடு மின்சார வாரிய நிதி நிலை அறிக்கையின் மீது விவாதம் நடைபெறும்.

பின்னர், அவை ஒத்தி வைக்கப்பட்டது.

(பிற்பகல் 2-10)

### 6. அவை முன் வைக்கப்பட்ட ஏடுகள்.

### *A. Statutory Rules and Orders.*

194. Notification issused with G.O. Ms. No. 1175, Agriculture, dated the 21st June 1980 in regard to amendments to the Tamil Nadu Agricultural Produce Markets. Rules, 1962. [Laid on the table of the House under section 29(4) of the Tamil Nadu Agricultural Produce Markets Act, 1959 (Tamil Nadu Act 23 of 1959).]

195. Sixth Annual Report of the Poompuhar Shipping Corporation Limited for the year 1980. [Laid on the table of the House under section 619(A) of the Companies Act, 1956 (Central Act I of 1956).]



### B. Reports, Notifications and Other Papers.

26. Errata issued with letter No. 83788|AM.III|80-4, Agriculture, dated the 4th November 1980 to the Agriculture Department Notification No. SRO|A-197|80, published at page 391 of Part III—Section 1 (*a*) of the *Tamil Nadu Government Gazette*, dated the 16th July 1980.

27. Third Report of the Committee on Public Accounts on the paragraphs pertaining to certain Departments on the Accounts of the Government of Tamil Nadu for the year 1974-75 and 1976 and the Reports of the Comptroller and Auditor-General of India [Civil] for the years 1974-75 and 1975-76 (part I) Tamil.

28. Fourth Report of the Committee on Public Accounts (1980-81) on the action taken by the Government on the recommendations contained in its Earlier Reports on the Accounts of Government of Tamil Nadu for the years 1960-61 to 1971-72.

29. Fifth Report of the Committee on Public Accounts 1980-81) on the Supplementary Report (Civil) on the Comptroller and Auditor-General of India for the year 1975-76.

30. Sixth Report of the Committee on Public Accounts (1980-81) on paragraphs pertaining to certain Departments on the Accounts of the Government of Tamil Nadu for the years 1974-75 and 1975-76 and the Report of the Comptroller and Auditor-General of India (Civil) for the years 1974-75 and 1975-76 (Part II).

31. Seventh Report of the Committee on Public Accounts (1980-81) on the Excesses over Voted Grants and Charged Appropriations for the year 1975-76.

32. Second Report of the Committee on Public Undertakings (1980-81) on the Reports (Commercial) of the Comptroller and Auditor-General of India for the years 1974-75 and 1975-76 (Tamil).

33. Third Report of the Committee on Public Undertakings (1980-81) on the Tamil Nadu Small Industries Development Corporation Limited (Tamil).

34. Fourth Report of the Committee on Public Undertakings (1980-81) on the Audit Reports on the Accounts of the Tamil Nadu Electricity Board for the years 1972-73 to 1975-76 (English and Tamil).

35. Fifth Report of the Committee on Public Undertakings (1980-81) on the action taken by the Government on the recommendation in the Second Report of the Committee on Public Undertakings (1974-75) on the points relating to Tamil Nadu Electricity Board in the Report of the Comptroller and Auditor-General of India for 1970-71 (English and Tamil).

*36. The Tamil Nadu Appropriation Bill, 1981 (L.A. Bill No. 18 of 1981), as passed by the Assembly.

37. The Tamil Nadu Debt Relief (Amendment) Bill, 1981 (L.A. Bill No. 8 of 1981), as passed by the Assembly.

38. The Public Wakfs (Extension of Limitation) Tamil Nadu Amendment Bill, 1981 (L.A. Bill No. 3 of 1981), as passed by the Assembly.

39. The Pachaiyappa's Trust (Taking over of Management) Bill, 1981 (L.A. Bill No. 19 of 1981), as passed by the Assembly.

---

* Laid on the table of the House on 12th February 1981. Circulated to all M.L.Cs. on 12th February 1981.



## இணைப்பு 1

[371 ஆம் பக்கத்தில் இனம் 4 (1)-க்கான அடிக்குறிப்பைக் காண்க.]

**அரசமைப்புச் சட்டம் பிரிவு 222 (1) கீழ்க்கண்டவாறு உள்ளது.**

"222. ஒரு நீதிபதியை ஓர் உயர்நீதிமன்றத்திலிருந்து மற்றொன்றிற்கு மாற்றுதல் :—(1) குடியரசுத்தலைவர் இந்தியாவின் தலைமை நீதிபதியுடன் கலந்தாலோசித்த பிறகு, ஒரு நீதிபதியை ஓர் உயர்நீதிமன்றத்திலிருந்து வேறெந்த உயர்நீதிமன்றத்திற்கும் மாற்றலாம்".

இந்தப் பிரிவின் கீழ், மைய அரசு 19—1—1981 தேதியில் கீழ்க்கண்டவாறு இரண்டு அறிக்கைகளை வெளியிட்டுள்ளது :

1. "இந்தியா அரசமைப்புச் சட்டத்தின் 222 (1) பிரிவினால் வழங்கப்பட்ட அதிகாரங்களைச் செலுத்தி, குடியரசுத் தலைவர், இந்தியாவின் தலைமை நீதிபதியுட்ன் கலந்து ஆலோசித்ததற்குப் பிறகு, சென்னை உயர் நீதிமன்ற தலைமை நீதிபதியான திரு. ஜஸ்டிஸ் முகமதுகாசிம் முகமது இஸ்மாயில் அவர்களை கேரள உயர்நீதி மன்றத்தின் தலைமை நீதிபதியாக, தமது பதவியை அவர் பொறுப்பேற்றுக்கொள்ளுகின்ற தேதியிலிருந்து, மாற்றுகிறார்".

2. "இந்திய அரசமைப்புச் சட்டத்தின் 222(1) பிரிவினால் வழங்கப்பட்ட அதிகாரங்களைச் செலுத்தி, குடியரசுத் தலைவர், இந்தியாவின் தலைமை நீதிபதியுடன் கலந்து ஆலோசித்ததற்குப் பிறகு, பாட்னா உயர்நீதி மன்றத்தின் தலைமை நீதிபதியான திரு. ஜஸ்டிஸ் கிருஷ்ணா பல்லப் நாராயண் சிங் அவர்களை சென்னை உயர்நீதி மன்றத்தின் தலைமை நீதிபதியாக, தமது பதவியை அவர் பொறுப்பேற்றுக்கொள்ளுகின்ற தேதியிலிருந்து, மாற்றுகிறார்".

இந்திய சட்டக்குழு, தலைமை நீதிபதியை மாற்றம் செய்வதைப்பற்றி இவ்வரசின் கருத்தைக் கோரியபொழுது, கீழ்க்கண்டவாறு 1979 ஆம் ஆண்டு மே மாதத்தில் கருத்து தெரிவிக்கப்பட்டது :—

"ஒரு மாநிலத்தில் தலைமை நீதிபதி அந்த மாநிலத்தைச் சேர்ந்தவராகவும் இருக்கலாம். தவிர்க்க முடியாத நிலையில் வேறு மாநிலத்தவராகவும் இருக்கலாம். ஆனால் எந்தக் காரணத்தை முன்னிட்டும் மதம், சாதி என்ற காரணத்தின் அடிப்படையில் சொந்த மாநிலத்தில் தலைமை நீதிபதியாகப்

மாலை அங்காடி மற்றும் பேனா கடைகள் இருக்கும் பகுதி நீங்கலாக மற்ற பகுதிகளை ரெயில்வே நிர்வாகம் உடனடியாக வேண்டும் என்று கேட்டுக் கொண்டதால், அந்தப் பகுதிகளில் உள்ள கடைச் சொந்தக்காரர்கள் மேற்படி இடத்தை 30—9—1980-க்குள் காலி செய்யும்படி கேட்டுக் கொள்ளப்பட்டார்கள்.

அதன் பிறகு 24—10—1980 தேதியில் நடந்த கூட்டத்தில் பல்வேறு சங்கங்களைச் சேர்ந்த மூர் அங்காடி வியாபாரிகள் தங்களுக்கு மாற்று இடம் தரவேண்டும் என்றும் மேலும் கூடுதலாக அவகாசத்தை நீட்டித்தரவேண்டும் என்றும் கேட்டுக்கொண்டனர். அதற்கிணங்க அவர்களுக்கு சண்ணப்பர் திடலில் ஒரு பகுதி மற்றும் சைடன்ஹாம்ஸ் சாலை ஓரத்தில் கிழக்குப் பகுதிகளில் இடங்கள் ஒதுக்கித் தர தீர்மானிக்கப்பட்டு அதற்கான வசதிகள் (அதாவது குடிநீர், விளக்கு மற்றும் சாலை வசதிகள்) செய்து கொடுக்கப்பட்டன. இந்தப் பகுதிகளில் இடம் ஒதுக்கீடு செய்வதற்காக, தங்கள் புகைப்படத்தைப் பாஸ் போர்ட்டு அளவில் எடுத்து அனுப்பும்படி சம்பந்தப்பட்ட எல்லா வியாபாரிகளுக்கும் பதிவுத் தபாலில் கடிதம் அனுப்பப்பட்டது.

பழைய இரும்பு, துணி வியாபாரிகள் மற்றும் மாட்டு இறைச்சி வியாபாரிகள் மட்டும் தங்களுடைய புகைப்படத்தை அனுப்பினார்கள். தற்போது மூர் அங்காடியில் ஒரு பக்கமாக இருப்பதுபோல் கண்ணப்பர் திடலிலும் தங்கள் தொழில் நலம் கருதி தங்களுக்கு ஒரே இடமாக ஒதுக்கீடு செய்ய வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டார்கள். மற்றவர்கள் புகைப்படம் எதுவும் அனுப்பாமல், இடத்தைக் காலி செய்யக் கோரும் நோட்டீஸை எதிர்த்து, வெளியேற்றும் உத்தரவை நிறுத்தி வைக்க வேண்டி நீதிமன்றத்தில் (சிட்டி சிவில் கோர்ட்டில்) வழக்குத் தொடுத்துள்ளார்கள். எனவே சென்னை மாநகராட்சியால் கேட்கப்பட்ட தகவல்களை அனுப்பிய பழைய இரும்பு, துணி வியாபாரிகள் மற்றும் மாட்டு இறைச்சி வியாபாரிகள் கொண்ட மொத்தம் 413 பேர்களுக்கு மட்டும் கண்ணப்பர் திடலில் இடம் ஒதுக்கீடு செய்யப்பட்டது. இவர்கள் அங்கு தற்காலிக கடைகள் கட்டி வருகின்றனர்.

மாநகராட்சி அனுப்பிய நோட்டீஸை எதிர்த்து நீதிமன்றம் சென்றவர்களைப் பொறுத்தமட்டில் நீதிமன்றம் தீர்ப்பு வழங்கிய பின் அதற்கேற்ப நடவடிக்கை எடுக்க வேண்டிய நிலைமை ஏற்படும். பிரதான கட்டிடம், மாலை அங்காடி மற்றும் பேனா கடைகள் இருக்கும் பகுதியிலுள்ள வியாபாரிகளுக்கு மாற்று இடம் அளிக்க மாநகராட்சியைச் சேர்ந்த அல்லிகுளம் பகுதியில் பல மாடிக் கட்டிடம் ஒன்று கட்ட உத்தேசிக்கப்பட்டுள்ளது.



## இணைப்பு III

[375 ஆம் பக்கத்தில் இனம் 5 (1)-க்கான அடிக்குறிப்பைக் காண்க.]

## L.A. BILL No. 8 OF 1981.

(As passed by the Assembly.)

*A Bill further to amend the Tamil Nadu Debt Relief Act, 1980.*

BE it enacted by the Legislature of the State of Tamil Nadu in the Thirty-second Year of the Republic of India as follows:—

1. *Short title and commencement.*—(1) This Act may be called the Tamil Nadu Debt Relief (Amendment) Act, 1981.

(2) It shall be deemed to have come into force on the 19th April 1980.

2. *Amendment of section 2, Tamil Nadu Act 13 of 1980.*—In section 2 of the Tamil Nadu Debt Relief Act, 1980 (Tamil Nadu Act 13 of 1980) (hereinafter referred to as the principal Act), for the words and figures "in Article 46", the words, letters and figures "in clauses (*b*) and (*c*) of Article 39" shall be substituted.

3. *Amendment of section 3, Tamil Nadu Act 13 of 1980.*—In section 3 of the principal Act, to clause (*d*), the following proviso shall be added, namely :—

"Provided that a person shall not be deemed to be a debtor, if he or any member of his family—

(i) has, in either of the two financial years, or in both the two financial years, immediately preceding the 1st day of April 1979 been assessed to income-tax under the Income-tax Act, 1961 (Central Act 43 of 1961) or under the income-tax law in force in any foreign country ; or

(ii) has, in either of the two financial years, or in both the two financial years, immediately preceding the 1st day of April 1979 been assessed to sales tax under the Tamil Nadu General Sales Tax Act, 1959 (Tamil Nadu Act 1 of 1959) or under the Central Sales Tax Act, 1956 (Central Act 74 of 1956); or

(iii) has, in any one or more within the four half years of in all the four half years, immediately preceding the 1st October 1979 been assessed to property or house-tax in respect of buildings

or lands other than agricultural lands, under the Tamil Nadu District Municipalities Act, 1920 (Tamil Nadu Act V of 1920), the Madras City Municipal Corporation Act, 1919 (Tamil Nadu Act IV of 1919), the Madurai City Municipal Corporation Act, 1971 (Tamil Nadu Act 15 of 1971), the Tamil Nadu Panchayats Act, 1958 (Tamil Nadu Act, XXXV of 1958), the cantonments Act, 1924 (Central Act II of 1924) or any law governing municipal or local bodies in this State or in any other State or Union territory in India, provided that the aggregate annual rental value of such buildings and lands whether let out or in the occupation of the owner is not less than rupees one thousand and two hundred.

*Explanation.*—The annual rental value of any building or land for the purposes of proviso (iii) shall—

(1) where the assessment is based on the annual rental value, be deemed to be such value;

(2) where the assessment is based on the capital value, be deemed to be five per cent of the capital value; and

(3) in any other case, be deemed to be the value ascertained in the prescribed manner; or

(iv) has, in any one or more within the four half years, or in all the four half years, immediately preceding the 1st October 1979, been assessed to profession tax on a half-yearly income of more than one thousand and two hundred rupees derived from a profession other than agriculture under the Tamil Nadu District Municipalities Act, 1920 (Tamil Nadu Act V of 1920), the Madras City Municipal Corporation Act, 1919 (Tamil Nadu Act IV of 1919), the Madurai City Municipal Corporation Act, 1971 (Tamil Nadu Act 15 of 1971), the Tamil Nadu Panchayats Act, 1958 (Tamil Nadu Act XXXV of 1958), the Cantonments Act, 1924 (Central Act II of 1924) or any law governing municipal or local bodies in this State or in any other State or Union territory in India.

*Explanation.*—Proviso (iv) shall apply only to a person whose annual household income exceeds four thousand and eight hundred rupees and such person shall not be deemed to be a debtor for the purposes of this Act; or

(v) whether individually or jointly owns in this State or elsewhere agricultural lands exceeding ten acres of unirrigated lands or five acres of irrigated lands (whether irrigated from a Government source or a private source).



*Explanation.*—Whether any person owns both irrigated and unirrigated lands, for the purpose of calculating under proviso (v), the extent of lands owned by him, one acre of irrigated land shall be deemed to be equal to two acres of unirrigated land; or

(vi) whether individually or jointly owns in this State or elsewhere any other immovable property (other than agricultural lands), the market value of which exceeds twenty-five thousand rupees; or

(vii) whether individually or jointly owns in this State or elsewhere both agricultural lands and other immovable property, the market value of both such agricultural lands and other immovable property exceeds twenty-five thousand rupees.

*Explanation.*—For the purpose of provisos (vi) and (vii), the market value of the immovable property or both the agricultural lands or other immovable property, as the case may be, shall be estimated to be the price, which, in the opinion of the authority prescribed in this behalf, such immovable property or both the agricultural lands and other immovable property, as the case may be, would have fetched if sold in the open market on the 19th April, 1980.".

4. *Amendment of section 5, Tamil Nadu Act* 13 *of* 1980.—In section 5 of the principal Act,—

(i) in sub-section (1), in clause (*c*)—

(*a*) for the expression "before the expiry of the period of six months from the date of the commencement of this Act", the expression "on or before the 31st day of December 1980", shall be substiuted; and

(*b*) in the proviso thereunder for the expression "after the expiry of seven months from the date of the commencement of this Act", the expression "after the 31st day of January 1981" shall be substituted;

(ii) in sub-section (3), in clause (*a*), for the expression "after the expiry of seven months from the date of the commencement of this Act", the expression "after the 31st day of January 1981" shall be substituted.

5. *Amendment of section 6, Tamil Nadu Act* 13 *of* 1980.—In section 6 of the principal Act,—

(i) in sub-section (1), in clause (*c*),—

(a) for the expression "before the expiry of the period of six months from the date of commencement of this Act", the expression "on or before the 31st day of December 1980" shall be substituted;

(b) in the proviso thereunder for the expression "after the expiry of seven months from the date of commencement of this Act", the expression "after the 31st day of January 1981" shall be substituted;

(ii) in sub-section (3), in clause (a), for the expression "after the expiry of seven months from the date of the commencement of this Act", the expression "after the 31st day of January 1981" shall be substituted.

6. *Amendment of section 12, Tamil Nadu Act 13 of 1980.*—In section 12 of the principal Act,—

(a) in clause (h), in sub-clause (i), after item (D), the following item shall be inserted, namely:—

"(DD) any corresponding new bank as defined in clause (b) of section 2 of the Banking Companies (Acquisition and Transfer of Undertakings) Act, 1980 (Central Act 40 of 1980);".

(b) in clause (l),—

(i) in the proviso, for clause (a), the following clause shall be substituted, namely:—

"(a) the market value of the property owned by such widow, minor child or female person including the principal amount of the debt or debts so due, did not exceed twenty-five thousand rupees";

(ii) the following *Explanation* shall be added at the end, namely:—

"*Explanation.*—For the purposes of clause (l), the market value of the property shall be estimated to be the price, which in the opinion of the authority prescribed in this behalf, such property would have fetched if sold in the open market on the 19th April, 1980.".

7. *Removal of doubts.*—(1) Where any person who was a debtor as defined in section 3 (d) of the principal Act as in force immediately before the 20th November 1980, has ceased to be a debtor on and after that date by virtue of the amendments made



by this Act to the principal Act, any debt due from such person shall be deemed never to have been discharged, every suit or other proceeding (including appeal, revision, attachment or execution proceeding) in relation to such debt pending at the commencement of the principal Act against the debtor for the recovery of any such debt (including interest if any) shall be deemed never to have been abated, every movable property pledged by the debtor in respect of such debt in favour of the creditor shall be deemed never to have been released in favour of such debtor, and every mortage excuted by the debtor in respect of such debt in favour of the creditor shall be deemed never to have been redeemed and the mortgaged property shall be deemed never to have been released in favour of such debtor under section 4 of the principal Act, and any suit for the recovery of any amount liable in respect of such debt from the debtor and any application for the execution of a decree passed in any such suit may be instituted, or made, as if the principal Act as amended by this Act, was in force at the relevant time.

(2) Every proceeding instituted under the provision of the principal Act, in respect of such debt as is refered to in sub-section (1) and pending before the Tahsildar or other authority on the 20th November 1980 shall abate.

(3) Nothing contained in this section shall be deemed to invalidate or satisfied in full before the 20th November 1980. executed or satisfied in full before the 20th November 1980.

8. *Repeal and saving.*—(1) The Tamil Nadu Debt Relief (Amendment) Ordinance, 1980 (Tamil Nadu Ordinance 11 of 1980) is hereby repealed.

(2) Notwithstanding such repeal, anything done or any action taken under the principal Act as amended by the said Ordinance shall be deemed to have been done or taken under the principal Act as amended by this Act.

## இணைப்பு IV

[403-ஆம் பக்கத்தில் இனம் 5 (2)-க்கான அடிக்குறிப்பைக் காண்க.]

L.A. BILL No. 3 OF 1981.

(As passed by the Assembly.)

*A Bill further to amend the Public Wakfs (Extension of Limitation) Act, 1959, in its application to the State of Tamil Nadu.*

BE it enacted by the Legislature of the State of Tamil Nadu in the Thirty-second Year of Republic of India as follows:—

1. *Short title, extent and commencement.*—(1) This Act may be called the Public Wakfs (Extension of Limitation) Tamil Nadu Amendment Act, 1981.

(2) It extends to the whole of the State of Tamil Nadu.

(3) It shall be deemed to have come into force on the 30th December 1980.

2. *Amendment of section* 3, *Central Act* 29 *of* 1959.—In section 3 of the Public Wakfs (Extension of Limitation) Act, 1959 (Central Act 29 of 1959) (hereinafter referred to as the principal Act), for the expression "the 31st day of December 1980", the expression "the 31st day of December 1983" shall be substituted.

3. *Repeal and saving.*—(1) The Public Wakfs (Extension of Limitation) Tamil Nadu Amendment Ordinance, 1980 (Tamil Nadu Ordinance 15 of 1980) is hereby repealed.

(2) Notwithstanding such repeal, anything done or any action taken under the principal Act, as amended by the said Ordinance shall be deemed to have been done or taken under the principal Act as amended by this Act.

## இணைப்பு V

[414 ஆம் பக்கத்தில் இனம் 5 (3)க்கான அடிக்குறிப்பைக் காண்க.]

## L.A. BILL No. 19 OF 1981.

(As passed by the Assembly.)

***A Bill to provide for the taking over of the management of the Pachaiyappa's trust and for matters connected therewith.***

WHEREAS it has bee brought to the notice of the State Government that the Board of Trustees of the Pachaiyappa's trust has, for the past few years, committed irregularities in the management of the charities and institutions (including educational institutions) and properties under its control:

AND WHEREAS it has been brought to the notice of the State Government that the members of the present Board of Trustees of the Pachaiyappa's trust have also committed irregularities in the management of the charities including educational instiutions and properties under its control;





AND WHEREAS it has been represented to the State Government that the continuance of the management of the Pachaiyappa's trust by the present Board of Trustees will not be proper in the public interest.

AND WHEREAS the State Government have after careful consideration taken a policy decision that for a limited period the management of the Pachaiyappa's trust should be taken over by the State Government in the public interest and in order to secure the proper management of the Pachaiyappa's trust and that for this purpose the powers, duties and functions exercised and performed by the Board of Trustees should be exercised and performed by the Government either directly or through a Committee of management appointed by he Government;

AND WHEREAS any delay in taking over the management of the Pachaiyappa's trust, would highly be detrimental to the interests and objects of the said trust;

BE it enacted by the Legislature of the State of Tamil Nadu in the Thirty-second Year of the Republic of India as follows:—

1. *Short title and commencement.*—(1) This Act may be called the Pachaiyappa's Trust (Taking over of Management) Act, 1981.

(2) It shall be deemed to have come into force on the 22nd December, 1980

2. *Definitions.*—In this Act, unless the context otherwise requires,—

(*a*) "Board of Trustees" means the Board of Trustees mentioned in the scheme for the Pachaiyappa's Trust settled and approved by the High Court of Judicature at Madras on the 12th day of February 1909 as subsequently modified by the High Court;

(*b*) "Government" means the State Government.

(*c*) "Pachaiyappa's trust" means the trust in respect of Pachaiyappa's charities (including educational institutions) and properties under its control, and governed by the scheme settled and approved by the High Court of Judicature at Madras on the 12th day of February 1909 as subsequently modified by the High Court;

(*d*) "Pachaiyappa's trust scheme" means the scheme for the Pachaiyappa's trust settled and approved by the High Court of Judicature at Madras on the 12th day of February 1909 as subsequently modified by the High Court.

3. *Vesting of management of Pachaiyappa's trust.*—(1) With effect on and from the date of the commencement of this Act, the management of the Pachaiyappa's trust in so far as it vests in the Board of Trustees under the Pachaiyappa's trust scheme, shall vest in the Government for a period of two years and accordingly the powers, duties and functions exercised and performed by the Board of Trustees shall for the said period be exercised and performed by the Government either directly or through a Committee of management appointed under sub-section (2).

(2) The Committee of management referred to in sub-section (1) shall be appointed by the Government and shall consist of the following officers as members of the said Committee:—

(1) Director of Sports and Youth Services, Madras;

(2) Joint Secretary to Government-II, Home Department;

(3) Joint Secretary to Government, Law Department.

(4) Deputy Secretary to Government, Finance Department, dealing with Collegiate Education files; and

(5) Director of Collegiate Education, Madras.

(3) The Committee of management shall, on behalf of the Government, exercise the powers and perform the duties and functions now exercised and performed by the Board of Trustees under the Pachaiyappa's trust scheme.

(4) The Government shall appoint one of the members of the committee of management as its Chairman.

4. *Members of the Board of Trustees to cease to hold office.*—(1) Notwithstanding anything contained in any other Act or in the Pachaiyappa's trust scheme, every person who, on the date of the commencement of this Act, is a member of the Board of Trustees of the Pachaiyappa's trust shall cease to hold office as member of such Board.



(2) During the period for which the Committee of management is exercising the powers and performing the duties and functions exercised and performed by the Board of Trustees, no election under the Pachaiyappa's trust scheme shall be held to fill up any vacancy in the Board of Trustees.

5. *Taking over of properties, etc.*—The Government, or the Committee of management on behalf of the Government, shall take all steps as may be necessary, to efficiently manage and run the Pachaiyappa's trust in accordance with—

(i) any law applicable to such trust; and

(ii) the Pachaiyappa's trust scheme,

in so far as such law or the scheme is not inconsistent with this Act and the rules made thereunder and to take into the custody or control of the Government all the property, effects and actionable claims to which the Pachaiyappa's trust is or appears to be entitled, and all the property and effects of the Pachaiyappa's trust shall be deemed to be in the custody of the Government on the date of the commencement of this Act:

Provided that the Government or the Committee of management shall not be bound by any liability incurred by the Board of Trustees prior to the date of the commencement of this Act and no such liability shall be enforced by any court whether in execution of a decree or otherwise against the Government or the Committee of management:

Provided further that in computing the period of limitaion for a suit, or any application for the execution of the decree, the time during which such proceeeding, attachment, injunction or order, the enforcement of which is barred under this section shall be excluded.

*Explanation.*—For the purpose of this section, the expression "law" includes any by-law", nile, regulation or any schemes, custom or usage.

6. *Penalty for not handing over records and other properties of Pachaiyappa's trust.*—Notwithstanding anything contained in any other law—

(a) every trustee of the Board of Trustees or any person working under its control shall, on demand, hand over immediately any records and properties relating to the Pachaiyappa's trust which are in, or have come into, his possession or control to an officer authorised by the Government in this behalf ;

(b) if any trustee or any person working under the Board of Trustees fails to comply with the provisions of clause (a), he shall on conviction by a Metropolitan Magistrate or Judicial Magistrate of the first class, be punishable with imprisonment for a term which may extend to three years, or with fine which may extend to five thousand rupees, or with both.

7. *Overriding effect of Act.*—(1) The provisions of this Act shall have effect notwithstanding anything inconsistent therewith contained in section 92 of the Code of Civil Procedure, 1908 (Central Act V of 1908) or any other law for the time being in force or the Pachaiyappa's trust scheme or any other scheme settled under any law for the time being in force.

(2) If any provision contained in the Pachaiyappa's trust scheme is repugnant to any provision contained in this Act or the rules made thereunder, the later provision shall prevail, and the former provision shall, to the extent of repugnancy, be of no effect.

(3) For the removal of doubts, it is hereby declared that the provisions of the Pachaiyappa's trust scheme including the by-laws made thereunder except in so far as they relate to the matters dealt with by this Act, shall continue in force.

8. *Reconstitution of Board of Trustees on the expiry of Act.*—Within two months before the expiry of the period of two years specified in sub-section (1) of section 3, the Government shall take all steps to hold election for the Board of Trustees in accordance with the Pachaiyappa's trust scheme so that the newly elected members may assume office immediately after the expiry of the said period of two years.

9. *Bar of jurisdiction of civil court.*—No civil court shall have jurisdiction in respect of any order passed by the Government or by the Committee of management, as the case may be, and no stay or injunction shall be granted by a court in respect of any action taken or to be taken by the Government or the Committee of management, in pursuance of any power conferred by or under this Act.



10. *Protection of action taken in good faith.*—No suit, prosecution 3, if at any time before the expiry of the period referred to in any officer of the Government or the Chairman or any member of the Committee of management for anything which is in good faith done or intended to be done under this Act.

11. *Construction of references to Board of Trustees.*—In the application of the Pachaiyappa's trust scheme, any reference to the Board of Trustees shall be construed, unless the context otherwise requires, as a reference to the Government or the Committee of management, as the case may be.

12. *Relinquishment of management of Pachaiyappa's trust.*—Notwithstanding anything contained in sub-section (1) of section 3, if at any time before the expiry of the period referred to in that sub-section, it appears to the Government that the purpose of the vesting in the Government of the management of the Pachaiyappa's trust has been fulfilled or that for any other reason it is not necessary that the management of the Pachaiyappa's trust should remain vested in the Government they may, by order published in the *Tamil Nadu Government Gazette*, relinquish the management of the Pachaiyappa's trust with effect from such date as may be specified in the order:

Provided that before making an order under this section, the Government shall take all steps to hold election for the Board of Trustees in accordance with the Pachaiyappa's trust scheme so that the newly elected members may assume office with effect from the date specified in the order published in the *Tamil Nadu Government Gazette.*

13. *No right to compensation for premature termination of office.*—Notwithstanding anything contained in any law for the time being in force, no person who ceases to hold office as member of the Board of Trustees by reason of the provisions contained in sub-section (1) of section 4, shall be entitled to claim any compensation for the loss of his office.

14. *Power to remove difficulties.*—(1) If any difficulty arises in giving effect to the provisions of this Act, the Government may make such order not inconsistent with the provisions of this Act as may appear to them to be necessary or expedient for the purpose of removing the difficulty.

(2) Every order made under this section shall, as soon as after it is made, be laid before each House of the Legislature.

15. *Power to make rules.*—(1) The Government may make rules to carry out the provisions of this Act.

(2) All rules made under this Act shall be published in the *Tamil Nadu Government Gazette,* and unless they are expressed to come into force on a particular day, shall come into force on the day on which they are so published.

(3) Every rule made under this Act shall, as soon as possible, after it is made, be placed on the table of both Houses of the Legislature, and if, before the expiry of the session in which it is so placed or the next session, both Houses agree in making any modification in any such rule or both Houses agree that the rule should not be made, the rule shall thereafter have effect only in such modified form or be of no effect, as the case may be, so however, that any such modification or annulment shall be without prejudice to the validity of anything previously done under that rule.

16. *Repeal and savings.*—(1) The Pachaiyappa's Trust (Taking over of Management) Ordinance, 1980 (Tamil Nadu Ordinance 14 of 1980) is hereby repealed.

(2) Notwithstanding such repeal, anything done, or any action taken under the said Ordinance shall be deemed to have been done or taken under this Act.

---

# INDEX TO

# TAMIL NADU LEGISLATIVE COUNCIL DEBATES.

---

FIFTY-NINTH SESSION OF THE LEGISLATIVE COUNCIL UNDER THE CONSTITUTION OF INDIA.

*9th to 13th February* 1981.

VOLUME CLXXIII (Nos. 1-5).

PAGES

'A'


ACCIDENTS—

**Question** *re* Road—in Tamil Nadu from 1st January 1978 to 15th June 1980, number of—, number of fatal cases, number of persons disabled on account of—, and compensation given by Government to the disabled ... 19—24

Rail—near Vaniyambadi ... ... ... 233

AGRICULTURE DEPARTMENT NOTIFICATION NO. SRO|A-197|80 PUBLISHED IN TAMIL NADU GOVERNMENT GAZETTE, DATED 16TH JULY 1980—

Errata to—, laid on the table ... ... 445

AGRICULTURAL PRODUCE MARKETS ACT, 1959—

Declaration of Tirupathur, Chengam, Thiruvannamalai and Polur taluks in North Arcot district as notified area in respect of cotton, notification laid on the table ... ... ... 61

Declaration of notified market area for Pochampalli Market, notification laid on the table ... 227

Exclusion of 126 villages from the notified area of Dharmapuri market for being declared as notified market area for Pennagaram market, notification laid on the table ... ... 227

PAGES.

A—*cont.*

AGRICULTURAL PRODUCE MARKETS RULES, 1962—
Amendments to—, notification laid on the table ... 228, 444

ALL INDIA RADIO—
Information *re* non-coverage of Proceedings of Legislative Council by ... ... ... 26

APPROPRIATION BILL, 1981—
*See* Bills

ARANGANAYAGAM, The Hon. Thiru C.—
Bill—Pachaiyappa's Trust (Taking over of Management) Bill, 1981 ... ... ... 414—418, 428, 436—440, 442, 444.
Governor's Address, discussion on ... ... 41
Resolution *re* schools and colleges run by local bodies and private managements, taking over of—by Government ... ... ... 284—285

ARUMUGAM, THIRU S.—
Resolution *re* schools and colleges run by local bodies and private managements taking over of—by Government ... ... ... ... 258, 262, 274.

'B'.

BILLS—
Appropriation Bill, 1981—
Considered and returnd to Assembly ... ... 301—302
Message from the Assembly *re* ... ... 301
Message from the Governor *re* ... ... 301



PAGES.

B—*cont.*

BILLS—*cont.*
Debt Relief (Amendment) Bill, 1981—
Considered and passed ... ... ... ... 375—403
Message from the Assembly *re* ... ... 368

Pachaiyappa's Trust (Taking over of Management) Bill, 1981—
Considered and passed ... ... ... 414—444
Message from the Assembly *re* ... ... ... 369

Prevention of Incitement to Refuse or Defer Payment of Tax Bill, 1981—
Considered and passed ... ... .. .. 302—304
Message from the Assembly *re* ... ... 301

Public Wakfs (Extension of Limitation) Tamil Nadu Amendment Bill, 1981—
Considered and passed ... ... ... 403—413
Message from the Assembly *re* ... ... 368

BILLS, AS PASSED BY THE ASSEMBLY, LAID ON THE TABLE—
Appropriation Bill, 1981 ... ... ... 446
Debt Relief (Amendment) Bill, 1981 .. ... 446
Pachaiyappa's Trust (Taking over of Management) Bill, 1981 ... ... ... .. 446
Prevention of Incitement to Refuse or Defer Payment of Tax Bill, 1981 ... ... ... 228
Public Wakfs (Extension of Limitation) Tamil Nadu Amendment Bill, 1981 .. ... ... ... 446

BOOKS AND PUBLICATIONS—
Question *re* Text-books, free supply to students belonging to Scheduled Castes and Denotified Tribes in Thiruthuraipoondi and Thalaignayiru circles of Pattukkottai Educational district ... ... 87—89

PAGES.

B—*cont.*

BUDGET—

Privilege issue *re*—

Betting tax and surcharge on sales tax, alleged premature publication of news *re* increase in—in "Indian Express" ... ... ... ... 97—106, 369—371

BUSINESS ADVISORY COMMITTEE—

*See* Committees

BUSINESS OF THE HOUSE—

Adjournment of—because of rail accident near Vaniyambadi ... ... ... ... 233—234

Announcement *re* programme of business for 10th February 1981 ... .. ... ... ... 59

C

CATERING ESTABLISHMENTS ACT, 1958—

Enforcement of—in certain Town Panchayats, notification laid on the table ... ... ... 228

CHAIRMAN, MR.—

Announcement *re*—

Business Advistory Committee's decision ... 25, 344

Programme of business for 10th February 1981 ... 59

Message from the Assembly *re*—

Appropriation Bill, 1981 ... ... ... 301

Debt Relief (Amendment) Bill, 1981 ... ... 368

Pachaiyappa's Trust (Taking over of Management) Bill, 1981 .. ... ... ... 369

Prevention of Incitement to Refuse or Defer Payment of Tax Bill, 1981 .. .. ... 301

Public Wakfs (Extension of Limitation) Tamil Nadu (Amendment) Bill, 1981 ... 368

Message from the Governor *re*—

Appropriation Bill, 1981 ... ... ... 301

Resolution of Thanks for his Address ... 305



PAGES

C—*cont.*

CHAIRMAN, MR.—cont.

Governor's Address, discussion on ... ... ... 43, 44, 45, 46, 47, 50, 51, 52, 54, 55, 57, 58, 180, 182, 183, 184, 184, 185, 186, 187, 188, 189, 224, 225

Information *re* Proceedings of Legislative Council, non-coverage by All India Radio ... 26

Obituary reference *re*—

Death of Koti Reddi, Thiru K., former Minister of Composite Madras State ... ... 1

Persons who lost their lives in rail accident near Vaniyambadi ... ... ... ... 233

Privilege issue *re*—

Betting Tax and surcharge on sales tax, alleged premature publication of news *re* increase in—in "Indian Express" ... ... 97, 100, 103, 106, 369—371

Resolution *re* schools and colleges run by local bodies and private managements, taking over of —by Government ... ... ... ... 237, 241, 249, 252.

Statement of Supplementary Expenditure for 1980-81 (First), discussion on ... ... 111

COLLEGE(S)—

Mysterious death of a student of Government Arts College (Men), Kumbakonam, Minister's attention called to ... ... ... ... 237—236

Resolution *re* taking over of Schools and Colleges run by local bodies and private managements by Government ... ... ... ... 237—300

PAGES

C—*cont.*

COMMITTEES—

Business Advisory Committee, decision of ... 25, 344

Public Accounts Committee—

Election of Thiru P. R. Thomas to serve on 111

Fifth Report of—on Supplementary Report (Civil) of the Comptroller and Auditor-General of India for 1975-76, laid on the table ... ... ... 445

First Report of—on Excesses over Voted Grants and Charged Appropriations for 1974-75, laid on the table ... ... ... ... ... 62

Fourth Report of—on Accounts of Government of Tamil Nadu for the year 1960-61 to 1971-72, laid on the table ... ... ... ... ... 445

Second Report of—on Report of the Comptroller and Auditor-General of India for 1974-75 and 1975-76 (Revenue Receipt), laid on the table ... ... ... ... ... 62

Seventh Report of—on Excesses over Voted Grants and Charged Appropriations for 1975-76, laid on the table ... ... ... 445

Sixth Report of—on Accounts of Government of Tamil Nadu for 1974-75 and 1975-76 and Report of Comptroller and Auditor-General of India (Civil) for 1974-75 and 1975-76 (Part II), laid on the table ... ... 445

Third Report of—on Accounts of Government of Tamil Nadu for 1974-75 and 1976 and Reports of Comptroller and Auditor General of India (Civil) for 1974-75 and 1975-76, laid on the table ... ... ... 445

Public Undertakings Committee—

Fifth Report of—on Report of Comptroller and Auditor-General of India for 1970-71 of Tamil Nadu Electricity Board, laid on the table ... ... ... ... ... 446



PAGES

C—*cont.*

COMMITTEES—*cont.*

Public Undertakings Committee—*cont.*

First Report (1980-81) on Report (Commercial) of Comptroller and Auditor-General of India for 1974-75 and 1975-76, laid on the table ... 234

Fourth Report of—on Audit Reports on the Accounts of Tamil Nadu Electricity Board for 1972-73 to 1975-76, laid on the table ... ... 446

Second Report of—on Reports (Commercial) of the Comptroller and Auditor-General of India for 1974-75 and 1975-76, laid on the table ... 445

Third Report of—on Tamil Nadu Small Industries Development Corporation Limited, laid on the table ... ... ... ... 446

CO-OPERATIVE SOCIETIES—

Question *re*—

Panchayat Union Employees Co-operative Credit Societies, recovery of loans from salaries of concerned employees ... ... ... 94—96

Rural—, recognition of paid Secretaries of— as staff of Central Co-operative Banks in Periyar, Coimbatore and Nilgiris Districts ... ... 84—85

COURTS—

Chief Justice of Madras High Court, Minister's attention called to appointment of a non-regional language knowing person as—despite opposition from Chief Minister of Tamil Nadu ... 371—372

Question *re* Advocates' Chamber within the campus of New Court Buildings, Madurai, construction of ... ... ... ... ... 89—91

D.

DAMODARAN, THIRU A. R.—

Bills—

Debt Relief (Amendment) Bill, 1981 ... 376—380, 399.

PAGES

D—*cont.*

DAMODARAN, Thiru A. R.—*cont.*

BILLS—*cont.*

Pachaiyappa's Trust (Taking over of Management) Bill, 1981 ... ... ... 422—426, 432, 440

Governor's Address, discussion on .. ... ... 187

Privilege issue *re* Betting Tax and surcharge on Sales Tax, alleged premature publication of news *re* increase in—in "Indian Express" ... 97—99, 100 104—105.

Statement of Supplementary Expenditure for 1980-81 (First), discussion on .. ... .. 111—116

DEBT RELIEF (AMENDMENT) BILL, 1981—

*See* Bills

DEPUTY CHAIRMAN, MR.—

Governor's Address, discussion on ... ... 37, 38, 39, 41, 42,

Resolution *re* Schools and Colleges run by local bodies and private managements, taking over of—by Government ... ... ... 260, 262, 277, 283, 286

Statement of Supplementary Expenditure for 1980-81 (First), discussion on .. ... 128, 132, 145

DOSS, THIRU A. J.—

Bill—Debt Relief (Amendment) Bill, 1981 ... 396

Governor's Address, discussion on ... ... 40

E

ELECTRICITY BOARD, TAMIL NADU—

Audit Report on Annual Accounts for 1978-79 and Balance Sheet as on 31st March 1979, laid on the table ... ... ... ... [illegible]



PAGES

E—*cont.*

ELECTRICITY BOARD, TAMIL NADU—*cont.*

Budgets for 1978-79 and 1979-80, statement of action taken on suggestions made by Members of Legislature during discussion on—, laid on the table ... ... ... ... ... 62

Budget for 1979-80, statement of action taken on suggestions made by Members of Legislature during discussion on—laid on the table ... 62

ENTERTAINMENTS TAX ACT, 1939—

Amendments to Schedules I and II, notification laid on the table ... ... ... ... ... 61

ERADHA, THIRU S. R.—

Governor's Address, discussion on ... ... 29—59

Resolution *re* Schools and Colleges run by local bodies and private managements, taking over of —by Government ... ... ... ... 254, 255

EXHIBITIONS—

Question *re* number of—in Kanyakumari district between 1st January 1979 and 15th June 1980 and complaints *re* gambling in ... ... ... 353

F.

FISHERMEN—

Death of—on fishing operation off Rameswaram seashore during December 1980 due to cyclonic storm, Minister's attention called to—and consequent hardship to affected families ... ... 109—111

FORENSIC SCIENCE LABORATORIES—

*See* Photographers.

G

GENERAL SALES TAX RULES, 1959—

Amendments to—, notification laid on the table ... 61

PAGE.

G—*cont.*


GOVERNOR'S ADDRESS—

Message from the Governor *re* Resolution of Thanks for his Address ... ... ... ... 368

Discussion on ... ... .. ... ... 29—59, 156—227

GOVERNMENT ARTS COLLEGE—

*See* College(s)

GRAMASEVAKS—

*See* Rural Welfare Officers.

H

HANDE, THE HON. DR. H. V.—

Privilege issue *re* Betting tax and surcharge on sales tax, alleged premature publication of news *re* increase in—in "Indian Express" ... ... 99—100

HANDLOOMS—

Question *re* Handloom Intensive Development Project, subsidy from Central Government to—and number of Centres in which implemented ... 12—14

HOUSE BUILDING ADVANCE—

*See* Loans and Advances.

I

INTER-CASTE MARRIAGE—

Question *re* children born of—, grant of concessions in regard to education and employment to—as in the case of Backward Classes ... ... 85—87

J

JANARTHANAM, DR. T. R.—

Resolution *re* Schools and Colleges run by local bodies and private managements, taking over of—by Government ... ... ... ... 262—269




PAGES

J—*cont.*


JEPIYAR, THIRU—

Governor's Address, discussion on ... ... ... 35, 37, 183

Statement of Supplementary Expenditure for 1980-81 (First), discussion on ... ... ... 129, 131

Resolution *re* Schools and Colleges run by local bodies and private managements, taking over of—by Government ... ... ... ... 258, 259, 269, 271, 272—277, 285, 286, 294

JUDGES—

*See* Courts

JUDICIAL OFFICERS—

Question *re*—

Number of—under suspension pending departmental enquiry and duration of suspension ... 91—94

Sub-Judges and District Judges, raising of pay scales of ... ... ... ... ... 96—97

K

KANYAKUMARI TOWNSHIP—

Question *re* average number of tourists visiting—and provision of sanitary facilities in ... ... 68

KOTI REDDI, Thiru K.—

Obituary reference *re* death of—, former Minister of Composite Madras State ... ... ... 1

KOLANDAIVELU, THE HON. THIRU P.—

Moore Market, statement *re* notice of eviction by Corporation of Madras on shop-keepers in ... 373, 374

பணியாற்ற உரிமை உள்ள ஒருவரை மாற்றக்கூடாது. அதோடு வேறு மாநிலத்திலிருந்து தமிழகத்திற்கு தலைமை நீதிபதியாக வருபவர் தமிழராகவும் நன்கு தமிழ் பாண்டித்தியம் உள்ளவராகவும் இருந்தாக வேண்டும். இனி உயர்நீதி மன்ற நிகழ்ச்சிகள் அனைத்தும் தமிழிலேயே இருக்க வேண்டுமென்ற நமது அரசின் கொள்கை காப்பாற்றப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட வேண்டுமாயின் மேலே குறிப்பிட்டுள்ள வழியைப் பின்பற்றப்படுவதைத் தவிர வேறு வழியில்லை". சமீபத்தில் முதல் அமைச்சர் அவர்களை மத்திய சட்ட அமைச்சர் சென்னை உயர்நீதி மன்றத்தில் தலைமை நீதிபதியை மாற்றம் செய்வதைக் குறித்து கலந்த பொழுது மேற்கண்ட கருத்து முதலமைச்சரின் 15—1—1981 நாளிட்ட கடித மூலம் வலியுறுத்தப்பட்டது. அந்தக் கடிதத்தில், அந்தந்த மாநிலத்தின் பிராந்திய மொழி தெரிந்தவர்தான் அந்த மாநிலத்தின் உயர்நீதி மன்றத் தலைமை நீதிபதியாக இருக்கவேண்டும் என்பது மாநில அரசின் கருத்து என்பதும் அந்த அடிப்படையில் தமிழ் நாட்டுக்குத் தலைமை நீதிபதியாக வருபவர் தமிழ் தெரிந்தவராக இருக்க வேண்டும் என்பதும் கீழ்க்கண்ட காரணங்களுக்காக வலியுறுத்தப்பட்டது :—

நீதிமன்ற நடவடிக்கைகளை பரிபூரணமாக தெரிந்துகொள்ளக்கூடிய நிலைமை, நீதிமன்ற தலைமைக்கு இருந்தால்தான் தீர்ப்புகளும் ஆணைகளும் நிறைவு பெற்றதாக அமையும். இதற்கு ஒரே வழி நீதிமன்றத் தலைவர் அல்லது நீதிபதி அந்தந்த பிராந்திய மொழியில் பழக்கமுள்ளவராக இருதத்ல் வேண்டும். இல்லையெனில் பிராந்திய மொழிகளில் நடைபெறும் நீதிமன்ற நடவடிக்கைகளை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்து, அதன் அடிப்படையில்தான் முடிவுக்கு வரவேண்டிய நிலைமைதான் ஏற்படுகிறது. இத்தகைய மொழி பெயர்ப்பு வழிமுறைகளை கையாளும்பொழுது தவறுகள் ஏற்படுவதற்கும் வாய்ப்பு இருக்கின்றது. அத்துடன் மொழி பெயர்ப்பு நடைமுறைக்கு ஏற்படும் செலவையும் சாதாரண குடிமகன் ஏற்றுக்கொள்ள வேண்டியிருக்கிறது.

இந்நிலையில் பொதுமக்களுக்கு நீதியில் நம்பிக்கையும், நிறைவும் ஏற்படுவதற்கு, உயர்நீதிமன்ற தலைமை நீதிபதி, பிற நீதிபதிகள் பிற மொழிகள் தெரிந்தவர்களாக இருந்தால் நீதிமன்றங்களில் பிராந்திய மொழியில் எடுத்து வைக்கப்படும் சாட்சியங்கள், வாதங்கள், ஆவணங்கள் முதலியவற்றை நன்றாக புரிந்துகொள்ளக் கூடியவர்களாக இருத்தல் வேண்டும். இல்லையெனில் பாமர மக்களின் மனதில் குறிப்பாக படிப்பறிவற்ற மக்களின் மனதில் நீதியின் நம்பிக்கையை உருவாக்க இயலாது. பிராந்திய மொழிகள் இல்லாத வேறு மொழிகளில் நீதிமன்ற தீர்ப்புகள் வெளியாகும் நேரத்தில், பாதிக்கப்பட்டவர்கள் நடைமுறைகள் மீது அதிருப்தி உடையவர்களாகவே இருப்பார்கள். போதிய காரணமின்றி தங்கள் மீது குற்றஞ் சாட்டப்படுகிறதோ என்று எண்ணத்



தோன்றும். விரைவான நாட்டு வளர்ச்சிக்கு இத்தகைய போக்கு நல்லதல்ல. சாதாரண குடிமகனுக்கும் தன்னுடைய பாதுகாப்பில் நம்பிக்கை இருக்க வேண்டும். நீதிமன்றங்களில் தமிழ் மொழியிலேயே நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதோடு தீர்ப்புகளும் தமிழில் வெளிவருவதற்கு சட்டங்கள் தமிழில் கொண்டுவரும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுவரும் இவ்வேளையில், தமிழ் தெரிந்த நீதிபதிகள் நியமிக்கப்படுவதே பொதுமக்களுக்கு மிகவும் திருப்தி அளிக்கக்கூடியதாக அமையும்.

நாடு விடுதலையடைந்த நாளிலிருந்து சாதாரண குடிமகனும் தன் கடமைகளை சரிவர நிறைவேற்றுவதற்காக எல்லாத்துறைகளிலும் அந்தந்த பிராந்திய மொழிகளில் ஆட்சி நடவடிக்கைகள் நடைபெற வேண்டும் என்று முயற்சிகள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. இத்தகைய நிலையில் உயர்நீதி மன்றத்தில் தலைமை நீதிபதியாக பிராந்திய மொழியில் போதிய பழக்கமில்லாத ஒருவரை நியமிப்பது முன்னேற்றத்திற்குத் தடையான நடவடிக்கையாகும்.

சாதாரண குடிமகனும் எளிதில் நீதியைப் பெறவேண்டும் என்பதற்காக நாம் பல முற்போக்கு நடவடிக்கைகளை எடுத்துக்கொண்டுவரும் நேரத்தில் பிராந்திய மொழிகளில் பழக்கமில்லாத உயர்நீதிமன்ற நீதிபதிகளை நியமிப்பது நல்லதுமல்ல; முறையுமல்ல . . . இருந்தாலும், மேலும் விரிவாகப் பேசலாம் என்று மத்திய அரசுக்குத் தெரிவிக்கப்பட்டது. ஆனால், மத்திய அரசு, சென்னை உயர்நீதிமன்ற தலைமை நீதிபதி திரு. மு. மு. இஸ்மாயில் அவர்களைக் கேரள உயர்நீதி மன்ற தலைமை நீதிபதியாகவும், பாட்னா உயர்நீதி மன்றத் தலைமை நீதிபதி திரு. கே. பி. நாராயன் சிங் அவர்களை சென்னை உயர்நீதி மன்றத் தலைமை நீதிபதியாகவும் மாற்றம் செய்து ஆணைகள் பிறப்பித்துள்ளது. இந்திய அரசியல் அமைப்புச் சட்டப்பிரிவு 222 (1)-ன்கீழ் இவ்விசயத்தில் மத்திய அரசின் முடிவே இறுதியானது.

## இணைப்பு II.

[372 ஆம் பக்கத்தில் இனம் 4 (2)-க்கான அடிக்குறிப்பைக் காண்க.]

மூர் அங்காடி பகுதியில் ஆக்ரமிப்பாளர்களையும் சேர்த்து கடைகளின் எண்ணிக்கை மொத்தம் 1,492.

26—9—1978 நாளிட்ட அரசாணை (வருவாய்த்துறை) நிலை எண் 2179-ன் படி மூர் அங்காடியில் மொத்த இடங்களும் இரயில்வே நிர்வாகத்திற்குக் கொடுக்கப்பட்டிருக்கின்றன. இருப்பினும், அங்காடியின் பிரதான கட்டிடம்,

PAGES

L


LAKSHMIKANDHAN, Thiru C. R.—

Governor's Address, discussion on .. ... 48, 225

House building advance to Government servants and teachers, calling Minister's attention to stoppage of ... ... ... ... ... 27—29

Information *re* Proceedings of Legislative Council, non-coverage by All India Radio ... ... 26

Resolution *re* Schools and Colleges run by local bodies and private managements, taking over of—by Government ... ... ... ... 275, 276, 293

Statement of Supplementary Expenditure for 1980-81 (First), discussion on ... ... ... 142—143

LAND REFORMS (DISPOSAL OF SURPLUS LAND) RULES, 1965—

Amendments to—, notification laid on the table ... 60

LAW OFFICERS—

Question *re* Assistant Public Prosecutors-I, objection to appointment as Public Prosecutors and Additional Public Prosecutors ... ... ... 83—84

LEELAVATHI, SELVI A.—

Bill—Pachaiyappa's Trust (Taking over of Management) Bill, 1981 ... ... ... .. .. 426—427

Statement of Supplementary Expenditure for 1980-81 (First), discussion on ... ... 126—128, 141

LEGISLATIVE COUNCIL—

Information *re* non-coverage of Proceedings of—by All India Radio ... ... ... ... 26

LOANS AND ADVANCES—

Advance to Government servants and teachers, Minister's attention called to stoppage of ... 27—29

Question *re* cycle advance to teachers of local bodies, sanction of ... ... ... ... 355—357




PAGE.

M


MANICKAM, Thiru P.—

Bill—Debt Relief (Amendment) Bill, 1981 ... 402—403

Governor's Address, discussion on ... ... ... 56

MATTER OF URGENT PUBLIC IMPORTANCE—

Assault (alleged) on—, and mysterious death of, Harijan Leader Raju at Kulasekaram Police Station, calling attention to ... ... ... 106—109

Chief Justice of Madras High Court, calling attention to appointment of a non-regional language-knowing person as—despite opposition from Chief Minister of Tamil Nadu ... 371—372

Fishermen on fishing operation off Rameswaram seashore during December 1980, calling attention to death due to cyclonic storm and consequent hardship to affected families .. ... 109—111

House building advance to Government servants and teachers, calling attention to stoppage of 27—29

Moore Market, calling attention to notice of eviction by Corporation of Madras on shop-keepers in ... 372—375

Mysterious death of student of Government Arts College (Men), Kumbakonam, calling attention to ... ... ... ... ... ... 235—236

MEENAKSHISUNDARAM, Thiru K.—

Bill—Pachaiyappa's Trust (Taking over of Management) Bill, 1981 ... ... ... ... ... 428—430

Governor's Address, discussion on ... .. ... 224

House building advance to Government servants and teachers, calling Minister's attention to stoppage of ... ... ... ... ... 27—29

Mysterious death of a student of Government Arts College (Men), Kumbakonam, calling Minister's attention to ... ... ... ... ... 235—236

Resolution *re* Schools and Colleges run by local bodies and private managements, taking over of—by Government ... ... ... ... 249—262, 268, 270, 271, 272

PAGES

M—*cont.*

MEENAKSHISUNDARAM, Thiru K.—*cont.*

Statement of Supplementary Expenditure for 1980-81 (First), discussion on ... ... ... ... 121—126

MESSAGE FROM THE ASSEMBLY *re*—

*See* Bills.

MESSAGE FROM THE GOVERNOR *re*—

Resolution of Thanks for his Address .. .. 368

*See* Bills.

MIAKHAN, Thiru J. M.—

Bill—Public Wakfs (Extension of Limitation) Tamil Nadu Amendment Bill, 1981 ... ... 404—406, 411, 412

Resolution *re* Schools and Colleges run by local bodies and private managements, taking over of—by Government ... ... ... ... 261, 287—294

MOORE MARKET—

Notice of eviction by Corporation of Madras on shop-keepers in—, Minister's attention called to .. 372—375

MOTOR VEHICLES RULES, 1940—

Amendments to—, notification laid on the table. 59

MOTOR VEHICLES TAX—

Amendment to Home Department Notification No. II (2)|HO|5093|77, dated 28th September 1977, notification laid on the table ... ... 60

Reduction in rate of—in respect of mini stage carriages operated by Pandian Roadways Corporation Limited, Madurai on certain routes in Periyakulam and Uthamapalayam Taluks, notification laid on the table ... ... ... ... 234

**MUTHU, Thiru S.—**

**Governor's Address, discussion on** ... ... **41, 45, 51**



PAGE.

M—*cont.*

MUTHUSAMY, Thiru S.—

Governor's Address, discussion on ... ... ... 225

Resolution *re* Schools and Colleges run by local bodies and private managements, taking over of—by Government ... ... ... 273, 277—287, 292, 293

Statement of Supplementary Expenditure for 1980-81 (First), discussion on ... ... ... 128—134, 142

N

NALLASIVAN, Thiru A.—

Bills—

Debt Relief (Amendment) Bill, 1981 ... ... 386—387

Pachaiyappa's Trust (Taking over of Management) Bill, 1981 ... ... ... ... 430—433

Prevention of Incitement to Refuse or Defer Payment of Tax Bill, 1981 ... ... ... 310—313, 321, 327, 344

Public Wakfs (Extension of Limitation) Tamil Nadu Amendment Bill, 1981 ... ... ... 410

Chief Justice of Madras High Court, calling Minister's attention to appointment of a non-regional language knowing person despite opposition from Chief Minister ... ... ... 371

NATIONAL HIGHWAYS—

Question *re* upgradation of Cuddalore-Virudhachalam-Salem Road, Cuddalore-Chittoor Road and Madras-Kumbakonam-Thanjavur Road as ... 2—6

NEDUNCHEZHIYAN, The Hon. Dr. V. R.—

Bill—Appropriation Bill, 1981 ... ... ... 302

PAGE.

N—*cont.*

NEDUNCHEZHIYAN, The Hon. Dr. V. R.—*cont.*

Governor's Address, discussion on ... ... ... 42

Fishermen on fishing operation off Rameswaram seashore during December 1980, statement *re* death of—due to cyclonic storm and consequent hardship to affected families ... ... ... 109, 110, 110—111

Statement of Supplementary Expenditure for 1980-81 (First), discussion on .. ... ... 139—155

O

OBITUARY REFERENCE *re*—

Death of Koti Reddi, Thiru K., former Minister of composite Madras State . ... ... .. 1

Persons who lost their lives in rail accident near Vaniyambadi ... ... ... ... 233

P

PACHAIYAPPA'S TRUST (TAKING OVER OF MANAGEMENT) BILL, 1981—

*See* Bills.

PAPERS LAID ON THE TABLE OF THE HOUSE—

Agricultural Produce Markets Act, 1959—

Declaration of notified market area for Pochampalli market (G.O. Ms. No. 2286, Agriculture, dated 28th November 1980) ... ... 227

Declaration of Tirupathur, Chengam, Thiruvannamalai and Polur Taluks of North Arcot District as notified area in respect of cotton (G.O. Ms. No. 2175, Agriculture, dated 5th November 1980) ... ... ... ... 61

Exclusion of 126 villages from the notified area of Dharmapuri market for being declared as notified market area for Pennagaram Market (G.O. Ms. No. 2276, Agriculture, dated 27th November 1980) ... ... ... ... 227



PAGES

P—*cont.*

PAPERS LAID ON THE TABLE OF THE HOUSE —*cont.*

Agricultural Produce Markets Rules, 1962—

Amendments to—(G.O.'s Ms. No. 2268, Agriculture, dated 25th November 1980, No. 2269, Agriculture, dated 25th November 1980 and No. 1175, dated 21st June 1980) ... ... ... 444

Agriculture Department Notification No. SRO A-197 of 1980, dated 16th July, 1980, Errata to—(Letter No. 83788|AM-III|80-4, Agriculture, dated 4th November 1980) ... ... .. .. 445

Bills, as passed by the Assembly—

Appropriation Bill, 1981 .. ... ... 446

Debt Relief (Amendment) Bill, 1981 ... ... 446

Pachaiyappa's Trust (Taking over of Management) Bill, 1981 ... ... .. .. ... 446

Prevention of Incitement to Refuse or Defer Payment of Tax Bill, 1981 ... ... ... 228

Public Wakfs (Extension of Limitation) Tamil Nadu Amendment Bill, 1981 ... .. ... 446

Catering Establishment Act, 1958, enforcement of—in certain Town Panchayats (G.O. Ms. No. 2877, Labour and Employment, dated 22nd December 1980) ... ... .. .. 228

Committee(s)—

Public Accounts Committee—

Fifth Report of—on Supplementary Report (Civil) of Comptroller and Auditor-General of India for 1975-76 ... ... 445

First Report on Excesses over Voted Grants and Charged Appropriations for 1974-75 ... 62

P—*cont.*

PAPERS LAID ON THE TABLE OF THE HOUSE—*cont.*

Committee(s)—*cont.*

Public Accounts Committee—*cont.*

Fourth Report of—on Accounts of Government of Tamil Nadu for the years 1960-61 to 1971-72 ... ... ... ... ... 445

Second Report of—on Report of Comptroller and Auditor-General of India for 1974-75 and 1975-76 (Revenue Receipt) ... ... 62

Seventh Report of—on Excesses over Voted Grants and Charged Appropriations for 1975-76 ... ... ... ... ... 445

Sixth Report of—on Accounts of Government of Tamil Nadu for 1974-75 and 1975-76 and Report of Comptroller and Auditor-General of India (Civil) for 1974-75 and 1975-76 (Part II) ... ... ... ... 445

Third Report of—on Accounts of Government of Tamil Nadu for 1974-75 and 1975-76 and Reports of Comptroller and Auditor-General of India (Civil) for 1974-75 and 1975-76 ... ... ... ... ... 445

Public Undertakings Committee—

Fifth Report of—on Report of Comptroller and Auditor-General of India for 1970-71 on Tamil Nadu Electricity Board ... 446

First Report (1980-81) of—on Reports (Commercial) of Comptroller and Auditor-General of India for 1974-75 and 1975-76 ... ... 234

Fourth Report of—on Audit Reports on the Accounts of Tamil Nadu Electricity Board for 1972-73 to 1975-76 ... ... 446

Second Report of—on Reports (Commercial) of the Comptroller and Auditor-General of India for 1974-75 and 1975-76 ... 445

Third Report, of—on Tamil Nadu Small Industries Development Corporation Limited 446



P—*cont.*

PAPERS LAID ON THE TABLE OF THE HOUSE—*cont.*

Electricity Board, Tamil Nadu—

Audit Report on Annual Accounts for 1978-79 and Balance Sheet as on 31st March 1979 ... 60

Budgets for 1978-79 and 1979-80, Statement of action taken on suggestions made by Members of Legislature during discussions on ... 62

Budget for 1980-81, Statement of action taken on suggestions made by Members of Legislature during discussion on ... .. ... 62

Entertainments Tax Act, 1939, amendments to Schedules I and II (G.O. Ms. No. 926, Commercial Taxes and Religious Endowments, dated 23rd September 1980) ... ... .. .. 61

General Sales Tax Rules, 1959, amendments to—(G.O. Ms. No. 1114, Commercial Taxes and Religious Endowments, dated 28th October 1980) ... ... ... ... ... 61

Land Reforms (Disposal of Surplus Land) Rules, 1965, amendments to—(G.O. Ms. No. 2316, Revenue, dated 4th October 1980) ... 60

Motor Vehicles Rules, 1940, amendments to—(G.O. Ms. No. 2909, Home, dated 3rd November 1980) ... ... ... ... ... 59

Motor Vehicles Tax—

Amendment to Home Department Notification No. II (2)|HO|5093|77, dated 28th September 1977 (G.O. Ms. No. 2181, Agriculture, dated 11th November 1980) ... ... ... 60

Reduction in rate of—in respect of mini stage-carriages operated by Pandian Roadways Corporation Limited, Madurai on certain routes in Periyakulam and Uttamapalayam Taluks (G.O. Ms. No. 3310, Home (TR. I), dated 17th December 1980 ... ... 234

Pawn-brokers Rules, 1944, amendment to—(G.O. Ms. No. 892, Revenue, dated 7th April 1980) 60

P—*cont.*

PAPERS LAID ON THE TABLE OF THE HOUSE—*cont.*

Poompuhar Shipping Corporation Limited, Sixth Annual Report for 1980 ... ... ... 444

Public Service Commission Regulations, 1954, amendments to—(G.O. Ms. No. 1224, Personnel and Administrative Reforms (Personnel-M), dated 15th December 1980) ... ... 59

Sales tax, exemption of Madras Refineries Limited, Madras, from—, on sale of transformer oil feed stock to Madras Petro Chemical Limited, Madras and sale of transformer oil to Electricity Board (G.O. Ps. No. 1156, Commercial Taxes and Religious Endowments, dated 3rd November 1980) ... ... ... ... ... ... 61

Town and Country Planning Act, 1971, approval of detailed Development Plan for Gangadareswarar Koil Area Planning Unit 6.8, Madras by Madras Metropolitan Development Authority under section 28 of—(G.O. Ms. No. 49, Housing and Urban Devtlopment, dated 11th January 1980) ) ... ... ... ... ... 60

Veterinary Council, Tamil Nadu, nomination of certain Members to— (G.O. Ms. No. 2181, Agriculture, dated 5th November 1980 ... 60

PAWN-BROKERS RULES, 1944—

Amendment to—, notification laid on the table ... 60
60

PHOTOGRAPHERS—

Question *re* pay scales of—in Forensic Science Laboratories, representation *re* anomalies in—recommended by Third Tamil Nadu Pay Commission ... ... ... ... ... 17—18

POLICE—

Assault (alleged) on, and mysterious death of, Harijan Leader Raju at Kulasekaram Police station, Minister's attention called to ... ... 106—109





P—*cont.*

PONNAIYAN, THE HON. THIRU C.—

Bill—Debt Relief (Amendment) Bill, 1981 ... 375, 376, 391, 395, 397, 401, 403

Chief Justice of Madras High Court, statement *re* appointment of a non-regional-language knowing person as—despite opposition from Chief Minister ... ... ... ... 372

POOMPUHAR SHIPPING CORPORATION LIMITED—

Sixth Annual Report for the year 1980, laid on the table ... ... ... ... ... 444

PREVENTION OF INCITEMENT TO REFUSE OR DEFER PAYMENT OF TAX BILL, 1981—

*See* Bills

PRIVILEGE ISSUE *re*—

Betting tax and surcharge on sales tax, alleged premature publication of news *re* increase in—"Indian Express" ... ... ... ... 97—106
369—371

PROHIBITION—

Question *re* arrack, alleged sale of—in a Madras Corporation School ... ... ... ... 357—358

PUBLIC ACCOUNTS COMMITTEE—

*See* Committees

PUBLIC SERVICE COMMISSION REGULATIONS, 1954—

Amendments to—, notification laid on the table ... 59

PUBLIC WAKFS (EXTENSION OF LIMITATION) TAMIL NADU AMENDMENT BILL, 1981—

*See* Bills

PAGES

Q—*cont.*


QUESTIONS AND ANSWERS—

Doraisamy, Thiru O. S.—

Question *re*—

Rural Co-operative Societies, recognition of paid Secretaries of—as staff of Central Co-operative Banks in Periyar, Coimbatore and Nilgiris Districts ... ... .. ... 84—85

Lakshmikandhan, Thiru C. R.—

*Question re*—

Municipal High School Teachers, percentage of expenditure towards salary borne by Government and taking over of schools by Government ... ... ... ... ... 65—70

National Highways, up-gradation of Cuddalore-Virudhachalam-Salem Road, Cuddalore-Chittoor Road and Madras-Kumbakonam-Thanjavur Road as ... ... ... 2—6

Tourist Bungalows, Inspection Bungalows and Travellers' Bungalows, under the control of State Government, priority in reservation and cancellation of reservation made by legislators in favour of high officials of Government ... ... ... ... 14—17

Valluvar Kottam, year-wise income derived up to June 1980 by way of collection of entrance fees and rental charges for Auditorium in ... ... ... ... ... 361—364

Meenakshisundaram, Thiru K.—

Question *re*—

Bus service between Thiruthuraipoondi and Thalaignayiru, operation of additional bus to avoid overcrowding ... ... 11—12

Egarasapuram Road in Thalaignayiru Union, repairs to ... ... ... ... 354

Inter-caste marriage, grant of concessions in regard to education and employment to children born of—as in the case of Backward Classes ... ... ... 85—87




PAGES

Q—*cont.*


QUESTIONS AND ANSWERS—*cont.*

Meenakshisundaram, Thiru K.—*cont.*

Question *re*—cont.

Mini buses in Thanjavur district, number of new routes in which to ply ... ... ... 18—19

Teachers of local bodies, sanction of cycle advance to ... ... ... ... ... 355—357

Text-books, free supply to students belonging to Scheduled Castes and Denotified Tribes in Thiruthuraipoondi and Thalaignayiru Circles of Pattukkottai Educational District ... 87—89

87—89

Muthuswamy, Thiru S.—

Question *re*—

English medium section in High Schools and Higher Secondary Schools, opening of an—from Standard VI ... ... ... ... 73—78

Inter-caste marriage, grant of concessions in regard to education and employment to children born of—as in the case of Backward Classes ... ... ... ... ... 85—87

Panchayat Union Employees Co-operative Credit Societies, recovery of loans from salaries of concerned employees ... 94—96

Sankaralingam, Thiru M.—

Question *re*—

Bus Service in Route No 33 plying in Kanyakumari District since 1954, discontinuance from October 1978 ... ... ... ... 9—11

Exhibitions in Kanyakumari district between 1st January 1979 and 15th June 1980, number of—and complaints *re* gambling in ... 353

Kanyakumari Township, average number of Tourists visiting—and provision of sanitary facilities in ... ... ... ... 6—8

Madras Corporation School, alleged sale of arrack in ... ... ... ... ... 357—358

PAGES

Q—*cont.*

QUESTIONS AND ANSWERS—*cont.*

Sankaralingam, Thiru M.—*cont.*

Question *re*—*cont.*

Road accidents in Tamil Nadu from 1st January 1978 to 15th June 1980, number of—, number of fatal cases, number of persons disabled on account of—and compensation given by Government to the disabled ... ... ... ... ... 19—24

Sea erosion in Kanyakumari district, extent of loss and names of villages affected during August 1980 due to ... ... ... 358—361

Stipend to students undergoing vocational courses in Higher Secondary Schools, grant of monthly ... ... ... ... 70—73

Tourist Bungalow, construction of—near Wild Life Sanctuary at Kalakkadu in Tirunelveli district ... ... ... ... ... 366—367

Santosham, Thiru D.—

Question *re*—

Advocates' Chamber within the campus of New Court Buildings, Madurai, construction of ... ... ... ... ... 89—91

Assistant Public Prosecutors-I, objection to appointment as Public Prosecutors and Additional Public Prosecutors ... ... 83—84

B.T. Teachers of former 'B' Wing Schools with Post-Graduate qualifications promoted to Government Colleges, regularisation of services of ... ... ... 78—83

Sub-Judges and District Judges, raising of pay scales of ... ... ... ... 96—97



PAGES

Q—*cont.*

QUESTIONS AND ANSWERS—*cont.*

Swaminathan, Thiru G.—

Question *re*—

Photographers in Forensic Science Laboratories of Police Department, representation *re* anomalies in pay scales of—recommended by Third Tamil Nadu Pay Commission. 17—18

Rural Welfare Officers (Gramasevaks), non-payment of graduate allowance to ... ... 9

Thomas, Thiru P. R.—

Question *re*, B.T. Teachers of former 'B' Wing Schools with Post-Graduate qualifications promoted to Government Colleges, regularisation of services of ... ... ... ... ... 78—83

Venkatesan, Thiru E. S.—

Question *re*—

Handloom Intensive Development Project, subsidy from Central Government to—and number of centres in which implemented. 12—14

Judicial Officers under suspension, pending departmental enquiry, number of—and duration of suspension ... ... ... 91—94

R

RAGHAVANANDAM, The Hon. Thiru S.—

House building advance to Government servants and teachers, statement *re* stoppage of ... ... 27—29

RAJA MOHAMED, THE HON. THIRU K.—

Assault (alleged) on, and mysterious death of, Harijan Leader Raju at Kulasekaram Police Station, statement *re* ... ... ... 106, 107, 108—109

PAGES

R—cont

RAJA MOHAMED, The Hon. Thiru K—cont.

Bill—Public Wakfs (Extension of Limitation) Tamil Nadu Amendment Bill, 1981 ... ... 403, 409—413

Business of the House—

Adjournment of—because of rail accident near Vaniyambadi ... ... ... . 233

Governor's Address, discussion on ... ... 40

Mysterious death of a student of Government Arts College (Men), Kumbakonam, statement *re* ... 235—236

Public Accounts Committee, election of Thiru P. R. Thomas to serve on .. ... ... ... 111

Resolution *re* taking over of Schools and Colleges run by local bodies and private managements by Government ... ... ... ... 260, 261, 284

RAMACHANDRAN, THE HON. THIRU M. G.—

Governor's Address, discussion on ... ... 40, 41, 42, 43, 44, 51, 179, 182, 185, 186, 189—224, 225

RAMALINGAM, THIRU C.—

Governor's Address, discussion on ... ... 37, 54

RAMAMOORTHY, THIRU K.—

Assault (alleged) on, and mysterious death of, Harijan Leader Rajo at Kulasekaram Police Station, calling Minister's attention to ... ... 106, 107, 108



PAGES

R—cont.

RAMAMOORTHY, THIRU K.—cont.

Bills—

Debt Relief (Amendment) Bill, 1981 .. ... 380—386, 395, 397, 399, 402,

Pachaiyappa's Trust (Taking over of Management) Bill, 1981 ... ... ... ... ... ... 419—422, 432, 440, 443

Prevention of Incitement to Refuse or Defer Payment of Tax Bill, 1981 .. .. ... 303—310, 325, 330—342, 344

Governor's Address, discussion on ... ... 34, 35, 36, 37, 38, 39, 40, 41, 42, 43, 44, 45, 50, 51, 189, 198—199, 200, 201, 202

Statement of Supplementary Expenditure for 1980-81 (First), discussion on ... ... ... 116—121, 149

RESOLUTION *RE*—

Schools and Colleges run by local bodies and private managements, taking over of—by Government ... ... ... ... ... 237

ROAD(S)—

Question *re* Egarasapuram Road in Thalaignayiru Union, repairs to ... ... ... ... 354

RURAL WELFARE OFFICERS—

Question *re* non-payment of graduate allowance to 9

PAGES

## RULINGS AND OBSERVATIONS OF THE CHAIR —*cont.*

3. அரசின் வரி விதிப்பு குறித்த செயற்குறிப்புகளை முதலில் சட்டமன்ற உறுப்பினர்களுக்குத் தெரிவிக்க வேண்டுமென்பது, ஏற்பளிக்கப்பட்ட அவை உரிமைகளில் சேர்க்கப்படவில்லை.

எனவே, திரு. தாமோதரன் அவர்கள் எழுப்பிய பிரச்சினை மேலெழுந்த வாரியாகப் பார்க்கும்போது, அவை உரிமை மீறிய செயல் அல்ல என்று தீர்ப்பு கூறுகிறேன். ... 370—371

Proceedings of Legislative Council—

Coverage by All India Radio—

With reference to a representation made about the coverage of the proceedings of the Legislative Council by the All India Radio, the Chairman observed—

'சட்டமன்றத்தில் இன்று' நிகழ்ச்சியின்போது வானொலியில் மேலவை நிகழ்ச்சிகளை முன்பெல்லாம் சொல்வது சங்கடமாக இருந்திருக்கலாம். காரணம் முன்பெல்லாம் மாலையில் சட்டமன்ற மேலவை நடவடிக்கைகள் நடைபெற்றன. இப்போது மேலவை நடவடிக்கைகள் காலையில் நடைபெறுவதால், அவர்களுக்கு 'சட்டமன்றத்தில் இன்று' நிகழ்ச்சியின் போது மேலவை நிகழ்ச்சிகளைச் சொல்ல வாய்ப்பாக இருக்கும். மேலவை நிகழ்ச்சிகளுக்கு இடம் தர சந்தர்ப்பம் இருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் எழுப்பியுள்ள பிரச்சினையை நான் வானொலி நிலையத்தாருடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். வானொலி நிருபர் இங்கு இருக்கிறார் என்கிற தகவல் எனக்குக் கிடைத்திருக்கிறது. அவர்களும் இது குறித்து கவனிப்பார்கள். நானும் இதை அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு செல்கிறேன்." ... 6

Unparliamsntary Expression—

திசை திருப்புதல் (diversion)—

**held parliamentary** ... ... ... **43—44**



PAGES

## S

SALES TAX—

Exemption of Madras Refineries Limited, Madras from—on sale of transformer oil feed stock to Madras Petro Chemical Limited, Madras and sale of Transformer oil to Electricity Board, notification laid on the table ... ... ... 61

SANKARALINGAM, THIRU M.—

Bills—

Debt Relief (Amendment) Bill, 1981 ... ... 389—391

Pachaiyappa's Trust Taking over of Management) Bill, 1981 ... ... ... ... 433—436, 442

Prevention of Incitement to Refuse or Defer Payment of Tax Bill, 1981 ... ... ... 313—319, 331, 343

Public Wakfs (Extension of Limitation) Tamil Nadu Amendment Bill, 1981 ... ... ... 407—408

Fishermen on fishing operation off Rameswaram Seashore—during December 1980, calling Minister's attention to death of—due to cyclonic storm and consequent hardship to affected families ... ... ... ... ... ... 109—110

Governor's Address, discussion on ... ... 41, 56, 57, 156—186, 207

Moore Market, calling Minister's attention to notice of eviction by Corporation of Madras on shop-keepers in ... ... ... ... 372—375

Resolution *re* Schools and Colleges run by local bodies and private managements, taking over of—by Government ... ... ... ... 294—300

Statement of Supplementary Expenditure for 1980-81 (First), discussion on ... ... ... 134—138,

PAGES

R—*cont.*

RULINGS AND OBSERVATIONS OF THE CHAIR—*cont.*

Debate—

Matters *sub judice*—Matters under the consideration of a Commission of Enquiry should not be gone into in detail in the House ... ... 186

Voting—At the time of voting on a proposition, it is not sound practice to seek clarifications from, or make requests to, Ministers ... 225, 343

Papers laid on the table of the House—

Papers laid on the table of the House should be in the name of the concerned Ministers and not the Secretary or the Chief Secretary ... 375

Privilege issue *re*—

Premature publication (alleged) in the Press of certain taxation proposals relating to increase in Betting Tax and Surcharge on Sales Tax—Issue raised and ruling reserved ... 97—106

Subsequently holding that there was no *prima facie* case of breach of privilege, the Chairman observed as follows :—

திரு. தாமோதரன் அவர்கள் எழுப்பிய பிரச்சினையை இரு பகுதிகளாகப் பிரிக்கலாம், (1) வரி விதிப்பு குறித்த விவரங்களை அவைக்கு வெளியிடும் முன்பு செய்தித் தாளில் வெளியிடுவது, (2) நிதிநிலை அறிக்கை அவைக்கு அளிக்கப்படுவதற்கு முன்பாக அதில் காணப்படும் விபரம் வெளியானது குறித்து.

அவை நடந்துகொண்டிருக்கும்போது கொள்கை குறித்த அறிக்கைகளை அவைக்கு முதலில் அளிக்கவேண்டுமென்பது மரபு. மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர், அவரோ அல்லது அரசோ அல்லது அரசு அதிகாரிகளோ இந்த விவரத்தைச் செய்தித்தாளுக்குத் தரவில்லை என்று விளக்கமாகக் கூறினார். மேலும் இச்செய்தி செய்தித்தாளில் பிரசுரிக்கப்பட்ட நாட்களில் அவைக் கூட்டம் இல்லை. எனவே, அந்த மரபும் மீறப்படவில்லை.



பொதுநலன் குறித்து அறிக்கைகளைச் சட்டப்பேரவைகளுக்குத் தருமுன் சொல்வதானது அவையின் உரிமைப் பிரச்சினையில் வராது.

இரண்டாவதாக, நிதி நிலை அறிக்கையில் வரக்கூடிய விவரம் முன்னதாக வெளியிடப்படுவதும் அவையுரிமைப் பிரச்சினையில் வராது. இதுகுறித்து இங்கிலாந்து பாராளுமன்றத்தில் இரண்டு முன் மாதிரிகள் உள்ளன. அவை 'தாமஸ் வழக்கு' மற்றும் 'டால்டன் வழக்கு'-மாகும். இந்த இரண்டு வழக்குகளும் நிதி நிலை அறிக்கையின் விவரங்களை முன்னதாக வெளியிடப்பட்டுள்ளது குறித்தவையாகும். இந்த இரண்டு வழக்குகளிலும் எழுப்பப்பட்ட பிரச்சினை அவை உரிமை மீறிய பிரச்சினைகள் அல்ல என்று தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது. இந்தியப் பாராளுமன்றத்திலும், பிற மாநிலச் சட்டமன்றங்களிலும் இம்மாதிரியான தீர்ப்புகள் வழங்கப்பட்டுள்ளன.

1960 ஆம் ஆண்டு நிதி நிலை அறிக்கை அவையில் வெளியிடப்படுவதற்கு முன் அதில் கண்டுள்ள அழகுபொருட்கள்மேல் விதிக்கப்படும் விற்பனை வரி குறித்த விபரம் முன்னதாகவே பத்திரிகையில் வெளிவந்தது பற்றி டாக்டர் ஏ. இலட்சுமணசுவாமி முதலியார் அவர்கள் 18—3—1960 அன்று ஓர் உரிமைப் பிரச்சினையை இந்த அவையில் எழுப்பியபோது, அப்போதைய தலைவர் டாக்டர் பி. வி. செரியன் அவர்கள் கீழ்க்கண்டவாறு தீர்ப்பளித்தார் —

"வரவு—செலவுத் திட்டத்தில் வரி விதிப்புச் செயற் குறிப்புகள் குறித்த செய்தி அவைக்கு அளிக்குமுன்பு வெளியே பரவுவது பின்வரும் காரணங்களால் அவை உரிமை மீறிய பிரச்சினையாகக் கொள்ளமுடியாது" என்று அவர் தீர்ப்பளித்தார்.

காரணங்களாவன :

1. அவை முன் நிதி நிலை குறித்த செயற்குறிப்புகள் வைக்கப்படும்வரை அவைகள் அரசு இரகசியமாகுமே தவிர அவையின் உரிமையாகாது.

2. அத்தகைய செயற் குறிப்புகள் குறித்த செய்திகள் 'அமைச்சரவை இரகசியம்'. பொது மக்களின் நலனைக் கருத்தில் கொண்டு அவற்றை அமைச்சரவை பாதுகாக்க வேண்டுமென்றிருந்த போதிலும், அதை முன்னதாக வெளியிடுவது அவையின் உரிமைப் பிரச்சினை ஆகாது.

PAGES

S—cont.

SCHOOLS—

Question *re*—

English medium section in High Schools and Higher Secondary Schools, opening of an—from Standard VI ... ... ... ... 73—78

Madras Corporation School, alleged sale of arrack in ... ... ... ... ... ... 357—358

Stipend to students undergoing vocational courses in Higher Secondary Schools, grant of monthly ... ... ... ... 70—73

Resolution *re* taking over of Schools and Colleges run by local bodies and private managements by Government ... ... ... ... ... 237—300

SEA EROSION—

Question *re* extent of loss and names of villages affected in August 1980 in Kanyakumari district due to ... ... ... ... ... 358—361

SEETHAPATHI, THIRU R. D.—

Governor's Address, discussion on ... ... 52, 182, 218

SOMASUNDARAM, THE HON. THIRU S. D.—

Bill—Prtvention of Incitement to Refuse or Defer Payment of Tax Bill, 1981 ... ... ... 302, 319—330, 332, 338, 339, 342

Privilege issue *re* Betting tax and surcharge on sales tax, alleged premature publication of news *re* increase in—in "Indian Express" ... ... 101—104, 105—106

STATEMENT OF SUPPLEMENTARY EXPENDITURE FOR 1980-81 (FIRST)—

Discussion on ... ... ... ... ... 111—155



PAGES

S—cont.

SWAMINATHAN, THIRU G.—

Bills—

Debt Relief (Amendment) Bill, 1981 ... ... 387—389

Prevention of Incitement to Refuse or Defer Payment of Tax Bill, 1981 ... ... ... 316, 328—330

Public Wakfs (Extension of Limitation) Tamil Nadu Amendment Bill, 1981 ... ... 405

Governor's Address, discussion on ... ... 37, 42, 47, 56, 188, 217

T.

TAXATION PROPOSALS—

Privilege issue *re* publication in newspapers of proposals *re* surcharge on sales tax and increase in Betting tax even before announcement in the House and presentation of Budget ... ... 97-106, 369-371

TEACHERS—

Question *re*—

B.T. teachers of former 'B' Wing Schools with Post-Graduate qualifications promoted to Government Colleges, regularisation of services of ... ... ... ... ... ... 78-83

Municipal High School, percentage of expenditure towards salary borne by Government and taking over of schools by Government ... ... ... 65—70

Sanction of cycle advance to—of local bodies 355-357

TOURISM—

Question *re* Kanyakumari Township, average number of tourists visiting—and provision of sanitary facilities ... ... ... ... ... ... 6-8

PAGES

T—*cont.*

TOURIST BUNGALOW—

Question *re* construction of—near Wild Life Sanctuary at Kalakadu in Tirunelveli district ... ... 366—36

TOURIST BUNGALOWS, INSPECTION BUNGALOWS AND TRAVELLERS BUNGALOWS—

Question *re* priority in reservation in—and cancellation of reservation made by Legislators in favour of high officials of Government ... ... ... 14-1

THOMAS, THIRU P. R.—

Bill—Prevention of Incitement to Refuse or Defer Payment of Tax Bill, 1981 ... ... ... 30

Resolution *re* Schools and Colleges run by local bodies and private managements, taking over of—by Government ... ... ... ... ... 237—249
265
290, 29

TOWN AND COUNTRY PLANNING ACT, 1971—

Approval of detailed Development Plan for Gangadareswarar Koil Area Planning Unit 6.8, Madras, by Madras Metropolitan Development Authority under section 28 of—, notification laid on the table ... ... ... ... ... 60

TRANSPORT—

Question *re*—

Bus service between Thiruthuraipoondi and Thalaignayiru, operating of additional bus to avoid overcrowding ... ... ... ... ... 11-12

Bus service in Route No. 33, plying in Kanyakumari since 1954, discontinuance from October 1978 ... ... ... ... ... ... 9—11

Mini buses in Thanjavur district, number of new routes in which to ply ... ... ... 18-19



V.

PAGES

VALLIMUTHU, THIRU E. V. A.—

Resolution *re* Schools and Colleges run by local bodies and private managements, taking over of—by Government ... ... ... ... 249

VALLUVAR KOTTAM—

Question *re* year-wise income derived up to June 1980 by way of collection of entrance fees and rental charges for Auditorium in ... ... ... 361-365

VASANTHA PAI, THIRU G.—

Governor's Address, discussion on ... ... .. 187—188

VETERINARY COUNCIL, TAMIL NADU—

Nomination of certain Members to—, notifiction laid on the table ... ... ... ... ... 60

V211,52 N81